THAIVEEDU AUGUST 2023 ஓகஸ்ட் www.thaiveedu.com

# தாய்வீடு



## அமைச்சரானார் ஹரி ஆனந்தசங்கரி

## மணிப்பூர் வன்கொடுமைகள் : பழங்குடிகள் மீதான ஒடுக்குமுறைகள்!

– ரூபன் சிவராஜா



## நெல் எது, களை எது?

– நாஞ்சில் நாடன்

## வாழ்வுரிமை!!

– மா. சித்திவினாயகம்


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law


Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Selling Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905.209.8080
416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து)
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து)
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## மீண்டும் ஒரு கபட நாடகம்

இலங்கை அரசு மீண்டும் ஒரு நல்லிணக்க நாடகத்தை ஆட ஆரம்பித்திருக்கிறது. இலங்கையிலே தென் ஆபிரிக்கா மாதிரியிலான உண்மைகளுக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கு கடந்த மே மாதம் அமைச்சரவை ஒப்புதல் வழங்கியது. இலங்கை அரசானது நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமான அனைத்துலகப் பொறிமுறை தொடர்பாக தன்மீது பிரயோகிக்கப்படும் அழுத்தத்தை மழுங்கடித்தல், அனைத்துலக மனித உரிமை அமைப்புகளுக்குப் போக்குக்காட்டுதல், உலக நாடுகளை நோக்கிய தனது கடன் கோரிக்கைகளுக்கு வலுச்சேர்த்தல் போன்ற பல்வேறு சுயலாபக் காரணங்களுக்காக இதுபோன்ற அறிவித்தல்களை 2009 முதல் அவ்வப்போது வெளியிடுகின்றமை தெரிந்ததே.

கனடிய அரசு இவ்வாண்டு மே மாதத்தை தமிழ் இனப்படுகொலை நினைவு மாதமாக அங்கீகரித்ததன் பின்னதாகவும், நாட்டின் பல பகுதிகளிலும் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு உலகின் கவனம் பெற்றுவரும் நிலையிலும், ஜெனீவாவிலே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அவையின் 53-ஆவது அமர்விலே இலங்கை நிலைவரம் தொடர்பான வாய்மூல அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாகவும், இலங்கை அரசு மீண்டும் ஒருமுறை நல்லிணக்க வேடம் பூண்டதில் வியப்பேதுமில்லை.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் துணை ஆணையாளர் நாடா அல்-நாசீஃப் அம்மையாரால் இலங்கை நிலைவரம்பற்றி மனித உரிமைகள் அவையிலே சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை நோக்கும் போது, இலங்கை மீதான அழுத்தத்தையோ, தமிழர்களுக்கான நீதியையோ ஐக்கிய நாடுகளிடமிருந்து எதிர்பார்ப்பது பயனளிக்காது என்பது தெளிவாகிறது. நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், அனைவருக்குமான மனித உரிமைகள் ஆகிய விடயங்களிலே முன்னேற்றமடைய இலங்கை அரசுக்கும், அதன் மக்களுக்கும் ஆதரவு வழங்க, தமது அலுவலகம் தயாராக இருப்பதாக அவர் தனது அறிக்கையை முடித்திருக்கிறார். அதாவது, தமிழர்களுக்கான நீதியையும், அவர்கள் மீதான இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறலையும் இலங்கை அரசே வழங்கவேண்டும் என்று ஐ.நா. அவை எதிர்பார்க்கிறது. இது ஆடுகளுக்கு ஓநாய்களைக் காவல் வைப்பது போன்ற கையாலாகாத்தனம். இறுதிப்போரின்போதும், அதன் பின்னரும் ஐ.நா. அவையின் செயற்பாடுகள் அனைத்துமே இவ்வகையாகத்தான் இருந்திருக்கின்றன. அதற்குக் காரணம் அதன் அங்கத்துவ நாடுகளின் அக்கறையின்மையே.

செம்மணி முதல் முல்லைத்தீவு வரை தமிழர் பகுதிகளில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளையும் இதுவரை 'கண்டுபிடிக்கப்படாத' புதைகுழிகளையும் தோண்டியவர்கள் இலங்கை அரச தரப்பினரே. தமிழர் பகுதிகளில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கும் அவர்களே பொறுப்பு. முல்லைத்தீவில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதைகுழியை அகழும் நடவடிக்கைகள் நீதியரசரின் முன்னிலையில் முன்னெடுக்கப்படுகின்றபோதும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு இல்லை. அகழும் நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை என்ற ஐயத்தைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியிட்டுள்ளதும், புதைகுழி தொடர்பாக அனைத்துலக விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் போராட்டத்தில் குதித்திருப்பதும் இந்த நம்பிக்கையீனத்தையே அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

தமிழர் பகுதிகளில் மட்டுமல்லாது, 1980-களின் பிற்பகுதியில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் இரண்டாவது ஆயுதப்புரட்சியும் பெரும்பாலும் சிங்களப் பகுதிகளில் தோண்டப்பட்ட மனிதப் புதைகுழிகளிலேயே புதைக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் இராணுவ அதிகாரியாகவும், பின்னர் நாட்டின் அரச தலைவராகவும் இருந்த கோத்தாபய இராஜபக்ச, அந்தப் புதைகுழிகள் தொடர்பான காவற்றுறை ஆவணங்களை அழிக்குமாறு கட்டளையிட்டார் என்ற குற்றச்சாட்டு ஆதாரங்களுடன் இப்பொழுது முன்வைக்கப்பட்டிருக்கிறது. இதே கோத்தாபய இராஜபக்சதான் தமிழினப் படுகொலை உச்சம் பெற்றிருந்தவேளையில் இராணுவத்தை வழிநடத்தியவர்.

தமிழ்ப் பகுதிகளில் உள்ள புதைகுழிகளில் இருந்து மட்டுமல்லாது, சிங்களப் பகுதிகளில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகளில் இருந்து எடுக்கப்பட்ட உடலங்கள்கூட அடையாளங்காணப்படவோ, குடும்பத்தவரிடம் ஒப்படைக்கப்படவோ இல்லை. அதுபோலவே, தமிழர் மத்தியில் இருந்து மட்டுமல்லாது, சிங்களவர் மத்தியில் இருந்துங்கூட காணாமலாக்கப்பட்டவர்கள் ஒருவர் பற்றியேனும் முறையான நீதி விசாரணை நிகழவில்லை. இந்நிலையில் இந்தக் கொடுஞ்செயல்களுக்குக் காரணமானவர்களை இலங்கை அரசே அடையாளங்கண்டு தண்டனை வழங்கவேண்டும் என்று எப்படி எதிர்பார்ப்பது? சிங்கள மக்களுக்கே எட்டாக் கனியாக உள்ள நீதி, தமிழ் மக்களுக்குக் கிடைக்கவே கிடைக்காது என்பதே சுதந்திர இலங்கையின் 75 ஆண்டுகால வரலாறு எமக்கு உணர்த்தும் பாடம். எனவே தொடர்ந்தும் அனைத்துலகத் தலையீட்டுக்கும் அனைத்துலக விசாரணைகளுக்கும் கோரிக்கை வைத்துக் குரலெழுப்புவதே நாம் செய்ய வேண்டியது. இலங்கை அரச இயந்திரத்தின் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும், புலத்தில் உள்ள தமிழ் மக்கள் தமது குரலை உயர்த்துகிறார்கள். போராட்டங்களை முன்னெடுக்கிறார்கள். அவர்களின் குரலுக்கு ஆதரவாகப் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் ஒருமித்துக் குரலெழுப்பவேண்டியது காலத்தின் கட்டாயம். ஐக்கிய நாடுகளை அசையவைக்க அதன் அங்கத்துவ நாடுகளால் முடியும். அங்கத்துவ நாடுகளை அசையவைக்க அவற்றில் வாழும் தமிழ் மக்களால் முடியும்.

தாய்வீடு

# இம்மாதத் தாய்வீட்டில்...


**மீண்டும் ஒரு கபட நாடகம்** 3

**தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் ஈழத்தமிழர்களுக்கான ஒரு திறந்த மடல்** 5
- செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

**மணிப்பூர் வன்கொடுமைகள்: பழங்குடிகள் மீதான ஒடுக்குமுறைகள்!** 10
- ரூபன் சிவராஜா

**மணிப்பூர் வன்முறை: மத ஒழிப்பா? இன அழிப்பா?** 14
- செந்தில்குமார் தியாகராசன்

**இந்தியாவுக்குப் பொதுச் சிவில் சட்டம் தேவையா?** 18
- நெல்லை ஜெயசிங்

**ஆயுததாரிகளின் கைகளில் போர்** 21
- ரதன்

**அமைச்சரானார் ஹரி ஆனந்தசங்கரி** 26

**அங்காதிபாதம் 400 விலக்கப்பட்டவர்** 28
- பால. சிவகடாட்சம்

**கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரம் ஆபத்தானது** 30
- சி. நற்குணலிங்கம்

**விசித்திரமான முறையில் காணாமல் போன விமானங்கள்** 32
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**பயணக் காப்புறுதி** 34
- செந்தூரன் புனிதவேல்

**புதிய வீட்டை வாங்குவதா? பழைய வீட்டைத் தெரிவுசெய்வதா?** 38
- வேலா சுப்ரமணியம்

**முன்னோரின் விடுதலையும் முத்துராஜாவும்** 41
- சண்முகம் வெற்றிவேல்

**ஆள்பாதி...** 44
- வேதநாயகம் தபேந்திரன்

**11-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு** 48
- கி. சுந்தர்ராஜன்

**அரூபாவில் ஆறுநாட்கள்** 50
- குரு அரவிந்தன்

**சீனாவில் சில நாட்கள்** 54
- சி. நற்குணலிங்கம்

**திரைத் தொகுப்பாளர் ரேணு சலுஜா** 57
- ஓவியர் ஜீவா

**அ. பேக்மன் ஜெயராசா நினைவு கொள்கிறேன்!** 60
- செல்வம் அருளானந்தம்

**சமூக உணர்வினால் பாதிக்கப்பட்ட கவிஞர் சண்முகம் சிவலிங்கம்** 62
- இனியவன் இசாறுதீன்

**'கக்கூசுப் பேச்சு - பெரும் வெட்கக் கேடாச்சு' கவிதையில் அவலத்தைப் பாடிய கவிஞர் எலியாசன்** 66
- மல்லியப்புசந்தி திலகர்

**வேரினிடை டீன் கபூரின் ஓவிய மொழிக் கவிதைகள்** 70
- ஜிஃப்ரி ஹாசன்

**திருநாவுக்கரசு கமலநாதனின் சிந்தனை - சொல் - செயல்** 74
- வி. நித்தியானந்தம்

**எனினும் நான் எழுகின்றேன்** 78
- துஷி ஞானப்பிரகாசம்

**வாசிப்பும் அதன் பன்முகத் தளங்களும்** 80
- அஹமட் பிஸ்தாமி

**ஈழமண்ணில் இந்திய இராணுவம்: நூல்வழிப் பதிவுகள்** 83
- என். செல்வராஜா

**ஈழமும் சோழமும் பொலனறுவைச் சோழர் கோவில்கள்** 87
- வி. துலாஞ்சனன்

**வதனமார் வரவு** 91
- த. ஜீவராஜ்

**கொள்ளை அமைப்பும் பூலான் தேவியும்** 94
- வே. நரேஷ்

**செம்பனைத் தோட்டங்களில் புதைக்கப்பட்ட இந்தோனேசியக் காடுகள்!** 99
- சதீஸ் செல்வராஜ்

**ஸ்டாலின் மீதான அவதூறுகள் அறிவுத்துறையின் அயோக்கியத்தனம்** 104
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**இலங்கை வர்த்தமானியில் மட்டக்களப்பு ஊர்கள் பற்றிய குறிப்புகள்** 110
ஆங்கிலத்தில்: சைமன் காசிச் செட்டி
தமிழில்: சா. திருவேணிசங்கமம்

**வட இலங்கையில் ஆரியச் சக்கரவர்த்திகள் அமைத்த அரசு- நான்கு நூற்றாண்டு அரசியல் வரலாறு:** 114
- கந்தையா சண்முகலிங்கம்

**கம்பனின் கருவூலம் திறந்து....** 117
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**நெல் எது, களை எது?** 120
- நாஞ்சில் நாடன்

**பிறவிப் பெருங்கடல் நீந்திய பாரதி** 128
- கிருங்கை சேதுபதி

**தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலமான பதிற்றுப்பத்து ஒரு செவ்விலக்கியம்** 133
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**அரசியல் ஆளுமை ராஜாஜியின் இலக்கியப் பக்கம்** 142
- சு. வேணுகோபால்

**வண்டு தின்ற பிள்ளைகள்** 150
- அகரன்

**சாம்பரில் திரண்ட சொற்கள்** 154
- தேவகாந்தன்

**வாழ்வுரிமை!** 158
- மா. சித்திவினாயகம்

**சூசனுக்காக விழித்திருத்தல்** 163
- கோர்மக் மக்காதி
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

**தைமூர் காட்டிய கோரம்** 168
- நிமால் நாகராஜா

# தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வாழும் ஈழத்தமிழர்களுக்கான ஒரு திறந்த மடல்



**- செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை**

இலங்கைத் தீவில் தமிழர்களின் எதிர்காலமும் நிலைபேறான வாழ்வியல் சூழலும் எவ்வாறு அமையப் போகின்றது என்ற வாதப் பிரதிவாதங்கள் பல தரப்புகளிலும், பல மட்டங்களிலும் முடிவற்ற திசையில் விரிவடைந்துகொண்டே செல்கின்றது.

இத்தகைய வாதங்கள் யாவும் ஏதாவது ஒரு கருத்தியல் அடித்தளத்தைக் கொண்டதாகவோ அல்லது மூலோபாய அடிப்படையிலான நிகழ்ச்சித்திட்டத்திற்கு அமைவானதாகவோ கட்டியெழுப்பப்படாமல் அதீதமான நம்பிக்கைகள், எதிர்ப்புணர்வுகள், பயங்கள், விரக்தி மனப்பான்மை மற்றும் தனிமனித அல்லது குழுநிலை நலன்களினை முன்னிலைப் படுத்தியதாகவே அமைந்துள்ளது மிகவும் வேதனைக்குரியதே.

தற்போது இலங்கைத் தீவில் எழுந்துள்ள பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளைத் தாண்டியும், புத்தாக்கமான அரசியல் செல்நெறியொன்றினைச் சிங்களப் பௌத்த தேசியவாத மேலாதிக்கவாதிகள் மிகவும் நேர்மையுடனும் திறந்த மனதுடனும் கண்டுபிடிப்பதற்கான வாய்ப்புகள் மிக மிக அரிதாகவே உள்ளது.

உலகின் மாறிவரும் அரசியல் பொருளியல் பண்பாட்டுச் சூழல்களினைக் கருத்திற்கொண்டு சிங்கள தேசத்தின் சிந்தனையில் மாற்றத்தைத் தூண்டுவதற்கு ஏதுவான தலைமைத்துவத்தைக்கூட அடுத்த பல தசாப்தத்திற்குச் சிங்கள மக்கள் மத்தியில் கண்டறிய முடியாதுள்ளது.

அவ்வாறு பரந்த சிந்தனைத்தளத்தில் சிந்தனைகளை முன்வைத்து வழிகாட்டக்கூடிய சக்திகள்கூடச் சிங்கள மக்கள் மத்தியில் மிகச் சிறுபான்மையினராகவும் பலமற்றவர்களாகவும் அச்சுறுத்தப்பட்டவர்களாகவுமே காணப்படுகின்றனர்.

சிங்களப் பௌத்த மேலாதிக்கத் தேசியவாதச் சக்திகள் தங்களை மேலும் மேலும் வன்மையான போக்குக் கொண்டவர்களாக வளரவிடுவது, தேர்தல் அரசியலூடாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி, தங்கள் வர்க்க மற்றும் கட்சி நலன்களையும் குடும்ப நலன்களையும் தக்கவைக்கப் பெருவிருப்புக்கொண்டுள்ள அனைத்து அரசியல் தலைவர்களின் தேவையாகவும் இன்று மாறியுள்ளது.

நாட்டின் அதி உன்னதமான அரசியல் சாசனத்தில் உள்ளடங்கிய விடயங்களைச் செயற்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கும் தயாராக இல்லாத நிறைவேற்று அதிகார சனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க இருப்பது ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல. சாதாரண விடயங்களில்கூட நாட்டின் சட்டமும் ஒழுங்கும் பேணமுடியாமல் இருப்பதும் நீதித்துறையின் தனித்துவமும் நடுநிலையும் எந்தவிதமான தார்மீகமுமின்றிச் சீர்குலைக்கப்படுவதும் இலங்கையின் அதியுயர் மக்களாட்சி மன்றம் வழங்கிய சிறப்புரிமைகளால் மீறப்படுவதும் சிறீலங்காவின் அரசியல் அறமாக அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமையில் அண்மையில் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்த அமெரிக்கத் தூதுவர் தெரிவித்த கருத்து மிக முக்கியமானது. ‘எல்லா விடயத்திற்கும் சர்வதேசம் சர்வதேசம் எனக் கூறிக்கொண்டிருக்காதீர்கள்: சர்வதேசத்திற்கும் பல வரையறைகள் உண்டு’ என்ற கூற்று மிகத் தெளிவான செய்தியாகும்.

இந்தப் பூகோளத்தின் அரசியல் வரலாற்றுப் பரிமாணத்தில் ஆட்சியதிகாரங்களில் இருந்தவர்களும் தங்களை நிலைநிறுத்துவதற்காகப் பேரங்கள் பேசியவர்களும் உடன்பாடுகளை எட்டியவர்களும் நீதி நியாயத்தின் பெயராலும், மனித உரிமைகள், சமூக உரிமைகள் ஆகியவற்றின் அடிப்படையிலும் தர்மத்தின் அடிப்படையிலும் செயற்பட்டவர்களேயல்ல.

இதனையே மிக அண்மைக்காலத்தில் சிதைக்கப்பட்ட ஈராக், லிபியா போன்ற தேசங்கள் தொடக்கம் விடுதலையின் பெயரால் துண்டாடப்பட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகள் உள்ளடங்களாக வெளிப்படுத்துகின்றது. ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் எனப்படும் உக்ரேனுக்கும் ரஷ்சியாவுக்கும் இடையில் உருவாக்கப்பட்டுள்ள மிகக்கொடூர யுத்தமும் கூட

இதே பின்னணியினையே கொண்டுள்ளது. 1947-ல் ஐ.நா உடன்படிக்கையின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பாலஸ்தீனத் தேசம் இன்று தொடர்ச்சியாகச் சியோனிச இஸ்ரேலினால் சிதைக்கப்பட்டுக் காணாமலாக்கப்பட்டுக் கொண்டிருப்ப தனை ஐக்கிய நாடுகள் சபை தொடக்கம் உலகில் நீதிக்கா கப் போராடும் உரிமை சார்ந்த அமைப்புகள் வரை அனைத் துமே மௌனமாக அனுமதித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

**எமது அரசியல் கட்சித்**
**தலைவர்கள் தங்களது**
**வாக்குவங்கி அதிகாரக் கதிரை**
**அரசியலுக்கும் அப்பால்,**
**தேசத்தினதும் மக்களது**
**நிலைபேறான இருப்புக்காக,**
**ஒரு**
**தேசிய நெறிப்படுத்தற் சபையாக**
**ஒன்றிணைய வேண்டிய**
**அவசியத்தை வலியுறுத்தி**
**அவர்களை**
**நிர்ப்பந்திக்கமாட்டோமா?**
**எங்களால் முடியாதா?**

**முடியும் என்பதே எங்கள்**
**முடிவாகட்டும்.**

பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் சியோனிச ஆட்சிசெய்வதனை தங்களது முன்மாதிரிப் பாடமாகவே கடந்த பல தசாப்தங்க ளாகச் சிறீலங்கா முன்னெடுத்துப் பின்பற்றி வருகின்றது என் பது சர்வதேசப் புலமையாளர்களின் ஆய்வுகள் மூலமே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.

மறுபக்கத்தில் தமிழர் தரப்பின் நிலைப்பாடுகளும் செயற்பா டுகளும் எத்திசை நோக்கித் தமிழர் சமூகத்தைக் கொண்டு செல்கின்றது என்பது மிகப் பெரும் வினாவாக எழுந்துள்ளது.

ஜுலை 26, 2023-ல் சிறீலங்கா சனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது இந்தியாவுக்கான சுற்றுப்பயணத்தை முடித்த கையு டன் சர்வகட்சி மகாநாடொன்றினைக் கூட்டியிருந்தார். அந்த மகாநாட்டிற்குத் தமிழர் தரப்பு அரசியற் கட்சிகளின் பிரதி நிதிகள் தொடக்கம் எதிர்க்கட்சிகள் உட்படப் (கஜேந்திரகு மார் அணி நீங்கலாக) பெரும்பாலான அரசியல் கட்சிகள் பங்கேற்றிருந்தன.

சனாதிபதியினால் அழைக்கப்பட்டுத் தலைமை தாங்கப்பட்ட அந்தக் கூட்டத்தில் தமிழ்மக்களின் அரசியல் பிரச்சினை என்ற விடயம் புறந்தள்ளப்பட்டு, அரசியலமைப்பின் 13-வது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாணசபைகளின் அமு லாக்கம் பற்றிய விடயமோ முடுதன்மைப்படுத்தப்பட்டிருந் தது.

ரணில் விக்கிரமசிங்காவின் வாய்ச்சொல்லில் மிகுந்த நம் பிக்கை கொண்டிருந்த முன்னாள் வடக்கு முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் விக்னேஸ்வரன் கூட விரக்தியடையும் அளவுக்கு கூட்டத்தின் போக்கு சென்றி ருந்தது. ஒரு கட்டத்தில் விக்னேஸ்வரன் நேரடியாகவே முன்பு தன்னுடன் ரணில் விக்ரமசிங்க பேசும்போது பொலீஸ் அதி காரங்கள் உட்பட்டதாக மாகாண அதிகாரத்தை விரிவுபடுத் தியளவில் தருவதாக ஒப்புக்கொண்ட விடயத்தை ஏன் சனா திபதி தற்போதைய கூட்டத்தில் கூறவில்லை என நேரடியா கக் கேள்வியெழுப்பினார்.

அப்போது ரணில் விக்ரமசிங்க தனக்கோ அல்லது தனக்கு முன்னைய ஏழு சனாதிபதிகளுக்குக்கூட இவ்விடயத்தில் தற் துணிபாகத் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இருந்ததில்லை. எனவே தன்னால் எந்தவிதமான தீர்மானமும் எடுக்கமுடியாது. பாராளுமன்றமே பொருத்தமான தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும் என மிகவும் பொறுப்பற்ற பதிலைக் கூறியிருந்த தாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அது மட்டுமன்றி பாராளுமன்ற உறுப்பினர் ம.ஆ. சுமந்திரன் முன்னைய சனாதிபதி மகிந்த இராஜபக்ச 13 பிளஸ் என்ற விடயம் பற்றி பேசியிருந்தார் என நினைவூட்டியபோது, தனது சமநிலையினை இழந்து, உங்களுக்கு என்னவேண்டும் என்ப தில் தெளிவில்லாமல் இருக்கின்றீர்கள், போய் அதனைத் தீர் மானித்துக்கொண்டு வாருங்கள் என்று சீறிச் சினந்ததாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மொத்தத்தில் ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணா கவும் தன்னால் மாற்றமுடியாதே தவிர ஏனைய அனைத்தை யும் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் தன்னால் செய்யமுடியும் என்றுரைத்த 'அரசியலில் குள்ளநரி' என வர்ணிக்கப்பட்ட முன்னாள் சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மருமகன் தான் தானென்பதனை மிகவும் வெளிப்படையாகக் காட்டியி ருக்கின்றார் இந்நாள் சனாதிபதி ரணில் விக்கரமசிங்க.

இப்போதாவது புரிந்திருக்கும் தமிழ் அரசியல் கட்சித் தலை வர்களுக்கு, தாங்கள் 'மண்குதிரையை நம்பி ஆற்றைக்


தாய்வீடு
13
08.2023



கடக்க முற்பட்டுள்ளார்கள்' என்பது.

இலங்கைத் தீவில் சிங்களப் பௌத்த பெரும்பான்மை மேலாதிக்கவாதத்தின் எழுச்சியினால் உருவாக்கப்பட்ட தொடர்ச்சியான இனவழிப்புச் செயற்பாடுகளிலிருந்து தமிழ்மக்களின் இறைமையினை மீட்டெடுக்கும் போராட்டத்திற்குத் தீர்வாகவே இந்தியாவினால் நேரடியாக இலங்கை அரசுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டதே 13-வது திருத்தச் சட்டமும் மாகாணசபைகள் என்ற நிர்வாகப் பகிர்வுக் கட்டமைப்புமாகும்.

இணைந்து வாழும் பெருமை கேட்டோம். இல்லையென அடித்து விரட்டினார்கள். தன்னாட்சியும் தனிநாடும் கேட்டோம். தமிழர் தேசத்தைச் சாம்பல் பூத்த மேடாக்கினார்கள். உள்ளக சுயாட்சி கேட்டோம். அது பழங்கதை என்று பிதற்றுகின்றார்கள். குறைந்த பட்சம் சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வு ஊடாக இனமேலாதிக்கத்திலிருந்து தற்காத்து மீண்டெழும் வாய்ப்புக் கேட்கும் போது அதுவும் இல்லை நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கு ஒத்ததான அதிகாரப் பரவலாக்கல் பற்றி பாராளுமன்றத்தில் கூடிப் பேசலாம் என்கின்றார்கள்.

இப்போதாவது நாங்கள் புரிந்து கொள்ளப்போகின்றோமா எங்களது கையறு நிலையினையும் கையாலாகாத் தனத்தையும் கனவுகளில் சவாரி செய்யும் போராட்டமுனைப்புகளையும்.

அமெரிக்கத் தூதுவர் கூறியது போல் சர்வதேசத்திற்கு மட்டுமல்லாமல் பிராந்திய வல்லரசான இந்தியாவிற்கும் வரையறைகளும் முரண்பட்ட நலன்களுக்கிடையேயான தெரிவுகளும் உண்டு என்பதனைப் புரிந்து கொள்வதற்கு எங்களுக்கு தாமதமேன்?

இந்திரா காந்தி அம்மையார் தலைமையிலான இந்திய உபவல்லரசு பாலஸ்தீனத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு பின்பலமாக நின்றது. அதனை நம்பி எமது இளைஞர்களும் 1983-களில் இந்தியாவின் ஆயுதப் பயிற்சியிலும் ஆதரவிலும் தமிழீழம் பிறக்கும் என்று மாயக் கனவு கண்டோம்.

முக்திபாகினி தலைமையிலான வங்காளதேச விடுதலைக்கு இந்தியா நேரடியான ஆதரவளித்து படை நடத்தியது, ஒடுக்கப்பட்ட தேசத்தை ஒடுக்குமுறையாளனிடமிருந்து விடுவிக்கவா? அல்லது தனக்கு இருபுறத்திலும் நிலப்பரப்பினைக் கொண்டிருந்த பாகிஸ்தான் என்ற எதிரி நாட்டின் பலத்தைச் சிதைத்துத் தனது பாதுகாப்பினை உறுதி செய்யவா? என்பது பற்றிய புரிதல் எமக்கு இன்னமும் ஏற்படவில்லை என்பது மிகவும் விசனத்திற்குரியது.

அன்றைய சூழ்நிலையில் பாகிஸ்தான் என்ற நிலத் தொடர்பற்ற எதிரி நிலம் பிரிக்கப்படுவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு தேவையானது. ஆனால் இலங்கைத் தீவு என்ற சிறிய நிலப்பரப்பு பிரிக்கப்படாமல் தனது கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டுவருதல் மட்டும்தான் இந்தியாவின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் என்பது இன்றைய இந்தியாவின் மட்டுமல்ல இந்திரா காலத்து இந்தியாவின் தேவையாகவும் இருந்தது.

ஒட்டுமொத்தத்தில் இலங்கைத் தீவினைப் பணியவைத்துத் தனது வழிக்குக் கொண்டுவருவதற்காகப் பலியிடப்பட்டது ஈழத் தமிழர்களின் வாழ்வும் வளமும் வாழ்நிலமும் வருங்காலமுமே.

தற்போதைய மோடியின் இந்தியா, இலங்கைக்கும் இந்தியா

விற்கும் இடையில் தொடர்புகளை (Connectivity) கட்டியெழுப்ப முனைந்துள்ளது. இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு ஊடாக அந்தத் தொடர்புகள் விமானப் போக்குவரத்தாகவும் கடல்வழிப் போக்குவரத்தாகவும் கட்டியமெழுப்பப்படவேண்டும் என்ற நப்பாசை தமிழ்மக்களுக்குப் பேராசையாக இருந்தாலும் இது முழுமையாக நிறைவேறுவதற்குச் சிறீலங்காவின் மறைகரங்கள் அனுமதிக்கப் போவதில்லை.

யுத்தகாலத்தில் முந்நூறு மீற்றருக்குக் குறைவில்லாத தூரத்துடன் போர்க்கால விமானத்தளமாக இயங்கிய பலாலி விமானத்தளம் தற்போது வெறுமனே 900 மீற்றர் தூரங்கொண்ட விமான ஓடுபாதை நிலையிலிருந்து விரிவடையமுடியாமல் உள்ளது. பலாலி விமான நிலையத்தினைச் சர்வதேச விமான நிலையமாக மாற்றும் தமிழர்களின் கோரிக்கையினை இப்போது சனாதிபதி ரணில் விக்ரமசிங்க வவுனியா மற்றும் பலாலி விமான நிலையங்களின் அபிவிருத்தி என மடைமாற்றுகின்றார்.

இந்தியா தமிழ்நாட்டின் காரைக்காலிலிருந்து காங்கேசன்துறைக்கான பயணிகள் மற்றும் சரக்குக் கப்பல் சேவையானது மூன்று வருடங்களைக் கடந்து தற்போது நாகபட்டினம் காங்கேசன்துறை கடல்வழிப் போக்குவரத்தாக அடுத்தவருடம் வரை தாமதிக்கப்பட்டுள்ளது. சமகாலத்தில் அண்மைய தனது இந்திய விஜயத்தின் போதும் இராமேசுவரம் மன்னார் கடல்வழிப் போக்குவரத்தின் அவசியத்தையும் இதனை விரைவுபடுத்தப்பட வேண்டிய அவசியத்தையும் மட்டுமன்றி ஒரு தரைவழிப் பாதையின் ஆய்வுகளின் அவசியத்தையும் உடன்பட்டு வந்திருக்கின்றார்.

தரைவழிப் பாதைக்கான ஆய்வுகள் தொடங்க முன்னரே அதனால் ஏற்படக்கூடிய இந்திய விஸ்தரிப்பு வாதத்தின் ஆபத்துகள் பற்றி சிங்களப் பௌத்த தேசியவாதிகள் எதிர்ப்புக் குரலெழுப்பத் தொடங்கிவிட்டனர். அது காலம்தான் தீர்மானிக்கவேண்டும். ஆனால் மறுபக்கத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமான தொடர்புகள் தமிழ் தேசத்தினூடாக நடைபெறாமல் சிங்கள தேசத்துடன் நேரடியாக உருவாக்கப்படும் திட்டங்கள் களநிலையினைத்தாண்டி உருக்கொள்ளத் தொடங்கிவிட்டன.

சிறீலங்கா 2050 என்ற தொலைநோக்குத் திட்டத்தின் படி மன்னார் தீவும் பெருநிலப்பரப்பின் கரையோரமும் மல்வத்து ஓயா (ஆருவி ஆறு) நிலப்பகுதியாக வரலாற்றுக் கால ஆதாரங்களின் படி வடமத்திய மாகாணத்தின் வளர்ச்சிப் பிராந்தியத்திற்குள் கவர்ந்திழுக்கப்படும். அப்போது 1.5 மில்லியனுக்குக் குறையாத மக்களைக்கொண்ட புராதன அநுராதபுர இராஜரட்டை இராச்சியம் மீண்டும் தோற்றம் பெறும். எனவே அதற்குக் கட்டியம் கூறுவதாக இராமேசுவரம் மன்னார் கடல்வழிப் பாதை விரைவில் திறக்கும் வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுகின்றது.

சிங்களப் பௌத்த சிந்தனாவாதிகளின் முன்னுணர்வுகளின் படி கத்தோலிக்கரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நீர்கொழும்பு மாவட்டம் எவ்வாறு சிங்களமக்களின் மாவட்டமாகத் தன்னிலை இழந்து போனதோ அதுபோன்ற மாதிரியாக (model) மன்னார் மாவட்டத்தை உருவகிக்கத்தொடங்கி அதற்கான புள்ளிக்கோலங்கள் ஆங்காங்கே வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

தமிழர் தேசத்தைக் கூறுபோடுவதில் காலத்திற்கும் மாறிவரும் அரசியல், பொருளியல், பூகோளவியல் மாற்றங்களை மட்டும் வாய்ப்பாகக் கொள்ளாமல் தாங்கள் காலத்திற்குகாலம் எதிர்கொள்ளும் இயற்கைப் பேரிடர்கள் மட்டுமல்லாமல் வேறு நெருக்கடிகளுக்கு ஊடாகத் தம்மீது சர்வதேசம் சாட்டும் அனுதாப உணர்வினையும் தமக்கு அனுகூலமானதாக மாற்றிச் சிங்களப் பௌத்த தேசத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தை விரிவுபடுத்தியும் விரைவுபடுத்தியும் வருகின்றனர்.

இவற்றையெல்லாம் புரிந்து கொண்டு தமிழ்மக்களின் எதிர்காலச் செல்நெறியை எவ்வாறு கொண்டு செல்லலாம் எனச் சிந்திக்க மறுப்பவர்களாகவும் வாக்குவங்கி அரசியல் கட்சிகளால் மக்களைக் கூறுபோட்டுச் சிதைக்கும் அரசியல் குழுநிலை பிரமுகர்களின் கைகளிலும் வாய்களிலும் தழிழர்களின் எதிர்காலத்தை ஒப்படைத்துவிட்டு செயலற்றுக் கரைந்து காணாமல் போவது எத்தனை காலத்திற்கு.

இந்தக்கட்டத்திலும் அரசியல் கட்சிகளினதும் புலனாகாத மறைகரங்களாகப் போராட்டங்களை இயக்குகின்ற சக்திகளினதும் மக்களை மனிதாபிமான அடிப்படையிலாவது காப்பாற்றுவோம் எனக்கருதித் தமது சிறுசேமிப்புகளைக்கூடத் தேசத்திற்காக அர்ப்பணித்துள்ள பல்லாயிரக்கணக்கான புலம்பெயர் உறவுகளின் உழைப்பின் ஊடாகவும் மட்டும் தாயகத்தின் இருப்பு தக்கவைக்கப்பட்டுவிடும் என இன்னமும் நம்பும் ஏமாளிகளாக நாங்கள் இருக்கமுடியுமா?

நான் இங்கு பேசுவது இலங்கைத் தீவினைத் துண்டாடித் தமிழர் தேசத்தை உருவாக்கும் மாயக்கனவினை அல்ல. மாறாக, இலங்கைத் தீவினுள் ஏனைய இனங்களுக்குச் சமானமான ஆற்றல்களையும் அடையாளங்களையும் அரசியல் மற்றும் பண்பாட்டு இருப்புக்குமான ஈழத்தமிழர் சமூகத்தை மட்டுமல்ல ஏனைய எண்ணிக்கையால் சிறுத்துப்போயுள்ள சக தேசிய இனங்களான முஸ்லீம் மக்கள், மலையகத் தமிழர்களின் இருப்பினையும் செழுமையினையும் தனித்துவ அடையாளத்தையும் கட்டியெழுப்பும் உரையாடல்களையும் ஊடாட்டங்களையும் தேடியறியும் முயற்சிக்கு முன்வரமாட்டோமா?

எமது அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களது வாக்குவங்கி அதிகாரக் கதிரை அரசியலுக்கும் அப்பால், தேசத்தினதும் மக்களது நிலைபேறான இருப்புக்காக, ஒரு தேசிய நெறிப்படுத்தற் சபையாக ஒன்றிணைய வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி அவர்களை நிர்ப்பந்திக்கமாட்டோமா? எங்களால் முடியாதா?

முடியும் என்பதே எங்கள் முடிவாகட்டும். விரைந்து செயற்பட முனைவோம் வாருங்கள்.



selvin.ireneuss.mariampillai@thaiveedu.com




இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் நிகழ்த்தப்பட்ட கூட்டுப் பாலியல் வன்கொடுமை காணொளி ஒன்று அண்மையில் (ஜூலை 20) வெளிவந்து சமூக ஊடகங்களிற் பரவியதையடுத்து, இந்தியா முழுவதிலும் பெரும் எதிர்ப்பலைகள் எழுந்துள்ளன. குக்கி இனத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, கொடூரமாகத் தாக்கப்பட்டு, தெருவெளியில் இழுத்துச் செல்லப்படும் காணொளி அது. அந்தக் கொடுமையை நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலானவர்கள் கூட்டாக நிகழ்த்தினர் என்பது ஒரு சமூகத்தினதும், தேசத்தினதும் மனநிலையையும் மனிதத்திற்கும் எதிரான

> **இன்றைய வன்முறைகள் திடீர் சம்பவத்தின் விளைவு அல்ல. மணிப்பூர் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட காலத்திலிருந்து வன்முறைகள் நடந்து வருகின்றன. இது பழங்குடி இனக்குழுமங்கள் மீதான நீண்டகால வன்மத்தின் தொடர்ச்சியும், தீவிரப்படுத்தலுமாகும்.**

கோரத்தினையும், பிறழ்வினையும் வெளிப்படுத்தி நிற்கின்றன.

அந்த வன்முறையைப் பெண்களும் சேர்ந்து நிகழ்த்தியிருக்கின்றார்கள் என்பது ஒரு பக்கம் துயரத்திற்குரியது எனும் போதும், அது ஆச்சரியத்தைத் தரவில்லை. ஏனெனில் பெண்கள் மீது கலாசாரம், இனம், மதம், சாதி, மொழி எனப் பல்வேறு கூறுகளினதும் அவற்றின் அடுக்குகளினதும் பேரில் கட்டமைக்கப்பட்ட ஒடுக்குமுறைகளைப் பேணுவதிற் பெரும் பங்கினைப் பெண்கள் வகிக்கின்றனர். அதாவது கட்டமைக்கப்பட்ட ஒடுக்குதல்கள் பேணப்பட வேண்டியவை என்ற மனநிலை பெண்களிற் பெரும்பான்மையினரின் ஆழ்மனங்களிற் பதியவைக்கப்பட்ட ஒன்று என்பதை சமூகத்தின் பல்வேறு நடைமுறைகள், கருத்துநிலை வெளிப்பாடுகளில் இன்றும் காணமுடிகின்றது.

'உடைகளைக் கழற்றாவிட்டால் உங்களைக் கொன்றுவிடுவோம்' என காடையர்களும் பெண்களும் கத்தியுள்ளனர், என The Guardian எழுதியுள்ளது.

வன்முறையிலிருந்து உயிர் தப்பியவர்களின் காவற்றுறை முறைப்பாட்டின்படி, ஒரு பெண் இருபத்தொரு வயதுடையவர், மற்றையவருக்கு வயது நாற்பத்திரண்டு. வன்முறையின் போது காவல் துறையினரின் பிரசன்னமும் இருந்ததாக வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பெண்களின் குடும்பங்கள் அல்-ஜசீராவிற்குத் தெரிவித்துள்ளனர்.

**பெண் உடல் மீது ஆதிக்க மமதை:**

பெண் உடலை நிர்வாணமாக்குதல், வன்முறைக்குள்ளாக்குதல், வன்புணர்தல் என்பன பல்வேறு ஒடுக்குமுறை சக்திகள் தமது ஆதிக்க மமதை மற்றும் வெறுப்பை வெளிப்படுத்துவதற்கு கையாள்கின்ற கொடுங் கருவியாக இருந்து வருகின்றது. குறிப்பாக ஆக்கிரமிப்பு இராணுவங்களும் இன, மத, சாதி வெறிக் காடையர்களும் இவ்வாறான செயற்பாடுகளைக் கூசாமற் செய்துவருபவர்கள். 1983 ஜூலை கலவரத்திலிருந்து 2009 இறுதிப் போர் வரை சிங்கள இனவெறியினதும் அதன் இராணுத்தினதும் தமிழ்ப் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளின் பட்டியல் மிக நீண்டது. இந்திய இராணுவமும் அத்தகைய கொடுமைகளை ஈழத்தில் நிகழ்த்தியிருக்கின்றது. உலகின் பல்வேறு ஆக்கிரமிப்பு இராணுவங்களும் அதனைச் செய்துள்ளன. இந்தியாவின் ஆதிக்க சாதியினர் மற்றும் காவற்றுறையும் தாழ்த்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட சமூகத்தின் பெண்கள் மீது இத்தகைய வன்கொடுமைகளை நிகழ்த்தியிருக்கின்றனர்.

மேற்சொன்ன பெண்கள் மீதான வன்கொடுமை மே மாதம் 3-ஆம் திகதி நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. இரண்டரை மாதங்கள் கடந்த பின்னரே காணொளி வெளிவந்துள்ளது. கலவரம்

தொடங்கியதை அடுத்து இணைய இணைப்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டிருந்தது. மணிப்பூர் வன்முறைகளில் இது வரை 150 வரையான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 60,000 வரையான மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வசிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

**வன்கொடுமைச் சம்பவங்கள்:**
மணிப்பூர் தலைநகர் இம்பாலில் இருந்து சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ள காங்போக்பி (Kangpokpi) மாவட்டத்தில் உள்ள பி-பைனோம் (B.phainom) கிராமம் தாக்கப்பட்ட போது, மெய்தி கும்பலுடன் காவல் துறையினரும் இருந்த தாக பாலியல் வன்கொடுமைக்கு ஆளானவர்களின் குடும்பத் தினர் கூறியுள்ளதாக அல்-ஜசீரா எழுதியுள்ளது.

'என் கணவர் மெய்தி வன்முறைக் கும்பலால் கொல்லப்பட் டார். எங்களைக் காப்பாற்றுமாறு நாங்கள் காவல் துறையி டம் கெஞ்சினோம்' என்று வன்கொடுமைக்குட்படுத்தப்பட்டு




தெருவில் இழுத்துச் செல்லப்பட்டவர்களில் ஒருவரான 21 வயதுடைய பெண்ணின் தாயார் கூறினார்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனம், மூன்று பேர் கொண்ட ஒரு குழுவினை அனுப்பி உண்மைளைக் கண்டறியும் முனைப்பில் அனுப்பியிருந்ததாக அதன் பொதுச் செயலா ளர் ஆனி இராஜா தமிழகத்தில் ஒரு கண்டனக் கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டிருந்தார். பல்வேறு தரப்புக ளைச் சந்தித்து உரையாடியதோடு, நேரடியாகப் பாதிக்கப் பட்டவர்களின் வாக்குமூலங்களைக் கேட்டுப் பதிவு செய்த மையையும் அவர் பகிர்ந்திருந்தார். மிகக் கொடூரமான சம்ப வங்கள் இடம்பெற்றமையை அவர் பகிர்ந்து கொண்டிருந் தார்.

ஒரு காணொளிதான் வெளிவந்திருக்கின்றது. அதுவும் இரண் டரை மாதங்களின் பின்னர். ஆனால் அதனையொத்த சம்ப வங்கள் பல முன்னரும் அண்மையிலும் தொடர்ந்து நடை பெற்றும் வருகின்றன என்பதைப் பல்வேறு வழிகளில் அறிய முடிகின்றது.

காணொளி வெளிவந்த சம்பவத்திற்கு அடுத்த நாள் தலைந கர் இம்பாலில் (Imphal) இன்னும் இரண்டு பெண்கள் ஒரு அறையிற் பூட்டி வைக்கப்பட்டு ஆறு ஆண்களினாற் கூட் டுப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர். சில மணி நேரங்களின் பின்னர் இரு பெண்களும் பிணமாக மீட்கப்பட்ட தாக அப்பெண்களின் குடும்பத்தினரை மேற்கோள் காட்டி அல்-ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது. தம்மாற் பல தடவை கள் முயற்சிகள் எடுக்கப்பட்டும் காவற்றுறை அதற்கு இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் ஒரு பெண்மணி கூறியுள்ளார்.

படுகொலைகள், பாலியல் வன்கொடுமைகள் மாத்திரமல்ல, குக்கிகளின் கிராமங்கள், சொத்துகள், நூற்றுக்கணக்கான தேவாலயங்கள், கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டுமுள்ளன.

Hanglalman Vaiphei எனும் இருபத்தொரு வயது கல்லூரி மாணவர் மணிப்பூர் முதல்வர் Biren Singh-இனை விமர்சித்து சமூக ஊடகத்திற் பதிவு இட்டதற்காகக் காவற்றுறையினாற் கைது செய்யப்பட்டுத் தடுப்பில் வைத்துக் கொல்லப்பட்டுள் ளார். நீதிமன்றத்திலிருந்து சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லும் போது, காடையர்கள் அவரை அடித்துக் கொன்ற தாகக் குடும்பத்தினருக்குக் காவற்றுறை தகவல் அறிவித்துள் ளது. அது தடுப்புக் கொலை எனக் குடும்பம் விசாரணை யைக் கோரி வழக்குத் தொடுத்துள்ள போதும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மாணவரின் உடல் இன் னும் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படவில்லை என்ற செய் தியும் வெளியாகியுள்ளது. இவ்வாறாகப் பல்வேறு மோசமான சம்பவங்கள் தொடர்பான தகவல்கள் ஊடகங்களில் வெளி வந்துகொண்டிருக்கின்றன. குறிப்பாக அல்-ஜசீரா இவற்றைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றது. வெளிவராத உண்மைகள் வெளிவந்தவற்றை விட மேலும் அதிகமானவை என்பது கவனத்திற்குரியது.

**இன அழிப்பு:**
சமீபத்தில் மணிப்பூருக்குப் பயணம் செய்து மெய்தி மற்றும் குக்கி ஆகிய இரு சமூகத்தின் பல்வேறு தரப்புகளுடன் பேசிய எழுத்தாளரும் ஊடகவியலாளருமான பாபு வெர்கீஸ் அவர்களுடன் Wire Youtube தளத்தில் ஊடகவியலாளர் கரன் தாபர் மேற்கொண்ட நேர்காணலில் மணிப்பூரில் நடைபெற்ற-நடைபெற்றுவரும் படுகொலைகள், தீ வைப்புகள், வன்புணர் வுகள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொண்டிருக்கின்றார். மணிப்பூரில் நடந்து கொண்டிருப்பது பெரும் இன அழிப்பு என்கிறார். முழு உண்மைகளும் தெரியவந்தால், இன்று நாம் அறிந்ததைவிட அவை மிகவும் மோசமானவையாக இருக்கும் என்றும் கூறுகின்றார்.

**அவர் பகிர்ந்த கொடூரமான சம்பவங்களிற் சில:**
82 நாட்களாக இரண்டு வயது மகனுடன் உயிரச்சத்துடன் ஒளிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார் ஒரு குக்கி பெண்.

தலைநகர் இம்பால் நர்சிங் கல்லூரிக்குள் நுழைந்த மெய்தி பெண்கள் அங்கிருந்த குக்கி மாணவிகளை இழுத்துவந்து மெய்தி ஆண்களைக் கொண்டு வன்கொடுமை செய்யத் துணை புரிந்திருக்கின்றனர். அதில் ஒரு பெண் கொல்லப்பட் டிருக்கிறார். ஒரு பெண் தப்பிச் சென்றிருக்கிறார்.

பல கிராமங்களும் நூற்றுக்கணக்கான தேவாலயங்களும் எரிக்கப்பட்டுள்ளன. பிணங்களை எரிக்கவோ புதைக்கவோ யாருமற்று அவை நாய்களுக்கு இரையாகி உள்ளன.

காவற்றுறையின் ஆயுதக் களஞ்சியங்களிலிருந்து பெருமளவு ஆயுதங்கள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அவை உண் மையிற் கையகப்படுத்தப்பபட்டனவா, வழங்கப்பட்டனவா

என்பது விசாரணைக்கு உரியது.

நேர்காணலின் இறுதியில் மணிப்பூர் முதல்வர், மோடி, அமித் ஷாவை நோக்கிக் கண்ணீருடன் கோரிக்கை முன்வைக்கின்றார் ஊடகவியலாளர் பாபு வெர்கீஸ். 'நீங்கள் நினைத்தால் நிமிடங்களில் இக்கொடுமையை முடித்து வைக்கலாம். தயவு செய்து தலையிடுங்கள்' என மன்றாடுகின்றார்.

### மணிப்பூர் - வரலாறு - பின்னணி:

மணிப்பூர் இந்தியாவின் வடகிழக்கில் அமைந்துள்ள ஓர் எல்லைப் பிராந்தியம். இப்பிராந்தியம் வடக்கே நாகாலாந்து, தெற்கில் மிசோரம், மேற்கில் அஸ்ஸாம் ஆகிய இந்திய மாநிலங்களையும், அதன் கிழக்கில் மியான்மாரினைச் சர்வ தேச எல்லையாகவும் கொண்டுள்ளது. இதன் பரப்பளவு 22,000 சதுர கிலோமீற்றர். இது இந்தியாவின் மிக குறைந்த மக்கள் தொகை கொண்ட மாநிலங்களில் ஒன்றாகும். அண்ணளவாக மூன்று மில்லியன் மக்கட்தொகையைக் கொண்டுள்ள இம் மாநிலத்தின் பெரும்பான்மை மக்கள் மெய்தி இனத்தவர். இவர்கள் 60 வீதத்தினர். ஏனைய 40 வீதத்தினர் குக்கி, நாகா மற்றும் ஏனைய பழங்குடி இனத்தைச் சேர்ந்த மக்கள். குக்கி இனத்தவர்கள் ஏழு முதல் எட்டு இலட்சம் மக்கட் தொகையுடையவர்கள். மெய்தி இனத்தவர் தலைநகர் இம்பால் மற்றும் பிராந்தியத்தின் சமவெளிப் பிரதேசங்களிற்




பெரும்பான்மையாக வாழ்கின்றனர். குக்கி, நாகா உட்பட்ட ஏனைய பழங்குடி மக்கள் பிராந்தியத்தின் மலைகள் மற்றும் காடுகளை அண்டிய பகுதிகளை வாழ்விடமாகக் கொண்டுள்ளனர்.

விவசாயம் மற்றும் காடு வளர்ப்பு மிக முக்கியமான வாழ்வாதாரமாகும். தேக்கு மற்றும் மூங்கில் வனத்துறையின் மிக முக்கியமான விற்பனைப் பொருட்களாகும். பருத்தித்துணி நெசவு, மிதிவண்டிகள், தொலைக்காட்சிகள், சிமெண்ட், பட்டு மற்றும் உணவுப் பொருட்கள் உற்பத்தி என்பன மாநிலத்தின் பொருளாதார ஆதாரங்களும் தொழில் வாய்ப்புகளுமாகும்.

1972-ல் இந்தியாவின் மாநிலங்களில் ஒன்றாக இணைக்கப்படுவதற்கு முன்னர், மணிப்பூர் தனியான முடியாட்சியாகப் பல நூற்றாண்டுகள் இருந்து வந்துள்ள வரலாற்றைக் கொண்டிருந்தது. 1947-ல், பிரித்தானியாவிடமிருந்து இந்தியா சுதந்திரமடைந்தபோது, மணிப்பூரும் இந்திய அரசாங்கமும் ஒரு இடைக்கால நிர்வாக ஒழுங்கு தொடர்பான உடன்பாட்டினை எட்டின. 1949-ல் இந்திய அரசு மணிப்பூரின் நிர்வாகப் பொறுப்பினை எடுத்துக்கொண்டது. 1972-ல் இந்தியாவின் ஒரு மாநிலமாக இணைக்கப்பட்டது. இன மோதல்கள் மற்றும் அரசியல் ஸ்திரமின்மை பல்வேறு காலகட்டங்களில் பதட்ட சூழ்நிலைக்கு வழிவகுத்ததோடு மக்களை இடப்பெயர்வுகளுக்கும் தள்ளியது.

### பழங்குடி இனக்குழுமங்கள் மீதான ஒடுக்குமுறை:

இன்றைய வன்முறைகள் திடீர் சம்பவத்தின் விளைவு அல்ல. மணிப்பூர் இந்தியாவுடன் இணைக்கப்பட்ட காலத்திலிருந்து வன்முறைகள் நடந்து வருகின்றன. இது பழங்குடி இனக்குழுமங்கள் மீதான நீண்டகால வன்மத்தின் தொடர்ச்சியும், தீவிரப்படுத்தலுமாகும். பழங்குடி மாவட்டங்கள் திட்டமிட்ட புறக்கணிப்பு மற்றும் பாகுபாடுகளை எதிர்கொள்கின்றன. பரப்பளவில் மிகவும் சிறிய சமவெளி மாவட்டங்களுக்கு மாறாக மிகக் குறைவான நிதி ஒதுக்கீடுகளே பழங்குடி மாவட்டங்களுக்கு செய்யப்பட்டு வருகின்றன.

நீண்டகாலமாக நிலவிவந்த இன முரண்பாடு பெரும் வன்முறைக்கு இட்டுச் செல்லப்பட்டுள்ளது. மதவாத ஆட்சியில் இனவாதம் மிகமோசமான வடிவமெடுத்துள்ளது. அனைத்துப் பழங்குடி மாணவர் ஒன்றியம் (All Tribal Students' Union Manipur) மேற்கொண்ட ஜனநாயக ரீதியிலான எதிர்ப்புப் போராட்டத்தினை அடுத்து வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. மாணவர்களின் போராட்டத்திற்கான பின்னணியானது, நீதிமன்றத் தீர்மானம் ஒன்றின் பரிந்துரைக்கான எதிர்வினையாகும். இன்றைய வன்முறைக்கான தூண்டிவிட்ட அம்சமானது, குக்கி மற்றும் நாகா இனக் குழுமங்களுக்கு வழங்கப்பட்ட பழங்குடியினர் அந்தஸ்து பெரும்பான்மையான மெய்தி இனத்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று உள்ளூர் நீதிமன்றம் மார்ச் மாதம் பிறப்பித்த உத்தரவாகும்.

### பட்டியல் அந்தஸ்து:

குக்கி மக்கள் உட்பட்ட பழங்குடிகளுக்குப் 'பட்டியல் அந்தஸ்து' சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டம் அம்மக்களுக்கான கல்வி மற்றும் அரச பணிகளில் இட ஒதுக்கீட்டினை உறுதி செய்கின்றது. அத்தோடு அவர்கள் வாழும் மலை, காடுகளை அண்டிய அவர்களின் நிலங்களை மெய்தி இனத்தவர்கள் வாங்குவதற்கான அனுமதியையும் மறுக்கின்றது. அது அடிப்படையில் அவர்களுடைய நிலங்கள் பறிபோகாதிருப்பதையும் மலைகள், காடுகள் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்கின்ற சட்டமாகும்.

மெய்தி இனத்தவர்களிற் பலர் குறைந்தது மூன்று வெவ்வேறு பிரிவுகளின் கீழ் இட ஒதுக்கீட்டுச் சலுகைகளைப் பெறுகின்றனர். பட்டியல் சமூகம், பிற பிற்படுத்தப்பட்ட சமூகங்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவு ஆகிய பிரிவுகளின் கீழ் அவர்களுக்கான இட ஒதுக்கீடுகள் ஏலவே உள்ளன. இவற்றோடு 'பட்டியலிடப்பட்ட பழங்குடியினராக' வகைப்படுத்தப்பட வேண்டும் என்ற மெய்தி இனத்தவரின் வலியுறுத்தல், குக்கி மற்றும் நாகா பழங்குடியினரின் எதிர்ப்பிற்கு வழிவகுத்தது. மெய்தி இனத்தவர்கள் எண்ணிக்கையிற் பெரும்பான்மையினர் என்பதோடு, அரசியல் ரீதியாகவும் மேலாதிக்கத்தினைக் கொண்டுள்ளனர். மாநிலத்தின் 60 சட்டமன்ற உறுப்பினர்களில் 46 உறுப்பினர்கள் மெய்தி பிரதிநி

திகளாவர்.

மணிப்பூர் மாநில அரசு, போதைப்பொருள் விளைவிப்புத் தொடர்பாக குக்கி பிரதேசங்களில் மியான்மாரிலிருந்து இடம் பெயர்ந்த அகதிகள் மீது குற்றம் சுமத்தி வந்துள்ளது. 2021-இல் மியான்மாரில் இராணுவம் ஆட்சிக் கவிழ்ப்பினை மேற்கொண்டது. இராணுவ ஆட்சியையடுத்து மியான்மாரிலிருந்து அகதிகள் மணிப்பூரிற்கு இடம்பெயர்ந்தனர். அவர்கள் குக்கி

**தொடர்ந்து கொண்டிருக்கும் கலவரங்களுக்கும் குக்கி இன மக்கள் மீதான வன்முறைகளுக்கும் முற்றிலும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் Biren Singh தலைமையிலான மணிப்பூர் மாநில அரசும் மோடி தலைமையிலான மத்திய அரசும்தான்.**

மக்களுடன் இனரீதியான பிணைப்பினைக் கொண்டவர்கள். இம்மக்களின் இடப்பெயர்வும் மெய்தி இனத்தவர்கள் மத்தியில் விசனத்தினை ஏற்படுத்தியதோடு, முரண்பாட்டினைக் கூர்மைப்படுத்தும் காரணிகளில் ஒன்றாக இருந்துள்ளது.

**நிலம், வளம், அடையாளம்:**

மணிப்பூர் மாநிலம் பல்வேறு இன, மத, மொழி பேசும் மக்கள் குழுமங்களின் தாயகம். அங்குள்ள பழங்குடி மக்கள் நீண்ட காலமாகத் தமது உரிமைகளுக்காகப் போராடி வருகின்றனர். ஆயுதமேந்திய அமைப்புகளும் அவர்கள் மத்தியில் உள்ளன. அவர்களுடைய போராட்டம் என்பது நில உரிமை, வளங்களைப் பாதுகாத்தல், அடையாளத்திற்கான போராட்டம். குக்கி அரசியற் தரப்பிலிருந்து தனி மாநிலக் கோரிக்கையும் உள்ளது.

குக்கி பழங்குடியினத்தைச் சேர்ந்த குடும்பங்கள் உரிமம் பெற்ற ஒற்றை அல்லது இரட்டைக் குழல் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவது வழக்கம். அவை இப்போது கிராமங்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

‘நாங்கள் ஒரு போரிற்குள் தள்ளப்பட்டிருந்தாலும், எங்களிடம் போர் நெறிமுறைகள் உள்ளன. குழந்தைகள், பெண்கள் அல்லது நிராயுதபாணிகளுக்கு நாங்கள் தீங்கு விளைவிப்பதில்லை, ஏனெனில் இந்த விதிகளை மீறினால் போர்கள் தோல்வியைச் சந்திக்கும் என்று எங்கள் முன்னோர்கள் கற்பித்துள்ளனர். அரசு எங்களைத் தாக்கும் போது எங்களுக்கு வேறு வழியில்லை’ என்று குக்கி மகளிர் சங்கத்தின் தலைவி நெய்னு கூறியுள்ளார்.

‘கடந்த சில ஆண்டுகளில், எங்கள் நிலத்தை அபகரிக்க முயற்சிப்பது உட்பட எங்களைக் குறிவைக்கும் வகையில் பிரேன் சிங்கின் அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது’ என்று பெயர் குறிப்பிட விரும்பாத குக்கி இன அரசாங்க அதிகாரி அல் ஜசீராவிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

**மோடி அரசின் பாராமுகம்:**

சமூக, அரசியல், முற்போக்கு அமைப்புகள், கட்சிகள், பெண்கள் அமைப்புகள் கண்டனப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றன, மத்திய அரசு மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. இரண்டரை மாதங்கள் கடந்தும் மாநில அரசோ மத்திய அரசோ வன்முறைகளைக் கட்டுப்படுத்தவோ அன்றி நிறுத்தவோ உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. மணிப்பூர் சாம்பலாகும் போதும், உலகப் பயணங்களை மேற்கொண்டவாறிருந்தவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.

இரண்டரை மாதங்கள் வரை, அதாவது இரண்டு பெண்கள் பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தப்பட்ட காணொளி வெளிவந்து, எதிர்ப்பலைகளையும் கண்டனங்களையும் எழுப்பும் வரை பிரதமர் மோடி வாய் திறக்கவில்லை. அதன் பின் வாய் திறந்த அவர், அச்சம்பவம் ஒட்டுமொத்த இந்திய தேசத்திற்கும் பெருத்த அவமானம் என்றிருக்கின்றார். உண்மையில் இதற்கும் ஒட்டுமொத்த நாட்டுக்கும் சம்பந்தமில்லை. முற்றிலும் மோடி அரசாங்கத்தின் பாராமுகமே காரணம். அல்-ஜசீரா உட்பட்ட சர்வதேச ஊடகங்கள் மே மாத ஆரம்பத்திலேயே மணிப்பூர் வன்முறைகள் குறித்து விரிவாக எழுதியுள்ளன. ஆனால் காணொளி வெளியாகும் வரை மோடி அரசாங்கம் மௌனமாய் இருந்துள்ளது. அதன் பின்னர் கூட உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

தொடர்ந்து கொண்டிருக்கும் கலவரங்களுக்கும் குக்கி இன மக்கள் மீதான வன்முறைகளுக்கும் முற்றிலும் பொறுப்பேற்க வேண்டியவர்கள் Biren Singh தலைமையிலான மணிப்பூர் மாநில அரசும் மோடி தலைமையிலான மத்திய அரசும்தான். மாநில அரசும் மத்திய அரசுபோல் பாரதிய ஜனதா ஆட்சிதான் என்பது கவனம் கொள்ளத்தக்கது.

அடிப்படையில் இது அரச பயங்கரவாதம். இந்திய பாரதிய ஜனதா அரசாங்கம், சொந்த நாட்டு மக்கள் மீது அனுமதித்துள்ள பயங்கரவாதம். ஒரு பெரிய இராணுவத்தினைக் கொண்டுள்ள நாடு, உலகின் மிகப்பெரும் ஜனநாயக நாடுகளில் ஒன்று, பல்லின பன்மொழி மக்களை கொண்ட ஒரு நாடு என்ற அம்சங்களைக் கொண்டுள்ள நாட்டின் தலைமை நினைத்தால் உரிய முறையிலும் துரித கதியிலும் இந்த வன்முறைகளைக் கட்டுக்குள் கொண்டுவந்திருக்க முடியும்.



rooban.s@thaiveedu.com




மைத்தி - குக்கி இன மோதலாகவும், இந்து - கிறித்தவ சமய மோதலாகவும், சமவெளியினர் - மலைவாழ் பழங்குடியினர் என்ற நிலப்பரப்பு சார்ந்த மோதலாகவும் தன்னை வெளிப்படுத்திக்கொள்ளும் இம்மோதல் அதன் அடியாழத்தில் காடுகள் மீதான பழங்குடி மக்களின் அடிப்படை உரிமைக்கும் கார்ப்பரேட்களின் சுரண்டல் வேட்கைக்கும் இடையிலான மோதலாக இருக்கிறது. இந்த இடத்தில்த்தான் பாஜகவின் இன - சமய வெறுப்பு அரசியலும், கார்ப்பரேட் ஆதரவு அரசியலும் ஒன்றுபடுகிறது.

கடந்த மே 3-ம் நாள் இந்தியாவின் எல்லையோர மாநிலமான மணிப்பூரில் வெடித்த இன மோதல் இன்றுவரை ஓய்ந்தபாடில்லை.

மிகவும் வலிமைவாய்ந்த படையைக் கொண்ட இந்திய ஒன்றிய அரசால் இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லையா?

மே 3-ம் நாளே வன்முறை வெடித்த நிலையில் மணிப்பூர் சென்று பார்வையிடுவதற்கு உள்துறை அமைச்சர் அமித்ஷா 25 நாட்கள் எடுத்துக் கொண்டது தற்செயலானதா? என்கிற கேள்விகளுக்கு, இல்லை. குக்கி இன மக்களுக்கு எதிரான வன்முறையை வெடிக்கவிட்டுப் பார்ப்பது உள்நோக்கம் கொண்டது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். வீடுகள், கடைகள், தேவாலயங்கள், கோயில்கள் எரியூட்டப்பட்டுள்ளன. சுமார் 200-க்கும் மேற்பட்ட தேவாலயங்கள் எரியூட்டப்பட்டுள்ளன. இதில் குக்கி இன மக்களுடையது மட்டுமல்ல மைத்தி இனத்தினரது தேவாலயங்களும் எரியூட்டப்படுகின்றன. சுமார் 40,000-க்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர். பள்ளத்தாக்கில் குக்கி இனத்தவர் எவரும் இல்லை, மலைப்பகுதிகளில் மைத்தி இனத்தவர் எவரும் இல்லை என்று சொல்லத்தக்க வகையில் புவியமைப்பு வகைப்பட்ட பிளவு என்பது இன வகைப்பட்ட பிளவாக மாறியிருக்கிறது. அதே சமயத்தில் இது இன மோதலா? சமய மோதலா? என்று பிரித்தறிவதிலும் இடர்பாடு உள்ளது? எனவே முதலில் மணிப்பூரின் இன வரைபடத்தைப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

மணிப்பூர் இம்பால் பள்ளத்தாக்கையும் மலைகளையும் உள்ளடக்கிய ஒரு மலை மாநிலமாகும் (Hill State) ஆகும். 1949-ஆம் ஆண்டு இந்திய ஒன்றியத்தில் மணிப்பூர் இணைக்கப்பட்டது. மணிப்பூரின் மொத்த மக்கள்தொகை 20,85,000. அதில் 53% மைத்தி இனத்தினர். நாகா இன மக்கள் சுமார் 24%. குக்கி இனத்தினர் 16%. மொத்தம் 33 பழங்குடியின மக்கள் மணிப்பூரில் உள்ளனர். ஆனால் மைத்தி இன மக்கள் பழங்குடிகளாக அரசமைப்புச் சட்டத்தில் ஏற்கப்படவில்லை. மணிப்பூரின் மொத்த மக்கள் தொகையில் 60% இம்பால் உள்ளிட்ட பள்ளத்தாக்குகளிலும் 40% மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். மைத்தி இனத்தவர்களில் 83%-க்கும் மேலானவர்கள் இந்துக்கள். குக்கி இன மக்களில் 90% கிறித்தவர்கள்.

மைத்தி இனத்தவர்கள் இந்து சமயத்தினராய் இருப்பதால் அவர்களுக்கிடையே வர்ணமும் உண்டு. எனவே அவர்கள், பிராமணர்கள், சத்திரியர்கள், பட்டியலினச் சாதிகள் என மூன்று பெரும் பிரிவுகளாக உள்ளனர். கடந்த பத்தாண்டுகளாக மைத்தி இனத்தவர்கள் தம்மைப் பட்டியல் பழங்குடியினராக(ST) அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி வருகின்றனர்.

மைத்தி இன மக்கள் பெரும்பான்மையினர் என்பதோடு எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் தமக்கென கணிசமான

அரசியல் பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப்பவர்கள். அரசியல், பொருளியல் வலிமை கொண்டவர்கள். எனினும், மைத்தி இனத்தைச் சேர்ந்தவர்கள் மணிப்பூர் உயர் நீதிமன்றத்தில் தம்மை பட்டியல் பழங்குடியினராக அறிவிக்கக் கோரும் முறையீட்டைச் செய்தனர்.

மணிப்பூர் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி முரளிதரன், மே 29-ம் தேதிக்குள் மைத்தி இனத்தைப் பட்டியல் பழங்குடியினராக அறிவிக்கக் கோரி ஒன்றிய பழங்குடி விவகார அமைச்சகத்திற்குப் பரிந்துரை செய்யுமாறு மணிப்பூர் மாநில அரசுக்கு ஏப்ரல் 27-ம் நாளன்று ஆணைப் பிறப்பித்து தீர்ப்பளித்திருந்தார். ஆனால், மாநில அரசு உயர் நீதிமன்



றத்தில் எதிர்ப்புத் தெரிவித்து வாதாடாமல் வேடிக்கைப் பார்த்தது, மட்டுமன்றி இந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டுக்கும் செல்லவில்லை.

இந்நிலையில், இதை எதிர்த்துப் பழங்குடித் தலைவர் தின் காங்லுங்க் உச்ச நீதிமன்றத்தை அணுகினார். உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி டி.ஒய். சந்திர சூட், மேற்படி தீர்ப்பை விமர்சித்து, ‘எந்த மாநில அரசுக்கும் அல்லது எந்த நீதிமன்றத்திற்கும் எவர் எவரை பழங்குடி மக்கள் என்று சேர்ப்பது சம்பந்தமான ஆணையை அளிப்பதற்கான அதிகாரம் இல்லை’ என்று உச்ச நீதிமன்றத்தின் அரசமைப்புச் சட்ட அமர்வு ஏற்கெனவே தீர்ப்பளித்துள்ளது என்று கூறினார்.

ஏப்ரல் 27 அன்று தீர்ப்பு வருகிறது. மே 3 அன்று மைத்தி இனத்தவருக்கு பழங்குடி தகுதி வழங்குவதை எதிர்த்து அனைத்துப் பழங்குடி மாணவர் அமைப்பு பேரணி நடத்தியது. அப்போது வெடித்த வன்முறை இப்போதுவரை நீடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால், மைத்திக்கு பழங்குடி தகுதி கொடுப்பதுதான் பிரச்சினையின் அடியும் முடியும் என்றால் அதுதான் இல்லை. மாறாக, பாதுகாக்கப்பட்ட வனங்களையும் அங்குள்ள வளங்களையும் கொள்ளையடிக்கத் துடிக்கும் கார்ப்பரேட் நிகழ்ச்சி நிரல் இதற்குப் பின்னால் நிழலாடிக் கொண்டிருக்கிறது.

இந்திய ஒன்றியத்துடன் மணிப்பூர் இணைக்கப்படுவதற்கு முன்பு மைத்தி இனத்தைச் சேர்ந்தவர்கள் மலைப் பகுதிகளில் நிலங்களை வாங்க முடிந்தது என்றும், 1960-களில் கொண்டுவரப்பட்ட சட்டத்தின்படி மலைப் பகுதிகளில் பழங்குடி அல்லாதவர்கள் நிலம் வாங்க முடியாமல் போனது என்றும் ஒரு கதையாடல் மைத்தி இனத்தவரால் சொல்லப்படுகிறது. மைத்தி இனத்தவர் சமவெளிப் பகுதிகளில் வாழ்பவர்கள்தான். அசாமிலும் அவர்கள் அப்படித்தான் வாழ்ந்து வருகின்றனர். மலைப் பகுதிகளில் சென்று குடியேறி அங்கு வாழக் கூடியவர்கள் கிடையாது என்று வடகிழக்கைப் பற்றி நன்கறிந்தவர்கள் சொல்கின்றனர்.

மொத்தமுள்ள 60 சட்டப்பேரவை இடங்களில் 40-ல் மைத்தி இனத்தவர்கள் இடம்பிடித்து விடுகின்றனர். அதாவது 5 மாவட்டங்களில் வாழும் மைத்தி மக்கள் 3-ல் 2 பங்கு இடங்களைக் கைப்பற்றுகின்றனர். அதே நேரத்தில் பத்து மாவட்டங்களில் வாழக் கூடிய பழங்குடியினர் வெறும் 20 இடங்களை மட்டுமே நிரப்புகின்றனர்.

பாஜக மணிப்பூரில் ஆட்சிக்கு வந்தது. முதல்வராக மைத்தி இனத்தைச் சேர்ந்த பிரேன் சிங் பதவியில் அமர்ந்தார். அவர் சட்டப்பேரவையில் மைத்தி மக்களுக்கு இருக்கும் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி அரசமைப்பு சட்ட உறுப்பு 371C பழங்குடிகளின் அடையாளம் மற்றும் உரிமைகள் தொடர்பில் கொண்டிருந்த பாதுகாப்பு அம்சங்களைப் பலவீனப்படுத்தும் வேலையைச் செய்தார். மேலும், பள்ளத்தாக்குப் பகுதிகளில் பழங்குடி மக்கள் நிலம் வாங்குவதற்கு இருந்த உரிமையைப் பறித்தார்.

பாதுகாக்கப்பட்ட காடுகள், சேமக் காடுகள், வனவிலங்கு சரணாலயங்கள் என்ற பெயரில் பழங்குடிகளை அவர்களின் வாழ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்திவிட்டு அதை சமூகநலக் காடுகள் (community reserves) என்ற பெயரில் தனியார் நிறுவனங்களிடமும் அறக்கட்டளைகளிடமும் ஒப்படைக்கும் வேலையை செய்கின்றனர். இதுபோல் நாட்டில் உள்ள 220 சமூகநலக் காடுகளில் 200-க்கும் மேற்பட்டவை வடகிழக்கு மாநிலங்களில் மட்டும் உள்ளன. அதிலும் கிட்டத்தட்ட 75 விழுக்காடு மணிப்பூர் காடுகள் இது போன்ற சமூகநல அமைப்புகளால் பராமரிக்கப்படுகின்றன. பெரும்பாலான சமூகநலக் காடுகளை இந்திய வன உயிர்கள் அறக்கட்டளை (Wildlife Trust of India) வைத்திருக்கின்றன. இந்நிறுவனம் இங்கிலாந்தின் உலக நில அறக்கட்டளை (World Land Trust) என்ற அமைப்பின் கூட்டாளி நிறுவனமாகும். மேற்சொன்ன உலக நில அறக்கட்டளை பல்வேறு நாடுகளில் காடுகள் ஆக்கிரமிப்பு என்ற பெயரிலும் வனங்கள் மற்றும் வனவிலங்குப் பாதுகாப்பு என்ற பெயரிலும் பூர்வகுடிகளையும் பழங்குடிகளையும் காடுகளில் இருந்து விரட்டியடிக்கும் வேலையைச் செய்து வருகின்றது. இந்திய வன உயிர்கள் அறக்கட்டளையும் அதன் அறிவாளிகளும் சேர்ந்து உச்ச நீதிமன்றத்தை அணுகி காடுகளில் இருந்து பழங்குடிகளை விரட்டியடிக்கும் தீர்ப்பொன்றை 2019-ல் பெற்றனர்.

மணிப்பூர் பாஜக அரசு பழங்குடிகளை வனப் பாதுகாப்பு,



வனவிலங்குகள் பாதுகாப்பு என்ற பெயரில் சொந்த மண்ணில் இருந்து வேரோடு பிடுங்கி எடுக்கும் வேலையை கடந்த சனவரித் திங்களில் இருந்து செய்து வருகின்றது. இதுவரை சுமார் 35,000-க்கும் மேற்பட்டோர் அவ்வண்ணம் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். இதை எதிர்த்து அங்கு போராட்டங்கள் நடந்த வண்ணம் இருந்தன. பழங்குடிகளிடம் நிலவிய அதிருப்தி மேலும் தீவிரப்படும் வகையில் பாஜக முதல்வர் பிரேன் சிங், குக்கிகளை ஆக்கிரமிப்பாளர்கள், போதைப் பொருள் கடத்துவோர், கஞ்சா பயிரிடுவோர், சட்ட விரோதக் குடியேறிகள் எனப் பலவாறும் வசைபாடினார். அவர் மிக வெளிப்படையாகவே குக்கி இன மக்கள் மீதான வெறுப்பைக் கக்கினார். மணிப்பூர் பாஜக அரசு, 'போதைப் பொருட்களுக்கு எதிரானப் போர்' என்ற பெயரில் பழங்குடிகள் மீதான தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டது. ஆனால், பள்ளத்தாக்கில் இருக்கக்கூடிய பன்னாட்டுப் போதைக் கடத்தல் மாஃபியாக்கள், முக்கியப் புள்ளிகள் போன்ற மெய்யான குற்றவாளிகள் மீது கைவைக்கவில்லை.

50 ஆண்டுகளாக மக்கள் பயன்பாட்டில் இருக்கக்கூடிய தேவாலயங்களைச் சட்டவிரோத கட்டுமானங்கள் என்று சொல்லி இடித்துத் தள்ளியது பிரேன் அரசு. அதுவும் ஏப்ரல் திங்களில் ஈஸ்டர் நாளுக்கு முன்பு இத்தகைய தேவாலய இடிப்பு வேலையைச் செய்தது. இது போன்ற தொடர் தாக்குதல்கள் பழங்குடி மக்களிடையே அதிருப்தியையும் ஆத்திரத்தையும் வளர்த்துவிட்டுக் கொண்டிருந்த பின்புலத்தில்தான் மே 3-ம் நாள் அது இரு இனங்களுக்கு இடையிலான வன்முறைப் பிழம்பாக வெடிக்கத் தொடங்கியது. மே 4-ம் நாள் இம்பால் உள்ளிட்ட பள்ளத்தாக்குப் பகுதிகளில் நூற்றாண்டுக்கணக்காக வாழ்ந்துவந்த பழங்குடிகளுக்குச் சொந்தமான நிலப் பகுதிகள் குறிவைக்கப்பட்டு அழிக்கப்பட்டுவிட்டன. எனவே, இப்பிரச்சினை பழங்குடிகளின் உரிமைகள், நிலவுரிமை தொடர்பானது என்பது தெள்ளத் தெளிவாகப் புலப்பட்டது.

கனிம வளங்கள் நிரம்பிய இக்காடுகளைப் பழங்குடிகளிடம் இருந்து கைப்பற்றி கார்ப்பரேட்களுக்கு தாரைவார்க்கும் புதுத்தாராளிய நிகழ்ச்சி நிரலின் பகுதியாக இந்த இன மோதல் தீ மூண்டுள்ளது. பழங்குடிகளுக்கு அரசமைப்புச் சட்டம் வழங்கியிருக்கும் அடிப்படை நிலவுரிமையை உறுதி செய்து, பாதுகாப்பதன் மூலம் தான் இச்சிக்கலுக்கு முடிவு கட்ட முடியும்.

மைத்தி - குக்கி இன மோதலாகவும், இந்து - கிறித்தவ சமய மோதலாகவும், சமவெளியினர் - மலைவாழ் பழங்குடியினர் என்ற நிலப்பரப்பு சார்ந்த மோதலாகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் இம்மோதல் அதன் அடியாழத்தில் காடுகள் மீதான பழங்குடி மக்களின் அடிப்படை உரிமைக்கும் கார்ப்பரேட்களின் சுரண்டல் வேட்கைக்கும் இடையிலான மோதலாக இருக்கிறது. இந்த இடத்தில்தான் பாஜக-வின் இன - சமய வெறுப்பு அரசியலும் கார்ப்பரேட் ஆதரவு அரசியலும் ஒன்றுபடுகிறது.

பெரும்பான்மை மைத்தி மக்களை ஒன்று திரட்டுவதற்கான பண்பாட்டு இயக்கங்களாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் இரு பேரினவாத இயக்கங்களான மைத்தி லீபுன் (Meitei Leepun)-உம் அரம்பாய் டெங்கோல் (Arambai Tenggol)-உம் குக்கிகளுக்கு எதிரான வன்முறைகளில் ஈடுபட்டு வருகின்றன. இவ்விரு அமைப்புகளுக்கும் ஆளும் பாஜக அரசின் முழு ஆதரவு இருக்கிறது. மைத்தி லீபுன் அமைப்பின் தலைவர் பிரமோத் சிங் ஏப்ரல் 28 அன்று தனது டிவிட்டர் பதிவில் 'மலைகளில் இருக்கும் நமது பகைவர்களை அழித்தொழிப்போம்' என்று கூறியுள்ளார். இம்பாலின் எல்லையோரங்களில் உள்ள குக்கி இன மக்களின் குடியிருப்புகள் மீண்டும் மீண்டும் மைத்தி வன்முறைக் குழுக்களால் தாக்கப்படுகின்றன.

அவை எல்லாவற்றிலும் இருக்கும் பொதுவான பண்பு என்ன வென்றால் அக்குழுக்களில் கறுப்பு டீ-சர்ட் அணிந்தவர்கள் இருப்பதுதான். அவர்கள் அரம்பாய் டெங்கோல் அமைப் பைச் சேர்ந்தவர்களாவர்.

மைத்தி லீபுனின் தலைவர் பிரமோத் சிங் ‘தி வயர்’ இணை யத்தளத்திற்கு அளித்துள்ள பேட்டியில், ‘குக்கி இன மக்கள் அயலார், சட்டவிரோதக் குடியேறிகள், பூர்வகுடி மக்கள் அல்ல, வந்தேறிகள், வாடகைக்குக் குடியிருப்போர்’ எனப் பலவாறும் வசை பாடினார். ஒரு நாள் மைத்தி மக்கள் எழும் போது குக்கிகள் இருக்கமாட்டார்கள் என்றும் பிரச்சினையை அரசுகள் தீர்க்கவில்லை என்றால் உள்நாட்டுப் போர் வெடிக் கும் என்றும் வெளிப்படையாகவே சொன்னார். அவர் தமது



அமைப்புக்கும் ஆர்.எஸ்.எஸ்.-க்கும் நேரடித் தொடர்பு இல்லை என்று சொன்னாலும் தான் ஏபிவிபி என்ற ஆர்.எஸ்.-எஸ். மாணவர் அமைப்பில் இருந்தவன். அதனால், அவ்வ மைபின் செல்வாக்கு தன்மேல் உண்டு என்று சொன்னார்.

காவல் நிலையங்களில் புகுந்து மைத்தி குழுக்களும் குக்கி குழுக்களும் துப்பாக்கிகளைக் கைப்பற்றிக் கொண்டிருக்கின் றன. மணிப்பூர் காவல் துறை முழுக்க இனச் சார்பு கொண்ட தாக இருக்கிறது. குக்கி மக்கள் மணிப்பூர் காவல் துறையி னர் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர். துணை இராணுவத்தி லும் கூட மைத்தி இனத்தை சேராதவர்களே அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பியுள்ளனர்.

‘பாஜக முதல்வர் பிரேன் சிங் பதவி விலக வேண்டும், குடிய ரசு தலைவர் ஆட்சியைக் கொண்டுவர வேண்டும்’ என்ற கோரிக்கை வலுத்து வருகிறது. குக்கி இனத்தைச் சேர்ந்த 10 எம்.எல்.ஏ-களும் மணிப்பூர் மாநிலத்தில் இருந்து மலைப் பகுதிகளைப் பிரித்து தனி மாநிலமாகவோ அல்லது ஒன்றிய ஆட்சிப்புலமாகவோ அமைத்திட வேண்டும் என்ற கோரிக் கையை எழுப்பியுள்ளனர். மைத்தி இனத்தவர்கள் இதற்கு உடன்படவில்லை. அதே நேரத்தில் நாகா இன மக்களின் நிலைப்பாடு இன்னும் தெளிவாக வெளியே வரவில்லை.

மணிப்பூரில் குக்கி இன மக்களுக்கு எதிரான இனத்துடைப்பு நடந்தேறி வருகிறது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக எழுந் துள்ளது. இந்தியா இனவழிப்பு அபாயத்தில் உள்ளது என் றும் அசாமிலோ காஸ்மீரிலோ இரத்தம் பெருக்கெடுத்து ஓடக்கூடும் என்றும் வெளிநாட்டு அமைப்புகளின் எச்சரிக்கை கள் வந்தன. ஆனால், நம் கண் முன்னே அத்தகைய பெருந்துயரம் ஒன்று மணிப்பூரில் நடந்து கொண்டிருக்கிறது.

மணிப்பூர் மக்கள் மாநில பாஜக அரசின் மீதும் ஒன்றிய பாஜக அரசின் மீதும் முற்றிலும் நம்பிக்கை இழந்துவிட்டனர். அது மட்டுமன்றி, வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவின் பகுதியாகக் கருதாமல் வேறுபடுத்திப் பார்த்து கண்டுகொள் ளாமல் இருக்கும் இந்தியாவின் ஏனைய பகுதி மக்கள் மீதும் அவர்கள் நம்பிக்கையை இழந்துவிட்டனர்.

மணிப்பூரில் வெடித்துக் கிளம்பியுள்ள வன்முறை வெறியாட் டங்களுக்கான உடனடி காரணங்களில் இருந்து தொடங்கி அதன் வரலாற்று வேர்களை அடையாளம் காண வேண்டி யுள்ளது. காலனியத்திற்கு முந்தைய காலம், காலனியக் காலம், சுதந்திர இந்தியாவின் காலம், பாஜக கால் பதித்த தற்குப் பின்னரான காலம் எனப் பிரித்தும் பகுத்தும் தொகுத் தும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களை இந்தியாவில் வெற்றிகரமாக இணைத்துக்கொண்டுவிட்டோம் என்றும் பாஜக வடகிழக்கு மாநிலங்களை வெற்றி கொண்டுவிட்டது என்றும் இறுமாந்து போன மோடியின் கண் முன்னால் அவர்களின் மனக் கோட்டை சரிந்து விழுந்து கொண்டிருக்கிறது. வடகிழக்கு மாநிலங்களை வெற்றி கொண்டது போல் கிறித்தவர்களை வளைப்பதன் மூலம் கேரளாவையும் கைப்பற்றுவோம் என்று முழங்கிய மோடியின் சொற்கள் எரியூட்டப்படும் தேவாலயங்க ளில் இருந்து எழும் தீச்சுவாலைகளில் சாம்பலாகிக் கொண் டிருக்கின்றன. பாஜக கையில் எடுத்து சுழற்றி வரும் வெறுப்பு அரசியல் என்ற நெருப்புக் கோல் எங்கே, எப்படி பற்றிக் கொண்டு தீச்சுவாலைகளாக தன் நாக்கை நீட்டும் என்பது முற்கணிக்க முடியாததாக இருக்கிறது. ஆனால், இந்நாட்டு மக்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளைத் தீராப் பகையாக்கி, அந்த காயங்கள் ஆறுவதற்கு பல பத் தாண்டுகள் பாடுபட வேண்டிய நிலையை ஏற்படுத்தும் என் பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும்.

மணிப்பூரில் வேட்டையாடப்பட்டு வரும் பழங்குடி மக்க ளுக்கு ஆதரவு தந்து வன்முறையைக் கட்டுப்படுத்துமாறு ஒன்றிய அரசைக் கோரும் அதே நேரத்தில் ஆர்.எஸ்.எஸ். - பாஜக-வின் வெறுப்பு அரசியல் எங்கே இட்டுச் செல்லும் என் பதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையும் பொறுப்பும் ஜனநாயக சக்திகளுக்கு இருக்கிறது.

நன்றி: வையம்
(ஜூலை 2023 இதழ்)



vaiyam@thaiveedu.com

# இந்தியாவுக்குப் பொதுச் சிவில் சட்டம் தேவையா?

## – நெல்லை ஜெயசிங்



உலக நாடுகளின் பரப்பளவில் ஏழாவது மிகப் பெரிய நாடாகவும் பிரிட்டனை பின்னுக்குத் தள்ளி உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாகவும் மக்கள் தொகையில் முதலிடத்திலும் உள்ள இந்தியாவை உலகமே பெருமையுடன் வியந்து பார்க்கும் விடயம் இந்தியப் பன்முகத் தன்மையாகும். 1,269,219 சதுர மைல் பரப்பளவைக் கொண்ட இந்திய நாட்டில் 28 மாநிலங்களிலும் எட்டு யூனியன் பிரதேசங்களிலும் 2000-க்கு மேற்பட்ட இனக் குழுக்களும், 1100-க்கு மேற்பட்ட பட்டியல் இனத்தவர்களும் 700-க்கு மேற்பட்ட மலைவாழ் குழுக்களும் வாழ்ந்து வருகின்றனர். இந்திய மக்கள் தொகையில் பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினர் முறையே 16.6%, 8.6% ஆவர். இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் என 12-க்கு மேற்பட்ட மொழிகளைப் பேசுவோர் 46%-க்கு மேல் இருக்கின்றனர். இந்து மதம் அல்லாத இஸ்லாம், கிறிஸ்தவம், சீக்கிய மதம் போன்ற சிறுபான்மை மதத்தினர் 21%-க்கு மேல் இருக்கின்றனர். இவ்வாறு பல இன, மத, மொழி கலாசாரப் பண்பாட்டைக் கொண்ட கோடிக்கணக்கானவர்கள் வாழும் பன்முகத் தன்மை மிக்க இந்திய நாட்டிற்குப் பொதுச் சிவில் சட்டம் தேவையா என்ற கேள்வி தேசமெங்கும் தற்போது ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது. இந்தியா ஒரே நாடு. எனவே அனைத்து மக்களும் ஒரே விதமான சட்டதிட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதே இன்றைய ஆட்சியாளர்களின் எண்ணமாக இருக்கிறது.

பொதுச் சிவில் சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்துடன் 2014-ல் ஆட்சிக்கு வந்த பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த பிரதமர் திரு. மோடி அவர்கள் ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி திரு. பி.எஸ். சவுகான் தலைமையில் 21-வது சட்ட ஆணையம் ஒன்றை அமைத்தார். பொதுச் சிவில் சட்டம் பற்றி நன்கு ஆய்வு செய்த பின் பொதுச் சிவில் சட்டம் தேவையற்றது மட்டுமல்ல அது விரும்பத்தகாதது ஆகும் எனக் கூறிய ஆணையம் பன்முகத் தன்மை மிக்க இந்தியாவிற்கு இது சரிவராது எனவும் கூறி, 2018 ஓகஸ்டில் 185 பக்க அறிக்கையை வெளியிட்டது. 21-வது சட்ட ஆணையம் ஏற்கனவே கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்தி இந்தியா போன்ற பல்வேறு மொழி, இனம், சாதி, மதம், பண்பாடு, பழக்கவழக்கங்களைக் கொண்ட நாட்டிற்கு ஒரே மாதிரியான சட்டம் சரி வராது எனக் குறிப்பிட்டுள்ளது. அது இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தாக முடியும் என 21-வது சட்ட ஆணையம் அறிவித்த பின்பும், இன்றைய ஒன்றிய அரசாங்கம் பொதுச் சிவில் சட்டம் தேவை என்ற கருத்தை இந்திய மக்களிடம் முன்வைக்க முன்வந்துள்ளது.

கடந்த சில வருடங்களாக அமைதியாக இருந்த ஒன்றிய அரசு தற்போது நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறப் பத்து மாதங்களே உள்ள நிலையில் மீண்டும் பொதுச் சிவில் சட்டம் கொண்டுவர வேண்டும் எனத் தற்போது அவசரம் காட்டுகிறது. சமூகங்கள் இடையே குரோதத்தை உருவாக்கி 'இந்துக்களுக்கு ஆதரவாக இருக்கிறோம்' என்ற மாய பிம்பத்தை ஏற்படுத்தி இந்துமதப் பெரும்பான்மை மக்களின் வாக்குகளை உறுதிப்படுத்துவதே பிரதமர் உள்ளடக்கிய பா.ஜ.க-வினரின் நோக்கமாகும். இதனால் மத நல்லிணக்கம் குறைந்து மதக்கலவரம் ஏற்பட்டால் ஆட்சியாளர்கள் அதனையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவற மாட்டார்கள்.

2014-ல் மோடி அவர்களின் தலைமையில் ஆட்சி அமைத்ததில் இருந்து இன்றுவரை நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களின் போதும் அக்கட்சியானது தங்களின் பொருளாதாரத் திட்டங்களையோ தாங்கள் நிறைவேற்றிய வளர்ச்சி பற்றியோ மக்கள் முன் கூறவில்லை. மாறாக இனங்களுக்கிடையே மோதலை உருவாக்கி வாக்காளர்களைத் திசை திருப்பி வெற்றி பெறுவதை வழக்கமாகக் கொண்டிருப்பதையே காண முடிகிறது. சிறுபான்மை மக்களை எதிரிகளாகச் சித்தரித்து வெறுப்பு அரசியலை வளர்ப்பதே அவர்களின் நோக்கமாக உள்ளது. சிறுபான்மை மக்களை எப்போதும் அச்சத்தில் வைத்திருப்பதே அவர்களின் திட்டம். அதற்காக அவர்கள் தற்போது எடுத்திருக்கும் ஆயுதம்தான் பொதுச் சிவில் சட்டம். ஒரே நாடு, ஒரே மதம், ஒரே கலாசாரம் என்ற ஆர்.எஸ்.எஸ் அட்டவணையில் நீண்டகாலக் கனவாக இருப்பது இந்தப் பொதுச் சிவில் சட்டம் ஆகும்.

‘இந்துக்களுக்கு ஆதரவாக இருக்கிறோம்’ என்ற ஒரு கருத்தை உருவாக்கிப் பெரும்பான்மை இந்துக்களின் வாக்குகளைத் திசை திருப்புவதே பிரதமரின் நோக்கம். இதன் காரணமாக மத நல்லிணக்கம் சிதைந்து மதக் கலவரங்கள் ஏற்பட்டாலும் அதனைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதே ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் சித்தாந்தம். இதனடிப்படையில் பொதுச் சிவில் சட்டம் என்ற பிரச்சினையை எழுப்பி இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சிகள் அனைத்தும் இந்துக்களுக்கு விரோதமானவர்கள் என்றதொரு பீதியைக் கிளப்பிவிட மோடி முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது. ‘எப்போதும் எல்லோருடனும் எல்லோருக்காகவும்’ என்று மோடி அடிக்கடி கூறுவது முற்றிலும் பொய் எனப் பல அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இந்நிலையில் பொதுச் சிவில் சட்டம் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்துடன் அதற்கான ஏற்பாட்டின் ஆரம்பக் கட்டமாக 22-வது சட்ட ஆணையத்தை உருவாக்கி மக்களின் கருத்துக் கேட்கும் செயற்திட்டமும் நடந்து வருகிறது. ஜூலை 31-க்குள் கருத்துக் கேட்பை நிறைவு செய்ய ஆணையம் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்துத்துவாச் சித்தாந்தங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்படும் பொதுச் சிவில் சட்டம் பன்முகத் தன்மை கொண்டிருக்கின்ற இந்திய மக்கள் மீது திணிக்கப்படுவதைப் பலரும் எதிர்க்கின்றனர். அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிதாமகன் பாபா சாகேப் அம்பேத்கர் பொதுச் சிவில் சட்ட மசோதாவை நாடாளுமன்றத்தில் கொண்டுவந்தபோது பா.ஜ.க-த் தலைவர்களின் ஆதர்ச நாயகனாகப் போற்றப்படுகின்ற சியாம் பிரசாத் முகர்ஜி ‘இந்துச் சட்டச் சீர்திருத்தங்கள் எதுவும் கூடாது என்று குரல் எழுப்பியதுடன்’ இந்துச் சட்டங்களுக்கும் இந்து கலாசாரத்துக்கும் இந்து தர்மத்துக்கும் எதிரான ஒரு குரூரமான அறிவற்ற மசோதா’ இது எனவும் கண்டனம் தெரிவித்திருந்தார். ‘இந்து ராஷ்டிராவின் ஒரு பகுதியே பொதுச் சிவில் சட்டம்’ எனப் பொருளாதார அறிஞர் அமர்த்தியா சென் கூறுகிறார். மேலும், அவர் ‘வெவ்வேறு மதங்கள். அவற்றுக்கான தனித் தனிப் பழக்கவழக்கங்கள், சட்டங்கள் என நமக்குள் வேறுபாடுகள் உள்ளன. இதனை நீக்கி ஒற்றுமையாக வாழவே பொதுச் சிவில் சட்டம்’ எனப் பா.ஜ.க கூறுவது முட்டாள்தனம் எனவும் கூறுகிறார். பொதுச் சிவில் சட்டத்தை விரைவாக அமுல்படுத்தித் தேர்தல் ஆதாயம் தேடுவதே பிரதமரின் நோக்கம் எனக் கடும் கண்டனத்தையும் தெரிவிக்கிறார். பொதுச் சிவில் சட்டத்தால் சிறுபான்மை மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள். அவர்களின் உணர்வுகள் முற்றாக அழிந்து விடும். மணிப்பூர்க் கலவரம், விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் என ஏராளமான பிரச்சினைகள் நாட்டில் தலைவிரித்தாடும் போது அவற்றில் கவனம் செலுத்தாது பிரதமர் பொதுச் சிவில் சட்டத்தைத் தூக்கிப் பிடிப்பதைப் பலரும் கண்டிக்கின்றனர்.

### இந்தியச் சமூகத்தில் பல்வேறுபட்ட பழக்கவழக்கங்கள்:

இந்திய மக்கள் மிக நீண்ட காலமாக வெவ்வேறான பழக்கவழக்கங்களைத் தங்களின் அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடித்து வருவதை நாடெங்கிலும் பரவலாகக் காணலாம். பல்வேறு மதங்கள், இனங்கள், சாதியினர் மற்றும் நூற்றுக்கணக்கான பழங்குடியினர் எழுதப்படாத ஏராளமான சட்டதிட்டங்களை, வழக்கங்களைக் கடைப்பிடித்து வருகின்றனர். பெரும்பான்மையினரான இந்து மக்களிடம்கூட வெவ்வேறுபட்ட வழக்கங்கள் இருந்து வருகின்றன. குறிப்பாக இந்து திருமணச் சடங்குகளில் ஏராளமான வேற்றுமைகள் இருப்பதைக் காணலாம். மாறுபட்ட பழக்கவழக்கங்களை இந்து திருமணச் சட்டம் அங்கீகரிக்கிறது. தமிழகத்தில் சுயமரியாதைத் திருமணம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. தாய்மாமன் மகளைத் திருமணம் செய்வதும் நடைமுறையில் உள்ளது. ஆனால் வேறு சில மாநிலங்களில் இவை மறுக்கப்படுகின்றன. பெங்களூர் National law school of india university ஆசிரியர் சர்சு தாமஸ்’ பொதுச் சிவில் சட்டம் நடைமுறைக்கு வந்தால் இந்துக் கூட்டுக் குடும்பம் என்ற பாரம்பரியம் முடிவுக்கு வரும்’ என்கிறார். இதனால் இந்துக்களின் திருமணம் குறித்த வெவ்வேறு பழக்கவழக்கங்கள் கூட மாற்றவேண்டி இருக்கும். மேலும் தென்னிந்தியாவில் உறவினர்கள் இடையே உள்ள திருமண முறை இல்லாதொழிக்கப்படலாம்.

பெரும்பான்மை இந்து மதத்தைச் சேர்ந்த பட்டியலின மற்றும் மலைவாழ் மக்களின் பழக்கவழக்கங்கள், திருமணச் சடங்குகள் பொதுச் சிவில் சட்டத்தால் அழிந்துவிடும் என்ற அச்சம் அவர்களிடம் இருக்கிறது. திருமணம் போன்றே சொத்துரிமை, வாரிசுரிமை, விவாகரத்து, ஜீவனாம்சம், தத்தெடுத்தல் போன்ற தனிநபர் சார்ந்த விடயங்களின் போது இந்தியச் சமூகத்தில் பல்வேறு பழக்கவழக்கங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்திய மக்கள் தொகையில் 8% உள்ள ஆதிவாசி மக்களிடம் பல்வேறுபட்ட, மற்ற சமூகங்களில் இருந்து மாறுபட்ட பழக்கவழக்கங்கள் நடைமுறைகள் உள்ளன. காஸி ஆதிவாசிகள் தாய்வழிச் சமூகப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுபவர்கள். அதன்படி வாரிசுரிமை கடைசி மகளுக்கே உண்டு. இவ்வாறு பல்வேறு ஆதிவாசிகளின் பழக்கவழக்கங்கள் சட்டம் வடிவம் பெறாது போனாலும் ஆழமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. இந்நிலையில் பொதுச் சிவில் சட்டம் நடைமுறைக்கு வந்தால் ஆதிவாசிகள் நிலைகுலைந்து போவார்கள்.

மேலும் பழங்குடி இன நிலத்துக்குப் பாதுகாப்பாக இருக்கின்ற பல சட்டங்கள் குறிப்பாகச் சோட்டா நாக்பூர் குத்தகைச் சட்டம், சந்தால் பர்கானா குத்தகைச் சட்டம் போன்ற சட்டங்கள் பாதிப்புக்கு உள்ளாகும். அதாவது அவர்களின் சட்டதிட்டங்கள் ஆவணப்படுத்தப்படாத நிலையில் பொதுச் சிவில் சட்டம் அப்படியே அவற்றை அழித்து விடும் என்பதாகும். மேலும் அவர்கள் இன்று அனுபவித்து வரும் கானக நில உரிமைகளையும் இழக்க வேண்டி வரலாம்.

### மாற்றுக் கருத்துக்கள்:

நாட்டுமக்கள் அனைவரும் சமம் என அரசியல் சாசனம் கூறுவதால் ஒரே நாடு, ஒரே கலாசாரம் என்பதன் அடிப்படையில் பொதுச் சிவில் சட்டம் கொண்டுவர இருப்பதாகப் பிரதமர் கூறுவதில் உண்மை இல்லை என அரசியல் விமர்சகர்கள் மட்டுமல்ல, பல தேசியக் கட்சிகளும் வடகிழக்கு மாநில முதல்வர்களும் கட்சி வேறுபாடின்றிப் பொதுச் சிவில் சட்டத்தை எதிர்த்துக் கருத்துகள் கூறி வருகின்றனர். எல்லா மதத்தினருக்கும் ஒரு சட்டமும் இஸ்லாமியர்களுக்கு மட்டும் தனிச்சட்டமும் இருப்பது போன்றதொரு மாய பிம்பத்தை ஏற்

படுத்தி, இந்து முஸ்லிம்களுக்கு இடையே பிரிவினையை உருவாக்கும் முன்னேற்பாடே இந்தப் பொதுச் சிவில் சட்டம் எனப் பலரும் கூறத் தொடங்கியுள்ளனர். அரசியல் அமைப் பின் பிதாமகன் அம்பேத்கரும் கூடப் பொதுச் சிவில் சட்டம் முஸ்லிம் சமூகத்தினரின் கருத்தொற்றுமையுடன் செயற்பட வில்லை என்றால் குழப்பம் ஏற்படும் என்றும் இந்தியச் சமூ கத்தின் ஒத்த கருத்தின் அடிப்படையிலேயே பொதுச் சிவில் சட்டம் நிறைவேற்ற வேண்டும் என்றும் கூறியிருப்பது ஆழ்ந்து கவனிக்கத்தக்கதாகும்.

சதிஸ்கர் முதல்வர் பூ பேஷ் பாகேல் ‘பழங்குடியினரின் சட்ட திட்டங்கள் அவர்களின் வழக்கமான மரபுகளின் படி இருப் பதால் அவர்களின் கலாசாரம் பாரம்பரியம் கடுமையாகப் பாதிக்கப்படும்’ எனக் கூறுகிறார். ஜார்க்கண்ட் மாநிலத்தில் 30-க்கு மேற்பட்ட பழங்குடியின அமைப்புகள் பொதுச் சிவில் சட்டம் திரும்பப் பெறவேண்டும் என வலியுறுத்தி வருகின் றன. இந்தியாவின் பன்முகத்தன்மையே இந்தியாவின் பலம் எனக்கூறும் மேகாலயா முதல்வர் திரு. கான் ராட் சங்மா பொதுச் சிவில் சட்டம் இந்தியச் சிந்தனைக்கு எதிரானது என்று கூறியுள்ளார். தனித்துவமான சட்டங்களும் வலுவான பாரம்பரிய அடையாளமும் கொண்ட பழங்குடியினர் வாழும் அருணாசலப் பிரதேசத் தேசிய மக்கள் கட்சி எதிர்ப்புத் தெரி வித்துத் தனது செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றியுள் ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பல வெளிநாடுகளில் பொதுச் சிவில் சட்டம் இருப்பதாகப் பா.ஜ.க தனது செயலுக்கு நியாயம் கூறியதற்குச் சிவசேனாத் தலைவர்களில் ஒருவரான சஞ்சய் ராவத் ‘வெவ்வேறு சமூகங் கள் பிராந்தியங்களின் கவலைகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்’ என அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். பொதுச் சிவில் சட்டத்தில் இருந்து விலக்கு அளிக்க வேண் டும் என முஸ்லிம் தனிநபர்ச் சட்டவாரியம் இந்திய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சிறுபான்மை யினர் மற்றும் பழங்குடியினச் சமூகங்கள் அவர்களது சொந் தச் சட்டங்களைப் பின்பற்ற அனுமதிக்க வேண்டும் எனத் தமிழக முதல்வரும் வலியுறுத்திக் கூறியுள்ளார். தமிழகத் தைச் சேர்ந்த திருமாவளவன், வைகோ போன்றவர்களும் வேற்றுமையில் ஒற்றுமை நமது பலம் எனக் கூறிப் பொதுச் சிவில் சட்டத்தைக் கடுமையாக எதிர்த்து வருகின்றனர். ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே சிவில் சட்டம் போன்றவை இந்தியா வின் அடையாளமான பன்முகத் தன்மையைச் சிதைத்து விடும். இது ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் பெரும் தடையாக அமையும் எனப் பா.ம.க போன்ற கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. வடகிழக்கு மாநிலங்கள் மட்டுமல்லாமல் மத் திய பிரதேசம், மகாராஷ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களில் வாழும் ஆதிவாசி மக்களும் கடுமையாக எதிர்த்து வருகின்ற னர்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அனைவருக்கும் பொதுவானது. அரசியல் அமைப்புச் சட்டம் 25 முதல் 28 வரை மதச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது. 29-வது சட்டப் பிரிவு ஒவ்வொருவரும் தங்களின் மொழி, எழுத்து, பண்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்க உரிமையுடை யவர்கள் எனக் கூறுகிறது. இதன்படி பெரும்பான்மை மக்கள் தங்களின் கொள்கைக் கோட்பாடுகளைச் சிறுபான்மையினர் மீது திணித்து அவர்களின் உரிமைகளைக் கட்டுப்படுத்த முயல்வது அரசியல் அமைப்புக்கு மாறானதும் சனநாயக விழுமியங்களை நசுக்குவதுமாகும்.

பெரும்பான்மை எனக் கூறப்படும் இந்து மதத்திற்குள்ளேயே ஏராளமான வேறுபாடுகள் இருக்கின்றன. அனைத்துச் சாதியி-னரும் அங்கே சமமாகக் கருதப்படுவதும் இல்லை. நடத்தப் படுவதும் இல்லை. பொதுச் சிவில் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் எனக் கூறுவோர் அனைத்துச் சாதியினருக்கும் ஒரே சட்டம், ஒரே சுடுகாடு என்பது பற்றி வாய் திறப்பது இல்லை. வர்ணாசிரம தர்மம் அனைத்துச் சாதியினருக்கும் ஒரே விதி என்பதை மறுக்கிறது. வர்ணாசிரம் எனப்படும் சனாதனத்தைக் கட்டிக்காப்பதே அவர்களின் நோக்கம். எனவே முதலில் இந்து சமயத்தில் உள்ள பாகுபாடு களை யப்பட வேண்டும். சனாதனக் கோட்பாட்டின் அடிப்படையில் பொதுச் சிவில் சட்டம் கொண்டுவர முயற்சிக்கக் கூடாது.

இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், ஆதிவாசிகள் என அனைவரும் கொண்டிருக்கும் பழக்க வழக்கங்களையும் நடைமுறைகளையும் புறந்தள்ளிப் பொதுச் சிவில் சட்டத்தைக் கொண்டு வந்தே தீருவோம் எனக் கூறுவது சமூகத்தைப் பிளவுபடுத்தி இந்தியாவின் அடையாளமான பன்முகத் தன்மையைச் சிதைக்கும் செயலா கும். காலத்துக்கு ஒவ்வாத பிற்போக்கான நடைமுறைகள் இருப்பின் அச்சமூகத்தின், அம்மதத்தின் கருத்தறிந்து கலந் துரையாடிய பின்னர் அதனை நீக்கவோ மாற்றவோ முன்வ ருவதே சரியான சனநாயகச் செயற்பாடாக இருக்கமுடியும். பொதுவான சட்டங்கள் என்ற வரிசையில் குற்றவியல் நடை-முறைச் சட்டம், தண்டனைச் சட்டம் இந்தியாவில் நடைமுறை யில் அமுலாகி வருகிறது. அவை அனைவருக்கும் பொது வானது. அதில் எந்த பேதமும் இல்லை. சேதமும் இல்லை. இதேபோன்று இருக்கின்ற வாழ்வியல் உரிமைச் சட்டமும் பொதுவானது. ஆனால் அதே நேரம் சிறுபான்மை மதங்க ளுக்கு மட்டும் சில சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டு வரு கின்றன. இச்சலுகைகள் சாதி, மத, இன ரீதியாகக் கலாசா ரத்திற்கேற்ப மாறுபடும். அவற்றை நீக்கும் முயற்சியே வரவி ருக்கும் பொதுச் சிவில் சட்டமாகும்.

வரவிருக்கும் பொதுச் சிவில் சட்டமானது குறிப்பிட்ட ஒரு மதத்தினருக்கு எதிரானதாக அமைய வாய்ப்பு இருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். அதாவது இச்சட்ட வரம்பிலிருந்து கிறிஸ்தவர்கள் பழங்குடியினர் ஆகியோர்க்கு விலக்கு அளிப்பது குறித்துப் பரிசீலிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. இதிலிருந்து குறிப்பிட்டதொரு சிறுபான்மை மதம் மட்டும் குறி வைக்கப்படுகிறதோ என்ற சந்தேகம் பல ரிடமும் பரவலாகத் தோன்றியிருக்கிறது. மத ரீதியான பாகு பாட்டிற்குச் சட்ட அங்கீகாரம் தரமுயன்ற 2019-ம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் போன்றதொரு பாகுபாட்டைப் பொதுச் சிவில் சட்டம் உருவாக்கிவிடக் கூடாது. எதையாவது செய்து வாக்குகளைப் பெற்று ஆட்சிபீடம் ஏற வேண்டும் என்ற ஒற் றைக் குறிக்கோளுடன் இந்திய அரசியல் கட்சிகள் செயற்ப டுவதால் நாட்டின் நலன் பின்னுக்குத் தள்ளப்படும் நிலை ஏற்படுகிறது. இந்நிலை தொடர்வது இந்தியா போன்ற மிகப் பெரும் சனநாயக நாட்டிற்கு நல்லதல்ல.



jeyasingh@thaiveedu.com

# ஆயுததாரிகளின் கைகளில் போர்

**- ரதன்**

நைஜீரியாவில் 2009-லிருந்து 2015 வரை பொக்கோ ஹராம் ((Boko Haram) முஸ்லீம் தீவிரவாத அமைப்பு பல தாக்குதல்களை நடத்தியது. பாடசாலை மாணவிகளைப் பலாத்காரமாகக் கடத்தி பாலியல் துன்புறுத்தல்களைச் செய்ததுடன், அவர்களை அடிமைகளாகவும், மனைவிகளாகவும் நடத்தினார்கள். நைஜீரியா இராணுவத்தால் இவர்களைக் கட்




டுப்படுத்த முடியவில்லை. ஆபிரிக்கப் பழமொழி ஒன்று 'யானைகள் சண்டையிடும் பொழுது, புற்கள் மிதிபட்டே அழியும்' (When elephants fight, the grass gets trampled)) அதே போன்றே நைஜீரிய மக்கள், பொக்கோ ஹராமினால் அல்லல்பட்டார்கள்.

நைஜீரிய அரசு தனியார் இராணுவ நிறுவனத்தின் உதவியை நாடியது. ஒரு சில வாரங்களில் பொக்கோ ஹராம் அமைப்பினர் கட்டுப்படுத்தப்பட்டனர். Mi-24 Hind helicopter gun-ships-flying tank ஆயுதங்களுடன் களமிறங்கியது தனியார் இராணுவம். பொக்கோ ஹராமினரின் முகாம்கள் அழிக்கப்பட்டன. ஆனாலும் கடத்தப்பட்ட 276 பாடசாலை மாணவிகளில் பலரை மீட்க முடியாமல் போய்விட்டது. இன்றும் பொக்கோ ஹராம் அமைப்பினர் நைஜீரியாவின் சுற்றுப்புற நாடுகளிலும், நைஜீரியாவிலும் அவ்வப்போது தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.


தனியார் இராணுவ நிறுவனங்களை அரசுகள் போர்க்களங்களில் பயன்படுத்த 1200-களிலேயே தொடங்கிவிட்டார்கள். ஐரோப்பாவில் நடைபெற்ற பல யுத்தங்களில் தனியார் இராணுவங்களும் போரிட்டுள்ளன. அண்மையில் உக்கிரேன்- ரஷ்யப் போரில் அடிக்கடி வக்னர் இராணுவம் என்ற பெயர் பிரபல்யமானது.

அண்மைக் காலங்களில் பல நாடுகள் தனியார் இராணுவங்களைப் பயன்படுத்தியுள்ளன. வக்னர் தனியார் இராணுவம் உருவாக்கப்பட்ட முறை, தனியார் இராணுவங்கள் எவ்வாறு தோன்றி வளர்ச்சி பெறுகின்றன என்பதற்கு ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

வக்னர் இராணுவம் 2014-ல் ஆரம்பிக்கப்பட்டது. இது ஒரு தனியார் இராணுவம். கிழக்கில் உக்கிரேனின் டொன்பஸ் ரஷ்யர்கள் அதிகமாக வாழும் பகுதி. ரஷ்யர்கள் அங்கு தனி நாடு கோரிப் போராடிக்கொண்டிருந்தார்கள். இவர்களுக்கு ஆதரவாக உருவாக்கப்பட்டதுதான் வக்னர் இராணுவம். இதன் தலைவராக Yevgeny Prigozhin உள்ளார். ஆரம்பத்தில் ஐயாயிரம் வீரர்களைக் கொண்டதாகவிருந்தது. இப்பொழுது சுமார் இருபத்தையாயிரம் வீரர்களுக்குமேல் உள்ளனர்.

யெவ்கெனி பிறிகோசன், புட்டினின் சென்ற் பிற்ரர்ஸ்பேர்க்-ஐப் பூர்வீகமாகக் கொண்டவர். 1979-ல் திருட்டுக் குற்றத்துக்காகச் சுமார் பத்து வருடங்களுக்கு மேல் பிறிகோசன் சிறையிலிருந்தார். சிறைக்காலம் முடிந்த பின்னர் சென்ற் பிற்ரஸ்பேர்க்கில் கொட் டோக் கடைகளை ஆரம்பித்தார். இக்கடைகள் இவருக்கு அதிக இலாபத்தைப் பெற்றுக்கொடுத்தன. பின்னர் அதி உயர் உணவகங்களை ஆரம்பித்தார். இவற்றில் ஒன்று நீவா நதியில் ஆடம்பரப் படகில் அமைக்கப்பட்ட உணவகம். New Island என்ற இவரது உணவகத்தில் புட்டின் தனது பிறந்தநாளை 2003-ல் கொண்டாடினார். இதற்கு முன்பாக யப்பானியப் பிரதமர் சித்திரை 2000-ல் சென்ற் பிற்ரஸ்பேர்க் வந்தபோது பிறிகோசனின் உணவகமே உணவுத் தயாரித்துப் பரிமாறியது. இவருக்கும் புட்டினுக்குமான நெருக்கம், கிறெம்ளினுக்கு உணவு தயாரித்து விநியோகிக்குமளவு நெருக்கமானது. இவரை 'Putin's Chef' எனவே அழைப்பார்கள். புட்டின், பிறிகோசனுக்கு இராணுவம், பாடசாலைகள் போன்ற பலவற்றிக்கு உணவு தயாரித்து வழங்கும் ஒப்பந்தங்களை வழங்கியுள்ளார். பிறிகோசின் நதியில் உலாவும் படகு உணவகத்தில், பல முக்கிய விருந்துகள் புட்டினால் நடத்தப்பட்டுள்ளன.

வக்னர் இராணுவம் ரஷ்யாவால் உருவாக்கப்பட்ட இராணு




வம். உக்கிரேனில் ரஷ்யச் சார்பு டொன்பஸ் பிரதேசத்தில் தனிநாடு கோரும் போராளிகளுக்குச் சார்பாக ரஷ்யா நேரடியாக உதவி செய்ய முடியாமையால், ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தை அழைத்துத் தனியார் இராணுவமாகக் களத்தில் இறக்கியது ரஷ்யா. இதே 2014-ல் ரஷ்யா கிறீமியாவை மீளக் கைப்பற்றியது. 2022-2023 காலப்பகுதியில் ரஷ்யா வக்னர் இராணுவத்துக்குச் சுமார் ஒரு பில்லியன் டொலர்களை இராணுவ வீரர்களுக்குரிய வேதனமாக வழங்கியுள்ளது.

வக்னர் இராணுவம் சிரியா, சூடான், மத்திய ஆபிரிக்கக் குடியரசு போன்ற நாடுகளிலும் செயலாற்றுகின்றார்கள். சிரியாவில் பிறிகோசனுக்குச் சொந்தமாக ஒரு எண்ணெய்க் கிணறும் உண்டு. இது ஐ.எஸ்.ஐ.எஸ்-இன் கட்டுப்பாட்டிலிருந்து வக்னர் இராணுவத்தால் மீளக் கைப்பற்றப்பட்டது. மற்றும் பல எண்ணெய்க் கிணறுகளில் சுமார் 25 வீதமான பங்குகளைச் சிரியா வழங்கியுள்ளது. சூடான், மத்திய ஆபிரிக்கக் குடியரசு (CAR)ஆகிய நாடுகளில் தங்கச் சுரங்கங்களைப் பாதுகாக்கும் வேலையையும், வக்னர் இராணுவம் செய்து வருகின்றது. இதனால் இவர்களுக்கு இந்த நாடுகள் சேவைக்கான வேதனத்தையும் வழங்கிவருகின்றன. லிபிய உள்நாட்டு யுத்தத்தில் லிபிய ஜெனரல் ஹலீபா ஹப்ரலுடன் (Khalifa Haftar) இணைந்து போரிட்டனர். சுமார் ஆயிரம் வக்னர் இராணுவத்தினர் களத்தில் சண்டையிட்டனர். ஆபிரிக்க நாடான மாலியில் முஸ்லீம் தீவிரவாதிகளுக்கு எதிராக மாலி அரச படைகளுடன் இணைந்து போரிட்டனர்.

கிறீமியாவில் ரஷ்யப் படைகளுடன் இணைந்து செயற்பட்ட வக்னர் இராணுவம், உக்கிரேன் போரில் உக்கிரேனின் Popasna, Severodonetsk ஆகிய நகரங்களைக் கைப்பற்றினர். இது போரின் ஆரம்ப காலங்களில் கைப்பற்றப்பட்ட நகரங்கள்.

இவ்வமைப்பு அல்லது இராணுவம் Dmitry Utkin என்ற முன்னால் ரஷ்ய விசேடபடை அதிகாரியால் தொடங்கப்பட்டது. இவர் நாசிகளின் கொள்கைகளை அதிகம் நேசித்தவர். ஹிட்லரின் விருப்பத்துக்குரிய இசைக் கலைஞர் றிச்சாட் வக்னரின் பெயரை இராணுவத்தின் பெயராகச் சூட்டினார்.

உக்கிரேன் போர் ஆரம்பமான பின்னர், பிறிகோசன், புட்டினிடம் கைதிகளையும் போரில் பங்குபற்றச் செய்வதற்கு அனுமதி பெற்றார். ஏற்கனவே சிறையில் பல ஆண்டுகள் இருந்தமையால் பிறிகோசனுக்குக் கைதிகளுடன் இலகுவாக உரையாட முடிந்தது. 'உங்களைக் கடவுளால் தான் சிறையிலிருந்து வெளியேற்ற முடியும். கடவுள் உங்கள் மரணத்திலேயே உங்களுக்கு விடுதலை கொடுப்பார். ஆனால் என்னால் உங்களுக்கு விடுதலை கொடுக்க முடியும். நீங்கள் உங்களது தாய்நாடான ரஷ்யாவிற்காக ஆறு மாதங்கள் போரிட்டால், நீங்கள் விடுதலையடைவீர்கள்' எனக் கைதிகளுடன் உரையாடினார். அவர்களது மனோநிலையை நன்கு அறிந்திருந்தமையால் சுமார் இருபதினாயிரம் கைதிகளை இராணுவ வீரர்களாக மாற்றினார். இவர்களே உக்கிரேனில் முன்னின்று சண்டையிட்டார்கள்.

ரஷ்யா பல தனியார் இராணுவ நிறுவனங்களை போரில் பயன்படுத்திவருகின்றது. RSB-Group, MAR, ATK-GROUP, Slavonic Corps Limited, Wagner Group, E.N.O.T. Corp, Cossacks ஆகியவை குறிப்பிடத்தக்கன. Criminal Code of the Rus-

sian Federation: Art. 359 - Mercenarism 73; Art. 208 - Establishing Illegal Armed Forces 74 சட்டத்தின் கீழ் இவை கண்காணிக்கப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட நிறுவனங்களுள் சிலவற்றிற்கு இணையத் தளங்களும், நிரந்தர முகவரியும் உள்ளன. இந்த நிறுவனங்களில் சில சிரியாவிலும் ரஷ்யாவிற்காகப் போரிட்டு வருகின்றன. இவர்கள் அடிப்படையில் ரஷ்ய இராணுவத்துடன் இணைந்தே செயற்பட்டுவருகின்றன. சுமார் முப்பது நாடுகளில் ரஷ்யாவிற்காக இவர்கள் செயற்பட்டுவருகின்றனர். இவர்கள் உக்கிரேன், சிரியா உட்படச் செயற்படும் நாடுகள் அனைத்திலும் உளவு வேலைகளையும் செய்கின்றனர் Kyiv Post பத்திரிகை இவ்வருட ஏப்ரல் இதழில் ரஷ்யத் தனியார் இராணுவ நிறுவனங்கள் 37 உக்கிரேனில் இயங்குவதாகக் குறிப்பிட்டுள்ளது. அவற்றில் சிலவற்றைப் பட்டியலிட்டுள்ளது.


| Year formed | Private military companies |
|---|---|
| 1992 | Tsar's Wolves |
| 1998 | Anti-terrorist Eagle |
| 2002 | Russian Imperial Movement |
| 2005 | RSB Group |
| 2008 | PMC Global |
| 2011 | E.H.O.T, Vega (Vympel) |
| 2013 | Wagner, Slavic Corps |
| 2014 | MAR, Yastreb, ATK Group, Rusich, LLC CHOA 'CHVK', PMC Black Sea, PMC Strazh |
| 2015 | Polite People, Byzantium |
| 2017 | ISIS Hunters (Al-Sayyad), Sewa Security Service, Andreyevesky Krest |
| 2018 | Patriot, Redoubt, Moran Security Group, Ferax, Shield |
| 2022 | Akhmat, Tiger Battalion, BARS-13 (Russian Legion), ODSSBr Veterans, PMC Tavrida (Tavrida Battalion), Berkut PMC, Zvezda PMC, Storm special forces |
| 2023 | Convoy, Gazprom, Private Military Medical Company |

கலாநிதி செர்ஜி சுகான்கின் (Sergey Sukhankin) தனது கட்டுரை ஒன்றில் ரஷ்யா - லிவோனியன் போரின் போது (1558-1583) துருக்கியத் தனியார் படைகளையும் போலிஸ்ப் படைகளையும் ரஷ்யாவிலிருந்து வெளியேற்றவும், ரஷ்யாவின் பாதுகாப்பிற்குமாகச் சுவீடனின் தனியார் இராணுவத்தை (1598-1613) பயன்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடுகின்றார். செர்ஜி உட்படப் பல மேற்குச் சார்பு ஆய்வாளர்கள் ரஷ்யா, சோவியத் யூனியன் காலத்திலும் தனியார் இராணுவ நிறுவனங்களைப் பயன்படுத்தி வந்திருகின்றது, இவர்கள் ரஷ்ய அரசினால் பயிற்றுவிக்கப்படுபவர்கள், இவற்றிற்கான நிதியையும் அரசே வழங்குகின்றது, வீரர்கள் ரஷ்யர்களாக மட்டுமே இருக்க வேண்டும். எனவே, இவர்கள் அரசினால் உருவாக்கப்பட்ட தனியார் இராணுவங்கள் என்கின்றனர். வக்னரின் தலைமையை எந்தவொரு இராணுவ அனுபவமுமற்ற யெவ்கெனி பிறிகோசன் ஏற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**இலங்கையில்...**

யூன் 26, 2023 புறன்ட்லைன் சஞ்சிகைக் கட்டுரை ஒன்றில் வக்னர் நிறுவனம் இலங்கையிலும் இயங்கியதாகக் குறிப்பிடுகின்றது. கட்டுரையின் அப்பகுதி அப்படியே கீழே உள்ளது. முள்ளிவாய்க்கால் போரின் முடிவில் இலங்கை அரச படைகளுடன் பல தனியார் இராணுவங்கள் இணைந்து இயங்கியனவா? சாத்தியங்கள் இல்லை எனக் கூறமுடியாதுள்ளது.

In Asia
According to analysis by various think tanks, the Wagner Group is also active in Asia. There are several PMCs working in Sri Lanka, a report by Molfar, a Ukrainian consultancy, said in a catalogue of 37 Russian military companies working abroad. Open source investigators have found links between Russian operators working for the PMCs based in countries like Sri Lanka and the Wagner Group. The network of connections is complex.( By. DEUTSCHE WELLE)




உக்கிரேனுக்குச் சார்பாகவும் மேற்கு நாடுகளின் பல தனியார் இராணுவ நிறுவனங்கள் போரிடுகின்றன. அதில் குறிப்பிடத்தக்கது The Mozart Group. பிரித்தானியாவிலிருந்தும் சில நிறுவனங்கள் போரில் பங்குபற்றிவருகின்றன. வின்ட்மானும் அவரது சகோதரரும் உக்கிரேனில் பிறந்து சிறுவயதில் அமெரிக்காவிற்குப் புலம்பெயர்ந்து அமெரிக்க இராணுவத்தில் பணியாற்றியவர்கள். இவர்களது நிறுவனமே Vindman's group. இவர்கள் உக்கிரேனுக்கு இராணுவ ஆலோசனைகள் உட்படப் பயிற்சி போன்ற பல சேவைகளை வழங்குகின்றனர். பிளக்வோற்றர் நிறுவன நிறுவனர் எறிக் பிறின்ஸ், தனியார் இராணுவ நிறுவனமொன்றினூடாகப் போரிட உக்கிரேனில் விரும்புவதாகத் தெரிவித்திருந்தார். எனினும் இதனை

பைடன் அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. ஜேர்மனியிலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் Bild am Sonntag and Der Spiegel பிளக்வோற்றர் நிறுவனத்தின் 400 வீரர்கள் உக்கிரேன் போரில் பங்குபற்றியதாக வெளியிட்ட செய்தியை வோசிங்டன் மறுத்துள்ளது. (Blackwater - now called 'Academi' - mercenary group)

கடந்த வருடம் பி.பி.சி செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தது. அமெரிக்கத் தனியார் இராணுவ நிறுவனம் ஒன்று உக்கிரேனுக்காகப் போரில் பாதுகாப்பு முகவர் வேலைக்கான விளம்பரம் ஒன்றை வெளியிட்டிருந்தது. முகவருக்கான வேதனம் ஒரு நாளைக்கு ஆயிரம் டொலரிலிருந்து 2000 டொலர். அத்துடன் ஊக்க வேதனமும் வழங்கப்படும் என விளம்பரம் தெரிவித்ததாகப் பி.பி.சி குறிப்பிட்டிருந்தது. (Wanted: multilingual former soldiers willing to covertly head into Ukraine for the handsome sum of up to $2,000 (£1,523) per day - plus bonus - to help rescue families from an increasingly grim conflict.)

தனியார் இராணுவங்கள் ரஷ்யாவில் மட்டுமல்ல, உலகில் பல நாடுகளில் பயன்படுத்தப்பட்டன. இவற்றின் உருவாக்கத்தின் பின்னால் அந்த நாட்டு அரசாங்கங்கள் முக்கிய பங்காற்றின. முன்னால் இராணுவ அதிகாரிகள் இவ்வாறு உருவாக்கப்பட்ட இராணுவங்களின் முக்கிய தலைமை அதிகாரிகளாகக் கடமையாற்றினர். அவ்வாறு அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட தனியார் இராணுவம் Blackwater. காலத்துக்குக் காலம் வெவ்வேறு பெயர்களைப் பெற்றுக்கொண்ட இந்த இராணுவம் மத்திய கிழக்கு நாடுகளில் அமெரிக்க அரசின் பாதுகாப்புத் திட்டங்களுக்கேற்ப செயற்பட்டன. வட-கரோலினாவில் ஏழாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் தங்களது இராணுவ வீரர்களுக்கான பயிற்சி நிலையத்தையும் அமைத்தார்கள். இவர்களுக்கு அமெரிக்க அரசு பொஸ்னியா, ஆப்கானிஸ்தான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் செயலாற்ற ஒப்பந்தமிட்டது. Triple Canopy, DynCorp போன்ற பல தனியார் இராணுவங்கள் அல்லது பாதுகாப்பு நிறுவனங்கள் அமெரிக்காவிற்காகக் கடமையாற்றின.

தனியார் இராணுவ அமைப்பை அரசுகள் ஏற்படுத்துவதற்கும், ஆதரிப்பதற்குமான பிரதான காரணம் தவறுகள் ஏதாவது ஏற்படின் அது தனியார் இராணுவத்தின் மீதே பழி ஏற்படும். தமது அரசு காப்பாற்றப்பட்டுவிடும் என்பதே காரணம்.

பிளக்வோட்டர் இராணுவம் செப்ரம்பர் 17, 2007-ல் ஈராக்கில் 17 அப்பாவி ஈராக்கியரைக் கொன்றனர். இச்சம்பவத்தால் அமெரிக்க அரசு மீது குற்றஞ்சாட்டப்படவில்லை. 2015-ல் இக்கொலைகளில் ஈடுபட்ட நால்வருக்குத் தண்டனை அமெரிக்காவால் வழங்கப்பட்டது. 2020 டிசம்பர் 22-ல் அப்போதைய அமெரிக்க அதிபர் அனைவருக்கும் மன்னிப்பு வழங்கினார். இக்கொலைகளை The Nisour Square Massacre என அழைப்பார்கள்.

2005-ல் அமெரிக்கக் கடற்படை வீரர்கள் 24 ஈராக்கியப் பிரசைகளைக் கொன்றனர். இதனை Haditha massacre என அழைப்பார்கள். ஒரு அதிகாரிக்கு மட்டுமே தண்டனை வழங்கப்பட்டது. அரசு இச்சம்பவத்தையே மறந்துவிட்டது. இங்கு ஒரு முரண் நிலையுண்டு.

ஐக்கிய அரபு இராச்சியம் இரகசியமாக யேமன் நாட்டில் ஈரானின் அனுசரனையுடன் போரிட்ட கூதி (Houthis) தீவிரவாதிகளுக்கு எதிராகத் தனியார் இராணுவங்களைப் போரிடச் செய்தது. கொலம்பியா, பனாமா, எல் சல்வடோர், சிலே ஆகிய நாட்டின் நீண்டகால அனுபவம் கொண்ட அதிகாரிகளின் தலைமையில் தனியார் இராணுவங்கள் யேமனில் போரிட்டன. இவ்வதிகாரிகள் தங்களது நாட்டில் போதைப் பொருள் சட்டவிரோத வியாபாரத்துக்கு எதிராகப் போரிட்டவர்கள். இவர்கள் தங்களது நாடுகளில் பெற்ற வேதனத்தை விட நான்கு மடங்கு அதிக வேதனத்தை ஐக்கிய அரபு இராச்சியத்திடமிருந்து பெற்றார்கள். இவர்களுக்குக் கிடைக்கும் வேதனம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கத் தனியார் இராணுவ வீரர்களுக்குக் கிடைக்கும் வேதனத்தை விட மிக மிகக் குறைவு. ஆபிரிக்க இராணுவ வீராகள் (சூடான், சாட், எரித்திரியாவைச் சேர்ந்தவர்கள்) சவூதி அரேபியாவிற்காக யேமனில் போரிடுகின்றார்கள்.

கேர்டிஸானின் தலைநகரான இர்பிலில் (Erbil) பல நாடுகளிலிருந்து வந்த தனியார் இராணுவங்களைக் காணலாம். மத்திய கிழக்கிற்கான சந்தைப்படுத்தும் களமாக ஏர்மில் உள்ளது.

சிரியா தனது நாட்டிற்காகப் போரிடும் தனியார் இராணுவ நிறுவனங்களுக்குப் போரிடுவதற்கான சேவைக் கட்டணத்துடன், எண்ணெய்க் கிணறுகளில் சுமார் 25 வீதம் வரையிலான பங்குகளையும் வழங்குகின்றது.

ஓஸ்பெக்கிஸ்தான் (Uzbekistan)-ஐ மையமாகக் கொண்ட தனியார் இராணுவ நிறுவனம் Malhama Tactical. இவர்கள் ஜிகாதிகளுக்காகச் சிரியாவில் போரிட்டுள்ளார்கள். அரசுகளைப் போல் தீவிரவாத அமைப்புகளும், தனியார் இராணுவங்களை வேலைக்கமர்த்திப் போர்க்களங்களுக்கு அனுப்புகின்றனர். இனிவரும் காலங்களில் இது அதிகரிக்கும் எனக் கருதப்படுகின்றது.

### தனியார் இராணுவ நிறுவனங்களின் முக்கிய அம்சங்கள்:

- இந்நிறுவனங்கள் பெறும் இலாபமே இவர்களை ஊக்கப்படுத்தும்.
- இவர்கள் ஒரு வணிக நிறுவனங்களாகவே கட்டமைக்கப்பட்டுள்ளார்கள். ஒரு சில நிறுவனங்களின் பங்குகள் பங்குச் சந்தையில் விற்கப்படுகின்றன.
- பெரும்பாலும் வேற்று நாடுகளிலேயே போரிடுவார்கள்.
- இவர்கள் எதிரியை உக்கிரமாகப் போரிட்டு அழிப்பார்கள். இராணுவம் சட்டங்களுக்கு உட்பட்டே போரிடும் தனியார்

இராணுவங்கள், ஒரு வகையில் நிழல் இராணுவம் போன்றே செயற்படும்.

- இவ்விராணுவ வீரர்கள் தங்களது நாட்டின் நலனில் அதிக அக்கறை கொண்டவர்களாக இருப்பார்கள். தனியார் இரா ணுவமான இவர்கள், போரின் போதும் தங்களைச் சந் தைப்படுத்துவார்கள். இதனால், வேறு பல நாடுகளும் இவர்களின் சேவையை நாடுவார்கள்.

1969-ல் தென்னாபிரிக்காவில் தோன்றிய Executive Outcomes நிறுவனம் ஆபிரிக்கக்கண்ட அரசுகளுக்காகப் போரிட்டது. இராணுவ வீரர்களை ஒரு வருடத்துக்கு 40 மில்லியன் பெற் றுக்கொண்டு பயிற்றுவித்தார்கள். ருவண்டா படுகொலைக ளின் போது, இவர்கள் ஐ.நா சபையிடம் 120 மில்லியன் டொலர்கள் தங்கள் நிறுவனத்துக்குச் சேவைக் கட்டணமாகக் கொடுத்தால், தாங்கள் போரை நிறுத்தச் செய்வோம் எனக் கோரினர். ஐ.நா சபை மறுத்துவிட்டது. அப்போதைய ஐ.நா செயலாளர் நாயகம் கோர்பி அணன் 'அமைதியை தனியார் மயமாக்க உலகம் தயாராக இல்லை' ('the world may not be ready to privatize peace') எனக் கூறினார். எட்டு இலட்சம் மக் கள் கொல்லப்பட்டனர்.

ஐக்கிய அமெரிக்கா ஈராக், ஆப்கான் போன்ற நாடுகளில் போரிட்டபோது போரில் பங்குபற்றிய ஒவ்வொரு இராணுவ வீரருக்கும் இணையாகத் தனியார் இராணுவ வீரரும் கடமை யாற்றினர். தனியார் இராணுவ வீரர்கள் வெவ்வேறு வேலைக ளைப் போர்க் களத்தில் செய்தனர். இவர்களில் 15 வீதமா னோர் ஆயுததாரிகளாயிருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

2018-ல் ஐம்பதினாயிரம் தனியார் ஒப்பந்தக்காரர்கள் ஐக்கிய அமெரிக்க இராணுவத்துக்காக வேலை பார்த்தனர். இவர்க ளில் இருபதினாயிரம் பேர் மட்டுமே அமெரிக்கர்கள்.

2010-ல் 'Host Nation Trucking' என்ற ஒப்பந்தம் எட்டு அமெ ரிக்கப் போக்குவரத்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது. மொத்த ஒப்பந்தத் தொகை 2.16 பில்லியன் டொலர்கள். ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தளங்களுக்குத் தேவையான சன்னங்கள் உட்பட்ட இராணுவத்துக்குத் தேவையான பொருட்களைத் தளங்களுக்கு நேரடியாக விநி-யோகிக்க வேண்டும். போரின் தொடர்ச்சிக்கு இது அவசிய மானது. ஆனால், இந்த எட்டு நிறுவனங்களும் ஆப்கான் நிறுவனங்களை வேலைக்கு அமர்த்தி அவர்களூடாகவே பொருட்களை விநியோகித்தார்கள். Warlord Inc. என்ற கொங் கிரஸ் விசாரணை அறிக்கை மேலதிக விபரங்களைக் கொண்டுள்ளது.

தனியார் இராணுவம் போரில் பங்குபற்றுவதனால் ஏற்படும் விளைவுகள் பல. இலாபத்தைக் குறியாகக் கொண்டு இயங் குவதனால் பலநாட்டு இராணுவ வீரர்களும் ஒரு போரில் பங்குபற்றுவார்கள். அரசியல் நிலை மாற்றங்கள், சமாதானம் போன்றவற்றை இவர்கள் கவனத்திற்கொள்ளமாட்டார்கள். தனியார் நிறுவன வீரர்களுக்கும், நிறுவனத் தலைமைக்கும் முரண்பாடுகள் ஏற்படின் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும்.

இன்று கடலில் ஆயுதம், மற்றும் முக்கிய பொருட்களை ஏற் றிவரும் கப்பல்கள் பாதுகாப்பாகக் கரையேறுவதற்கும் தனி யார் இராணுவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதேபோல் அரசுசார்பற்ற நிறுவனங்கள் சமாதானப் படைகளாகவும் தனி யார் இராணுவங்களைப் பயன்படுத்துகின்றனர். கடல், தரை, விமானம், கணினி ஆகிய தளங்களில் தனியார் இராணுவங் கள் இயங்குகின்றன.

## ஏன் அரசுகள் தனியார் இராணுவங்களை நாடுகின்றன?

- இராணுவ வீரருக்கு ஆகக் குறைந்த கல்வி, உடற்பயிற் சித் தகுதிகள் வேண்டும். முறையாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். தனியார் நிறுவனங்கள் அவ்வாறல்ல. தேவைக் கேற்ப சிறையையும் நாடுவார்கள்.
- தனியார் இராணுவம் என்பதனைவிட ஆயுததாரிகள் என் பதே சரியான சொற்பதம். இவர்கள் மீது இலகுவாகக் குற் றஞ்சாட்டலாம். இராணுவத்துக்கான செலவைவிட தனியார் நிறுவனங்களுக்கான செலவு குறைவு. இலாபத்தைக் குறி யாகக் கொண்டு இயங்குவதனால், குறிக்கோளை விரை வில் வென்றெடுப்பார்கள்.
- ஓர் இராணுவ வீரர் இறப்பின் அவருக்கான வேதனக் கொடுப்பனவுகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள் எனச் செலவு அதிகம். தனியார் ஆயுததாரி இறந்தால், அதனைத் தனியார் நிறுவனமே கவனத்திற்கொள்ளும். அர சல்ல. இதுவே தனியார் ஆயுததாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினையாகும். இவர்கள் மீதான மனித உரிமை மீறல் களை யார் கவனத்திற்கொள்வது?

போரின் போது இவர்கள் கைது செய்யப்பட்டால் யார் குர-லெழுப்புவது. உதாரணத்துக்கு அமெரிக்க நிறுவனம் ஒன்றிற் காக ஈராக்கில் களத்தில் போரிடும் பிரேசில் நாட்டு ஆயுத தாரி கைது செய்யப்பட்டால் இவரது விடுதலைக்காகப் பிரே சில் குரலெழுப்புமா? அல்லது அமெரிக்கா குரல் கொடுக் குமா?

இதே பிரேசில் வீரர் ஈராக்கிய மக்கள் சிலரைப் படுகொலை செய்தால், இவர் மீதான விசாரணையை யார் மேற்கொள் வார்கள்?

ஐ.நா.சபை ஆயுததாரிகள் பற்றிய ஒரு சில சட்டங்களைக் கொண்டிருந்தாலும் சர்வதேச ரீதியாக இந்நிறுவனங்கள் சட்ட மயப்படுத்தப்படவேண்டும். இந்நிறுவனங்களுக்காகப் போரி டுபவர்களது உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.



rathan@thaiveedu.com




அண்மையில் கனடா மத்திய அரசில் அமைச்சரவையில் ஏற்பட்ட மாற்றங்களில் ஏழு புதிய அமைச்சர்கள் பொறுப் பேற்றுள்ளனர். அவர்களுள் ஈழத் தமிழராகிய ஹரி ஆனந் தசங்கரி அவர்களும் ஒருவர் என்பது தமிழ் சமூகத்திற்கு மகிழ்வையும் பெருமையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஸ்காபரோ ரூச்பார்க் தொகுதிக்கான வேட்பாளர் தெரிவுப் போட்டியில் லிபரல் கட்சியின் சார்பில் வெற்றிபெற்ற ஹரி ஆனந்தசங்கரி 2015-ம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்த லில் பெருமளவு வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று, முதற் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவா னார். அதைத்தொடர்ந்து நடைபெற்ற இரு தேர்தல்களிலும் பெரும்பான்மை வாக்குகளாலேயே வெற்றி பெற்றார்.

இயல்பாகவே பொதுச்சேவைகளில் நாட்டம் கொண்ட ஹரி ஆனந்தசங்கரி, தன் பொறுப்பினூடாகத் தன் தொகுதிக்கும் தான் சார்ந்த இனத்துக்கும் சிறப்பான சேவைகளைச் செய் தார் என்றே கூறலாம். கட்சிச் செயற்பாடுகளில் அவர் கொண்டிருந்த ஈடுபாடும் நேர்த்தியும் அவரைக் கட்சிக்குள் உயர்த்தியது.

2021 முதல் நீதி அமைச்சின் பாராளுமன்றச் செயலாளராக வும் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1983-ல் தன் தாயாருடன் கனடாவுக்கு அகதியாகப் புலம்பெ யர்ந்த இவர், உயர்கல்வி கற்கும்போதே தன் மாமனாரோடு இணைந்து தன் வயதுக்கேற்ற பொதுப்பணிகளிலும் ஈடுபட் டிருந்தார். குறிப்பாக அக்காலத்தில் சமூகத்தேவையோடு வெளிவந்த பத்திரிகையொன்றை வீடுவீடாக வழங்கியவர்க ளில் இவரும் ஒருவர். தாயக மக்களுக்கான உதவிகளைத் திரட்டுதல், இலங்கையில் தொடர்ச்சியாக நடைபெற்ற இன வெறித்தாக்குதல்களை வெளியுலகுக்குத் தெரியப்படுத்துதல் என்பன போன்ற பணிகளில் இவர் ஈடுபட்டிருந்தார். கற்கும் காலத்திலே தாயக உறவுகளின் இன்னல் தொடர்பில் மாண வர் மட்டத்தில் பல கருத்தரங்குகளை நடத்தியிருக்கின்றார்.

உயர்நிலைக் கல்வியை நிறைவுசெய்த பின்னர் கால்ரன் பல்



கலைக்கழகத்தில் பயின்று அரசறிவியல் துறையில் பட்டம் பெற்றார். கால்ரன் பல்கலைக்கழகத்தில் பயிலும்போது, பல் கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவராகத் தெரிவாகி யிருந்தார். கால்ரன் பல்கலைக்கழக வரலாற்றில், வெள்ளை யரல்லாத ஒருவர் மாணவர் அமைப்பின் தலைமைப் பொறுப் பேற்றமை அதுவே முதற் தடவை. தொடர்ந்து, யோர்க் பல்க லைக்கழகத்தில் சட்டத்துறையில் பயின்று 2005-ல் சட்டவாளர் பட்டம் பெற்றார். ஒருகாலத்தில், தமிழ் இளையோர் சமூகம் துப்பாக்கி வன்முறையில் ஈடுபட்டிருந்தபோது, அவர்களின் மனநிலையை மாற்றும்பொருட்டு, மனமாற்ற ஆலோசனைக் கூட்டத்தொடர்களை முனைப்போடு நடத்தினார். இப்பணி யால் கணிசமான இளையோர் நல்வாழ்வுக்கு மீண்டிருந்தனர். புதிய வாழ்வுச்சூழலில் பலர் விரக்திக்கும் வேதனைக்கும் ஆளானபோது, பல்வேறு அமைப்புகளினூடாக அவர்கள் மறுவாழ்வு பெறுவதற்கு உதவியுள்ளார்.

குறிப்பாக மனிதவுரிமைச் சட்டநுட்பங்களைக் கற்றுக்கொண்ட இவர், தன் தலைமையில் சட்ட நிறுவனமொன்றைத் தொடங் கினார். அது மிக வெற்றிகரமாக இயங்கிய காலகட்டத்திலே பல்வேறு சமூகசேவைகளைப் பல வழிகளில் செய்துவந்தார். தொடக்ககாலத்தில் கனடியத் தமிழர் பேரவையூடாக இவ ராற்றிய பணிகள் பல சிறப்பானவை.

2010-ல் அகதிகளை ஏற்றிய ஓசன்லேடி கப்பல் வன்கூவரை வந்தடைந்தபோது, அதில் பயணம் செய்தோர் குற்றவாளி கள் போன்றே நடத்தப்பட்டநிலையில், உடனே அங்கு சென்ற ஹரி ஆனந்தசங்கரி ஒவ்வொருவரையும் சந்தித்து அவர்களுக்கு ஆறுதலாக இருந்ததோடு மட்டுமன்றி, சட்ட உதவிகளையும் முன்னின்று செய்தார். அகதி வழக்குகளில் சிக்கலுற்ற பலருக்கும் காலங்காலமாக உதவிவருபவர் இவர்.

இலங்கை அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டுவருகின்ற மனி தவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. மன்றத்தில் அதிகமாக வும் வலிமையாகவும் பேசிய மனிதவுரிமைச் சட்டவாளர் இவர் என்றே கூறலாம். காலந்தோறும் ஐ.நா. மன்றத்தில் மனிதவுரிமைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்ளும் இவர், போதிய சான்றுகளுடன் வலிமையாகவும் உறுதியாகவும் வைக்கும் வாதங்கள் பலதடவை இலங்கையைத் திக்குமுக் காடச் செய்திருக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினரான பின்னர், அவர் இனஞ்சார்ந்து ஆற்றிய பணிகளுள், மரபுத் திங்களுக்கான கனடா தழுவிய அங்கீகாரத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசு தமிழர்கள் மீது தொடர்ச்சியாக மேற்கொண் டுவரும் மனிதவுரிமை மீறல்கள் குறித்து ஆழமாகவே பேசி வந்த ஹரி ஆனந்தசங்கரி, இலங்கை அரசு தமிழர்களைக் கொன்றொழித்தமை இனப்படுகொலை என்றே அழுத்தமாகக் கூறிவந்தார். ஆளுங்கட்சியில் அங்கம்பெறும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், 'இலங்கையில் நடைபெற்ற தமிழர் மீதான படுகொலை இனப்படுகொலையே' என்ற பிரே ரணையைக் கொண்டுவந்து, அதை எதிர்ப்புகளின்றி, முழும னதாக நிறைவேறச் செய்தார். தமிழினம் தொடர்பில், ஓர் அர சியலாளராக அவர் செய்த அதியுயர் பணி இதுவே.

இலங்கையரசின் வெளியுலகப் பரப்புரைகளுக்கு எதிராகவும் இலங்கை அரசு தொடர்பில் கனடா எடுத்துவரும் கடுமை



யான நடவடிக்கைகளுக்குப் பின்பலமாகவும் இயங்கிவரும் ஹரி ஆனந்தசங்கரி, இலங்கை அரசைப் பொறுத்தவரை வலிமையான எதிராளியாகவே தென்படுகின்றார். கடந்தமாதத் தில் இவர் இலங்கை செல்ல விசாவுக்கு விண்ணப்பித்த போது, அதை இலங்கை அரசு மறுத்திருந்தது. தற்போது அவர் பெற்றிருக்கும் அமைச்சுப் பொறுப்பு, இலங்கைக்கு கனடா கொடுத்திருக்கும் பதிலடியாகவே கருதலாம்.

கனடிய மக்கள் தொடர்பிலும் தான்சார்ந்த இனம் தொடர்பி லும் அரிய பணிகளை ஆற்றிவரும் ஹரி ஆனந்தசங்கரி அவர்களுக்கு லிபரல் கட்சி அரசு-தொல்குடி உறவுகள் அமைச்சுப் பொறுப்பை வழங்கியிருக்கின்றது.

லிபரல் அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இப்பொறுப்பு மிக முதன்மையானது. காலங்காலமாக அரசுக்கும் தொல்குடி மக் களுக்குமிடையே சீரான உறவுகள் இருந்ததில்லை. முன்னர் ஆட்சியில் இருந்தோரும் தொல்குடி மக்கள் தொடர்பில் நெஞ்சார்ந்த கரிசனைகளை வெளிப்படுத்தவில்லை. அண் மையில் பள்ளி வளவுகளில் கண்டறியப்பட்ட மனிதப்புதை குழிகள், திருத்தந்தை நேரில் வந்து மன்னிப்புக்கோரும் நிலையை உருவாக்கிவிட்டிருந்தன. இப்போதும் தொல்குடி இனத்தலைவர்கள் அரசுகளின் திட்டங்களையோ சலுகைக ளையோ வரவேற்பதில்லை. இந்நிலையில் அரசுக்கும் தொல்குடிகளுக்குமான உறவுகளைச் சீர்செய்யும் அமைச்சுப் பொறுப்பு எளிதானதல்ல. கடினமானது. ஒடுக்கப்பட்ட இனத் திலிருந்து தோன்றிய ஹரி ஆனந்தசங்கரியால் இப்பணி யைச் சிறப்பாக முன்னெடுக்கமுடியும் என்ற, கட்சித்தலைமை யின் தீர்க்கமான முடிவின் பின்னரே இப்பொறுப்பு ஹரி ஆனந்தசங்கரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

தான் ஏற்றுக்கொண்ட பொறுப்பை, மிக நேர்த்தியாகத் திட்ட மிட்டு நிறைவேற்றுவதில் ஹரி ஆனந்தசங்கரி மிகவும் வல்ல வர். அவர் பொறுப்பில் இவ்வமைச்சு மிகச் சிறப்பாக இயங் கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அவர் பணியும் இலக்குகளும் சிறக்க தாய்வீடு மாண்புமிகு அமைச்சர் திரு.- ஹரி ஆனந்தசங்கரி அவர்களை வாழ்த்துகின்றது.

info@thaiveedu.com

# ஏட்டில் எழுதிவைத்தார் - அங்காதிபாதம் 400 விலக்கப்பட்டவர்

- பால. சிவகடாட்சம்

**திருக்கோணமலை ஈசனை முதலில் போற்றித் தொடங்கும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலான அங்காதிபாதம் 400 என்னும் நூலுக்குரிய பாடல்கள் 124 மட்டுமே எமக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடிகளில் உள்ளன. எனினும், நூலினை முழுமைப்படுத்த எண்ணி இந்நூலினைப் பெரிதும் ஒத்திருப்பதும், பரராசசேகரத்தைச் சார்ந்ததாக அறியப்படுவதும், 1936-ம் ஆண்டு ஐ. பொன்னையா என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றதும், இன்றுவரை உரை எழுதப்படாமலும் இருக்கும் அங்காதிபாதம் என்னும் பிறிதொரு நூலில் இருந்து மீதிப் பாடல்கள் பெறப்பட்டு உரையுடன் இங்கு தரப்படுகின்றன.**

*'தருமமா யுள்ள வேதந் தன்னையவ் வியன்ற னோடு*
*பிரதிலோ மன்வி ராத்தியன் பேர் பெறு மந்த ராளன்*
*தெரியனு லோமனின் னோர் தெரிந்துவா கடத்தைக் கற்கில்*
*வருவது பாவ மன்றி மத்திம மரபுக் காகா'* - 245

தருமமாய் உள்ள ஆயுள்வேதத்தினை அவ்வியன், பிரதி-லோமன், விராத்தியன் அந்தராளன், அனுலோமன் எனப்படுவோர் மருத்துவநூலைத் தெரிந்து கற்பார்களாயின் அது பாவம் மட்டுமன்றி மரபுக்கும் பொருந்தாது.

*'ஆகாமல் விலக்கினோர்க ளக்கசாலையய்யர் பட்டர்*
*ஏகாலி குறவர் செக்கா ரியம்புசே ணியர்கு லாலர்*
*தோகாயிங் கிவர்ம ருந்து செய்திடிற் தோட மாகும்*
*போகாத நரகிற் போவர் பொசித்தவர் மருந்தைத் தானே'* - 246

இந்தக் கல்விக்கு ஆகாதவர்கள் என்று விலக்கப்பட்டவர்களாகிய அக்கசாலை ஐயர், பட்டர், ஏகாலி, குறவர், செக்கார், சொல்லப்படுகின்ற சேணியர், குலாலர் இப்படிப்பட்டவர்கள் மருந்து செய்தால் அது குற்றமாகும். இவர்கள் தரும் மருந்தை எடுத்தவர்களும் போகக்கூடாத நரகத்துக்குப் போவார்கள்.

*'பிறர்க்குச் சொல்லத்தகாதன*
*மருந்துட னாண்மை தெய்வ மந்திர மாதர் கூட்டம்*
*பொருந்திய வின்பங் கல்வி போற்றிய குருவின் வாய்மை*
*வருந்தியே பெற்ற செல்வம் வயது தான் புரிந்த தன்றித்*
*திருந்திய மொழியா யார்க்குஞ் செப்பிடிற் றீதா மன்றே'* - 247

மருந்து, ஆண்மை, தெய்வம், மந்திரம், பெண்களுடனான தொடர்பு, இன்பம், கல்வி, தான் போற்றும் குருவின் உண்மை, வருந்தித் தேடிய செல்வம், தனது வயது, போன்ற தான் மட்டும் அறிந்திருக்கும் உண்மைகளை விளக்கமாக யாவர்க்கும் சொல்லிவிட்டால் அது தீங்கு விளைவிக்கும்.

## நோயாளியின் கடமை

*'தீதுசெய் நோயைத் தீர்ப்பான் செகத்தினிற் றெய்வம் போல*
*வாதிதன் மகனா யுள்ள வயித்தியற் கொண்டு வந்து*
*போதவன் றாளிற் றூவிப் பொருந்திட வழிபா டாற்றி*
*நாதன் மற் றிவனே யென்ன நயப்புடன் றவிசி னேற்றி* - 248

நோயாளியானவன் தனது மருத்துவனை உலகில் கண்கண்ட தெய்வமாக இருப்பவனும் வைத்திய மரபில் வந்துவனுமாகிய மருத்துவனின் கால்களில் மலர்தூவி வழிபாடு செய்து இவனே என் தலைவன் என்று உபசரித்து இருக்கையில் அமர்த்தி,

*'தவிசின்மே லேற்றிப் பின்பு தன் கையாற் றொழுத லன்றி*
*நவிலுப சாரஞ் செய்து நற்றீப தூபங் காட்டித்*
*தவமுறப் பூசை செய்து தயவாக முகமன் கூறிப்*
*பவநோய்க டீரவென்றே பணமும்வெற் றிலையும் வையே'* - 249

பின்னர் கைகளால் தொழுது, இனிய வார்த்தைகள் பேசித், தீப தூபங்கள் காட்டிப், பணிவுடன் பூசை செய்து, பரிவுடன் முகமன்கூறி, வந்திருக்கும் நோய்கள் தீரவேண்டுமென்று பணமும் வெற்றிலையும் கொடுக்கவேண்டும்.

## வைத்தியன் கடமை

*'வைத்துப்பண் டிதனை நோக்க வன்பிணி யெட்டி லோர்கூறு*
*அற்றிடு முன்ப தாக வன்புட னிருந்து மெல்ல*
*மொய்த்தெழு பிணியின் வாதை மொழிந்திடக் கேட்டுப் பின்பு*
*கைத்தலம் பிடித்துப் பார்த்தல் வயித்தியன் கடமை தானே* - 250

அவ்வாறு வணங்கி நிற்கும் நோயாளியை அன்புடன் பார்த்து, அவன் தன் வாயினாலே தன்னுடைய நோய் தரும் துன்பங்களை மெல்லக் கூறக்கேட்டு, பின்னர் அந்நோயாளியின் கைபிடித்து நாடி பார்ப்பது வைத்தியனின் கடமையாகும்.

## நாடிபார்க்கும் விதம்

*'கடன தாய் நாடி பார்க்கிற் கைதனி னெட்டி வாங்கி*
*உடன தா யங்கைமூலத் தோர்விர லடைவு தள்ளி*
*நெடுவிரன் மூன்றும் வைத்து நின்றிடு மசைவு நோக்கி*
*நடைமுறை யசாத்தியங்கள் நாடுசாத் தியங்கள் பாரே'* - 251

நாடி பார்க்கும்போது கையில் நெட்டி வாங்கி மணிக்கட்டில்

இருந்து ஒருவிரல் இடைவெளியில் நடுவில் உள்ள மூன்று விரல்களை வைத்து நாடித்துடிப்பை உணர்ந்து, வந்திருக்கும் நோய் மாறக்கூடியதா இல்லையா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

***'சாத்திய மன்றேல் விட்டுப் போவதே தகுதி யாகும்***
***தீர்த்திடத் தக்க தென்னிற் செப்பிய பராயங் காலம்***
***பார்த்துடற் பெலனிந் நான்கும் பண்பு கினறிந்து பின்பு***
***வாய்த்தநோய்ப் பெலனுஞ் செய்யு மருந்துடை பெலனு நோக்கி'*** - 252

மாற்றமுடியாத வியாதியாக இருப்பின் அந்நோயாளியை விட்டு விலகிச் செல்வதே பொருத்தமானது. தீர்க்கக்கூடிய வியாதியாக இருப்பின் நோய் தோன்றிய காலம், நோயாளியின் வயது, காலநிலை, நோயாளியின் உடற்பலம் இவை நான்கையும் அறிந்து ஏற்பட்டிருக்கும் நோயின் வீரியத்தையும் மருந்தின் வீரியத்தையும் கருத்திற்கொண்டு,

***'நோக்கிய பிணிமருந்து நுட்பங்க ளனைத்து நன்றாய்த்***
***தூக்கியே தேவ பூசை சொல்லிய குருவின் பூசை***
***ஆக்கியா துலர்தங் கட்கே யன்னதானங்க ளீந்து***
***தேக்கிய மருந்து செய்யச் சிறப்பிது பரிகாரிக்கே'*** - 253

நோய்க்கான சிகிச்சையின் நுட்பங்களையெல்லாம் நன்றாக அறிந்துவைத்துக் கொண்டு தேவபூசை, குருபூசை என்பன செய்து ஏழைகளுக்கு அன்னதானம் செய்வித்துச் சிகிச்சையை ஆரம்பிப்பது பரிகாரிக்குச் சிறப்பாகும்.

***'நோய் தீர்ந்தபின் பணம்பெற***
***காரிய குணவீனத்தாற் கனவுபா திகளைச் செய்யும்***
***பாரிய பிணியைத் தீர்க்கும் பண்டிதன் பாதம் போற்றி***
***நாரியே நோய் தீர்ந் துள்ளோ னன் முக மகிழ்ச்சி யோடு***
***சீரிய வெகுமா னங்கள் செய்திடன் மாண்ப தாமே'*** - 254

குற்றமுள்ள செயல்களினால் விளைந்த பல்வேறு துன்பங்களைத் தரும் பெரும் நோயைத் தீர்த்துவைக்கும் வைத்தியரை வணங்கி நோய் தீரப்பெற்றவன் மலர்ந்த முகத்தோடும் மகிழ்வோடும் சிறந்த வெகுமதிகள் கொடுப்பது பெருமைதரும்.

## வைத்தியன் தீமை

***'மாண்பதாய்ப் பெறுத லன்றி மாற்றமு னிம்மி யேனும்***
***காண்பதாய்ப் பொருளைப் பெற்றுங் கண்டொன்று காணாதன்று***
***வீண்பதாய்ப் பிதற்றி னாலும் வியாதியை யேற்றி னாலும்***
***பாண்குழி நரக மந்தப் பண்டிதர்க் கிடம் தாமே'*** - 255

நோய் மாறியபின் நோயாளிதரும் பொருளைப் பெருமையுடன் பெற்றுக்கொள்வதன்றி, நோய் மாறுமுன்னரே அற்பமாகவேனும் பொருளைப்பெற்றாலும், தரப்படும் கூலி போதாதென்று வீணாகப் பிதற்றினாலும், வியாதியைக் கூட்டிவிட்டாலும், பாழும் நரகமே அந்த வைத்தியன் சேரும் இடமாக இருக்கும்.

***'இடமிகு மனமொன் றாகி யியலொன்றாய் வசன மொன்றாய்***
***மடமுறு குணத்தின் மூத்து வருந்திடு நோய்மாற் றாது***
***படரதாய் மருந்து செய்யும் பண்டிதன் பெருமை கெட்டுச்***
***சடுதியாய் நிலைமை நீங்கி நரகினுஞ் சாம்பு வானே'*** - 256

மனம் வேறுபட்டு, செய்வது ஒன்றும் சொல்வது ஒன்றுமாய் மூர்க்க குணத்தோடு நோயாளியை வருத்தும் முற்றிய நோயை மாற்றாது பிழையான மருந்தைக் கொடுக்கும் வைத்தியன் தனது புகழை இழந்து, அமைதியை இழந்து, நரகத்தில் கிடந்து வருந்துவானே.

## நாடிபார்க்குங் காலம்

***'சாம்புநோ யாளர்க் கெல்லாந் தாதுபார்த் தறியுங் காலம்***
***சோம்பில்சித் திரைவை காசிக்குச் சூரிய னுதிக்கும் போதாம்***
***தீங்கில் மார் கழிதைக் குந்தான் செப்பிடு மாலைக் காலம்***
***ஆம்பல்வாய் மானே யானி யைப்பசி யாடி தானே'*** - 257

அல்லிமலர் போன்ற வாயுடைய பெண்ணே! வருந்துகின்ற நோயாளர்க்கெல்லாம் நாடி பார்த்து அறியும் காலம் சித்திரை, வைகாசி மாதங்களில் சூரியன் உதிக்கும்போதும், குற்றமில்லாத மார்கழி, தை மாதங்களில் மாலை நேரத்திலும், ஆனி ஐப்பசி, ஆடி,

***'ஆடிகார்த் திகைநா லுக்கு மாதப னுச்சிக் காலம்***
***பாடிலா வணியி னோடு பங்குனி புரட்டா திக்கும்***
***கூடிய நடுச்சா மத்திற் குறித்திடிற் றெளிவா மென்று***
***நாடிபார்க் கின்ற கால நவின்றனர் நலங்கொள் பூவாய்'*** - 258

கார்த்திகை ஆகிய நான்கு மாதங்களில் உச்சிக்காலத்திலும், ஆவணி பங்குனி புரட்டாதி மாதங்களில் நடுச்சாமத்திலும் நாடி பார்க்கில் தெளிவாகத் தெரியுமென்று நலமுடைய பெண்ணே! கூறிவைத்தார்கள்.

## நாடியின் அசைவு

***'பூவையே கலையி ரண்டும் பொருந்திய சுழுனை தன்னோ***
***டாவியாம் பிராணன் கூடி யங்கமெங் கணும்ப ரந்து***
***தாவிய நரம்பூ டோடி முடிச்சுடைத் தானம் பத்தும்***
***பாவியே துடிப்புக் கொண்டு பரந்து நின் றசையு மாமே'*** - 259

பெண்ணே! இருசுவாசமும் பொருந்திய சுழுமுனையோடு பிராணவாயு கூடி உடலெங்கும் பரந்த நாடிகளூடாக நரம்பு முடிச்சுடைய பத்து நிலைகளிலும் கூடித் துடித்துக்கொண்டு பரந்து அசையும்.

***'அசைவினி னாடி மூன்றும் அதிரவே தொந்திப் பாகிப்***
***பசையுறு பிராண வாயும் பங்குமூன் றினுக்கு மாகும்***
***இசைபெறு மயிலஞ் சாய லேந்திழை முலைமின் னாளே***
***வசையறு நாடி மூன்று மனத்தினாற் றெளிந்தி டாயே'*** - 260

அசையும் நாடிகள் மூன்றும் இசைவு பிசகாமல் பிராணவாயு மூன்று நாடிக்கும் பங்கு ஆகும். அழகான மயிலின் சாயலை உடைய பெண்ணே! குற்றமில்லாத நாடிகள் மூன்றினது நிலையைத் தெளிவாக அறிந்து கொள்வாயாக.



Sivakadadcham@thaiveedu.com

# கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரம் ஆபத்தானது

– சி.நற்குணலிங்கம்

கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரம் நச்சுத்தன்மை வாய்ந்தது. நம் வாழ்க்கையை நாம் நிர்வகிக்கக் கட்டுப்பாடுகள் அவசியம். கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரம் ஆபத்தானது. எதையும் எளிதில் தொலைத்துவிடாதீர்கள். ஏனெனில் அவற்றை எளிதில் மீண்டும் பெற்றுவிட முடியாது. பாதை சரியானால் பயணம் சரியாகும். பாதை தெரிவதற்குள் சில ரது பயணங்கள் முடிந்துவிடும். பாதை எங்கே போகிறது என்பதைவிட நாம் எங்கே போகிறோம் என்பதுதான் முக்கியம். நாம் போகும் பாதையைத் தீர்மானிப்பது நம் பயணம் தான். கட்டுப்பாடற்ற பயணத்தில் உன் வாழ்வைத் தொலைக்காதே. கட்டுப்பாடுகள் நீ வகுத்துக்கொள்வது. சுதந்திரம் நீ உனக்கு வழங்குவது. யாவும் உன்னிடத்திலேயே. கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரம் குடும்ப அமைப்பையே ஊசலாடவைக்கும். கட்டுப்பாடற்ற சுதந்திரத்தால் பலர் இன்று தான்தோன்றித்தனமாகத் திரிகிறார்கள். சமூகத்தில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாது வாழலாம் என்கிற சித்தாந்தமும் இன்றைய நவீனயுகத்தில் விதைக்கப்படுகிறது. அதை ஒரு புரட்சியாகவும் சிலர் நினைக்கிறார்கள். இது மனிதரை நாசமாக்குகின்ற சித்தாந்தம்.

'இவ்வுலகில் நல்லது, கெட்டது என்பதெல்லாம் நம்முடைய எண்ணங்களைப் பொறுத்ததே' ஷேக்ஸ்பியர் கருத்து. 'ஆற்று நீரை அணைகட்டி தேக்கிவிட்டால் பல வேலைகளைச் செய்யக்கூடிய பெரிய சக்தியுடையதாக ஆகிவிடுகிறது. அதே போல நாமும் நம்முடைய சக்திகளை அடக்கி அளவாக உபயோகித்தால் அரிய பெரிய காரியங்களைச் செய்ய முடியும்' காந்தியடிகள் கூற்று. 'தவறான பாதையில் வேகமாகச் செல்வதைவிடச் சரியான பாதையில் மெதுவாகச் செல்லுங்கள் வாழ்க்கையைப் புரிந்துகொள்ளலாம்' அப்துல்கலாம் கூறியது. நீ ஒதுக்கப்படும் இடங்களில் நிமிர்ந்து நில்! புகழப்படும் இடங்களில் அடக்கமாக நில்! விமர்சிக்கப்படும் இடங்களில் மௌனமாய் இரு! நேசிக்கப்படும் இடங்களில் அன்புடன் இரு! உலகம் உன் வசப்படும். பண்பாக வாழலாம்.

அறிவினால் ஒருவர் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ளவேண்டிய இடத்தில் கட்டுப்படுத்தவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவேண்டிய இடத்தில் வெளிப்படுத்துவதற்கும் பெயர் தான் திறமை. அதை வளர்த்துக்கொள். மனது சொல்வதைக் கேளாதே. அது உன் மதியை மயக்கும். மண்ணைத்தேடிச் சிலர், பொன்னைத் தேடிச் சிலர், பெண்ணைத் தேடிச் சிலர், வேலை தேடிச் சிலர், விடியலைத் தேடிச் சிலர், வேடிக்கையைத் தேடிச் சிலர், புகழைத் தேடிச் சிலர், பதவியைத் தேடிச் சிலர். தன்னைத் தேடியவர்கள் யார்? மனிதா! உன்னைத் தேட மறவாதே. உன்னைத் தேடிப்பார் கட்டுப்பாட்டுடன் வாழலாம். யாரை எங்கு வைக்கவேண்டுமோ அங்கே வைத்துவிட்டு யாரிடம் எப்படி இருக்கவேண்டுமோ அப்படி இருந்துவிட்டால் வாழ்க்கை சிறக்கும். எதற்கும் நீங்கள் யார் என்ற புரிதல் உங்களுக்கு இல்லையா? உங்களை நீங்களே மதிப்பீடு செய்துகொள்ளுங்கள்.

கட்டுப்பாடற்ற சுதந்திர மனிதர்கள் தனிமையான ஓர் உணர்வால் தான் யார் என்பதை தொலைத்து அடிமையாக வாழ்கிறார்கள். தமக்கான ஓர் உலகத்தைப் படைக்கிறார்கள். சமூகப்பிறழ்வுகள், கலாசார ஒத்திசைவற்ற விடயங்கள், பாலியல் பிறழ்வு நடத்தைகள், பாடசாலை இடைவிலகல், கற்றலில் நாட்டமின்மை, பண்பாட்டுப் பற்றின்மை, ஆன்மிக நாட்டமின்மை, சமூகமயமாதலில் நாட்டமின்மை, பாலியல் நோய்களின் தோற்றம் போன்ற நலிவான பழக்கத்திற்கு அடிமையாகிறார்கள். இவர்கள் வாழ்ந்த நாட்களைவிட தேவையற்ற செயல்களைச் செய்த நாட்களே அதிகம். இவர்களுக்கு மரணப்படுக்கையில்தான் வாழ்க்கையின் அருமை தெரிகிறது.

மனிதர் நாகரிகக் காலத்திற்கு முந்தைய கற்கால வாழ்க்கை மனநிலைக்குச் சென்றுகொண்டிருக்கின்றனரோ என்ற ஐயமும், வினாவும் எழுகிறது. ஆதிமனிதரின் கட்டுப்பாடற்ற தன்மை, வெறித்தனமான வன்மம், வக்கிரம், ஒழுங்குமுறைக்கு உட்படாத வாழ்க்கை போன்ற சிக்கல்களையே அன்றாடம் கேட்கிற, பார்க்கிற செய்திகள் நினைவுபடுத்துகின்றன. எங்கு பார்த்தாலும் வன்முறை. பெரிய காரணங்கள் தேவை இல்லை. சிறு காரணம், சிறிய தேவை, சின்ன மனவருத்தம் இவை போதுமானதாக இருக்கிறது. இந்த வன்ம வெறியின் கண்களுக்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என யாரும் தனித்துத் தெரிவதில்லை. சுதந்திரமான கட்டற்ற வெளியாக நட்புகளையும், உறவுகளையும் வலைத்தளங்களில் தேட ஆரம்பித்ததில் எல்லாச் சிக்கல்களும் தொடங்கிவிட்டன. உறவுகளோடு உறவாடாத மனம் தினத்துக்கொரு வாழ்த்தும், காலை வணக்கமும் சொல்லி மகிழ்வுடன் பெண்கள் சுதந்திரத்தை கொஞ்சம், கொஞ்சமாக சுவாசித்து ஆசுவாசம் கொள்வதற்குள் பெண்களின் மீதான வக்கிரமும் பலாத்காரமும் கொலைகளும் நிகழ்ந்தவண்ணம் உள்ளது. இதனால் நம்மை நாமே சிதைத்துக் கொள்கிறோம்.

அடுத்த தலைமுறைக்குச் சேர்த்துவைப்பது நியாயம். ஆனால் அடுத்தவரைச் சுரண்டி சேர்த்துவைப்பது அடுத்த தலைமுறைக்குச் சேர்த்துவைக்கும் பாவம். கட்டுப்பாடற்றவர்கள் விஞ்ஞான தொழில்நுட்பங்களைச் சுதந்திரமாகப் பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் வகையில் பயன்படுத்தித் தாம் நினைப்பதை இலகுவாக அடைய முயற்சித்து வெற்றியும் கண்டுள்ளனர். இணையவழி குற்றச் செயல்களுக்குப் பலியாகாமல் இருக்க இளம்சந்ததியினரும் மற்றையோரும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ளவேண்டும். மீறிச் சுதந்திரமாக இயங்குபவர்கள் மக்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை இணையவழிமூலம் ஒரு நொடியில் கொள்ளையடித்துச் செல்

வதை அறிய முடிகிறது. இளசுகள் காதல் வலையில் சிக்கி இறுதியில் தம் உயிரை மாய்த்துக்கொண்டவர்களும் கௌர வத்தை இழந்து ஒதுங்கி வாழ்பவர்களும்கூட உள்ளனர். கொலை, வன்புணர்வுக்குக்கூட இணையவழி வழிசெய்கிறது.

கட்டுப்பாடுகள் இல்லாத சுதந்திரத்தில் குடும்பக் கட்ட மைப்பே மாறிவிட்டது. சமூகவலைத்தளங்களே கதியென்ற அளவுக்கு அந்தப் போதைக்கு அடிமையாகி முழுநேரமும் அதிலேயே விழுந்து கிடப்பதை தவிர்க்கவேண்டும். மேலும் மனித உறவுகள் சிதைந்து விஞ்ஞானத்தோடு உறவுகள் வளர்ந்துவருகிறது. இன்று மனிதர்க்கு உறவுகளைவிட திறன் பேசிகளே முக்கியமானதாக வந்துவிட்டது. மனித உறவுகள் உதாசீனப்படுத்தப்பட்டு அலைபேசியுடன் வாழும்நிலை ஏற் பட்டுவிட்டது. இவர்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நவீனங்கள் அனைத்தும் இயற்கையின் கட் டுப்பாட்டுக்குள் இருந்தாலே இயற்கையின் சீற்றத்திலிருந்து கூடத் தப்பிக்கலாம்.

கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற கட்டுப்பாடில் லாத சுதந்திரம் தேவைதானா? கட்டுப்பாடற்ற சுதந்திரவாழ்வு மனிதரை மிருகமாக மாற்றும். உள்ளங்கையில் உலகைச் சுருக்கிய மனிதர்கள் உள்ளங்களைத் தூரமாக்கிவிட்டனர். மனித வாழ்வுக்கென சில எல்லைகள் உண்டு. அந்த எல் லைகளை மீறும்போது மனிதத் தன்மையிலிருந்து மனிதர்கள் மாறுகிறார்கள். கற்றுக்கொடுப்பதன் மூலமும் கற்றுக்கொள் வதன் மூலமும் மட்டுமே மனிதர் பகுத்தறிவுகொண்டவர்க ளாக மாறுகிறனர். உண்மையில் கட்டற்ற சுதந்திரம் மனி தரை மனிதராக மாற்றாது.

ஒருசில எல்லைகளை ஒருவர் மீறாமல் இருக்க வழிகாட்டு தல்களும் பண்பாட்டுப் பயிற்சியும் எப்போதும் தேவைப்படு கின்றது. இல்லையெனில் விண்ணில் உயர்வதற்குப் பதிலாக மண்ணில் அழிந்துபோக நேரிடும். மனிதர் மனிதராக வாழக் கட்டுப்பாடில்லாச் சுதந்திரத்தால் ஆபத்துகள் என்பதை புரிந் துகொண்டு வாழவேண்டும். நடத்தைக் கோளாறுகளைத் தவிர்க்கவேண்டும். மனித சமுதாயத்தின் ஆபாசங்கள், கட் டுப்பாடற்ற வாழ்க்கை வாழ முற்படக்கூடாது. ‘எமது வாழ் வின் நிரந்தர அர்த்தம் எமது அன்றாட வேலைகளில் எமக் குக் கிடைக்கும் வெற்றிகளில் மட்டுமல்ல, அது எமது குழந் தைகளில் நாம் உருவாக்கும் நற்பண்புகளில் தங்கியுள்ளது’ என்கிறார் குஷ்னர் என்ற சமூகவியலாளர். சமையல் சரியாக அமையாவிட்டால் ஒரு நாள் இழப்பு, அறுவடை சிறக்காவிட் டால் ஒரு ஆண்டு இழப்பு, கட்டுப்பாடற்ற சுதந்திர வாழ்க்கை அமைந்தால் வாழ்நாள் முழுவதும் இழப்பு. தென்றல் அழகு தான் புயலாக மாறாதவரை, பனித்துளி அழகுதான் சூரிய னைக் காணாதவரை, வாழ்வும் அழகுதான் கட்டுப்பாடான வாழ்க்கையில்.

கட்டுப்பாட்டுடன் வாழ மனதை ஒருமுகப்படுத்தவேண்டும். மனதில் உறுதி வேண்டும். உங்கள் உறுதிக்குமுன் பாம்பின் விஷம்கூட கிட்ட நிற்க முடியாது. ஆசைப்படுவதை எல்லாம் அடைய நினைத்ததன் வெளிப்பாடே இன்றைய அநியாயங் கள். ஆசைதான் துன்பத்துக்குக் காரணம். கெட்ட மகிழ்ச் சியை அடைவதற்கு முயற்சி செய்யாதே. கெட்ட மகிழ்ச்சிக்கு முன்னாடியும் பின்னாடியும் செலவு அதிகம். கெட்ட மகிழ்ச் சிக்காகச் சுயமரியாதையை இழந்து வாழ வேண்டுமா? அத னால் கிடைக்கும் வெற்றி வெற்றியா? இது வெற்றிகரமான தோல்வி. வாழ்க்கை கடினமல்ல, வாழ்வதும் கடினமல்ல, நீ கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தால். அறிவைக் கூராக்கினால் வாழ்க்கை சீராகும். இதுதான் சரியானதென்று முடிவெடுக்கா மல் எது செய்தாலும் நீ உன்னை அறியாமல் ஒரு தப்பு செய்கிறாயென்றுதான் அர்த்தம். ‘கௌரவத்தைப் பெற்றுவிடு வது பெரிதன்று. அதற்குத் தகுதியாக இருப்பதுதான் முக்கி யமானது’ என்கிறார் அரிஸ்டோட்டில். கட்டுப்பட சுயகட்டுப் பாட்டுப் பழக்கத்தை வளர்த்துக்கொள். ஐம்பொறிகளையும் அடக்கி வாழும் பண்பு ஒருவரின் ஏழு பிறவிக்கும் பாது காப்பை தரும் என்பது வள்ளுவர் வாக்கு. தன் தேவைக ளைத் தன் எல்லைக்குமீறி நிர்ணயிக்கக்கூடாது. ‘நீயே உனக்கு நண்பன், நீயே உனக்குப் பகைவன்’ சுவாமி சின்ம யானந்தர் கூற்று.

தன் குற்றம் குறையை உணராமல் இருப்பவர் சரியான பார் வையற்றவரே. நிரந்தரம் இல்லா வாழ்க்கையில் யாருக்கும் எதுவும் நிரந்தரம் இல்லை. விதைத்துச் சென்ற யாவும் ஒரு நாள் அறுவடைக்கு வந்தே தீரும். அது வினையானாலும் சரி, விதையானாலும் சரி. பழைய நினைவுகளைத் தூசு தட் டும்போது நல்லவை தென்பட்டால் நீ வாழ்ந்த வாழ்க்கை மேல். ‘தன் எதிரிகளை வெல்பவனைவிடத் தன் ஆசைகளை வெல்பவனே பெரியவன்’ தத்துவஞானி அரிஸ்டோட்டில். ‘இந்த உலகில் நீங்கள் சிலகாலம் தங்க வந்திருக்கும் விருந் தினர்கள். விருந்தாளிகள் வீட்டில் எப்படி கட்டுப்பாட்டுடனும் அடக்கத்துடனும் இருப்பீர்களோ அப்படி இருங்கள்’ பாரதி- யார் பொன்மொழி. ஓர் எல்லைக்குள் வாழாதே. எல்லை யிட்டு வாழ். நம் வாழ்க்கை நாம் வாழும் விதத்தில்தான் உள்ளது.



natkunalingam@thaiveedu.com

STAY ONE STEP AHEAD OF CRA
X-CRA Officers are on staff.
SARVAA CPA
PROFESSIONAL CORPORATION
Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns
CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS
Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca
TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM
VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272




வரலாற்றுக்காலம் முதலே பல்வேறு துறைகளில் வளர்ச்சியைப் பதிவுசெய்து வருகின்ற மனிதர், சில அதிநவீன தொழில்நுட்பங்கள் காணப்படும் இன்றைய உலகிலும் நம்மைச் சுற்றி நடக்கும் சில விடயங்கள் தொடர்பிலான புரிதல் சற்றே குறைவாகக் காணப்படுகின்றது என்றால் அது மிகைப்படப்போவதில்லை. விமானங்கள் காணாமல் போகும் சம்பவங்கள் எமக்குப் புதியதல்ல. அநேக சந்தர்ப்பங்களில் விமானக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கும் விமானத்திற்கும் இடையிலான தொடர்பு இல்லாது போகும் சந்தர்ப்பங்களில் அந்த விமானத்திற்கு என்னவாயிற்று என்பதைக் கண்டறிவதில் சிக்கல்கள் இன்றளவும் காணப்படுகின்றன. விமானப் பயணங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இந்த நிலைமை நீடித்து வருகின்றது. அந்த வகையில் கடந்த காலங்களில் மர்மமான முறையில் காணாமல் போன விமானங்கள் பற்றிய ஒரு சிறு பார்வையாக இந்தப் பத்தி அமைகின்றது. கடந்த 2014-ம் ஆண்டு மார்ச் மாதம் 8-ம் திகதி மலேசிய விமானம் நடுவானில் மாயமாகியிருந்தமை உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. இந்த விமானத்தில் 239 பேர் பயணம் செய்திருந்தனர், மலேசியாவில் புறப்பட்டுச் சீனா நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போது சுமார் 35000 அடி உயரத்தில் MH370 என்ற விமானம் தொடர்பினை இழந்து காணாமல் போயிருந்தது. இந்த விமானம் காணாமல் போன விவகாரம் தொடர்பில் விஞ்ஞானிகள், ஊடகவியலாளர்கள், ஆய்வாளர்கள் உள்ளிட்ட பலரும் இன்று வரையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் இதுவரையில் இந்த விமானம் காணாமல் போனமை தொடர்பில் உறுதியான தகவல்கள் வெளியிடப்படவில்லை. நவீன தொழில்நுட்பம் நிறைவாகக் காணப்படும் இந்தக் காலத்தில் இவ்வாறான ஒரு விமானத்தைக் கண்டறிவதில் சவால்கள் நிலவும் நிலையில், தொழில்நுட்ப வசதி குறைவாகக் காணப்பட்ட காலப் பகுதிகளில் காணாமல் போன விமானங்கள் பற்றிச் சற்றே ஊடாடுவோம்.

## எமெய்லியா ஹியர்ஹார்ட்
## Amelia Earhart:

பிரபல நாடுகாண் விமான பயணியான அமலியா ஹாட் என்ற பெண் மர்மமான முறையில் விமானத்துடன் காணாமல் போயிருந்தார். 1937-ம் ஆண்டு ஜூலை மாதம் இரண்டாம் திகதி இந்தப் பெண் விமானத்துடன் காணாமல் போயிருந்தார். ஹார்ட் மற்றும் அவரது உதவியாளர் ஆகிய இருவரும் உலகத்தை விமானத்தில் சுற்றி வருவதற்கான பயணத்தை மேற்கொண்டிருந்த போது விமானம் காணாமல் போனது. இவர், அத்திலாந்திக் பெருங்கடலில் தனியாகப் பறந்த முதல் பெண்மணி என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய பசுபிக் பெருங்கடலில் உள்ள ஆப்லைன் தீவுகளுக்கு அருகாமையில் வைத்து இவர் பயணம் செய்த விமானம் காணாமல் போயிருந்தது. காணாமல் போன விடயம் தொடர்பில் பல்வேறு ஊகங்கள் வெளியிடப்பட்டு வந்தபோதிலும் இன்றுவரையில் அந்தப் பெண்ணுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றித் திடமான ஆதாரங்களுடன் தகவல்கள் வெளியிடப்படவில்லை. எரிபொருள் தீர்ந்து போன காரணத்தினால் குறித்த பெண் பயணம் செய்த விமானம் கடலில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகி இருக்கலாம் எனச் சிலர் ஊகங்களை வெளியிட்டுள்ளனர். ஹார்டின் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி பிராங்கிளின் டி ரிசல்ட்டின் உளவாளியாக இருக்கலாம் எனவும் ஜப்பானியர்கள் அவரைச் சிறைப்பிடித்தனர் எனவும் சிலர் தகவல் வெளியிட்டுள்ளனர். பேரால் பயணித்த விமானம் ஜப்பானிய தீவு ஒன்றில் விழுந்து நொறுங்கியதாக சிலர் குறிப்பிடுகின்றனர். அவரது உடல் மணல் நண்டுகளால் எடுத்துச் செல்லப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது. விமானத்திலிருந்து விழுந்து அவர் உயிர்பிழைத்தார் எனவும் அவர் நியூ ஜெர்சிக்குச் சென்று அங்கு தனது பெயரை மாற்றிக் கொண்டு வாழ்ந்தார் எனவும் சிலர் கூறுகின்றனர். மேலும் அவர் வேற்றுக்கிரகவாசிகளால் கடத்தப்பட்டதாக மற்றும் ஒரு சாரார் குறிப்பிடுகின்றனர். எனினும் இந்த விமானத்திற்கு என்னவாயிற்று என்று இதுவரையில் தெரியாது.

## கிளென் மில்லரின் விமானப்படை விமானம்
## Glenn Miller's Air Force Plane:

1944-ம் ஆண்டு கோடை காலத்தில் இங்கிலாந்தில் அமெரிக்க விமானப்படை இசைக்குழுவுடன் இணைந்து நேசநாட்டுப் படைகளுக்காக ஒரு தொடர் இசைநிகழ்ச்சியைப் பிக் பேண்ட் இசைக்குழுவின் தலைவர் மில்லர் வழங்கி வந்தார். 1944-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14-ம் திகதி அவர் தனது கடைசி இரவை மில்டன் எர்னெஸ்ட் பகுதியில் கழித்தார். பிரான்ஸ் படையினருக்காக இசைநிகழ்ச்சி ஒன்றை நடத்துவ

தற்காக மறுநாள் பிரான்சின் பாரிஸ் நகருக்குப் பறக்க இருந்தார். ஆர் எஸ் கீபோர்ட் விமானத்தின் ஊடாக ஆங்கிலக் கால்வாயைக் கடந்தபோது மாயமாகி இருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பிலும் பல்வேறு தகவல்கள் ஊகங்களின் அடிப்படையில் வெளியிடப்பட்டது. ஒரு என்ஜினைக் கொண்ட இந்த விமான விபத்து தொடர்பிலும் பலர் ஆய்வுகளையும் மேற்கொண்டிருந்தனர். நேசநாட்டுப் படைகளுக்கு இடையில் மேற்கொண்ட தாக்குதலின் போது இந்த விமானம் விபத்துக்குள்ளாகி இருக்கலாம் எனவும், விமானம் நடுவானில் தீப்பற்றிக்கொண்டு வெடித்து சிதறியதாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் ஜெர்மனிய ஊடகவியலாளர் உள் ஃபுட் இந்தச் சம்பவம் தொடர்பில் மாறுபட்ட கருத்து ஒன்றை வெளியிட்டு இருந்தார். கிளன் பிரான்சுக்கு சென்றார் எனவும் அங்கு ஓர் பாலியல் தொழில் மையத்தில் மாரடைப்பினால் உயிரிழந்தார் எனவும் குறிப்பிடுகின்றார்.

## 19-ஆம் இலக்க விமானமும் பேர்மியூடா முக்கோணமும் Flight 19 and the Bermuda Triangle:

1945-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ம் திகதி பெர்முடா முக்கோணப் பகுதியில் விமானத்தில் பறந்த ஆறு விமானங்கள் மாயமாகின. அனுபவ முதிர்ச்சி கொண்ட விமானப் பயிற்றுவிப்பாளர் பாலஸ்தைலர் தலைமையிலான குழு ஒன்று இந்தப் பயணத்தை அமெரிக்காவின் ஃப்ளோரிடாவிலிருந்து முன்னெடுத்தது. இந்த விமானப் பயணத்தில் ஐந்து கடற்படை அவெஞ்சர் விமானங்கள் இணைந்து கொண்டிருந்தன. பயிற்சி நோக்கில் பயணம் செய்த விமானங்கள் பெர்முடா முக்கோணப் பகுதியில் எதிர்பாராத விதமாக மாயமாகிப் போன வரலாறு இன்றளவில் ஒரு மர்மமாகவே நீடிக்கின்றது. இந்த விமானத்தைச் செலுத்திய விமானிகள் தங்களினால் கீழே இருக்கும் விடயங்களை அடையாளம் காணமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக விமானக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு வானொலிச் சமிக்ஞைகள் மூலம் தெரிவித்திருந்தனர். பிரபல விமானப் பயிற்றுவிப்பாளர் டைலர் விமானத்தின் திசைகாட்டிகள் இரண்டும் தொழிற்படவில்லை என விமானக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு அறிவித்திருந்தார். விமானக் கட்டுப்பாட்டு அறையின் பணியாற்றியவர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் இந்த விமானங்கள் பற்றிய எந்த ஒரு தகவலையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. மோசமான காலநிலை இந்த விமானங்களைத் தேடும் பணிக்கு இடையூறாக அமைந்தது. விமானங்களில் பயணம் செய்த 14 விமானப் படையினரும் உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விமானங்களைக் கண்டுபிடிப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்ட மற்றும் ஒரு விமானமும் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஸ்டார் டஸ்ட் / Star Dust:

1947-ம் ஆண்டு அர்ஜென்டினாவில் இருந்து புறப்பட்ட விமானம் ஒன்று காணாமல் போனது. இந்த விமானம் பற்றிய தகவல்கள் இன்று வரையிலும் புரியாத புதிராகவே காணப்படுகின்றது. நான் காஸ்டர் பம்பர் என்னும் போர் விமானத்தின் சிவிலியன் பதிப்பான பி.எஸ்.எஸ்.ஏ.ஏ ஸ்டார்ட் டெஸ்ட் என்ற விமானமானது, சீனாவின் பியூனஸ் எஸ் பகுதியில் இருந்து சிலியின் சந்தியாகுவிற்குப் பயணம் செய்தபோது இவ்வாறு காணாமல் போயிருந்தது. பிரிட்டிஷ் தென் அமெரிக்கன் ஏர் வேஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான இந்த விமானம் ரெஜினல் குக் என்பவரினால் செலுத்தப்பட்டது. இவர் ஓர் புகழ்பூத்த விமானப்படை விமானியாவார். 1947-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இரண்டாம் திகதி பிற்பகல் 1:46 மணிக்கு இந்த விமானம் புறப்பட்டுச் சென்றது. இந்த விமானம் ஆன்டிஸ் மலைக்கு மேலாகப் பறந்தது. விமானம் இலக்கை அடையவில்லை எனினும் விமானம் தொடர்புகளைத் துண்டித்துக் கொள்வதற்கு முன்னதாக வானொலி சமிக்ஞை செயற்பாட்டாளர் இரகசிய மோஸ் கோட் தகவல் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்த இரகசியக் குறியீட்டுச் செய்தியில் ‘STENDEC’ எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த இறுதிச் செய்தி என்னவாக இருக்கும் என்பது குறித்த ஊகங்கள் பல ஆண்டுகளாகப் பல்வேறு தரப்பினராலும் வெளியிடப்பட்டு வருகின்றது. இந்த விமானம் வேற்றுக்கிரக வாசிகளினால் தாக்கப்பட்டிருக்கலாம் எனவும், விமானத்தில் பயணித்த பயணி ஒருவர் எடுத்துச் சென்ற இரகசியத் தூதரக ஆவணங்களை அழிப்பதற்காக விமானத்தையே வெடிக்கச் செய்திருக்கலாம் எனவும் பல ஊகங்கள் வெளியிடப்பட்டன. விமானம் தற்செயலாகச் செங்குத்துப் பனிப்பாறை ஒன்றில் பறந்தது எனவும் அதன் போது ஏற்பட்ட பனிப்பாறை சரிவில் விமானம் புதையுண்டது எனவும் மற்றும் ஒரு தரப்பினர் தெரிவிக்கின்றனர். சுமார் 50 ஆண்டுகளில் பின்னர் அர்ஜென்டின மலையேறிகள் இருவர் விமானத்தின் எஞ்சின் துண்டுகள் மற்றும் சில ஆடைகளின் பகுதிகளைக் கண்டுபிடித்தனர். அந்தக் காலம் வரையில் ஸ்டேட்டஸ் விமானம் பற்றி எந்த விதமான தகவல்களும் கண்டுபிடிக்கப்படவில்லை.

## ஸ்டார் டஸ்ட் / Star Dust:

1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி அசோராவின் சாந்த மரியாவில் இருந்து பேர்மியூடா நோக்கிப் பயணம் செய்த பி.எஸ்.ஏ.ஏ ரக விமானமான ஸ்டார்ட் டைகர் காணாமல் போயிருந்தது. இரண்டாம் உலகப்போரின் வீரராகக் கருதப்பட்ட ஏயர்மாசல் ஆதார் கனிங். உள்ளிட்ட 25 பயணிகள் இந்த விமானத்தில் பயணித்திருந்தனர். இந்த விமானம் பலத்த காற்று மற்றும் சீரற்ற காலநிலையைத் தவிர்க்கும் நோக்கில் மிகத் தாழ்வாகப் பறந்துள்ளது. குறிப்பிட்டளவு எரிபொருள் எஞ்சியிருந்த நிலையில் புயலை ஊடறுத்துப் பேர்மியூடா நோக்கிப் பறக்க வேண்டிய நிர்ப்பந்தம் இந்த விமானத்திற்கு ஏற்பட்டது. இந்த விமானத்திற்கு உதவுவதற்காகச் சென்ற விமானம் மட்டும் அதிகாலை 4 மணிக்குப் பாதுகாப்பாக விமானநிலையம் திரும்பியது.



jeyaseelan.s@thaiveedu.com




# பயணக் காப்புறுதி

- செந்தூரன் புனிதவேல்

பயணக் காப்புறுதியானது பல வகையான பண இழப்பு களை ஈடு செய்யப் பயன்படுகிறது. உதாரணமாக விபத்து கள், நோய்கள், தவறவிட்ட விமானப் பயணங்கள், இரத்து செய்யப்பட்ட பயணங்கள், தொலைந்த பொதிகள், களவு, வன்முறைச் செயல்கள், பயண - நிறுவன முறிவு, அவசர கால வெளியேற்றம் இவற்றுடன் இறந்தால் உங்கள் உடலை வீட்டிற்குக் கொண்டு வருவது எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும்.

உங்களுக்கு இதன் தேவை எவ்வளவு முக்கியம் என்று கேட் டால் அதற்குப் பதில் கூறுவது மிகக் கடினம். நீங்கள் எவ்வ ளவு தூரம் இழப்புகளுக்கு முகம் கொடுக்கத் தயார் என்பது உங்களைப் பொறுத்தே உள்ளது. ஒரு பயணக் காப்புறுதி யிற்குப் பணம் முதலீடு செய்வது என்பது எப்போதுமே ஒரு சிக்கலான விடயம்தான். அதுவும் அண்மையில் கொரோனாத் தொற்று நோய்ப் பரவல் இத்தீர்மானத்தை மேலும் சிக்கலடை யச் செய்துள்ளது.

ஒவ்வொரு பயணியுடையதும், இடம்பெறக்கூடிய இழப்புகள் வித்தியாசமாய் இருக்கும். உதாரணத்திற்குப் பயணத்திற் கான செலவை முன் செலவு செய்திருப்பீர்கள், வான் பய ணத்திற்கான சீட்டில் எவ்வளவு விகிதம் மீள் தருவார்கள், உங்கள் உடல் ஆரோக்கியம், உங்கள் பயணப் பொதியின் பெறுமதி, எங்கு பயணம் செய்கிறீர்கள் மற்றும் உங்கள் வழ மையான காப்புறுதியில் எவ்வளவு காப்புறுதி உண்டு என்ப துடன், வீட்டு உரிமையாளர் அல்லது வாடகையாளர் என்பது டன் உங்கள் கடனட்டை ஆகியவற்றால் பெறப்படும் காப்பு களையும் பொறுத்திருக்கும். குறிப்பாக, நீங்கள் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில், அனேகமான காப்புறுதித் திட்டங்கள் கோவிட் தொற்றினைத் தவிர்ப்பதற்காக உங்கள் பயணத்தில் செய்யும் மாற்றங்களுக்கு உறுதி தரமாட்டாது.

எனவே, இவை அனைத்தையும் மனதிற் கொண்டும், உங்க ளுக்கு உள்ள தேர்வுகளைக் கருத்திற் கொண்டும் தீர்மானங் களை முடிவெடுங்கள்.

## அடிப்படைக் காப்புறுதிகள்:

பயணக் காப்புறுதியானது ஐந்து முக்கிய விடயங்களைக் காக்கும். அவையாவன: பயணத்தடை, வைத்தியச் செலவு, வெளியேற்றம், பொதிகள் மற்றும் பயணக் காப்புறுதி. குறிப் பிட்ட விடயங்களை மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ள முடி யும். உதாரணமாக, அடையாளத் திருட்டு அல்லது அரசி யல் வெளியேற்றம் போன்றவை. பல வகையான காப்புறுதி கள் வெவ்வேறு விடயங்களை அடக்கிய பொதிகளாக விற்ப னைக்கு உண்டு. நீங்கள் தேர்வு செய்யும் வேளையில் எந்த அனர்த்தங்களில் இருந்து காப்புறுதி செய்யப்பட வேண் டுமோ அவையடங்கிய பொதியை நீங்கள் தேர்வு செய்ய லாம். அனர்த்தங்களை ஒப்புநோக்கி, எவை உங்களுக்கு முக்கியமோ அவை அடங்கிய பொதியைத் தேர்வு செய்ய லாம். அத்தகைய முடிவு எடுக்கையில் தடைப்பட்ட பயணச் செலவா அல்லது இழந்த பொதியின் விலையா? வைத்தியச் செலவா? அல்லது நோய்வரின் வீட்டிற்கு உடன் திரும்பும் செலவா? உங்கள் குடும்பம் அல்லது தொழில் உங்கள் பய ணத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எனப் பலவகை விடயங்களை ஒப்புநோக்குவதவசியம்.

பொதுவாக Comprehensive Insurace எனப்படும் முழுமை யான காப்புறுதி, மேற்கூறிய அனர்த்தனங்கள் அத்தனையை யும் காப்புறுதி செய்வதாயிருக்கும், நாங்கள் உட்பட. அவர் கள் உங்களிடம் ஏற்கனவே உள்ள காப்புறுதிகளைக் கணக் கெடுக்காமல் அதாவது உங்கள் வேலைத்தளத்தில் வைத்தி யக் காப்புறுதி இருப்பின் அதனைப் பொருப்படுத்தாமல் தமது காப்புறுதியில் தேவையான வைத்தியச் செலவை முன் னின்று கொடுக்கும். இது உண்மையாகவே வரவேற்க வேண் டிய விடயமாகும்.

பொதுவாகப் பயணக்காப்புறுதி பல்வேறு தொகையில் வேறு பட்டுக் கணக்கிடப்படும். குறிப்பாக ஒரு பயணக் காப்புறுதி யானது பயணத் தொகையின் ஐந்து முதல் பத்து வீதம் வேறுபடும். ஆனால் அத்தியாவசியத் தேவையில்லாமல் பய ணத்தை இரத்துச் செய்தால் ஏற்படும் இழப்பை ஈடு செய்யும் காப்புறுதி பயணச் செலவின் தொகையில் 20 முதல் 50

விழுக்காடு உடையதாக இருக்கும். பயணக் காப்புறுதிகளின் கட்டணம் பெரிதும் வயதாலும், ஆரோக்கிய நிலையாலும் நிர்ணயிக்கப்படுகிறது. ஐம்பது வயதை அடைந்தவுடன் ஒவ்வொரு பத்து வருடங்களுக்கும் கட்டணம் அதிகரித்துக் கொண்டிருக்கும். பதினெட்டு வயதுக்குக் குறைந்தவர்களுக்குக் கட்டணம் மிகக் குறைவாய் இருக்கும்.

பயணங்கள் ஏற்பாடு செய்பவர்கள் காப்புறுதி முகவர்களைச் சிபாரிசு செய்வது வழமையாகும். காரணம் சிபாரிசு செய்பவர்களுக்கும் அறிமுகப்படுத்தியதிற்காக நன்கொடை கிடைப்பதனால். ஆனால் அவர்கள் காப்புறுதி முகவர்கள் அல்ல என்பதை மறக்க வேண்டாம் உங்கள் சந்தேகங்களைக் காப்புறுதி முகவரிடம் நேரடியாகக் கேட்டு தீர்மானங்களை எடுங்கள்.

### வெவ்வேறு வகையான காப்புறுதிகள்:

பயணக் காப்புறுதிகள் பல வகைப்படும். அதுவும் ஒரே தலையங்கத்துடன் வெவ்வேறு இழப்புகளுக்கு ஈடு செய்யும். இங்கு நான் தருவது பொதுவான விடயங்களையே. நீங்கள் காப்புறுதி செய்யும் முகவரிடம் தெளிவாகக் கேட்டு சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளுங்கள். இதில் குறிப்பாகக் கவனிக்க வேண்டியது உடன் பயணி (Travel Partner) அல்லது குடும்ப அங்கத்தவர் (Family Member) இப்படியான சொற்களின் அர்த்தங்களைத் தெரிந்து - புரிந்து கொள்ளுங்கள்.

அண்மையில் தோன்றிய கொரோனாத் தொற்று, காப்புறுதிகளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. பயணக் காப்புறுதி பெரிதும் வேண்டப்படும் பொருளாகியுள்ளது. அதனை விற்பவர்களும் காலத்தின் தேவைக்கேற்ப மாற்றங்களைச் செய்த வண்ணமிருக்கிறார்கள். எனவே கவனமாகப் படித்துக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

### பயண இரத்துச் செய்தல் அல்லது தடங்கல் காப்புறுதிகள்:

என்னைப் பொறுத்தவரையில் இது பெரிதும் பயன்படக்கூடிய பெறுமதியான காப்புறுதியாகும். முன்கூட்டியே பயணத்துக் கானதை இடை நிறுத்தினாலோ அல்லது தடைப்பட்டாலோ ஏதாவது எதிர்பாராத காரணத்தால் ஏற்பட்டால், ஏற்படும் பெரும் இழப்பை சிறு மூலதனத்தால் பெற்ற காப்புறுதி மீட்டுத்தரும். தடை என்பது எவருக்கும் வரலாம். உதாரணத்திற்கு உங்களுக்கோ அல்லது உங்களுடன் உடன் பயணிப்பவருக்கோ சுகவீனம் வரலாம். எதிர்பாராததை எதிர்பார்ப்பது தான் வாழ்க்கை என்பதை நினைவில் கொண்டு, முன்னெச்சரிக்கையாகக் காப்புறுதி செய்து கொள்வதுதான் அறிவுடைமை.

பொதுவாகப் பயணத் தடைக் காப்புறுதிகள், மீளப்பெற முடியாத பயணக் கட்டுக்காசு, ஏற்றுக்கொள்ளக் கூடிய தடைகளால் ஏற்படுவதால் வரும் இழப்பாகும். உதாரணத்திற்கு,

- நீங்கள் அல்லது உங்களுடன் பயணிப்பவர், குடும்ப அங்கத்தவர் நோய்வாய்ப்படின் பயணம் தடைப்படுதல்.
- நீங்கள் பயண ஒழுங்கு செய்த அமைப்பு, தொழில் இழப்பு ஏற்பட்டு மூடப்பட்டுவிட்டால்.
- வீட்டில் இருக்கும் குடும்ப அங்கத்தவர் ஒருவர் நோய் வாய்ப்பட்டால். இதில் அந்தக் குடும்ப அங்கத்தவர் முன்பே வருத்தமாக இருந்தாரா அல்லது புதிதாக வந்த வருத்தமா? என்பதைக் கவனிக்க வேண்டும்.
- உங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பால், அதாவது உதாரணத்திற்கு வாகன விபத்து, கடும் சீதோசண நிலை அல்லது கதவடைப்பு போன்றவையாகும்.

இதன் விளைவு உங்களுடன் உடன் பயணிப்பவர் விபத்தில் சிக்குண்டு உங்களுடன் பயணிக்க முடியாதிருப்பின் இருவருக்கும் காப்புறுதி இருப்பின் நீங்கள் கட்டிய பணம் அனைத்தும் மீளப் பெறலாம். நீங்கள் பயணத்தைப் புறப்பட்டபின் தொடர முடியாது விபத்து ஏற்படின், எஞ்சிய பகுதியின் கட்டணத்தை மீளப் பெறலாம்.

இத்தகைய காப்புறுதிகள் திட்டமிட்டுக் கூட்டாகச் செல்லும் பயணத்தில் அல்லது கப்பல் பயணத்தில் அல்லது தனித்து பயணிக்கும் வேளையில் மீளப்பெற முடியாத முன் விடுதிக் கட்டணங்கள் ஆகியன திருப்பிப் பெறலாம். இதில் நீங்கள் கவனிக்க வேண்டியது பயணம் இரத்துச் செய்யப்பட்டது (Cancellation) என்பதற்கும், தடைப்பட்டது (Interruption) என்பவற்றிக்குள்ள வித்தியாசம். முன்னையது பயணத்தை முற்றாக நீங்கள் மேற்கொள்ளவில்லை என்பதும், பின்னையது பயணம் தொடங்கிய பின் தடைப்பட்டது என்பதுமாகும். பின்னையதில் நீங்கள் இழந்த பகுதி மட்டும் ஈடுசெய்யப்படும். நீங்கள் யாருடனாவது கூட்டாகப் பயணம் செய்வதானால் ஏற்கனவே இரத்துச் செய்வதனால் வரும் இழப்பிற்குக் காப்புறுதி செய்யப்பட்டிருக்கலாம். அதனைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

சில காப்புறுதி அமைப்புகள் குறிப்பிட்ட விமான நிறுவனங்களையும் பயண ஏற்பாடு செய்யும் அமைப்புகளையும் காப்புறுதி செய்யமாட்டார்கள், காரணம் அந்த நிறுவனம் வங்குரோத்திற்கு அல்லது திவாலாவதற்கான காப்புப் பெற்றுள்ளமையே. எனவே நீங்கள் பயணிக்கும் விமானமும், ஒழுங்கு செய்யும் அமைப்பும் ஏற்றுக்கொள்ளப்படுமா எனக் கவனியுங்கள்.

நீங்கள் முதல் கட்டுக்காசு செலுத்தி ஒருவாரத்துக்குள் காப்புறுதி செய்து கொள்ளுங்கள். அனேகமாகக் காப்புறுதி அமைப்புகள் ஏழு முதல் இருபத்தொரு தினத்துக்குள் ஒரு எண்ணைக் குறிப்பிட்டு அதன் பின் எழுதப்படும் காப்புறுதிகள் சில விமான நிறுவனங்களையும், ஒழுங்கு செய்யும் அமைப்புகளையும் முன்பிருக்கும் ஆரோக்கியக் குறைபாடுகளையும் ஈடுசெய்ய முன்வர மாட்டா. இதைவிட தீவிரவாத நிகழ்வுகள் மற்றும் மனநோய் போன்றவற்றால் வரும் இழப்புகளையும் ஈடு செய்ய மாட்டா.

கட்டாயமாகக் காப்புறுதி செய்யும் அமைப்புடன் தீர விசாரித்து அறியுங்கள். தீவிரவாதச் செயல் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் என்பன நீங்கள் குடியிருக்கும் இடத்தில் இடம்பெற்றால் நட்டஈடு தராதுவிடலாம். நீங்கள் புறப்படும் நகரம் அல்லது சென்றடையும் நகரில், உங்கள் பயணத் திகதிக்கு முப்பது தினங்களுக்குள் நிகழ்ந்தால் மட்டும் ஈடு செய்யும். அதேவேளை உங்கள் பயண ஏற்பாடு செய்பவர் மாற்றுத் திகதியில் பயணிக்கச் சந்தர்ப்பம் தரும் வேளையில் உங்களுக்கு நட்டஈடு மறுக்கப்படலாம். இயற்கை அனர்த்தங்களைப் பொறுத்தவரையில், நீங்கள் செல்லும் இடம் மக்கள் குடியிருக்க முடியாத நிலையில், அதாவது நீங்கள் தங்கவுள்ள விடுதி வெள்ளத்தால் வசிக்க முடியாதிருப்பின், நஷ்டஈடு வழங்கப்படும். பொதுவாக யுத்தங்களுக்கும் தொற்று நோய்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படாது. காரணம் இவை திடீர் என ஏற்படுவதல்ல.

### காப்புறுதியும் பெரும் பரப்புத் தொற்று நோயும் (Pandamics):

கொரோனாத் தொற்று நோயினால் பயணங்கள் பெரிதும் தாக்கமடைந்துள்ளது. இந்நிலையில் இது பற்றிய தெளிவான விளக்கம் இருப்பதவசியம்.

அனேகமான காப்புறுதிகள் எதிர்பாராத காரணங்களுக்காகத் தடைப்படும் பயணங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டாலும், கொரோனா தொடர்பான இழப்புகள் விதிவிலக்கு செய்யப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு,

- வருத்தத்தைத் தவிர்ப்பதற்கு: அதாவது வருத்தம் வந்திடும் என்ற அச்சத்தில் பயணத்தை இரத்துச் செய்தால்.
- பொதுவாகக் காப்புறுதிகள் கட்டாயத்தின் பேரில் வீட்டில் தடுக்கப்பட்டால், நட்டத்தை ஈடு செய்யும், ஆனால் பொதுவாக அனைவருக்கும் அந்த நிபந்தனை வழங்கப்படும் வேளையில் நட்டத்தை ஈடு செய்யாது.
- அரசாங்கத்தால் தந்த அறிவுறுத்தலை மீறி பயணித்தல், உங்கள் அரசினால் ஆபத்தான பகுதி என்ற பிரதேசத்திற்கு பயணித்தால், உங்கள் காப்புறுதியில் தரப்பட்ட அனுமதிகள் மறுக்கப்படலாம்.

இப்படியாக எது அனுமதிக்கப்பட்டுள்ளது - எது தவிர்க்கப்பட்டுள்ளது என்ற வாதப், பிரதிவாதங்களைத் தவிர்க்கலாம்.

வைத்தியக் காப்புறுதி: பயணங்கள் தடைப்படுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு ஆரோக்கியம் ஒரு முக்கிய காரணியாக அமையும் என்பதுடன் பெரும் வைத்தியச் செலவும், உடன் பயணிப்பவர் தங்குமிடச் செலவு எனப் பலதரப்படும்.

உங்கள் பயணத்துக்கு முன், பயணத்துக்கான வைத்தியக் காப்புறுதி வாங்குவதற்கு முன், உங்கள் வைத்தியக் காப்புறுதி முகவருடன் கலந்தாலோசியுங்கள். ஒரு வேளை ஏற்கனவே உள்ள காப்புறுதி உங்கள் பயணத்திற்கும் காப்புத் தரலாம். பல கனடியக் காப்புறுதிகள் வெளிநாடுகளில் காப்புறுதி செய்தாலும், வைத்தியக் காப்புறுதி மறுக்கப்படலாம். மேலும் எற்கனவே உள்ள நிபந்தனைகள், அதாவது முன்னறிவித்தல் தருவது போன்றவற்றை கவனியுங்கள்.

ஏற்கனவே உள்ள வைத்தியக் காப்புறுதி சர்வதேசச் செயற்பாடுடையதானாலும், ஒரு பிரத்தியேக வைத்தியக் காப்புறுதி செய்து, ஏற்கனவே உள்ளதற்கு மேலாக இரண்டாம் கட்டமாகக் காப்புறுதி செய்யலாம். அது ஏற்கனவே உள்ள காப்புறுதி செய்யாதவற்றையும், கழிவுக்காசு போன்றவற்றையும் தரலாம். ஆனால் நீங்கள் அடிப்படைக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளலாம், அது உங்கள் செலவுகளை ஓரளவு பொறுப்பு எடுக்கும். பெரும் செலவில் வைத்தியம், மற்றும் தங்கியிருக்கும் நிலை ஏற்படுகையில் வைத்தியசாலை நேரடியாகப் பயணக் காப்புறுதி அமைப்புடன் தொடர்புகொண்டு செயற்படும். ஆனால், உங்களுடைய நிரந்தரக் காப்புறுதி அமைப்புடன் தொடர்பு கொள்ளாது என்பதால், நீங்கள் செலவு செய்து விட்டு அச்செலவை நிரந்தரக் காப்புறுதி அமைப்பிடம் இருந்து மீளப் பெறலாம். நீங்கள் நடைமுறையாகச் செய்துவரும் பராமரிப்புக்கு வைத்தியரிடம் சென்றால் அது உங்கள் சொந்தச் செலவாகவே இருக்கும். ஆனால் வீடு திரும்பிய பின் மீளப் பெற்றுக் கொள்ளலாம்.

எந்த நிலையிலும் உங்கள் காப்புறுதி ஆலோசகரை அணுகி அறிவுரை பெறுவதே சிறந்தது.

அனேகமான நிரந்தர வருத்தங்கள், வைத்திய மற்றும் பயணத் தடைக் காப்புறுதி ஈடு செய்வது, எப்போது அது பெறப்பட்டது என்பதுடன் கடைசியாக எப்போது வைத்தியரால் பரிசோதிக்கப்பட்டதைப் பொறுத்திருக்கும். நீங்கள் பல கடல் கடந்த பயணங்கள் செய்பவரானால் வருடாந்தப் பயணக் காப்புறுதி பெற்றுக்கொள்வது சிறந்ததாகும். அத்துடன் செலவும் குறையும்.

அரசாங்கத்தாலும் சில நாடுகளுக்குப் பயணிப்பதைத் தடுக்கும்படி அறிவுரை வழங்கப்படுவதுண்டு. அத்தகைய நாடுகளுக்குப் பயணிப்பதற்காக நீங்கள் பயணக் காப்புறுதி பெற்றால் அது செல்லுபடியாகாது அல்லாவிடில் அதைக் குறிப்பிட்டு மேலதிக காப்புறுதி பெற்றிருத்தல் வேண்டும்.

70 வயதுக்கு கூடியவர்களுக்குப் பயணக் காப்புறுதி விலை கூடியதாயிருக்கும். பயணத்துக்கென எடுக்கும் காப்புறுதியுடன், கூட்டாக எடுக்கும் காப்புறுதியை ஒப்புநோக்குங்கள். உங்கள் காப்புறுதி விடயமாக நல்ல அறிவுரை தரமுடியும். எனவே முகவருடன் கலந்தாலோசித்து முடிவு எடுக்கவும்.

### களவுக்கான காப்புறுதி:

களவுகளின் தாக்கம் மிகையானது. குறிப்பாகக் கணினிகள், நிழல்ப்படக் கவிகள், நவீன கைத்தொலைபேசிகள்... இப்படியாகப் பல விலையுயர்ந்த பொருட்களைப் பொதிகளில் வைத்திருப்போம். இவ்விழப்பிலிருந்து தப்புவதற்கு, காப்புறுதி வாங்கும்போது களவு போன பொருளின் விலையை எப்படிக் காப்புறுதி அமைப்பு தீர்மானிக்கும் என அறிந்து கொள்ளுங்கள். ஆகக்கூடியது எவ்வளவு தொகை தருவார்கள் போன்ற கேள்விகள் நியாயமானதே. குறிப்பாகத் தங்க நகைகளைப் பொதியில் வைத்து நட்டஈடு கேட்கும் வேளை

நாலு பணம் தான் தருவோம் என்றால் ஏமாற்றமாகவும், வேதனையாகம் இருக்கும் அல்லவா?

இன்னுமொரு சாதுர்யமான விடயம், உங்கள் வீட்டு அல்லது வாடகை இல்லக் காப்புறுதி முகவரிடம் கேட்டுப் பாருங்கள். பலவற்றில் உங்கள் பொருட்களை உலகில் எங்கும் காப்புறுதி செய்வதாக அவை இருக்கும், ஆனால் அவற்றில் கழிவுத்தொகை அறவிடப்படும். உங்கள் வீட்டுக் காப்புறுதியில் கழிவுத்தொகை ஆயிரமாக இருக்கையில் கணினியின் விலை எழுநூறாக இருப்பின் அர்த்தமில்லை. தனிப்பட்ட ஒரு காப்புறுதி பெறுவதிலும் பார்க்க ஏற்கனவே உள்ள காப்புறுதித் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம்.

### விலை உயர்ந்த பொருட்களுக்கு...:

பயணத்திற்குப் புறப்படுமுன், உங்களுடன் கொண்டு செல்லும் விலை உயர்ந்த பொருட்களைப் பட்டியலிட்டுக் கொள்வது சிறப்பு. அந்தப் பட்டியலில் அதைப்பற்றிய அடையாளக் குறிப்புகளைச் சேர்த்துக் கொள்ளத் தவறவேண்டாம். சில சந்தர்ப்பங்களில் படம் எடுத்து வைப்பதும் சிறப்பு. அத்தகைய தரவுகள், களவு இடம்பெற்றால் காப்புறுதி அமைப்புக்கும், நகரக் காவலர் திணைக்களத்திற்கும் பயன்படும். உங்களுக்கும் காப்புறுதி அமைப்பிடம் இழப்பிற்குக் கோரிக்கைவிடும் வேளையிலும் பயனுடையதாயிருக்கும். மேலும் காப்புறுதி அமைப்பிடம் கோரிக்கை விடுவதாய் இருப்பின் காவலர்களிடம் இருந்து பத்திரம் எடுத்து வைப்பது அவசியம்.

### மற்றைய காப்புறுதிகள்:

வெளியேற்றக் காப்புறுதி: அவசர நிலையில் நீங்கள் வைத்தியப் பராமரிப்புப் பெறக்கூடிய இடத்துக்கு அழைத்து, செலவை ஈடுசெய்யும். இக்காப்புறுதி வைத்தியப் பராமரிப்புடன் அழைத்துச் செல்லும் ஆகாய விமானத்தையும் உள்ளடக்கும். அதாவது தனி ஜெட் விமானத்தையும் இதில் உள்ளடக்கும். பொதுவாக உங்களுடைய வீட்டு வைத்தியக் காப்புறுதி ஈடுசெய்யாது. அனேகமாக மிக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அல்லது வீட்டிற்கு வர உதவும். குறிப்பாக மிகத் தனிமையான ஒரு இடத்துக்குச் செல்வதானால் இத்தகைய காப்புறுதி வைத்திருப்பது நன்மை தரும். இதனை Medical Repatriation எனக் குறிப்பிடுவர். இக்காப்புறுதி பெறும் முன்னர் காப்புறுதி முகவரிடம் இது பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டிய விடயம், காப்புறுதி அமைப்பு ஆபத்தானது எனக் கருதும் செயற்பாடுகளில் நீங்கள் ஈடுபட்டால் காப்புறுதி செல்லுபடியாகாது. உதாரணத்திற்குப் பரசூட்டில் பாய்வது, உயர் மலை ஏறுவது, பனிக்கட்டியில் சறுக்குவது போன்றவை தவிர்க்கப்பட்டிருக்கும். சில நிறுவனங்கள் விதிவிலக்காக மேலதிக கட்டணம் அறவிட்டு அவைக்கும் காப்புறுதி தரும் என்பதையும் குறிப்பிட வேண்டும்.

### பொதுக் காப்புறுதி:

பொதுவான பயணக் காப்புறுதிகள் தொலைந்தால், வரப்பிந்தினால் அல்லது பழுதுபட்டால் இழப்பை ஈடு செய்யும். இதனால் தனியாகப் பொதிகளுக்காகப் பயணக் காப்புறுதி பெறுவதில்லை என்றாலும் அவற்றில் பல பொருட்களுக்கு உச்ச வரம்பு வைத்திருப்பார்கள். உதாரணத்திற்கு நகைகள், கண்ணாடி, மின் கருவிகள், கமராக்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். நீங்கள் ஆகாய விமானத்திடம் பொதிகளைக் கையளிக்கும் போது அவை உடனடியாக ஆகாய விமானக் கம்பனியால் காப்புறுதி செய்யப்படும். ஆகாய விமான நிறுவனத்திடம் எவ்வளவு பெறுமதிக்குக் காப்புறுதி உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம். ஆனால் மேலதிகத் தொகைகளுக்குப் பிரத்தியேகக் காப்புறுதி செய்ய வேண்டும். வீட்டுக் காப்புறுதியும் பயணிக்கும் வேளைகளில் உங்கள் உடமைகளைக் காப்புறுதி செய்யும். எனவே காப்புறுதி அமைப்புகளிடம் Flight Insurance - இது பறக்கும் வேளை ஆகாய விமானம் விபத்துக்குள்ளாகி விழுந்தால் நீங்கள் காயமடைந்து அல்லது இறந்து விடும் பட்சத்தில் இழப்பை ஈடுசெய்வது பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது. இது அடிப்படையில் ஒரு ஆயுள் காப்புறுதியே. நீங்கள் இறந்து விடும் பட்சத்தில் உங்கள் வாரிசுகளுக்கே இந்தக் காப்புறுதி பயன்படும்.

மேற்கூறிய விடயங்களைக் கவனத்தில் கொண்டு பயணத்தை இனிமையாக அமைக்க வாழ்த்துகள்.



senthuran.p@thaiveedu.com






### வீடு வாங்கும்போது புதிய வீட்டைத் தெரிவுசெய்வதா அல்லது மீழ் விற்பனைக்கு வந்துள்ள வீட்டைத் தெரிவுசெய்வதா?

பொதுவாகவே வீடு தேடும் படலத்தில் இறங்கி இருப்பவர் கள் மத்தியில் புதிய வீடா? அல்லது பழைய வீடா? என்ற கேள்வி நிச்சயம் வரத்தான் செய்யும். சுருங்கக் கூறுவதா னால் இரண்டு தெரிவுகளிலும் நன்மைகளும் உண்டு. தீமை களும் உண்டு அந்த வகையில் இரண்டு பக்க நன்மை, தீமைகளையும் இங்கு ஒப்பிட்டுக் காட்ட விழைகிறேன். சகல தையும் சீர்தூக்கிப் பார்த்து இறுதி முடிவு எடுப்பதை தனிப் பட்ட விருப்பாகக் கருதி உங்கள் கைகளில் விடுகிறேன்.

முதலில் புதிய வீடுகள் வாங்கும் போது ஏற்படக்கூடிய அனு கூலங்கள் பற்றிப் பார்ப்போம்.

### விருப்பத்திற்கேற்ற தெரிவுகள்:

புதிய வீடுகள் வாங்கும்போது எங்கள் விருப்பங்களுக்கேற்ற வகையில் தெரிவுகளை மேற்கொள்ளலாம் என்பது மிகப் பரந்த விரிந்த அம்சங்களைக் கொண்டது. பெரும்பாலான கட்டட அமைப்பாளர்கள் நுகர்வோரின் விருப்பத்திற்கேற்ப வும் கட்டடநிர்மாண விதிகளுக்கு முரணாகாத வகையிலும் எந்தவித மாற்றங்களையோ அல்லது உட்புகுத்தலையோ அல்லது நீக்கல்களையோ செய்யத் தயாராக இருக்கிறார் கள். உதாரணமாக 4 படுக்கை அறைகள் அமைப்பதா அல் லது 5 படுக்கை அறைகள் அமைப்பதா என்பது நுகர்வோ ரின் தெரிவாக இருக்கும். மேற்தள குளியலறை இரண்டா? அல்லது மூன்றா என்பதுகூட வீடு வாங்குபவர்களது தெரி வாக அமையலாம்.

சலவை செய்யும் அறையை பிரதான தளத்தில் வைப்பதா? அல்லது மேற்தளத்தில் வைப்பதா? அல்லது கீழ் தளத்தில் வைப்பதா? என்பதை நுகர்வோர் தீர்மானிக்கும் வசதி உண்டு. பிரதான தளத்தில் ஓர் அலுவலக அறை அல்லது நூலக அறை இருந்தால் எவ்வளவு வசதியாக இருக்கும்? என்பது பலரதும் ஆதங்கமாக இருக்கின்றது, புதிய வீடுகள் வாங்கும் போது அதற்கேற்ற தெரிவுகளை மேற்கொள்ள வாய்ப்பு உண்டு. மறுபுறம் கனடாவில் வயதானவர்களும் ஏன் சில இளைஞர்களும்கூட படிகள் ஏறி இரண்டாம் மாடிக்குப் போவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். பெற்றோரை வீட்டில் வைத்துப் பராமரிக்கும் பிள்ளைகள் பெற்றோர் படும் அவ லம் கண்டு பல மாற்று வழிகளைக் காண்பதைப் பல இடங் களிலும் அவதானிக்கலாம். இப்படியான சூழ்நிலைகளில் இருப்பவர்கள் வீடு கட்டும் போதே பிரதான தளத்தில் படுக்கை அறையும் குளியலறையும் வரக்கூடியதான தெரிவு- களை ஏற்படுத்த முடியும். நூலகத்திற்குப் பதிலாக அதனை படுக்கை அறையாக மாற்றி சகல வசதிகளுடனும் கட்டு வித்துப் பெறும் வாய்ப்பு புதிய வீடு வாங்குபவர்களுக்கு இருக்கின்றது.

அமைப்பு ரீதியான மாற்றங்கள் மட்டுமன்றி வீட்டை அழகுப டுத்தும் விதத்தில் பல தெரிவுகளைச் செய்யக்கூடிய வாய்ப் புகள் புதிய வீடு வாங்குபவர்களுக்கே இருக்கின்றது. சுவ ரின் நிறம் தொடக்கம் தளத்தின் நிறம் வரை தமது விருப்பத் திற்கு ஏற்ற வர்ணங்களை தெரிவு செய்யலாம். வீட்டின் வர வேற்புப் பகுதி சமையலறை, சாப்பாட்டறை, Family Room போன்ற பல பிரிவுகளுக்கும் படுக்கை அறை, குளியலறை போன்றவற்றிற்கும் நிலத்தை எவ்வாறு அமைப்பது என்ற கேள்விக்கு Granite, Marble, Hardwood, Carpet போன்ற தெரி வுகள் நிலத்தைப் பொறுத்தவரை மிக அதிக அளவில் உள் ளன. இவற்றுள் எதனை எங்கு, எந்த வடிவத்தில், எந்த நிறத் தில் போடுவது என்பது நுகர்வோரது தெரிவாக அமையும்.

பொதுவாக வீடு வாங்குபர்களின் கவனத்தை முதலில் கவ ரும் இடமாக அமைவது சமையலறை. வீடுகள் வாங்கும் போது இறுதி முடிவு எடுக்கும் நிலை பெண்களின் கையில் இருப்பதனாலோ என்னவோ கவர்ச்சிகரமான சமையலறைக ளைக் கொண்ட வீடுகள் மிக வேகமாக விற்கப்படுவதாகச் சில ஆய்வுகள் கூறுகின்றன. அத்தகைய சமையலறைக்கு இருக்கக்கூடிய அலுமாரிகள் எந்த வடிவத்தில் எந்த நிறத் தில் அமையவேண்டும் எத்தகைய கைபிடிகள் போடப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் சுதந்திரம் புதிய வீடு வாங்குபவர்களுக்கு இருக்கும். சமையலறை மேற்தட்டுக் களை (Counter Top) Granite, Quartz போன்ற மிக அழகான நிலைத்து நிற்கக்கூடிய மூலப் பொருட்களில் போடவும் இசைவான வடிவங்களிலும் வர்ணங்களிலும் போட அதிக வாய்ப்பு உண்டு.

### Green Appliances:

தொழில்நுட்பரீதியாகப் பார்க்கின்றபோது ஒவ்வொரு வருட மும் உத்தம உளவில் விரயத்தைத் தவிர்த்து, அதிக சக்தி யைத் தரக் கூடிய Energy Efficient தன்மை கொண்ட வீட்டுத் தேவைக்கான இயந்திர உபகரணங்கள் ஆண்டு தோறும் அறிமுகமான வண்ணமே இருக்கின்றன. குளிர்சாதனப்

பெட்டி, அடுப்பு, வெப்பமாக்கி, (Furnace) சுடுநீர் தொட்டி, குளிரூட்டி மட்டுமன்றி மின்சார விளக்குகள்கூட Energy Star தன்மை கொண்டனவாகவும், மிக அழகானவையாகவும் ஒவ்வொரு வருடமும் அறிமுகப்படுத் தப்படுகின்றன. புதிய வீடுகள் வாங்குபவர்களுக்கு நவீன தொழில் நுட்ப உபகரணங்களை உபயோகிக்கும் வாய்ப்பு கிட்டுவது மட்டுமன்றி அவர்களது மாதாந்த செலவு கணிசமான அளவு குறையவும் புதிய வீடுகள் வழி வருக்கின்றன.

**புதிய கட்டட நியமங்கள்:**

காலத்திற்குக் காலம் கட்டட நிர்மாணத்திற்குரிய நியமங்களும் சட்டதிட்டங்களும் புதிது புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்னர் அவசியமற்றதாக கருதப்பட்டவை காலத்தின் தேவையைக் கருத்திற் கொண்டு தற்போது சட்டமாக்கப்படுகின்றன, அல்லது நியதியாக்கப்ப



டுகின்றன. அந்த வகையில் நுகர்வோரின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு புகை அறிவுறுத்தும் கருவி, காபன்மொனோக்சைட் (Co) அறிவுறுத்தும் கருவி, என்பவற்றையும் மற்றும் சாளரங்களின் தன்மை, கழிவு நீர்போக்கும் வழிகள், அடைப்புக்கள் (insulation) போன்ற பலவற்றையும் குறிப்பிடலாம்.

முக்கியமாக தற்போது கட்டப்படும் வீடுகள் ‘Energy Star Homes’ என்று முத்திரை பொறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். குறிப்பாக வீட்டினுடைய அமைப்பும், கட்டடத்தின் பாவிக்கப்படும் கட்டட மூலப் பொருட்களும், காற்றோட்டம், வெளிச்சம், அடைப்புகள் (Insulation) போன்ற அம்சங்களும் மிகக் துல்லியமான முறையில் ஒவ்வொரு ஆண்டும் Energy Efficient ஆகத் தரமுயர்த்தப்படுகின்றன. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் தற்போது 20% சக்தி விரயத்தடுப்பு (Efficency) புதிய வீடுகளில் உள்ளடக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே மிகப் புதிய வீடுகளில் மிக அதிகளவில் சக்தி விரயத்தடுப்பு இருக்கும் என் பதில் சந்தேகமில்லை என்பதோடு அவை மிகப்பாதுகாப்பு மிக்க சூழ்நிலையை உருவாக்கக்கூடிய செலவு குறைந்த ஸ்திரமானவாழ்வுக்கு வழிவகுக்கும் எனவும் கூறலாம்.

**உத்தரவாதம்:**

புதிய வீடு வாங்குபவர்களுக்கு 30 நாள், ஒரு வருடம், 2 வருடங்கள், 7 வருடங்கள் என்று பலவித உத்தரவாதங்கள் வழங்கப்படுகின்றன. எனவே இக்காலப் பகுதிகளில் வீட்டில் ஏற்படக்கூடிய பழுதுகளை இலவசமாகத் திருத்துவிக்கும் வாய்ப்பு புதிய வீட்டுரிமையாளர்களுக்கு உண்டு என்பது பலருக்கும் ஆறுதலைக் கொடுக்கும் அம்சமாகக் காணப்படுகின்றது.

## இடர்பாடுகள்:

**அதிகளவு முற்பணம்:**

புதிய வீடுவாங்குபவர்கள் 120 - 300 ஆயிரம் டொலர்களை 3 அல்லது 4 தடவைகளில் முற்பணமாகச் செலுத்த வேண்டி இருக்கும். மிகச் சொற்ப அளவான சேமிப்பை வைத்துக் கொண்டு அதைக்காட்டி இதைக்காட்டி வீட்டில் முதலீடு செய்பவர்களுக்கு இது ஒரு பாரிய தடைக்கல்லாக அமையும்.

**நீண்டகால காத்திருப்பு:**

பொதுவாக 1 தொடக்கம் 2 அல்லது 3 ஆண்டுகள் வரை கட்டுப்பணத்தைக் கொடுத்தபின் காத்திருப்பதும், பல தடவைகள் கட்டட அமைப்பாளர்கள் காலத்தைத் தள்ளிப் போடுவதும் புதிய வீடு வாங்குபவர்களுக்கு ஏற்படும் தவிர்க்க முடியாத இடர்ப்பாடுகளில் ஒன்று.

**மேலதிகச் செலவு:**

எதிர்பாராத செலவுகளை சந்திக்க வேண்டிய சூழ்நிலை வீடு கையேற்கப்படும் போது ஏற்படலாம். அபிவிருத்திக்கட்டணம், (Development Charges) உத்தரவாதத்திற்குரிய கட்டணம், இணைப்புச் செலவுகள், (Hookup Charges) மரம் நடுவதற்கான செலவுகள், வண்டிப் பாதைக்கான செலவு போன்ற செலவுகள் பழைய வீடுகளை வாங்கும் போது ஏற்படுவதில்லை.

பொதுவாக அடுப்பு, குளிர்சாதானப் பெட்டி, சலவை செய்யும் இயந்திரம், உலர்த்தி என்பன நுகர்வோரினால் புதிதாக கொள்வனவு செய்யப்பட வேண்டியவையாக இருக்கும். ஒரு சில சந்தர்ப்பங்களில் மட்டும் அவை வீட்டின் விலையுடன் உள்ளடக்கியதாக இருக்கும். ஆனால் பலருக்கும் இது நன்மையாகக்கூட அமையலாம். அதாவது தமக்குப் பிடித்தமான நவீன கருவிகளை வாங்க இதுதான் அருமையான சந்தர்ப்பம் என்ற சாதகமான நிலையையும் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

புதிய வீடுகளில் சாளர திரைச் சீலைக்கான செலவு (window coverings) மேலதிகச் செலவாக அமையும். ஆனால் பிடிக்காத வர்ணங்களில் பல காலம் வருத்தத்துடன் காலம் கழிப்பதைவிட தமக்குப் பிடித்த வர்ணங்களையும் வடிவங்களையும் கொண்டதிரைச் சீலைகளைப் போடமுடியும் என்ற ஒரு நன்மையுள்ள பக்கத்தையும் பார்க்க வேண்டி உள்ளது.

புதிய வீடுகள் கட்டம் கட்டமாக புதிய இடங்களில் கட்டப்படுவதால் ஆரம்பத்தில் ஒரு சில ஆண்டுகளுக்கு பல வித இடர்களைச் சந்திக்கவேண்டி இருக்கும். கடைகள், பாடசா

லைகள், போக்குவரத்து வசதி என்பன அபிவிருத்தி செய்யப் பட காலம் எடுக்கும். தெருக்களும், சுற்றம் சூழலும் சகதி நிறைந்ததாகக் காணப்படலாம். சில ஆண்டுகள் கழித்தே சகல வசதிகளும் கொண்ட சுற்றுச் சூழலையும், சேவைகளை யும் எதிர்பார்க்கமுடியும்.

பெரும்பாலும் புதிய வீடுகளில், உள்ளகப் பகுதிகள் வசிக் கக் கூடிய நிலைக்கு வந்ததும் அவை உரிமையாளர்களுக் குக் கையளிக்கப்பட்டுவிடும். அரைகுறை வேலைகள் எல் லாம் உரிமையாளர்கள் வீட்டிற்குள் குடியேறிய பின்னரே செய்யப்படும். இதனால் பலவித அசௌகரியங்களும், அந்த ரங்கமற்ற நிலையும் காணப்படும். இது மட்டுமன்றி பின்வ ளவு, முன்வளவு சமப்படுத்தல், புற்றரை போடுதல், வண்டிப் பாதை அமைத்தல் போன்ற பலவிதமான வெளிப்புற வேலை களும் உடனடியாகச் செய்யப்படுவதில்லை. 6 மாதம், ஒரு வருடம் எனக் காலம் கடந்தே இத்தகைய வேலைகள் எல் லாம் புதிய வீடுகளில் செய்யப்படும்.

ஒன்றை இழந்துதான் இன்னொன்றைப் பெறலாம் என்ற கூற் றிற்கமைய சில இடர் பாடுகளைச் சகிக்கும் மனநிலை இருந்தால் மட்டுமே புதிய வீடுகளால் ஏற்படும் நன்மைகளை அனுபவிக்கமுடியும்.

## பழையவீடுகள்:

### பழைய வீடுகள் வாங்குகின்றபோது ஏற்படக்கூடிய இடர்பாடுகள்:

தெரிவுகள் மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கும். அதாவது சந் தைக்கு வந்தவற்றுள் ஒன்றைத்தான் தெரிவு செய்யமுடியும். வீட்டின் அமைப்புகளில் பல வசதியீனங்கள் காணப்படும். காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்படும், ஆராய்ச்சிகளின் அடிப்படையில் நுகர்வோரின் தேவையையும், பயன்பாட்டை யும் கருத்திற்கொண்டு வீட்டின் அமைப்புகள் காலத்திற்கும் காலம் மாற்றப்படுகின்றன. உதாரணமாக சமையலறை, இருக்கையறை (Family Room) என்பவற்றில் செலவிடும் நேரம் அதிகமாக இருப்பதால் புதிய வீடுகளில் அவை பெரி தாக இருக்கும். அதுமட்டுமன்றி பிரதான தளத்தில் சமைய லறை சாப்பாட்டறை, இருக்கையறை என்பன தனியறைகளா கப் பிரிக்கப்படாது திறந்த அமைப்பாக (Open Concept) இருப்பது பலரையும் கவர்ந்திருப்பதாக ஆராய்சிகள் கூறு கின்றன. எனவே பழைய வீடுகளில் புதிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் தன்மை அரிது எனக் கூறலாம்.

வீட்டில் பாரிய திருத்த வேலைகளைப் சந்திக்க வேண்டி இருக்கும். உரிமையாளர்களின் வீட்டுப் பராமரிப்புக்கு ஏற்ப ஒரு வருட வயதுடைய வீடுகளில்கூட பலவித திருத்த வேலைகளைச் சந்திக்க வேண்டி ஏற்படலாம். குறிப்பாக 10 வருடத்திற்கு மேற்பட்ட வீடுகளில் திருத்த வேலைகள் அதிக மாக இருக்கும் வாய்ப்பு உண்டு. அவற்றிலும் குறிப்பாக ஒரு வீட்டின் வயது 15-20 ஆண்டுகளைச் கடக்கும் பட்சத்தில் பாரிய அளவிலான திருத்த வேலைகளையும் மாற்றீடு வேலைகளையும் செய்ய வேண்டிய தேவை இருக்கும். குறிப் பாக கூரை, சாளரங்கள், இயந்திர உபகரணங்கள் என்பன தமது இளைப்பாறும் நிலையை அடைவது இயல்பானது. எனவே, பழைய வீடுகள் வாங்கிய பின்னர் ஒரு தொகைப் பணத்தைப் பராமரிப்புச் செலவுக்காக ஒதுக்க வேண்டியது தவிர்க்கமுடியாதது.

வீட்டின் அமைப்பு, வசதிகள், தளங்களின் தன்மை, வர்ணங் கள் போன்ற பல கோணங்களிலும் பார்த்தால் ஒவ்வொரும் தங்களின் விருப்பங்களையும் தேவையையும் இருப்பதற் கேற்ப மாற்றவேண்டியதாகவோ அல்லது விட்டுக்கொடுக்க வேண்டியதாகவோ இருக்கும். அல்லது பாரிய மாற்றங்க ளைச் செய்ய முற்பட்டால் பாரிய செலவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

வீட்டின் பராமரிப்புச் செலவும் மாதாந்தக் கட்டணங்களும் பழைய வீடுகளில் அதிகரித்துக் காணப்படும். 'High Efficiency'-ன் தன்மை அரிதாக அல்லது குறைவாக இருப்பதே இதற்குக் காரணம் ஆகும்.

பிறர் விட்டுச்செல்லும் அழுக்குகளை நாங்கள் சுத்தம் செய் வதா? என்பது பலருக்கும் இருக்கும் ஒரு சங்கடமான அம்ச மாகக் காணப்படுகிறது.

**நன்மைகள்:**

பழைய வீடுகள் பரந்த காணிகளில் கட்டப்பட்டிருபதற்கான வாய்ப்பு உண்டு. பரந்த காணிகளில் பற்றுள்ளவர்கள் பலர் எம்மவர் மத்தியில் உள்ளனர். அதேவேளை பரந்த காணியை பராமரிப்பது பலருக்கும் ஒரு மேலதிக வேலைப்பழுவாகவும் காணப்படலாம். எது எப்படி இருப்பினும் பெரும்பாலான புதிய வீடுகளில் முன்வளவு, பின்வளவு என்பன சிறிய அள விலேயே காணப்படும்.

சுற்றம் சூழலும், வசதிகளும் அபிவிருத்தி அடைந்த நிலை யில் இருக்கும். கடைகள், பாடசாலை போக்குவரத்து என் பன ஏற்கனவே நல்ல நிலையில் இருக்கும்.

அயலவர் எப்படியானவர்கள், சுற்றம் சூழல் எப்படியானது என்பதை ஓரளவு அனுமானிக்கலாம்.

எனவே சகலதையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து ஏறத்தாள 5 ஆண்டுகள் பழைமை வாய்ந்த வீடு, நல்லமுறையில் பராம ரிக்கப்பட்டதாகவும் அதேவேளை வாங்குபவர்களின் பெரும் பாலான தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய் யக்கூடியதாகவும், ஏற்ற முறையில் தரமுயர்த்தப்பட்டதாகவும் இருந்தால் அவற்றை வாங்குகின்ற போது அதிக பலனை யும் அடையலாம், பல சிரமங்களையும் தவிர்க்கலாம். ஒருவ ரது விருப்பத்தினை 100% பூர்த்தி செய்யக்கூடிய வீடுகளை எங்கேயும் காண்பது அரிது. ஆனால், சிறிது செலவில் அவற்றை ஓரளவு பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தால் அதுவே போதுமானது.

போதும் என்றிருப்பதா? அல்லது தேடலைத் தொடர்வதா? முடிவு உங்கள் கைகளில்...



velasubramaniam@thaiveedu.com

# முன்னோரின் விடுதலையும் முத்துராஜாவும்

- சண்முகம் வெற்றிவேல்

**வா**லில்லாக் குரங்கிலிருந்து கூர்ப்படைந்து மனிதர் தோன்றினர் என்பது வரலாறு. ஆதிமனிதர் வேட்டையாடிக் காட்டில் பிழைத்தனர், விலங்குகளைப் போலவும் வாழ்ந்தனர், கைகளையும் கால்களாகவே பாவித்தனர், தகவுறு சான்றுகளாக அதற்குரிய வரைபடங்களைக் கொண்ட நூல்கள் இன்றும் கிடைக்கின்றன. மேலும் வலுச்சேர்க்கும் வகையில் போதைக்கு இலக்கான சிலர் இன்றும் வீடு திரும்பும்போது நாலுகாலில் வருவதுவும் நடைமுறையில் உண்டு. இக்கட்டுரை சமுதாயப் பார்வையையும் நாட்டு நடப்பையும் ஒருங்குசேர் உளவியல் பார்வைக்கு உட்படுத்துகிறது. சுட்டி ஒருவரைச் சூழுரைக்கவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

## விடுதலை:

நம்முன்னோர்களான குரங்குகளுக்கு விடுதலை கிடைத்துள்ளது. காலனிய காலத்தில் மனிதர்கள் கூட விற்பனைப் பண்டங்களாக ஏற்றுமதி இறக்குமதி செய்யப்பட்டதைக் கியூபாக் கரும்புத் தோட்டமும், இலங்கைத் தேயிலை இறப்பர் தோட்டங்களும் கூறாநிற்கும். நான்கு நூற்றாண்டு காலம் ஓடி உருண்டதன் பின்பும் 'பழையகுருடி கதவைத் திறவடி' என்பதற்கொப்ப நம் மூதாதையரை ஏற்றுமதி செய்யத் துணிந்தமை சரியல்ல என உணர்ந்தது நம்நாடு. ஆரசியல்வாதிகளுக்குப் புரியாத அதர்மத்தைத் தொட்டுக்காட்டித் தடுத்தாண்டுள்ளது தர்மத்தின்பாற்பட்ட நீதிமன்றம்.

*'நிலையஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்,*
*கொல்லாமை சூழ்வான் தலை'*

- குறள்: 325.


## பரிசும் பரிகாரமும் முத்துராஜாவும்:

முத்துராஜா என்பது குடைநிழலிருந்த குஞ்சரத்தையே குறிக்கும். இரண்டு கால் மனிதர்களையல்ல. அண்மைக்கால முகநூல் செய்தியின்படி முத்துராஜா என்னும் பெயருடைய யானை, ஒரு பரிசுப் பொருளாகத் தாய்வான் அரசால் இலங்கை அரசுக்கு உவந்தளிக்கப்பட்டுள்ளது. அன்று தொடக்கம் அது தெஹிவளை அருங்காட்சியகத்திற்கு அலங்கார அணிசேர்த்திருக்கிறது. சைவ மக்களின் மத நம்பிக்கையைப் பொறுத்தவரையில் இத்தும்பிக்கையான் இன்றித் துரும்பும் அசையாது. பௌத்தர்களுக்கும் இப்பெருவயிறன் இல்லையேல் பெரஹரா சோபிக்காது.

முத்துராஜா நோய்வாய்ப்பட்டது ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல என்பது தாய்வானின் தர்க்கபூர்வமான வாதாட்டமாகும். எதிர்காலத்தில் எந்த ஒரு நாட்டிற்கும் உயிருள்ள ஜீவன்களைப் பரிசுப் பொருளாக உவந்தளிக்கப் போவதில்லை எனத் தாய்வான் திடசங்கற்பம் பூண்டுள்ளது. தவிர, பராமரிப்புப் போதாதென்ற குறையையும் பரிந்துரைக்கிறது தாய்வான்.

'கழுதை தேய்ந்து கட்டெறும்பு போலாகிவிட்ட முத்துரா-ஜாவை' தாய்வான் தனிவிமானம் அனுப்பித் தத்தெடுத்துக் கொண்டது. பசிப்பிணி மேலிடப் பலமனிதர் மாண்டதையும், முடிக்குரியவர்களை வீட்டுக்கு விரட்டியதையும் தாய்வான் எண்ணிப் பார்க்கவில்லைப் போலும். பசிவந்திடப் பத்தும் பறந்து போகும் என்பதுதானே பழமொழி. இந்நிலையில் முத்துராஜா எலும்பும் தோலுமாகக் காட்சி தந்ததை ஆட்சியிலிருந்தோர் கண்டுகொள்ளவில்லை என்பது புதினமல்ல. இருப்பினும் மிருகத்தின் மாட்சியையும், உயிர்ம நேயத்தையும் மதிக்காத மனிதருக்கும் மீட்சி இல்லை என்பதுவும் மனங்கொள்ளத் தக்கது.

யானை, புலி, கங்காரு இவை போன்ற மிருகங்கள் இல்லையேல் அரசுகளுக்கும் இலாஞ்சனைக்குக் கூடத் தட்டுப்பாடு உண்டு போல் தெரிகிறது. தமிழர், சிங்களவர்களுக்கு மாத்திரமல்ல, சில உலக வல்லரசுகளுக்கும் தேசியக் கொடிகளாக, கட்சிச் சின்னமாக, இன்னபிற தேசிய அடையாளங்களாக, என்றிப்படி விலங்குகளின் வகிபாகம் விலக்குந் தரத்தவை அல்ல என்னும் எடுகோள் வைரலாகி வருகிறது.



மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களிலும், பொன்னியின் செல்வன் போன்ற வரலாற்று வெகுஜனத் தொடர்புச் சாதனங்களிலும் யானைகள், குதிரைகளின் வகிபாகம் குறைத்து மதிப்பிடத் தக்கதல்ல. துட்டகாமினி, எல்லாளனுக்கு இடையிலான போரிலும் கண்டுலன், மற்றும் மகாபர்வதத்தின் பங்களிப்பைச் சிங்களவரும் ஈழத்தமிழரும் எளிதில் மறப்பதற்கில்லை.

அந்த இரு இராஜாக்களின் தனிப்பட்ட போரின் பெறுபேறு இரு இனத்திற்கே உரிய பெறுபேறாகக் கொள்ளலாமா என்னும் வாதப் பிரதிவாதங்கள் இன்றும் தீர்ந்தபாடில்லை. அது ஒருபுறமிருக்கப் போர் எங்ஙனம் கைமுனுவால் வெற்றி கொள்ளப்பட்டது? என்ற விவாதமும் ஏககாலத்தில் எழவே செய்கிறது.

எழுபத்தாறு வயது எல்லாளனுக்கும், இருபது வயதுத் துட்டகாமினிக்கும் மூண்டது போர், அது யானை மீதேறிப் புரிந்த போர், வெற்றி தோல்விகளை எட்டமுடியாமல் நீள்நெடுநேரமாகத் தொடர்ந்து கொண்டிருந்த போர், மன்னர்களுக்கு ஈடிணையாகக் குஞ்சரங்களும் யுத்த தந்திரங்களைக் கனகச்சிதமாகக் கடைப்பிடித்த போர். கண்டுலன் என்பது கைமுணுவினுடையது, மகாபர்வதம் என்பது எல்லாளனுடையது.

போரின் போக்கைப் புரிந்துகொண்ட கைமுணு யுத்த தர்மத்தை மீற எண்ணுகிறார். தன்மீதிருந்த துணியொன்றை வாளிலே சுற்றி மகாபர்வதத்தின் கண்களை மூடும்வண்ணம் வீசுகிறார். அதுவரை எதிரியின் வாள்வீச்சுக்குத் தகுந்தபடி நிலையெடுத்தும், அடிமான வெட்டுவெட்டியும், உயர்ந்தும் தாழ்ந்தும் தன்னையும் தன் எஜமானையும் காப்பாற்றி, எதிரியின் உயிர்குடிக்கப் போராடிய மகாபர்வதம் கண்பார்வை இழந்து நிலை தடுமாறுகிறது. அதற்குக் களயதார்த்தம் காட்சியில் இல்லை. கண்ணிழந்த மகாபர்வதக் குஞ்சரத்தைப் பதம் பார்த்துக் காவியம் படைக்கக் கண்டுலன் முன்னேறிப் பாய்ந்து தாக்குகிறது.

அதுவரை கண்டுலனாலும் மகாபர்வதத்தை வீழ்த்த முடியவில்லை. கைமுணுவாலும் எல்லாளனை வீழ்த்த முடியவில்லை. கண்ணிழந்த பர்வதம் பக்குவிட்டுப் பாடுன்றி மண்ணில் சாய்கிறது. சந்தர்ப்பத்தைத் தக்கபடி பாவித்து எல்லாளனின் கழுத்தை இரு கூறாக்குகிறார் கைமுணு. இதுவே ஈழத்தமிழர்தம் தோல்வியின் தோற்றுவாயாக இன்றுவரை கருதப்படுகிறது.

மகாபாரதத்திலும் ‘அசுவத்தாமா என்ற யானை இறந்தது மெய்யே’ என்று சொல்லவேண்டிய தருமர், யானை என்ற சொல்லைத் தனக்கு மட்டும் கேட்கத் தக்கதாகத் தாழ்த்திக் கூறி, ஏனைய சொற்களை உரத்துச் சொல்லி பாண்டவர்களின் வெற்றிக்கு வழிவகுக்கிறார். அங்கே தருமர் பொய் சொல்கிறார், போரும் திருப்புமுனை எடுக்கிறது. யானை இறந்து கிடக்கிறது. எது எப்படியோ முத்துராஜா தன் தாய் நாடான தாய்லாந்திற்குத் திரும்பித் தப்பிக்கொண்டது என்பது சமகால வரலாறு. விமானத்திற்குக் கோடைகாலக் கடுங்கூலி கொடுத்து மிருகத்தையே மீட்டெடுத்த தாய்மை உள்ளங்கொண்ட தாய்லாந்தைப் பாராட்டுதல் தகும்.

மணிமேகலையில் திருமணமாகாத சாலினி நடை பாதையிலேயே குழந்தை ஒன்றைப் பிரசவிக்கிறாள். அவமானத்திற்கு அஞ்சித் தன் குழந்தையைத் தோட்டம் ஒன்றிலே அநாதரவாகக் கைவிட்டுச் செல்கிறாள். குழந்தையின் அழுகுரலைக் கேட்ட ஒரு பசு பாலூட்டிக் காவல் காத்து வளர்த்துக்

கொண்டிருக்க, அவ்வழியால் வந்த இளம்பூதி என்னும் பிள்ளைக்குத் தவமிருந்த பிராமணர் ஒருவர் எடுத்து வளர்க்கிறார். பசு பாலூட்டி வளர்த்ததால் ஆபுத்திரன் என்ற பெயரும் குழந்தைக்கு வழங்கலாயிற்று. மேலும்,

'ஆனைவளர்த்த வானம்பாடி' எனவொரு திரைப்படம் பார்த்ததுண்டு. அதிலே தொட்டிலில் போட்டிருந்த தாயில்லாக் குழந்தை ஒன்று. அழும்போது தொட்டில் ஓரத்தில் வளர்ப்பு வானரம் ஏறியிருந்து கொண்டு இரண்டு கைகளாலும் தாளம் போடும். வளர்ப்பு யானை தன் தும்பிக்கையால் தொட்டில் கயிற்றை இழுத்து ஆட்டும். அருகிருக்கும் இராகவன் 'கண்ணே வண்ணப் பசுங்கிளியே, கண்ணின் பாவையே கண்ணூ...றங்...காயோ' எனத் தாலாட்டுவார். குழந்தையும் அமைதியாகத் தூங்கும். இது இப்படியிருக்க,

ஈழத்தமிழர்கள் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக அனுபவித்த யுத்த வேதனை என்பது சொல்லுந்தரத்தன்று. அதற்கு ஒப்பான வேதனையை அவர்தம் வளர்ப்புப் பிராணிகளும் அனுபவித்துள்ளன என்பது மாறா வடுவாகும். தென்னிலங்கையில் வாழ்ந்த முத்துராஜாவின் மூச்சுக்கு முடிவுகட்ட வந்த பசிப்பிணியோ பராமரிப்புக் குறைபாடோ அல்ல, யுத்தப் பிராந்தியத்தில் அகப்பட்ட வளர்ப்புப் பிராணிகளுக்கு நேர்ந்த கதி என்பது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

எருமை தொடர்பிலும் ஓரிரு நிமிடங்கள் எண்ணுதல் கடன். சைவ பக்தர்களுக்கு எருமை இயமனின் வாகனம். உயிரைக் காவுகொள்ள வரும் யமதர்மராஜனுக்கு ஊன்றுகோலைப் போன்றது இந்த எருமை. தவிர,

தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் ஊட்டிக்கு அருகாமையில் உள்ளது முத்துநாடு. அங்கே தோடர்கள் என்ற பழங்குடிமக்கள் வாழ்கிறார்கள். இவர்கள் தங்களது குடும்ப உறுப்பினராகவும் விஷேட தினங்களில் கடவுளாகவும் எருமையை மதிக்கிறார்கள்.

யமதர்மராஜனின் அலுக்கோசுப் பணியைப் பொறுப்பேற்று நடத்தும் இயமன் என்றென்றும் எருமைக்குக் கடமைப் பட்டுள்ளான்.

## நிறைவாக:

வளர்ப்புப் பிராணிகளில் குரங்கு, யானை, எருமை என்பனவற்றையும் அவற்றின் சுபாவங்களையும், உயிர்மநேய உளவியல் அடிப்படையில் பார்த்தோம். வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்து இன்றுவரை மனிதருக்கும் இவற்றிற்கான இடையூடாட்டங்களையும் கவனித்தோம். அவை மனிதரால் எதிர் கொள்ளும் அசௌகரியங்களையும் அவதானித்தோம். ஆனால் வளர்ப்புப் பிராணிகளில் அதி உன்னதமான நாய் பற்றியும் நாலு வார்த்தை பேசாவிடில் 'நன்றிகெட்ட மனிதர்களிலும் நாய்கள் மேலடா' என்னும் திரைப்படப் பாடலுக்கு வலுச்சேர்ப்பதாய் அமைந்துவிடும்.

'யானை அனையவர் நண்பு ஒரீஇ, நாயனையார் கேண்மை தழீஇக் கொளல் வேண்டும். யானை அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல் மெய்யதா வால்குழைக்கும் நாய்' அப்படியானால் ஆனை அடங்குவது அங்குசக் கருவிக்கேயாம், அன்புக்கல்ல என்பது பெறப்படுகிறது. ஆனால் நாய், எசமானால் எறிந்த வேல் அதன் உடலைக் குருதியாறாக்கும் போதும், எசமானை நோக்கி வாலாட்டும் எனில், அதன் நன்றி உள்ளத்தையும், எசமான் விசுவாசத்தையும் வாக்னர் குழுவும், இராஜத் துரோகிகளும் எப்படிப் பார்ப்பார்கள் என்பது ஆய்வுக்குரியது.

முதன்முதல் விண்வெளியைக் கண்ட வீரரும் லைகா என அழைக்கப்படும் இந்த நன்றியின்பாற்பட்ட ரஷ்யாவின் காவல்காரனே என்பது உலகறிந்த விடயம். ஆதலால் விற்பனைப் பட்டியலில் இது இடம்பிடிக்காதென நம்பலாம்.

நவகாலனித்துவத்தில் மிருகங்களின் நிலைமட்டுமல்ல மனிதர்கள் நிலையும் மனக்கவலை அளிப்பதாகவே இருக்கிறது. உக்கிரேனின் உக்கிர யுத்தம் உணர்த்துவதென்ன? ஆண்டாண்டு காலமதாக ஆபுகானிஸ்த்தானில் தொடரும் அவலம் காட்டுவதென்ன. ஏன் எங்கள் மாவிலாறு தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை நடந்ததென்ன?

ஜீவகாருண்யம், உயிர்மநேயம், மனிதநேயம் எல்லாமே ஏதோவொரு உள்நோக்கம் கொண்டதுதான். இல்லையேல் ரஷ்ய உக்கிரேன் போரில் டொல்பின்கள் கடல் கண்ணிவெடிகளைத் தாங்கிப் போராட வேண்டிய தேவை எழுமா?

செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், மனிதநேயப் பணியாளர்கள், மற்றும் சர்வதேச சமூகப் பணியாளர்கள் எல்லோருமே முள்ளிவாய்க்கால் போரின்போது மக்களை அநாதரவாக்கிவிட்டுத் தாம் மட்டும் ஓடித் தப்பினார்கள். மக்கள் 'தங்களைத் தனித்து விடவேண்டாம்' என இருகரம் கூப்பி இறைஞ்சினார்கள். ஆனாலும் அந்த அமைப்புகளும், ஐ.நா-வும் அகலவிலகி நின்று அமைதி காத்தார்கள். இழப்பதற்கு இனி ஒன்றும் இல்லை என ஈழத்தமிழினம் உலகெங்கும் கண்ணீர் வடித்தபோது, அது தண்ணீரில் மீனழுதால் கண்ணீரை யாரறிவார் எனக் காணாதுவிடப்பட்டது.

கொரோனா போன்ற உலகத் தொற்றின்போது ஒன்றுக்கொன்று பரஸ்ப்பரம் உதவிய உலக வல்லரசுகளை என்றென்றும் பாராட்டுதல் தகும். அழிவுதரும் இரசாயன ஆயுதங்களையும், கொத்துக் குண்டுகளையும் போரிடும் நாடுகளுக்கு வாரிவழங்கிப் புதினம் பார்க்கும் பொதுப்புத்தி புன்மையையே புகுத்திவிடும். 'வாழ்வின் கணக்குத் தெரியாமல் காசைத் தேடிப் பூட்டுது, ஆனால் காதோரம் நரைத்த முடி கதைமுடிவைக் காட்டுது'. இந்தப் பாடல் வரிகளை அரசாள்வோர் உள்ளங்கள் உள்வாங்க வேண்டிய நேரமிது என நம்பலாம்.



vettivelu.s@thaiveedu.com

# ஆள்பாதி...

- வேதநாயகன் தபேந்திரன்

வெள்ளைக்காரனது நாடு குளிர்நாடு. காலுக்குள்ளால் குளிர் போகக் கூடாது என்பதற்காக அவன் சப்பாத்தைப் போட்டான். நாங்கள் நாகரிகம் என்று சொல்லிச் சப்பாத்துப் போடுகிறோம்.

இப்படியொரு கருத்து எம்மிடையே உண்டு.

ஆனால் சப்பாத்துப் போட்டுக் கொண்டு ஒருவர் வரும்போது ஒரு கம்பீரம் இருக்கும். ஒரு ஸ்மார்ட் இருக்கும். சப்பாத்துப் போடாவிட்டால் ஏதோ ஒன்று குறைந்தது போன்ற உணர்வு இருக்கும். சப்பாத்துப் போட்டால் தனி ஒரு மரியாதை இருக்கும். சென்ற இடங்களில் கௌரவம் கிடைக்கும்.

இப்படியொரு கருத்தும் உண்டு.

நாகரிகம், கம்பீரம், ஸ்மார்ட், மரியாதை, கௌரவம், அழகு என்பது எல்லாம் அடிமைப் புத்தியின் வெளிப்பாடு என்று கூறுபவர்களும் உண்டு.

ஆள்பாதி ஆடைபாதி என எமது முன்னோர்கள் சொன்னார்கள்.

சப்பாத்துக்கும் எமக்குமான உறவு வெள்ளையர்களின் காலனி ஆட்சிக் காலத்திலிருந்தே தொடங்குகிறது.

வெள்ளையர்களிடம் உத்தியோகம் பார்த்த கறுப்புத் துரைமார் சப்பாத்து அணிந்தார்கள். அக்காலத்துச் சப்பாத்து மிருகங்களின் தோலினால் செய்யப்பட்டது. மிகவும் உறுதியானது பல வருடங்கள் பாவிக்க முடிந்தது.

எமது நாட்டின் மொத்த சனத்தொகையில் மிகச் சிறிய ஒரு தொகையினரே சப்பாத்து அணிந்தார்கள்.

பாடசாலைக் காலத்திலிருந்தே சப்பாத்து அணிபவர்கள் ஸ்மார்ட்டாக நடந்து செல்வார்கள். வயது வந்து வளர்ந்த பின்பாகச் சப்பாத்து அணிபவர்கள் ஒரு வகையாக நெளிந்து வளைந்து நடப்பார்கள்.

எமது காலத்தில் பாடசாலைகளில் செருப்பு அணிந்து செல்வதற்கே வழி இல்லாதவர்கள் நிறையப் பேர் இருந்தார்கள். சுடுமண்ணில், தார் வீதியில் வெறும் காலுடன் நடந்து பாடசாலை செல்வோரைப் பரவலாகக் காண முடிந்தது.

எமக்கு முந்திய தலைமுறையில் மிகப் பெரும்பாலானோர் செருப்புக் காணாத தலைமுறை தான்.

ஆனால், அக்காலத்திலும் எக்காலத்திலும் ஆங்கிலேயப் பாரம்பரியம் வழிவந்த கிறிஸ்தவப் பாடசாலைகளின் மாணவர்கள் சப்பாத்து அணிதல், ரை கட்டி 'ரிப்ரொப்'பாகச் செல்லுதல் இருந்தது. இன்றும் இருக்கின்றது.

கல்வி, பொருளாதாரம் இரண்டிலும் மேம்பட்டவர்களையும், சமயப் பின்னணியையும் மட்டும் பார்த்து அப்பாடசாலைகள் உள்வாங்கின.

வடமராட்சி வதிரிக் கிராமத்தவர்கள் சப்பாத்து, செருப்பு உற்பத்தியில் பரம்பரைத் திறமை வாய்ந்தவர்களாக இருக்கின்றனர்.

நாட்டின் தலைநகரம் கொழும்பு உட்படப் பல இடங்களில் இவர்களது சப்பாத்துத் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் விற்பனை நிலையங்களும் முன்னாளில் இருந்தன. இந்நாளில் பணமுதலைகளாக உள்ள பல்தேசியக் கம்பனிகளது விளம்பரத்திற்கு முன்பாக வதிரிப் பாதணி உற்பத்தியாளர்களால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

அத்துடன் அவர்களது கிராமங்களில் தோன்றிய இளைய தலைமுறையினர் சப்பாத்துச் செருப்புத் தயாரிக்கும் பரம்பரைத் தொழிலில் ஈடுபடவும் விரும்பவில்லை.

உள்ளூர் உற்பத்திகளை விட இறக்குமதிப் பொருள்கள் மீதான இலங்கையரின் மோகம் அதிகரித்தமையாலும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் தொழில்கள் வீழ்ச்சி அடைந்தன.

பாட்டா எனும் பல்தேசியக் கம்பனியின் காலணி விற்பனை நிலையங்கள் நாடெங்கும் இருக்கின்றன. இவர்களது விலையிடலில் ரூபாவுடன் சேர்த்துத் தொண்ணூறு சதம் விலையிடப்பட்டிருக்கும்.

பின்னாளில் வேறுபல பல்தேசியக் கம்பனிகள் நாட்டில் காலூன்றிவிட்டன.

விடுதலை இயக்கங்கள் தமிழர் பகுதியில் காலூன்றிய போது அதில் இணைந்து போராளியாகியவர்கள் பலர் அப்போது தான் முதன்முதலாகச் சப்பாத்து அணிந்தார்கள்.

புலம்பெயர் தேசங்களுக்கு எம்மவர் புலம்பெயர்ந்து சென்ற போது விமானம் ஏறும் போதுதான் முதன்முதலாகச் சப் பாத்து அணிந்தவர்களும் உண்டு. அவர்கள் சென்றடைந்த நாடுகள் பெரும்பாலும் குளிர்நாடுகள் தான். அதனால் வரு டத்தின் பெரும்பகுதி காலமும் சப்பாத்து அணிந்தே இருப் பார்கள்.

சப்பாத்து அணிதலை நாகரிகம் என்றும் காலநிலையிலி ருந்து பாதுகாப்பு என்று கூறினாலும் சப்பாத்து காலைப் பாதுகாக்கும் நல்லதொரு கவசம் எனலாம்.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் யாவரும் சப்பாத்து அணிபவர்களாக இருந்திருந்தால் விசப் பாம்புகளின் கடியி லிருந்து நிறையப்பேர் தப்பி இருப்பார்கள்.

ஏனென்றால் தன்னை மிதித்த மனிதர்களிடமிருந்து தன்னைக் காக்க பாம்பு காலில் தான் கடித்துக் கொள்ளுவது வழக்கம். சப்பாத்து அணிந்து வேலை செய்தால் காலில் காயம் வருவ தற்கான வாய்ப்பும் குறைவு.

புதுச்செருப்புக் கடிக்கும் என்றொரு பழமொழி உண்டு. அது போலப் புதுச்சப்பாத்தும் கடிக்கும்.

அப்போதெல்லாம் இங்கு இரண்டு வகைச் சப்பாத்துகளே அதிகம் பாவனையில் இருந்தது. சப்பாத்தின் முன்புறத்தை நூலால் கட்டி அணியும் சப்பாத்து. அதனைச் சூ என்பார் கள்.

மற்றையது, சப்பாத்தின் முன்புறத்தில் நூல் இருக்காது. கொழுவி, ஒட்டி அல்லது அப்படியே அணிந்தால். அத னைப் பம்ஸ் சூ என்பார்கள்.

போர்க்காலத்தில் வடக்கின் மீது பொருளாதாரத் தடை இருந் தபோது சப்பாத்தும் மட்டுப்படுத்தப்பட்டளவு அனுமதித்தார் கள். முன்னாளில் ஆட்டுத் தோலை ஊர் ஊராகத் திரிந்து வாங்கி விற்கும் சைக்கிள் வியாபாரிகள் இருந்தார்கள். மிரு கங்களது தோல்களால் செய்த சப்பாத்துகள் நீடித்துப் பாவிக்கும். சப்பாத்தில் ஒரு அழகும் இருக்கும்.

பின்னாளில் சப்பாத்து செயற்கைத் தோல், துணி என்பவை மூலமும் செய்யப்பட்டுப் பாவனைக்கு வந்தது. இதில் ஒரு வித மினுமினுப்பு இருக்கும். ஆனால் மிக விரைவாகத் தேய் வும் கிழிவும் அடையும்.

நெய்த நூலை விடத் தைத்த நூல்களே அதிகம் என்னும் கவிதை மூலமாக அல்வாயூர் கவிஞர் செல்லையா வறு மையை உணர்வுபூர்வமாகக் காட்டினார். அது போலச் சப் பாத்தையும் கிழியக் கிழிய நூல்களால் தைத்துப் போடு வோர் இன்றும் உள்ளனர்.

சப்பாத்து எமது காலநிலைக்கு ஒவ்வாத ஒரு அணிகலன் என்று கருத்துக் கூறுவோர் உண்டு. ஆனால் இந்நாளில் அனைத்துப் பாடசாலைகளும் தமது மாணவர்கள் கட்டாயமா கச் சப்பாத்து அணிந்து வரல் வேண்டுமென்ற நடைமுறை யைப் பாடசாலைகள் கடைப்பிடிக்கின்றன.

இதனை விமர்சிக்கும் சமூகவியலாளர்களும் உள்ளனர்.

வறிய மாணவர்களைத் தெரிந்தெடுத்துச் சப்பாத்து வாங்கிக் கொடுக்கும் தனவந்தர்களும் உண்டு.

கிடைத்த சப்பாத்துகளை நல்ல வண்ணம் பாவிப்போரும் உண்டு. ஓசி தானே என்று ஏனோ தானோவெனப் பாவித்துக் குறைந்த காலத்தில் சேதமாக்கும் பொறுப்பற்றோரும் உண்டு.

தமது பிள்ளைகள் பாவித்து நல்ல நிலையிலுள்ள சப்பாத்து களையும், பாடசாலைச் சீருடைகளையும் வறிய மாணவர்க ளுக்குக் கொடுக்கும் நல்ல மனமுள்ள நடுத்தரக் குடும்ப மனிதர்களும் உண்டு.

மழை பெய்தாலும் சப்பாத்து இல்லாமல் பாடசாலைக்கு வர முடியாதெனச் சட்டம் போடும் திமிர்ச் சட்டம்பிமாரும் உண்டு.

எது எப்படியோ சப்பாத்துச் சீருடை அணிந்து பாடசாலை மாணவர்கள் ரிப்ரொப்பாக வரும்போது ஒருவகை அழகு தெரியும். பாடசாலை மாணவியர் பாவிக்கும் சப்பாத்து இருவ கைப்படும். துணியினால் செய்யப்பட்ட சப்பாத்து ஒரு வகை. பிளாஸ்ரிக்கால் செய்யப்பட்ட சப்பாத்து இன்னொரு வகை.

ஒரு காலத்தில் பாடசாலைக்கு வெறும்காலுடன் படிக்கப் போனார்கள். போட்டிகளில் தெரிவாகி நகரப் பாடசாலைக்கு இறுதிப் போட்டிக்குப் போகும் போது இரவல் வாங்கிச் சப் பாத்துப் போட்டுப் போனதும் உண்டு.

சப்பாத்தை முதன்முதலாகப் போட்டு நடக்கும்போது குனிந்து வளைந்து எக்கித் தக்கி நடந்த சம்பவங்களும் உண்டு. பார்ப்பதற்குச் சுவாரஸ்யமானது என்றாலும் வறுமை யின் கோலம் கவலைக்குரியது.

எமது நாட்டில் தேயிலைத் தோட்டங்கள் உள்ள மலையகப் பிரதேசங்களில் குளிர் ஒரு புறம். அட்டைக்கடி இன்னொரு புறம். ஆதலால் பாடசாலை மாணவர் மட்டுமல்ல யாவரும் சப்பாத்து அணிவது பாதுகாப்பானது.

சப்பாத்து அன்றாடப் பாவனைக்கு ஒரு வகையானதாக உள் ளது. தடகள விளையாட்டுகளுக்கு ஒரு வகை. உதைபந் தாட்டப் போட்டிகளுக்கு இன்னொரு வகை. கிரிக்கெற் விளையாட்டுக்கு இன்னொரு வகை.

பனிகொட்டும் நாடுகளில் குளிர்காலத்திற்கு ஒரு வகைச் சப் பாத்தும் கோடைக் காலத்திற்கு இன்னொரு வகைச் சப்பாத் தும் பாவனைக்கு உண்டு.

சப்பாத்துத் தொடர்பாகச் சொன்ன செய்திகள் இவை. சொல் லாத செய்திகள் இன்னமும் நிறைய உண்டு.

உங்கள் மனதில் இருப்பவற்றை
அசை போட்டுப் பாருங்கள்.



thabendran.v@thaiveedu.com

தாய்வீடு

தாய்வீடு இதழ் நடத்தும்

ஒக்ரோபர்

1

ஞாயிற்றுக்கிழமை



# அரங்கியல் விழா 2023

FLATO MARKHAM THEATRE


171 Town Centre Boulevard
Markham, Ontario


+1 (416) 857-6406

# பொன்னையா விவேகானந்தனின்

# ‘பெயர்வுத் தமிழ்ச்சமூகம் - இருப்பும் இடர்களும்’

## நூல் வெளியீடு






ஒக்ரோபர் 8, 2023

ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணி

தமிழ் இசைக் கலாமன்றம், ஸ்காபரோ

# 11-வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு

**- கி. சுந்தர்ராஜன்**

உலகளாவிய தமிழர்களை ஒருங்கிணைக்கும் பதினோராவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கடந்த ஜூலை 21 முதல் 23 வரை மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் சிறப்



புற நடைபெற்றிருந்தது. மலாய்ப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் ஆயிரத்துக்கு மேற்பட்ட அறிஞர்களும் பேராளர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், ஐரோப்பா, வடஅமெரிக்கா, தென்னாபிரிக்கா, மொறிசியஸ் உள்ளிட்ட பலநாடுகளில் இருந்து வந்தோர் பலரும் இம்மாநாட்டைச் சிறப்பித்திருந்தனர். கணிசமான பிறமொழி அறிஞர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவர்களை விடுத்து, நிறைவு நாளில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான பார்வையாளர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மலேசியப் பிரதமர் மாண்புமிகு டத்தோஸ்ரீ அன்வர் இப்ராகிம் அவர்கள் இந்த மாநாட்டைத் தொடக்கி வைத்தார். அவரோடு அமைச்சரும் மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான மாண்புமிகு சிவகுரு அவர்களும் துணை அமைச்சர் மாண்புமிகு சரஸ்வதி அவர்களும் முன்னாள் மனிதவள அமைச்சர் டத்தோஸ்ரீ சரவணன் அவர்களும் தொடக்க நிகழ்வில் இணைந்து சிறப்பித்தனர்.

இரண்டு நாட்களிலும் 200-க்கும் அதிகமான ஆய்வுக் கட்டுரைகள் படைக்கப்பட்டன. தமிழ் இலக்கிய ஆய்வுகள், தமிழ்க்கல்வி வளர்ச்சி, நிகழ்காலத் தமிழ்மொழி வளர்ச்சி, எதிர்கால மொழி வளர்ச்சி, மொழிசார் அறிவியல் துறைகள், கணினி தொழில்நுட்பத்துறையில் மொழி போன்ற தலைப்புகளில் சிறப்பான ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன.

தமிழறிஞர் தனிநாயகம் அடிகள் அறுபதுகளின் தொடக்கத்தில் தமிழ்மொழி ஆராய்ச்சி மாநாட்டுச் சிந்தனைக்கு வித்திட்டார். அவ்வேளை அவர் மலாய் பல்கலைக்கழகத்தில் பேராசியராகப் பணியாற்றினார். இவருடைய முனைப்பிலும் அவ்வேளை மலேசிய அமைச்சராக இருந்த மூத்த குடிமகனான துன். வி.தி. சம்பந்தன் (திருஞானசம்பந்தன்) அவர்களின் முன்னெடுப்பிலும் முன்னாள் அமைச்சர் மாணிக்கவாசகம் அவர்களின் ஒத்துழைப்பிலும் முதலாவது தமிழாராய்ச்சி






மாநாடு 1966-ல் மலேசியாவில் நடைபெற்றிருந்தது. அன்றைய பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனின் கோட்பாட்டை மொழிந்து நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இந்த உலகத் தமிழாராய்ச்சி மன்றம் தொடங்கிய 1966-ம் ஆண்டு முதல், தற்போது வரை மொத்தம் 11 உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இதுவரை தமிழ்நாட்டில் சென்னை, மதுரை, தஞ்சாவூரிலும், இலங்கை, மலேசியா, அமெரிக்கா, பிரான்ஸ், மற்றும் மொரீசியஸிலும் உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றுள்ளன. 11-வது மாநாடு சாஜா-வில் நடைபெறுவதாகவே திட்டமிட்டிருந்தபோதிலும் தவிர்க்க முடியாத காரணங்களால் அது மலேசியாவுக்கு இடமாற்றப் பட்டிருந்தது. மலேசிய அரசு, தமிழக அரசோடு இணைந்து பெருவிருப்போடும் மகிழ்வோடும் இந்த மாநாட்டை ஏற்று நடத்த இயைந்தமை பெருமகிழ்வுக்குரியது.

நடைபெற்ற இந்த 11 மாநாடுகளில் நான்கு மாநாடுகள் மலேசியாவில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்த மலேசியப் பிரதமர் மாண்பு மிகு அன்வர் இப்ராகிம் அவர்கள் பெருமளவில் கூடியிருந்த தமிழர்களைக் கண்டு மலைத்துப் போனார் என்பதே உண்மை. தொடக்க நாளில் தமிழ்மொழியின் தொன்மையையும் சிறப்பையும் பலரும் உரையாற்றக் கேட்ட அவர், தமிழ் மொழியின் சிறப்பை அறிந்து வியந்ததன் விளைவாக, அந்த அரங்கிலேயே சில அறிவிப்புகளை வெளியிட்டார்.


20 இலட்சம் தமிழர்கள் வாழும் மலேசியாவில் தமிழ்மொழிக் கல்வி மேம்பாட்டுக்காக 50 இலட்சம் ரிங்கிட் வழங்குவதாக அறிவித்தார். அதில் ₹20 இலட்சம் ரிங்கிட்டை 530 தமிழ்ப் பள்ளிகள் வளர்ச்சிக்கும் சீர்திருத்தத்துக்கும் கல்வி மேம்பாட்டுக்கும் ஒதுக்கப்படுமெனவும், 20 இலட்சம் ரிங்கிட்டை யூனிவர்சிட்டியில் படிக்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில் ஒதுக்கப்படும் எனவும், மாநாட்டுச் செலவுக்காக 10 இலட்சம் ரிங்கிட் ஒதுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மலேசியாவில், ஒரு வகுப்பில் குறைந்தளவு 15 மாணவர்கள் இருந்தால் மட்டுமே அவ்வகுப்பில் தமிழ்க் கல்வியைக் கற்றுக்கொடுக்க முடியும். இந்த விதியைத் தளர்த்திய பிரதமர், இனிவரும் காலத்தில் 10 மாணவர்கள் இருந்தாலும் தமிழ் வகுப்புகள் நடத்தலாம் என்ற அறிவிப்பைப் பலத்த கையொலிகளுக்கு நடுவில் அறிவித்தார்.

தமிழ்மொழி மேம்பாடு தொடர்பிலும் அதன் தொன்மையையும் சிறப்பையும் வெளிப்படுத்தும் வகையிலும் மிகச் சிறப்பாக நடைபெற்ற இந்த மாநாடு தமிழ் ஆர்வலர்களுக்குப் பெருந்தீனியாக அமைந்தது. தமிழரல்லாத பிறருக்கும் தமிழ் மொழியின் மேன்மையை எடுத்துச்செல்லும் வகையில் பல் வேறு மொழிகளிலும் படைப்புகள் வெளியிடப்பட்டிருந்தன. அவற்றின் வாயிலாகவே மலேசியப் பிரதமர் தமிழ்மொழியின் மேன்மையை அறிந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாநாட்டுக்கு மலேசிய மக்கள் வழங்கிய பேராதரவு மிகப்பெரியது. அமைப்புகள், ஊடகங்கள், வணிகப்பெருமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பல தரப்பினரும் ஒன்றிணைந்து இயங்கி இதனைப் பெரும் வெற்றிபெறச் செய்திருக்கின்றனர்.

இனிதே நிறைவுற்ற மாநாட்டின் சிறப்புக்கு உதவிய அனைவரும் நன்றியைக் கூறிக்கொள்வோம்.



sundar.raj@thaiveedu.com

# அருபாவில் ஆறு நாட்கள்

- குரு அரவிந்தன்

அருபா என்பது சுற்றுலாப் பயணிகளைக் கவரும் கரீபியன் தீவுகளில் ஒரு சிறிய நாடாக இருக்கின்றது. வெண்மணற் பரப்புக் கடற்கரையோரக் காட்சிகளை ரசிப்பவர்களுக்கும், கடலில் நீச்சலடிக்க விரும்புபவர்களுக்கும் ஏற்ற இடமாக இருக்கும் இத்தீவு, தென்னமெரிக்காவில் உள்ள வெனிசூலா நாட்டின் வடகிழக்குக் கரையில் சுமார் 15 கடல் மைல் தூரத்தில் இருக்கின்றது. குறிப்பாகச் சொன்னால் இந்தியா



விற்கும் இலங்கைக்கும் உள்ள தூரத்தைவிட இத்தூரம் குறைவானது. ரொறன்ரோவில் இருந்து அருபா செல்வதற்குச் சுமார் 2,240 மைல்கள் தெற்கு நோக்கி விமானத்தில் பயணிக்க வேண்டும். இதற்குச் சுமார் ஐந்து மணி நேரம் எடுக்கிறது.

20 மைல் நீளமும் 6 மைல் அகலமும் கொண்ட இத்தீவு சுமார் 70 சதுரமைல் பரப்பளவைக் கொண்டது. மலைகள் இல்லாததால் ஆறுகளும் இங்கே இல்லை. அதிக உயரமான ஜமனோட்டாக் குன்று 618 அடி உயரமாக இருக்கின்றது. அத்திலாந்திக் கடலோரம், அழகிய வெண்மணற் கடற்கரைகளைக் கொண்ட இத்தீவு, கரீபியன் சூறாவளிப் பாதையில் இருந்து விலகி இருப்பதால், இயற்கைச் சீற்றத்தின் பாதிப்பு இங்கு குறைவாகவே இருக்கின்றது. டிசம்பர் தொடக்கம் மார்ச் மாதம் வரை சிறப்பான காலநிலை கொண்டது. சராசரிக் காலநிலை வெப்பமானதாக, 81 பாகை பரனைற்றாகவும், சராசரி மழைவீழ்ச்சி 20 அங்குலமாகவும் இருக்கின்றது. சுருங்கச் சொன்னால் ஊரில் இருந்தது போன்ற காலநிலை இங்கே இருக்கின்றது. கடற்கரைப் பக்கங்க ளில் மட்டும் மாலை நேரத்தில் சற்றுக் குளிர் காற்று வீசியது.

ஐரோப்பிய நாடுகளின் நாடுபிடிக்கும் போட்டிகள் காரணமாக 1499-ம் ஆண்டு தொடக்கம் ஸ்பானியரின் கட்டுப்பாட்டில் இருந்த அருபா, 1636-ம் ஆண்டு ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் வந்தது. அதைத்தொடர்ந்து, 1806-ம் ஆண்டு பிரித்தானியாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. ஆனாலும் 1816-ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தம் காரணமாக அருபா நெதர்லாந்திடம் திரும்பவும் கையளிக்கப்பட்டது. இதன்படி 'கிங்டம் ஆவ் நெதர்லண்ட்' என்ற பெயரின் கீழ் நெதர்லாந்து, அருபா, குறாக்கோ, சென் மார்டின் ஆகிய நாடுகள் கூட்டாக இடம்பெற்றிருந்தன. 19-ம் நூற்றாண்டில் தங்கச் சுரங்கம், பொஸ்பரட் உற்பத்தி, கற்றாளைச் செடி விவசாயம் போன்றவை நடைபெற்றன. 1928-ம் ஆண்டு எண்ணெய் வளம் இங்கு கண்டுபிடிக்கப்பட்டதால், எண்ணெய் சுத்திகரிப்புத் தொழில் ஆரம்பமானது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது, 1942-ம் ஆண்டு ஜெர்மன் படைகளால் இத்தீவு தாக்கப்பட்டது. நெதர்லாந்தின் கூட்டு நாடுகளில் ஒன்றான அருபாவுக்குத் தற்போது சுற்றுலாத்துறை மூலம் வருவாய் கிடைக்கிறது.

இலங்கையைப் போலவே ஒரு காலத்தில் நெதர்லாந்தின் ஆட்சியின் கீழ் இருந்த இத்தீவில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். எண்ணெய் சுத்திகரிப்புச் செலவு அதிகரித்ததால் 1985-ம் ஆண்டு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டது. இச்சிறிய தீவுக்கு வேறு வருமானங்கள் இல்லாததால், சுற்றுலாத் துறையில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். 1986-ம் ஆண்டு சில கட்டுப்பாடுகளுடன் நாடு விடுதலை பெற்றதால், இப்போது முடியாட்சியின் கீழ் நாடாளுமன்ற ஆட்சி நடைபெறுகின்றது. வெளிநாட்டுக் கொள்கைகளையும், நாட்டின் பாதுகாப்பையும் நெதர்லாந்தே இப்பொழுதும் தீர்மானிக்கின்றது.

அருபாவின் முதலாவது பிரதமராகக் கெனி ஈமான் நியமிக்கப்பட்டார். 2017-ம் ஆண்டு முதலாவது பெண் பிரதமராக இவ்லீன் வீவர் நியமிக்கப்பட்டார். உள்ளூர் மக்கள் பேசும் பாபியாமென்ரோ மற்றும் டச்சு மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. இங்குள்ள 68 வீதமான மக்கள் பாபியா-



மென்ரோ மொழியைப் பேசுகிறார்கள். இதைவிட ஆங்கிலம், ஸ்பானிஸ் போன்ற மொழிகளையும் மக்கள் பேசுகிறார்கள். இங்குள்ள மக்களில் 75 வீதமானவர்கள் உரோமன் கத்தோலிக்க மதத்தவர்கள். அருபிய புளோரின் என்ற நாணயம் பாவனையில் இருக்கின்றது. சுற்றுலாப் பயணிகளிடம் இருந்து அமெரிக்க டொலரையும் ஏற்றுக்கொள்கிறார்கள். 18 வயதுக்கு உட்பட்டோர் மதுபானம் அருந்தத் தடை விதிக்கப் பட்டிருக்கின்றது.

சுற்றுலாப் பயணிகளின் தேவை கருதி வடகிழக்கு, தென் மேற்கு என்று இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். வடகிழக்குப் பகுதி வேகமான அலைகள் மற்றும் நீரோட்டம் கொண்டதாகவும், கரையோரம் சிறிய கற்பாறைகளைக் கொண்டதாகவும்



இருக்கின்றது. தென்பகுதி கடற்கரையோரங்கள் வெண் மணற்பரப்பைக் கொண்டிருப்பதால், உலகின் சிறந்த 10 கடற்கரைகளில் அருபா கடற்கரைகளும் ஒன்றாக இருக்கின்றன. நீண்ட அலகுகளைக் கொண்ட பெலிகன் பறவைகள் கடற்கரையில் நீச்சலடிப்பவர்களுக்குப் பயப்படாமல் அவர்களுக்கு அருகே தண்ணீரில் மூழ்கி, மீன்களை வேட்டையாடுவதைக் காணமுடிந்தது. இங்குள்ள ஈக்கிள் பீச், பாம்பீச் போன்றவை பிரபலமானவை. அருபா சுற்றுலாத் துறையினரால் விளம்பரப் படுத்தப்படும் டிவி-டிவி மரம் ஈக்கிள் பீச்சில் தான் லட்சக் கணக்கான சுற்றுலாப் பயணிகளுக்குப் ‘போஸ்’ கொடுத்துக் கொண்டு இருக்கின்றது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அந்த மரத்துடன் நின்று பலரும் புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். நானும் ஆசைக்கு அந்த டிவி-டிவி மரத்துடன் நின்று சில படங்கள் எடுத்துக் கொண்டேன்.

இந்த டிவி-டிவி மரம் போலக் எங்களூர்க் கடற்கரையிலும் கலங்கரைவிளக்கத்திற்குச் சற்றுத் தள்ளிப் பூவரசமரம் ஒன்று தனித்து நின்றது. அதன் நிழலில் மீனவர்கள் ஓய்வெடுப்பதுண்டு. பின்னாளில் நடந்த யுத்த அழிவுக்குள் அதுவும் அகப்பட்டுக் கொண்டது. கள்ளி, கற்றாளை, அலரி, போகன் வில்லா, தென்னை, பனைக்குப் பதிலாகப் பாம்றீ போன்ற வற்றை அருபாவில் காணமுடிந்தது. சுற்றுலாப் பயணிகளில் அதிகமானவர்கள் இஸ்பானிய மொழி பேசுகின்றார்கள். கடலால் சூழப்பட்டிருப்பதால், உடனடிக் கடல் உணவுகளுக்குப் பிரபலமானது.

அருபாவில் உள்ள பிரபலமான உணவகங்களில் உணவருந்த வேண்டும் என்றால், பெயரைக் கொடுத்துவிட்டுக் குறைந்தது அரைமணி நேரமாவது காத்திருக்க வேண்டும். ‘ஸீரோவர்’ என்ற உணவகத்தில் அரைமணிநேரம் வரிசையில் நின்றுதான் இடம்பிடிக்க முடிந்தது. ஸீரோவர் என்றால் டச்சு மொழியில் கடற்கொள்ளையர் என்ற பொருள்படும். நாங்கள் பார்க்கக்கூடியதாகவே உணவை உடனே தயாரித்துச் சுடச்சுடத் தருகின்றார்கள். ஊரிலே சாப்பிட்டது போன்ற மீன்பொரியலும், இறால் பிரட்டலும், ரோஸ் பாணுடன் மீண்டும் சாப்பிட்ட அனுபவம் அங்கே கிடைத்தது. ‘ஸ்பைஸி’ என்று சொன்னால் சற்று உறைப்பாக மிளகாய்த்தூள் கலந்து சுடச்சுடச் சமைத்துத் தருகிறார்கள்.

அருபாவின் மத்திய பகுதியில் அருபாவின் தலைநகரமான ‘ஒரானியெஸ்ரட்’ இருக்கின்றது. இங்குள்ள விமான நிலை

யத்தைக் குயின் பீற்றிக்ஸ் சர்வதேச விமான நிலையம் என்று அழைக்கிறார்கள். நெதர்லாந்தின் ஆட்சியின் கீழ் இருந்த தால் 1980 - 2013-ம் ஆண்டுவரை நெதர்லாந்து அரசியாக இருந்தவரின் பெயரையே விமான நிலையத்திற்கு வைத்தி ருக்கிறார்கள். வருடா வருடம் சராசரி 2.5 மில்லியன் சுற்று



லாப் பயணிகள், சுமார் 9,000 அடி நீளமான ஓடுபாதையைக் கொண்ட இந்த விமான நிலையத்திற்கூடாகப் பயணிக்கிறார் கள். உள்ளூர் விமானச் சேவையான அரூபா எயாலைன்ஸ் பல நாடுகளுக்குமான சேவையில் ஈடுபட்டிருக்கின்றது.

அமெரிக்கா, கனடா, நெதர்லாந்து ஆகிய இடங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகளுக்கான அதிக விமான சேவை கள் நடைபெறுகின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்க விமானப் படையின் கட்டுப்பாட்டுக்குள் இது இருந்தது. இப்பகுதியில் பயணித்த வர்த்தகக் கப்பல்களுக் குப் பாதுகாப்புக் கொடுக்கவும், அருகே உள்ள பனாமாக் கால்வாயைப் பாதுகாக்கவும் இந்த விமானநிலையம் உதவி யாக இருந்தது. இரண்டாம் உலக யுத்தகாலத்தில் 12-வது, 22-வது, 32-வது, 59-வது அமெரிக்க விமானப் படைப்பிரிவு கள் இங்கே நிலை கொண்டிருந்தன.

21 அங்கத்தவர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் எட்டு அங்கத்தவர்கள் மந்திரி சபையில் இடம் பெற்றிருக்கிறார் கள். இத்தீவில் அருபியன்கள் சுமார் 66 வீதமானவர்கள் இருக்கிறார்கள். இதைவிட கொலம்பியன்கள் 9 வீதமானவர் கள், ஒல்லாந்தர் 4 வீதமானவர்கள், டொமினிக்கன் 4 வீதமா னவர்கள், வெனிசூலன் 3 வீதமானவர்கள், மிகுதியானவர்கள் ஏனைய இனத்தவர்கள். இவர்களில் 15 வீதமானவர்கள் ஆபி ரிக்காவில் இருந்து அடிமைகளாகக் கொண்டு வரப்பட்டவர்க ளின் பரம்பரையினராக இருக்கின்றனர்.

அருபாவின் வடமுனையில் ‘கலிபோனியா லைட்கவுஸ்’ என்ற தொரு கலங்கரை விளக்கம் இருக்கின்றது. தெற்கே கொல-ராடோ முனை இருக்கிறது. இதைவிட ஒல்லாந்தரின் பழைய கோட்டை, கோல்ட்மைன், கடலில் மூழ்கடிக்கப்பட்ட கப்பல் என்று சில இடங்களைப் பார்த்துவிட்டு பாம்பீச்சுக்குப் போயி ருந்தேன். யாழ்ப்பாணக் கோட்டை போல ஒல்லாந்தரின் கோட்டை பெரிதாக இருக்கவில்லை. இடிந்து போன கோட் டையை இப்போது திருத்தியிருக்கிறார்கள். ஒல்லாந்தர் பாவித்த இரண்டு பழைய பீரங்கிகள் வாசலில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. கலிபோனியா என்ற கப்பல் இரவிலே இந்த இடத்தில் தரைதட்டியதால் இங்கே 100 அடி உயர மான கலங்கரைவிளக்கம் 1914-ம் ஆண்டு கட்டப்பட்டு மூழ் கிப்போன கப்பலின் பெயர் வைக்கப்பட்டது. தங்கம் தோண் டியெடுத்து முடிந்து விட்டதால், அந்த இடம் கைவிடப்பட்டி ருந்தது. அங்கிருந்த கட்டடமும் பழுதடைந்த நிலையிலேயே இருந்தது.

சுமார் 400 அடி நீளமான ஜெர்மனியின் எஸ்.எஸ். ஆன்ரிர்லா என்ற 1940-ம் ஆண்டு மூழ்கடிக்கப்பட்ட கப்பல் 60 அடி ஆழத்தில் தரை தட்டியிருந்தது. 2-ம் உலக யுத்தத்தின் போது கூட்டுநாடுகள் அந்தக் கப்பலைக் கைப்பற்றி விட லாம் என்ற பயத்தில் ஜெர்மனியால் அந்தக் கப்பல் குண்டு வைத்து மூழ்கடிக்கப்பட்டது. தனியாருக்குச் சொந்தமான நீர் மூழ்கிக் கப்பலில் சென்று தண்ணீருக்கடியில் அதன் சிதைந்த பாகங்களைப் பார்க்க முடிந்தது. மூழ்கடிக்கப்பட்ட அந்தக் கப்பல் தண்ணீருக்கடியில் இப்போது இரண்டாகப் பிளந்துவிட்டது.

தனியாருக்குச் சொந்தமான பண்ணை மிருகங்களைக் கொண்ட மிருகக்காட்சிசாலை ஒன்று இங்கே இருக்கின்றது. அரூபாவின் வரலாற்றை எடுத்துக் காட்டும் அரும்பொருள் காட்சிசாலையும் இங்கே இருக்கின்றது. ‘ஓம் ரெம்பிள் அரூபா’ என்ற பெயரில் இந்து ஆலயம் ஒன்று இங்கே இருக்கின்றது. விரல்விட்டு எண்ணக்கூடிய அளவு இந்துக் களே இங்கு இருக்கின்றார்கள். முக்கியமான சமய விழாக்க ளைக் கொண்டாடுகின்றார்கள். ஒவ்வொரு வருடமும் நவராத் திரி, மகாசிவராத்திரி போன்ற சமய விழாக்களைச் சிறப்பா கக் கொண்டாடுகின்றார்கள். இதைவிட தீபாவளி, சாய்பாபா பிறந்த தினம், குருநாணக் நினைவு தினம் போன்ற கொண் டாட்டங்களும் இங்கே இடம்பெறுகின்றன.

அரூபா ஒரு சிறிய தீவாக இருந்தாலும், சுற்றுலாப் பயணி களை நன்றாக உபசரிக்கின்றார்கள்.

அனேகமானவர்கள் ஆங்கிலத்தில் உரையாடுகின்றார்கள். மிகவும் நட்போடு எல்லோரும் பழகுகின்றார்கள். இங்கே உள்ள வோல்மாட் போல அங்கே இருந்த சுப்பர்மாக்கெட் டில் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்ய முடிந் தது. பொருட்களை இறக்குமதி செய்யவேண்டி இருப்பதால், உணவுப் பொருட்களின் விலை சற்று அதிகமாக இருக்கின் றது. சுற்றுலாப் பயணம் என்று புறப்பட்டால் இதையெல்லாம் எதிர்கொள்ள வேண்டி வரும் என்பது தெரிந்ததுதானே.

**உசாத்துணை:**
• https://en.wikipedia.org/wiki/Aruba



kuruaravindan@thaiveedu.com




# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்


24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You

# சீனாவில் சில நாட்கள்

## சி. நற்குணலிங்கம்



சீனா (China) என்று பொதுவாக அழைக்கப்படும் சீன மக்கள் குடியரசு கிழக்காசியாவில் உள்ள நாடாகும். ஆசியப் பிராந்தியத்தின் பிரதான வல்லாதிக்க நாடாகும். சீனாவின் கிழக்கில் வடகொரியாவும், வடக்கில் மங்கோலியாவும், மேற்கிலும், தென்மேற்கிலும் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, நேபாளம், பூட்டான் நாடுகளும், தெற்கில் மியான்மார், லாவோஸ், நாடுகளும் சூழ உள்ளன. ஆசியாவில் பரப்பளவில் மூன்றாவது பெரிய நாடாகும். உலகளாவிய ரீதியில் சீனா மக்கள் தொகையை அதிகம் கொண்டுள்ள நாடாகும். இதன் தலைநகர் பீஜிங். வர்த்தகத் தலைநகர் ஷாங்காய். ஆட்சி மொழி சீனமொழி (Chinese). பிராந்திய மொழிகள் மொங்கோலியம், திபெத்தியம், உய்குர். இந்நாட்டின் நாணய அலகு யுவான் (Yuan). இதன் பரப்பளவு 9,616,400 ச.கி.மீ. ஆகும். சீனாவின் ஆளும் கட்சியாகக் கம்யூனிஸ்ட்கட்சி காணப்படுகின்றது.

உலகின் மிகப்பழைய நாகரீகங்களில் ஒன்றான பண்டைய சீன நாகரீகம், வட சீனச் சமவெளியூடாகப் பாயும் மஞ்சள் ஆற்றங்கரையில் உருவாகி வளர்ந்தது. 1911-ல் சீனக்குடியரசு உருவாக்கப்பட்டது. சீனா ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிலையான உறுப்புரிமையைக் கொண்டுள்ளது. இது ஒரு அணுவாயுத நாடாக இருப்பதுடன், உலகின் மிகப் பெரிய நிலையான பாதுகாப்புப் படையையும் கொண்டுள்ளது. பாதுகாப்புக்கான செலவீனத்தைப் பொறுத்தவரை சீனா நான்காவது இடத்தை வகிக்கின்றது. அதிகரித்துவரும் வயதானவர்கள் வீதம், விரிவடைந்து வரும் வருமான இடைவெளி, சூழல் தரம் குறைதல் என்பன சீனா எதிர்நோக்கும் சில பிரச்சினைகளாகும்.

இங்கு வாழும் மக்கள் தொகை 137 கோடியாகும். உலகில் சனத்தொகை கூடிய நாடுகளில் இது முதலிடம் வகிக்கிறது. இங்கு வாழும் மக்களில் 93% ஹன் இனத்தவர்கள். பௌத்த மதத்தைப் பின்பற்றுவோரும் உளர். சீனமக்கள் கடவுள் நம்பிக்கை குறைவானவர்களாகக் காணப்படுகின்றனர். சீனமொழி இந் நாட்டில் பேசப்படும் மொழியும், அதிகாரபூர்வ மொழியுமாகும். இம்மொழியை அடிப்படையாகக் கொண்ட பல வட்டார மொழிகள் சீனாவில் பேசப்படுகின்றது. இதில் ஒன்றான மாண்டரின் சீனமொழி உலகில் அதிக மக்கள் பேசும் மொழி என்ற சிறப்பைக் கொண்டுள்ளது. பெரும்பாலான சீனமக்களுக்கு ஆங்கில மொழி தெரியாது. அவர்கள் தமது சொந்த மொழியை மட்டும்தான் பயன்படுத்துகிறார்கள். இதன் தேசிய மலர் திராட்சைப்பூ ஆகும். சீனப் புத்தாண்டு பெரும்பாலும் பெப்ருவரி மாதத்தில் கொண்டாடப்படும். அதகாரபூர்வமாக மூன்று நாட்கள் கொண்டாட்டம் நீடிக்கும். இதைவிட இலாந்தர் பண்டிகையும் கொண்டாடுவார்கள். இது வர்ணமயமான விழா. இது புத்தாண்டுக் கொண்டாட்டங்களின் முடிவைக் குறிக்கும். சிங்மிங் நிகழ்வு ஏப்ரலில் நடக்கும். சீனக்குடும்பங்கள் மறைந்த தம் உறவினர்களின் கல்லறையைச் சுத்தப்படுத்தும் நிகழ்ச்சியாகும். டிராகன் படகுத் திருவிழா யூன் மாதத்தில் கொங்கொங்கில் நடைபெறும். குழுக்களாகப் படகு செலுத்தும் போட்டி இவ் விழாவின் ஒரு அங்கமாக நடைபெறும்.

சீனாவின் சனத்தொகையைக் குறைக்கும் நோக்கில் சீனாவில் ஒரு தம்பதியினருக்கு ஒரு குழந்தை என்ற சட்டம் 1970-ல் கொண்டுவரப்பட்டது. பின்னர் அருகிவரும் தொழிலாளர்களின் எண்ணிக்கை காரணமாக ஒரு குழந்தைத் திட்டம் தளர்த்தப்பட்டு தம்பதியினர் இரண்டு குழந்தைகள் பெற்றுக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. எனினும் ஒரு குழந்தையைத்தான் விரும்பிப் பெறுகிறார்கள். உலகில் உள்ள நாடுகளில் முதியவர்கள் அதிகம் வாழும் நாடு. இங்கு 65 வயதுக்கு மேற்பட்டவர்களாக 114 மில்லியன் மக்கள் உள்ளனர். 2030-ல் 400 மில்லியன் மக்கள் 65 வயதைக் கடந்தவர்களாக இருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. முதியவர்கள் தனித்து விடப்படும் சிக்கல்கள் நிறைந்த நாடாகவும் சீனா விளங்குகிறது.

உலகிலே சீனாவில்தான் துவிச்சக்கரவண்டிகள் அதிகம். காற்றால் மாசடைதல் இங்குதான் அதிகம். புதிதாகத் திருமணம் முடித்தவர்கள் சொந்த வீட்டில்தான் வாழமுடியும். மணமகன் வீடு, கார் என்பவற்றையும், மணமகள் தளபாடங்கள் என்பவற்றையும் கையளிக்க வேண்டும். இதன்மூலம் வாழ்வு சிறப்பாக அமையும் என நம்புகிறார்கள். சீனாவில் தற்போது விவாகரத்துச் செய்துகொள்ளும் தம்பதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. நாளுக்குச் சராசரி 5000 விவாகரத்து



வழக்குகள் பதிவாகின்றன. விவாகரத்து அதிகமாக இருக்கும் பகுதிகளில் பீஜிங் நகரம் எட்டாவது இடத்திலும், ஷங்காய் நகரம் ஆறாவது இடத்திலும் உள்ளன. கணவன் - மனைவி இருவரும் தனித்தனியாக வேறு, வேறு இடங்களில் வேலை பார்ப்பதால் குடும்ப உறவுகளில் நிலைத்தன்மை அற்றுவிடு தல் திருமண உறவை முறிக்கும் அளவுக்குச் சென்றுவிடுகி றது. சீனர்கள் தமது அதிஸ்ட இலக்கமாக எட்டையும், துர திஸ்ட இலக்கமாக ஆறையும் கொண்டுள்ளனர். இவ் இலக் கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்படுவோரும் உளர்.

சீனா வாங்குதிறன் அடிப்படையிலும், ஏற்றுமதியிலும் உல கில் இரண்டாவது இடத்திலும், இறக்குமதியில் மூன்றாவது இடத்திலும் உள்ளது. சீனப் பண்பாடு மிகவும் பழமையா னது. சீனாவின் தேசிய விலங்கு சீன டிராகன் (Chinese Dragon) இந் நாட்டின் எழுத்துகளைப் பொறுத்தமட்டில், ஒரு எழுத்துக்கு ஒரு பொருள் இருக்கிறது. அதனால் எழுத்துக் கள் 50,000-க்கும் மேலாக உள்ளது. சீனாவில் மாகாணங்கள் என்பது, சீனமொழியில் ஷெங் எனப்படும். மக்கள் சீனக் குடி யரசில் 23 மாகாணமட்ட நிர்வாகப் பிரிவுகளில், 22 நிர்வாகப் பிரிவுகள் சீன அரசின் கீழ் உள்ளன. கட்டுவதில் வல்லவர் கள். 2000 ஆண்டுகளுக்கு முன்பாகவே அடுக்குத்தூபி போன்றவற்றைக் கட்டினார்கள். கட்டடம் கட்டும்பொழுது பெங்சுய் என்ற சாத்திரத்தைப் பின்பற்றிக்கொண்டே கட்டி னார்கள்.

ஐந்து நட்சத்திரங்களுடைய செங்கொடி தேசியக்கொடியா கும். கொடியின் நீளத்துக்கும், அகலத்துக்கும் இடையே விகி தாசாரம் 3 : 2 ஆகும். அதன் சிவப்பு நிறமானது புரட்சி யைக் குறிக்கிறது. கொடியின் மேல் கோணத்திலுள்ள 05 நட் சத்திரங்களும் மஞ்சள் நிறமுடையவை. நான்கு சிறிய நட்சத் திரங்களும், ஒரு பெரிய நட்சத்திரமும் உள்ளது. கம்யூ னிஸ்ட் கட்சியின் தலைமையிலான புரட்சிகர மக்களின் பெரும் ஒற்றுமையை இது எடுத்துக் காட்டுகிறது. நாட்டின் தேசிய இலட்சினையானது, தேசியக்கொடி, சியன் ஆன்மென் வாயுற் கோபுரம், சக்கரம், கோதுமைக் கதிர் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. சீனமக்கள் 'மே 4` இயக்கம் முதல் நடத்திவ ரும் புதிய ஜனநாயகப் புரட்சிப் போராட்டத்தையும், தொழி லாளர் வர்க்கத்தின் தலைமையிலான தொழிலாளர், விவசாயி கள் தோழமையை அடிப்படையாகக் கொண்ட மக்கள் ஜன நாயக சர்வாதிகார நவசீனாவின் பிறப்பையும் இவை எடுத் துக் காட்டுகின்றது. நாட்டின் நாட்டுப்பண் 'தொண்டர் படைய ணியின் வகுப்பு இசை' என்பது அதன் பெயராகும். இது 1935-ல் இயற்றப்பட்டது. நாடக ஆசிரியர் தியென் ஹான் தேசிய கீதத்தை எழுதினார். சீனத் தேசிய விடுதலையின் ஊதுகுழலாக இது அழைக்கப்பட்டது. இக் கீதத்தின் முதல் வரி 'அடிமையாக வாழ மறுக்கும் மக்களே! பொங்கி எழு வீர்!......' எனத் தொடங்குகிறது.

சுற்றுலாவுக்குப் பெயர்பெற்றுவரும் நாடாக உள்ளது. மார்ச், ஏப்ரல், செப்டம்பர், ஒக்டோபர் வரையான மாதங்கள் சுற்று லாவுக்குச் சிறந்தது. பகல் வெப்பநிலை 20 முதல் 30 பாகை செல்சியஸ் வரை இருக்கும். இரவில் வெப்பநிலை குறைவா கக் காணப்படும். FORBIDDEN CITY - PALACE COMPLEX WITH MUSEUM, EMPEROR QINSHIHUANG'S MAUSOLEUM SITE MUSEUM, SUMMER PALACE, TEMPLE OF HEAVEN, THE BUND - FAMED WATER SIDE WALKWAY WITH CITY, POTALA PALACE, TIANANMEN SQUARE, YU GARDEN - CLASSICAL GARDEN, LI RIVER. ஆகிய இடங்கள் பார்த்து மகிழக்கூடியவையாகும். இவற்றைவிடச், சீனாவில் பிரசித்திபெற்ற கோபுரங்களைக் காணலாம். 15-ம் நூ.ஆ-ஐச் சேர்ந்த சீனாவின் புகழ்பெற்ற புறோசலின் கோபுரம் தற்போது வாஜியங்லிங் என்ற செல்வந் தரால் புனருத்தாரணம் செய்யப்பட்டு அழகாகக் காணப்படு கின்றது. அத்துடன், சீனாவின் தலைநகரான பீஜிங் நகரிலி ருந்து 1500 கி.மீ. தூரத்திலுள்ள வர்த்தக இடமாக விளங்கும் ஷங்காயில் உலகில் இரண்டாவது உயரமான ஷங்காய் கோபுரம் காணப்படுகின்றது. இதன் உயரம் 632 கி.மீ ஆகும். இதன் பரப்பளவு 6341 ச.கி.மீ. ஆகும்.



உலக அதிசயங்களில் ஒன்றான சீனப்பெருஞ்சுவர் சீனாவில் உள்ளது. இதன் நேரடிக் கருத்து நீண்ட நகர் (கோட்டை) என்பதாகும். இது சீகுவாங்சி என்ற மன்னன் காலத்தில் அமைக்கப்பட்டது. சீனப்பெருஞ்சுவர் அந்த நாட்டின் இய லுமை, மற்றும் தொன்மையைக் கூறுகிறது. கி.பி. 221-ம் நூ.ஆ.-இல் கட்டப்பட்டது. உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோவால் அறிவிக்கப்பட்டது. கிழக்கே ஹெபேய் மாகாணம் ஷாங்காய்குவானில் தொடங்கி, மேற்கில் லோப்-நுர் வரையில் பிரதான சுவர், கிளைச் சுவர் எனச் சுமார் 8850 கி.மீ. தூரத்துக்குப் பிரமாண்டமாய் நீள்கிறது. சுவரின் உய ரம் 25 அடி. சுவர்களுக்கு மத்தியிலுள்ள பாதையின் அகலம் 20 அடி. சில இடங்களில் 15 அடி. இதுவரையான உலகின் மிகப் பெரிய கட்டுமானத் திட்டங்களில் இதுவே மிகப் பெரி யதாகும். ஆறாம் நூ.ஆ. முதல் மங்கோலியாவிலிருந்தும், வந்த சியோங்னுகளின் படையெடுப்புக்களிலிருந்து சீனப்பேர ரசைக் காப்பதற்காக அதன் வடக்கு எல்லையில் கட்டப்பட்ட அரண். சுவரின் கட்டுமானப் பணிகளின்போது பலர் இறந்த காரணத்தால் இச் சுவர் உலகின் அதி நீளமான மயானம் என்றும் அழைக்கப்படுவதுண்டு. இச்சுவரில் 30% சேதமடைந் துள்ளதாகப் பீஜிங் டைம்ஸ் ஆய்வு தெரிவித்துள்ளது. இத னைப் பார்க்கப் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப்பயணிகள் வந்திருந்தனர். சுவரை முழுமையாக நடந்து பார்ப்பது கடி னம் என்பதால் கட்டணம் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று ஒரு தொகுதியை கேபிளில் சென்று பார்த்து மீதியை நடந் தும் பார்க்கலாம். நான் இதைப் பார்த்து வியந்ததுடன், உலக அதிசயம் ஒன்றைப் பார்க்கக் கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியும் அடைந்தேன்.

சீனாவின் நிலப்பரப்பில் 2/3 பங்கு மலைப்பாங்கான நிலமா கும். உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ற் சிகரம் சீனா உரிமை கோரும் திபெத் மற்றும் நேபாள எல்லையில் அமைந்துள்ளது. இமயமலைத்தொடர் சீன-இந்திய எல்லை யில் உள்ளது. இதுதவிர குன்லன், தியென்சான், தாங்குலா, சின்லின், தைய்ஹான், சிலியென், ஹெந்துவான் என்பவை சீனாவின் முக்கிய மலைகளாகும். இங்கு 1500-க்கும் அதிக மான ஆறுகள் பாய்கின்றன. யாங்சி ஆறு ஆசியாவில் மிக நீளமானது. உலகில் மூன்றாவது நீளமானது. குவாங்கோ நதி (மஞ்சள் ஆறு) உலகில் ஆறாவது நீளமான நதி. இதில் நாம் பயணம் செய்து நதியை வலம் வரலாம். மேற்கு சீனாவின் சிங்ஹாய் மாகாணத்திலுள்ள பாயன்ஹர் மலைத் தொடரில் தோன்றி 09 மாகாணங்கள் வழியாக 5464 கி.மீ. தொலைவு ஓடி பொகாய் கடலில் கலக்கிறது. மஞ்சளாறு சீனநாகரிகத்தின் தொட்டில் என அழைக்கப்படுகிறது. சீனா வின் துயரம் என்ற பெயரும் இதற்கு உண்டு. விவசாயம், மின்சார உற்பத்திக்கு இந்நீர் பயன்படுகிறது. இவ்வாறான சிறப்புக்களைக் கொண்ட சீனா நாட்டை சுற்றுலாப் பயணி கள் விட்டபாடில்லை.



natkunalingam@thaiveedu.com




திரைப்படத்துறையில் அதிகம் பேசப்படாத முக்கியமான துறை, எடிட்டிங் என்று அழைக்கப்படும் ‘படத்தொகுப்பு’. அதை கண்ணுக்கு தெரியாத கலை என்றுகூட சிலர் அழைப் பதுண்டு. முன்பு துண்டு துண்டாக எடுக்கப்பட்ட காட்சி களை, சரியான விகிதத்தில், கலைத்தன்மையோடு தொகுப் பார்கள். கையால் சுற்றப்படும் உருளைகளில் பிலிம் ரோலைச்சுற்றி, வேண்டிய காட்சிகளைத் துண்டாக்கி, மீண்டும் சரியான இடத்தில் இணைத்து எடிட்டிங் அறைகளில் படங்க ளைத் தொகுப்பதை நான் வேடிக்கை பார்த்ததுண்டு. கத்தி ரிக்கோலும் பசையும்கையுறையுமாய் எடிட்டர்களைப் பார்த்த காலம். பின்னர் Avid போன்ற தொழில்நுட்பக் கருவிகள் கணினியுடன் இணைந்து, வெட்டுவதும் ஒட்டுவதும் கணினி யின் மூலமே நடைபெறும் காலத்திற்கு வந்துவிட்டோம். மிகச் சரியாகத் தொகுக்கப்பட்ட காட்சி, பார்வையாளரை அதில் முழுக்க ஈர்த்து, வெட்டுதலையும் ஒட்டுதலையும் அவரை மறக்கச் செய்தால் அதுவே தொகுப்பாளருக்குக் கிடைக்கும் பெரிய வெற்றி. திரைப்படங்கள் முதன் முதலில் உருவான போது காட்சிகளை ஒரு நாடகம் போல ஒரே போக்கில் பட மாக்குவார்கள். பின்னர் இந்தக் கலை உருவானபோது, பெரும் மாற்றம் வந்தது. செர்ஜி ஐன்ஸ்டைனின் ‘போர்க்கப் பல் பொட்டம்கின்’ மான்டேஜ் எனும் எடிட்டிங் உத்தியைப் பிரபலப்படுத்தியது. இதில் வரும் ஒடஸ்ஸா படிக்கட்டுப் போன்ற பல காட்சிகள் பின்னர் வந்த பிரபல இயக்குனர்க ளின் திரைப்படங்களில் இடம்பெற்று, ஐன்ஸ்டைனுக்கு மரி யாதை செலுத்தின.

எடிட்டிங் குறித்த தொழில்நுட்ப மற்றும் அழகியல் அறிவு கொண்ட பல இயக்குனர்கள் தங்கள் படங்களைத் தாங்களே எடிட்டிங் செய்ததுண்டு. அகிரா குரோசவா, கோயென் சகோ தரர்கள் முதல் பாலு மகேந்திரா வரை பலரைச் சொல்ல லாம். எடிட்டிங் அறிவு உள்ள இயக்குனர்கள், அதற்குத் தகுந்தாற்போல காட்சிகளைப் பிரித்து முன்னரேயே படமாக் குவார்கள். ஆல்பிரெட் ஹிட்ச்காக்கின் ‘சைக்கோ’ படத்தின் குளியலறைக் கொலைக் காட்சியை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். படத்தொகுப்பாளர் என்பவர் இயக்குனரின் பார்வையைத் திரைக்கு மொழிபெயர்ப்பவர், அதாவது உரு வாக்கப்பட்ட திரைப்படத்தை மீண்டும் உருவாக்குபவர். சத்-யஜித் ராய் ஒருமுறை சொன்னது நினைவுக்கு வருகிறது. ‘எடிட்டிங் செய்யப்படும் கட்டத்தில் தான் ஒரு திரைப்படம் உண்மையிலேயே உயிர்பெற்று வருகிறது.’ நிறையப் பேருக் குப் பிற தொழில்நுட்பக் கலைஞர்களின் பெயர் தெரிந்தது போலத் தொகுப்பாளர்கள் பெயர் தெரியாது. புகழ் பெற்ற ஷோவிலே படத்தின் எடிட்டர் யார் என்று கேட்டுப்பாருங்கள். யாருக்கும் தெரியாது. அப்படிப்பட்ட காலகட்டத்திலேயே புகழ்பெற்ற எடிட்டர் ஆகத் திகழ்ந்தவர் ரிஷிகேஷ் முகர்ஜி. பிரபல இயக்குனராகத் திகழ்ந்தபோதே, பிற படங்களுக்கும் எடிட்டிங் செய்தவர் அவர். பிமல் ராயின் தோ பிகா ஜமீன், தேவதாஸ், மதுமதி, பிறகு கங்கா ஜமுனா மலையா ளப்படங்களான செம்மீன், நெல்லு, கலைப்படமான தஸ்-



தக், ஜனரஞ்சகப்படங்களான ப்ரொபசர் ப்யாரேலால், கூலி போன்ற படங்களையும் தொகுத்திருக்கிறார். அதேபோல தமிழ் இயக்குனர்களான கே. சங்கர், பீம்சிங் போன்றவர்கள் எடிட்டர்களாகவும் திகழ்ந்தனர். என்பதுகளுக்குப் பிறகு தமி ழில் பேசப்பட்ட தொகுப்பாளர்களாகத் திகழ்ந்தவர்கள் பீம் சிங்கின் மகனான பி. லெனினும் அவருடன் பணிபுரிந்த வி.டி. விஜயனும். மகேந்திரன் போன்ற அப்போதையக் கலைத்தாகம்மிக்க இயக்குனர்களுக்கும் சங்கர் போன்ற பிரம்மாண்ட இயக்குனர்களுக்கும் இவர்களின் சேவை தேவைப்பட்டது. இவர்களும் பெரும் புகழ் அடைந்தனர். இப் போது பாஸ்ட் கட் உத்தியில் பெயர் பெற்றிருப்பவர் ஆண்டனி.



ஹிந்தித் திரையுலகத்தில் 70-களில் இணைத்திரைப்பட இயக்கம் பரபரப்பாக இயங்கத்தொடங்கியபோது பல புதிய ஆளுமைகள் உருவாகத்தொடங்கினர். பல தொழில்நுட்பக் கலைஞர்களும் பேசப்படலாயினர். இவர்களில் அடுத்த தலைமுறைக் கலைஞர்களில் படத்தொகுப்பில் புகழ் பெற்ற வராக விளங்கியவர் ரேணு சலுஜா. பொதுவாகக் காமெரா வுக்குப் பின்புறம் உழைப்பவர்களில் பெண் தொழில்நுட்பக் கலைஞர்கள் மிகக்குறைவாக இருப்பார்கள். அவர்களில் ஒருவர் ரேணு.

ரேணு சலுஜா ஒரு பஞ்சாபிக்குடும்பத்தில் பிறந்தவர். அவரு டைய மூத்த சகோதரி பூனே திரைப்படக்கல்லூரியில் படித்து ஒரு புகழ் பெற்ற நடிகையாக உருவெடுத்தவர். ராதா சலுஜா தமிழர்களுக்கும் தெரிந்த பெயர்தான். தோ ரஹா என்ற புகழ் பெற்ற படத்தில் நடித்துப் பின்னர் எம்.ஜி.ஆரால் தமிழுக்கு அறிமுகம் செய்யப்பட்டவர். இதயக்கனி, இன்று போல் என்றும் வாழ்க, நவரத்தினம் என்று பல படங்களில் நடித்துத் தமிழகத்தில் அறியப்பட்டவர். அக்காவைப்போ லவே ரேணுவுக்கும் திரைப்பட ஆர்வம் அதிகம். பூனே கல் லூரியில் திரைப்பட இயக்கப் படிப்புக்கு விண்ணப்பித்தவ ருக்குக் கிடைத்தது என்னமோ படத்தொகுப்புத்தான். அதை வெற்றிகரமாக படித்து முடித்து திரைப்படத்துறையில் நுழைந்தார். கல்லூரியிலிருந்து வெளியே வருபவருக்கு முதல் பணி, வகுப்புத்தோழர் சயீத் மிர்சாவின் 'ஆல்பர்ட் பிண்டோ கோ குஸ்ஸா க்யோன் ஆத்தா ஹை' (ஆல்பர்ட் பிண்டோவுக்கு ஏன் கோபம் வருகிறது) படத்துக்காக. நசீருத்-தின் ஷா நடித்த இந்தத் திரைப்படம் அறிவுஜீவிகளுக்கி டையே பெரும் வெற்றியைப் பெற்றது. அடுத்தது விது வினோத் சோப்ராவின் 'சஜாயே மவுத்' (மரண தண்டனை). இவரது டிப்ளோமா படத்தில்தான் கல்லூரியில் ரேணு எடிட்ட ராகப் பணி புரிந்தார். அடுத்த படமும் இன்னொரு வகுப்புத் தோழருடையதுதான். குந்தன் ஷா இயக்கிய 'ஜானே பி தோ யாரோ' (விட்டுத் தள்ளுங்கள், அன்பானவர்களே) என்ற பெரும் வெற்றியடைந்த நகைச்சுவை அரசியல் விமர்சனத் திரைப்படம். கல்ட் கிளாசிக் என்று வர்ணிக்கப்படும் ஜானே பி தோ யாரோ இந்திய அரசியல், அரசு எந்திரம், பத்திரிகை ஊடகம், தொழில் போன்ற துறைகளில் நிலவும் ஊழலை ஓர் அங்கத சித்திரமாக வெளிப்படுத்தியது. இன்றும் ரசிக்கப்ப டும் இந்த நகைச்சுவைக் காவியம் நசீருத்தின் ஷா, ரவி பாஸ்வானி, பக்தி பார்வே, ஓம் புரி, சதிஷ் கௌசிக், சதிஷ் ஷா, நீனா குப்தா, பங்கஜ் கபூர் போன்ற திறமையாளர்கள் நடித்து, ரசிக்க வைத்தது!

இப்படி ரேணுவின் ஆரம்ப காலப் பணிகளே இன்றும் பேசப் படும் படங்களாக அமைந்தது அவருக்கு ஒரு கூடுதல் பெய ரையும் புகழையும் அறிமுகத்தையும் தந்தது. தன் வகுப்புத் தோழர்கள், கல்லூரி நண்பர்கள் போன்றவர்களின் படங்க ளுக்கு மட்டும் பணிபுரிந்து கொண்டிருந்த அவருக்கு அடுத் துக் கிடைத்த அசைன்மெண்ட் பெரும் புகழைத்தேடித்தந் தது. இயக்குனர் கோவிந்த நிஹ்லானியின் 'அர்த சத்யா' படத் திற்கு பணிபுரியும் வாய்ப்பு வந்தது. அது நிறையப் புகழை யும் வெளி இயக்குனர்களின் கவனத்தையும் ஈர்த்தது. வெறும் இணைப்படங்களுக்கு மட்டும் பணி புரிவதோடு நில்லாமல் இரட்டைக்குதிரைச் சவாரியாகப் பொழுதுபோக்குத் திரைப்ப டங்களுக்கும் பணிபுரியும் வாய்ப்புகளும் வந்தன. தொகுப் பாளராகப் பணியாற்றுவது சாதாரண விஷயமல்ல. அதை வெற்றிகரமாகச் செயலாக்கினார் ரேணு. கபி ஹான், கபி நா, பாண்டிட் குயின், 1942 எ லவ் ஸ்டோரி, பர்தேஸ் என்று பல படங்கள்! அவர் தமிழிலும் ஒரே ஒரு திரைப்படத்திற்குப் படத்தொகுப்பாளராகப் பணியாற்றினார். அது கமல்ஹாசன் நடித்து இயக்கிய ஹே ராம்!



ரேணு சலுஜா, பிற ஆண் எடிட்டர்களைப் போலல்லாமல், பரவலாகப் பேசப்பட்டவர், எழுதப்பட்டவர். அதற்கு அவர்தான் நாட்டின் முதல் பெண் எடிட்டர் என்பது மட்டும் காரணமல்ல, அவருக்குக் கிடைத்த வாய்ப்புகள், பணிபுரிந்த படங்கள் என்று கூடச் சொல்லலாம். ஆனாலும் பொதுமக்கள் மத்தியில் அவ்வளவாகத் தெரியாது என்பதும் உண்மைதான். அவருடைய ஆரம்பப்படங்களில் அவர் வெறுமனே எடிட்டராக மட்டும் இருந்ததில்லை. படங்களின் உருவாக்கத்திலும் பெரும் பங்கு கொண்டிருந்தார். மற்றத் தொகுப்பாளர்கள் போல எடிட்டிங் மேஜைக்கு வந்தபிறகு பணியைத் தொடங்கும் வழக்கம் அவருக்கு இருந்ததேயில்லை. படப்பிடிப்புகளுக்குக் கூடுமானவரை சென்று கலந்து கொள்வது அவரது வாடிக்கையாக இருந்தது. குறிப்பாக ஜானே பி தோ யாரோ, குந்தன் ஷா-வின் கற்பனையில் உதித்ததிலிருந்து அது ஒரு திரைப்பட வடிவமாக உருவாகும்வரை ரேணு பெரும் பங்காற்றியிருக்கிறார். அப்போது குந்தன், ரேணு எடிட்டராகப் பணியாற்றிக்கொண்டிருந்த ஆல்பர்ட் பிண்டோ... இயக்குனர் சயீத் மிர்சாவின் உதவி இயக்குனர். இவர்கள் ஒரு குழுவாக நட்பு முறையில் திரைப்பட ஈடுபாடுகளில் தீவிரமாக இருந்தனர். அந்த நேரம் விது வினோத் சோப்ராவுக்கும் ரேணுவுக்கும் காதல் வேறு. பின் திருமணமும் புரிந்து கொண்டனர். அனைவரும் குந்தன் ஷாவின் திரைக்கதையாக்கத்திலும் ஊக்கம் தருவதிலும் தீவிர ஈடுபாடு கொண்டு ஒரு பெரும் வெற்றிப்படத்தை உருவாக்கினர்.

ஜானே பி தோ யாரோ படத்தில் அவருக்கு இருந்த ஈடுபாடு உதவி இயக்குனர்கள் வரிசையில் அவர் பெயரும் இடம்பெற வழி வகுத்தது. படத்தில் ஒரு காட்சியில் பர்தா அணிந்த பெண்மணியாகக்கூடத் தோன்றி நடித்தார். அவருடைய அனைத்துப் படங்களிலும் அவர் கொண்ட படப்பிடிப்புத்தள ஈடுபாடு பல நேரங்களில் பெண்கள் செல்லச் சங்கடப்படக்கூடிய இடங்களுக்குக் கூட இட்டுச் சென்றிருக்கிறது. டோங்கிரி, காமாட்டிப்புரா போன்ற வில்லங்கமான பகுதிகளில் சயீத் மிர்ஸா திரைப்பட ஆக்கங்களுக்காக உடன் சென்றிருக்கிறார் ரேணு.

பிலிம் ரீல்கள் குப்பையைப் போலத் தொகுப்பாளரிடம் வருகின்றன. அவற்றிலிருந்து சரியான சட்டகங்களைத் தேர்ந்தெடுத்து, கலாரசனையோடு தொகுத்தளிப்பது சாதாரண வேலையல்லவே. பாண்டிட் குயின், ஐந்து மணி நேரப்படமாக இவர் கைக்கு வந்ததாம். திருத்தி, செப்பனிட்டு, சுருக்கி ஒரு அற்புதமான படத்தைத் தந்தபோது, அது முற்றிலும் வேறான அனுபவத்தைத் தந்ததாம். இதே கதைதான் அர்த சத்யாவுக்கும்.

ரேணுவுக்கு அவர் திறமைக்கேற்ற விருதுகளும் கிடைத்திருக்கின்றன. பரிந்தா, தாராவி, சர்தார், காட் மதர் என்று நான்கு படங்களுக்குத் தேசிய விருதுகள் கிடைத்தன. இவருடைய பணிகளைப் பற்றி 'Invisible: The Art of Renu Saluja' என்று ஒரு கட்டுரைத்தொகுப்பு நூலும் வெளிவந்திருக்கிறது. அவருடன் பங்குபெற்ற கலைஞர்கள் அதில் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள்.

பெரும்பாலும் புதிய இயக்குனர்களுடன் பணிபுரிந்து வந்திருக்கிறார். சுதிர் மிஸ்ரா, விது வினோத் சோப்ரா, சயீத் மிர்ஸா, மகேஷ் பட், சேகர் கபூர், தேவ் பெனெகல், நாகேஷ் குக்குனூர் என்று ஒரு அழகான பட்டியலே இருக்கிறது. ஷாருக்கானை அடையாளம் கண்டு அவரைப் பெரிய திரைக்கு அறிமுகப்படுத்தியதில் ரேணுவுக்குப் பெரும் பங்கு இருந்தது. இது ஷாருக்கானுக்கே பின்னர்தான் தெரிய வந்தது என்பது ஒரு விந்தை.

விது வினோத் சோப்ராவுடன் மணமுறிவு ஏற்பட்டவுடன், பால்ய ஸ்நேகிதர் இயக்குனர் சுதிர் மிஸ்ராவை மணந்தார். 23 ஆண்டுகளுக்கு முன் அவருடைய 48-வது வயதில் ரேணுவைப் புற்றுநோய் பலிகொண்டது. மறைந்தாலும் முதல் பெண் தொகுப்பாளர் என்ற பெயரும், அற்புதமான படங்களில் பணிபுரிந்தவர் என்ற பெருமையும் கொண்டவர் ரேணு சலுஜா!



jeeva@thaiveedu.com

# அ.பேக்மன் ஜெயராசா நினைவு கொள்கிறேன் !

**– செல்வம் அருளானந்தம்**



*இங்கெமை நாடியே*
*வந்துரையாடிய.....*

சங்கிலியன் கூத்தில் வரும் இப்பாடலை பேக்மனின் குரலில் எத்தனை தரம் கேட்டிருப்பேன் என்ற கணக்கு எனக்கில்லை!

கடந்த 50 வருடங்களுக்கு மேல் தென்மோடிக் கூத்தின் ஒரு அடையாளச் சின்னம் அவர்!

அ. பேக்மன் ஜெயராசாவின் குரலை நான் கேட்டது ஒரு கூத்தில் அல்ல. 83-ம் ஆண்டோ, 84-ம் ஆண்டோ நினைவில் இல்லை. பாரிஸில் வாழ்ந்தபோது பாசையூரைச் சேர்ந்த என் நெருங்கிய நண்பன் பேடினன் தந்த ஒரு ஓடியோ கேசற்றில்...

அது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் பதிவு செய்யப்பட்டது. பாசையூரின் முக்கிய கூத்துக் கலைஞர்களான அண்ணாவியார் பாலதாஸ், டேவிற் ராஜேந்திரன்,யேசுதாசன் போன்றவர்கள் பங்குபற்றிய கண்ணகி கோவலன் கதை ஆகிய ‘முத்தா? மாணிக்கமா?’ என்ற கூத்து...

அக்கூத்தில் பிற்பாட்டு பாடிய ஒரு குரல் மிக தெளிவாகவும் இனிமை பொங்கியதாகவும் இருந்தது.

அக்குரல் ‘யாருடையது?’ என்று பேடியை விசாரித்தபோது ‘அவர் ஒரு பெரும் கூத்து பாடகன். கொழும்புத்துறைதான் அவர் ஊராக இருக்க வேண்டும். பேக்மன் எனப் பெயர். பூந்தான் யோசேப்பைப் போல கூத்துக்காக ஊர் ஊராய் அலைபவர். எங்கள் ஊரின் நண்பர் அவர்!’ என்றார்.

அந்தக் குரலைக் கேட்டு 35 வருடங்களுக்குப் பின் 2016ம் ஆண்டு அவரை நேரே பார்க்க கிடைத்தது. கலைமுகம் சஞ்சிகை ஆசிரியர் எமிலின் உதவியால் யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் சந்தித்தேன். அவரை நான் பார்த்த போது என்னை எப்படி அவருக்கு அறிமுகம் செய்வது என்று தெரியவில்லை.

தயங்கி தயங்கி

*‘வண்டலம் பூங்குழல் சரிய வாச*
*மலரெனும் தாமரைக்கரிய...*

என்ற தேவசகாயம் பிள்ளை கூத்தின் பாடலைச் சொல்லி, இதை ஒருக்கால் பாட முடியுமா?’ என்றேன்.

அவர் முகத்தில் மகிழ்ச்சி பொங்கியது. இவன் கூத்துக்கள் பார்த்திருக்கக் கூடியவன் தான் என்ற நிறைவோடு பாடத் தொடங்கினார்.

வயது தந்த தளர்வால் அவர் நின்றோ, நடந்தோ, ஆடியோ பாடும் நிலையில் இல்லை.

அவரென்ன, தென்மோடி கூத்தின் தலைமகனாக எண்ணப்படுகின்ற பூந்தான் யோசேப்பைக் கூட என் தலைமுறையைச் சேர்ந்த யாரும் ஆடி பார்த்திருக்க முடியாது. இந்தத் தலைமுறையினர் அவரை நேரிலேயே பார்த்திருக்க வாய்ப்பில்லை. ‘ஸ்நாபகஅருளப்பர்’ கூத்தில் ஏரோது மன்னனாக பாடும் கல்வெட்டு சிந்தை தன் வயதுக்கேற்ப, அந்தக் கல்வெட்டு சிந்தின் வேகத்தை மாற்றி ஆடலை குறைத்து தாளம் பிசகாமல் அழகாக பாடியதை நேரே பார்த்திருக்கிறேன்.

சரியோ, பிழையோ இன்றைய வடக்கு பக்க தென்மோடிக் கூத்து என்பது பாடல்கள் முக்கியத்துவம் பெறும் கத்தோலிக்க மரபு கூத்துத்தான்.

பேக்மன் இந்தப் பாரம்பரியத்தின் தலைமகன் என்றே சொல்லலாம். வரம் வேண்டி வந்த குரல்.

தென்மோடி மெட்டுக்கள் நல்லாய் தெரிந்த புலமை மிக்கவர். தன்னை முன்னிலைப் படுத்தாமல் எங்கள் பழம்பெரும் மரபை முன்னெடுக்க வேண்டும் என்ற ஆவல் கொண்ட ஆத்மா.

நோர்வே தமிழ் வானொலியொன்று அவரை நேர்காணல் கண்டபோது பெரிதாக தன்னைப்பற்றி பேசாமல் எதிர்வரும் தலைமுறைக்கு கூத்தை கடத்த வேண்டும் என்பதே தன் அவா என்பதும், அதை இப்போது செய்து கொண்டிருக்கும் திருமறைக் கலாமன்றமும் சவரிமுத்து அடிகளாரும் முக்கியமானவர்கள், அவர்களுடன் சேர்ந்து கூத்தை வளர்க்கும் பணியில் இருக்கின்றேன் எனச் சொல்கின்றார்.

இவர் செய்த பணிகளில் முக்கியமானதாக நான் கருதுவது, யாழ்ப்பாண கூத்து மரபு இசை மெட்டுக்களை திருமறைகலா மன்றம் தொகுத்தலில் முக்கிய பங்காளராக இருந்தது.

அவரைப் பற்றி... ‘இவ்வெண்ணத்தை ஏற்கனவே கொண்டிருந்த பேக்மன் ஜெயராஜ் தனது பூரண ஒத்துழைப்பை வழங்குவதற்கும், இச்செயல்பாட்டை தானே முன்னெடுத்து செல்வதற்கும் ஒப்புதல் அளித்தார். இப்பணிகளில் பேக்மன் ஜெயராஜ் மிகவும் பொருத்தமானவராகவும் இருந்தார். காரணம் இக்கூத்து மரபின் 90 வீதமான மெட்டுக்களை பாட வல்லவராக இருந்தது மட்டுமன்றி, அண்ணாவியார் பூந்தான் யோசேப்பின் மாணவனாக இருந்து பல மூத்த அண்ணாவிமாருடனும், இளைய அண்ணாவிமாருடனும் தொடர்புடையவராகவும், நெகிழ்வுத் தன்மையுடன் காய்தல், உவத்தல் இன்றி கூத்து வாழவேண்டும் என்பதில் தீவிர ஆர்வம் கொண்டவராகவும் விளங்கினார். எனவே அவரது ஆளுமை இப்பணிக்கு முழுமையை கொடுத்தது’ என அதன் இன்னொரு தொகுப்பாளரான ஆளுமை யோ. யோண்சன் ராஜ்குமார் எழுதுகின்றார்.

போர் ஒருபக்கம், வாழ்வுதரும் நெருக்கடிகள் ஒரு பக்கம், ஆனால் சலித்துப் போகாமல் தனக்குப் பிரியமான கூத்து தொடர்ந்து வாழ வேண்டும் என்று வாழ்ந்த கலைஞன். பொருள் வரவோ, புகழ் வரவோ இல்லாமல் வாழ முடியா யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சில அதிசயங்களில் இவரும் ஒருவர்!

சில வருடங்களுக்குள் என்னூரில் நடந்த சங்கிலியன் கூத்தின் குறுவட்டு ஒன்று எனக்குக் கிடைத்தது.

ஏதோ காரணங்களால் அதன் தொடக்கமும் இல்லாமல் தெளிவு குறைவாகவும் இருந்தது. என்னூர் படைப்பு - கூத்தின் மீது கொண்ட காதலால் தொடர்ந்து அதை பார்த்துக் கொண்டிருந்தேன். என் சின்ன காலத்திலேயே பல தடவை விளங்கியும் விளங்காமலும் பார்த்த கூத்து. ஆகவே தெளிவு குறைவாய் இருந்தாலும் விளங்கக் கூடியதாக இருந்தது.

பொன்னில் சிறந்திடும் மின்னும் யாழ்ப்பாணம் - பாடலைக் கேட்டபோது பாடியவர் குரலும் மொழியும் சரியாய் வராவிட்டாலும்...

*‘பழங்கால ரகுராம பாலம் கடந்தோம்*
*பாம்பனைச் சேர்ந்து நாம் பரிவாய் நடந்தோமே*

*துலா பராமேஸ்பரந்தனில் படர்ந்தோமே*
*துரிதமாய் மன்னாரை தேடி நடப்போமே’*

என்ற பிற்பாட்டு தெளிவாயும் இனிமையாயும் இருந்தது.

இது கேட்ட குரலே... பேக்மன் எப்படி சில்லாலை வந்தார் என்று நினைத்தேன். கூத்து முடிய கூத்து பழக்கிய அண்ணாவியார் மங்களம் பாடும் வேளையில் பேக்மன் வந்து பாடுகிறார். அவர் ஊரில் இருந்து என் ஊர் 15 கிலோ மீற்றர் ஆவது இருக்கும். கூத்துப் பழக்கத்திற்கு எத்தனை தடவை போயிருக்க வேண்டும்... எவ்வளவு நேரத்தை செலவழித்து இருக்க வேண்டும்... போக்குவரத்தும் இலகுவான காலம் அல்ல... இப்படி எத்தனை ஊர்களுக்கு போயிருப்பார்... எத்தனை கலைஞர்களை ஊக்கப்படுத்தி இருப்பார்!

பேக்மனின் குரலை பல ஆயிரம் தடவைகளுக்கு மேல் கேட்டவன் என்ற வகையில், அவரின் தனித்துவமான குரல் மாத்திரமல்ல, தன் வித்துவத்தை பாடல்களில் காட்டமாட்டார். கள்ளகுரல் வராது. தாளத்திற்கும், இராகத்திற்கும் விசுவாசமாக இருப்பார். கூத்து காரர்களில் ஒரு குறை இருக்கும் ராகம் முறியப்படாது என்று சொற்களை விழுங்குவது.

பேக்மனில் அது கிடையவே கிடையாது. அவர் பாடும்போது எங்கள் அழகு தமிழ் மேலும் அழகாகும்!

அவரின் திறமையை கண்டு தான் மரியசேவியர் அடிகளார் தன்னுடன் அவரை அணைத்து வைத்திருக்க வேண்டும். அடிகளாரும் இல்லை, பேக்மன் என்ற பெருங்கலைஞனும் இன்று இல்லை!

பேக்மன் பூந்தான் யோசேப்பின் சீடன். அவரின் நண்பன். அவருடன் இணைந்து கூத்தை வளர்க்க அலைந்தவர்கள். வளர்த்தவர்கள். இதை நினைக்கும் போது ஓர் இலக்கியக்காரன் என்ற வகையில் எங்கள் இலக்கிய மூலவர்களான பேராசிரியர் கைலாசபதியும் பேராசிரியர் சிவத்தம்பியும் ஞாபகத்திற்க்கு வருகின்றார்கள் இரண்டு பேரும் ஈழத்து முற்போக்கு இலக்கியத்தை வளர்த்தவர்கள். பேராசிரியர் கைலாசபதி இறந்து போனபின், ஈழத்து அரசியல் இரத்தம் சிந்தும் அரசியலாக மாறியது. இலக்கியம் தடுமாறியது. எல்லாப் பிரச்சினைகளையும் பேராசிரியர் சிவத்தம்பி எதிர் கொள்ள வேண்டி வந்தது.

கூத்து பக்கமாய் பேக்கமனுக்கும் இதுதான் நிலை. பூந்தான் யோசேப்பு இறந்து விட்டார். அதன்பின் பேக்மன் வாழ்ந்த காலம்... இலங்கை வரலாற்றில் போராலும் பல்வேறு தடைகளாலும் தமிழ்மக்கள் தவண்ட காலம்.

அதற்குள், கூத்தை ஆடுவதும்... பாடுவதும்... பழக்குவதும்... சாதித்து இருக்கிறார்கள். அவரும் திருமறை கலாமன்றமும் ஆடியும் பாடியும் அழுதும் சிரித்தும் துன்பபட்ட மக்களோடு வாழ்ந்திருக்கிறார்கள்.

பேக்மன் செய்த பணிகளும் அவரின் இனிமைக் குரலும் அவரை நேசித்தவர்களாலும் ஈழத்தின் தனித்துவ கலையென கூத்தை விரும்புபவர்களாலும் வாழையடி வாழையாய் நினைக்கப்படும்.

பேக்மன் முடிவில்லா வாழ்வில் இணைந்து வருடங்கள் ஆயிற்று.

அவர் பாடிய பாடல் ஒன்று ஞாபகத்தில் இருக்கு...

***தங்கத்தொளியும் அங்கத்திகழும்***
***திங்கட் சுடருன் அங்கத்தொளிர***
***தங்குன்னுகரத் துங்கனாம் பரம்பின்***
***தன்னாலே வேண்டி...***

அவரை நினைவு கொள்கிறேன்!



selvam.a@thaiveedu.com

# சமூக உணர்வினால் பாதிக்கப்பட்ட
# கவிஞர் சண்முகம் சிவலிங்கம்

## - இனியவன் இசாறுதீன் -

ஈழத்தின் தென்கிழக்குப் பிரதேச மூத்த கவிஞர்களில் தனிச் சிறப்புடைய கவிஞர் சண்முகம் சிவலிங்கம். ‘சசி மாஸ்டர்’ என்றழைக்கப்படும் இந்த மூத்த ஆசிரியர் ஈழத்தின் முக்கிய கவிஞராக மதிக்கப்படுகிறார். 1960-ன் மத்தியில் எழுதத் தொடங்கிய அவர் பல்லாண்டுகளாய் பன்முகக் கவிதைகளைப் படைத்துள்ளார். 1988-ல் ‘நீர் வளையங்கள்’ என்ற அவரது முதலாவது கவிதைத் தொகுப்பு தமிழியல் வெளியீடாக வெளிவந்தது. ‘சிதைந்துபோன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்’ என்ற கவிதைத் தொகுப்பு 2010-ல் தமிழியல், காலச்சுவடு இணைவெளியீடாக வெளிவந்தது. 2014-ல் வெளிவந்த ‘காண்டாவனம்’ என்ற அவரது நூல் தமிழுக்கு ஒரு புதிய முகத்தையும் வளத்தையும் சேர்த்தது.

மல்லிகை, புதுசு, அலை, கவிஞன், வியூகம், தெரிதல், ஆகவே, எனவே, இனி, காலச்சுவடு ஆகிய இதழ்களில் அவரது கவிதைகள் வெளிவந்தன. நவீன தமிழிலக்கியத்தில் கிழக்குத் தமிழ்க்கவி நீலாவணனுக்கு அடுத்தபடியாக அதிகம் மதிக்கப்பட்ட கிழக்கின் கவிஞர் சண்முகம் சிவலிங்கம் அவர்கள்தான்.

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் (1939) கிழக்கிலங்கையின் கல்முனை நகருக்குப் பக்கத்திலுள்ள ‘பாண்டிருப்பு’ எனும் ஊரில் பிறந்தார். இந்தியாவின் கேரள மாநிலத்தில் உயர் கல்வி கற்று விஞ்ஞானத் துறையில் பட்டம் பெற்றார். ஈழத்தில் பல்வேறு பாடசாலைகளில் உயர்தர வகுப்பாசிரியராகப் படிப்பித்தார். கடைசியில் பாண்டிருப்பு மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்ற அவர், 2012-ஆம் ஆண்டு ஏப்ரல் 21-ம் நாள் எம்மைவிட்டு பிரிந்தார்.

தமிழ்கூறு நல்லுலகில் தன்னை அதிகம் விளம்பரப்படுத்திக் கொள்ள விரும்பாத சண்முகம் சிவலிங்கம் ஒரு நல்ல கவிஞர் மட்டுமல்ல நல்ல மனிதரும் கூட. அவர் அன்பானவர், அமைதியானவர், அதிரப் பேசாதவர். ஆனால் கவிதை, கதை, ஆய்வுரை, விமர்சனம் என அவரது படைப்பிலக்கியங்கள் அதிரப் பேசுபவை எனப் பல படிப்பாளிகளாலும் படைப்பாளிகளாலும் பாராட்டப்பட்டார். ‘எல்லோரும் சரிசமமாய் வாழவேண்டும்’ என்ற கொள்கைக் கோட்பாட்டுடன் நவீன தமிழ் இலக்கியம் படைத்தவர். தன் மனிதநேய மாண்பை பல-பரிமாணங்களில் வெளிக்காட்டிய அவர் ஆங்கிலத்திலும் கவிதைகளை மொழிபெயர்த்திருக்கிறார்.

பேராசிரியர் கவிஞர் எம்.ஏ. நுஃமான், அ. யேசுராசா ஆகிய இருவரும் தொகுத்து வெளியிட்ட ‘பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்’ நூலில் (க்ரியா 1984, மற்றும் காலச்சுவடு பதிப்பகம் 2003) ‘சசி’யும் இடம்பெற்றிருந்தார். அவரது கவித்துவம் தமிழ்க்கவிதை வரலாற்றில் தனித்துயர்ந்து சில சிகரங்களை யாவது தொட்டு நிற்கிறது. ஒக்ரோபர் 2003-ல் வடகிழக்கு மாகாண மக்கள் நிகழ்த்திய தமிழ் இலக்கியப் பெருவிழாவில் கவிஞர் சசி ஆளுனர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

கவிஞர் சண்முகம் சிவலிங்கம் தன் சமூகத்தின், தன் சூழலின், தன் மக்கள் வாழ்வின் அவலத்தை அவரது அனுபவத்தினூடாக வெளிக்கொணர்ந்திருப்பதை உணரமுடிகிறது. மொழி உரிமையும் இன உரிமையும் மறுக்கப்படும் தன் தாயகத்தில் மகாகவி பாரதிபோல் தன் எழுத்தை அரசியல் ஆதிக்கத்திற்கெதிரான ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தியுள்ளார்.

*‘எங்கள் புருவங்கள் தாழ்ந்துள்ளன*
*எங்கள் இமைகள் கவிந்துள்ளன*
*எங்கள் உதடுகள் அண்டியுள்ளன*
*எங்கள் பற்கள் கண்டிப்போய் உள்ளன*
*நாங்கள் குனிந்தே நடந்து செல்கிறோம்*

*எங்களை நீங்கள் ஆண்டு நடத்துக*
*எங்களை நீங்கள் வண்டியில் பூட்டுக*
*எங்களை முதுகில் கசையால் அடிக்குக*
*எங்கள் முதுகுத்தோல் பிய்ந்துரிந்து போகட்டும்*

*தாழ்ந்த புருவங்கள் ஒருநாள் நிமிரும்*
*கவிந்த இமைகள் ஒருநாள் உயரும்*
*இறுகிய உதடுகள் ஒருநாள் துடிக்கும்*
*கண்டிய பற்கள் ஒருநாள் நறுக்கும்*

*அதுவரை நீங்கள் எங்களை ஆள்க*
*அதுவரை உங்கள் வல்லபம் ஓங்குக’*

என்ற அவரது கவிதையில் செறிந்துள்ள உணர்ச்சிகள் சொந்த மண்ணின் ரணகாயங்களோடு எச்சரிக்கின்றன. அவரது எழுதுகோல் மொழியையும் கவிதையையும் ஒருங்கிணைத்து கலைச் சித்திரமாக்கியுள்ளது.

ஜனநாயகம், இனநாயகம், சமூக நீதி, சமாதானம், சமத்துவம், பல்லின ஒருமைப்பாடு, பல்கலை கலாசார மேம்பாடு போன்றவற்றுக்கான ஆதங்கம்தான் அய்யா சண்முகம் சிவலிங்கத்தின் எழுத்துகள். வெவ்வேறான ரசனையை உண்டாக்கிய வெவ்வேறு உணர்வுகளையும் உள்ளக் கிளர்ச்சியையும் எனக்குள் ஏற்படுத்திய அவரது கவிதைகள் பல. கன கச்சிதமான திறனாய்வின் கட்டுப்பாடு கருதி என்னுடைய கருத்தை இரத்தினச் சுருக்கமாகவே எழுதியிருக்கிறேன்.

ஈழ விடுதலைப்போரில் எல்லா இனங்களும் பாதிக்கப்பட்டன. படைகளாலும் பேராளிகளாலும் ஏராளமான உயிரிழப்புகள் ஏற்பட்டன. ஆயிரமாயிரம் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டனர். உள ரீதியாகவும், பௌதீக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தேசம் சிதிலமாக்கப்பட்டது. இந்தப் பாதிப்புகளில் விழுந்து, அழிந்து, ஒழிந்து, எழுந்து எழுத்தில் அடையாளம் காட்டியவர் சண்முகம் சிவலிங்கம் அவர்கள்.

தன் சொந்த நாட்டில், சொந்த வாழ்வில் கஷ்டப்பட்ட அவர் அதிகம் நஷ்டப்பட்டார். அவர் நிலத்தை இழந்தார். இனத்தை இழந்தார். சுகத்தை இழந்தார், நிம்மதியை இழந்தார், அமைதியை இழந்தார், தனயனையும் கூட இழந்தார். அவரது மொத்த இழப்பின் சோகத்தில் அவர் 'போருக்குப் போனாய் போ' என்று இப்படி எழுதினார்.

*'போனாய் நீ*
*போருக்குப் போனாய்*
*போ*
*ஓநாய்களுக்குப் பயந்து*
*உன்னை*
*வாயில் கவ்வி, வழி தேடிய*
*பூனை நான்*
*போனாய் நீ*
*போருக்குப் போனாய்*
*போ*

*வானில்*
*பனையின் வைர ஓலைகளில்*
*கூடுகள் நெய்தால்*
*குண்டர் உன்னைக் கொல்வார் என*
*பூமிக்கடியில் பொந்து கிண்டி*
*உன்னை*
*என் சிறகுத் தோலுக்குள் போர்த்திய*
*தூக்கணாங் குருவி நான்*

*என் துணையையும் மீறி*
*போனாய் நீ*
*போருக்குப் போனாய்*
*போ'*

பேராசிரியர் கவிஞர் எம்.ஏ. நுஃமான் அவர்கள் சசியின் கவிதைப்போக்கு பற்றிக் குறிப்பிடும்போது, 'மேற்படி வரிகள் அவரது கவிதைகள் பற்றி தெளிவானதொரு சித்திரத்தை வரைகின்றன. தனது நுண்ணிய உணர்திறன் காரணமாய்ப் பல்வகைத் தன்மைகொண்ட ஏராளமான கவிதைகளை இது



வரை 'சசி' எழுதியுள்ளார். எனினும் அவருக்கே உரிய தனி இயல்பு காரணமாய் அவற்றை வெளியிடுவதில் அக்கறை காட்டாமையால், ஓரளவு கவிதைகளே சில இதழ்கள் மூலம் வாசகர்களுக்குக் கிடைத்தன.

அடிப்படையில் அனுபவ வெளிப்பாடுகளாக அமைந்தவை 'சசி'-யின் கவிதைகள், அவரது படைப்புகளும் படைப்பு மன நிலையும் தன்னுணர்வு மிக்க செவ்வித் தாக்கமுமே அவரது கவிதைகளை உருவமைக்கின்றன. எல்லா நல்ல கவிஞர்க

ளது கவிதைபோல அவரது கவிதையும் அவரது முகமாக இருக்கிறது. அவரில் இருந்து பிரிக்க முடியாத ஒன்றாக அமைகின்றது. அவர்களது உணர்வுகளையெல்லாம் பிரதிப லிக்கின்றது. அவரது மனஅமைப்பின் வெவ்வேறு பரிமாணங் களை அவரது கவிதைகள் மூலம் நாம் காண்கிறோம். அவ ரது சமூக அரசியல் கவிதைகள் அவரின் பக்கத்தைக் காட் டுகின்றன என்றால் அவரது தன்னிலைக் கவிதைகள் அவரது மற்றொரு பக்கத்தைக் காட்டுகின்றன. அவரது கவிதைகளில் கணிசமானவை அவரைப் பற்றிய கவிதைகள்தான் என்பதே என் கருத்து' என்றெழுதியுள்ளார்.

1979-ஆம் ஆண்டு காலப் பகுதியில் சண்முகம் சிவலிங் கம் அவர்கள் அக்கரைப்பற்று மத்திய கல்லூரியில் என்னு டைய உயர்தர வகுப்பிற்கு உயிரியல் படிப்பித்தார். மற்ற மாணவர்களெல்லோரும் அவரிடம் பாடம் படித்தார்கள். ஆனால் நானோ அவரையே படித்தேன். கடைசியில் அவர் போதித்த பாடத்தில் நான் அதிசித்தி பெறாதபோதும் அவ ரது எழுத்தை வாசிப்பதில் சித்தம் கொண்டு நான் கொஞ்சம் கொஞ்சமாய் அவரது இலக்கிய ஆர்வலனானேன். அக்கால கட்டத்தில் என்னைத் தவிர வேறெந்த மாணவருக்கும் அவர் ஒரு கவிஞரென்று தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. முதலாவது காரணம்: அவர் அடிக்கடி பாடசாலைக்குச் சமூகமளிக்க மாட்டார். இரண்டா வது காரணம்: பாடசாலைக்கு வருகை தந்தாலும் அவர் எந் தச் சந்தர்ப்பத்திலும் தன்னை ஒரு கவிஞராகக் காட்டிக் கொண்டதில்லை. மூன்றாவது காரணம்: என்னோடு படித்தவர் கள் எவரும் பத்திரிகைகள் வாசிப்பதில் அதிக அக்கறை காட்டியதில்லை. அந்த மாணவர்களில் அதிகம்பேர் அதிபரா கவும், அரசாங்க அதிபராகவும், தொழிலதிபராகவும், உத்தி யோகத்தர்களாகவும் பணிசெய்து இப்போது ஓய்வும் பெற்று விட்டார்கள்.

அனேகமான காலை வேளைகளில் பாண்டிருப்பிலிருந்து பஸ்ஸில் பயணித்து அக்கரைப்பற்று சந்தியில் இறங்கி அவர் மத்திய கல்லூரி பிஸ்கால் வீதியில் நடந்து சென்ற போதெல்லாம் அவரைக் கண்டால் எனது முன்பாறில் அவரை இருத்தி நான் சைக்கிளை மிதித்துகொண்டு பாடசா லைக்கு அவரோடு ஒன்றாய்ப்போன என் பள்ளிக்காலத்து பருவநினைவுகள் இன்னமும் எனக்குள் பசுமையாகவே இருக்கின்றன.

2010-ம் ஆண்டு காலத்தில் நான் சவூதியிலிருந்து இலங் கைக்கு விடுமுறையில் வந்தபோது ஒருநாள் நானும் ஆசு-கவி அன்புடீனும் சசி அய்யாவின் வீட்டுக்குச் சென்று அவ ரைச் சந்தித்துப் பேசினோம். நீண்டகாலம் கடந்தது என்ப தால் அவர் என்னை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. பேசிக்கொண்டிருந்தபோது அன்புடீன் என்னை அவரிடம் அறிமுகப்படுத்தினார். அவரிடம் நான், 'நான் உங்களிடம் படித்ததை விட உங்களையே அதிகம் படித்தேன், உங்கள் மாணவனாய் இருந்ததை விட உங்கள் வாசகனாய் இருப் பதே பெரும்பேறு' என்றேன். அதை அவர் ரசித்தார். எனது பேச்சை உற்று உணர்ந்த அவர் முகம் மலர்ந்தபோது நானும் மனம் மகிழ்ந்தேன். எனது தொழில், குடும்பம், வெளிநாட்டு வாழ்க்கை பற்றி அவர் விசாரித்தபோது அதனை விபரித்துச் சொல்லி என்னுடைய 'மழை நதி கடல்' கவிதை நூலையும் அவரிடம் கையளித்தேன். அப்போது அன்பு நண்பர் அன்புடீன் என்னுடைய இலக்கிய ஆர்வத் தையும் ஆக்கங்களையும் பற்றி அவரிடம் அதிகம் சொன் னார்.

அக்கரைப்பற்று முன்னாள் அதிபர் எம்.ஏ. உதுமாலெவ்வை அவர்களும் அப்பாடசாலையில் படிப்பித்த அக்காலத்தில் அய்யா சண்முகம் சிவலிங்கம் அவர்களும் சேர்ந்து இருவ ரும் எங்கள் பாடநேரம் தவிர்ந்த ஏனைய இடைவேளை நேரங்களில் தமிழிலக்கியம் படிக்கும்படி ஊக்குவித்தார்கள். வகுப்பு மாணவர் ஒவ்வொருவரும் 25 சதம் பங்களிப்புச் செய்து கல்கி, தீபம், தாமரை, சுபமங்களா, விருட்சம், குமு-தம், ஆனந்த விகடன் ஆகிய தமிழகச் சஞ்சிகைகளை வாங் கிப் பகிர்ந்தளித்து எங்களெல்லோரையும் படிக்கும்படி பரிந் துரைத்து எங்கள் வகுப்பு மாணவர்களையெல்லாம் வாசகர்க ளாக்கி விட்டார்கள். தமிழ் கலை இலக்கியத்திலும் அவர்கள் பாடசாலையில் அன்று விதைத்த சிறு விதைதான் என்னை இன்று ஓர் இலக்கிய ஆர்வலனாக வளர விட்டிருக்கிறது என் பதை நன்றியோடு நினைவுகூர்ந்து கொள்கிறேன். அந்த அனுபவத்தின் அடிநாதமாக என் பள்ளி ஆசிரியர் பற்றிய இலக்கிய வேட்கையில் நான் இவ்வாறு ஒரு கவிதை எழுதி னேன்.

*'என் பள்ளிப் பருவத்தில்*
*போதனையாணி அறைந்த என்*
*போதனாசிரியரே அய்யா*

*கல்லும் சாந்தும் கொண்டு கட்டிய*
*கட்டடங்கள் மட்டும்*
*கல்விக்கூடங்கள் ஆகா என்றீரே, எனக்கு*
*பள்ளி முக்கியமின்றி*
*படித்துத் தந்த வாத்தியார் நீங்களே*
*முக்கியமானீர்கள்*

*தமிழ் தழைத்து வளர்ந்தது*
*ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரென்று*
*இதிகாசத்தைக் காட்டினீர்கள்*

*இலக்கணம் தோன்றியிருக்கிறதே*
*இலக்கணம் தோன்ற வேண்டுமானால்*
*இலக்கியங்கள் அதற்கு முன்பே*
*தோன்றியிருக்க வேண்டுமென்றீர்கள், ஆனால்*
*இரண்டாயிரம் ஆண்டுகளாய்*
*வரலாற்றை மாத்திரம்*
*வைத்துக் கொண்டிருக்கும் தமிழ்மொழி*
*இப்போது மட்டும் ஏன்*
*போராடிக்கொண்டிருக்கிறது அய்யா?*

*நீங்கள் சூரியன்*
*உங்கள் ஒளிபட்டே*
*என்னிருள் சிதறியது அய்யா*

*வெண்ணிலவாக*
*வெளிச்சம் பாய்ச்சியது*
*பகலுக்கு?*
*குரு பார்வைதான்*
*ஒளியூட்டியது*
*சிஷ்யனுக்கு அய்யா*

*அப்போது என்னோடுதான்*
*எல்லா மாணவர்களும்*
*உங்களிடம் படிக்க வந்தார்கள், ஆனால்*
*நான் மட்டும்தான் இன்னமும்*
*உங்களையே*
*படித்துக் கொண்டிருக்கிறேன் அய்யா*

*அறிவிலிகள்தான்*
*அரசியல் விழாக்களை*
*அதிகம் அலங்கரிக்கிறார்கள்*
*அதனால்தான்*
*அறிவாளிகளுக்கு இங்கே*
*அவலம் அய்யா*

*நான்*
*கற்றது கையளவு*
*கல்லாதது கடலளவு*
*உங்கள்*
*உள்ளமோ உலகளவு*
*உங்கள்*
*மேதைமை ததும்பும் உள்ளமோ*
*காற்றுத் துவைத்துக்*
*காயப்போட்ட விண்ணளவு*

*'வரப்புயர' என்பது*
*பழமொழி*
*'ஆசிரியர் உயர' என்பதே*
*புதுமொழி அய்யா'*

அவரது கவிதைகளில் போருக்குப் போனாய் போ, ஆறாத ஆறுகள், உறவும் நினைவும் ஒரு பாலைவனத்தின் குரலும், தீராமை, நிழல் கோடுகள், நீக்கல்கள், குருவிமனம், இரவின் இறங்கு துறையில், கைகுலுக்கும் காலம்வரை, சிதைந்து போன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும் ஆகிய கவிதைகள் இயல்பான அவரது சமீபத்தைய சொந்த அனுபவங்களைப் பிரதிபலிக்கின்றன. எல்லாக் கவிதைகளும் அவரது வாழ்க்கையையும், சமுதாயத்தையும் சாடுகின்றன. சோகத்தின் சுடுதல் என்பது உற்றவனுக்கே தெரியும் அன்றி உணர்ந்தவனுக்கே தெரியும். அவரது கவிதைகள் முற்றிலும் சமூக விமர்சனக் கவிதைகளாகவே இருப்பது வரலாறாய் இருந்தாலும் அவரது வாழ்க்கை நியாயங்களுக்கு காது கொடுங்கள் என்ற தொனியிலேயே அவை வாசகர்களை உச்சரிக்க வைக்கின்றன.

'சிதைந்து போன தேசமும் தூர்ந்துபோன மனக்குகையும்' என்கிற கவிதை அவரது சுயத்தைப் அழுத்திப் பேசுகிறது. தன் தாயகத்தை நேசிக்கும் தேசாபிமானியாகவும் மானுடத்தை நேசிக்கும் மனிதாபிமானியாகவும் தன் கவிதையில் அவர் பேசுகிறார்.

*'ஒரு நத்தைதான் நான்*
*எனினும்*
*முடியவில்லை என்னால்*
*இந்தப் பயங்கர நிர்மூலத்தின்*
*தனிமையில் உறைந்து கொள்ள*

*இந்த உடைந்த சிதைவுகளுக்கிடையில்*
*எப்படி நான் எனது*
*ஓட்டினுள் புகுந்து கொள்வேன்?*

*இயன்றவரையும் எனது உணர்கொம்புகளை*
*நெரித்து நெரித்து நீட்டி*
*மிக நீட்டியே வைத்துள்ளேன்*

*நான் சுரக்கின்றேன்*
*இந்த இடிபாடுகளை*
*வழுக்கிக் கடந்து செல்ல*
*எனது மசகு முழுவதையும் சுரக்கின்றேன்*

*மசகு உறைந்து போகிறது*
*இடிபாடுகளின் வன்மத்தில்*
*நிறமற்ற என் குருதியையும்*
*நிணத்தையும் கூடச் சுரக்கின்றேன்*
*இதயத்தையும் அந்தரங்கங்களையும் கூட என்னுள்*
*குழி பறித்துக் குழி பறித்துக்*
*குதப்பிச் சுரக்கின்றேன்.*

*என் உள்ளே*
*இப்போது எல்லாம் கோது*
*தூர்ந்துபோன வெறும் மனக்குகை*
*எனது உணர்கொம்புகளை*
*இன்னும் நீட்டுகிறேன்*
*சிதைந்துபோன எனது தேசத்தை*
*அணைத்துக் கொள்ள'*

கவிதை என்பது ஒரு மொழியின் சொற்களையும் ஓசைகளையும் படிமங்களையும் பயன்படுத்தி உணர்ச்சியை வெளிப்படுத்திக் கலைத்துவமாகக் கொணரும் ஓர் இலக்கிய வடிவம். ஒரு நல்ல கவிதையை ஒரு பாமரனிடம் கூடப் படித்துக் காட்டினால் அவனது மனதில் நிச்சயம் பதியும், பாதிக்கும் என்பது உண்மை. இந்த அவசர நாகரீக உலகிலும் ஓர் அந்தஸ்தும் இடமும் இருப்பும் கவிதைக்கு இருக்கிறதென்பது கவிஞர் சண்முகம் சிவலிங்கத்தின் கவிதைகளைப் படிக்கும் போது கண்டுகொள்ள முடியும். அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று: தாய்மொழியோடு பிணைந்த கவிதைக்கலை. இரண்டாவது: வாழ்வின் வலிகொண்ட அவரது மனோபாவம்.

நவீன கவிதையின் ஆற்றல்மிக்க குரல் இப்படித்தான் வெளிப்படுகிறது. இந்தக் குரலின் வீரியத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியும். நம் தாயகத்தில் பெருகிவரும் இனவாதம், இன ஒடுக்குமுறை, ஆதிக்கங்கள் நம்மை சிதைக்கவே செய்கின்றன. நம்மிடமிருந்து இனத்தை, நிலத்தை, மொழியை, இயற்கையை, கல்வியை, பண்பாட்டை, தொழில் திறன்களைப் பறித்துக்கொள்வதன் மூலம் ஆதிக்கங்கள் தம்மை வலுப்படுத்திக் கொள்கின்றன. இந்தப் பாசிசத்தைக் கண்டு கொண்டவர்கள் பெருங் கவிஞர்கள். அவர்களே மெய்யியலாளர்கள், நமது சமூகநீதியாளர்கள். மக்களை இந்த இயக்கம்தான் உயிர்ப்பிக்கின்றது. இந்த உயிரியக்கத்தின் தூண்டுதலில் நாம் படைப்பது கவிதை. இந்தக் கவிதை உலகம் உள்ளவரை வாழும். மானுடம் உள்ளவரை வளரும்.




isarudeen@thaiveedu.com



# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி
# "கக்கூசுப் பேச்சு - பெரும் வெட்கக் கேடாச்சு"
## கவிதையில் அவலத்தைப்பாடிய கவிஞர் எலியாசன்
36

- மல்லியப்புசந்தி திலகர் -

மலையகம் 200 குறித்த பல்வேறு கதையாடல்கள் உரையாடல்களுக்கு மத்தியில் அண்மைக் காலங்களில் மலையகத்தில் 'கக்கூசும்' ஒரு பேசுபொருளானது. யு ரியுப் பதிவாளர் ஒருவர் மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் நிலவும் கழிப்பிட வசதிக் குறைபாடு தொடர்பாகத் தன்னுடைய பதிவுகளில் காட்சிப்படுத்த, அதற்கெதிராகப் பலரும் பதிவுகளைச் செய்திருந்தனர். அதே நேரம் அத்தகைய வசதி வாய்ப்புகள் குறைந்தவர்களுக்கு மலசலகூடம் அமைக்கவெனத் தனது யு ரியுப் தளப் பார்வையாளர்கள் நிதியுதவி அளித்து இருப்பதாகவும் அதனைக் கட்டுவிப்பதில் அரசியல் தலைவீடுகள் தடையாக இருப்பதாகவும் செய்திகள் உலாவின.



இங்கே அடிப்படைப் பிரச்சினை காணியே அன்றிக் கக்கூசு அல்ல என்பது மலையக அரசியலைப் புரிந்துகொள்வதனாலேயே முடியும். தனக்குத் தேவையான 'கக்கூசை' அமைத்துக்கொள்ளக்கூடக் காணி உரிமையற்றவர்களாக மலையகப் பெருந்தோட்ட மக்கள் வைக்கப்பட்டுள்ளனர் என்கிற அரசியல் புரிதலின் ஊடாக இந்த விடயம் அணுகப்படவேண்டுமேயன்றி பதினேழு இலட்சத்தில் பத்து மலசலகூடங்களை அமைத்து விடுவதனால், அல்லது அதற்கு உதவி விடுவதனால் மாத்திரம் தீர்க்கப்படக்கூடிய பிரச்சினை இதுவல்ல.

இந்தக் 'கக்கூசு' அரசியலை இளைய தலைமுறையினர் யு ரியுப் தளக் காலத்தில் பேசிக்கொண்டாலும் அதனை மூன்று தசாப்தங்களுக்கு முன்பதாகக் கவிதைகளில் பதிவு செய்த மலையகக் கவிஞராக சி.ஏ. எலியாசன் அவர்களை அடையாளம் காட்ட முடியும்.

*மூச்சுக்குப் பஞ்சம் - மல*
*வீச்சுக்குச் சொந்தம்*
*லயக்காடு வீடு - அதில்*
*பயனேது? கேடு!*
*நாசிக்குக் கேடு - விடும்*
*மூச்சுக்குப் பாடு*
*கூற்றத்தை ஒத்த - மல*
*நாற்றத்தில் செத்தோம்!*
*கூச்சத்தை விட்டு - பலர்*
*ஏச்சுக்கள் பட்டு*
*முற்றத்தில் நீரும் - மலம்*
*சுற்றெங்கும் நாறும்*
*ஆச்செங்கும் கேடே - விடும்*
*மூச்சுக்கும் பாடே!*
*ஆவென்ற கூச்சல் - நோய்*
*காவென்று பேச்சே!*

*வெட்கத்தை விட்டு - ஏழைத்*
*துக்கத்தைச் சொன்னால்*
*கேட்பாரும் உண்டோ - நம்மை*
*மீட்பாரும் உண்டோ*
*கக்கூசு வீச்சும் - அந்தப்*
*பக்கத்தில் எங்கும்*
*குடிகொண்ட வீடு - செத்து*
*மடிகின்ற பாடு*
*சொர்க்கத்தில் வாழும் - துரை*
*பக்கத்தில் சென்று*
*குறை சொன்னால் கேளார் - ஒழுக்கக்*
*குறைவென்றே சொல்வார்!*
*கக்கூசுப் பேச்சு - பெரும்*
*வேட்கக் கேடாச்சு*
*கடைகெட்ட நாய்க்கு - நாம்*
*குடைபிடித்தால் ஏய்க்கும்!*

என மக்களின் மலசலகூடப் பிரச்சினையைக் கவிதையில் பதிவு செய்துள்ளதுடன் கடைசி வரியில் முதலாளித்துவம் மீதான விமர்சனத்தையும் ஆழமாகப் பதிவு செய்கிறார்.

இதனையே மரபுக் கவிதை ஒன்றில் பதிவு செய்யும் கவிஞர் எலியாசன் இவ்வாறு எழுதுகிறார்.


*பத்தறைகள் கொண்டதென்றால் லயமே ஆகும்*
*படுத்துறங்கி எழும்புவது நூறே ஆகும்*
*நித்திரையில் நினைவிழந்து சொர்க்கம் சேரும்*
*நெடுமூச்சும் பெருமூச்சும் வாழ்வேயாகும்*
*சுத்தமென ஒன்றில்லை! சுகத்தைத் தேடும்*
*சுதந்திரமோ அற்றதொரு கட்டுக்கோப்பு*
*இத்தனைக்கும் மலங்கழிப்புக் கூடம் ஒன்றே*
*முடைநாற்றம் மூக்கடைப்பு மூச்சிச் சிக்கல்*
*கழிவறையோ செல்வர்க்கோ ஆளுக்கொன்று*
*காடுழைக்கும் ஏழைக்கோ நூற்றுக் கொன்று*
*... ... ...*
*நூறாண்டு மேலாகும் நமையாண்ட வெள்ளையனோ*
*நமக்கிந்த லயத்தைத் தந்தான்*
*நோயாள பேயாட நாலுபுறம் நாற்றமெழ*
*நாய் பூனை ஆன வாழ்வே!*

எனவே, இன்றுதான் மலையகத்தின் கக்கூசுப் பிரச்சினை வெளியே சொல்லப்படுகின்றது என்பதோ, அதனைத் தீர்க்க அணிதிரண்டு பணம் வசூலிக்கப்படுகின்றது என்பதற்கோ அப்பால், இது அந்த மக்களின் அடிப்படை மனித உரிமைப் பிரச்சினை என்கின்ற அடிப்படையில் மலையக இலக்கியத்தின் வழியாகப் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றது என்பதற்குக் கவிஞர் எலியாசனின் கவிதைகள் சாட்சியாகிறது.

'பூண்டுலோயாப் பகுதியில் தோட்ட உத்தியோகத்தராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டாலும், உழைக்கும் தொழிலாளர் வர்க்கத்தின் தோழராகவே இருந்து வருகிறார்' எனக் கவிஞர் எலியாசனை அவரது 'லயக்கோடி' நூலில் அறிமுகஞ் செய்கிறார் கவிஞர் சு. முரளிதரன்.

கவிஞர் எலியாசன் நுவரெலியா மாவட்டத்தின் பூண்டுலோயா -நம்பொடை பகுதியில் நீண்டகாலமாக வாழ்ந்தாலும் அவரது பூர்வீகம் இரத்தினபுரி மாவட்டம் றக்குவானப் பகுதியாகும். தோட்டப் பகுதியிலே பிறந்து வளர்ந்த அவரது அனுபவம் தொழிலாளர்களின் வாழ்வியலை மிகவும் ஆத்மார்த்தமாகப் பதிவு செய்யும் கவிதைகளாகத் தருவித்துள்ளன.

'லயக்கோடி' என்கிற கவிதைத் தலைப்பே மிகவும் நுணுக்கமானது. லயம் எனும் அந்தப் பத்தறைகள் கொண்ட வீட்டுத் தொகுதியின் இரண்டு பக்கங்களும் 'கோடி' என அழைக்கப்படுவது. கோடிப்பக்கம் தான் அந்த லயங்களில் வாழும் மக்களின் வாழ்வியல் பரிமாணங்களை வெளிப்படுத்தும். கக்கூசு




முதல் 'காதல்' வரையான பல்பரிமாண வாழ்வியல் பக்கத்தை ஒரு குறியீடாகக் காட்டுவதாக இந்த 'லயக்கோடி' எனும் தலைப்பு அமைந்து காணப்படுகிறது. அந்த மக்கள் மத்தியில் அமைந்த காதல் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதற்கு இந்த 'லயன்' வீடமைப்பு முறை எத்தனை இடையூறுகளை ஏற்படுத்துகிறது என்பதை உணர்வுடன் பதிவு செய்யும் தொகுப்பு இந்த 'லயக்கோடி' எனலாம்.

எலியாசனின் 'லயக்கோடி'-க் கவிதைகள் குறித்து மூதறிஞர் சக்தீ பாலய்யா இவ்வாறு பதிவு செய்கிறார்: 'இயற்கை வளஞ்சூழ் மலையகக் குன்றுகளையும், பள்ளத்தாக்குகளையும் வெளிகளையும் ஆறுகளையும், நீர் வீழ்ச்சிகளையும் காதல் உணர்வின் கனிவுடன் ஒப்பிட்டு 'லயக்கோடி' மலையக மக்களின் உள்ளத்தில் புத்துணர்வைத் தூண்டும் அமுதமாகவே, காதல் அமுதமாகவே கனிந்துள்ளது'. கவிஞர் சக்தீ பாலய்யாவின் இந்தப் பார்வைக்குக் காரணம் அந்தத் தோட்டச் சூழல் காதல் உணர்வுகளுக்கு எந்தளவு தூரம் இடமளிக்கின்றது அல்லது இடமளிக்கவில்லை என்பதை எடுத்துச் சொல்வதாக எலியாசன் கவிதைகள் பலதும் அமைந்து இருப்பதாகும்.

லயத்து வாழ்க்கையில் தனிமனித அந்தரங்க வாழ்வு எத்தனை கொடுமையானது என்பதனை மிகவும் உணர்வு பூர்வமாகப் பதிவு செய்கிறார் கவிஞர் எலியாசன்.

*அடுப்படியில் ஆத்தாவும்*
*அரவணைத்த தங்கையுடன்*
*அயர்ந்தங்கு தூக்கம் இல்லை*
*இரவென்றால் பயமச்சம்*
*இரவென்றால் குலைநடுக்கம்*
*விளக்கென்றால் துயிலா தம்பி*
*அடம்பிடித்துக் கொண்டிருந்தான்*
*அணைக்காதே விளக்கென்று*
*அவனெங்கே உலகைக் கண்டான்*
*அப்பனுக்குக் கொக்கிருமல்*
*அடுத்தடுத்துக் குடைந்தெடுக்கும்*
*கால்மாட்டில் சாய்வு கொண்டார்*
*அடைத்து வைத்தப் பெருவெள்ளம்*
*உடைப்பெடுத்துப் பாய்வதுபோல்*
*ஆசைகொண்டு வேலன் துடித்தான்*
*அருச்சிலைக்குள் பெருஞ்சுகமே*
*அரவணைக்க ஆற்றுவெள்ளம்*
*ஆகுமொரு ஆவல் கொண்டான்*
*கொடுபிடிக்குள் கொள்வதென்ன*
*கொண்டசுகம் பெறுவதெங்கே*
*கலக்கமிந்தக் காதல் வாழ்வே*
*கஞ்சிக்கும் கந்தலுக்கும்*
*காதலுக்கும் போராட்டம்*
*கடைகெட்ட சமூகம் இதுவே!*

இப்படியாக மலையக லயத்து வாழ்க்கை அவலத்தைப் பாடியுள்ள கவிஞர் எலியாசன் மலையக அரசியல் மீதான விமர்சனத்தைப் பின்வருமாறு தனது உரையிலே பதிவு செய்கிறார்.

'தாலாட்டுப் பாடலில் தழுவிய சுகம் கோலாட்டக் கும்மியில் கொண்டதோர் இன்பம் அனுபவித்து மகிழ்ந்த மலையகம், இன்றோ பெரும் வளத்தை இழந்து தன்னையே தரக்குறைவாக எண்ணி எடைபோட்டுக் கொண்டிருக்கிறது. ஆட்சி சுகம் அனுபவிக்க பொய்யாட்சிக்கு விருந்தாகிப்போகின்ற மலையகத் தலைமைகளுக்குப் பின்பாட்டைப்பாடி பெருங்கேட்டில் வீழ்ந்து கிடப்பது மலையகச் சமூகமே! தொழிற்சங்கங்கள் அரசியல் வைப்பாட்டியாக மாறிய பின் அவைகளை நம்பி அவக்கேட்டில் வீழ்ந்து கிடப்பது மலையகமே! லயக்கோடியில் ஆடிய அரைக்கோவணக் காவடிகள் இன்று அதிகாரப் பணிமனையில் அமர்ந்திருக்கின்றனர்! ஆட்சிப் பெருமன்றங்களில் அதிகாரம் செலுத்துகின்றனர்! இவர்களை நம்பியே இருள்சூழ்ந்த சமூகத்தைக் கட்டி எழுப்பிட காளையர் கூட்டம் கற்ற வாலிபக் கூட்டம் வேண்டும்! இத்தகைய உணர்வலைகளில் எழுந்ததே லயக்கோடிக் காவியம்!'

எனவே, எலியாசனின் கூற்றும் கூட இளையவர்களை, கற்ற காளையர் கூட்டத்தை அரசியல் தலைமையை ஏற்க அழைப்பு விடுப்பதாகவே அமைந்துள்ளது. அவரது படைப்பின் வெளிப்பாடுகளும் கூட அந்தத் திசைநோக்கிய பயணத்துக்கு அழைத்துச் செல்வதாக அமைகின்றன.

'கவிஞரின் கவிதைகளைப் படித்த பொழுது புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பரம்பரையைச் சார்ந்தவராகத் தென்படுகிறார். சொற்களை அவர் லாவண்யமாகக் கையாளுகிறார். இன்றைய இளந்தலைமுறைக் கவிஞர்கள் இவரின் கவிதைகளைப் படிக்க வேண்டியது காலத்தின் தேவையாகும்' என இளைய தலைமுறையினருக்கு எலியாசன் கவிதைகளைப் பரிந்துரை செய்கின்றார் மலையகம் வெளியீட்டகத்துக்காக இந்த நூலைப் பதிப்பித்த அந்தனி ஜீவா.

*'எலியாசன் கவிதைகளை*
*எழுத்தெண்ணிப் படிக்கையிலே*
*கலித்தொகையை மாந்திட்ட*
*களிப்புத்தான் பிறக்கிறது.*
*மலையகத்தில் புதுநூல்கள்*
*மலையளவு வேண்டும்.'*

எனக் கவிதையிலே தனது சக தோழர் எலியாசனை வாழ்த்துகிறார் ஆய்வு எழுத்தாளர் சாரல் நாடன்.

ஏராளமாகக் கவிதைகளை எழுதிக் குவித்த எலியாஸ் அவைகளைப் பிரசுரிக்க முடியாமல் தவித்துள்ளார். அவரது முழுமையான கவிதை ஆற்றலை வெளிப்படுத்துவதாக 'லயக்கோடி' வருகிறது. இதற்கு முன்னர் 'ஓவியம்' என்ற குறுங்காவியம் வெளிவந்தது எனக் குறிக்கின்றார் அரசியலாளர் ஓ.ஏ.-ராமையா. செங்கொடிச் சங்கத்தின் பொதுச் செயலாளராக நீண்டகாலம் பதவி வகித்த ஓ.ஏ. ராமையா அவர்களது பள்ளிக்காலத் தோழரான சி.அ. எலியாசன் இளம்பராயத்தில் இடதுசாரி அரசியல் செயற்பாடுகளிலும் ஆர்வம் காட்டியுள்ளார்.

இவர் எழுதிய 'தோட்டி' எனும் தொடர்கதை வீரகேசரியின் மலையக வார இதழான சூரியகாந்தியில் 2013/2014 காலப் பகுதியில் வெளிவந்தது. இவரது 'லயக்கோடி' கவிதை நூலுக்கு மத்திய மாகாணச் சாகித்ய பரிசு கிடைத்தது.

கவிஞர் சி.ஏ. எலியாசன் 2023 ஜுன் 18-ம் திகதி ரம்பொடையில் தனது 78-வது வயதில் காலமானார்.

(தொடரும்)



thilagar@thaiveedu.com



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# வேரினிடை

## டீன் கபூரின் ஓவிய மொழிக் கவிதைகள்

- ஜிஃப்ரி ஹாசன்

ஒரு சொற்களின் தொகுப்பிலுள்ள சொற்கள் எப்போது கவிதையாகின்றன என்ற கேள்வி, இன்று தமிழ்ச் சூழலில் பெருக்கெடுத்திருக்கும் தமிழ்க் கவிதை வெளியை உற்று நோக்கும் போது தவிர்க்க முடியாமல் எழுகிறது. இதுவரை காலமும் கவிதை குறித்து சொல்லப்பட்ட வரையறைகளும், நாம் கொண்டிருந்த புரிதல்களும், முக்கியத்துவம் இழந்து போகின்ற ஒரு காலகட்டமாகவும் இது இருக்கிறது என்பதையும் நினைவுபடுத்திக்கொள்கிறேன். ஆனாலும் இந்த உடைப்பு எல்லா எழுத்துகளையும் இலக்கியப் படைப்பு என்ற அந்தஸ்தை நோக்கி உயர்த்துவதில்லை என்று உறுதியாக நம்புகிறேன். கவிதையின் வடிவங்கள், உள்ளீடுகள்,



எடுத்துரைப்பு முறைகள் என காலத்தில் மாறலாம். ஆனால் கவிதைக்கென ஒரு அடிப்படையான சாரம் இருக்கிறது. அது கவிதையின் ஆன்மா போன்றது. சொற்களின் தொகுப்பை கவிதையாக ஆக்கும் மந்திரம் அதுதான்.

ஒரு கவிதையில் நாம் காணும் சொற்களின் ஒருங்கிணைவை அல்லது ஒழுங்கின்மையை 'ஏதோவொன்று' (Something) கவிதையாக்குகிறது. சொற்கள் நேர்த்தியாக அடுக்கப்பட்டிருக்கின்றன என்பதற்காக, அவை எல்லாம் ஒருங்கிணைந்து ஒரு மாபெரும் கருத்தை தருகின்றன என்பதற்காக அது கவிதையாகிவிடுமா? அந்த சொற்களின் ஒருங்கிணைவை அல்லது ஒழுங்கின்மையை கவிதையாக்கும் அந்த 'ஏதோவொன்று' இல்லாத எந்த சொற்குவியலும் கவிதையாவதில்லை.


இன்று கவிதை குறித்த வரையறைகள், கோட்பாட்டு வியாக்கியானங்கள் அர்த்தமற்றதாக அல்லது கல்விப்புலத்துக்குள் மட்டுமே உள்ளொடுங்கியதாக இருக்கலாம். ஆனால் சொற்களின் தொகுப்பொன்றை வாசிக்கும் போது இது கவிதைதான் என்ற உணர்வை நமக்குள் பொங்கவைக்கும் அந்த 'ஏதோவொன்று' சொற்களால் ஆக்கப்பட்ட படைப்புக்குள் இருந்தாக வேண்டும் இல்லையா?

ஒரு படைப்பு ஏதேனுமொரு அர்த்தத்தை பிரதிபலித்தாக வேண்டும் என்ற நிலையிலிருந்து காலம் நம்மை நகர்த்தியிருக்கிறது. அது ஓர் அர்த்தத்தையோ அல்லது அர்த்தங்களையோ அல்லது அர்த்தமின்மையையோ வெளிப்படுத்தலாம். ஒரு கவிதை உள்ளீடு சார்ந்து எதனையும் கொண்டிருக்கலாம். அது எந்த வடிவத்திலும் வெளிப்படலாம். எந்த அளவையும் கொண்டிருக்கலாம். அப்படியானால் அந்த சொற்கூட்டத்தை கவிதையாக்கும் அந்த 'ஏதோவொன்று' எதுவாக இருக்கலாம். என்னைப் பொறுத்தவரை கவிஞர் கையாளும் மொழி அழகியலும், அவர் கிளர்த்தும் உணர்வெழுச்சியும்தான் அந்த 'ஏதோவொன்று' என்று நான் நம்புகிறேன். ஒரு பூமரத்தை இரசிப்பதைப் போல, ஒரு வண்ணத்துப்பூச்சியை இரசிப்பது போல, ஒரு மலையருவியை இரசிப்பது போல, ஒரு கலைப்படைப்பு இரசிக்கப்படுவது போல ஒரு கவிதையும் தான் இரசிக்கப்படுவதற்கான அடிப்படையை முதலில் கொண்டிருக்க வேண்டும். அதற்கப்புறம்தான் கவிதை குறித்த ஏனைய வியாக்கியானங்கள், கருத்துரைகள், விவாதங்கள் நமக்குத் தேவையாகின்றன.

ஒரு தேர்ந்த வாசகரை ஒரு கவிதை இரசனை சார்ந்து ஏமாற்றிவிடுமாக இருந்தால், அந்த இடத்துக்கு அப்பால் அந்தக்

கவிதையால் நகர முடியாது. அது சம்பிரதாயத்துக்காக ஓதி விட்டு முடித்துக்கொள்ளும் உச்சாடனம் போல் ஆகிவிடும். கவிதை அதன் வெளிப்படையான அர்த்தத்துக்காக மட்டுமே முக்கியத்துவம் பெற்றுவிடுவதில்லை. எந்த அர்த்தத்தையும் அது கொண்டிருக்காவிட்டாலும் கூட ஒரு மகத்தான கவிதை யாக நின்று நிலைக்கலாம். இன்றைய அர்த்தமின்மை என்ற கருத்துரைக்குள் நான் செல்ல விரும்பவில்லை. டீன் கபூரின் கவிதைகள் சார்ந்து கவிதை குறித்த எனது இந்தக் கண்ட டைதல்களை உரசிப் பார்ப்பதே என் எண்ணம்.

பொதுவாகவே மருதமுனைக் கவிஞர்கள் வெவ்வேறு கவிதை மொழியைப் பரீட்சித்துப் பார்ப்பவர்கள். இப்போது முகநூலில் உலாவரும் பின்நவீனக் கவிஞர்கள் மாதிரி ஒரே கவிதையை, ஒரேமாதிரி, ஒரே நடையில், ஒரே தொனியில் எழுதிக் குவித்து வாசகரைச் சலிப்பூட்டும் போக்கு அவர்களி டம் சற்றுக் குறைவாக இருப்பதாகவே நினைக்கிறேன். அது ஒரு ஆரோக்கியமான குறிகாட்டிதான். டீன் கபூரின் இதற்கு




முந்தைய தொகுதியான சொற்களில் சுழலும் பிரபஞ்சம் தொகுப்பை வாசித்த போது அவரிடம் ஒரு வித்தியாசமான கவிதை மொழி உருக்கொள்வதை உணர்ந்தேன். அது அவ ரைத் தனித்துக் காட்டக்கூடியது. அதிலிருந்து அடுத்த கட் டத்தை நோக்கிய நகர்வை அவரிடமிருந்து நான் எதிர்பார்த் தேன்.

டீன் கபூரின் இந்தத் தொகுப்புக் கவிதைகள் ஒரு கவிஞரின் புற உலக வாழ்வு அவரது அகவுலகில் ஏற்படுத்தும் சலனங் களாகவே தெரிகின்றன. டீன் கபூரின் புறச் சூழல் அவரது அகத்தில் எப்படி உருக்கொள்கிறது, அவரது உணர்வுகளை எப்படி வடிவமைக்கிறது என்பதையே கூடியபட்சமாக இந்தக் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. ஒரு கவிஞரின் மனம் இந்தப் புற உலகோடு வினைபுரியும் பல்வேறு தளங்களை யும் இதிலுள்ள கவிதைகள் ஊடறுத்துச் செல்கின்றன.

சில கவிதைகள் டீன் கபூரின் சமூக அரசியல் நிலைப்பாடு கள் மீது கவனம் கொள்கின்றன. தேர்தல் பிரச்சாரங்களின் எல்லை மீறல்கள், தமிழர் - முஸ்லிம்கள் உறவு, சிங்கள இனமேலாதிக்க நகர்வுகள், இன அரசியலின் முகம் என விரி யும் அரசியல் தளங்களை இவரது இந்தத் தொகுப்புக் கவி தைகள் காலூன்றி நிற்கின்றன.

*அறப்போராட்டச் சோறு மணக்கத் தொடங்கிவிட்டது*
***நேற்றுவரை நெருப்பில் சூடு காட்ட***
***எடுத்த பிரயத்தனம்***
***ஈரக்கொள்ளியால் இயலாமல் போயிற்று***

இலங்கை முஸ்லிம் அரசியல் சூழலில் அறப்போராட்டம், ஈரக்கொள்ளி, பழஞ்சோறு போன்றன எதன் குறியீடுகள் என் பதை நாம் அறிவோம்.

குடை எனும் கவிதையும் அரசியல் பேசும் கவிதைதான். இந் தக் கவிதை இணக்க அரசியலைப் பேசுகிறது என்ற வகை யில் குறிப்பிடத்தக்க ஒன்றாக மாறுகிறது. குறிப்பாகத் தமிழர் -முஸ்லிம்கள் உறவைப் பேசுகிறது என நினைக்கிறேன். டீன் கபூரைப் பொறுத்தவரை நிஜக் குடையைவிட மனக்குடையே விசாலமாக இருக்கிறது. முதலில் மனித உறவுக்கு நித்திய மான காரணி மனவிசாலம்தான் என்ற புரிதலை வாசகருக்கு கொடுக்கிறது இந்தக் கவிதை.

சில கவிதைகளில் மொழியின் கவித்துவ அழகியலையும் ஆழமான குறியீடுகளையும் பயன்படுத்தும் டீன் கபூர் சில கவிதைகளில் மிக எளிமையான நாட்டார் மொழியையும் பயன்படுத்துகிறார். எடுத்துக்காட்டாக காலம் கரைந்தொழு கும் நதி என்ற கவிதையைச் சொல்லலாம். அரசியல்தான் கவிதையின் மையப் புள்ளியாக இருக்கிறது. தன்னினம் சார்ந்த பறவை இந்தத் தளத்தில் நகரும் மற்றொரு கவிதை. இறக்கைகள் கொடுகிப் போன திகில் நிறைந்த ஒரு வாழ் வையும், அச்சம் உறைந்திருந்த காலத்தையும் பேசும் கவிதை.

டீன் கபூர் மிக ஆழ்ந்துசென்று, கூர்மையாக அரசியலைப் பேசுவதில்லை. ஒரு கவிஞரின் அரசியல் நோக்கு என்பது ஒரு கவிஞருக்கான பார்வையோடு இருக்க வேண்டும். ஓர் அரசியல்வாதியினதோ, ஒரு படைத் தளபதியினதோ, ஒரு சமூக ஆய்வாளரினதோ பார்வையிலிருந்து ஒரு கவிஞரின் அரசியல் நோக்கு உண்மையில் வித்தியாசமானதுதான். கவி ஞரின் அரசியல் நோக்கு தர்க்கத்துக்கு அப்பாற்பட்டது. உள்ளார்ந்த சுயநலன்களுக்கு அப்பாலானது. அந்தரங்கமற் றது. இன எல்லைகள், மத எல்லைகள், மொழி எல்லைகளற் றது. முழு மானுடத்துக்குமானது. இந்த மானுடப் பார் வையை கவிஞரின் அதீத உணர்ச்சி சிலவேளைகளில்

காயப்படுத்தும் சந்தர்ப்பங்களும் உண்டு. அதில் கவனமான ஒரு பயணத்தையே கவிஞர் டீன் கபூர் மேற்கொள்கிறார். அதேநேரம் உள்ளூர் அரசியல் சார்ந்து அவர் வெளிப்படுத்தும் குரல் ஊன்றிக் கவனிக்கத்தக்கதாகவும் இருக்கிறது.

டீன் கபூரின் கவிதை மொழியும், உணர்வுத் தளமும் ஒன்றுக்கொன்று இயல்பாக இணையக்கூடியன. எனினும் அவரது பெரும்பாலன கவிதைகளின் உள்ளீடுகளும் மொழியும் எளிமையானவை அல்ல. மொழியின் அழகியலும் குறியீடுகளும் சந்தமும், அமைதியும் எளிய வாசகரை எடுத்த எடுப்பிலேயே அரவணைத்துவிடாதவை. அவரிடம் ஓர் உழைப்பை எதிர்பார்ப்பவை. இப்படியான சந்தர்ப்பத்தில் சொற்களின் தொகுப்பான கவிதைகளோடு வாசகரின் மெனக்கெடலுக்கு ஏற்றவகையில் அதனை கவிதையாக்கும் அந்த ஏதோவொன்று அந்தச் சொற்களின் தொகுப்புக்குள் இல்லையென்றால் வாசகர் ஏமாற்றப்பட்டு விடுவார். அந்தக் கவிஞரும் காலத்தில் நிலைக்கமாட்டார். டீன் கபூரின் இந்தத் தொகுப்பிலுள்ள கவிதைகளுக்குள் வாசக இரசனைக்குத் தீனி போடும் கவிதைகள் தாரளமாக இருப்பதாக நினைக்கிறேன்.

அதே நேரம் மிக எளிமையான கவிதைகள் கூட இத்தொகுப்பிலுள்ளன. நீதான் கவளம் கவிதை தமிழின் தீவிர இலக்கியப் பரப்புக்கு வெளியே நிகழ்ந்த புதுக்கவிதை விவாதங்களையும் அந்தப் புதுக்கவிக் கோமான்களையும் நினைவுக்கு கொண்டு வரும் எடுத்துரைப்பு முறையைக் கொண்டிருக்கிறது. தமிழின் இன்றைய கவிதைப் போக்கு அதன் பின் பல மாறுதல்களை நிகழ்த்திக் காட்டிவிட்டது. தாய்க்கும் மகனுக்குமிடையில் இருக்கும் ஆழ்ந்த உறவையும் அன்பையும் கவிதை பேசுகிறது. ஆனால் வெளிப்பாட்டு உத்திதான் தேய்வழக்காகத் தெரிகிறது. அதாவது -

*'நீ*
*ஒவ்வொரு நாளும்*
*என்னை புடைத்துக் கொண்டிருக்கிறாய்*
*நீ எனது சுளகு*
*நீ*
*ஒவ்வொரு நாளும் என்னை*
*அரித்துக்கொண்டிருக்கிறாய்*
*நீ எனது அரிக்குமிளாய்*
*நீ*
*ஒவ்வொரு நாளும் என்னை*
*இடித்துக்கொண்டிருக்கிறாய்*
*நீ எனது உரல்'*
என தொடர்ந்து செல்கிறது கவிதை.

தலைமுறை இடைவெளியை புதிய தலைமுறை இழந்துவிட்ட வாழ்வின் சாரத்தை எப்போதும் ஏக்கமுடன் நினைவு கூறும் ஒரு குரல் டீன் கபூரிடமிருந்து மிருதுவாகக் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

தழுவியும் தழுவாமலுமான காலம் இதற்கு நல்ல எடுத்துக் காட்டான கவிதை.

தன்னிரக்க, தற்குறிப்பேற்றக் கவிதைகளும் இத்தொகுப்பில் உள்ளன. இங்கு கவிஞர் தன்னை முன்னிறுத்தி தன்னுடன் தான் இயற்கையை, நடைமுறை வாழ்க்கையை, அரசியலை என எல்லாவற்றையும் ஒப்பிட்டு கவிதை நெய்கிறார். தன் புற உலகத்தை அகவுலகத்துடன் இணைக்கும் மார்க்கமாகவே டீன் கபூரின் கவிதைகள் தோற்றம் காட்டுகின்றன. இயல்பாக கவிஞர்களின் மனம் ஆகாயத்தின் அழகியலோடும், பூமியின் பூபாளத்தோடும் ஒட்டிக்கொள்கின்றன.

இத்தகைய சந்தர்ப்பங்களில் டீன் கபூரின் கவிதைகளில் கவித்துவ அழகியல் ஆங்காகாங்கே உச்சமாக வெளிப்படுகின்றன.

'சில நினைவுகளின் பாகங்கள் சிதைகின்றன' என ஓரிடத்தில் எழுதுகிறார்.

'கடிகாரத்தைச் சரிசெய்து கொண்டிருக்கிறது காலம்' என இன்னொரு இடத்தில் எழுதுகிறார்.

'குளிர் காய்ந்த காற்றின் மொழியில்' எழுதப்பட்ட கவிதைகளாக அவை தெறிக்கின்றன.

***'ஆதியில் இடிந்துபோன கல்லறைக்குள்***
***மெல்லிய இசையை மீட்டுகின்றது***
***காலாவதியான புல்லாங்குழல்'***

***'an expired flute***
***plays a soft tune'***

***'எனது மூக்கு நுனியைத் தொடும்***
***ஓர் ஈயின் காலடியில் சில நினைவுகள் செத்துக்கிடக்கின்றன'***

***'கனவின் ஆயிரம் பக்கங்கள் கிழிந்தன'***

***'எனது தலைமயிரைக் கோதும் பிரியம்***
***இன்னும் ஆதியில் அறைந்த ஆணிதான்'***

என்பது போன்ற வரிகளில் மிகுந்த மொழி அழகியலும், உணர்ச்சி வெளிப்பாடுகளும் மிக உச்சமாக வெளிப்படும் இடங்களாகும்.

ஒரு கவிஞராக டீன் கபூர் தன்னை உயர்த்திக்கொள்ளும், சாமான்யனிலிருந்து ஒரு விலகலை நிகழ்த்திக்கொள்ளும் தருணங்கள் அவரது கவிதைக்குள் அடிக்கடி நிகழ்கின்றன. ஒரு படைப்பாளியை இயக்கும் விசையே அந்தக் கர்வம் தான். அதை மட்டுமே கருப்பொருளாகக் கொண்டு சில கவிஞர்கள் தனித் தொகுப்பே வெளியிட்டு சாஹித்திய விருது கூட பெற்றிருந்ததை நான் அறிவேன்.

'இதயம் கடலென' கவிதையில் டீன் கபூர் மனித மனத்தைக் கடலாக உருவகிக்கிறார். நம் மனம் பூணும் பல்வேறு வேடங்களை மிக எளிமையான குறியீடுகளால் சொல்கிறார்.

***'மனிதன் இதயத்தைக் கடலாகச் சுமக்கிறான்***
***நான் கடலென இதயத்தைச் சுமக்கிறேன்'***
என்கிறார். இந்தப் புள்ளி கவிஞரையும் சாமான்யரையும் வேறுபடுத்துகிறது. கவிஞர் தன்னை உயர்த்திக்கொள்ளும் இடம் இது.

இந்தக் கவிதைக்குள் தமிழில் வெளிப்படாத 'ஏதோவொன்று' இதன் ஆங்கில வடிவத்துக்குள் உறைந்திருப்பதை நான் உணர்கிறேன்.

***'the beautiful sight of a sailboat***
***afloat***
***and the joy of a full moon as well***
***small waves get up and ebb***
***big waves rise high and die'***

இந்த வரிகள் அதன் தமிழ் வடிவத்தைவிட என்னைக் கவர்ந் தன. இந்த ஈர்ப்பு பெரும்பாலும் என் தனிப்பட்ட இரசனை சார்ந்தாக இருக்கலாம்.

நிலவாள் கவிதையும் கவிஞரின் தனி உணர்ச்சியை முன் வைக்கும் கவிதையாகத்தான் தெரிகிறது. இதன் ஆங்கில வடிவம் ஏற்படுத்தும் மனவிகசிப்பு நெகிழ்ச்சியானது.

உண்மையில் இத்தொகுப்பிலுள்ள சில கவிதைகளைத் தமிழில் படிப்பதை விடவும் ஆங்கிலத்தில் வாசிக்கும் போது அது கிளர்த்தும் உணர்வுப்பெருக்கும், மொழியமைதியும், அது தரும் பரவசமும் ஆழமானதாக இருக்கிறது. இந்த ஒப் பீடு முட்டாள்த்தனமானதாகத் தோன்றலாம். கவிஞர் தன் மூலமொழியில் கடத்த முடியாத உணர்வுகளையா ஒரு மொழிபெயர்ப்பாளரால் மடைமாற்ற முடியும்? என்ற நியாய மான யோசனை உங்களுக்கு எழலாம். உண்மைதான். டீன் கபூர் கையாளும் சொற்கள், வாக்கிய அமைப்புகள் போன்ற வற்றில் மொழிபெயர்ப்பாளர் சிறிநிவட்சா எந்த மீறலையும் செய்வதில்லை. தான் கவிதையில் கண்டடைந்ததை மொழி சார்ந்தும் உள்ளீடு சார்ந்தும் ஓர் ஆங்கில வாசகருக்காக அப்படியே மடைமாற்றுகிறார். ஆங்கில உலகத்திலிருந்து நமக்கு கிடைக்கும் ஆங்கிலக் கவிதை மொழியின் புதிர் விளையாட்டுகள் இங்கில்லை. அதற்கு மூலமொழி இடங் கொடுக்கிற போதிலும் கவிதையின் பேசுபொருளில் கருத் தில் பிசிறுகள் நிகழ்வதற்கு அனுமதிக்காத ஒரு மொழிபெ யர்ப்பு அறத்தை சிறிநிவட்சா கடைப்பிடித்திருக்கிறார்.

அப்படியிருந்தும் இதிலுள்ள சில தமிழ்க் கவிதைகளில் வெளிப்படாத ஓர் அழகியல்த்தனம் அதன் மொழிபெயர்ப் பில் வெளிப்படுவது ஏன்? சிலவேளை ஆங்கிலம் என்பது கவிதைக்கான மொழியாக இருக்கலாம் என்று இப்போது சொல்லத் தோன்றுகின்றது. எடுத்துக்காட்டாகப் பாருங்கள் -

***'I am eating very many memories.***
***a few memories die***
***at the feet of the fly***
***that touches***
***the tip of my nose***
***in a clamour,***
***in an invitation***
***parts of some memories***
***get destroyed'***

இன்னுமொரு கவிதையின் சிலவரிகள் -

***'I hid inside a familiar forest,***
***the bush asked me***
***to sit blindfolded***
***in the shade of a tree***
***the worried wind***
***shoved me along'***

இந்த ஆங்கிலக் கவிதையின் வரிகள் கிளர்த்தும் மனவுணர்ச் சிகள் ஆழமானதாகத் தோன்றுகின்றன.

சிறிநிவட்சாவின் மொழிபெயர்ப்பில் சில அடிகள் தொய்வாக வந்தாலும் அடுத்த அடியில் அதனை சீர்செய்து விடுகிறார். உதாரணமாக -

***'நான் அதிகாலையில் எழுந்துவிட்டேன்***
***என்னோடு எனது காற்றும் எழுந்து நிற்கிறது'***

என்று டீன் கபூர் எழுதும்போது -

***I got up***
***early in the morning***

என்ற தொடக்கம் மிகத் தட்டையானதாக வெளிப்படுகிறது. ஆனால் அடுத்த அடியான

***my wind is also up***
***with me***


என்ற வரிகள் கவிதைக்கான அழகியலைத் தருகின்றன. எனக்கென்னவோ முதல் அடி

***I woke up***
***in the early morning***

என வந்திருக்கலாம் போல் தோன்றுகிறது. அர்த்தம் சார்ந்து இரண்டும் ஒன்றாக இருந்தாலும் அழகியலும், இரசனையும் சார்ந்து இரண்டும் வேறானவை. பின்னதில் இருக்கும் அழகி யல் முன்னதில் குறைந்திருப்பது போன்று எனக்குத் தோன்று கிறது.

தொகுப்பிலுள்ள கவிதையான ஓவிய மொழி கவிஞர்களுக் கும் குழந்தைகளுக்குமான உலகத்தைப் பாடுகிறது. மிக மிக விசித்திரமான உலகம் அது. தர்க்கத்துக்கு அப்பாற் பட்ட மனித உணர்வுகளின் சாரத்தை முன்வைக்கிறது. குழந் தைகள் வளர்ந்தோரின் உலகத்தை எப்படி நோக்குகிறார் கள், அதனை அவர்கள் எப்படி உள்வாங்குகிறார்கள், எப் படி வெளிப்படுத்த விரும்புகிறார்கள் என்பதுதான் ஓவிய மொழி கவிதையின் உள்ளீடாக இருக்கிறது. வளர்ந்தவர்க ளால் நெருங்க முடியாத அற்புத உலகின் அகதரிசனத்தை இந்தக் கவிதையில் வாசகர் உணர்கிறார்.

இந்த உணர்வு ஏதோ ஒருவகையில் இத்தொகுப்பின் மொத் தக் கவிதைகளுக்குள்ளும் உறைந்திருப்பதை என்னைப் போல் நீங்களும் உணரக்கூடும். ஏனெனில் உணர்வுகளோடு உரையாடும் ஒரு கவிதை மொழியை கவிஞர் டீன் கபூர் முயற்சித்துக்கொண்டே இருக்கிறார்.



jiffry.hassan@thaiveedu.com

# திருநாவுக்கரசு கமலநாதனின்
# சிந்தனை – சொல் – செயல்

**வி. நித்தியானந்தம்**

இலங்கையின் பலதரப்பட்ட நெருக்கடிகளும் ஒரு தொடர்கதையாக நீடித்திருக்கும் இன்றைய அரசியற்-பொருளாதாரப் பின்னணி, உண்மையில் யாழ்ப்பாணத்துக்கும் அதன் கல்விப் பாரம்பரியத்துக்குமிடையிலான தொடர்பினையும் பல வகையான சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய தொன்றாக ஆக்கிவிட்டுள்ளதென்பதில் எதுவித சந்தேகமுமில்லை. எனினும், இத்தகைய பலவித நெருக்கடிகளுக்கும் மத்தியில், யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சி இன்னமும் குறிப்பிடத்தக்கதொன்றாகத் தலைநிமிர்ந்து உயர்வாக நிற்கிறதென்றால், அதனைச் சாத்தியப்படுத்துவதில் கல்வி நிறுவனங்களுக்குப் பாரியதொரு பங்குண்டு. அவற்றுள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தலையாயதொன்றெனின், அதற்கு அடுத்த படியில் வரக்கூடியவற்றுள், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி ஒரு முன்னணி நிலையில் விளங்குகின்றதெனலாம்.

2000-ம் ஆண்டு மே 2 அன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி தோற்றம் பெறுவதிலும் அது தொடர்ந்து வளர்ச்சியடைந்து நிலை பெறுவதிலும் ஏறக்குறைய முழு நிலையளவிற் பொறுப்பாயிருந்து அதன் நிறுவாகப் பீடாதிபதியாகவும் பணி புரிந்தவர் முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள். அதனை அவர் எவ்வாறு ஈடேற்றினார் என்பதை, அவரே தமது வார்த்தைகள்வழி எடுத்துக் கூறுவதுதான் சிந்தனை-சொல்-செயல் என்ற இந்த நூல். உண்மையில், அவர் இது பற்றி, ஒப்பீட்டு ரீதியில், மிகச் சிறிய அளவில் ஏற்கெனவே வெளியிட்டிருந்த கல்லூரி பிறந்த கதை, கல்லூரி வளர்ந்த கதை என்ற இரு நூல்களினதும் மறு உருவம்தான் இந்த நூல் எனலாம். கமலநாதன் வார்த்தைகளில், ‘இரு நூல்களிலும் கூறப்பட்டவை தான் இங்கு கூறப்படுகின்றன. ஆனால் விடயங்கள் விரிந்து வருகின்றன’ (பக்.XXII).

கமலநாதன் யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியை நிறுவும் பணியை ஈடேற்றினார் என்பது ஒரு புறமிருக்க, அதனை ஈழத் தமிழர் வரலாற்றின் மிக நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் மேற்கொண்டு, அந்நிலையில் தம்மை எதிர்நோக்கிய நெருக்கடிகளையெல்லாம் ஆட்கொண்டு சாதனை படைத்தாரென்பது தான் உண்மையில் கூடியளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கமலநாதன் செயற்பட்ட காலப்பகுதியின் தன்மை, அந்தப் பின்னணியில் அவர் முகம் கொடுக்க வேண்டியிருந்த சவால்களின் தீவிரம், அவற்றையெல்லாம் எதிர்த்து நின்று அவர் வெற்றி கண்டமை என்ற எல்லாம், இன்றைய நிலையிலிருந்து பின்னோக்கிப் பார்க்கும்போது, மிகப் பிரமிப்பானவை என்பதிற் சந்தேகமில்லை. ஆனால், இத்தகைய பிரமிப்பு வெறுமனே அவர் எதிர்கொண்ட அரசியற் பொருளாதாரப் பின்னணியிலான பாதுகாப்புச் சூழலிலிருந்து மாத்திரம் உருப்பெறுவதொன்றென்று கூறிவிட முடியாது. அதனுடன் கூடவே, அவர் பதவியேற்றுக்கொண்ட விதமும் அதற்கான பணிக்கள நிலைமையும் இந்தப் பிரமிப்பை இரட்டிப்பாக்குகின்றன எனலாம். அத்தகைய மாறுபட்ட பணிக்கள நிலைமைதான் யாது?

பொதுவாக, குறிப்பிட்ட பதவியொன்று நபரொருவருக்கு வழங்கப்படுகின்றதெனின், அக்குறிப்பிட்ட பதவிக்கு வேண்டப்படும் தகைமை, திறமை, அநுபவம் என்பன அவரிடம் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதற்கு, முதற்கண், முன்னுரிமை வழங்கப்படும். ‘குதிரைக்கு முன் வண்டியைப் பூட்டிய’ கதையாகத், தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக அவருக்கு நியமனம் வழங்கப்பட்ட போது, தேசியக் கல்வியியற் கல்லூரி என்பதே நிலவியிருக்கவில்லை. அதாவது, வண்டி என்பதே அங்கு இல்லை. அவருக்கு நியமனம் வழங்கப்பட்ட பின்புதான், குறிப்பிட்ட கல்லூரியையே நிறுவுவதற்கான முயற்சிகள் முடுக்கிவிடப்படுகின்றன. இதனையே நூலாசிரியரும் ‘பூஜ்ஜியத்தில் இருந்து ராஜ்ஜியம்’ எனக் குறிப்பிட்டு. ‘எதுவுமே இல்லாத நிலையில் நான் மட்டும்... பதவியேற்றுக் கொண்டுள்ளேன்’ (பக். 38) என்கிறார்.

அவருக்கான பதவி வழங்கப்பட்ட பின்புதான் யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரிக்கான கட்டட வசதிகள், ஆளணியினர், நிதி வசதிகள் என்ற அனைத்துமே ஏற்பாடு செய்யப்படுவதற்கான முயற்சிகள் தொடங்கப் பெறுகின்றன. அது மாத்திர

மன்றி, அவற்றைத் தேடிக்கொள்வதற்கான பொறுப்பும், ஏறக் குறைய, பீடாதிபதி நியமனம் பெற்ற கமலநாதன் வசம்தான் விடப்படுகின்றன.


இவ்வாறு 'எதுவுமே இல்லாத நிலையில்' (பக். 39) யாழ்ப்பா ணக் கல்வியியற் கல்லூரி நிர்மாணிக்கப்படுவதென்பது, ஒரு புறம், வரலாற்றுச் சாதனையாக அல்லது முற்றிலும் ஒரு புதுமை என்பதாகக் குறிப்பிட முடிந்தாலும், அதுவே, மறுபு றம், உண்மையான கமலநாதனை வெளிப்படுத்தி அவரைக் கல்வியுலகுக்குப் புடம் போட்டுக் காட்டியதெனின் அது மிகையாகாது. உண்மையில், அவரது இந்தச் செயற்பாட் டின், சாதனையின் ஒரு பதிவு என்ற வகையில் தான் சிந் தனை-சொல்- செயல் என்ற இந்த நூல் வடிவம் பெற்றுள் ளது. இவ்வாறானதொரு செயற்பாடு எவருக்குமே பாரிய தொரு சவாலாக அமையக் கூடியதென்பதில் எதுவித சந்தே கமும் இல்லை. இது ஒரு சவால் என்பதற்குப் புறம்பாகக் கமலநாதனைப் பொறுத்தவரை இதனைப் பாரியதொரு தூண்டுதலாக அவர் எடுத்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. இது பற்றிக் குறிப்பிடும் போது, அவர்:

'...கல்வியியற் கல்லூரியை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துவிட வேண்டும் என்ற அவா மனதில் நிறைந்து இருந்ததால் அது வேகத்தையும் துணிவையும் தந்தது. இல்லாமல் இருப்ப வற்றை இருக்கச் செய்து சாதனை புரியவேண்டும் என்ற மனத் தைரியம் மேலோங்கியது' (பக் 39) என்கின்றார்.

இன்னோரிடத்தில், கல்வியிற் கல்லூரிப் பணிகளை ஆற்றும் போது, '...என்னுள் ஒருவித வெறி ஆக்கிரமித்திருந்தது. அது எனது செய்கைகளில் வேகத்தைத் தந்திருந்தது' (பக் 88) என்றும் குறிப்பிடுகின்றார்.

கமலநாதன் சாதனையின் மகத்துவம், அவர் தமது பணியை ஒரு சவாலாகக் கொண்டமை என்பதற்கு மேலாக, அதனை அவர் எவ்வாறு நன்கு திட்டமிட்டும் சரியானபடி ஒழுங்குப டுத்தியும் செயற்படுத்தினார் என்பதில் தான் கூடியளவுக்குப் பொதிந்துள்ளதெனக் கூறின் அது மிகையாகாது. இது விட யத்தில், ஒரு கல்வியியற் கல்லூரியை நிறுவுவதற்கு, அது வும் ஒரு வெறுமை நிலையிலிருந்து அதனை ஆரம்பிப்ப தற்கு, உண்மையில், வேண்டப்படுபவை எவை என்பதை அவர் முதற்கண் பட்டியலிட்டுக் கொண்டார். இத்தகைய பட் டியல் பௌதிக வளங்கள், மனித வளங்கள், நிதி வளங்கள் என்ற இன்னோரன்னவற்றை உள்ளடக்கியிருக்க வேண்டியது மிக அவசியமாயிருந்தது. அவ்வாறு பட்டியலிட்ட பின்பு, அதிலுள்ள அனைத்தையும் ஒருசேரப் பெற்றுக் கொள்வ தென்பது, எத்தகைய ஒரு நிலையிலும் முற்றிலும் அசாத்திய மானதொன்று என்பதிற் சந்தேகமில்லை. ஒரு சாதாரண நிலையிலேயே இதுதான் யதார்த்தமெனில், இலங்கையின் தமிழ்ப் பிரதேசங்கள், அதுவும் குறிப்பாக, யாழ்ப்பாணம் அன்றிருந்த சூழலில் இது எவ்வகையிலும் இயலாத ஒன்றா கவே விளங்கியிருந்தது. ஆகவே, இவ்வாறானதொரு நிலை யில், கமலநாதன் என்றில்லை, வேறு எவராக இருந்தாலும் இத்தகைய களநிலையை நன்கு உள்வாங்கித்தான் உண் மையிற் செயற்பட வேண்டியிருந்தது.

கல்வியியற் கல்லூரியை நிறுவும் செய்முறையின் போது, தாம் இயங்கியிருந்த இத்தகைய சூழ்நிலையைக் கமலநா- தன் நன்குணர்ந்திருந்தது மாத்திரமன்றி, அவற்றுக்குச் சரியா னவாறு ஈடு கொடுக்கும் ஒரு முறையில்தான் தமது பல்வேறு பட்ட நிறுவுதற் பணிகளையும் அவர் மேற்கொண்டிருந்தா ரென்பதற்கான சான்றுகள் நிறையவே இந்நூலிற் சிதறிக் கிடக்கின்றன. அவற்றை அவர் கல்லூரி தோற்றம் பெற்று வளர்ந்து சென்ற காலஒழுங்கிற் குறிப்பிட்டும், விளக்கியும்




செல்கின்றார். கல்லூரின் தோற்றத்தையும் அதனைத் தொடர்ந்து வரும் வளர்ச்சியையும் எடுத்துக்கூற முற்படும் போது, இத்தகைய வரலாற்று ரீதியிலான அணுகுமுறை மிக இயல்பானதொரு செய்முறை எனலாம். இந்த அணுகு- முறைக்கு ஒத்திசைவாக, மூன்று பரிமாணங்கள் கமலநாதன் எழுத்திற் பிரதிபலிக்கின்றன எனலாம்.

முதலாவதாகக், கல்லூரியை நிறுவும் தமது பலதரப்பட்ட செய்முறைகளின் வளர்ச்சியின் போது தமக்கு ஆதரவாகச்

செயற்பட்டவர்கள் பற்றியது. இந்த ஆதரவாளர் யார் யாரென்பதைக் குறிப்பிட்டு அவர்களது பங்களிப்பு யாது, அதன்/அவற்றின் தன்மை எவ்வாறானது என்பதையும் அவர் களைப் பாராட்டும் ஒரு முறையில் அந்தந்த இடங்களி லேயே அவர் எடுத்துக்கூறுகின்றார். இவ்வாறு செய்யுமிடத்து, குறிப்பிட்ட நபருக்கான தமது நன்றி உணர்வை உரியவாறு வெளிப்படுத்தவும் அவர் தவறவில்லை. இரண்டாவதாக, மேற்கூறியதற்கு முரணாக 'நாணயத்தின் மறு பக்கம்' எனக் கூறியவாறு, தாம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட சாராரிடம் எந்த வொரு உதவியையாவது வேண்டி அல்லது எதிர்பார்த்து நின்று அந்த உதவியை அவர்கள் வழங்க முன்வரவில்லை அல்லது பின்னடித்து நின்றார்களாயின் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுவது. இவ்வாறான இடங்களில் அவர்களது பெயர் களை வெளிப்படுத்தாது மிக நாசூக்காகச் சொல்ல வேண்டி யவற்றைச் சொல்கின்றார். உதவி மறுப்பது என்பதற்குப் புறம்பாக, ஒரு மறைமுக நிலையில் தமது முயற்சிகளை ஏதாவது வகையில் தடுக்க முற்பட்டோரும் இதனுள் அடங்கு வர். இவர்கள் பற்றியும் அந்தந்த இடங்களிலேயே (பெயர் களை வெளிப்படுத்தாது) குறிப்பிடுகின்றார். இந்த இரண்டும் நபர்கள் பற்றியதென்றால், மூன்றாவது பரிமாணம், கமலநா தன் செயற்பட்ட சூழலும் காலமும் பற்றியதாகும். அவர் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட தருணமும், அதனைத் தொடர்ந்து, நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று, கல்வி யியற் கல்லூரியை நிறுவும் பணியை அவரே ஆரம்பித்தி ருந்த காலவேளையும் மிக அசாதாரணமானவையென்பது மாத்திரமன்றி இடுக்கண்கள் நிறைந்து இக்கட்டானதாகவும் விளங்கியிருந்தன. அதன் ஒரு பிரதான இயல்பாக தனிநபர் பாதுகாப்புக்கு எந்தவிதமான உத்தரவாதமும் இருக்க வில்லை என்பது முக்கியமானதாகும். இந்த அசாதாரண, அச்சம் தரும் ஒரு சூழ்நிலையில் தான், ஏனைய பலரைப் போன்று, கமலநாதனும் செயற்பட வேண்டியிருந்தது. எனி னும், அவரது விடயத்திலான ஒரு வேறுபாடு யாதெனில், இதர அலுவல்களில் ஈடுபட்ட ஏனையோர் ஒரு சில தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் தான் அவ்வாறு செய்ய நேரிட்டதென்றால், கமலநாதன் தொடர்ச்சியாகக் கல்லூரி அலுவல்கள் பலவற்றிலும் தம்மை ஈடுபடுத்த வேண்டியிருந்த தால் அடிக்கடி தமது சொந்தப் பாதுகாப்பைப் புறந்தள்ளிச் செயற்பட வேண்டியிருந்தது. அவர் செயற்பட்ட அபாயகர மான சூழ்நிலையில் இது வலியுறுத்தப்பட வேண்டிய ஒரு விடயம் என்பது மாத்திரமன்றி, பெரிதும் போற்றப்பட வேண் டியதொன்று என்பதிலும் சந்தேகமில்லை.

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி தோன்றி வளர்ந் தமை பற்றிய வரலாற்றைக் கூறுமிடத்துக் கமலநாதன் கையாண்ட மேற்கூறியவாறான பல்பரிமாண அணுகுமுறை, நாம் ஏற்கெனவே சுட்டியவாறு, மிக இயல்பான ஒன்றென்ப திற் சந்தேகமில்லை. எனினும், நூலின் தரத்தினை மேலும் உயர்த்தி, ஓர் ஒட்டுமொத்த நிலையில், அதற்கு இன்னமும் மெருகேற்றக் கூடியவாறு, நூலின் அமைப்புப் பொறுத்துச் சற்று மாறுபட்ட ஒரு முறையில், முக்கியமாக இரண்டு விட யங்களைச் செய்திருக்கலாமோவென எண்ணத் தோன்றுகின் றது.

அவற்றுள் ஒன்று ஒரு பொதுநிலையிலிருந்தும், மற்றது, நாம் மேலே குறிப்பிட்டிருக்கும் மூன்று பரிமாணங்களில் முதல் இரண்டையும் கருத்திற் கொள்வதாகவும் உள்ளதெனலாம். முதற்கண், நாம் இரண்டாவதாகக் குறிப்பிட்டிருக்கும் இரு பரிமாணங்கள் பற்றிப் பார்ப்போம்.

இந்த இரண்டு பரிமாணங்களுமே கல்லூரி நிர்மாண விடயத் தில், அதனுடன் ஊடுறவு கொண்ட தனிநபர்கள் பற்றியது. இவர்களது பங்களிப்பு, சாதக நிலையிலோ அல்லது பாதக நிலையிலோ, எத்தகையதென்பதை ஆசிரியர் அந்தந்த இடங்களிலேயே குறிப்பிடுகின்றார். இவ்வாறு செய்யுமிடத்து, உதாரணமாக, சாதக நிலையை எடுத்துக் கொள்வோமாயின், குறிப்பிட்ட ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்டுப் பல சந்தர்ப்பங்க ளில் உதவி வழங்க முன்வருவாராயின், அவரைப் பற்றித் திரும்பத் திரும்பக் கூற வேண்டி நேரிடுகின்றது. உண்மை யில், உதவி செய்வதற்குத் தூண்டப் பெற்று அவ்வாறு செய்ய முன்வருவோர், ஒரு விடயத்துடன் மாத்திரம் தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளாது, பல நிலைகளிலும் தம்மை ஈடு படுத்தித் தொடர்ந்து தமது பங்களிப்பை விருப்புடன் வழங்கு வதுதான் பெரிதும் வழக்கமாக உள்ளது. எடுத்துக்காட்டாகக் குறிப்பிடுவதாயின், டாக்டர் லயன் தியாகராசா ஆரம்பத்திலி ருந்தே கல்லூரி நிர்மாணத்தில் கமலநாதனுடன் சேர்ந்து பங் கெடுத்துப் பல நிலைகளிலும் செய்த உதவிகளைக் கூற லாம். இதே போன்று, தனிப்பட்ட முறையிலும் பணித்துறை சார்ந்தும், நூல் பூராவுமே பலர் நடமாடுகின்றனர். ஆகவே, கல்லூரி நிர்மாணம் என்பது பலவற்றையும் உள்ளடக்கிப் பல கட்டடங்களையும் கடந்து சென்றதொன்று என்பதால், தனிநபர்களாகப் பலர் ஒன்றுக்கு மேற்பட்டுப் பல்வேறு இடங் களிலும் தமது பங்களிப்பை வழங்கியிருந்தனர். ஆகவே, இதனை ஒவ்வொரு கட்டமாகத் தனித்தனியாகக் குறிப்பிட முற்படும் போது அவர்களது பெயர்கள் திரும்பத்திரும்ப நூலில் வர வேண்டியதாகின்றது. இது சில வேளைகளில், ஒருவர் அல்லது ஒரு சிலர் பொறுத்து அறிந்து கொள்ள விழையும் வாசகருக்குச் சலிப்பைக் கொடுப்பதற்கும் ஏது வாகின்றது. ஆகவே, இத்தகையதோர் அணுகுமுறைக்குப் பதிலாக, கல்லூரி நிர்மாண வரலாற்றை ஒழுங்கான முறை யில் எடுத்துக்கூறிய பின்பு, ஒரு தனியான அத்தியாயத்தில், ஒவ்வொரு தனிநபரையும் பெயர் குறிப்பிட்டு, அவரவர் சேவைகளை ஒட்டுமொத்தமாகச் சுட்டி உரிய அங்கீகாரம் வழங்குவது சிறப்பாக இருந்திருக்குமோவென எண்ணத் தோன்றுகின்றது. தனிநபர் மாத்திரமன்றி, வேண்டியவிடத்துச் சில பிரிவுகளை ஏற்படுத்தி, அதனுள் தனியொருவர் வழங் கிய பங்களிப்பை எடுத்துக் கூறுவதும் உசிதமானது. உதார ணமாக, இலங்கை அரசாங்க மட்டத்தினை ஒரு தனிப் பிரி வாக்கி, அதனுள்ளான தனிநபர் பங்களிப்பை இனங்கண்டு அங்கீகரிக்கலாம். அதே போன்று, ஆசிரியரதும் மாணவரதும் (எதுவித கட்டாயமும் இல்லாத) மனமுவந்த நிலையிலான பங்களிப்புப் பற்றியும் குறிப்பிட முடியும். இவ்வாறு செய்த பின்பு, எதிர்க்கணிய நிலையில் செயற்பட்டோர் பற்றி, இத் தகைய ஒரு சாராரும் உள்ளனர், என்ற குறிப்புடன் அத னைப் பற்றிய ஒரு முடிவான சுருக்கவுரை வருவது சிறப்பாக இருந்திருக்கும்.

இரண்டாவது விடயமாகப் பொதுநிலையிலிருந்து ஊற்றெடுப்பது. யாழ்ப்பாணத்திற் கல்வியியற் கல்லூரியை நிர்மாணிக்க முற்பட்டவேளை அங்கு நிலவியிருந்த அரசியற்-பாதுகாப்பு நிலைமையாகும். இது, கல்லூரி நிர்மாணத்தின் ஒவ்வொரு படியிலுமான அனைத்து விடயங்களையும் ஏதோ விதத்திற் பாதித்து, ஓர் ஒட்டுமொத்த நிலையில், கல்லூரியின் நிறுவாகச் செய்முறை மீது முழுமுதற் செல்வாக்குச் செலுத்தும் ஓர் அம்சமாக விளங்கியிருந்தது. அதனை நிரூபிக்கும் வகையில், நூலின் தொடக்கத்திலிருந்து முடிவு வரை இது பற்றிய கூற்றுக்கள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன. நூலின் தொடக்கத்திலேயே 'தரைவழிப் போக்குவரத்தில் காணப்பட்ட மட்டுப்பாடுகள் பற்றியும்', களநிலை காரணமான தாமதங்கள் பற்றியும் குறிக்கப்படுகின்றன (பக்.2). அதனைத் தொடர்ந்து, யுத்தம் உக்கிரமாகி, விமானக் குண்டுவீச்சு, எறிகணை வீச்சு, உலங்கு வானூர்தித் தாக்குதல் என்று முழு அளவில் யாழ்ப்பாணம் யுத்த பூமியாகி மக்கள் வாழ்வு அவலமாகியது பற்றிப் (பக்.4) பேசப்படுகின்றது.

அது மாத்திரமன்றி, 'உலங்கு வானூர்தியால் கலைத்துக் கலைத்துச் சுடுவது' பற்றியும் மக்கள் தரை வழியைப் பார்க்காது 'ஆகாயத்தை அண்ணாந்து சுற்றிச் சுற்றிப் பார்த்த படி...' சென்று கொண்டிருப்பது பற்றியும் (பக்.5) கூறப்படுகின்றது. அது மாத்திரமன்றி, 'பயண அனுமதி', 'தலையாட்டிகள்', 'சோதனைச் சாவடிகள்', 'யுத்தம் காரணமாகத் தோன்றிய குழப்ப நிலை', 'விடுவிக்கப்படாத பகுதிகள்' பற்றிய குறிப்புகளும் இடையிடையே வருகின்றன. அதனுடன் கூடவே, போக்குவரத்துத் தடைப்பட்ட காரணத்தினால் மாணவர்கள் தவித்து நின்றமை, கப்பல் மூலமோ அல்லது விமானம் மூலமோ மாணவர்களை அனுப்புவது பற்றிச் சிந்தித்தமை (பக்.85), 'அன்றைய சூழலை மனதிருத்திச் சிந்தித்தல்' (பக்.185) என்பவை பற்றியெல்லாம் எடுத்துக் கூறப்படுகின்றது.

அன்றிருந்த சூழ்நிலை பற்றிய இவ்வாறான பலதரப்பட்ட கூற்றுக்களும் அவற்றின் பின்னணியிலான ஆதங்கம், அக்கறை, செய்வதறியாத இக்கட்டான நிலைமை என்பனவெல்லாம் மிகவும் யதார்த்தமானவையென்பதில் எதுவித சந்தேகமோ ஒளிவுமறைவோ இல்லை. ஆனால், நூலை ஒட்டுமொத்தமாக வாசிக்கும் ஒரு தனிநபருக்கு இவையெல்லாம் என்ன, ஏன் இவை தோன்ற வேண்டும், இத்தகைய நிலைமைகளை ஏன் மாற்ற முடியவில்லை, அவ்வாறு மாற்றுவதிலான சிக்கல்கள் யாவை என்றவாறெல்லாம் எழக்கூடிய சந்தேகங்களுக்கு நூலில் எதுவித பதிலோ விளக்கமோ இல்லை. இத்தகையதொரு சூழலில் வாழ்ந்து, தவிர்க்க முடியாத வகையில் அதிற் சிக்குண்டிருந்த வடக்கு-கிழக்கிலான ஈழத்தமிழ் மக்கள் தவிர்ந்த ஏனையோர் இவற்றையெல்லாம் நன்கு புரிந்து கொள்வார்களென்றும் எதிர்பார்க்க முடியாது. உதாரணமாக, வடக்கு, கிழக்கு அரசியலிலும் அங்கு வாழ்ந்திருந்த மக்களது நாளாந்த வாழ்க்கையிலும் அதிக அக்கறை கொண்டிராத கொழும்பிலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் சிறுபான்மையினராகச் சிதறியிருந்த தமிழ் மக்கள் இவற்றையெல்லாம் சரியான முறையில் அறிந்து கொண்டிருப்பார்களென்றோ, அவ்வாறு அறிந்திருந்தாலும், அதற்காக, உண்மையில், உணர்வுபூர்வமாகப் பரிதாபமோ பச்சாதாபமோ படுவார்களென்றெல்லாம் எதிர்பார்க்க முடியாது. அதையும்விட முக்கியமாக, இந்நூலை வாசிக்க விழையும் இந்திய-வாழ் தமிழ் மக்களும் மற்றும் உலகளாவிய நிலையிலான ஏனைய கடல்கடந்த தமிழரும் நாம் மேலே குறிப்பிட்டிருக்கும் பல்வேறு அம்சங்களையும் பெரும்பாலும் ஒரு சூனிய நிலையிலிருந்து பார்க்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுப் பலவித தவறான முறையிலான புரிந்துணர்வுகளுக்கும் தப்பபிப்பிராயங்களுக்கும் ஆளாவதற்குத்தான் அதிக இடமுண்டு எனலாம். மாறாக, இந்த நூல் தமக்காக எழுதப்பட்டதொன்றல்ல என்று கருதி நூலையே முற்றாகத் தவிர்த்து விடுவதற்கும் அதிக வாய்ப்புண்டு.

இவ்வாறான எதிர்க்கணிய விளைவுகளைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி யாதெனில், இலங்கையின் வடக்குக் கிழக்கிலான அரசியல்-இராணுவ மற்றும் பாதுகாப்பு நிலைமைகள் பற்றி முதலிலேயே சுருக்கமாக எடுத்துக்கூறி விடுவதாகும். இது ஒரு தனி அத்தியாயமாக நூலின் தொடக்கக் கட்டத்தில் வந்திருக்க வேண்டும். இவ்வாறான பின்னணி அத்தியாயமொன்று இடம்பெற்றிருக்குமாயின், ஆசிரியர் பின்பு கூறவிழையும் பல்வேறு அம்சங்களும் தாமாகவே பெருமளவு தெளிவு பெற்றிருக்கும். இது, ஒரு வாசகர் எத்தகைய பின்புலத்தில் வசித்திருந்தாலும், நடந்து முடிந்த விடயங்கள் பலவும் ஏன்தான் அவ்வாறு நடைபெற்றன என்பது பற்றிய சரியான விளக்கமொன்றைப் பெறுவதற்குப் பெரிதும் உதவியிருக்க முடியும்.

எவ்வாறாயினும், நூலை ஓர் ஒட்டுமொத்த நிலையில் எடுத்து நோக்குமிடத்து, அதற்கு மேலும் மெருகேற்றக் கூடிய விதத்தில், மேலே காட்டியுள்ள ஓரிரு அம்சங்களைச் சேர்த்திருக்க முடியுமெனினும், கமலநாதன் அவர்களின் இந்த நூல் மிகுந்த முக்கியத்துவமும் சிறப்பும் வாய்ந்ததொன்று என்பதில் எத்தகைய சந்தேகமுமில்லை. ஒரு புறம், ஈழத் தமிழர் கல்வியின் முக்கிய நிறுவனங்களுள் ஒன்றாக விளங்கும் கல்வியியற் கல்லூரி, ஈழத்தமிழர் வரலாற்றின் மிக இக்கட்டான ஒரு கட்டத்தில் எவ்விதம் உருப்பெற்றதென்பதை அது சிறந்த முறையில் எடுத்துக் கூறுகின்றது. மறுபுறம், கமலநாதன் அவர்களின் இந்தப் பணிக்கு உறுதுணையாகச் செயற்பட்டவர்களின் ஈடிணையற்ற பங்களிப்பைச் சிறந்த முறையில் உள்வாங்கி, அதனைப் பதிவு செய்து, அவர்களை-யெல்லாம் உரியவாறு அங்கீகரிப்பதற்கும் நூல் பெரிதும் உதவியுள்ளது. அந்த வகையில், கமலநாதன் அவர்களைப் பாராட்டுவதுடன், அவர் மென்மேலும், தம்மால் முடிந்தவரை, தமிழுக்கும் கல்வியுலகுக்குமான தமது பணியைத் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.



info@thaiveedu.com




*கையறு நிலையில் என்னைக் காண விரும்பினாயா?*
*குனிந்த தலையுடனும் கவிழ்ந்த விழியுடனும்*
*கண்ணீர்த் துளிகள்போல தோள்கள் தொங்கிவீழ*
*என் ஆத்மார்த்த அழுகையால் வலுவிழந்து*

*என் அகந்தை உன்னை அல்லல் படுத்துகிறதா?*
*என் கொல்லையில் தங்கச் சுரங்கக் கிடங்குகள்*
*இருப்பதாக இறுமாப்புடன் நான் நகைப்பது*
*வலுவாக உன்னை வருத்தவில்லையா?*

*உன் சொல்லால் என்னை நீ சுடலாம்*
*உன் கண்ணால் என்னை நீ காயப்படுத்தலாம்*
*உன் கொடூர வெறுப்பால் என்னை நீ கொல்லலாம்*
*ஆயினும், நான் மேலுழுவேன், காற்றைப்போல*

க. நவம் அவர்களின் மொழியாக்கத்தில் நான்காவது பரமாணம் வெளியீடாக வெளிவந்திருக்கும் ‘எனினும் நான் எழுகின்றேன்’ என்ற கவிதைகளின் மொழிபெயர்ப்பு நூலில் இடம்பெற்றிருக்கும் ஒரு கவிதை இது. அமெரிக்க பெண்ணியவாதியும், கறுப்பின விடுதலைச் செயற்பாட்டாளரும், எழுத்தாளரும், கவிஞருமான மாயா அஞ்ஜலோவின் இந்தக் கவிதையின் தலைப்பே நூலின் தலைப்பும் ஆகியிருக்கிறது.

இந்த நூலிலே மாயா அஞ்ஜலோவின் ஐந்து கவிதைகள் உட்பட, முப்பத்தி ஆறு வெவ்வேறு கவிஞர்களின் ஐம்பத்தி நான்கு கவிதைகள் தமிழாக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக கவிதைகளின் மொழிபெயர்ப்பின் தொகுப்பாக வெளிவரும் நூல்கள் - நெருடா கவிதைகள், தாகூர் கவிதைகள் என்பன போன்று - தனியொரு கவிஞரின் கவிதைகளின் தொகுப்பாக வெளிவருகின்றன. அல்லது ஒத்த பின்புலத்தையும் வாழ்வனுபவத்தையும் கொண்ட கவிதைகளின் தொகுப்பாக- பலஸ்தீனக் கவிதைகள், குர்திஷ் கவிதைகள் என்பன போன்று– வெளிவருகின்றன. ஆனால் ‘எனினும் நான் எழுகின்றேன்’ இந்தப் பொதுத்தன்மையிலிருந்து வேறுபட்டுத் தனித்தன்மையுடன் விளங்குகிறது. இத்தொகுப்பிலே எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சீன அரசவைக் கவிஞர லீ போவும் (Li Po) இருக்கிறார், இப்பொழுதும் எழுதிக்கொண்டிருக்கும் பலஸ்தீனப் போராளிக் கவிஞர் சாலா உமரும் (Salah Omar) இருக்கிறார். நைஜீரியக் கவிஞர் கிறிஸ் அபானியும் (Chris Abani) இருக்கிறார், உக்ரேனியக் கவிஞர் இல்யா கமின்ஸ்கியும் (Ilya Kaminsky) இருக்கிறார். உலகெங்கும் நன்கறியப்பட்ட சிலே நாட்டுக் கவிஞர் பப்லோ நெருடாவும் (Pablo Neruda) இருக்கிறார், கனடியராக இருந்தும் கனடாவிலேயே அதிகம் அறியப்படாத மேரி வார்லி நீல்சனும் (Mary Varley Nielsen) இருக்கிறார்.

அவ்வகையிலே இந்நூல் ஒரு குறிப்பிட்டதொரு வேற்றுமொழிக் கவிஞரையோ, வேற்றின மக்களின் கவிதைகளையோ வாசகருக்கு அறிமுகம் செய்வதாக இல்லாமல், மொழிபெயர்ப்பாளர் தான் வாசித்துச் சுவைத்த கவிதைகளை ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்’ என்பதாக வாசகருக்குக் கடத்தும் முயற்சியாகவே இருக்கிறது. இந்த முயற்சியின் பயனாய் நாம் பெறுவது உலகக் கவிதைகளுக்கும், கவிதை உலகுக்குமான ஒரு அறிமுகம். உலகக் கவிதைகளை இலகுவாய்க் காண்பதற்கான ஒரு சாளரம். கவிதைகளை யாசிக்




காத, கவிதைகளை தேடிச் சுவைப்பதில் அதிக நாட்டமோ பட்டறிவோ இல்லாத ஒரு வாசகனையோ வாசகியையோகூட எளிதில் கவர்ந்துவிடக்கூடியதாய் இருக்கிறது அந்தச் சாளரத்தின் ஊடாக எமக்குக் கிடைக்கின்ற கவிதைக் காட்சி.

அந்தக் கவர்ச்சிக்குப் பல காரணங்களைக் கூறமுடியும். ஒன்று நவம் அவர்கள் கையாண்டுள்ள மொழி. வலிந்து புனைந்ததாய்க் கரடுமுரமாக இல்லாமல், மிக எளிதாக எல்லா வாசகர்களும் அணுகக்கூடியதாக, புரியக்கூடியதாக

இருக்கின்றன இந்தக் கவிதைகளின் தமிழ் வடிவங்கள்.

உதாரணமாக இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த அமெரிக்கக் கவிஞர் இலாங்ஸ்டன் ஹியூஸின் (Langston Hughes) If-ing என்ற கவிதையைச் சொல்லலாம்.

***If I had some small change***
***I'd buy me a mule***
***Get on that mule and***
***Ride like a fool***

என்று சந்தத்துடன் தொடர்கிறது அந்தக் கவிதை. அதைத் தமிழாக்கும்போது அந்தக் கவிதையின் உயிர்ப்பும், உணர்வும், அந்தக் கவிஞனின் ஆற்றாமையும், அவனின் நகைச்சுவையுணர்வும் வெளிப்படும் வகையிலே

***என்னிடம் கொஞ்சம் சில்லறை இருந்தால்***
***ஒரு கோவேறுகழுதை வாங்குவேன்***
***அக்கழுதையிலேறிச் சவாரி செய்வேன்***
***ஒரு முட்டாளைப் போல***

என்று தமிழாக்குகிறார் நவம். அந்த மூலக்கவிதையின் சந்தத்தைத் தமிழிலும் கொண்டுவர எத்தனித்து மொழியைச் சிக்கற்படுத்த அவர் முயலாதது தெரிகிறது.

***But I ain't got a million,***
***Fact is, ain't got a dime***
***So just by if-ing***
***I have a good time***

என்று முடிகிறது ஹியூசின் கவிதை.

***ஆனால்***
***என்னிடம் ஒரு மில்லியன் கிடையாது***
***உண்மை என்னவெனில்***
***ஒரு பத்துசத நாணயமேனும்***
***என்னிடம் இல்லை***
***ஆகையால்***
***சும்மா ஆல்தலால்***
***நான் ஆனந்தமாய் வாழ்கிறேன்***

என்று முடிகிறது நவம் அவர்களின் தமிழாக்கம். இங்கே 'if-ing' என்பதை 'ஆல்தல்' என வெகு அழகாக, அதேநேரம் இயல்பாக நவம் தமிழ்ப்படுத்தியிருப்பதைக் காணலாம்.

இந்த நூலிலே ஒவ்வொரு கவிதையினதும் ஆங்கில வடிவமும் தமிழ் வடிவமும் அருகருகாக அச்சடிக்கப்பட்டு அளிக்கப்பட்டுள்ளதால், கவிதைகளின் நயத்தை மட்டுமல்ல மொழியாக்கத்தின் இலாவகத்தையும் ஒருசேரச் சுவைக்க முடிகிறது. ஏறக்குறைய எல்லாக் கவிதைகளுமே குறுகிய கவிதைகளாக இருப்பதுவும், கவிதைகளின் உலகுக்குள் புதிதாக நுழையும் ஒருவரை இன்முகத்துடன் கையைப்பிடித்து உள்ளே அழைத்துச் செல்வதுபோல் உள்ளது.

இந்தத் தொகுப்பின் கவர்ச்சிக்கு இன்னொரு காரணம், இதிலேயுள்ள கவிதைகளின் பேசு பொருட்கள். இந்த நூலுக்குத் தமிழிலே முன்னீடு வழங்கியுள்ள கவிஞர் அவதானி 'கவிதை ஒவ்வொன்றும், மனித வாழ்க்கையின் வெவ்வேறு விதமான இன்னலை,இனவிடுதலையை, நிறவெறியை, வன்முறையை, பெண் ஒடுக்குமுறையை, இயற்கை அழிப்பு முறையை அவ்வக்களத்திலிருந்து பேசுபவை' என்று பதிவு செய்கிறார். இது உண்மைதான் எனினும், இந்த விடயங்களை இந்தக் கவிதைகள் கோபத்துடனோ, ஆவேசத்துடனோ, மூர்க்கத்துடனோ மட்டும் பேசவில்லை. அவ்வப்போது மனநெகிழ்வுடனும், நகைச்சுவை உணர்வுடனும்கூடப் பேசுகின்றன. உதாரணமாக 'சிறுநகர் நியுயோர்க்' என்ற கவிதையிலே

***நான் எங்கு சென்றிடினும்***
***என் முழு மனதுடன் செல்வேனோ?***

***நான் இன்னமும் சிக்கிக்கொண்டுள்ளேன்***
***சிறுதுண்டச் சொந்தவீடாம்***
***சிறுநகர் நியுயோர்க்கில்***

என்ற வரிகளின்மூலம், சொந்த ஊரை விட்டுப் பிரிவதிலுள்ள மென்சோகத்தை வெளிப்படுத்துகிறார் லிஸ் (Liz) என்ற அமெரிக்கக் கவிஞர். அந்த வரிகள், சொந்த வீடுகளைவிட்டு வலிந்து வன்முறைமூலம் வெளியேற்றப்பட்டதொரு மக்கட் கூட்டத்தின் மொழிக்கு மாற்றமடையும்போது அந்த மென்சோகம் பெருவலியாகக் கனதி கொள்கிறது. 'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனி சிறந்தனவே' என்ற பாரதியின் வரிகளும், மனிதமும் உலகப் பொதுவானவை என்ற உண்மையும் துலங்குகிறது.

'கவிதைகள் உள்ளிட்ட இலங்கியங்களின் மொழிபெயர்ப்பு ஆற்றும் பணிகளிலே அதிகம் கவனிக்கப்படாத ஆனால் முக்கியமானதொரு பணி, மொழிபெயர்ப்பாளரின் இயற்பண்புகளின் சாரத்தை வெளிப்படுத்துவதே' எனக் கூறுகிறார் இந்த நூலுக்கு ஆங்கிலத்திலே முன்னுரை எழுதியுள்ள ஐக்கிய நாடுகளுக்கான முன்னை நாள் இலங்கைத் தூதுவரும் கவிஞருமான எச்.ஏ. அசீஸ். இந்தத் தொகுதியிலே இடம் பெற்றுள்ள கவிதைகள் நவம் அவர்களின் மனித சமத்துவத்தை நாடும் ஆன்மாவை நிச்சயம் வெளிப்படுத்துகின்றன. அத்தோடு நில்லாமல், ஏறக்குறைய ஒரு வருட காலத்திலே வாரத்துக்கு ஒரு கவிதை என மொழிபெயர்க்கப்பட்ட இந்த ஐம்பத்தி நான்கு கவிதைகளையும் தெரிவு செய்ய எத்தனை நூறு கவிதைகளை, எங்கெல்லாம் தேடி இவர் படித்திருப்பார் என எண்ணும்போது மலைப்பையும் ஏற்படுத்துகின்றன.

இந்தத் தொகுதியிலே இடம்பெற்றுள்ள 'பேச்சிழப்பு' என்ற கவிதையிலே கவிஞர் கிறிஸ் அபானி (Chris Abani) தனது மொழியான இக்போ (Igbo) மொழிபற்றிக் கூறும்போது

***எனது மொழி***
***இறந்துகொண்டிருக்கிறது***
***எனது தந்தை***
***இறந்துபோனதைப் போல***

***தன்னந்தனியாக***
***இரவில்***


என்று கூறுகிறார். க. நவம் அவர்களின் இந்த மொழிபெயர்ப்பு முயற்சி, அவரது மொழிக்கு, அவரது தந்தையின் மொழிக்கு, எமது மொழிக்கு நிச்சயம் வலுச் சேர்க்கும். எமது தந்தையர் இறந்துபோனதுபோல எமது மொழியும் இறந்துவிடாது தடுப்பதற்கு நாமெடுக்கும் சிறு சிறு முயற்சிகளிலே, இதுபோன்ற முயற்சிகள் முக்கியமானவை.



dushy.gnanapragasam@thaiveedu.com

# வாசிப்பும் அதன் பன்முகத் தளங்களும்

## - அஹமட் பிஸ்தாமி



வாசிப்பு இன்று அகல் விரிகோணத்தில் வளர்ந்து வியாபித்துள்ளது. அதற்கான நிறுவனங்கள், ஒழுங்குமுறைகள், பொறிமுறைகள் நுட்பங்கள் எனப் பல்வேறு ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டவண்ணமுள்ளன. ஒரு புத்தகமாகட்டும், எழுத்தாக்கப் படைப்பாகட்டும், அதன் எழுத்தாளர் மற்றும் அதன் உள்ளடக்கம் போலவே வாசகரும் மிகுந்த முக்கியம் பெறுகின்றார். இன்னும் ஒருபடி மேலே சென்று கூறினால் குறிப்பிட்ட அப்படைப்பை உயிர்ப்புடன் வைத்திருப்போர் வாசகர்கள்தான். வாசகர்களின் கையிலும் விமர்சகர்களின் கையிலும்தான் நூலின் உயிர்வாழும் தன்மையும் கண் முன்னே காலாவதியாகி மறையும் தன்மையும் உண்டு.

மரபு சார்ந்து நோக்கின் எழுத்தாளருக்கு அதிகூடிய முக்கியத்துவம் கொடுத்து வாசகரை இயங்குநிலை குன்றியவர்களாக, துலங்கலை வெளிக்காட்டாதவர்களாக, வெறுமனே நுகர்ச்சியாளர்களாக மட்டும் கட்டமைத்து சித்தரித்துக் காட்டும் நிலை நீண்டிருந்தது. ஆனால் நவீனம், பின்நவீனம் போன்ற சிந்தனைகளால் வாசகர் முன்னுரிமைப்படுத்தப்படும் நிலைமை உருவாக்கப்பட்டது. நூலியம் முனைப்புப் பெறுவது, உரையாடலுக்குச் செல்வது ஆக்கபூர்வமான விமர்சனத்துக்கு உட்படுவது வாசிப்பால் மட்டும்தான்.

வாசகரின் துடிப்பும் துலங்களும் எழுத்தாளர்களின் சொல் வலிமையைப் பருகி மகிழும் சுவைஞர்களாக மட்டும் ஆக்காமல் அவர்களை விமர்சகர்களாக, திறனாய்வாளர்களாக, எதிர்க் கருத்துக்களை வெளிப்படுத்துபவர்களாக, கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுப்போராக ஆக்கியுள்ளது. ஒரு புத்தகத்தை வாசிக்கையில் 'நூலாசிரியரை நடுநிலைப்படுத்தும் திறனாய்வு', 'நூலியத்தை நடுநிலைப்படுத்தும் திறனாய்வு', 'வாசகரை நடுநிலைப்படுத்திய திறனாய்வு' என முத்தளத்தில் நின்று அணுக வேண்டியுள்ளது. முப்பரிமாணம் கொண்டதாக ஒரு நூல் திறனாய்வுக்கு உட்படுத்தபட்டு வாசிக்கப்படும் போது நூலின் கனதியும் பெறுமதியும் பெருகும்.

நூலாசிரியரை மையப்படுத்தி நூலை நோக்கின் ஆசிரியரின் கருத்தாதிக்கமும் வன்முறையும் உயர்ந்து மேலோங்கி வலிமைபெற்று எம்மைச் சிந்திக்க விடாது தடுக்கும். உப்புச்சப்பற்ற நூலிய நுகர்வாளராக எம்மை ஆக்கி விடும். இது ஒரு விதச் சிந்தனை அடக்குமுறை. சிந்தனை மேலாதிக்கம். சிந்தனைச் சுதந்திரத்துக்கு எம்மை அறியாமலேயே முடிச்சு போடும் நிலை தோன்றும்.

ஒரு நூலை வாசிக்கையில் விமர்சன நோக்கில் எதிர்ப் படிமங்களைக் கருத்தில் கொண்டு அல்லது எதிர்ச் சிந்தனை முகாம்களைக் கருத்தில் கொண்டு வாசிக்க வேண்டும். உதாரணமாக மரபார்ந்த நூல்களில் மூழ்கி நவீன சிந்தனைகளைப் புறக்கணிக்கவோ, நவீன சிந்தனைகளில் மையமும் மையலும் கொண்டு மரபார்ந்த எழுத்தாக்கங்களை வெறுத்து ஒதுக்கி புறக்கணிக்கவோ கூடாது. இரண்டுக்கும் இடையில் அறிவார்ந்த சமநிலை பேண வேண்டும்.

மாக்சியச் சிந்தனைகளை வாசிக்கையில் தாராண்மைவாத, நவதாராண்மைவாத முகாம்களின் சிந்தனைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும். மொத்தத்தில் நூலியத்தை மீள்கட்டுமானம் செய்து புத்தாக்கக் கருத்துக்களை உருவாக்கும் நிலையில் தான் வாசகர்கள் தங்கள் வாசிப்புப் பயணத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். இதுவே நியாயமான, நடைமுறை, நடுநிலைத் திறனாய்வுக்கு வழியமைக்கும்.

இங்குதான் வாசகரின் இயங்கு நிலையும் ஆரோக்கியமான துலங்களும் வெளிப்படும். வாசிப்பு வணக்கம். அது வாழ்வு. அது ஆழ் மனதில் நனவிலியுடன் இணைந்து பயணிக்கிறது. இரண்டும் ஒன்றிக்கும் போதே காத்திரமான பொருட்கோடல் சாத்தியப்படும். இந்த நிலையில் தான் குறிப்பிட்ட நூலியத்தில் மட்டும் மையல் கொண்டு வாசிப்பை மேற்கொள்ளும் குவிசிந்தனையும் உள்ளடக்கத்தை விரிநிலை கொண்டதாக ஆக்கிவிடும் விரிசிந்தனை வாசிப்பும் இடம்பெறும். குவிசிந்தனை ஒருமுக வாசிப்பாகவும் விரிசிந்தனை வாசிப்பின் பன்முகத் தளங்களுக்கும் எம்மை அழைத்து செல்லும்.

அதே நேரம் குறிப்பிட்ட மொழியின் தன்மையும் அதில் எமக்குள்ள ஈடுபாடும், ஈர்ப்பும், பரீட்சயமும், முன் அனுபவமும், நூலியம் தொடர்பில் உள்ள பன்முக வாசிப்பும் வாசிப்பின் கனதியை வலுவாக்கும். வாசிப்பில் மொழி மிக முக்கிய இடம்பிடிக்கும். தகர்ப்பு, சிதைப்பு, கட்டுமானம், மீள்கட்டுமானம், கட்டுடைப்பு போன்றன நிகழ மொழி இன்றியமையாதது. நூலாசிரியரின் கருத்து எல்லைக்கு அப்பால் வாசகர்

நகர அவரது மொழிவாண்மையும் விருத்தியும் காரணமாக அமையும். நூல் வாசிப்பில் மூல நூலாசிரியர், வாசகர், வாசகரின் துறைசார் மற்றும் மொழிப்பாண்டித்தியம் நூல் மீதான திறனாய்வை மென்மேலும் வளப்படுத்தும்.

நவீன சிந்தனைக் கோலத்தில் 'நூல் பாதி, வாசிப்புப் பாதி' எனும் போக்கும் 'வாசிப்பால் தான் நூல் நிலைத்து வாழ்கிறது' எனும் போக்கும் பரவலாகப் பேசப்படுகிறது. reader response criticism வாசகர் துலங்கல் திறனாய்வு இதனை வலியுறுத்துகிறது. அதே நேரம் வாசிப்பு இன்று கலையாக (Art), ஆற்றுகையாக (performance), சிகிச்சையாக (therapy) பரிணமித்து வரும் நிலை காணப்படுகிறது.

**வாசிப்பு ஆன்மாவை போசிக்கும்**
**மிகப்பெரும் தவம். ஒரு**
**தியானம். அதுவே நாகரிக**
**உருவாக்கத்தின் முதற்படி.**
**வாசிப்பு ஒரு வணக்கம்.**
**வாசிப்பு ஒரு வழிபாடு.**
**வாசிப்பு ஒரு சிகிச்சை முறை.**
**வாசிப்பு ஒரு வாழ்வியல் பயணம்.**
**வாசிப்பு ஓர் அனுபவம்.**
**வாசிப்பு ஒரு பெருந்தவம்.**
**வாசிப்பு உன்மத்தம் பிடித்த**
**ஒரு பித்துநிலை.**
**வாசிப்பு ஒரு கலை.**
**அது ஓர் அகன்ற விஞ்ஞானம்.**

இத்தனைக்கும் மத்தியில் இஸ்லாமியச் சிந்தனை மரபில் 'வாசிப்பீராக' என்று இறைவன் முதல் கட்டளையை விதித்ததில் இன்றும் அற்புதம் வெளிப்படுகிறது. பரந்தளவிலான வாசிப்பின் போதும் பன்முகத் தளங்களில் எழுதப்பட்ட நூல்கள் மீதும் இத்தகைய பன்முகத் தளத்திலான மீள்வாசிப்பும் உரையாடலும் ஒழுங்குமுறைப்படி நிகழ்த்தப்படுகையில் மாற்றுக்கருத்துகளும் அறிவுபூர்வமாக அமையும். இத்தகைய constructive criticism அறிவார்ந்த விமர்சனங்களும் தான் இன்றைய சமகாலத்தின் கட்டாயத் தேவை.

அனைத்துக்கும் முன்னராக ஒரு சிந்தனையைக் கருத்தைக் கருதுகோளை மூடுண்ட நிலையில் கண்முடித்தனமாகக் கிரகிக்காமல், ஜீரணிக்காமல் இருக்கவும் இத்தகைய நுண்ணிய சிந்தனை மீதமைந்த வாசிப்பு அவசியமாகும். இன்னும் ஆழமாகப் பரந்த நோக்கில் மாற்றுக்கருத்தை அங்கீகரிக்கவும் ஜீரணிக்கவும் உரையாடவும் கூடிய ஆரோக்கியமான மனோநிலை தேவைப்படுவதை இன்றைய உலகம் உணர்கிறது.

நாம் ஏன் வாசிக்கிறோம்? அல்லது வாழ்க்கைச் சோலிகளை நிறைவேற்றுவதில் மூழ்கி ஏன் வாசிப்பதில் பின்னிற்கின்றோம்? என்று வினவிக்கொள்ளவும் வேண்டும்.

வாசிப்பை அடுத்தவர்கள் எப்படி உள்வாங்கிக்கொண்டார்கள்? கொண்டாடி மகிழ்கிறார்கள்? வாசிப்பை அவர்கள் எப்படிப் புனிதமாகப் பார்க்கிறார்கள்? வாசிப்பு அவர்களில் எத்தகைய மாற்றங்களை உருவாக்குகிறது? எத்தகைய தெறிப்புகளை உருவாக்குகிறது? வாசிப்பின் மீதான ஈடுபாட்டை ஏற்படுத்த அவர்கள் என்ன செய்தார்கள்? நாம் என்ன செய்துள்ளோம்? வாசிப்புக்கு ஏதுவான சூழல் அவர்களிடம் எப்படி உள்ளது? இவை எல்லாம் எம்மிடம் எப்படி உள்ளது?

புத்தகங்கள் வாங்குவதை, அதற்காகக் காசு பணத்தைச் சேமிப்பதை, புத்தகக்கடைகளைத் தரிசிப்பதை, புத்தகங்களைப் பரிமாறுவதை, பராமரிப்பதை, அடுத்தவர்கள் எப்படிக் கவனமாகத் தேவை எடுத்துச் செய்கின்றனர்? இதில் நாம் எங்கு உள்ளோம் என்று அடிப்படை வினாக்களை எமக்குள்ளே வினவினால் வாசிப்புத் தளத்திலும் புலத்திலும் எமது இடத்தை அடையாளம் காணலாம். வாசிப்பின் பன்முகத்தளம் நோக்கி நகர எந்தளவு இடைவெளி உள்ளது என்பதையும் உணரலாம்.

பன்முகத் தேடல், பரந்துபட்ட வாசிப்பு, ஆழமான வாசிப்பு, புத்தகங்களுடனான உரையாடல், ஈடுபாடு எத்தகைய உணர்வு நிலையில் மாற்றத்தை, திருப்பத்தை எம்மில் ஏற்படுத்துகின்றன? இந்த அடைவை நோக்கிய எமது ஈடுபாடு எத்தகையது? புத்தகங்களை நாம் எவ்வாறு கருதுகிறோம்? கையாள்கிறோம்? வாசிப்பு இன்று அதன் உச்சத்தை தொட்டுள்ளது. அது bibiliotheraphy எனும் நூலியல் சிகிச்சையாக மாறியுள்ளது. வாசிப்பு சுகம் தரும் relaxation ஒன்றாக, அழுத்தம் தணிக்கும் stress reduce ஒன்றாகத், தனிமையை loneliness போக்கும் ஒன்றாக இன்று பரிந்துரைக்கப்படுகிறது.

இவை அனைத்தையும் கடந்து நோக்கின் இணையமும் (internet) திறன் பேசிகளும் (smart phone) செயலிகளும் (apps) எம் எல்லோரையும் ஆட்கொண்டு அடிமைப்படுத்தி, நேரங்களையும் விழுங்கி எம்மை ஆள்கிறது. எங்கேயோ அழைத்துச் செல்கிறது. திரைகளில் வாசிக்குமளவு அது விரிந்திருந்தாலும் ஒப்பீட்டளவில் எந்தளவு தூரம் ஆரோக்கியமாகத் திரைகளின் முன்னிருந்து சிந்தனைச் சிதைவுகள் கவனக் கலைப்பான்கள் இல்லாமல் வாசிக்கப் பழகியுள்ளோம் என்பது தான் சிக்கலான வினா?

வாசிப்புக் குறித்துப் பேசுவதும், எழுதுவதும், விமர்சிப்பதும் வீணோ என்று எண்ணத்தோன்றுகிறது. ஆனாலும், ஆங்

காங்கே வாசகர்கள், உரையாடல்கள் மழைக்குப்பிந்திய தூவானம் போல, வானவில் போல தோன்றுவதும், தென்படுவதும் இடம்பெறத்தான் செய்கின்றன.

வாசிப்பு ஆன்மாவை போசிக்கும் மிகப்பெரும் தவம். ஒரு தியானம். அதுவே நாகரிக உருவாக்கத்தின் முதற்படி. வாசிப்பு ஒரு வணக்கம். வாசிப்பு ஒரு வழிபாடு. வாசிப்பு ஒரு சிகிச்சை முறை. வாசிப்பு ஒரு வாழ்வியல் பயணம். வாசிப்பு ஓர் அனுபவம். வாசிப்பு ஒரு பெருந்தவம். வாசிப்பு உன்மத்தம் பிடித்த ஒரு பித்துநிலை. வாசிப்பு ஒரு கலை. அது ஓர் அகன்ற விஞ்ஞானம்.

மனித வாழ்வு இந்த பூமியில்தான் நிலைத்து நிற்கும். மனிதர் இந்தப் பூமியை மிகவும் சிறப்பாக வளப்படுத்தக் கடமைப்பட்டவர். அவரது வாசிப்பும் தேடலும் கண்டுபிடிப்புகளும் தான் இந்தப் பூமியை இன்னும் வளமானதாக மாற்றுகிறது.

ஆன்மா செழுமைபெற அடியேன் வாசிக்க வேண்டும். வாசிப்பு அவரது சிந்தனைக்கான தீனியாகிறது. வாசிப்புக்கு எழுத்து அச்சாணியாக உள்ளதால் எழுத்தின் மீதான சத்தியம் சமய நூல்களில் விரவிக்கிடக்கிறது. எழுத்தறிவித்தவன் இறைவனாவான். அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு என்று வள்ளுவப்பெருந்தகை குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. மொழியும் எழுத்தும் வாசிப்பும் மனித வாழ்வின் வலிமையை, வல்லமையை உணர்த்திக்கொண்டே இருக்கிறது. மொழியின் பன்மைத்தன்மை வளம் நிறைந்தது.

பிரபஞ்சம் மனித சிந்தனைக்கு அழைப்பு விடுக்கிறது. அவரது அவதானத்தைக் கூர்மையாக்குகிறது. காலமாற்றத்துக்கேற்ப புதிய கருத்துகளையும் சிந்தனைகளையும் அவருக்கு வழங்குவதனூடாகத் தன்னை, தன் இருப்பைத் தக்கவைக்க வாசிப்பே துணை நிற்கிறது. எனவே பிரபஞ்சம் மனித சிந்தனையால் வாசிக்கப்பட வேண்டும். மனிதர் பகுத்தறிவு மிக்க விலங்கு. மனிதர் தனது அறிவை விசாலிக்க வாசிப்பு மட்டுமே மகத்தான வழிகாட்டுகிறது. வாசிப்பு அவரை வழிநடத்துகிறது. வடிவமைக்கிறது. வாசிப்பின் மூலமாக அவர் சிந்திக்க ஆரம்பிப்பார். கருத்துக் கூறவும், வினாத் தொடுக்கவும் விடயங்களை அலசி ஆராயவும் முற்படுகின்றார்.

வாசிப்பு நாகரீகத்துக்கு அத்திவாரமிடுகிறது. அறியாமையை அகற்றுகிறது. ஆன்மாவை உசுப்புகிறது. சிந்தனையைக் கிளறி விடுகிறது. அவனைச் செதுக்கி விடுகிறது. வாசிப்பு என்பதை ஒடுங்கிய வட்டத்தில் அடைத்து விடாது அதன் விசாலமான அகன்ற கருத்தை நோக்கி நாம் நகர வேண்டும்.

ஆழமான வாசிப்பு எம்மில் அவதானத்தை உருவாக்கி விடும். இந்தப் பின்புலத்தில் வாசிப்பின் பன்முகத் தளத்தை அறிந்து வாசிப்பை வளமும் செழுமையும் மிக்கதாக அமைத்துக்கொள்வோம்.



bisthamy.ahamed@thaiveedu.com






### இந்திய இராணுவத்தின் இருப்பிற்கான ஆதரவுக் குரல்கள்:

விடுதலைப் புலிகளின் ஆக்கிரமிப்பு இராணுவ எதிர்ப்புணர்வும், இந்திய இராணுவத்தின் தமிழர்களுக்கு எதிரான போக்கும் இந்திய அமைதி காக்கும் படையினரின் செயற்பாடுகளுக்கு ஆதாரமான கட்டுரைகளையோ, நூல்களையோ வழங்கவில்லை. இருப்பினும், இந்திய அமைதிப் படையின் செல்லப் பிள்ளையாக அந்நாளில் இயங்கிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சாரப் பிரிவு வெளியிட்டிருந்த நூலொன்றினைப் பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டும். 'சகோதரப் படுகொலைகளும் தமிழினத் துரோகிகளும்' என்ற தலைப்பில் கே.சி.என். என்ற புனை பெயரில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)-யின் பிரச்சார வெளியீட்டுப் பிரிவு, கார்த்திகை 1988-ல் ஒரு நூலை வெளியிட்டிருந்தது. 1987-ம் ஆண்டு புரட்டாதியில் 'ஈழப்போராட்டத்தில் சகோதரப் படுகொலைகளும் சயனைட் தற்கொலைகளும்' என்னும் தலைப்பில் கே.சி.என். அவர்களால் எழுதப்பெற்று, அவ்வமைப்பு வெளியிட்ட நூலின் திருத்திய வடிவமே இதுவாகும். 1974-லிருந்து தொடங்கி 1987-ல் இடம்பெற்ற இலங்கை - இந்திய ஒப்பந்தம் வரையிலான காலகட்டத்தில் இலங்கையில் நிகழ்ந்த சகோதரப் படுகொலை நிகழ்வுகளை இந்நூல் விரிவாகப் பதிவு செய்திருந்தது. இந்நூல் அக்காலகட்டத்தில் இந்திய இராணுவத்தின் பிடியிலிருந்த தமிழ்ப் பிரதேசமெங்கும் பரவலாக விநியோகிக்கப்பட்டன.

### இந்திய இராணுவத்தின் ஆதரவுடன் கிழக்கின் தேர்தல்:

இலங்கையின் ஈழ விடுதலைப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் ஜுலை 29, 1987 அன்று கைச்சாத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம், இலங்கை அதன் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதாகும். இதனடிப்படையில் 1988 பெப்ரவரியில் ஒன்பது மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. ஒப்பந்தத்தின்படி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு நிர்வாகத்தின் கீழ் இரண்டு மாகாணங்களையும் கொண்டுவர உடன்பாடாயிற்று. இதன் அடிப்படையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சியின் போது, முதலாவது மாகாண சபைத் தேர்தல் இந்திய இராணுவத்தினரின் மேற்பார்வையில் வட-கிழக்கில் நவம்பர் 19, 1988 அன்று இடம்பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி பங்கேற்காது ஒதுங்கியிருந்த நிலையில் இந்திய ஆதரவுடன் இயங்கிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் இத்தேர்தலில் வெற்றியீட்டி முதலமைச்சர் வரதராஜப் பெருமாளின் தலைமையில் ஆட்சியமைத்தனர்.



மேற்கண்ட அரசியல் பின்புலத்தில் 'மோசடித் தேர்தல் உண்மை விளக்கம்' என்ற தலைப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் டிசம்பர் 1988-ல் ஒரு நூலை வெளியிட்டிருந்தனர். இந்திய அமைதி காக்கும் படை, இலங்கையின் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்திருந்த வேளையில் இடம்பெற்ற அத்தேர்தல் தொடர்பான நூலில், 1988-ம் ஆண்டு நவம்பர் 19-ல் கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பெற்ற மாகாணசபைத் தேர்தலின் போது இடம்பெற்ற மோசடிக

ளைப் பட்டியலிட்டு அம்பலப்படுத்தியிருந்தது. 13.12.1988 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு இது குறித்து வெளியிட்ட பகிரங்கக் கடிதமும் இந்நூலின் முன்-பின் உள்ளட்டைப் பக்கங்களில் இடம்பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### ஆக்கிரமிப்புக்கால இராணுவச் செயற்பாடுகள்:

இந்திய இராணுவம் வடக்கிலும் கிழக்கிலும் நிலைகொண்டிருந்த வேளையில் ஊடகங்களின் மீது தீவிரமான பார்வையைச் செலுத்தி வந்தார்கள். தமது பணிகளுக்குக் குந்தகமான நிலைமையை ஏற்படுத்தும் வகையில் ஊடகங்கள் செயற்பட முற்பட்ட வேளைகளில் தமது ஆதரவாளர்களின் மூலம் அதனை அச்சுறுத்தும் பணியில் ஈடுபட்டார்கள். இந்நிலையில் பக்கச் சார்பற்ற சுதந்திரமான கணிப்பீடுகளையோ, நேர்மையான கருத்துக்களையோ மக்கள் உள்வாங்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை.

இந்நிலையிலும் துணிச்சலுடன் சில பிரசுரங்கள் அவ்வப்போது வெளிவந்தன. அவை பெரும்பாலும் விடுதலைப் புலிகளினால் அச்சிடப்பட்ட பிரசுரங்களாகவே இருந்தன. இந்திய இராணுவம் மார்ச் 1990-ல் இலங்கையை விட்டு நீங்கிய பின்னரே அந்த இருண்ட காலம் பற்றிப் பலரும் எழுத வாய்ப்பேற்பட்டது. அவ்வகையில் மேஜர் கிண்ணி என அழைக்கப்பெற்ற விடுதலைப் போராளியான வி. மணிவண்ணன் பற்றிய ஒரு நூல் இங்கு பதிவுசெய்யப்படவேண்டியதாகும். பிரான்ஸில் இயங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலகச் செயலகத்தினால் 2-வது பதிப்பாக, பெப்பிரவரி 1997-ல் வெளியாகிய 'மேஜர் கிண்ணி' என்ற தலைப்பிலான இந்நூல் 10.7.92-ல் இயக்கச்சி மோதலில் பலியான விடுதலைப் புலிகளின் போராளி மேஜர் கிண்ணியின் போராட்டகாலச் சரிதையை உள்ளடக்கியிருந்தது. நெடுங்கேணி இந்திய இராணுவ மினி முகாம் புலிகளால் தாக்கப்பட்ட வரலாறும் இந்நூலின் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளது.

இதே போன்று 'நினைவில் சில நிகழ்வுகள்' என்ற தலைப்பிலான மற்றுமொரு நூலும் முக்கியமானது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நோர்வே அமைப்பு, (Tamil Co-ordinating Committee Norway), ஓகஸ்ட் 1993-ல் இந்நூலை வெளியிட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ வெளியீடுகளில் வெளிவந்த வவுனியா சிறை உடைப்பு (01.05.1989 அன்று வவுனியாவில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் படையின் சிறையை உடைத்து 42 கைதிகள் தப்பியோடிய நிகழ்வு), நினைவில் சில நிகழ்வுகள் (மேஜர் கிண்ணியின் முக்கிய பங்களிப்பில் நடந்தேறிய நெடுங்கேணிப் பாடசாலையில் அமைந்த இந்திய இராணுவத்தின் மினிமுகாம் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் பற்றிய பகிர்வு), சிலாவத்துறை-ஒரு வரலாற்றுச் சமர் (19.03.1991 முதல் நான்கு நாட்கள் தொடர்ச்சியாக நடந்த மன்னார் மாவட்டத்தின் சிலாவத்துறை இராணுவ முகாம் அழிப்பு) ஆகிய மூன்று விவரணக் கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றிருந்தன. நோர்வேக் கிளையின் 'சுதந்திர தாகம்' எழுச்சி நிகழ்வினையொட்டி சிறப்பு வெளியீடாக இந்நூல் வெளியிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

### அவலங்களின் பதிவுகள்:

ஒரு போரின் இறுதியில் அவ்வரலாறு வென்றவர்களாலேயே எழுதப்படுகின்றது. அதற்குள் தோற்றவர்களின் வீரம் செறிந்த போராட்டங்கள் மழுங்கடிக்கப்பட்டு விடுகின்றன. தோற்றவர்களின் பார்வையில் அவர்கள் பக்க நியாயங்களை



வரலாற்றில் பதிவு செய்பவை ஆக்க இலக்கியங்களே. பின்னாளில் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பின் போது இடம்பெற்ற நிகழ்வுகள், நியோ ஜேர்னலிச முறையில் கதை சொல்லிகளால் பதிவுசெய்யப்பட்டு நூலுருவில் வெளியிடப்பட்டுள்ளன. அவ்வகையில் எழுந்த முதலாவது நூலாக 'வல்வைப் படுகொலைகள்' அமைகின்றன. வல்வை ந. அனந்தராஜ் (புனைபெயர்: வல்வை ஆனந்தன்) எழுதிய இந்நூல் 1989-ல் முதற்பதிப்பைக் கண்டது. இந்திய இராணுவத்தினர் இலங்கையை ஆக்கிரமித்திருந்த வேளையில் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட பல படுகொலைகளில் உலகையே உலுக்கிய படுகொலைகளாக வல்வெட்டித்துறைப் படுகொலைகள் இடம் பெற்றிருந்தன. 1989-ம் ஆண்டு ஆகஸ்ட் 2, 3, 4-ம் திகதிகளில் வல்வெட்டித்துறையில் ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியபின் இந்திய இராணுவத்தினரால் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் தொடர்பான விபரங்கள், கதைகளாக நெஞ்சை உருக்கும் வகையில் இந்நூலில் எழுதப்பட்டிருந்தன. மக்களின் அவலங்களைச் சித்திரிக்கும் கறுப்பு வெள்ளை, வண்ணப் புகைப்படங்களுடன் வெளியிடப்பட்டிருந்த இந்நூல் பாதிக்கப்பட்ட வல்வை மக்களின் சத்தியப் பிரமாண வாக்குமூலங்களை உள்ளடக்கியதாக INDIA'S MYLAI என்ற பெயரில் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நூலுக்கான அணிந்துரை முன்னாள் இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டசினால் மிக உணர்வுபூர்வமாக எழுதி வழங்கப்பட்டிருந்தது.

பின்னாளில் 'வல்வைப் புயல்: வீரம் நிறைந்த மண் வீறு

கொண்ட வரலாறு' என்ற தலைப்பில் வல்வை ந. அனந்த-ராஜ் அவர்கள் மற்றுமொரு நூலையும் எழுதியிருந்தார்.




கனடா, ஈ-குருவி டொட்.கொம், வெளியீடாக ஜனவரி 2015-ல் இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது.

தமிழர் தாயகத்தில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை இந்திய இராணுவத்தால் ஏற்படுத்தப்பட்ட கொடூர நிகழ்வுகளில் பல, நெஞ்சை அதிர வைக்கும் நிகழ்வுகளாக இருந்து, அவற்றை நேரில் கண்டு பதைபதைத்த தனது மனங்களில் இன்றும் மாறாத வடுக்களாக கொண்டு வாழ்பவர் வல்வை ஆனந்தன். அவற்றுள் ஒன்றான 1991-ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற கோர நிகழ்வுகளின் ஆவணத் தொகுப்பே இதுவாகும். 1991-ம் ஆண்டு ஜனவரி மாதம் வல்வையில் தொடர்ச்சியாக நான்கு நாட்கள் உத்தியோகப் பற்றற்ற ஊரடங்குச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தி அம்மக்களை அந்தந்த இடத்திலிருந்து வெளியேற விடாமல் தடுத்துவிட்டு, அவர்கள் மீதும் அவர்களுடைய குடியிருப்புகள் மீதும் மூர்க்கத்தனமான விமானத் தாக்குதலை இராணுவம் மேற்கொண்டிருந்தது. வல்வெட்டித்துறையில், ஸ்ரீலங்கா அரச படைகளினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளைச் சித்திரிக்கும் வகையில் எழுதப்பட்ட இந்நூல் அந்த வரலாற்றை ஆவணப் பதிவாக்கியுள்ளது. இது முன்னர் 'ஒப்பரேஷன் வல்வைப் புயல்' என்ற தலைப்பில் உதயன் பத்திரிகையில் 16 நாட்களாக தொடராக எழுதப்பட்டிருந்தது. மேலதிக தகவல்களுடன் புகைப்பட ஆதாரங்களுடன் 20 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இவ்வகையில் மூன்றாவதாகக் குறிப்பிடக்கூடிய நூல், நாவண்ணன் எழுதிய 'அக்கினிக் கரங்கள்' என்ற நூலாகும். ஈழத் தமிழரின் இனப் பிரச்சினையைப் பகைப்புலமாகக் கொண்ட உண்மை நிகழ்வுகளை கலாபூர்வமாகப் பதிவு செய்து வைக்கும் பணியிலே ஈடுபட்ட சில ஈழத்து எழுத்தாளர்களுள் நாவண்ணன் குறிப்பிடத் தகுந்தவர். இவரின் இலக்கிய வாழ்வின் பெரும்பகுதி இத்தகைய தகவல்களைத் திரட்டிப் பதிவுக்குள்ளாக்கும் பணியிலேயே கழிந்திருக்கிறது. கிழக்கின் சூறாவளி, வடக்கின் இராணுவ எரியூட்டல்கள், நவாலித் தேவாலயப் படுகொலை, பாடசாலை மாணவர்கள் குண்டு வீச்சுக்குள்ளாகிப் பலியான மறைக்கப்பட்ட வரலாறு என்று இவரது நேரடித் தகவல் திரட்டலும், அவற்றை களத்தில் நின்றே இலக்கியார்த்தமாகப் பதிவு செய்தலும் ஈழத்தமிழ் இலக்கிய வரலாற்றில் அழிக்கப்பட முடியாதவையாகும்.

'அக்கினிக் கரங்கள்' என்ற அவரது நூல் யாழ்ப்பாணம்: தமிழ்த்தாய் வெளியீடாக ஐப்பசி 1995-ல் வெளியிடப்பட்டது. அக்கினிக் கரங்கள் இந்திய இராணுவ அராஜகத்தின் மற்றொரு பக்கத்தை முகத்திலறைந்தாற்போல் எமக்குச் சொல்கின்றது. முற்று முழுதான உண்மை நிகழ்வுகளையே இவர் இக்கதையில் கோர்த்திருக்கின்றார் என்பதை அக்காலகட்டத்தில் யாழ் மண்ணில் வாழ்ந்திருந்த வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்வார்கள். 1987-ம் ஆண்டு ஒக்ரோபர் 21-ம், 22-ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்





குள் இந்திய அமைதி காக்கும் படையினர் புகுந்து புரிந்த படுகொலைகளை மையமாக வைத்து இவ்விலக்கியம் படைக்கப்பட்டுள்ளது. இரத்த வங்கிப் பிரிவில் பணியாற்றிய தாதி ஒருவரினதும், அந்தப் படுகொலை நிகழ்வில் தப்பிய

வைத்தியர், தாதியர், சிற்றூழியர், நோயாளர் ஆகியோரின் நேரடி அனுபவங்களைக் கொண்டும் காங்கேசன்துறையில் வாழ்ந்து இடம்பெயர்ந்த நூலாசிரியர் பெற்ற அனுபவங்களும் அக்கினிக் கரங்களின் கதையாகின்றது. இந்நூலின் முதற் பதிப்பு ஒக்ரோபர் 1995-ல் வெளியிடப்பட்ட கையோடு வலிகாமத்தில் பாரிய புலப்பெயர்வு நிகழ்ந்தமையால், முதற் பதிப்பு திருப்திகரமான முறையில் விநியோகிக்கப்படவில்லை. இந்நிலையில், மேற்படி அக்கினிக் கரங்கள் கதையுடன், நினைவாலயம், அருட்திரு நேசன் அடிகளார் அவர்களின் துன்பியல் அனுபவங்கள் ஆகியன சேர்க்கப்பெற்று நூலின் 2-வது பதிப்பு, 2005-ல் வெளியாகியது. நியோ ஜேர்னலிசம் என்ற வகையில் அமைந்த மேலும் பல நாவண்ணனின் நூல்கள், இலங்கை அரசின் போர்க்காலக் குற்றங்களை அழுத்தம் திருத்தமாகப் பதிந்து வைத்திருக்கின்றன. காலம் காலமாக பல மறுபதிப்புக்களை இவை காணப்போகின்றன.

'முறிந்த பனை: இலங்கையில் தமிழர் பிரச்சினை: உள்ளிருந்து ஒரு ஆய்வு' என்ற நூல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளான ராஜினி திரணகம, ராஜன் ஹூல், தயா சோமசுந்தரம், கே. ஸ்ரீதரன் ஆகியோரால் ஜுலை 1988-இல் எழுதி வெளியிடப்பட்ட The Broken Palmyra என்ற நூலின் தமிழாக்கமாகும். யாழ்ப்பாணம்: மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு, 1996-ல் இத்தமிழாக்கத்தை வெளியிட்டிருந்தது. இரு பகுதிகளாக அமைந்துள்ள இந்நூலின் முதற்பகுதி 1987-ல் இலங்கை இந்திய ஒப்பந்தமும் இந்தியப் படையின் வருகையும் நிகழ்ந்த காலகட்டத்தில் நின்று ஈழத்து இனப் பிரச்சினையின் ஒரு பரிணாமத்தை - ஈழத்தமிழர் போராட்டத்தின் வரலாற்றைப் புரியவைக்கும் நோக்கில் எழுதப்பட்ட ஆங்கில நூலின் தமிழாக்கமாகவும், இரண்டாம் பகுதி இக்காலகட்டத்தில் இந்தியப் படையினரின் தாக்குதல் பற்றிய பல்வேறு அறிக்கைகளும் ஆய்வுகளும் கொண்டதாகவும் அமைந்துள்ளது. The Broken Palmyrah என்ற இதன் மூல நூல் ஆங்கிலத்தில் வெளியான சிறிது காலத்தில் இந்நூலின் உருவாக்கத்தின் முக்கிய பங்காளியான வைத்திய கலாநிதி ராஜினி திரணகம யாழ்ப்பாணத்தில் இனந்தெரியாத இளைஞர்களால் படுகொலை செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இன்றளவில் அக்கொலையாளிகள் கண்டறியப்படவேயில்லை.

'குருதிக் குளியல்' என்ற பெயரில் கலையார்வன் என்றறியப்பெற்ற கு. இராயப்பு அவர்கள் யாழ்ப்பாணம், நெயோ கல்சரல் கவுன்சில் மூலம் வெளியிட்ட நூலும் இங்கு குறிப்பிடத்தக்கது. உண்மை நிகழ்வுகளின் உணர்வுப் பதிவுகள் என்ற வகையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்நூலில், ஈழத் தமிழர்களின் வாழ்வில் குறிப்பாக, குருநகரையும் அதைச் சார்ந்த பகுதிகளையும் சேர்ந்த மக்கள் மத்தியில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போர்க்கால இன வன்முறையின் பாரிய பாதிப்புகள் பதிவாகியுள்ளன. மூன்று பகுதிகளில் இக்குருதிக் குளியல்களைப் பதிவு செய்திருக்கும் நூலாசிரியர், முதலாவது குளியலில் வேட்டை என்ற தலைப்பில் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு முன்னதாக, 10.6.1986-ம் ஆண்டு கரைவலைத் தொழிலுக்குச் சென்ற 31 மீனவர்கள் மண்டைதீவுப் பகுதியில் வேட்டையாடப்பட்ட சம்பவமும், இரண்டாவது குளியலில் அறுப்பு என்ற தலைப்பில் இந்திய இராணுவத்தின் காலகட்டத்தில் 10.10.1987 முதல் 22.10.1987 வரையிலான இருவார கால இடப்பெயர்வின் போது யாழ்ப்பாண மண்ணில் 38 பேர் கொல்லப்பட்டும் 66 பேர் காயமடைந்தும் நடந்த அவலங்களும், மூன்றாவது குளியலில் அழிப்பு என்ற தலைப்பில் இந்திய இராணுவம் வெளியேறிய பின்னதான காலகட்டத்தில்,




13.11.1993 முதல் 5.12.1993 வரையிலான காலப்பகுதியில் 140 வருடப் பழமையான குருநகர் யாகப்பர் ஆலயம், சின்னக்கடைச் சந்தை போன்றவற்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட விமானத் தாக்குதலையும் அதில் பலியான 27 பேர் பற்றியும் பதிவு செய்துள்ளார்.

'ஈழத் தமிழர்களின் அவலங்கள்' என்ற தலைப்பில் தமிழகத்தைச் சேர்ந்த பன்மொழிப் புலவர் பேராசிரியர் முனைவர் மு. சதாசிவம், ஈழத்தமிழர்களின் 26 படைப்பிலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படும் ஈழத் தமிழர்களின் இனவாத அவலங்கள் தொடர்பாக அந்தந்த நூலாசிரியர்கள் குறிப்பிட்ட கருத்துக்களை அல்லது பாத்திரங்கள் கூறுவதாகக் குறிப்பிடும் கருத்துக்களைத் தொகுத்து ஒரு நூலை உருவாக்கியுள்ளார். ஈரோடு உலகத் தமிழியக்கம், 2009-ல் இந்நூலை வெளியிட்டிருந்தது. இந்திய அமைதிப்படை உள்ளிட்ட இலங்கை இராணுவ அட்டகாசங்கள், இன அழிப்பு அவலம் போன்றவை இங்கு தமிழக வாசகர்களுக்காகத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

(தொடரும்)



selvarajah.n@thaiveedu.com




# ஈழமும் சோழமும்

## பொலனறுவைச் சோழர் கோவில்கள்

வி. துலாஞ்சனன்

பொலனறுவை இராஜராஜ சோழனும், இராஜேந்திர சோழனும் ‘ஜனநாதமங்கலம்’ என்ற பெயரில் ஆண்ட பூமி. அவர்களிடமிருந்து இலங்கையை மீட்ட விஜயபாகு மன்னன் அரசு புரிந்த மண். இலங்கையின் புகழ்பெற்ற மன்னர்களான முதலாம் பராக்கிரமபாகு, நிசங்கமல்லன் உள்ளிட்ட பலர் வாழ்ந்த தலைநகர். கலிங்க மாகோன் இறுதி மன்னனாக வீற்றிருந்து ஆண்ட நிலம்.

கடந்த ஒரு மாத இடைவெளியில் வெவ்வேறு காரணங்களுக்காக மூன்று நண்பர்களோடு பேசக் கிடைத்தது. அதிசயமாக மூவருமே பொலனறுவை பற்றிப் பேசினார்கள். இருவர் அங்கு குடும்பத்தோடு சுற்றுலா போய் அங்கிருந்த சைவ - வைணவக் கோவில்களைப் பார்வையிட்டு வந்திருந்தார்கள். அவர்களில் ஒருவரால் இரண்டே இரண்டு கோவில்களையே பார்க்க முடிந்திருந்தது. அவர் பாவமாகப் ‘பொலனறுவையிலுள்ள பெரும்பாலான சோழர்காலக் கோவில்கள் எங்கே இருக்கின்றன என்றே தெரியவில்லை. கூகிள் வரைபடத்திலும் ஒழுங்கான தரவு இல்லை. அந்தக் கோவில்கள் பற்றிய விபரம் எங்கு கிடைக்கும்?’ என்று கேட்டார்.

பொலனறுவையில் அமைந்திருக்கும் பெரும்பாலான சைவ-வைணவக் கோவில்கள் ஈழத்தில் சோழரின் ஆட்சி ஏற்பட்ட பின்னணியிலேயே எழுந்தவை. அவற்றை மேலோட்டமாகப் பார்ப்பது, ஈழத்துக்கும் சோழத்துக்குமான வரலாற்று உறவை ஆராய்வதற்கு ஒரு அறிமுகமாக நமக்கு அமைவதுடன், பொலனறுவைக்குச் சுற்றுலா செல்லும் ஏனையோருக்கும் அவற்றைப் பார்த்துவருவதற்கு வசதியாக இருக்கும். எனவே இன்றைய தொடரில் அந்தக் கோவில்களைப் பற்றிப் பார்க்கலாம்.

இலங்கையின் பிரித்தானியர் காலத் தொல்லியல் ஆய்வேடுகளின் படி, பொலனறுவையில் மொத்தம் பதினான்கு சைவ-வைணவக் கோவில்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை மேற்கோள் காட்டிப், பேராசிரியர் பத்மநாதன் தன் ‘இலங்கையில் இந்து கலாசாரம்’ நூலில் விரிவான தகவல்களைத் தந்திருக்கிறார். அவர் தரும் பட்டியலின் படி, சிவன் கோவில்கள் ஏழு, திருமால் கோவில்கள் ஐந்து, கொற்றவை கோவில் ஒன்று. இன்னொன்று அகழப்பட்டபோது இன்ன கடவுளுக்கு உரியதென அடையாளங் காணப்படாத கோவில்- ஆக மொத்தம் பதினான்கு.

அடையாளம் காணப்படாத கோவிலருகே பிற்காலத்தில் பிள்ளையார் சிலையொன்று கிடைக்கப்பெற்றதால் அதைப் பிள்ளையார் கோவில் என்று கருதுகின்றனர். சிவன் கோவில்களுக்கும், திருமால் கோவில்களுக்கும் அவை அகழாய்வில் இனங்காணப்பட்ட வரிசையில் முதலாம் இலக்கச் சிவாலயம், இரண்டாம் இலக்கச் சிவாலயம், முதலாம் இலக்க விண்ணகரம், இரண்டாம் இலக்க விண்ணகரம் என்றவாறு இலக்கமிடப்பட்டுள்ளன. விண்ணகரம் என்றால் திருமால் கோவில். பொலனறுவையின் சிவாலயங்களுக்கும் விண்ணகரங்களுக்கும் சூட்டப்பட்ட பெயர்கள் அவை கண்டறியப்பட்ட ஒழுங்கில் தான் என்பதால் அதை வைத்து அக்கோவில்களின் பழைமையை அளவிடக்கூடாது.

ஆனால் இந்தப் பட்டியலையும் நேரடி அவதானிப்பையும் வைத்துப் பார்த்தபோது கிடைத்த பெறுபேறுகள் வேறு. பொலனறுவையில் ஏழு சிவாலயங்களுக்குப் புறம்பாகத் தொல்லியல் அறிக்கைகளில் ‘சிவாலயம் V (A)’ என்று அடையாளமிடப்பட்ட எட்டாவது சிவாலயம் ஒன்றும் இருக்கிறது. ரன்கொத் விகாரத்தை அண்டித் ‘தேவாலயம்’ என்று இனங்காணப்பட்டுள்ளது. குறைந்தது இரண்டு கட்டட இடிபாடுகள் காணப்படுகின்றன. இவையும் சைவ - வைணவத் தெய்வங்களுக்கு அமைக்கப்பட்டிருந்த கோவில்கள் என்று கொள்ளலாம்.

முதலாம் விண்ணகரம் என்று அடையாளமிடப்பட்ட திருமால் கோவில் இன்று இல்லை. பிரித்தானியத் தொல்லியல் அறிக்கைகளை ஆராய்ந்தால், இரண்டாம் சிவாலயத்தையே ஆரம்பத்தில் ‘முதலாம் விண்ணகரம்’ என்று அடையாளப்படுத்தி,

பின்பு தொடர்ச்சியான அகழாய்வுகளின் வழியே அது சிவாலயம் என்பதை அறிந்து அதற்கு ‘இரண்டாம் சிவாலயம்’ என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

ஐந்தாம் விண்ணகரத்தினதும் கொற்றவை கோவிலினதும் அமைவிடங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கின்ற போதும், புலத்தில் அவை இரண்டும் இன்று மறைந்துவிட்டன. அவை அங்குதான் காட்டில் எங்கேனும் மறைந்திருக்கவேண்டும். அல்லது தெரிந்தோ தெரியாமலோ அழிக்கப்பட்டிருக்க வேண்டும். இலங்கையின் தொல்லியல் முக்கியத்துவமிக்க சுற்றுலா நகரொன்றில் ஆவணப்படுத்தப்பட்ட இரு தொல்லியல் தலங்கள் வெறும் நூறாண்டுகளில் தடயமேதுமின்றி மறைந்துவிட்டன என்பது அவ்வளவு மகிழ்ச்சிகரமான செய்தி இல்லை.

ஆக, இப்போது கிடைக்கின்ற தரவுகளின் படி, சிவாலயங்கள் எட்டு, விண்ணகரங்கள் மூன்று, பிள்ளையார் கோவில் ஒன்று என்றவாறு மொத்தம் 12 சைவ - வைணவக் கோவில்களை நீங்கள் பொலனறுவையில் தரிசிக்க முடியும் (உ.ரு.01). அடையாளம் காணப்படாமல் ரன்கொத் விகாரத்தின் அருகேயுள்ள இரு கோவில்களையும் சேர்த்தால், அதே பதினான்கு கணக்கே வருகின்றது.

கேள்விப்பட்டதும் தாமதிக்காமல் இந்தப் பதினான்கு கோவில்களையும் பார்ப்பதற்குப் பொலனறுவைக்குச் சுற்றுலாவுக்குக் கிளம்பிவிட்டீர்கள் என்றால், கொஞ்சம் பொறுங்கள். இந்தக் கோவில்களில் நாம் இரசிக்க வேண்டியவை என்னென்ன என்பதைப் பார்க்கவேண்டி இருக்கிறது. முதலாம் - இரண்டாம் சிவாலயங்கள் ஓரளவு பிரபலமானவை என்பதால் அவற்றைக் கண்டுபிடிப்பது சுலபம். ஏனையவற்றுக்கென நிறுவப்பட்டுள்ள வழிகாட்டிப் பலகைகள் பல சிதைந்துள்ளன. தெளிவான குறிப்புகளும் ஓரிரு கோவில்களுக்குத் தான் வைக்கப்பட்டுள்ளன.

பொலனறுவையில் பௌத்த தலங்களான தலதா முற்றம், இரன்கொத் விகாரம், கிரி விகாரம், கல் விகாரம், பவள விகாரம் (சிங்களம்: பபளு விஃகார), மாணிக்க விகாரம் (சிங்களம்: மெணிக் விஃகார) என்பன சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றன என்பதால் அவற்றுக்குத் தெளிவான வழிகாட்டிப் பலகைகள் உள்ளன. அவற்றை வைத்து இந்தக் கோவில்களைத் தேடிப்பிடிப்பது இலகுவாக இருக்கும்.

கொழும்பையும் மட்டக்களப்பையும் இணைக்கும் A11 இலக்க திருக்கொன்றையடிமடு - மருதங்கடவலை வீதியானது பராக்கிரம சமுத்திரம், பெந்திவாவி (தோப்பவாவி) எனும் இரு ஏரிகளின் கரையோரமாகப் பொலனறுவை புனித நகரை ஊடறுத்துச் செல்கின்றது. பொலனறுவைத் தொல்லியல் மையத்துக்கான பிரதான நுழைவிடம், இந்த ஏ11 வீதியோடு இங்குராங்கொடை வீதி இணையும் சந்தியிலிருந்து தெற்கே ஒரு கி.மீ தொலைவில் இடப்பக்கமாக வருகின்றது. பிரதான நுழைவிடத்தில் நுழைந்ததும் நுழைவுச்சீட்டு நிலையத்தின் அருகே வீதியின் மறுபுறம் அமைந்திருப்பது முதலாம் சிவாலயம். முதலாம் சிவாலயத்துக்கு வடக்கேதான் தலதா முற்றம் அமைந்துள்ளது. நான்காண்டுகளுக்கு முன்னர் பெய்த கடும் மழையில் முதலாம் சிவாலயம் சிதைந்துவிட்டபடியால் தற்போது தொல்லியல் திணைக்களத்தால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அப்படியே தலதா முற்றத்தைத் தாண்டி புனித நகரின் வடக்குப் பிரதான வீதி வழியாகச் செல்லும் போது வரும் சந்தியில் வலப்புறம் பிரியும் வீதி பவள விகாரத்தைத் தாண்டிச் சென்று இரண்டாம் சிவாலயத்துக்குக் கொண்டுசென்று விடும்.




**உரு. 01 - பொலனறுவைச் சோழக் கோவில்களின் அமைவிடம். இனங்காணல் வசதிக்காகப் பௌத்த விகாரங்களின் அமைவிடங்கள் காட்டப்பட்டுள்ளன. இலக்கங்கள் கோவிலைக் குறிக்கும். உ-ம். 1 - முதலாம் சிவாலயம்.**

இரண்டாம் சிவாலயத்தின் உண்மையான பெயர் வானவன் மாதேவீச்சுரம். கருவறையும் விமானமும் சிதையாமல் ஓரளவு முழுமையாக இருக்கும் ஒரேயொரு பொலனறுவைக் கோவில் இது. இக்கோவில் பொலனறுவையின் பழைய கோட்டையின் தென்கிழக்கு மூலையில் அமைந்திருந்தது. வானவன் மாதேவீச்சுரத்திற்கு முன்புறம் இடிந்த கோட்டைச்சுவரை இன்றும் காணலாம்.

வானவன் மாதேவீச்சுரத்திற்குத் திரும்பாமல் அந்தச் சந்தி வழியே வடக்குப் பிரதான வீதியில் நேரே சென்றால், பொலனறுவைக் கோட்டையின் வடக்கு வாசலை அடையலாம். இந்த வடக்கு வாசலில் மூன்று கோவில்கள் அமைந்துள்ளன. ஒன்றை ஒன்று நோக்கியபடி ஏழாம் சிவாலயமும் இரண்டாம் விண்ணகரமும் (உ.ரு.02) அமைந்துள்ளன. ஏழாம் சிவாலயத்

துக்குத் தெற்குப் புறமாக பிள்ளையார் கோவில் அமைந்துள்ளது.

வடக்கு வாசலைத் தாண்டினால் இடப்புறம் மாணிக்க விகாரம் வரும். மாணிக்க விகாரத்திற்கும் ரன்கொத் விகாரத்துக்



உரு. 02 வடக்கு வாசல் விண்ணகரம் (இரண்டாம் விண்ணகரம்) மூலவர்

கும் நடுவே அதே இடப்பக்கம் வீதியோரமாக அமைந்துள்ளது எட்டாவது சிவாலயமான 'சிவ தேவாலயம் ஏ'. சிவாலயத்தோடு இணைந்தவாறு காமக்கோட்டம் (அம்மன் கோவில்) அமைந்திருக்கக்கூடும் என்று ஊகிக்கத்தக்க விந்தையான அமைப்பில் இக்கோவில் கட்டப்பட்டுள்ளது.

எட்டாம் சிவாலயத்தைத் தாண்டிச் செல்ல, இரன்கொத் விகாரம் வரும். அதன் இருபுறமும் அமைந்துள்ள பல கட்டட இடிபாடுகளிடையே கோவில்களின் அமைப்பில் 'தேவாலயம்' எனும் இரு அடித்தளங்கள் அமைந்துள்ளன. இந்த இரன்கொத் விகாரம் நிசங்கமல்ல மன்னனால் கட்டப்பட்டது என்பதும், இதைக் கட்டுவதற்கு முன் இங்கிருந்த பெரிய மரமொன்று வெட்டப்பட்டதாகவும், அம்மரத்தை வெட்டுவதற்கு முன், அம்மரத்தில் குடியிருந்த இரத்தினாவளி எனும் தேவதைக்குப் பலிகொடுத்து அவளை அங்கிருந்து நீங்கச் செய்ததாகவும் சிங்கள மரபுரைகள் இருக்கின்றன. இரன்கொத் விகாரத்தின் பழைய பெயரும் இரத்தினாவளி சைத்தியம் தான்.

வடக்குப் பிரதான வீதி முடிவடையும் சந்தியில் கல் விகாரமும் வாகனத் தரிப்பிடமும் அமைந்துள்ளன. வாகனத் தரிப்பிடத்துக்கு எதிரே கிரி விகாரம் அமைந்துள்ளது. கிரி விகாரத்துக்கு மேற்கே சென்றால் ஆறாம் சிவாலயத்தைக் காணலாம். இந்தச் சிவாலயத்தில் ஏழு கன்னிமாருக்குத் தனிச்சன்னதிகள் முன்பு அமைந்திருக்கின்றன என்பது தெரிகின்றது. பிரித்தானியர் காலத் தொல்லியல் அறிக்கைகளின் படி இந்தச் சிவாலயத்துக்குத் தெற்கேதான் ஐந்தாம் விண்ணகரம் அமைந்திருந்தது. இன்று அக்கோவிலைக் காணமுடியவில்லை. சிவாலயத்துக்குச் சற்று அப்பால் காணப்படும் இன்னொரு கட்டட இடிபாடு, புத்த கலைப்பாணியையே காட்டுகின்றது.

ஆறாம் சிவாலயத்தைத் தாண்டி மேற்கே செல்லும் வீதி, இங்குராங்கொடை வீதியில் முடிவடைகின்றது. இந்த இங்குராங்கொடை வீதியில் தெற்கே திரும்பி 1 கி.மீ பயணித்தால், நாம் மீண்டும் ஏ11 பிரதான வீதியின் இங்குராங்கொடைச் சந்தியை அடையலாம். நாம் நின்றுகொண்டிருக்கும் இந்தச் சந்தியிலிருந்து தெற்கே 400 மீ அல்லது ஏ11 பிரதான வீதி இங்குராங்கொடைச் சந்தியிலிருந்து வடக்கே 600 மீ பயணிக்கும் போது இன்னொரு ஆலயத்தொகுதியை வந்தடைவோம். அறிவித்தல் பலகையில் 'நய்பெண விகாரம்' (நாகபட விகாரம்) என்று காட்சிப்படுத்தப்பட்டுள்ள இந்த இடிபாடு ஐந்தாம் சிவாலயம் ஆகும் (உரு. 03). ஐந்தாம் சிவாலயத்தின்



உரு. 03 ஐநூற்றுவ ஈச்சரம் (ஐந்தாம் சிவாலயம்) - கருவறை

பழைய பெயர் ஐநூற்றுவ ஈச்சுரம் என்பது கல்வெட்டுகளிலிருந்து தெரிய வந்திருக்கிறது. ஐந்தாம் சிவாலயம் அமைந்துள்ள அதே வளாகத்திலேயே அக்கோவிலுக்கு வடக்காக நான்காம் விண்ணகரம் அமைந்துள்ளது. ஐநூற்றுவ ஈச்சரத்துக்குக் கிழக்கே வீதியின் மறுபுறம் மூன்றாம் சிவாலயம் காணப்படுகின்றது.

ஐநூற்றுவ ஈச்சரத்திலிருந்து இங்குராங்கொடை வீதியில் மேலும் 600 மீ பயணித்து நாம் ஏ11 வீதியை வந்தடைகிறோம். இங்குராங்கொடைச் சந்தியிலேயே பொலனறுவை நகரின் எல்லை ஆரம்பிக்கின்றது. அந்த இடத்தில் நான்காம் சிவாலயம் அமைந்துள்ளது. இந்த நான்காம் சிவாலயத்தின் அருகில் வீதிக்கு மறுபுறம் மூன்றாம் விண்ணகரம் உள்ளது. மூன்றாம் விண்ணகரம் அமைந்துள்ள பகுதி யானைத்தடுப்பு மின்சார வேலியிட்டு அடைக்கப்பட்டுள்ளதால், அந்த விண்ணகரத்தை தரிசிப்பது சற்றுக் கடினமானது. மூன்றாம் விண்

ணகரத்துக்கும் நான்காம் சிவாலயத்துக்கும் அருகில் தான் கொற்றவை கோவில் அமைந்திருந்ததாகப் பிரித்தானியர்



**உரு. 04 முதலாம் சிவாலய மீள்கட்டுமானப் பணிகளின் போது வெளிப்பட்ட பழைய செங்கற்றளி அடித்தளம்**

குறிப்புகள் சொல்கின்றன. இன்று அக்கோவிலை அடையா ளங்காண முடியவில்லை. இந்தக் கொற்றவை கோவிலில் கிடைத்த அரிதான அரிகண்டச் சிற்பமொன்று தற்போது பொலனறுவை அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட் டுள்ளது.

பதினான்கு சைவ - வைணவக் கோவில்களில் வானவன் மாதேவி ஈச்சரம், ஐநூற்றுவ ஈச்சரம், ஆறாவது சிவன் கோவி லான கன்னிமார் சிவாலயம் ஆகிய மூன்றும் மிகப்பழை யவை ஆகும். இவை சோழராட்சி இலங்கையில் ஏற்பட்ட பத்தாம் நூற்றாண்டளவில் அமைக்கப்பட்டவை. இந்தக் கோவில்களிலும் ஏழாம் சிவாலயமான கோட்டைவாசல் சிவா லயம், மூன்றாம் சிவாலயம் என்பவற்றிலும் சோழர் காலப் படிமங்கள் பல கண்டெடுக்கப்பட்டுள்ளன. அதிகளவான சைவ வெண்கலச் சிலைகள் கிடைத்த முதலாம் சிவாலயத் தின் கருங்கல் வேலைப்பாடுகளின் கலைப்பாணி பிற்பட்டதா கையால் அது பதின்மூன்றாம் நூற்றாண்டில் அமைக்கப்பட் டது என்பதே பொதுவான அறிஞர் கருத்தாக இருக்கிறது. என்றாலும் அதுவும் சோழர் காலத்தைச் சேர்ந்த கோவிலா கவே இருக்கவேண்டும் என்பது தற்போதைய மீள்கட்டுமானத் தில் வெளிப்பட்டுள்ள செங்கல்லாலான கருவறை, அர்த்த மண்டப அடிப்பகுதிகளிலிருந்து தெரியவந்துள்ளது (உரு.04).



thulanchanan.v@thaiveedu.com





# வதனமார் வரவு

10

– த. ஜீவராஜ்

ஓவியம்: டிராட்ஸ்கி மருது

இரவு முழுவதும் தூக்கம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்த ஆதினி திடுக்கிட்டு கண்விழித்தாள். நிலவும், நெருங்கியிருந்த நட்சத்திரங்களும் அவளுக்கு நேரத்தைச் சொல்லியது. அவசர அவசரமாகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டவள் ஓட்டமும், நடையுமாக அறிவாட்டியின் வீட்டினை அடைந்தாள். காலைத் தியானத்தை முடித்து ஆறுதலாகத் தனது கடமைகளை ஆற்றிக் கொண்டிருந்த அறிவாட்டிப் பாட்டியை அவசரப்படுத்தி இடைச்சேரியின் வதனமார்த் திடலை நோக்கி ஆதினி நடக்கலானாள்.

வதனமார்த் திடலில்தான் மறிகாரர்களை வரவேற்க இருப்பதாக முதல் நாள் ஊரவர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. 'இவ்வளவு நேரத்தோட போகத் தேவையில்லை. யாருமே இல்லாத திடல நாம ரெண்டு பேர் மட்டும்தான் காவல் காக்கப்போறம்' என்று புலம்பியபடி ஆதினியுடன் நடந்தாள் அறிவாட்டி. அவள் கூறியது உண்மை என்பதை நிருபிப்பதாக அந்தத் திடலில் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். வதனமார் சுவாமியைச் சுற்றியிருந்த புற்களும், புதர்களும் அகற்றப்பட்டு அழகாகக் காட்சி தந்தது. வதனமார் சுவாமி மடைக்குரிய ஒழுங்குகளை ஒரு சிலர் செய்து கொண்டிருந்தார்கள்.

வதனமார் சுவாமி மடைக்குச் சற்றுத் தூரத்தில் இருந்த வேப்பமரத்தடியில் அமர்ந்தவாறு மடை வைப்பதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருந்தார் கோபாலன் ஐயா. மாதோட்டத்திற்கு யானை வியாபாரத்திற்காகப் போயிருந்த அவர் சில நாட்களுக்கு முன்னர்தான் ஊர் திரும்பி இருந்தாரென அறிவாட்டி கேள்விப்பட்டிருந்தாள். ஊர் கூடும் சமயங்களில் எப்படியாவது தனக்குத் தெரியாத விடயங்களைத் தெரிந்தவர்களிடமிருந்து உறிஞ்சிக் கொள்வது அறிவாட்டியின் வழக்கம். அதனால் அவள் கோபாலன் ஐயாவின் அருகேபோய் அமர்ந்துகொள்வாள் என்பதை ஆதினி ஊகித்திருந்தாள். யானை வியாபாரம் அரச காரியம் என்பதால் அது பற்றி ஒரு சிறு செய்தியைக்கூட கோபாலன் ஐயாவிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாது என்பது ஊரறிந்த விடயம். எனவே அறிவாட்டி அவரிடம் என்ன கேட்கப் போகிறாள் என்பதை ஆதினி உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தாள்.

வழமையான சுக விசாரிப்புகளின் பின் அறிவாட்டி வதனமாராகச் சென்ற மறிகாரர் பற்றி கேட்கத் தொடங்கினாள். 'கருங்காலிக் கம்பை ஏன் மறிகாரர் கொண்டு போறவர்கள்' என்றாள் பாட்டி. முன்னொரு பொழுது பெரிய வதனமாராகக் கடமை செய்த காலங்களை அறிவாட்டியின் கேள்வி கோபாலன் ஐயாவிற்கு ஞாபகப்படுத்தியது. மீட்டப்பட்ட ஞாபகங்கள் அவர் முகத்தில் ஒருவித நிறைவையும், பெருமிதத்தையும் உண்டாக்கியதை ஆதினி புரிந்துகொண்டாள். நன்றாக நிமிர்ந்து மரத்தில் சாய்ந்து கொண்ட கோபாலன் ஐயா அவர் வயதையொத்த அறிவாட்டியை அம்மா என்று விழித்து உரையாடத் தொடங்கினார்.

அம்மா நாங்க மறிகாரராகக் காட்டுக்குள்ள போறத்துக்கு முதல் வெழுக் கயிறு, கருங்காலிக் கம்பு, சிறிய கத்தி, திருக்கோணேச்சரத்தில் இருந்து கொண்டு வந்த மங்கலருடைய ஆயுதப் பெட்டகத்தில் இருந்து கிடைத்த ஆயுதம், சமைத்துச் சாப்பிடுவதற்குத் தேவையான மண்சட்டி, பானை எல்லாம் எல்லா வதனமாருக்கும் கிடைக்கும். அதில கருங்காலிக் கம்பை பூசாரியான சம்பூர்க் கட்டாடி மந்திரிச்சுக் குடுப்பார்.

மந்திரிச்ச கருங்காலிக் கம்பை என்ன செய்வீங்க? என்று அறிவாட்டி ஆர்வத்தோடு கேட்டாள்.

காட்டில் யானை, சிறுத்தை மாதிரிக் கொடிய விலங்குகளிட்ட இருந்து எங்களக் காப்பாத்திறது இந்தக் கருங்காலிக் கம்பு தான். கடைசியா நாங்க காட்டுக்குள்ள போனப்ப கருங்காலிக் கம்பக் காட்டித்தான் மூன்றாம் வதனமார் கரடியிட்ட இருந்து தப்பிவந்தார்.

யார் அந்த மூன்றாம் வதனமார் என்று ஆர்வத்தோடு கேட்டாள் அறிவாட்டிப் பாட்டி.

கந்தளாய் வேள்வியில காட்டுக்குப் போறதிற்கு முதல் நடக்கிற சடங்கில கயிறு கொடுப்பாங்க. கயிறு குடுக்கும் ஒழுங்குக்கு அமைய பன்னிரண்டு மறிகாரர்களையும் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் வதனமார் எண்டு கூப்பிடுவாங்க. காட்டுக்குள்ள இருக்கிற வரைக்கும் அவங்களோட சொந்தப் பேர நாங்க கூப்பிடமாட்டம். கரடியோட சண்ட போட்டவரிட சொந்தப் பெயர் மறந்து போயிட்டுது என்று



தலையைச் சொறிந்தார் கோபாலன் ஐயா.

குழுமாட்டுக்கு எப்படி பொறி வைப்பீங்க? என்று உரையா டலைத் தொடர்ந்தாள் அறிவாட்டிப் பாட்டி.

குளக்கரையில இல்ல காட்டுக்குள்ள ஓடுற ஆற்றங்கரையோ ரம் 'அதர்' இருக்கும். அதர்லதான் பொறி வச்சுக் குழு மாட் டப் பிடிப்பம் என்று சொல்லிக் கொண்டிருந்த கோபாலன் ஐயாவை இடைமறித்த ஆதினி அதர் என்றால் என்னவென்று கேட்டாள். ஆதினியின் தலையைத் தடவியபடி கோபாலன் ஐயா சொல்லத் தொடங்கினார்.

காட்டில இருக்கிற நீர் நிலைகள நோக்கி நீர் அருந்த வரு கின்ற விலங்குகள் காட்டுப் புதர்களுக்கு இடையில ஒரு வழியை உருவாக்கும். அதை அதர் என்று சொல்லுவாங்க. அந்த அதருக்குள்ளால போய் வருகிற விலங்குகளிட உரு வத்திற்கு ஏற்றபடி அதர் சின்னதாகவோ, பெரியதாகவோ இருக்கும். முதல்ல குழுமாடு உலாவுகிற அதரத் தேடிக் கண்டு பிடிக்கிறதுதான் எங்கட வேலை. கண்டுபிடித்த பிறகு புதர்களுக்கு இடையில இருக்கும் அதர்லதான் குழுமாட் டுக்கு வெழு கயித்தால பொறி வைப்பம். பொறி வைச்ச அதரச் சுற்றி ஆள் மாறி ஆள் காவல் இருப்பம்.

ஏன் நீங்க வழியொண்ட உருவாக்கிக் குழுமாட்டுக்குப் பொறி வைக்க ஏலாதா? என்று ஆதினி கேட்டாள்.

இல்ல அதரச் சுற்றி காவல் இருக்கிற நாங்கள் கூட மனித நடமாட்டம் மாட்டுக்கு தெரியாத மாதிரிப் பார்த்துக் கொள்ளு வம். காவலுக்கு இருக்கிற இடத்தில சாப்பாடு செய்யிறது, சிறுநீர், மலம் கழிக்கிறது, மனித நடமாட்டத்திற்கு அறிகுறி யான எந்த விடயமும் செய்யமாட்டம். சின்னதா சந்தேகம் வந்தாலும் குழுமாடு அந்த வழியால பிறகு வராது. இப்படி யெல்லாம் கவனமாக இருந்து எத்தனையோ நாளாகத் தவம் கிடந்து சுருக்குப் போட்டு பிடிக்கிற குழு மாட்டப் பெரிய மரத்தில கட்டுவம். கயிறு கழுத்துல பட்டதும் வாற கூச்சத் தில பாயிற குழுமாடு எல்லாத்தையும் அறுத்திட்டு ஓடிடும். திமிறிப் பாயிற குழுமாட்ட அடக்க எல்லா மறிகாரரும் சுற்றி நிண்டு குழுமாட்டிட கழுத்தில, கொம்பில. கால்ல கயிறு போடிறத நினைக்க இப்பவும் உடம்பு சிலிர்க்கிறது. பழைய நினைவுகளில் மூழ்கி வாய்விட்டுச் சிரித்தார் கோபாலன் ஐயா.

பிடிக்கிறதே இவ்வளவு கஸ்டம் எண்டா எப்படி அதை வேள் விக்குக் கொண்டு வருவீங்க? என்றாள் அறிவாட்டி.

குழுமாடு பிடிபட்டதும் ஒரு வதனமார் குளத்திற்கு அருகில பட்டி வைத்திருக்கிறவங்கட்ட போய் பழகிய ஊர் மாட்டைக் கொண்டு வருவார். அதுக்கு இடவன் எண்டு பெயர். இடவ னோடு குழுமாட்டை கொஞ்ச நாள் கட்டி வைச்சுப் பழக விடுவம். பிறகு இரண்டையும் இணைத்தபடி கயிற்றை அவிட்டு விடுவம். இடவன் குழுமாட்டப் பட்டிக்குக் கொண்டு வந்து சேர்த்திடும். ஆதினியும், அறிவாட்டியும் அவர் சொல்

வதை ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்தார்கள். அது அவருக்கு ஒருவிதப் புது உற்சாகத்தைத் தந்திருக்க வேண்டும்.

பன்னிரண்டு குழுமாடு பிடிபட்டதும் காட்டில் இருந்து திரும்பி வந்து குளத்துக்கு அருகில் இருக்கிற பட்டிகளில நாங்க காத்திருப்பம். வேள்வி நடத்திற பூசாரி தகவல் அனுப்பியதும் குழுமாட்டைக் கந்தளாய் வேள்விக்கு அழைத்துச் செல்வம். வேள்வி நடக்குமிடத்தில நாட்டப்பட்டிருக்கும் கணுவில மாட்டை ஒவ்வொன்றாகக் கட்டுவம். பிறகு குழுமாட்டைக் குளிப்பாட்டி விபூதி, சந்தனம், குங்குமம் வைத்து ஆரத்தி எடுத்து மாட்டுக்குப் பூசை வைப்பாங்க. அதற்குப் பிறகு தலைக்கு ஒரு பானை வைத்து மறிகாரர் எல்லோரும் பூசாரியுடன் சேர்ந்து பொங்கல் வைத்துக் கும்பிடுவம்.

அசைய மறந்து கேட்டுக் கொண்டிருந்த ஆதினியையும், அறிவாட்டியையும் பார்த்துக் கோபாலன் ஐயா மகிழ்ச்சி கொண்டார். இது என்ன இன்னும் நாலஞ்சு குழுமாடு பிடிக்கிற முறை இருக்கு. அதெல்லாம் சொல்லிறது எண்டா இண்டைக்கு இரவாகிடும் என்று சொல்லிச் சிரித்தார். நீங்க நினைக்கிற மாதிரிக் காட்டில சுதந்திரமாகச் சுற்றித் திரியிற குழுமாட்டப் பிடிக்கிறது இலகுவான காரியம் இல்லை. குழுமாடு சரியான மூர்க்கம் கொண்டது. சில நேரம் கயிறு கழுத்தில இறுகி மாடு செத்திடும் அல்லது மறிகாரர் காயப்பட்டு இறந்திடுவார். அது ஒரு வாழ்வா சாவாப் போராட்டம் என்று நீண்ட பெருமூச்சுடன் சொல்லி முடித்தார் கோபாலன் ஐயா.

ஆர்வத்தோடு ஆதினி ஏதோ கேட்க எத்தணித்த சமயம் பறையொலி கேட்கத் தொடங்கியது. எல்லோருடைய கவனமும் எல்லைக்கல் இருந்த திசையை நோக்கித் திரும்பியது. சிறுவர்களும், இளைஞர்களும் மரங்களில் ஏறி ஊர்வலம் வருவதைப் பார்க்கத் தலைப்பட்டார்கள். ஆதினிக்குக் கால்கள் துருதுருத்தாலும் கூட்டத்தின் நடுவில் இருக்கிறோம் என்ற நினைப்பு அவளை அசையவிடாமல் செய்தது.

மரத்திலிருந்த இளைஞர்கள் உரத்த குரலில் மறிகாரர் வரவினை வர்ணித்துக் கொண்டிருந்தார்கள். ஊர்வலத்தின் முன்னால் ஆடிப் பாடி மகிழ்விப்பதற்காகச் சென்றிருந்தவர்கள் சாதாரணமாக நடந்து வருகிறார்கள் என்பதும் பறையொலி தவிர வழமையான வரவேற்பு நடைமுறைகள் ஏதும் பின்பற்றப்படவில்லை என்பதும் வதனமார் திடலில் கூடியிருந்தவர் மத்தியில் ஒருவிதக் கலக்க நிலையினை உருவாக்கியது. வீரசோழன் ஆதுலர் சாலையில் மருத்துவம் பார்த்த மறிகாரரின் உடல்நிலை மோசமடைந்ததுதான் இதற்கெல்லாம் காரணமாக இருக்கக்கூடும் என்று அருகில் நின்றவர்கள் பேசிக் கொண்டார்கள். அறிவாட்டியின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள் ஆதினி.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com











## முன்னுரை:

**சா**தியக் கட்டமைப்பைச் சமூக நடத்தை முறையாகக் கொண்டுள்ள இந்திய சமூக அமைப்பில் பெண்கள் மீது நடத்தப்படும் அடக்குமுறைகளும், பாலியல் சுரண்டல்களும் அதிகம். அதிலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த பெண்கள் என்றால் மிகஅதிகம். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் பிறந்து, ஆணாதிக்கவாதிகளாலும், ஆதிக்க சாதிக்காரர்களாலும் பாதிக்கப்பட்டு அதற்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த இந்தியாவின் கொள்ளைக்காரர்களின் இளவரசி என்று அழைக்கப்படும் பூலான் தேவியை இக்கட்டுரை ஆய்வுப் பொருளாக எடுத்துக்கொண்டுள்ளது. பூலான் தேவியின் கொள்ளைச் செயற்பாடு எவ்வாறு இந்திய சமூகத்தில் காணப்படும்



சாதிய அமைப்பு முறையை எதிர்த்தது, மக்கள் மத்தியில் எத்தகைய கருத்தை பூலான் தேவி பற்றி உருவாக்கியது என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைக்கிறது. இந்திய சமூகத்தில் காணப்பட்ட 'கொள்ளையர்'கள் யாரும் இந்திய தேர்தல் அரசியலில் பங்கு கொள்ளவில்லை. ஆனால் பூலான் தேவி இந்திய தேர்தல் அரசியலில் பங்குபெற்று வெற்றியும் பெற்றுள்ளார். இதன் அடிப்படையில் மற்ற கொள்ளையர்களில் இருந்து முக்கியத்துவம் மிக்கவராகப் பூலான் தேவி காணப்படுகிறார்.

கொள்ளைக் குழுவில் பெண்களின் நிலைமைப்பற்றி எரிக் ஹாப்ஸ்பாம் பின்வருமாறு கூறுகிறார்.

கொள்ளைக் குழுவில் பெண்கள் ஆண் கொள்ளையருக்கு மனைவியாக, காதலியாக, வேலைக்காரியாக இருந்து அவர்களுக்குத் தேவையான உதவிக்களைச் செய்துகொடுப்பர். கொள்ளைக் குழுவில் உள்ள ஆடவர்களின் பாலியல் தேவையைப் பூர்த்தி செய்வதும் பெண்களின் வேலையாக இருந்தது. கொள்ளைக் குழுவில் இருக்கும் பெண்களுக்கு ஆயுதங்கள் கொடுக்கப்படாது. இவர்கள் கொள்ளையர்களுக்கு வெளியில் இருந்து உதவுபவர்களாக இருப்பர். பெண்கள் கொள்ளைக் குழுவை தலைமை ஏற்று நடத்துவது அரிதாகவே நடைபெற்றுள்ளது என்கிறார் (2001: 146- 149).

## பூலான் தேவி,
## கொள்ளையர் இளவரசி பூலான் தேவி:

பூலான் தேவியின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களைக் கொள்ளையராக மாறுவதற்கு முன், பின் என்று இரண்டாகப் பிரித்து அவற்றில் கொள்ளை ஏற்படுத்திய மாற்றத்தைக் கட்டுரையின் இப்பகுதி விளக்குகிறது.

பூலான் தேவி 1963-ல் உத்திர பிரேதேச மாநிலத்தில் உள்ள கூர்கா பூர்வா கிராமத்தில் பிறந்தார். இந்தக் கிராமமானது கொள்ளையர்கள் அதிகம் காணப்படும் சம்பல் நதி, யமுனா நதிக்கு அருகில் உள்ளது. இதனால் பூலான் தேவி வாழ்ந்த காலத்தில் அவரின் பகுதியில் எண்ணற்ற கொள்ளைக் குழுக்கள் காணப்பட்டன. பூலான் தேவியின் தந்தை மல்லா என்னும் ஒடுக்கப்பட்ட மீன்பிடி சமூகத்தைச் சார்ந்தவர். வறுமையில் இருந்த பூலான் தேவியின் குடும்பம் அவருக்கு பத்து வயது ஆகும் போது புட்டாலியா என்ற வயதானவருக்கு அவரைத் திருமணம் செய்து கொடுத்தது. புட்டாலியாவின் பாலியல் துன்புறுத்தலால் பாதிக்கப்பட்ட பூலான் தேவி மருத்துவச் சிகிச்சைக்காகத் தனது கிராமத்திற்குத் திரும்ப கூட்டி வரப்பட்டார். பின்பு மூன்று வருடம் கழித்து தனது கணவனிடம் சென்றபோது கணவனால் நிராகரிக்கப்பட்டு கூர்கா பூர்வாக்குத் திருப்பி அனுப்பட்டார்.



பூலான் தேவியின் தந்தைக்கு உரிமையுடைய பரம்பரைச் சொத்து அவரின் சித்தப்பா மகன் மைதீனால் ஏமாற்றி வாங் கப்பட்டது. இதனைப் பூலான் தேவி எதிர்த்துப் போராடிய தால் மைதீன் அவர் மீது திருட்டு வழக்குப் பதிவு செய்து சிறையில் அடைத்தார். காவல் நிலையத்தில் வைத்து காவ லர்களால் அவர் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார். பின்பு சிறையில் இருந்து வெளியில் வந்த பூலான் தேவியை பாப்பு குஜ்ஜாரைத் தலைமையாகக் கொண்ட கொள்ளைக் குழு கடத்திச் சென்றது. பாப்பு குஜ்ஜார் பூலான் தேவியிடம் தவறாக நடப்பதை கொள்ளைக் குழுவில் இருந்த விக்ரம் மல்லா கேள்வி கேட்டார். விக்ரம் மல்லாவுக்கும் பாப்பு குஜ்-ஜாருக்கும் நடந்த சண்டையில் விக்ரம் மல்லாவால் பாப்பு குஜ்ஜார் கொல்லப்பட்டார். அக்கொள்ளைக்குழு தாகூர் களை அதிகமாகக் கொண்டது.

சிறையில் இருந்து வந்த பாப்பு குஜ்ஜாரின் சகோதரர்கள் ஸ்ரீராம், லாலா ராம் இருவரும் விக்ரம் மல்லாவுக்கு எதிராக அக்கொள்ளைக்குழுவைத் திருப்பினர். தாகூர் சாதியைச் சேர்ந்த கொள்ளையர்கள் எல்லோரையும் திரட்டி விக்ரம் மல் லாவைக் கொலை செய்தனர். பூலான் தேவியைத் தாகூர் சாதி மக்கள் வசிக்கும் பெமாய் கிராமத்திற்கு நிர்வாணப் படுத்தி ஊர்வலமாக அழைத்துச்சென்று ஓர் அறையில் அடைத்தனர். பின்பு பலமுறை பலபேரால் அவர் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார். சில நாட்கள் கழித்து பூலான் தேவியின் சாதியைச் சேர்ந்த ஒருவரால் உதவி செய்யப்பட் டுத் தப்பித்தார். மேற்கண்ட பூலான் தேவியைப் பற்றிய நிகழ்வுகள் அனைத்தும் பூலான் தேவி கொள்ளையராக மாறு வதற்கு முன்பு நடந்தது.

பூலான் தேவியின் ஊரில், ஒடுக்கப்பட்ட மக்கள் ஆதிக்க சாதியினரால் பல்வேறு துன்பத்திற்கு ஆளானார்கள். பெண் கள் பலர் பாலியல் துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டனர். ஆனால் இதை யாரும் எதிர்த்துக் கேட்க முடியாத சூழலே காணப்பட்டது. 'கூர்கா பூர்வா கிராமத்தில் இருந்த ஆதிக்க சாதியான தாகூர்கள் அப்பகுதியின் ஒடுக்கப்பட்ட மக்களான மல்லாக்களின் உழைப்பைச் சுரண்டினர். அவர்களை ஊர்ப் பகுதியை விட்டுத் தனியாக பிரித்து வைத்தனர். பொதுக் கிணறுகளில் நீர் எடுக்கும் உரிமை மறுக்கப்பட்டது. மல்லா இனத்தின் சிறுவர்கள் தாகூர்களுக்கு சொந்தமான பகுதியில் மாம்பழம் திருடியதாக தினமும் தண்டிக்கப்பட்டனர்'(2015: 11). கூர்கா பூர்வா கிராமத்தில் இருந்த சாதிய அடக்குமு றையை மேற்கண்டவற்றின் மூலம் அறிந்துகொள்ள முடிகி றது. பூலான் தேவி ஒரு பெண்ணாக இருந்தால் சாதியவாதிக ளாலும், ஆணாதிக்கவாதிகளால் தனக்கு நிகழும் அநீதி களை எதிர்க்க முடியாதவளாய் துன்பப்பட்டாள். பலமுறை பாலியல் வன்புணர்வுக்கு ஆளான போதும் அவள் தன் னைக் காத்துக்கொள்ளும் அதிகாரம் அற்றவளாக இருந் தால். ஒரு பெண்ணை நிர்வாணமாக்கி ஊர்வலமாக அழைத் துச் செல்லுதல், அப்பெண்ணின் உறுப்பைச் சிதைத்தல் அல்லது கூட்டுப்பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்குதல் என்பது வடஇந்திய மாநிலங்களில் காலாகாலமாக நடைபெ றுவதாகவே உள்ளது. இன்றைய நவீன இந்தியா என்று கூறிக்கொண்டிருக்கும் காலத்திலும் இவை அதிகமாகவே நடைபெறுகின்றன. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண் கள் மட்டுமே இத்தகைய நிலைமைக்குள்ளாகின்றனர். பெண் கள் மேல் நடத்தப்படும் பாலியல் வன்முறையில் ஆணுக்கு நிகராக ஆதிக்க சாதியைச் சேர்ந்த பெண்களும் பங்கு கொள்கின்றனர். அந்தவகையில் பூலான் தேவி மீது தாகூர் சமூகத்தினர் செய்த கூட்டுப்பாலியல் வன்முறையானது தாழ்த்தப்பட்ட பெண்கள் மீது ஆதிக்க சாதியினர் தொடர்ச்சி யாக நிகழ்த்துகிற சாதிய நடத்தை முறையின் தொடர்ச்சியா கவே பார்க்க முடிகிறது. இந்த நிகழ்வை ஆதிக்க சாதியினர் குற்றமாக நினைப்பதில்லை. ஆதிக்கசாதியனரால் சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்கள் மீது நடத்தப்படும் இந்தப் பாலியல் வன்முறைக்கு இன்றுவரை நீதி கிடைப்பது என்பது அரிதாகவே உள்ளது. மேலும் இதை யாரும் பெரிய தாகக் கொள்ளவில்லை என்பதே உண்மை. காவல் நிலை யத்தில் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் பாலி யல் வல்லுறவுக்குள்ளாக்கப்படுவது என்பது பூலான் தேவிக்கு மட்டும் நிகழ்ந்ததாகக் கூறமுடியாது. மேற்கூறியது போல் இதுவும் ஒரு தொடர் சம்பவமாகவே இருக்கிறது. இங்கு அதிகார வலிமையற்று இருக்கும் ஒடுக்கப்பட்ட மக் கள் அரசியல் மற்றும் அதிகார பலம் கொண்ட ஆதிக்க சாதிகளை எதிர்த்து தங்களுக்கான நீதியையும் உரிமையை யும் பெறமுடியாதவர்களாக இருக்கிறார்கள். அதிகாரம் இல் லாதவர்கள் மீது அதிகாரத்தில் உள்ளவர்கள் எதையும் செய் யலாம் என்ற மரபான உரிமையை இந்தியாவில் உள்ள சாதிய அமைப்பு ஆதிக்க வர்க்கத்திற்கு வழங்குகிறது. சாதி யின் அடிப்படையில் கொடுக்கப்படும் அதிகார உரிமை யையே இங்கு பூலான் தேவிமீது நடத்தப்பட்ட பாலியல் வன் முறைக்கு அடிப்படைக் காரணமாகக் கூறலாம்.



## கொள்ளையர் பூலான் தேவி:

இவர் இயல்பான அதிகாரம் அற்ற ஒடுக்கப்பட்ட சமூகத் தைச் சேர்ந்த பெண்ணாக இருந்த பூலான் தேவியில் இருந்து வேறுப்பட்டவர். இவர் தனக்கு இழைக்கப்பட்ட அநீ திக்கு எதிராக மட்டுமின்றி தன் சமூகத்தின் மீது தொடர்ச்சி யாக அடக்குமுறை நிகழக் காரணமாக இருந்த சாதியச் சமூக அமைப்பிலும் தனது கொள்ளை, கொலைச் செயல்பா டுகளால் அதிர்வலைகளை ஏற்படுத்தினார். ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பூலான் தேவி கொள்ளையர் தலைவி யாக மாறியது பூலான் தேவிக்கும் அவர் சார்ந்த சமூகத்துக் குமான அதிகார வலிமையைக் கொடுத்தது. இதுவரை ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்களால் பாதிக்கப்பட்ட, ஒடுக் கப்பட்ட சமூகப் பெண்களுக்கு நீதி கிடைக்காத நிலையில், பூலான் தேவி தனக்கான நீதியைத் தானே பெற்றார். கொள் ளைத் தலைவியாக மாறிய பூலான் தேவி தன்னைப் பாலி யல் வன்கொடுமை செய்த பெமாயின் கிராமத்தைச் சேர்ந்த இருபத்திரண்டு தாகூர் ஆண்களை சுட்டுக் கொன்றார். இது நவீன இந்தியாவில் நடைபெற்ற மிகப்பெரிய படுகொலை யாகக் கருதப்பட்டது. இச்செயல் ஆதிக்க சாதிகள் மத்தியில் ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியது. இது அக்காலகட்டத்தின் ஒரு முக்கியமான நிகழ்வாக கருதலாம். ஆதிக்க சமூகத் தைப் பார்த்து ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் அச்சப்பட்டதிற்கு மாறாக, ஒடுக்கபட்ட சமூகப் பெண்களைப் பார்த்து ஆதிக்க சமூகம் அச்சப்படும் தலைகீழ் மாற்றத்தைப் பூலான் தேவி ஏற்படுத்தினார். கொள்ளை என்பது, சாதாரன அதிகாரமற்ற பூலான் தேவியை அதிகாரமிக்க பூலான் தேவியாக மாற்றி யதை இதன் வழி அறிய முடிகிறது. செம்புலிங்கம் வரலாற் றிலும் இத்தகைய தன்மையை அறியமுடிகிறது. இதன் வழி இந்தியாவில் கொள்ளை என்பது அதிகாரமற்றவர்களின் அதிகாரமாகவும் அதிகாரத்திற்கு எதிரான செயற்பாடாகவும் காணப்படுள்ளது என்று கருதலாம்.

## வெகுசனமக்கள் மத்தியில் பூலான் தேவி பற்றிய கருத்துக் கட்டமைவு:

வெகுசனமக்கள் மத்தியில் பூலான் தேவியைப் பற்றிய கருத் துக் கட்டமைவை இரண்டாகப் பிரித்துக் காணலாம்

- ஒடுக்கப்பட்ட மக்கள் பார்வையில் பூலான் தேவி
- ஆதிக்க வர்க்கமான தாகூர் மக்கள் பார்வையில் பூலான் தேவி

## ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் பார்வையில் பூலான் தேவி:

எரிக் ஹாப்ஸ்பாம், மக்களால் விரும்பப்படும் கொள்ளையர்க ளைப் பின்வருமாறு வரையறுக்கிறார்.

சமூகம்சார் கொள்ளையர்கள் வேளாண் சமூகத்தைச் சேர்ந்த வர்கள், அரசின் சட்டத்தை மீறியவர்கள். இவர்கள் அப்பகுதி பிரபுக்களாலும் அரசாலும் குற்றவாளியாகக் கருதப்படுவர். அப்பகுதி மக்கள் இவர்களைத் தங்களின் நாயகனாக, பழி வாங்குபவராக, தங்களுக்காகப் போராடுபவராக, தங்களுக் கான நீதியை பெற்றுத் தருபவராக, விடுதலைக்கான தலைவ ராகக் கருதி அவர்களுக்குத் தங்களின் முழு ஆதரவையும் கொடுப்பதோடு, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுக்கின்றனர்.(20) மேலும், மக்கள் விரும்பும் கொள்ளையர்கள் புரட்சியாளர்கள் அல்ல சீர்திருத்தவாதிகள் என்கிறார்(30).

பூலான் தேவியின் கொள்ளைச் செயற்பாட்டின் தொடக்கம் என்பது தன்னைப் பாலியல் வன்கொடுமைப்படுத்தியவர்க

ளைப் பழிவாங்குவதாகவும் தனக்கான நீதியைப் பெறுவதாக வுமே இருந்தது. பின்பு அது தன்னைப்போல் பாலியல் வன் கொடுமைக்கு உள்ளாக்கப்படும் ஒடுக்கப்பட்ட பெண்களுக் கான நீதியைப் பெற்றுத் தருவதாகவும் ஒடுக்கப்பட்ட சமூ கத்தைச் சேர்ந்த மக்களுக்கு உதவுவதாகவும் மாறியது.

ஷாந்தி மரியட் டிசோசா (Shanthie Mariet D'Souza) மற்றும் பிபு பிரசாட் ரௌட்ரெய் (Bibhu Prasad Routray) எழுதிய Bandit Queen: Cinematic representation of social banditry in India என்ற கட்டுரையில் பூலான் தேவி பற்றி பின்வருமாறு கூறுகிறார்கள்.

'பூலான் தேவியை மல்லா சமூக மக்களும் மற்ற தாழ்த்தப் பட்ட சமூக மக்களும் தங்களின் உரிமைகளைப் பெற்றுத்த ரும் நாயகியாகவும், தங்களுக்கான அடையாளமாகவும் கரு தினர். பூலான் தேவியின் கொள்ளை, கொலைச் செயற்பாடா னது ஆதிக்க சாதியைச் சேர்ந்த நிலக்கிழார்களிடம் மட்டுமே நடைபெற்றது. ஒடுக்கப்பட்ட மக்களிடம் அவர் கொள்ளை, கொலையில் ஈடுபடவில்லை. ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண்களுக்கு திருமணம் நடைபெறும் போது தான் கொள்ளையடித்த பொருள்களைச் சீதனமாக கொடுத்தார்' என்று குறிப்பிடுகிறார்கள்(2015: 12).

ஆதிக்க சாதியைச் சேர்ந்த ஒருவரால் தாழ்த்தப்பட்ட சமூகத் தைச் சேர்ந்த பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்குள்ளாக் கப்பட்டபோது பூலான் தேவி பாலியல் வல்லுறவு புரிந்தவர்க ளைக் கொலை செய்தார்(2015: 13).

மேற்கண்ட நிகழ்வுகள் தாழ்த்தப்பட்ட பெண்கள் மீது பாலி யல் வன்முறையைச் செய்பவர்களுக்கு ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியது. பூலான் தேவியின் கொள்ளைச் செயற்பாடா னது தாழ்த்தப்பட்ட மக்கள் மீது காலம் காலமாக நிகழ்ந்து வந்த சாதிய அடக்கு முறையை நிரந்தரமாகத் தடுக்காவிட் டாலும் ஒரு தற்காலிக விடுதலையை அம்மக்களுக்கு தந் தது. இது மேற்கூறிய எரிக் ஹாப்ஸ்பாமின் கூற்றான 'சமூ கம்சார் கொள்ளையர் சமூகத்தில் சீர்த்திருத்ததை ஏற்படுத்த முடியுமே அன்றி புரட்சியை ஏற்படுத்த முடியாது. துன்பம் நிறைந்த சூழலில் இருந்து தற்காலிகத் தீர்வு கொடுப்பவர் கள்'(2001: 30) என்பதுடன் பொருந்திப்போகிறது. பூலான் தேவியின் கொள்ளைச் செயற்பாடுகள் ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளைத் தாங்களே போராடிப் பெற்றுக்கொள் வதற்கான தூண்டுகோலாக அமைந்தது. மேலும் போராடி னால் தங்களுக்கான உரிமையைப் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையைப் பூலான் தேவியின் வாழ்க்கை அவர்களுக் குக் கற்றுக்கொடுத்தது. இது அம்மக்கள் மத்தியில் பூலான் தேவியால் செய்யப்பட்ட சமூக சீர்திருத்தமாகக் கருதலாம்.

பூலான் தேவியால் பெமாயில் பழிவாங்கும் நடவடிக்கையாக தாகூர் சமுதாயத்தைச் சேர்ந்த இருபத்திரண்டு ஆண்களைக் கொன்றது இந்தியாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி யது. ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள் அரசுக்கு நெருக்கடி கொடுக்க ஆரம்பித்தனர். இந்த நிலையில் அரசு பூலான் தேவியைப் பிடிப்பதைத் தீவிரப்படுத்தியது. பூலான் தேவி கொள்ளைக் குழுவைச் சேர்ந்தவர்கள் காவலர்களால் தொடர்ச்சியாகச் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் 1983-ல் பூலான் தேவி அரசிடம் சில நிபந்தனைகள் அடிப்படையில் சரணடைய சம்மதித்தார். அவை சரணடையும் தனது குழு வைச் சேர்ந்த யாருக்கும் மரண தண்டனை கொடுக்கக் கூடாது. அவர்களுக்கு எட்டு வருடங்களுக்கு மேல் சிறை தண்டனை கொடுக்கக்கூடாது. சிறையில் இருந்து திரும்பிய அவர்களுக்கு அரசு சிறிய அளவு நிலம் கொடுக்க வேண் டும். சரணடையும் கொள்ளையரின் குடும்பத்தினருக்கு அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும் ஆகியவற்றை அரசிடம் கூறி னார். அரசும் அதை ஏற்றுக்கொண்டது. உத்திரப் பிரதேச காவலர் மீது தனக்கு நம்பிக்கை இல்லை என்பதால் மத்திய பிரதேச காவலர்களிடம் சரணடைவதாகக் கூறினார். பூலான் தேவி சரணடைவதை கேள்விப்பட்டு பூலான் தேவி சரணடை யும் பகுதியில் அதிக அளவு மக்கள் கூடினர். அதில் 8,000-க் கும் மேற்பட்ட தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் பங்கேற்று பூலான் தேவிக்கு ஆதரவு தெரிவித்ததாக 2001-ல் டோனி கரோனால் எழுதப்பட்டு (Tony Karon) டைம் செய்தித்தாளில் வெளியான India's Bandit Queen Died As She Once Lived என்ற கட்டுரை குறிப்பிடுகிறது.

காந்தி மற்றும் 'கடவுள்' துர்கா தேவி படத்தின் முன்பு தனது ஆயுதங்களை வைத்துவிட்டு காவலர்களிடம் சரணடைந்தார். பதினொரு ஆண்டுகள் சிறை வாழ்கைக்குப் பின் 1994-ல் பூலான் தேவி விடுதலை செய்யப்பட்டார். தாழ்த்தப்பட்ட மக் கள் மத்தியிலும் பிற்படுத்தப்பட்ட மக்கள் மத்தியிலும் பூலான் தேவிக்கு இருந்த ஆதரவைப் பார்த்து சமாஜ்வாடி பார்ட்டி தங்களின் சார்பாக 1996 - 1998-க்கான மக்களவை தேர்தலில் மிசாப்பூர் பகுதியில் போட்டியிட வைத்தது. அத் தேர்தலில் பூலான் தேவி வெற்றிபெற்று மக்களவை உறுப்பி னராகத் தேர்வு செய்யப்பட்டார். பின்பு மீண்டும் 1999-ல் மக்க ளவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பூலான் தேவி யின் தேர்தல் வெற்றி என்பதை அதிகாரமற்ற மக்கள் தங்கள் அதிகாரமாகக் கொள்ளையர் பூலான் தேவியைப் பார்த்ததன் அடிப்படையில் நிகழ்ந்தாகக் கூறலாம். கொள்ளை என்பது பூலான் தேவியை வலிமையுடையவராகவும் தன்னைக் கைது செய்த அரசாங்கத்தில் ஒரு அங்கமாகவும் மாறவைத்தது. பூலான் தேவியின் வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு மாற்றத் திற்கும் அடிப்படைக் காரணமாகக் கொள்ளையராக மாறி யது இருந்தது. அவர் இறப்பதற்கும் இதுவே காரணமாக இருந்தது.

எரிக் ஹாப்ஸ்பாம் கொள்ளையர் என்பவர் ஒரு சிறந்த போரா ளியாக இருப்பார் ஆனால் அவர் சித்தாந்தவாதியில்லை. அவர்களிடம் நீண்டகால செயல்பாடு அல்லது தீர்வுக்கான எந்த சித்தாந்தமும் இருக்காது என்கிறார்(2001: 29). எரிக் ஹாப்ஸ்பாம் கூறுவது போல பூலான் தேவி கொள்ளையராக இருக்கும் போதும் அரசியல்வாதியாக மாறிய போதும் ஒரு போராளியாக இருந்து போராளியாகவே இறந்துவிட்டார். அவர் மக்கள் மத்தியில் தங்கள் முன்னேற்றதிற்கான நீண்ட கால சித்தாந்தம் எதையும் கட்டமைக்கவில்லை. அவரும் கொண்டிருக்கவில்லை.

எரிக் ஹாப்ஸ்பாமின் கொள்ளையர் புத்தகத்திலும் அதை தொடர்ந்து கொள்ளையர்கள் பற்றி நிகழ்ந்த எந்த ஆய்வுக ளிலும் கொள்ளையர்கள் பொது அரசியலில் ஈடுப்பட்டதா கவோ வெற்றி பெற்றதாகவோ பதிவு இல்லை. ஆனால் பூலான் தேவி பொது அரசியலில் பங்குபற்றி வெற்றியும் பெற்றுள்ளார். கொள்ளையருக்கான இத்தன்மை என்பது இந்

தியாவிற்கும் பூலான் தேவிக்குமான தனித்தன்மையாகக் கொள்ளலாம். விக்ரம் மல்லா சாதியின் அதிகாரத்தினால் கொல்லப்பட்டதிலிருந்து இந்திய சமூகம் சாதிய ஏற்றத்தாழ்வுகளைக்கொண்டு பிரிந்து இருப்பதுபோல் கொள்ளையிலும் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள், அடக்குமுறை முதலியவை இருப்பதை அறிய முடிகிறது. இவற்றையும் இந்தியாவுக்கான தனித்தன்மையாகக் கூறலாம்.

## அதிகாரவர்க்கப் பார்வையில் பூலான் தேவி என்பவர் கொள்ளைக்காரி, கொடூரமானவள்:

அதிகாரவர்க்கப் பார்வையில் பூலான் தேவி என்பவர், தங்கள் இன ஆண்களைக் கொடூரமாகக் கொலை செய்தவராகவும், தங்களது அமைதியான வாழ்கைக்குப் பிரச்சினையை ஏற்படுத்துபவராகவும் பார்க்கப்பட்டார். இதற்குக் காரணம் பூலான் தேவின் வாழ்கையில் கொள்ளையின் காரணமாக நிகழ்ந்த ஒவ்வொரு மாற்றமும் அதிகார வர்க்கமாக இருக்கும் சாதிகள் மரபான முறையில் பெற்றுவந்த உரிமைகளைப் பாதிப்பதாக இருந்தது. பூலான் தேவி கொள்ளைக் குழுவில் இணைந்த போது பாபு குஜ்ஜார், சாதியின் அடிப்படையில் கொள்ளைக் குழுவில் தலைவனாக இருந்த நிலை என்பது மாற்றப்பட்டது. ஒடுக்கப்பட்ட பெண்கள் மீது ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்களால் செய்யப்படும் பாலியல் வன்கொடுமைகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. ஆதிக்க சாதி நிலக்கிழார்களிடம் கொள்ளை மற்றும் கொலையில் ஈடுப்பட்டனர். இது போன்ற காரணங்கள் அதிகார வர்க்கத்தினர் அமைதியைக் குலைத்ததாகவும் தங்கள் அதிகாரம் பறிபோனதாகவும் ஆதிக்க சாதியினர் கருதலாயினர். இதனால் இச்செயலுக்குக் காரணமான பூலான் தேவியைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் அனைவரிடமும் காணப்பட்டது. இதை பூலான் தேவி கொலை செய்யப்பட்டபோது செய்தித்தாள்களில் வெளியான பின்வரும் செய்திகள் உறுதிப்படுத்தின.

டெல்லியில் மக்களவை உறுப்பினருக்கான வீட்டில் பாதுகாப்போடு தங்கி இருக்கும் போது ரானா என்ற தாகூர் சாதியைச் சேர்ந்தவரால் பூலான் தேவி சுட்டுக் கொல்லப்பட்டார். ரானாவைக் கைதுசெய்து காவலர்கள் விசாரித்த போது பென்மாயில் நடந்த கொலைக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாகத் தான் இதை செய்ததாகக் கூறினான். ரானாவை விசாரணைக்காக நீதிமன்றதிற்குக் கொண்டு செல்லும்போது நீதிமன்றதிற்கு வெளியே தாகூர் சாதியைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் ரானாவை விடுதலை செய்யும்படி கோஷம் எழுப்பினர். மேலும், தாங்கள் அணிந்துவந்திருந்த தங்க நகைகள் மற்றும் பணத்தை ரானாவிற்கு உதவுவதற்காகக் கொடுத்தனர். சத்திரிய ஸ்வாபிமான் அந்தோலன் சமன்வாய் கமிட்டி (Kshatriya Swabhimaan Andolan Samanvay Committee, UP) என்ற அமைப்பு பூலான் தேவியைக் கொன்றதற்காக ரானாவிற்கு மரியாதை செய்தது. மேலும் ரானா நாளைய இளைய தலைமுறைக்கான முன்னுதாரணம் என்று கூறியது. சிறையில் இருக்கும் போது பூலான் தேவி கற்பப்பை அலர்ச்சியினால் பாதிக்கப்பட்டார். மருத்துவமனைக்கு கொண்டுசெல்லபட்ட பூலான் தேவியை பார்த்துவிட்டு அருகில் இருந்தவரிடம் பூலான் தேவி கற்பமடைந்து இன்னோரு பூலான் தேவி உருவாவது நமக்கு தேவையில்லை ஆகவே அவளின் கருப்பையை எடுத்துவிடலாம் என்று கூறியதாக 2001-ல் டெலிகிராப்பில் பூலான் தேவி என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட கட்டுரை குறிப்பிடுகிறது. இதில் இருந்தே பூலான் தேவியின் செயல்பாடுகள் ஆதிக்க சாதியினர் மத்தியில் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம்.

ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள் மரபாகத் தாங்கள் பெற்றுவரும் அதிகாரத்தை ஒருவர் கேள்விக்கு உள்ளாக்கும்போது கேள்விக்குள்ளாக்குபவரை அவ்வதிகாரத்தைக் கொடுக்கும் சாதியக் கட்டமைப்பு அழித்துவிடுகிறது. இதற்கு பூலான் தேவியின் வாழ்க்கை சிறந்த சான்றாக விளங்குகிறது.

## முடிவுரை:

இந்தியாவில் காணப்படும் சாதிய அமைப்பு எவ்வாறு ஒருவரை அதிகாரம் உடையவராகவும் மற்றொருவரை அதிகாரா மற்றவராகவும் வைத்திருக்கிறது. மேலும் அது அதிகாரமற்றவர் மீது அதிகாரமுடையவர் எதுவும் செய்யும் உரிமையைக் கொடுக்கிறது என்பதைப் பூலான் தேவியின் வாழ்க்கை வரலாற்றில் இருந்து தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. கொள்ளை என்பது இந்தியாவில் அதிகாரமற்றவர்களுக்கான அதிகாரமாக மாறி தங்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற்றுக்கொடுத்திருக்கிறது என்பதைப் பூலான் தேவியைப் பற்றிய மேற்கண்ட செய்திகள் விளக்குகின்றன. இந்தியாவில் சாதி என்பது சமூகத்திற்கு எதிராக கருதப்படும் கொள்ளை அமைப்பிலும் வலுவாகக் காணப்படுக்கிறது. கொள்ளையர் பொதுத்தள அரசியலில் பங்கு கொள்ள முடியாது என்ற நிலையையும் மாற்றி பூலான் தேவி வெற்றி பெற்றுள்ளார். அவரின் கொள்ளை என்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அடையாளத்தைப் பெற்றுக்கொடுத்தது என்பதே அவர் தேர்தலில் பங்கு எடுப்பதற்கும் வெற்றி பெறுவதற்கும் காரணமாகக் கூறலாம். இன்று இந்தியாவின் கொள்ளையர்களில் இளவரசி என்று உலக அளவில் அழைக்கப்படும் அளவிற்கு பூலான் தேவியை மாற்றியதற்கு ஒடுக்கப்பட்ட மக்களின் அடையாளாமாகவும் பெண்ணிய அடையாளமாகவும் மாறியதற்கு அவர் கொள்ளை என்ற செயலைத் தேர்ந்து எடுத்தது, அதன்மூலம் செய்த செயல்கள் தான் காரணம் என்பதை இந்தக் கட்டுரையின் வழி அறிய முடிகிறது.

**உசாத்துணை:**


- https://www.tribuneindia.com/2006/20060501/nation.htm#5
- http://content.time.com/time/world/article/0,8599,168857,00.html
- http://news.bbc.co.uk/2/hi/south_asia/1456441.stm
- https://www.telegraph.co.uk/news/obituaries/1335253/Phoolan-Devi.html
- https://web.archive.org/web/20160414182145/http://www.sawnet.org/books/writing/roy_bq1.html
- Phoolan Devi, with Marie-Therese Cuny, and Paul Rambali. (2006). The Bandit Queen of India: An Indian Woman's Amazing Journey from Peasant to International Legend, Guilford, Connecticut. The Lyons Press.
- Shanthie Mariet D'Souza, Bibhu Prasad Routray. (2015). Bandit Queen: Cinematic representation of social banditry in India. Mantraya.org, Mantraya, New Delhi, India.
- Madhu Kishwar. The Bandit Queen. FILM REVIEW




naresh.v@thaiveedu.com



# செம்பனைத் தோட்டங்களில் புதைக்கப்பட்ட இந்தோனேசியக் காடுகள்

**– சதீஸ் செல்வராஜ்**

இந்தோனேசியாவில் பத்து இலட்சத்திற்கும் அதிகமான கம்யூனிஸ்டுக்கள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட தற்கு இணையாக அங்கு காடுகளும் படுமோசமாக அழிக் கப்பட்டே வருகின்றன. 1960-களில் இந்தோனேசியாவின் சனத் தொகையில் 7 பேரில் ஒருவர் கம்யூனிஸ்டாக இருந்தார். இந் தோனேசிய கம்யூனிஸ்ட் கட்சியில் 30 இலட்சம் உறுப்பினர் கள் இருந்ததுடன், அக்கட்சியோடு விவசாயிகள் முன்னணி யில் இருந்த 80 இலட்சம் பேரும் இணைந்து இயங்கினர். ஆனால், கம்யூனிஸ்ட்டுக்களின் எழுச்சியைக் கண்டு அதிர்ந்த ஏகாதிபத்தியக் கும்பல் அவர்களை ஒழித்துக்கட்ட



சதித்திட்டம் தீட்டியது. அதன்படி, 1965-66-ல் நெஞ்சைப் பத பதைக்கச் செய்யும் மிகப்பெரிய அரசியற் படுகொலையை இந்தோனேசியாவில் அரங்கேற்றியது. அதைப்போலவேதான் அங்கு கட்டுக்கடங்காமல் காடுகளும் அழிக்கப்பட்டு வரு கின்றன.

இந்தோனேசியாவில் கம்யூனிஸ்டுகள் கருவறுக்கப்பட்டதை தொடர்ந்து ஏகாதிபத்தியத்தின் தலையாட்டி பொம்மைகள் அதிகாரக் கதிரையில் அமர்த்தப்பட்டனர். இனிச்சொல்லவா வேண்டும் அங்கு அரங்கேறிய, அரங்கேறுகின்ற கூத்துக்க ளைப் பற்றி! இலாபத்தை அள்ளிக்குவிக்கும் முதலாளிக ளின் ஆட்டம் அந்த மண்ணிலே உக்கிரம் கண்டுவிட்டது. அதனால், பல ஆண்டுகளாகவே இந்தோனேசியக் காடுகள் பாரியளவில் வேட்டையாடப்பட்டு வருகின்றன.

சுமார் 17,000 தீவுகளைக் கொண்ட இந்தோனேசியத் தீவுக் கூட்டம் உலகில் உள்ள பல்லுயிர்க் காடுகளின் தாயகமா கும். 1900-ல் மொத்தக் காடு, மொத்த நிலப்பரப்பில் 84 சத வீதமாக இருந்தது. 1950-ல் தோட்டங்களை உருவாக்குவதும் சிறு தோட்டக்காரர்கள் மரப் பயிர்களை பயிரிடுவதும் குறைந்தளவிலேயே நடந்தேறின. அந்த நேரத்தில் காடுக ளின் பரப்பளவு 145 மில்லியன் ஹெக்டேர் முதனிலை காடுக ளாகவும் (primary forest), மேலும் 14 மில்லியன் ஹெக்டேர் இரண்டாம் நிலை (secondary) மற்றும் அலையெழுச்சிக் காடுகளாகவும் (tidal forest) மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் காடுகள் உலகின் மூன்றாவது பெரிய வெப்பமண்டல காடுளாக இருப்பதுடன், பூமியின் மிகப்பெ ரிய பல்லுயிர் வெப்பமண்டலப் பகுதிகளில் ஒன்றாகவும் உள்ளது. உலகில் இதுவரை அறியப்பட்ட தாவரங்கள், பாலூட்டிகள் மற்றும் பறவைகளில் 10% முதல் 15% வரை இந்தோனேசியாவில் உள்ளன. ஒராங்குட்டான்கள் முதல் சுமத்ரான் புலிகள், வியக்க வைக்கும் பறவை இனங்கள் வரை, அழிந்துபோகும் அச்சுறுத்தலுக்கு உள்ளான அரிய இனங்கள் உட்பட இந்தோனேசியாவின் காடுகளில் மட்டுமே வாழ்கின்றன. பிரேசில் மற்றும் கொங்கோ ஜனநாயகக் குடிய ரசுக்கு அடுத்தபடியாக உயிரினங்களின் எண்ணிக்கையில் மூன்றாவது இடத்தில் இந்தோனேசியா உள்ளது. ஆனால், இவ்வாறு உலகின் உயிர்நாடியாக துடிக்கும் இக்காடுகள் மிக வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

1900-ம் ஆண்டின் பிற்பகுதியில் அடர்ந்த காடுகள் நிறைந்த நாடாக இருந்த இந்தோனேசியாவில் 1970-களில் காடழிப்பு தீவிரமடைந்தது. அதாவது, அந்த நாட்டில் கம்யூனிட்டுக்கள் கொத்துக் கொத்தாக கொன்றெழிக்கப்பட்ட பின்னர் வன அழிப்பு தீவிரமடைந்தது. 1900-ம் ஆண்டு மதிப்பீட்டின்படி, 170 மில்லியன் ஹெக்டேராக இருந்த இந்தோனேசியக் காடு களின் பரப்பளவு 20-ம் நூற்றாண்டின் இறுதியில் 100 மில்லி யன் ஹெக்டேரை விட குறைந்தன. 2008-ல் இந்தோனேசியா வில் வெப்பமண்டல மழைக்காடுகள் ஒரு தசாப்தத்தில் அழிக்கப்பட்டுவிடும் என்றும் கூட மதிப்பிடப்பட்டது.

இந்தோனேசியாவில் காடழிப்புக்கான முதன்மைக் காரணமாக



விவசாயத்தின் விரிவாக்கம் இருக்கிறது. விவசாயம் பெரும்பாலும் பெரும் முதலாளிகளினதும் பல்தேசியக் கம்பனிகளினதும் கைகளில் இருப்பதால் இலாபத்திற்கு மாத்திரமே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்தோனேசியா உலகின் மிகப்பெரிய செம்பனை எண்ணெய் (Palm Oil) உற்பத்தி நாடாக விளங்குகிறது. அத்துடன், அத்தொழிற்றுறை வேகமாக விரிவடைந்தும் வருகிறது. அதனால், செம்பனைத் தோட்டங்களின் விரிவாக்கத்தில் வனாந்திரங்களின் இருப்பு கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன. அவை வெட்டவெளியாக்கப்பட்டு வருகின்றன. தவிர, பாதுகாக்கப்பட்ட பல பகுதிகளிலும் சட்ட விரோதமாக காட்டு மரங்களை வெட்டுதலும் கட்டுப்பாடுகள் அற்ற வெட்டுமரத் தொழிலும் காடழிப்பில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. இந்தோனேசியாவில் மரங்களை வெட்டும் செயற்பாடுகளில் 80% வரை சட்டவிரோதமாக மேற்கொள்ளப்படுவதாக கூறப்படுகிறது. நிலக்கரி மற்றும் தங்கச் சுரங்கம் போன்ற சுரங்க நடவடிக்கைகள் காடுகளின் பெரும் பகுதிகள் அழிக்கப்படுவதற்கும் நீர்வழிகள் மாசுபடுவதற்கும் வழிவகுத்தன.

1970-களின் முற்பகுதியில் இந்தோனேசியா இந்த மதிப்புமிக்க வளத்தை நாட்டின் மரப் பதப்படுத்தும் தொழில்களின் வளர்ச்சியுடன் அதன் பொருளாதார நலனுக்காக பயன்படுத்தியது. ஆனால், 1980-களின் பிற்பகுதியிலிருந்து 2000-ம் ஆண்டு வரை மரக்கூழ் (Pulp wood) மற்றும் காகிதத் தொழில்களில் (Paper industry) உற்பத்தித் திறன் கிட்டத்தட்ட 700% அதிகரித்து, இந்தோனேசியாவை உலகின் ஒன்பதாவது பெரிய மரக்கூழ் உற்பத்தி நாடாகவும், பதினோராவது பெரிய காகித உற்பத்தி செய்யும் நாடாகவும் ஆக்கியது. இந்தோனேசியாவில் உள்ள காடுகளின் பெரும் பகுதி ஏசியா பல்ப் அன்ட் பேப்பர் (Asia Pulp & Paper) போன்ற பெரிய பன்னாட்டு மரக்கூழ் நிறுவனங்களால் அழிக்கப்பட்டு தோட்டங்களாக மாற்றப்பட்டுள்ளன.

2001-2016 ஆண்டு காலப்பகுதியில் இந்தோனேசியாவில் காடுகளை அழிப்பதற்கான மிகப்பெரிய தூண்டுதலாக செம்பனைத் தோட்டங்கள் அமைந்தன. அதனால், நாடு தழுவிய ரீதியில் 23% காடுகள் அழிக்கப்பட்டன. புல்வெளிகளை உருவாக்க 20% காடுகளும், சிறிய அளவிலான விவசாயம் மற்றும் சிறிய அளவிலான கலப்புத் தோட்டங்களுக்கான அனுமதி 22% காடழிப்புக்கும் காரணமாகின. வெட்டுமரத் தொழில், சாலைகளை அமைத்தல் போன்ற காரணங்களுக்காக ஏறக்குறைய 10% காடுகள் வெட்டவெளியாக்கப்பட்டன. ஏனைய எல்லா காரணங்களினாலும் (சுரங்கம் மற்றும் மீன் வளர்ப்பதற்கான குளங்களை நிர்மாணித்தல் போன்றவை) ஒட்டுமொத்தமாக நாடு முழுவதும் 5% காடுகள் அழிக்கப்பட்டன.

இந்தோனேசியாவில் காடழிப்பு பாரியளவில் சுற்றுச்சூழலிலும் சமூகத்திலும் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. சீனா மற்றும் அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக உலகின் மூன்றாவது பசுமைக்குடில் வாயுக்களை அதிகமாக வெளியிடும் நாடாக இந்தோனேசியா மாறியுள்ளது.

இந்தோனேசியக் காடுகள் பெரும்பாலும் தோட்ட உரிமையாளர்களினாலும் விவசாயிகளினாலும் தீக்கிரையாக்கப்படுகின்றன. மனிதருடைய தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளினால் இயற்கை சமனிலையில் மாற்றங்கள் ஏற்படுவதன் காரணமாகவும் காட்டுத்தீ ஏற்படுகின்றது.

செயற்கையான காட்டுத்தீ 2008-ல் 19,192 ஆக இருந்தது. இத்தீப்பொறி புள்ளிகளின் எண்ணிக்கை 2009-ல் 32,416 ஆக உயர்ந்ததுள்ளதாக ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோவால் (Susilo Bambang Yudhoyono) வெளியிடப்பட்ட 2009 மாநில சுற்றுச்சூழல் அறிக்கை வெளிப்படுத்தியது. இதற்கு காரணம் பலவீனமான சட்ட அமுலாக்கமும், உள்ளூர் அதிகாரிகளின் வனக் கண்காணிப்பு குறைபாடும் என்று சுற்றுச்சூழல் அமைச்சகம் குற்றம் சாட்டியது. முதலாளிகள் உட்பட பொது மக்கள் தமது தொழில்களுக்காக நிலங்க

ளைப் பெறுவதில் தீவிரம் காட்டி வருவதே செயற்கையான காட்டுத் தீ பரவலுக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது. சுமத்ராவில் பல்லாயிரக்கணக்கான சதுர கிலோமீட்டர் காடுகள் செம்பனை நிறுவனங்களுக்கு நிலங்களைப் பெற்றுக்கொள்ள இந்தோனேசிய மத்திய அரசு வழங்கிய சலுகைகளின் கீழ் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்தோனேசியா - கலிமந்தானில் (Kalimantan) ஏற்பட்ட கட்டுபாடற்ற காட்டுத் தீ காரணமாக 1991 முதல் 2014 வரை தென்கிழக்காசியா முழுவதும் வளிமண்டல மாசு ஏற்பட்டது. 1997-ம் ஆண்டின் நடுப்பகுதியில் இந்தோனேசியாவின் காட்டுத் தீ அண்டைய நாடுகளையும் பாதிக்கத் தொடங்கியது. அடர்ந்த புகை மூட்டம் மலேசியா, சிங்கப்பூர் வரை பரவியது. அதற்கான தீர்வினை மலேசியப் பிரதமர் மகாதீர் பின் முகமட் (Mahathir bin Mohamad) தீவிரமாகத் தேடினார். அதன்படி, மலேசிய தீயணைப்பு மற்றும் மீட்புத் துறைத் தலைவரின் திட்டத்தின் அடிப்படையில், ஆபரேஷன் ஹேஸ் (Operation Ash) என்ற குறியீட்டு பெயரில் மலேசிய தீயணைப்பு வீரர்கள் குழுவை அவர் இந்தோனேசியாவுக்கு



அனுப்பினார். மலேசியாவின் பொருளாதாரத்திலும் இப்புகை மண்டலம் தாக்கத்தை ஏற்படுத்தியது. மலேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூடுபனி சேதத்தின் மதிப்பு 0.30 சதவீதம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1997-ம் ஆண்டின் பிற்பகுதியிலும் 1998-ம் ஆண்டின் முற்பகுதியிலும் புருனே, தாய்லாந்து, வியட்நாம், பிலிப்பைன்ஸ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளும் காட்டுத் தீயின் புகை மூட்டத்தை உணர்ந்தன. 1997-98 காலப்பகுதியில் இக்காட்டுத் தீ காரணமாக இறுதியாக சுமார் 8 மில்லியன் ஹெக்டேர் நிலம் எரிந்தது. இலட்சக்கணக்கான மக்கள் வளி மாசுபாட்டால் பாதிக்கப்பட்டனர். இந்தோனேசியாவில் நிலப் பயன்பாடுகளை மாற்றியமைத்ததால் இவ்வாறு காட்டுத் தீ ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

1997-ல் இந்தோனேசியாவில் ஏற்பட்ட காட்டுத் தீ வளிமண்டலத்திற்கு 0.81 - 2.57 கிகாடொன் (ஒரு கிகாடொன் 1,000,000,000 டொன்னுக்கு சமன்) வரையிலான கார்பனை வெளியிட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது புதைபடிவ எரிபொருட்களை எரிப்பதனால் ஆண்டுக்கு வெளியிடப்படும் 13 முதல் 40 சதவீத காபனீரொட்சைட்டு வெளியேற்றத்திற்குச் சமனாகும்.

1990 மற்றும் 2000-க்கு இடையில் இந்தோனேசியாவில் 20% காடுகள் அழிக்கப்பட்டன. அதாவது, 24 மில்லியன் ஹெக்டேர். மேலும் 2010-ம் ஆண்டில் மொத்த நிலப்பரப்பில் 52% மட்டுமே (94 மில்லியன் ஹெக்டேர்) காடுகளாக இருந்தது. 2010-ல் புதிய வெட்டு மர ஒப்பந்தங்களுக்குத் தடை விதிக்கப்பட்ட போதிலும், காடழிப்பு விகிதம் 2012-ல் 840,000 ஹெக்டேராக தொடர்ந்து அதிகரித்து, பிரேசிலில் காடழிப்பை விஞ்சியதாக இந்தோனேசியாவில் காடழிப்பு 2016-ல் உச்சத்தை அடைந்தது.

2007 ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்ட அறிக்கை, இந்தோனேசியாவில் 73% முதல் 88% வரையிலான மரக்குற்றிகள் சட்டவிரோதமாக மரங்கள் வெட்டப்பட்டதில் இருந்து பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடுகிறது. இந்தோனேசியாவின் காடுகளை செம்பனைத் தோட்டங்களாக மாற்றும் செயற்பாடுகளில் 81% சட்டவிரோதமானது என்று 2021-ம் ஆண்டு ஆய்வு மதிப்பிட்டுள்ளது. உலகளவில் 2014 முதல் 2020 வரை காடழிப்பு அதிகரித்திருந்ததுடன், இந்தோனேசியாவிலும் அதேநிலையே காணப்பட்டது.

இந்தோனேசியாவின் பொருளாதாரத்தில் செம்பனை எண்ணெய் உற்பத்தி பிரதான இடத்தில் உள்ளது. ஏனெனில் உலகின் செம்பனை எண்ணெயின் தேவையின் அரைவாசி பங்கினை இந்தோனேசியா பூர்த்தி செய்கிறது.

2016-ம் ஆண்டில் இந்தோனேசியா 34.6 மில்லியன் மெட்றிக் டொன் செம்பனை எண்ணெயை உற்பத்தி செய்தது. அதில், 25.1 மில்லியன் மெட்றிக் டொன் எண்ணெயை ஏற்றுமதி செய்தது. இதன்போது 12 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவில் செம்பனை தோட்டங்கள் விரிவடைந்தன. இவை பெரும்பாலும் தனியாருக்குச் சொந்தமானவை.

இந்தோனேசியா பயோடீசலை (Biodiesel) உற்பத்தி செய்வதில் பெரிதும் ஆர்வம் காட்டிவருகிறது. இந்தியாவும் சீனாவும் செம்பனை எண்ணெயின் முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்குகின்றன. அதாவது, உலக செம்பனை எண்ணெய் இறக்குமதியில் மூன்றில் ஒரு பங்கிற்கும் அதிகமாகும். அதேபோல ஐரோப்பிய நாடுகளும் செம்பனை எண்ணெயை அதிகளவில் இறக்குமதி செய்கின்றன.

இந்தோனேசியாவில் 1964-ல் 157,000 மெட்றிக் டொன்னாகவிருந்த செம்பனை எண்ணெய் உற்பத்தி தற்போது 41.5 மில்லியன் மெட்றிக் டொன்னாக அதிகரித்துள்ளது. 2025-ல் சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தேவைகளுக்காக 51 மில்லியன் மெட்றிக் டொன் செம்பனை எண்ணெயை தக்கவைக்க இந்தோனேசியா திட்டமிட்டுள்ளது. இந்தோனேசியாவின் ஏற்றுமதி வருமானமான 5.7 பில்லியன் டொலரில் 11% செம்பனை எண்ணெயின் மூலம் கிடைக்கிறது.

1985 மற்றும் 2014-க்கு இடையில், இந்தோனேசியாவில் செம்பனைத் தோட்டங்களின் பரப்பளவு 600,000 ஹெக்டேரிலிருந்து 8.1 முதல் 11.5 மில்லியன் ஹெக்டேர் வரை விரிவடைந்துள்ளது. 2014-ம் ஆண்டில் இந்தோனேசியா உலகின் மிகப்பெரிய காடழிப்பு விகிதத்தைக் கொண்டதாக அங்கீகரிக்கப்பட்டது. இது உலகின் மிகப்பெரிய கார்பன் உமிழ்ப்பு நாடுகளிலும் ஒன்றாகும். அதன் 85% கார்பன் காடழிப்பிலிருந்து மட்டுமே வருகிறது.



இந்தோனேசியாவில் செம்பனை எண்ணெய் உற்பத்தியின் விளைவாக பல்வேறு உடல்நலம், சுற்றுச்சூழல் மற்றும் சமூக பாதிப்புகள் ஏற்படுவதாக Rainforest Action Network-ன் சமீபத்திய வெளியீடுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. மிகப்பெரிய சொக்லேட் மற்றும் ஸ்நேக்ஸ் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் செம்பனை எண்ணெயை பயன்படுத்துவதால் இந்தப் பிரச்சினை அதிகரிப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, ஒவ்வொரு மெட்றிக் டொன் செம்பனை எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் போதும் 2.5 மெட்றிக் டொன் கழிவு நீர் அல்லது திரவக் கழிவுகள் உருவாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கழிவுநீர் நன்னீரில் கலப்பதுடன், நன்னீர் உயிரினங்களையும், வனவிலங்குகளையும் மனிதர்களையும் பாதிக்கிறது. பூச்சிகொல்லிகள், இரசாயன உரப் பாவனை சுற்றுச்சூழலை மேலும் மாசுபடுத்துகிறது.

இந்தோனேசியாவின் பெரும்பாலான செம்பனைத் தோட்டங்கள் செங்குத்தான சரிவுகளில் உள்ளதால், ஆறுகள் மற்றும் துறைமுகங்களில் வண்டல் படிவுகள் ஏற்படுகின்றன. அங்கு ஏற்படும் மண்ணரிப்பின் காரணமாக சாலைகள், வீடுகள், உட்கட்டமைப்புகள் பல தொடர்ச்சியாக பாதிக்கப்படுகின்றன.

இந்தோனேசியாவை பூர்வீகமாகக் கொண்ட பல உயிரினங்கள் செம்பனை தோட்டத் தொழிலாலும், காடழிப்பினாலும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், அழிவின் அச்சுறுத்தலையும் எதிர்கொண்டுள்ளன. அந்த உயிரினங்களின் வாழ்விடங்கள் அழிக்கப்படுகின்றன. காடழிப்பானது உயிரினங்களின் இனப்பெருக்கம் மற்றும் சுற்றுச்சூழல் அமைப்பிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. போர்னியோ பிக்மி யானைகள், சுமாத்ரா யானைகள், சுமாத்ரா புலிகள், சுமாத்ரா காண்டாமிருகங்கள், மலேயன் சூரியக் கரடி மற்றும் பல்வேறு ஒராங்குட்டான் இனங்களை இந்தோனேசியாவின் போர்னியா மற்றும் சுமாத்ரா காடுகளில் மாத்திரமே காணமுடியும். ஒராங்குட்டான் போன்ற உயிரினங்கள் மரங்களில் தங்கி வாழ்வன. செம்பனைத் தோட்டங்களை விரிவுபடுத்துவதற்காக காடுகளுக்குத் தீ வைக்கப்படுவதனால் இந்த உயிரினங்கள் உயிருடன் எரித்து கொலை செய்யப்படுகின்றன. இந்தப் பகுதிகளில் தோல் தொழிலுக்காக இராச மலைப்பாம்புகள் (Reticulated python) மற்றும் இரத்த மலைப்பாம்புகள் (Blood python) அதிகமாக வேட்டையாடப்படுகின்றன.

போர்னியோவில் செம்பனைத் தோட்ட மேம்பாட்டிற்காக காடுகளை அழிப்பதால் பழங்குடி மக்களும் உள்ளூர் சமூகங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஏனென்றால், அவர்கள் வாழும் பகுதிகள் வலுகட்டாயமாகவும் கைப்பற்றப்படுகின்றன. செம்பனை மரங்கள் அதிகளவு நிலத்தடி நீரினை உறுஞ்சுவதால் விவசாயமும் பாதிப்படைகின்றன. இலங்கையின் இவ்வாறான காரணங்களினால் செம்பனை பயிர்செய்கைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உள்ளூர்வாசிகளின் நிலங்களை அபகரிக்கும்போது பெரும் மோதலும் ஏற்படுகின்றன. 2010-ல் இந்தோனேசியாவில் செம்பனைத் தோட்ட விவகாரத்துடன் தொடர்புடைய 630-ற்கும் மேற்பட்ட நிலத் தகராறுகள் பதிவாகியுள்ளன.

அதுமட்டுமல்லாது, பெரும் முதலாளிகளின் செம்பனைத் தோட்டங்களில் வேலை செய்யும் தோட்டத் தொழிலாளர்களும் பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். செம்பனை உற்பத்தி துறையைச் சார்ந்து ஏறக்குறைய 16 மில்லியன் வேலைகள் உள்ளன. அதனால், இத்தொழிலுக்கு பெருமளவிலான உழைப்பாளர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால், இந்தத் தொழிலாளர்களின் உரிமைகள் அங்கு மீறப்பட்டு வருகிறது. வேகமாக காடுகள் அழிக்கப்பட்டு செம்பனைத் தோட்டங்கள் விரிவுபடுத்தப்படுவதால் சிறுவர்கள் கூட தொழிலாளர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள். தொழில் சட்டத்திட்டங்களுக்கு அமைய முறையான வேலை நேரங்கள் கடைப்பிடிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்களும் உள்ளன. குறைந்தபட்ச ஊதியமே தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்றன. வடக்கு சுமாத்ரா மற்றும் கலிமந்தானில் உள்ள தோட்டங்களில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் குடும்பத்தின் தேவை-

களை பூர்த்தி செய்வதற்கு போதாது என்று தெரிவிக்கப்படுகிறது. ஊதியம் வழங்குவதிலும் மோசடி இடம்பெறுகிறது. அதுமட்டுமல்லாது செம்பனைத் தோட்டங்களில் பெண்கள் வயது பாரபட்சமின்றி பாலியல் வன்முறைகளுக்கும் ஆளாகின்றனர்.

இந்த தனியார் தோட்டங்களில் தொழிலாளர்கள் வழக்கமான சட்ட வரம்பை விட அதிக நேரம் வேலை செய்வதாகவும், பெரும்பாலும் ஒரு நாளைக்கு 10 - 12 மணிநேரம் வேலை செய்வதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இந்தோனேசியாவில் சட்ட வரம்பு வாரத்திற்கு 40 மணிநேரம் ஆகும்.

அதுமட்டுமல்லாது, பிரேசில், சீனா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் தடைசெய்யப்பட்டுள்ள பராகுவாட் (Paraquat) களைக்கொல்லி இந்தோனேசிய செம்பனைத் தோட்டங்களில் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பல தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படுவதில்லை. வழங்கப்படுகின்ற தோட்டங்களிலும் காலாவதியான பின்பும் அந்த பாதுகாப்பு உபகரணங்கள் உடனடியாக மாற்றப்படுவதில்லை. தொழிலாளர்கள் தாம் பயன்படுத்தும் இரசாயனங்களால் ஏற்படும் உடல்நல அபாயங்கள் குறித்து எந்த அறிவும் அல்லது தகவலும் இல்லாதவர்களாக இருக்கின்றனர்.

இந்தோனேசியாவில் செம்பனை எண்ணெய் உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கு எதிராக பழங்குடி சமூகங்கள், பிராந்திய, சர்வதேச தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். சில சந்தர்ப்பங்களில் இப்போராட்டங்களின் போது உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. தற்போது, நில அபகரிப்பு மற்றும் காடழிப்பு ஆகியவற்றின் விகிதங்களைக் குறைப்பதில் சிறிய சட்ட முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதற்கு காரணம் மேற்கண்டவாறான தொடர் போராட்டங்களே ஆகும்.

கலிமந்தான் பிராந்தியம் இந்தோனேசியாவின் இரண்டாவது பெரிய செம்பனை எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் பகுதியாகும். இங்கு அதிகளவில் நில அபகரிப்பும் காடழிப்பும் இடம்பெற்று வருகிறது. 2001 மற்றும் 2012-ற்கு இடையில் கலிமந்தானில் உள்ள செம்பனைத் தோட்டங்கள் 100,000 ஹெக்டேருக்கும் குறைவாக இருந்து 300,000 ஹெக்டேர் வரை அதிகரித்தது. அத்துடன், காடழிப்பு அங்கு வாழ்கின்ற பழங்குடி சமூகங்களின் வாழ்வாதாரத்தையும் அழித்துவிட்டது.

2008-ம் ஆண்டில் இந்தோனேசியாவில் செம்பனை தொடர்பான 513 தீவிர மோதல்கள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் 166 கலிமந்தானில் பதிவாகியுள்ளன. 2012-ல் கலிமந்தானில் செம்பனை எண்ணெய் நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் இடையில் 439 மோதல்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த நிறுவனங்களால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட கூலிப்படையினரால் நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்களில் சித்திரவதை, கடத்தல் மற்றும் கொலைகள் போன்ற பல வழக்குகள் செம்பனைத் தோட்ட மோதலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தற்போது இந்தோனேசியாவில் காடழிப்பு குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. காடுகளின் பரப்பளவு பாரியளவில் குறைவடைந்துள்ளமையும் இதற்கு காரணமாகும். காடுகள் இருந்தால்தானே காடழிப்பு தொடரும்? தவிர, காடழிப்புக்கு எதிராக 130 நாடுகள் வழங்கிய உறுதிமொழிகளின் நிமித்தமும் இது ஓரளவிற்கு சாத்தியப்பட்டிருக்கிறது. அதாவது, 8.40 சதவீதத்தால் காடழிப்பு குறைவடைந்துள்ளதாக சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது. இந்தோனேசிய அரசாங்கத்தின் புள்ளிவிபரப்படி, இந்தோனேசியா ஜூலை 2021 முதல் ஜூன் 2022 வரை 104,000 ஹெக்டேர் (256,990 ஏக்கர்) காடழிக்கப்பட்ட பகுதியை பதிவு செய்துள்ளது. அதற்கு முந்தைய ஆண்டில் காடழிப்பு 113,500 ஹெக்டேர்களாக இருந்தது. இருப்பினும் கொரோனா வைரசு நோய் பரவிய காலங்களில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட சரிவை தொடர்ந்து காடழிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன. இதன் பின்னணியில் அரசாங்கத்தின் அனுசரணை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காடழிப்பைத் தடுப்பதில் இந்தோனேசிய அரசாங்கத்தின் பங்கு பெரும்பாலும் விமர்சிக்கப்பட்டே வருகிறது. ஊழல் மோசடிகள் மலிந்துபோயுள்ளமை இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. உள்ளூர் இந்தோனேசிய அதிகாரிகள் இலஞ்சத்தை பெற்றுக்கொண்டு சட்டவிரோதமாக மரங்களை வெட்டுவதற்கும் அனுமதி வழங்கியுள்ளனர். 2008-ம் ஆண்டில் வெட்டுமர நிறுவனத்தின் உரிமையாளர் அடெலின் லிஸ் சட்டவிரோதமாக மரம் வெட்டப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட போதிலும் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். இவ்வாறான அதிகாரத்தில் இருப்பவர்களின் தீய நடவடிக்கைகளால் இந்தோனேசியக் காடுகள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன.

'பொருளாதார ஆதாயத்திற்காக காடுகளை அழிப்பதென்பது உணவு சமைக்க மறுமலர்ச்சி ஓவியத்தை எரிப்பது போன்றது.' என்று இயற்கை ஆர்வலர் ஈ.ஓ. வில்சன் சொன்ன விடயம் இந்தோனேசியாவுக்கு மிகச் சரியாக பொருந்துகிறது.

**உசாத்துணை:**


- Deforestation in Indonesia and its impact on the environment - https://www.green.earth/
- Report links paper giant RGE to Indonesia deforestation despite pledge by Hans Nicholas Jong (https://news.mongabay.com)
- A Short history of palm oil in Indonesia
- Forest Pulse: The Latest on the World's Forests (Global forest review)
- Indonesia Forests - https://www.nature.org/
- The Asian Forest Fires of 1997-1998 - https://rainforests.mongabay.com/
- THE INDONESIAN KILLINGS OF 1965-1966 - McGregor . Katharine E
- Sustainability pledges help Indonesia produce palm oil with less deforestation by Hans Nicholas Jong on 18 October 2022 - (https://news.mongabay.com/)
- The Fruits Of Their Labour: Abuse In The Palm Oil Industry - LinkedIn




sathees.selvarajah@thaiveedu.com




## தொடக்கக் குறிப்புகள்:

சோவியத் கால வரலாற்று வரைவியலில் ‘ஆய்வாளர்கள்’, ‘வரலாற்றாசிரியர்கள்’ எனப்பட்டோரின் பங்கு பெரிது. சோவியத் யூனியன் பற்றிய வரலாறு 1950-களில் இருந்து தொடர்ச்சியாக எழுதப்பட்டு வந்துள்ளது. இவ்வாறு எழுதப்பட்ட வரலாறுகள் பெரும்பாலும் தவறானவையாகவும் அவதூறானவையாகவும் அமைந்தவை என்ற உண்மை இப்போது மெது மெதுவாக வெளிச்சத்துக்கு வருகிறது. குறிப்பாக சோவியத் கால ஆவணங்களை உள்ளடக்கிய ஆவணக் காப்பகங்கள் பொதுப் பாவனைக்குத் திறந்து விடப்பட்டதன் பின்னணியில் அறிவுத் துறையின் அயோக்கியத்தனங்கள் வெளிப்படுகின்றன. சோவியத் காலம் பற்றிய அவதூறுகளில் பிரதானமானது ஸ்டாலின் பற்றியது. இந்த அவதூறுகள் குறித்து இக் கட்டுரை நோக்க விளைகிறது.

ஸ்டாலின் பற்றிய எழுத்துக்களில் பெரும்பான்மையானவை அவரின் சுயசரிதைகளும் அவரைப் பற்றிய மற்றவர்களின் குறிப்புகளுமே. ஸ்டாலினைப் பற்றிய சித்திரத்தை இவையே இதுவரை தந்துள்ளன. இந்த சுயசரிதைகளும் குறிப்புகளுமே ஆய்வாளர்களாலும், வரலாற்றாசிரியர்களாலும் ஸ்டாலின் பற்றிய கருத்துருவாக்கத்தின் மையப் பகுதியாக இருக்கின்றன. ஸ்டாலினை மதிப்பிடுவதற்கு சுயசரிதைகள் மற்றும் நினைவுக் குறிப்புகளைப் பயன்படுத்துவது ஆபத்து நிறைந்த அணுகுமுறையாகும். முதலாளித்துவ அறிஞர்கள் மற்றும் பிற மேற்கத்தைய தனிமனித அறிஞர்கள் (ட்ரொட்ஸ்கி உட்பட) சுயசரிதைகள் மற்றும் நினைவுக் குறிப்புகளை எழுத முனைந்துள்ளனர். ஸ்டாலின் பற்றிய பல சுயசரிதைகளை மேற்கத்தைய வரலாற்றாசிரியர்கள் எழுதியுள்ளார்கள். இந்தப் போக்கின் மையம் தனிநபர்கள் வரலாற்றை உருவாக்குகிறார்கள் என்ற நிலைப்பாடாகும். இந்த நிலைப்பாடு ஒரு முதலாளித்துவ நிகழ்ச்சி நிரலின் வகைப்பட்டது என்பது மட்டுமன்றி மோசடியானதும் கூட.

ஸ்டாலின் குறித்த இந்த சுயசரிதைகளைப் படிப்பதன் நன்மை என்னவென்றால், ஸ்டாலினின் தீவிர எதிர்ப்பாளர்களில் பெரும்பாலானோர் அறிவியல் பகுப்பாய்வு செய்யத் தகுதியற்றவர்கள் என்பதை மிகத் தெளிவாகவும் இலகுவாகவும் புரிந்து கொள்ள முடிவதே. எதிரிகள் ஸ்டாலினைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் மற்றும் எழுதுகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள இவற்றை வாசிப்பது நல்லதொரு வழி. இவற்றை வாசிக்கின்ற போது, ஸ்டாலின் வாழ்க்கை எழுதும் வரலாற்றாசிரியர்களிடையே சில பொதுவான விஷயங்கள் மட்டுமே உள்ளன என்பதை விளங்கிக் கொள்வது கடினமல்ல.

ஸ்டாலின் பற்றி எழுதியுள்ள முதலாளித்துவ கல்வியாளர்களிடையே, சோவியத் நிபுணர்கள் எனப்படுபவர்களுக்கும் வரலாற்று ஒழுக்கவாதிகளுக்கும் இடையில் அதிக வேறுபாடுகள் இல்லை. இவர்கள் அனைவரும் கண்மூடித்தனமான கருத்தியல் அனுமானங்கள் காரணமாக, ஒரு வரையறுக்கப்பட்ட அறிவியல் ஆய்வுப்புலத்தின் மிக மட்டுப்படுத்தப்பட்ட கேள்விகளில் மட்டுமே கவனம் செலுத்தியிருக்கிறார்கள். ஏராளமானோர் ஸ்டாலின் பற்றிய பொதுமைப்படுத்தப்பட்ட சுய-சரிதைகளை எழுதியுள்ளார்கள். அதில் வரலாற்று நிகழ்வுகளுக்கு மேலாக அதை எழுதிய ஆசிரியர்களின் கருத்தியல் அனுமானங்களைத் தரிசிக்க முடியும். இவை அச் சுயசரிதைகள் எழுதப்பட்ட நோக்கத்தை வெளிப்படையாகக் காட்டிவிடும்.

முதலாளித்துவ சமூக அறிவியல் நிபுணர்களோ அல்லது முதலாளித்துவ வரலாற்றாசிரியர்களோ மார்க்சியத்தில் தீவிரமாக ஈடுபட முடியாததால் அவர்களால் சோவியத் யூனியனைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. அவர்களது சிந்தனை வரம்புக்குட்பட்டு, இன்னும் சரியாகச் சொல்வதானால், முதலாளித்துவச் சட்டகங்களின் வழி அவர்கள் சோசலிச வாழ்க்கை முறையை அணுகுகிறார்கள். ஆய்வறிவியல் ரீதியாக இது தவறானது மட்டுமன்றி மோசடியானதும் கூட. இவர்கள் தங்கள் ஆய்வின் மட்டுப்பாடுகளை வெளிப்படையாக அறிவிப்பதில்லை. இரண்டு முக்கியமான விடயங்களை இங்கு குறிப்பிட வேண்டும்.

ஸ்டாலின் பற்றியும் சோவியத் பற்றியும் எழுதியுள்ள பெரும்பாலானோருக்கு ரஷ்ய மொழி தெரியாது. இதனால் இவர்களால் மூல ஆவணங்களை நேரடியாக வாசிக்கவோ, உறுதிப்படுத்தவோ முடிந்திருக்காது. அதேவேளை இவ்வாறு செய்யப்படும் ஆய்வுகளில் முதன்மைச் சான்றுகள் பயன்படுத்தப்படுதில்லை. இரண்டாங்கையான அல்லது மூன்றாங்

கையான தகவல்களின் வழிப்பட்ட ஆவணங்களே பயன்ப டுத்தப்படுகின்றன. இவ்வாறு பயன்படுத்தப்படும் பல சான்று கள் பொய்யானவை, ஆதாரமற்றவை. ஆனால் மேற்குலக கல்விப்புலத்தில் இவ்வகைப்பட்ட சான்றுகளை மையங் கொண்டு எழுதப்பட்ட நூல்களும் ஆய்வுகளும் முதன்மை யிடம் பிடித்துள்ளன. இவ்வகைப்பட்ட ஆய்வுகளைச் செய் யும் வரலாற்றாசிரியர்கள் சாதாரண எழுத்தாளர்களை விட ஊடகங்களில் அதிக செல்வாக்கை செலுத்துகிறார்கள். ஏனெனில் கம்யூனிச எதிர்ப்பே செல்வாக்கின் அளவு கோலாக உள்ளது.

ஒரு எழுத்தாளரோ, ஆய்வாளரோ ஸ்டாலினை எதிர்ப்பதற்கு மிகத் தெளிவான காரணம் கம்யூனிசத்தை ஒரு குறிக்கோ ளாக எதிர்ப்பதுதான். முதலாளித்துவ வர்க்கம் ஸ்டாலினை வெறுக்கிறது, ஏனென்றால் அவர் ஒரு கம்யூனிஸ்ட் இயக் கத்தை வழிநடத்தினார் என்பதற்காகவே அன்றி குறிப்பாக ஸ்டாலின் என்ற தனிமனிதனை அல்ல. வெற்றிகரமான ஒரு மாற்றை நடத்திக் காட்டியதை, இரண்டாம் உலகப் போரில் தலைமைப் பாத்திரம் ஏற்றதை முதலாளித்துவத்தால் ஏற்றுக் கொள்ளவே முடிவதில்லை. இது ஸ்டாலினுக்கு மட்டுமே உரித்தானதல்ல. உலகளாவிய கம்யூனிசத்தை யதார்த்தத் திற்கு நெருக்கமாக கொண்டு வரும் எந்த இயக்கத் தலைவ ரையும் முதலாளித்துவம் வெறுக்கும். அதுதான் யதார்த்தம் என்பதை வரலாறு மிகத் தெளிவாகக் காட்டியுள்ளது.

## நிறுவனமயப்பட்ட ஸ்டாலின் அவதூறு:

கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக மேற்குலகக் கல்விப் புலங்களில் ஸ்டாலின் எதிர்ப்பு என்பது வரவேற்கப்பட்ட கொண்டாடப்பட்ட ஒன்றாக இருந்தது. ஆய்வுகளில் உண் மைத் தன்மைக்கு மாறாக புனையப்பட்ட கதைகள் போற்றப் பட்டன. அவை சோவியத் ஆய்வுகளின் மைய நீரோட்டத்தின் முக்கிய பகுதியாகின. ஸ்டாலின் காலம் பற்றிய மாற்றுப் பார்வைகள் மறுதலிக்கப்பட்டன. அவதூறுக்கு ஆளாகின. பல்கலைக்கழகங்களில் அது குறித்துப் பேசுவதற்கு இடம் தரப்படவில்லை. ஸ்டாலின் காலத்தின் சாதனைகள் பற்றிப் பேசுவோர் ஸ்டாலினவாதிகள் எனப்பட்டார்கள். அவர்கள் ஹிட்லரின் அனுதாபிகளுக்கு இணையானவர்களாகக் கருதப் பட்டார்கள். இதன்வழி சோவியத் காலம் பற்றிய ஆய்வுகள் மிகுந்த பக்கச் சார்பானவையாக மாறின. இன்றும் இந்நிலை மாறவில்லை.

மேற்குலகின் முதலாளித்துவ கல்வி நிறுவனங்கள் ‘புதிய நவீ னமான’ சிந்தனைகளுக்கு வெகுமதியளிக்கின்றன. அவை சோசலிச எதிர்ப்பையும் கம்யூனிச வெறுப்பையும் உமிழ் கின்ற போது அச்சிந்தனைகள் வெகுமதிக்குரியனவாக மாறு கின்றன. அவ்வகைப்பட்டே சோவியத் காலப் பொய்கள் ஏரா ளமாக உற்பத்தியாகின. இவ்வகைப்பட்ட ‘புதிய’ கருத்தோட் டங்கள் கேள்விக்குள்ளாக்கப்பட்ட போது அவை ‘கம்யூனிச ஆதரவு’ என்று மறுக்கப்பட்டன. அறிவியற்துறையின் இவ்வ யோக்கியத்தனத்தை விமர்சித்தோர் சோவியத் முகவர் எனப் பட்டனர். இவ்வாறு பொய்கள் மீதான விமர்சனங்களைக் கண்டு ஆய்வறிவாளர்கள் ‘கம்யூனிச பூதம்’ என்ற கவசத்துள் ஒழிந்து கொண்டனர். இந்த நவீன சிந்தனைகள் எதுவித விமர்சனமுமின்றி மேற்குலக ஆய்வுலகால் கொண்டாடப்பட்டது.

ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் ரஷ்ய ஆராய்ச்சி மையம் அமெரிக்க உளவுத் துறையான சி.ஐ.ஏ-யின் கோட்டையாக விளங்கியது. இதன் இயக்குனரான ஆடம் உலாம், ஸ்டாலி னைக் கண்டிக்க வேண்டியதன் அவசியத்தை பின்வருமாறு விளக்குகிறார்

‘கிறிஸ்தவ ஒழுக்கத்திற்கு எதிரானவராக அவர் இருந்தார். இது கண்டிக்கப்பட வேண்டியது. அதேவேளை ஸ்டாலினை விமர்சிப்பது என்பது அந்த ஆண்டுகளில் சோவியத் மக்க ளின் சாதனைகளைக் குறைப்பது என்று அர்த்தமல்ல. ஆனால் அந்தக் குற்றங்களும் துன்பங்களும் இல்லாமல் இன்னும் எவ்வளவு சாதித்திருக்க முடியும்!’ (பார்க்க: Stalin: The man and his Era, Adam B. Ulam, 1986)

இங்கே இரண்டு விடயங்கள் முக்கியமானவை. முதலாவது கிறிஸ்தவ மத ஒழுக்கத்தின் அடிப்படையில் ஸ்டாலின் மதிப் பிடப்படுகிறார். இரண்டாவது சோவியத்தின் சாதனைகளைக் குறைத்து மதிப்பிடவியலாத நிலையில் ஸ்டாலினைக் குற் றஞ் சாட்டுவதன் மூலம் வெறுப்பை உமிழ்தல். உலாமால் வேறெந்தக் குற்றச்சாட்டையும் முன்வைக்க முடியாத நிலை யில் இவ்வாறான ஒரு கருத்தை அவர் முன்வைக்கிறார்.

ஸ்டாலின் மீதான இன்னொரு அவதூறு அவர் ‘முட்டாள்’, ‘திறமையற்றவர்’, ‘வினைத்திறனுடன் செயற்படத் தெரியாத வர்’ போன்ற கருத்துக்களால் நிறைந்தது. வலுவான ஆதா ரங்களுடன் நிரூபிக்கவியலாதவிடத்து ஆய்வாளர்கள் கையில் எடுக்கும் ஆயுதம் தான் ஸ்டாலினின் செயல்திற மின்மை பற்றிய விமர்சனம். எடுத்துக்காட்டாக மிக வலிமை யான ஸ்டாலினிச எதிர்ப்பாளர்களில் ஒருவரான ரோபேர்ட் டக்கர், ஹிட்லருடன் ஸ்டாலினின் ஒப்பந்தம் சோவியத் யூனி யனுக்கு நல்லதல்ல என்பதை நிரூபிக்க நூற்றுக்கணக்கான பக்கங்கள் மூலம் வலிமையாகவும் அவநம்பிக்கையாகவும் போராடுகிறார். அவ்வாறு செய்வதன் மூலம், 1938-ம் ஆண்டு மியூனிச்சில் ஹிட்லரை பிரிட்டிஷ் மற்றும் பிரஞ்சு சமாதானப் படுத்தியதற்கு சில நகைப்புக்குரிய சாக்குகளை கூறுவது அவருக்கு அவசியமானது. பார்க்க, (Stalin as Revolutionary, Robert C. Tucker, 1972)

டக்கரைப் போலவே ஸ்டாலினின் சுயசரிதையை எழுதிய பலரும் ஸ்டாலின் திறமையற்றவர் என்று சொல்கிறார்கள் இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் இவ்வாறு சொல்ப வர்கள் இரண்டு விடயத்தைச் செய்ய மறந்து விடுகிறார்கள். முதலாவது அவர் திறமையற்றவர் என்றால் எவ்வாறு அவ ரால் சோவியத் யூனியனை ஒரு வல்லரசாகவும் தொழிற்றுறை யில் சிறந்து விளங்கிய ஒன்றாகவும் மாற்ற முடிந்தது. இரண் டாம் உலகப் போரின் கதாநாயகனாக ஸ்டாலின் எவ்வாறு மாறினார் என்ற கேள்விகளுக்கான பதிலை யாரும் தருவ தாக இல்லை. இரண்டாவது அவர் திறமையற்றவராக இருந் தால் அவரை விடத் திறமையான ஒருவர் யார் என்பதையும் அவர் ஸ்டாலினை விட ‘திறமையானவர்’ என்பதை நிரூபிக்க வேண்டியதும் அவசியம். விமர்சகர்கள் பொதுவாக இதை செய்யத் தவறிவிடுவார்கள். இவை மொத்தத்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைக்கான ஸ்டாலினின் அரசி யல் போட்டியாளர்களின் முட்டாள்த்தனத்தை நிரூபிக்கவே அவை பெரும்பாலும் நமக்கு உதவுகின்றன.

அதேவேளை ஸ்டாலின் ஆட்சி பற்றி மட்டுமன்றி ஏனைய சோசலிச ஆட்சிகளின் மீது சேற்றை அள்ளி இறைப்பவர்களை கூர்ந்து கவனித்தால் ஒரு விடயம் தெளிவாகப் புலப்படும். இவர்கள் சமூக சக்திகளின் கொடிய கலவையாக இருக்கிறார்கள். இக்கலவையானது முதலாளித்துவ கல்வி நிறுவனங்களால் பணியமர்த்தப்பட்ட அதேவேளை அரச அதிகாரத்தில் எந்த அனுபவமும் இல்லாத, அறிவுஜீவிக



ளாக இவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் அரச அதிகாரத்தில் அனுபவமில்லாத அல்லது அரச அதிகாரம் பற்றிய அனுபவத்தில் அக்கறை இல்லாதவர்கள். எனவே அவர்களால் முடிந்தது நடைமுறை அறிவு இல்லாமல் விமர்சிப்பதே.

இதன் இன்னொரு அந்தத்தில் சோசலிசப் புத்திஜீவிகளும் ஸ்டாலினையும் சோவியத்தையும் விமர்சிக்கிறார்கள். இந்த புத்திஜீவிகளில் ஒரு சிலரே உண்மையில் ஒரு சோசலிச அரசாங்கத்தை நடத்தியிருக்கிறார்கள். கம்யூனிசத்தை அடைய முயற்சித்த அனுபவம் அவர்களுக்கு இல்லை. உண்மையில், ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஒரு செயற்பாட்டாளரின் அனுபவம் கூட அவர்களுக்கு இல்லை. அவர்களுக்கு முன்னணிக் கட்சிகள், இயக்கங்கள் அல்லது கம்யூனிஸ்ட் அரசுகள் பற்றி எதுவும் தெரியாது. உண்மையில் முற்போக்கான இலக்கை அடைய முயற்சிக்கும் நடைமுறை அரசியல் பற்றிய எதுவித புரிதலும் அவர்களுக்கு இல்லை. அத்தகைய புத்திஜீவிகளுக்கு பொதுவாக முதலாளித்துவ அரசாங்கத்திலும் அதிக அனுபவம் இருக்காது. ஆனால் அவர்களால் பொத்தாம் பொதுவாக விமர்சிக்கவியலும். ஏனெனில் அவர்கள் அதைச் செய்தால் மேற்குலக அரசாங்க உளவுத்துறை நிறுவனங்களில் உறுப்பினராக இருப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.

இந்த அறிவுஜீவிகள் முதலாளித்துவ வர்க்கத்திற்கு நன்றாக சேவை செய்கிறார்கள், ஏனென்றால் முதலாளித்துவ வர்க்கம் நடுத்தர மற்றும் தொழிலாள வர்க்கத்தின் முன் தனது சொந்த வர்க்கம் சார்பாக ஒரு முறையிடும் வாதத்தை முன் வைக்கும் அளவுக்கு அப்பாவியாக இல்லை. முதலாளித்துவ வர்க்கத்தினருக்குத் தேவையான திசைதிருப்பல்களை உருவாக்கும் திறமை உள்ள முதலாளிகள் விரைவில் வெற்றிகரமான அரசியல்வாதிகளாக மாறுகிறார்கள்.

முதலாளிகளுக்கு மாறாக, புத்திஜீவிகள், சாதாரண மக்களுடன் தங்கள் சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு நெருக்கமாக இருப்பதால், முதலாளித்துவ ஊடகங்களில் கம்யூனிச சமூகங்களைத் தாக்குவது மிகவும் இலகுவாக இருக்கும். அரசு அதிகாரத்தில் அனுபவம் இல்லாத புத்திஜீவியின் அப்பாவித்தனம் ஆளும் வர்க்கத்திற்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். அனைத்து முதலாளித்துவ அரசாங்கங்களும் இன்னும் அதிக தீவிரத்துடன் வெளிநாட்டு கம்யூனிச அரசாங்கங்களை விமர்சிக்க அப்பாவி புத்திஜீவிகளை கட்டவிழ்த்துவிடும்.

முதலாளித்துவ நாடுகளின் பாட்டாளி வர்க்க புத்திஜீவியை முதலாளித்துவ புத்திஜீவியுடன் ஒப்பிட்டால், முதலாளித்துவ நாடுகளில் உள்ள பாட்டாளி வர்க்க புத்திஜீவிகள் ஏகாதிபத்திய பிரச்சாரம் என்ற கரண்டியால் ஊட்டி வளர்ந்துள்ளனர். இதன் விளைவாக, முதலாளித்துவ கல்வி உலகம் மற்றும் மார்க்சிய அறிவியல் அணுகுமுறை இரண்டையும் அவர் அறிவார். இதற்கு நேர்மாறாக, முதலாளித்துவ அறிவுஜீவி, அரசியல், பொருளாதாரம், இராணுவம் மற்றும் சமூகவியல் விஷயங்களுக்கு வரும்போது, எந்த அறிவியல் அறிவையும் கற்கவில்லை அல்லது அறிவியல் ரீதியற்ற அறிவை நிராகரிக்கத் தயாராக இல்லை என்பதை நாம் அவதானிக்கலாம். இதன் விளைவாகவே, ஸ்டாலினைப் பற்றி 800 பக்க வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர்கள் ஸ்டாலின் எழுதியதைப் படிப்பதில்லை, அவர்களுக்கு மார்க்சிய-லெனினிய அறிவியலைப் பற்றி எதுவும் தெரியாது. இதை இந்த வாழ்க்கை வரலாறுகள் மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

விஞ்ஞானம் அதன் தற்போதைய மதிப்பை அனுபவிப்பதற்கு முன்பு, மந்திரவாதிகள், மதங்களின் நிறுவனர்கள் மற்றும் சூனிய மருத்துவர்களே புத்திஜீவிகளாக அறியப்பட்டார்கள். அவர்கள் அறிவியல் அறிவு இல்லாத இடத்தில் மூடநம்பிக்கைகளை உருவாக்கினார்கள். பூசாரிகள் தெய்வங்களின் கோபத்தைத் தணிக்க முயற்சி என்ற போர்வையில் மக்களிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு தங்கள் திறன்களைப் பயன்படுத்தினர். மந்திரவாதிகளும் சூனிய மருத்துவர்களும் அதையே செய்தார்கள். அவர்கள் அனைவரும் உழைப்புப் பிரிவின் சிந்தனைப் பக்கத்தில் இருந்தார்கள். அதே நேரத்தில் பெரும்பாலான உழைப்பு உடல் உழைப்பாகவே இருந்

தது. எனவே தங்கள் மூளையைப் பயன்படுத்தி சுரண்டும் போக்கே இருந்தது.

ஸ்டாலினுக்கும் மார்க்சிசம்-லெனினிசத்துக்கும் இடையிலான உறவென்பது குறித்த புத்திஜீவிகளால் விளங்கிக்கொள்ளப்ப டாத ஒன்றாகவே இருந்தது. இன்னும் இருக்கிறது. முதலா ளித்துவ புத்திஜீவிகள் மார்க்சியம் - லெனினிசம் மற்றும் விஞ் ஞான முறை பற்றி அறியாதவர்கள், அவர்களால் ஸ்டாலி னைப் புரிந்து கொள்ள முடியாதபோது கட்டுக்கதைகளின் வழியே ஸ்டாலினை உருவகிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறார்கள். குறிப்பாக 'எல்லாந் தெரிந்த' நிபுணர்கள் சமூகத்தில் தங்கள் இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள மூடநம்பிக்கைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய கட்டாயத் திற்கு ஆளானார்கள். முதலாளித்துவ புத்திஜீவிகள் ஆயிரக் கணக்கான பக்கங்கள் எழுதினாலும், இத்தனை ஆண்டுக ளுக்குப் பிறகும் ஸ்டாலினைப் பற்றி துப்பு துலக்காமல், வதந்திகளையும், விஞ்ஞானத்திற்கு முந்தைய விமர்சனங்க ளையும் மட்டுமே பரப்ப முடிந்திருக்கிறது.

## மிலோவன் டிஜிலாஸ்: புதியவகை உருட்டு:

யூகோஸ்லாவியாவைச் சேர்ந்த மிலோவன் டிஜிலாஸ் தான் முன்னாள் ஸ்டாலின் ஆதரவாளன் என்ற முத்திரையோடு தன்னை அடையாளப்படுத்துகிறார். இதன்வழி இன்னொரு வகைப்பட்ட அவதூறை செய்தார். அவர் சோவியத்தைப் 'புதிய வர்க்கம்' கைப்பற்றி சோசலிசத்தை அழித்ததாக நம்பி னார். ஸ்டாலினை 'வரலாற்றில் மிகப்பெரிய குற்றவாளி' என்று குறிப்பிட்டார். ஸ்டாலினுடனான உரையாடல்கள் என்ற அவரது புத்தகம், இரண்டாம் உலகப் போருக்கு மத்தியில் யூகோஸ்லாவியாவின் புரட்சி மற்றும் அதன் பின்விளைவுக ளைப் பற்றியது. (பார்க்க: Conversations with Stalin, Milovan Djilas, 1962).

துரதிர்ஷ்டவசமாக, டிஜிலாஸ் ஒரு காலத்தில் கம்யூனிசத் தைப் பற்றி தீவிரமாக இருந்ததை நிரூபிக்க முயற்சிக்கிறார், இப்போது அவருக்கு அதில் சந்தேகம் உள்ளதென்றும் ஸ்டாலின் ஒரு குற்றவாளி என்றும் நம்புகிறார். இந்தப் புத்த கத்தை வலதுசாரிவாதத்திற்கு வழிவகுக்கும் எளிமையான அதிதீவிர வலதின் உன்னதமான நிகழ்வாக பார்க்கலாம். டிஜிலாஸ் ஸ்டாலினைப் பின்தொடர்ந்தார் என்பதல்ல, ஆனால் ஆரம்பத்தில் இருந்தே டிஜிலாஸும் அவரது தோழர்களும் பொருள்முதல்வாத முறையைப் பயன்படுத்தா மல் ஸ்டாலினைப் பிடித்துக் கொண்டனர். ஸ்டாலினைத் தெய்வீக தரத்திற்கு உயர்த்தி அதில் அவர் குறையைக் கண்டறிவதற்கு முயன்றனர்:
'ஸ்டாலின் போரில் ஒரு தலைவரை விட மேலானவர். அவர் ஒரு யோசனையின் அவதாரம், கம்யூனிஸ்ட் மனங்களில் தூய சிந்தனையாக மாற்றப்பட்டார், அதன் மூலம் தவறு செய்ய முடியாத பாவமற்ற ஒருவராக மாற்றப்பட்டார்.'
என்று தனது நூலில் எழுதுகிறார் டிஜிலாஸ்.

சோவியத் தலைவர்கள் மது அருந்தினர் என்பது டிஜிலாஸ் தனது புத்தகத்தில் வைத்திருக்கும் மிகவும் நிலையான குற் றச்சாட்டு. டிஜிலாஸ் தனது ஆன்மீகத்தை கிறிஸ்தவத்திலி ருந்து ஸ்டாலினுக்கு மாற்றினார். டிஜிலாஸைப் பொறுத்த வரை, ஒரு கம்யூனிஸ்ட் நேர்மையானவர், குடிப்பதில்லை, அதிகப்படியான உணவு இல்லை, உடலுறவு இல்லை மற் றும் நகைச்சுவை உணர்வு இல்லை. அவர் தனது மத தூண் டுதல்களை கட்டுப்படுத்த கடினமாக இருந்தது என்பதை அவர் சுதந்திரமாக ஒப்புக்கொள்கிறார். ஒரு சோவியத் ஜென ரலுடனான தனது முதல் சந்திப்புகளில் ஒன்றை டிஜிலாஸ் நினைவு கூர்கிறார்: 'ரஷ்யர்கள் நாங்கள் நன்றாக சாப்பிடு கிறோம், இன்னும் நன்றாக குடிக்கிறோம், எல்லாவற்றிலும் சிறப்பாக போராடுகிறோம்' என்ற கூற்றை டிஜிலாஸ் ஏற்க வில்லை.

டிஜிலாஸ் தனது நூலின் வழி இரண்டு விடயங்களைச் செய்ய முனைகிறார். முதலாவது தனது கிறிஸ்தவவாத நிலைப்பாட்டில் ஸ்டாலின் இல்லாமையை மிகப்பெரிய குற் றமாகக் காண்கிறார். இரண்டாவது, தன்னை முன்னாள் ஸ்டா லின் ஆதரவாளன் என்பதன் மூலம் தனது வாதங்களுக்கு வலுச்சேர்க்க முனைகிறார்.

## பேர்ட்ரண்ட் ரசல்: அறிவுலக அயோக்கியன்:

இருபதாம் நூற்றாண்டின் முக்கியமான தத்துவார்த்த சிந்த னையாளர்களில் பேர்ட்ண்ட் ரசலுக்குத் தனித்துவமான இட முண்டு. கணிதவியலாளர், கல்வியாளர், சமூக சிந்தனையா ளர், நாத்திகன், ஜனநாயகவாதி, போர் எதிர்ப்பாளர் என் றெல்லாம் இவரைப் பற்றிய ஏராளமான கட்டுரைகள் இணை யத்தில் கிடைக்கின்றன. அவரைப் பற்றி மறைக்கப்படுகின்ற முக்கியமான செய்தி ஒன்றுண்டு. தனது வாழ்நாளில் பெரும் பகுதி அவர் பிரித்தானிய உளவுத்துறையின் முகவராக இருந்தார். இந்தத் தகவலை பிரித்தானிய உளவுத்துறையே 1990-களின் பிற்பகுதியில் வெளியிட்டது. ரசல் செல்வம் மிக்க பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்தவர். இளவயதில் தன்னை கம் யூனிஸ்ட் அல்லாத இடதுசாரி என்று பிரகடனப்படுத்தினார். ரஷ்யப் புரட்சியை எதிர்த்தார். இரண்டாம் உலகப் போருக்கு முன்பும் பின்பும் தீவிர சோவியத் எதிர்ப்பாளராக இருந்தார். அறிவுலக அயோக்கியத்தனத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியவர் ரசல்.

அமெரிக்க இரண்டு அணுகுண்டுகளை ஜப்பானின் மீது வீசி யதன் பின்னணியில் ரசலின் பங்கு முக்கியமானது. ஜப்பான் சரணடையத் தயாராக இருந்த நிலையிலேயே இக்குண்டுகள் வீசப்பட்டன. 1939-லேயே ஹிட்லர் அணுகுண்டுகளைத் தயா ரிக்க ஆயத்தமாகிறார் என்ற பொய்யை அமெரிக்க, பிரித்தா னிய அரசாங்கங்களிடம் விதைத்தார் ரசல். அதன் பின்னணி யில் அணுகுண்டு தயாரிப்பதற்கான Manhattan Project இல் ரசல் பணியாற்றினார். இரண்டாம் உலகப் போரின் முடிவின் பின்னர் இது குறித்து ஜேர்மன் விஞ்ஞானிகளிடம் விசாரித்த போது, தம்மிடம் அந்தத் திட்டம் இல்லை என்றும் அவ்வா றானதொன்றுக்குத் தாங்கள் தயாராக இல்லை எனவும் தெரி வித்தனர்.

இரண்டாம் உலகப் போர் முடிந்த நிலையில் அணுகுண்டை அமெரிக்கா சோவியத்தை வழிக்குக் கொண்டுவரப் பயன்ப டுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தவர் ரசல். அதே வேளை அணுகுண்டின் உதவியுடன் உலகின் தனித்த சர்வா திகாரத்தை உருவாக்கி அதன் மூலம் மேற்குலக ஜனநாயக

விழுமியங்களைக் காக்க முடியும் என்றும் 1946-ல் ரசல் எழுதினார். அவர் அணுகுண்டு மிரட்டலின் உதவியுடன் உலகில் உள்ள நாடுகளின் இறையாண்மையைப் பறிக்க முடியும் என்றும் அதன் மூலமே உலகக் கூட்டாட்சியை நிறுவ முடியும் என்ற தனது கற்பனவாத வெறியை வெளிப்படுத்தினார்.

கடந்த நூறு ஆண்டுகளில் நமது பூமி முழுவதும் பெருகிய அனைத்து தீமைகளையும் ரசல் தனிப்பட்ட முறையில் ஏற்படுத்தவில்லை, ஆனால் அத்தீமையைச் செய்தவர்களில் அவர் மிகவும் செல்வாக்கு மிக்க நபர்களில் ஒருவர். மேலும், ரசல் ஒரு தீய மனிதனாக மாறுவதற்குக் காரணமான தாக்கங்களை ஒருவர் கண்டறிந்தால், இருபதாம் நூற்றாண்டில் மட்டும் என்ன தவறு நடந்தது என்பது மட்டுமல்ல, அதற்கு முந்தைய பல நூற்றாண்டுகளிலும் எவ்வாறு மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்தன என்றும் புரிந்துவிடும்.

இருபதாம் நூற்றாண்டு வருங்காலத்தில் எவ்வாறு நினைவு கூரப்படும் என்று யோசித்தால், அது பிரபலமாக நம்பப்படும் பொய்களின் முடிவில்லாத ஏகபோகத்திற்குரிய நூற்றாண்டு. பெர்ட்ரான்ட் ரசல் ஒரு கற்பனாவாத மனிதாபிமானவாதி என்ற கட்டுக்கதை, இது போன்ற மிகவும் பரவலான பொய்களில் ஒன்றாக இருக்கலாம், இது கல்வியறிவு பெற்ற மக்களிடையே பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாக உள்ளது. கல்வியறிவு பெற்றவர்கள், படித்தவர்கள் இடையே அற்புதமான நம்பகத்தன்மை எப்படி சாத்தியம்? இந்தச் சிக்கலை விளங்கிக் கொள்ள சிறந்த உதாரணமாக ரசலைப் பயன்படுத்தலாம். ஆங்கிலோ-சாக்சன் என்ற முதன்மையான இனத்தை விட கருமையான தோல் நிறங்களைக் கொண்ட மக்களுக்கு எதிராக இனப் படுகொலைக்கான அவரது முன்மொழிவுகள் இன்றும் கவனம் பெறுவதில்லை. இவை குறித்து தனியாக இன்னொரு சந்தர்ப்பத்தில் நோக்கலாம்.

McMaster பல்கலைக்கழகத்தில் உள்ள ரசல் ஆவணக் காப்பகத்தில் உள்ள கடிதங்கள் ஒரு செய்தியை வெளிப்படுத்துகின்றன. ரசல் ஒரு அரசாங்க நிறுவனத்தின் கம்யூனிச எதிர்ப்பு பிரச்சார இயந்திரத்தின் வெளிப்படையான அறிவுறுத்தலின் பேரில் கம்யூனிச எதிர்ப்பு பிரச்சாரத்தை தெளிவாக எழுதினார். கூடுதலாக, இந்தக் கடிதங்களில், ரசல் தான் தயாரிக்கவிருந்த வெளியீடுகளின் நேரடியான கருத்தியல் தன்மையை நன்கு புரிந்துகொண்டதாகக் குறிப்பிடுகிறார். பிரித்தானிய உளவு நிறுவனத்தின் தேவைக்கேற்பவே தான் இவற்றை எழுதியதாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார். அவரது கடிதங்கள் பிரித்தானிய உளவுத்துறையின் நேரடி வழிகாட்டலிலேயே கம்யூனிசத்திற்கு எதிரான நூல்கள் எழுதப்பட்டதை உறுதி செய்கின்றன.

Batchworth Books இன் Background Books தொடரில் வெளியிடப்பட்ட மூன்று சிறு அரசியல் புத்தகங்களை ரஸ்ஸல் எழுதினார்: கம்யூனிசம் ஏன் தோல்வியடைய வேண்டும் (1951), சுதந்திரம் என்றால் என்ன? (1952), மற்றும் ஜனநாயகம் என்றால் என்ன? (1953) இவை முழுமையாக பிரித்தானிய உளவு அமைப்பால் நிதியளிக்கப்பட்டு வழிகாட்டப்பட்டவை என்ற உண்மை இப்போது தெரிய வந்துள்ளது. இவற்றுக்கு உளவு அமைப்பாலேயே இரகசியமாக நிதியளிக்கப்பட்டது என்பதை ரசல் நன்கு அறிந்திருந்தார். இந்த புத்தகங்களின் விற்பனை மூலம் ரஸ்ஸல் பெற்ற வருமானம் உளவு அமைப்பு மூலமே செலுத்தப்பட்டது.

குறித்த மூன்று படைப்புகளும் மிகச் சாதாரணமானவை. அவரது காலத்தில் வாழ்ந்த அடிப்படையில் ஏசாயா பெர்லின் மற்றும் கார்ல் பொப்பர் போன்ற பிற கம்யூனிச எதிர்ப்பு எழுத்தாளர்களுடன் ஒப்பிடும் போது அவர்கள் அரசியல் கோட்பாடு அல்லது பகுப்பாய்வுக்கு ஒப்பாக ரசலின் நூல்கள் எதையும் பங்களிக்கவில்லை, ஆனால் ரசலின் நோக்கம் அரசியல் கோட்பாடு அல்லது பகுப்பாய்விற்கு அறிவார்ந்த பங்களிப்பை வழங்குவதில்லை. மாறாக, தாங்கள் வாசிக்கும் படைப்புகளின் வரம்புகளைப் புரிந்து கொள்ள அறிவுபூர்வமாகத் திறனற்றவர்களுக்கு வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் சரியானவை மற்றும் சரியானவை என்று நம்ப வைப்பதே நோக்கமாக இருந்தது. சமூகத்தில் அறிவார்ந்தவராகக் கருதப்பட்ட ஒருவரின் நூல்களுக்கு ஒரு ‘சமூக மதிப்பு’ இருக்கும் அதை கம்யூனிச விரோதப் பிரச்சாரத்துக்கு ரசல் பயன்படுத்தினார். அக்காலத்தில் எழுதப்பட்ட ஏராளமான தத்துவார்த்த நூல்களை விட ரசலின் எழுத்துக்களுக்கு முக்கியத்துவம் இருந்தது. அது உளவுத்துறையின் வழி இலகுவாகச் சாத்தியமானது. ஏனெனில் சோவியத்துக்கு எதிரான பொதுக் கருத்து உருவாக்கத்தில் புத்திஜீவியாக தனது பங்களிப்பை ரசல் வழங்கினார்.

ஸ்டாலின் ஆட்சி குறித்து கட்டுக் கதைகளை உருவாக்கியத்தில் ரசல் பங்களித்தார். அதேவேளை ஸ்டாலினுக்குப் பின்னான சோவியத் குறித்து மென்போக்கைக் கடைப்பிடித்தார். 1960-களில் அவர் தன்னை ஒரு ஜனநாயகவாதியாகக் காட்ட முயற்சி செய்தார். அணு ஆயுத எதிர்ப்பியக்கத்துக்கு ஆதரவு தெரிவித்தார், வியட்னாம் போரை எதிர்த்தார். இவையும் உளவுத்துறையின் நிகழ்ச்சி நிரலின் பகுதியா என்ற வினாவுக்கு காலம் பதிலளிக்கும். அறிவுத்துறையின் அயோக்கியத்தனத்திற்கு நல்ல உதாரணம் பேர்ட்ரண்ட் ரசல்.

## ஜோர்ச் ஓர்வெல்: உளவாளி எழுத்தாளன்:

இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற நாவல்களில் ஒன்று ஜோர்ச் ஓர்வெலால் எழுதப்பட்ட ‘விலங்குப் பண்ணை’. இந்நாவல் நாசிச ஜேர்மன் படைகளுக்கு எதிராக வீரஞ்செறிந்த போராட்டத்தை சோவியத் மக்கள் மேற்கொண்டிருந்த காலப் பகுதியில் வெளியானது. இது கம்யூனிசத்தையும் அதன் கோட்பாடுகளையும் இழிவுபடுத்தியது. இரண்டாம் உலகப் போரின் முடிவைத் தொடர்ந்து இவரது ‘1984’ நாவல் வெளியானது. இந்நாவல் கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தின் முக்கியமான இலக்கியப் படைப்பானது. கெடுபிடிப் போர் தொடங்கிய நிலையில் இவ்விரு நூல்களையும் பிரச்சார ஆயதங்களாகப் பயன்படுத்துமாறு பிரித்தானிய அரசு தனது தூதரகங்களுக்கு அறிவித்தது. குறிப்பாக மத்திய கிழக்கு, வட ஆபிரிக்க மற்றும் ஆசிய நாடுகளில் கம்யூனிசம் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இதை தடுப்பதற்காக ‘விலங்குப் பண்ணை நாவலில் வரும் பன்றி, நாய் ஆகிய பாத்திரங்கள் கம்யூனிஸ்டுகளைத்தான் குறிக்கின்றன’ என்று இஸ்லாமிய நாடுகளில் பிரச்சாரம் செய்யுமாறு கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டன. முஸ்லீம்கள் பன்றிகளையும், நாய்களையும் வெறுப்

பவர்கள் என்ற எண்ணக் கருவோடே இந்தக் கட்டளைகளைப் பொருத்திப் பார்க்க வேண்டியுள்ளது.

இதன் பின்கதை யாதெனில், ஜோர்ச் ஓர்வெல் தீவிர நோய் வாய்ப்பட்ட நிலையில் விலங்குப் பண்ணையை வெளியிட்டிருந்தார். அவரது 1984 நாவல் வெளியிடக்கூடிய வடிவத்திற்கு வந்திருந்தது. ஆனால் அவரால் வெளியிட முடியவில்லை. இக்காலப்பகுதியில் அவருக்கு பிரித்தானிய உளவுத்துறையின் தொடர்பு கிடைத்தது. அவர்கள் இவரை கம்யூனிசத்திற்கு எதிரான போரில் இணையக் கோரினர். ஓர்வெல் தான் நோய்வாய்ப்பட்டிருப்பதால் தன்னால் பங்களிக்க முடியாது என்றும் ஆனால் கம்யூனிசத்துக்கு ஆதரவாகச் செயற்படும் புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களின் பட்டியலைத் தரமுடியும் என்று சொன்னார். அதன்படி பிரித்தானிய உளவுத்துறையைச் சேர்ந்த இவரது நெருங்கிய தோழியான செலியா கிர்வானிடம் 135 பெயர்களைக் கொண்ட பட்டியலைக் கொடுத்தார். இக்கதை சுவையானது.

ஓர்வெல் 1945-ம் ஆண்டு வேல்ஸில் கிறிஸ்மஸை தனது நண்பர் ஆர்தர் கோஸ்ட்லர் மற்றும் கோஸ்ட்லரின் மனைவி மாமெய்னுடன் கழித்தபோது மாமெய்னின் இரட்டைச் சகோதரி செலியாவைச் சந்தித்தார். முரண்பாடாக, மாமெய்ன் ஒரு காலத்தில் ரசலின் விரும்பத்தகாத பாலியல் சீண்டல்களுக்கு ஆளாகியிருந்தார். இதன் விளைவாக, கோஸ்ட்லருக்கும் ரசலுக்கும் கம்யூனிச எதிர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் இணைந்து செயற்பட்டிருந்த நிலையில் ரசலின் நடத்தை காரணமாக இருவருக்குமிடையிலான உறவு சிதைந்தது என்பதும் இங்கு கவனிப்புக்குரியது.

ஓர்வெல் தனது பட்டியலில் குறிப்புகளை எழுதினார். சிலரை யூத எதிர்ப்பு உடையவர்கள், ஓரினச் சேர்க்கையாளர்கள் என்று குறிப்பிட்டார். பட்டியலில் உள்ளவர்கள் பொதுவாக ‘கம்யூனிஸ்டுகள்’ என்று பெயரிட்டார். இந்தப் பட்டியலில் இருக்கும் நன்கறியப்பட்ட பெயர் வரலாற்றாசிரியர் ஈ.எச்.கார். ஓர்வெல் தனது பட்டியலை செலியா கிர்வானுக்கு அனுப்பியதும் அவர் உளவுத்துறையில் பணியமர்த்தப்பட்டார். இவரது பிரிவில் ஸ்டாலினிச பயங்கரவாதம் குறித்து கட்டுக் கதைகளை அவிழ்த்துவிட்ட நன்கு அறியப்பட்ட வரலாற்றாசிரியர் ராபர்ட் கான்குவெஸ்ட்டை பணியில் இருந்தார். அவர் ஒரு கட்டத்தில் செலியா கிர்வானுடன் அலுவலகத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர் செலியா மீது அளவற்ற காதலில் இருந்தார். இந்தப் பின்னணியிலேயே 1984 நாவல் வெளியிடப்பட்டது. அதற்கு நிதியுதவி யார் அளித்தது என்பது இன்றுவரை மக்களுக்குச் சொல்லப்படவில்லை. ஆனால் ஆவணங்களும் குறிப்புகளும் தவிர்க்கவியலாமல் பிரித்தானிய உளவுத்துறையைச் சுட்டுகின்றன. (பார்க்க: Orwell’s List, Timothy Garton Ash, New York Review of Books, September 25, 2003).

‘புனிதர்கள் நிரபராதி என்று நிரூபிக்கப்படும் வரை புனிதர்கள் எப்பொழுதும் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட வேண்டும்’ (‘Saints should always be judged guilty until they are proved innocent’) என்று ஓர்வெல் காந்தியைப் பற்றி செலியாவுக்குப் பட்டியலை அனுப்புவதற்கு சில மாதங்களுக்கு முன்பு எழுதினார். இது இப்போது ஆங்கில அரசியல் எழுத்தின் அரசன் என்று புகழப்படுகின்ற ‘புனிதர்’ ஜோர்ஜ் ஓர்வெல்லுக்கும் பொருந்தும். உண்மை என்னவெனில் சாத்தியமான அனைத்து கோப்புகளும் வெளியிடப்பட்டாலும், ஒரு புத்திசாலித்தனமான வரலாற்றாசிரியர் கிடைக்கக்கூடிய அனைத்து ஆதாரங்களையும் எடைபோட்டாலும், அவரை ‘நிரபராதி’ என்று இறுதியாக ஒருபோதும் நிரூபிக்க முடியாது.

## நிறைவுக் குறிப்புகள்:

அறிவுத்துறை அயோக்கியத்தனங்கள் ஏராளம் உண்டு. மார்க்சிய அறிஞராக அறியப்பட்ட ஹேபேர்ட் மார்குஸ் (Herbert Marcuse) சுமார் ஒன்பது ஆண்டுகள் (1942-51) அமெரிக்க உளவுத்துறையில் பணிபுரிந்தவர். மார்குஸ் முதலில் போர் தகவல் அலுவலகத்திற்கும், பின்னர் இரகசிய சேவைகள் அலுவலகத்திற்கும் (சி.ஐ.ஏ-யின் உடனடி முன்னோடி), இறுதியாக அமெரிக்க வெளியுறவுத்துறையின் கிழக்கு ஐரோப்பியப் பிரிவிற்கும் பணியாற்றினார், கடைசியாக கிழக்கு ஐரோப்பியப் பிரிவின் செயல் தலைவராகவும் ஆனார். பின்னர் மார்குஸ் கொலம்பியா மற்றும் ஹார்வர்டில் தொடர்ச்சியான ஆராய்ச்சி மற்றும் கற்பித்தல் பதவிகளைப் பெற்றார். சோவியத் மார்க்சியத்தின் ஆய்வில் தன்னை முதன்மையானவராகக் காட்டிக் கொண்டு சோவியத் எதிர்ப்பையும் ஸ்டாலினிச வசைபாடலையும் இறுதிவரை தொடர்ந்தார். ஸ்டாலினை ஒரு சர்வாதிகாரி என்று குறிப்பிட்டோரில் இவரும் அடக்கம்.

1930-களில் இடதுசாரிக் கவிஞராக அமெரிக்காவில் அறியப்பட்டவர் ஸ்டீபன் ஸ்பெண்டர் (Stephen Spender). இவர் அரசியல் பண்பாட்டு இதழான என்கவுண்டர் என்ற பத்திரிடையை நடத்தினார். இது 1951 முதல் 1991 வரை வெளிவந்தது. இதற்கு அமெரிக்க உளவு நிறுவனமே நிதி வழங்கியது. இடதுசாரிப் பத்திரிகை என்ற போர்வையில் சோவியத் எதிர்ப்பை கனகச்சிதமாக தனது பத்திரிகையின் வழி மேற்கொண்டவர். 1967-ல் இப்பத்திரிகை நேரடியாக சி.ஐ.ஏ-யின் வழிகாட்டலில் நடத்தப்பட்டது என்ற உண்மை வெளிச்சத்துக்கு வந்தது. காலப்போக்கில் இதற்கு பிரித்தானிய உளவு அமைப்பும் நிதியளித்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மார்குஸ் போலவே ஸ்பெண்டரும் இடதுசாரி முகமூடியில் சோவியத்துக்கும் ஸ்டாலினுக்கும் எதிரான பிரச்சாரத்தை முன்னெடுத்தனர்.


அறிவுத்துறை அயோக்கியத்தனங்களின் வரிசை மிக நீளமானது. இந்தப் பின்புலத்தில் சோவியத் யூனியன் பற்றியும் ஸ்டாலின் பற்றியுமான கதையாடல்களின் உண்மைத் தன்மையை சிந்திக்க வேண்டியுள்ளது. மூல ஆவணங்கள் சொல்லுகிற செய்திகள் முக்கியமானவை. அவையே ஸ்டாலினை எடை போடப் பொருத்தமானவை. அறிவுத்துறை அயோக்கியத்தனத்தால் விளைந்த ஆய்வுகளால் சோவியத் கால வரலாற்றை மறு ஆய்வுக்கு உள்ளாக்கவியலாது என்பதையே ஸ்டாலின் குறித்து எழுதப்பட்ட நூல்கள் காட்டி நிற்கின்றன.



meenilankco@thaiveedu.com

# இலங்கை வர்த்தமானியில் மட்டக்களப்பு ஊர்கள் பற்றிய குறிப்புகள்

## ஆங்கிலத்தில் : சைமன் காசிச் செட்டி
## தமிழில் : சா. திருவேணிசங்கமம்



சைமன் காசிச் செட்டி என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கற்பிட்டியில் வாழ்ந்த ஓர் அறிஞர். அவர் பல முன்னோடி முயற்சிகளை செய்து புகழீட்டியவர். அவர் எழுதிய **Tamil Pulutach** (1859) என்னும் நூல் முதன் முதல் தமிழ்ப் புலவர்களைப் பற்றிய முதலாவது கணக்கெடுப்பு என்று போற்றப்படுகிறது. இலங்கையில் உள்ள மாவட்டங்கள், மாகாணங்கள், நகரங்கள், பட்டினங்கள், பிரதான கிராமங்கள், துறைமுகங்கள், ஆறுகள். வாவிகள் போன்ற இன்னோரன்ன பற்றிய விபரத் திரட்டை **Ceylon Gazeteer** என்ற தலைப்பில் 1834-இல் வெளியிட்டார். இவை இரண்டையும் இம்மொழிபெயர்ப்பாளர் மொழி பெயர்த்துள்ளார். இதில் மட்டக்களப்பு மற்றும் அதில் உள்ள முக்கிய மாவட்டங்கள், பெரிய ஊர்கள் என்பன பற்றி அவர் எழுதியவற்றை இங்கு திரட்டித் தருகிறோம். முப்பது நாற்பது மைலுக்கு அப்பால் உள்ள ஊரை ஒற்றைக் கால் சீமை என்று எண்ணிக் கொண்டிருந்த காலகட்டத்தில் இவ்வாறு அறிவு பூர்வமான விபரங்களை தரும் காசிச் செட்டியின் தேடலும் திறமையும் சிலாகிக்கத்தக்கது.

### அக்கறைப்பற்று:

மட்டக்களப்பு மாகாணத்தில் உள்ள ஓரு பிரதேசம். கிழக்கில் கடலையும் மேற்கில் நடுக்காட்டையும் தெற்கில் பாணமையையும் வடக்கில் சம்மாந்துறையையும் எல்லையாக கொண்டது. இப்பிரதேசத்தின் நீளம் 16 மைல்கள், அகலம் 4-7 மைல்கள். இதில் 14 கிராமங்கள் அடங்கியுள்ளன. மண் அமைப்பு களியும் சுண்ணாம்பும் கறுப்பு நிற மணலும் கலந்தது. மலைத் தொடர்களையும் பெரும் சமவெளிகளையும் இடையிடையே உப்பு, நன்னீர் வாவிகளையும் அழகிய வயல்களையும் கொண்டது. சுறுசுறுப்பும் அமைதியான சுபாவமும் கொண்ட மலபார்கள் இங்கே வாழ்கிறார்கள்.

### அறுகம்:

மட்டக்களப்புக்கு கிழக்கே 64-வது மைலில் அறுகம்குடா என்னும் வளைகுடாவில் அமைந்துள்ள அதே பெயரால் அழைக்கப்படும் கணிசமான சனத்தொகை கொண்ட கிராமம். வேட்டையாடுவதற்கு உகந்த வளமான காடு பக்கத்தில் உள்ளது. முற்காலத்தில் டச்சுக்காரர்கள் இதனைக் கைப்பற்றி பெரிய களிமண் கோட்டையைக் கட்டி இராணுவ கேந்திரமாக வைத்திருந்தனர். தற்போது அதனை நெல் சேகரித்து வைத்து பிற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யும் பண்டக சாலையாக பயன்படுத்தி வருகின்றனர்

### அறுகம் ஆறு:

பசறையிலிருந்து உற்பத்தியாகும் சிறிய ஆறு. பாணமை மாகாணத்தூடாக கிழக்கு நோக்கி ஓடி மேற்படி கிராமத்துக்கு தெற்கு பக்கமுள்ள கடலில் கலக்கிறது.

### மட்டக்களப்பு:

வடகிழக்கு கரையில் உள்ள பெரிய மாவட்டம். வடக்கில் வெருகல் கங்கையிலிருந்து தெற்கில் குமுக்கன் ஆறு வரையும் 150 மைல் நீண்டுள்ள கடற்கரைப் பிரதேசத்தை உள்ளடக்கியது. மட்டக்களப்பு என்னும் பெயர் சேறு என்னும் கருத்துடைய மட்டி, வாவி என்ற கருத்துடைய களப்பு ஆகிய இரு சிங்களச் சொற்கள் இணைந்ததால் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. இது 10 மாகாணங்களாக அதாவது மண்முனை, போரதீவு, எருவில், கரவாகு, சம்மான்துறை, நடுக்காடு, அக்கறைப்பற்று, பாணமை. ஏறாவூர், கோரளைப்பற்று என்று பிரிக்கப்பட்டுள்ளது. 1360 சதுர மைல் பரப்புக் கொண்ட இம்மாவட்டதில் 27574 பேர் வாழ்கின்றனர். அவர்களில் 8833 பேர் விவசாயத்திலும் 351 பேர் உற்பத்தி துறைகளிலும் 4927 பேர் வர்த்தகத் துறையிலும் ஈடுபட்டுள்ளனர்.

காலநிலை மனித வாழ்க்கைக்கு சாதகமானது. வெப்பமான மாதங்கள் (நிழலில் வெப்பமானி சில வேளைகளில் 90 பாகை வரையும் போகும்) தவிர நாட்டின் மற்ற பகுதிகளை விட குளிர்ச்சியானது. ஏறாவூரிலிருந்து தெற்கை நோக்கி குமுக்கன் ஆறு வரையும் செல்லும் பிரதேசம் பெரும் காடுகள், பாறைகள், நன்னீர் மற்றும் உப்புநீர் வாவிகள், பயிர் செய்வதற்குகந்த சமவெளிகள் நிறைந்து காணப்படுகின்றது. ஆனால் நல்லூரிலிருந்து வெருகல் கங்கை வரையும் வடக்கு நோக்கி செல்லும் பிரதேசத்தில் விவசாயத்துக்குத-வாத மணல் சமவெளிகளும் காடுகளும் இடையிடையே குறுக்கறுக்கும் உப்பு நீர் களப்புகளும் உள்ளன. தெற்கு பக்க மண் சுண்ணாம்பும் களியும் கலந்து கறுப்பு நிறமாக இருக்க வடக்கு பக்கம் மணல் பாங்காகவும் இளகியதாகவும் காணப்படுகிறது. காடுகளில் நல்ல தரமான மரங்கள் கிடைக்கின்றன. அவற்றை தனிப்பட்ட வியாபாரிகள் அறுத்து சென்னைக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். நெல்லைத் தவிர தேங்காய், மாங்காய், பனங்காய் மற்றும் தீவினருக்கு தெரியாத பழவகைகளும் பல்வேறு வகை தானிய வகைகளும் இங்கே விளைகின்றன. இங்கே பெரும் எண்ணிக்கையில் மாடுகள், ஆடுகள், செம்மறியாடுகளோடு காடுகளில் பல்வகை மிருகங்களும் காணப்படுகின்றன. ஆறுகளிலும் வாவிகளிலும் பெருமளவு மீன்கள் பிடிபடுகின்றன.

இங்கு வாழ்பவர்களில் அதிகமானவர்கள் மலபார்கள். அவர்களில் கிறித்தவர்கள் குறைவு. 1801-ல் இந்த மாவட்டத்தின் ஊடாக பயணம் செய்த சேர்ஜன் ரீடர் ‘சுதேசிகளின் விருந்தோம்பல் சிறப்பையும் பராமரிப்பையும்’ பற்றி சிறப்பாக குறிப்பிட்டுள்ளார். ‘அமைதி, திருப்தி, வளம் என்பவை இங்கு வாழ்பவர்களிடம் காணப்படுகின்றன. அவர்கள் தங்கள் பிறந்த இடத்தைவிட்டு நகர வேண்டிய தேவையில்லை.’

வெஸ்லியன் மிஷனரி இந்த மாவட்டத்தில் நன்கு நிலையூன்றியுள்ளது. அவர்கள் சுதேச பிள்ளைகள் படிக்க ஆறு பாடசாலைகளை நடத்திவருகின்றனர்.

இந்த மாவட்டம் கண்டி அரசனுக்கும் டச்சுக்காரருக்குமிடையே பிரச்சினைக்குரியதாக இருந்து வந்தது. 1785-ல் இருந்து பின்னவர்கள் இதை தம்வசமாக்கி கொண்டனர். ஆயினும் மொத்த தீவும் 1795-ல் பிரித்தானியர் வசமானது. 1803-ல் கண்டியருக்கும் பிரித்தானியருக்கும் இடையே போர் மூண்ட போது பெருமளவு கண்டியர்கள் ஊடுருவி பொது மக்களோடு கலந்து பல்வேறு நிலைகளில் தம்மை பலப்படுத்திக் கொண்டனர். அதே ஆண்டு செப்ரெம்பர் 3-ல் அப்போதைய வருமான வரி முகாமையாளரான ஜோசப் ஸ்மித் வெற்றிகரமான நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு கிளர்ச்சியாளர்கள் எட்டுப் பேரைக் கொன்று ஏனையவர்களை விரட்டியடித்தார். ஆயினும் கண்டியர்கள் இரண்டு மாதங்கள் வரையும் தமது பிடியை தளரவிட வில்லை.

## மட்டக்களப்பு:

மேற்சொன்ன மாவட்டத்தில் ஆட்சியர் அலுவலகம், பிரதான நீதிமன்றம் ஆகியவை உள்ள பிரதான நகரம். சுதேசிகளால் புளியந் தீவு என்று அழைக்கப்படும் இது மூன்றரை மைல் சுற்றளவுடைய தீவாகும். வாவி அல்லது கடலின் நீட்சி நாய்ப்பட்டிமுனை வரையும் நீண்டுள்ளது. நாட்டுப் படகுகள் அதில் போய் வருகின்றன. மட்டக்களப்பில் முருங்கைக் கற்களால் கட்டப்பட்ட ஒரு சிறிய சதுர வடிவ கோட்டையுள்ளது. அங்கே படைவீடு, ஆயுதக்கிடங்கு, கொமாண்டர் வதியுமிடம், பண்டகசாலை என்பன உள்ளன. ஒரு சில நூறு யார் தூரத்தில் தென்னை மரங்களால் மறைந்து கிராமம் ஒன்று உள்ளது. வீடுகளும் வீதிகளும் ஒழுங்கானவையாக உள்ளன. அவற்றில் சுதேசிகளும் டச்சுப்பறங்கிகளும் வாழ்கின்றனர். இங்கே புரட்டஸ்தாந்தியருக்கான சேர்ச் ஒன்றும் ரோமிஸ் சேர்ச் இரண்டும் அஞ்ஞானியருக்கும் முகமதியருக்குமான வணக்கத் தலங்களும் காணப்படுகின்றன.

இங்கே 1602 மே 20-ம் திகதி டச்சு அட்மிரல் ஸ்பில்பேஜென் வந்திறங்கிய போது உள்ளூர் தலைவன் அவனுக்கு நல்ல வரவேற்பளித்தான். அட்மிரலின் மதிநுட்பமும் விவேகமும் இந்த நாட்டில் ஓர் அரசியல் உறவுக்கு பலமான அத்திவாரமிட்டன. இந்த வகையில் இலங்கை வரலாற்றில் நினைவுகூரத்தக்கதாக இந்நகரம் உள்ளது. 1622-ல் போர்த்துக்கீசர் இந்தப் பகுதியின் கரையோரங்களைப் பாதுகாப்பதற்காக ஒரு கோட்டையை இங்கே கட்டியிருந்தனர். ஆயினும் டச்சுக்காரர் அதனை முற்றுகையிட்டு 1633-ல் கைப்பற்றி தமதாக்கி கொண்டனர்.

## மண்முனை:

மட்டக்களப்பில் உள்ள நகரத்துக்கும் தீவுக்கும் ஒரே பெயர் கொண்ட மாகாணம். கடல் உட்குழிந்து குறிப்பிட்ட அளவு தூரத்துக்கு செல்வதால் மாகாணத்தின் பல்வேறு இடங்களுக்கான போக்குவரத்து சாத்தியமாகி உள்ளது. மண் மணல் பாங்கானது. தென்னையும் பனையும் வளர்கின்றன. இங்குள்ள கிராமங்களின் தொகை 38 ஆகும். தொழில் முனைப்புடைய கணிசமான மக்கள் வாழ்கிறார்கள்.

## முதலைக்குடா:

மண்முனைப்பற்றில் உள்ள குறிப்பிடத்தக்க கிராமம். மட்டக்களப்புக்கு தென் கிழக்கில் வாவிக்குள் நீட்டிக் கொண்டிருக்கும் முனையில் அமைந்துள்ளது. இங்கு 200 பேர் வரையில் வாழ்கிறார்கள். அவர்கள் அனைவரும் முக்குவர்கள். அவர்களின் பிரதான தொழில் விவசாயமாகும். துணைத் தொழிலாக மீன் பிடியையும் மேற்கொள்வர்.

## எருவில்:

அதே பெயர் கொண்ட மாகாணத்தில் அமைந்திருக்கும் கிராமம். மட்டக்களப்பு வாவியின் கிழக்கு கரையில் இருக்கும். இக்கிராமத்தில் வீடுகள் மண்ணாலானவை. கூரை ஓலைக-ளால் மேயப்பட்டவை. கண்ணகிக்கு ஒரு கோயில் எளிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இவ்விடம் சற்று கவனத்திற்கு உரியதாகி உள்ளது.



## ஏறாவூர்:
மட்டக்களப்பில் இருந்து திருகோணமலைக்கு செல்லும் பிர தான வீதியில் முன்னதில் இருந்து வடமேற்கு திசையில் 9-வது மைலில் அமைந்திருக்கும் கிராமம். இதனை உள்ள டக்கிய மாகாணமும் அதே பெயரால் அழைக்கப்படுகிறது. இங்கே நல்ல வாடிவீடு ஒன்றுண்டு. இந்து புராணத்தில் சொல்லப்படும் முக்கிய தெய்வங்களில் ஒன்றான வீரபத்திர ருக்கு இங்கு ஒரு கோயில் எழுப்பப்பட்டுள்ளது. சிறிய அள வில் பருத்தி உற்பத்தியும் இங்கே நடைபெறுகிறது. இங்கு வாழ்பவர்கள் மலபாரும் மூர்களுமாவர். நிலம் மணல் பாங் கானது. வளம் குறைந்தது. நீர் தேவையான அளவு கிடைக் கிறது.

## கரவாகு:
மட்டக்களப்பில் உள்ள ஒரு மாகாணம். மண்முனைக்கு அடுத்துள்ள தென்கிழக்கு கரை ஓரத்தில் உள்ள வளமும் சனச் செறிவும் மிகுந்த மாவட்டம். இங்கு நெல்லும் புகையி லையும் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற் றோடு தென்னை, பனை, கரும்பு, வாழை என்பனவும் நல்ல பலன் தருகின்றன. இங்கு கணிசமான குயவர்களும், நெசவா ளர்களும், துணிக்கு சாயமிடுபவர்களும் வாழ்கிறார்கள். விஸ்த்தாரமான புல்வெளிகள் உள்ளதால் பெருமளவு மந்தை கள் இங்கு மேய்கின்றன.

## கதிரவெளி:
வெருகல் கங்கையில் இருந்து கிளை பிரிந்து செல்லும் அருவி ஓரத்தில் உள்ள இக் கிராமத்தில் வாழ்பவர்கள் தமி ழர்கள். மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை செல்லும் வீதியில் வடமேற்கில் 48 மைல் தொலைவில் அமைந்துள்ள இக் கிராமத்தவர்கள் கால்நடைகளை அதிகம் வளர்க்கிறார் கள். புன்னை விதைகளிலிருந்து பெருமளவு எண்ணெயை பிழிந்து எடுக்கிறார்கள்.

## கொக்கட்டிசோலை:
மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை மாகாணத்தில் முத லைக் குடாவுக்கு மேற்கே சில மைல் தூரத்தில் உள்ள கிரா மம். இங்கே கல்லினால் கட்டப்பட்ட மிகவும் பழைமையான கந்தனுக்கு உரிய கோயில் ஒன்று உள்ளது. ஆயினும் இதன் கூரை வைக்கோலால் மேயப்பட்டு சுற்றிவர களிமண் ணால் தாழ்ந்த மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. ஒகஸ்டில் நடக்கும் வருடாந்த திருவிழாவில் சுவாமி விக்கிரகம் அழகிய தேரில் வைத்து இழுத்து செல்லப்படும். அப்போது இதற் கென்று அமைந்த நடனமாதர் ஆடிச் செல்வர்.

## கோரளைப்பற்று:
வட்டர்லு விரிகுடா கரையோரமாக மட்டக்களப்புக்கு வடக்கே அமைந்துள்ள ஒரு மாகாணம். இதன் வடக்கெல்லையான வெருகல் கங்கை திருகோணமலை மாவட்டத்தையும் மட்டக் களப்பு மாவட்டத்தையும் பிரிக்கிறது. இங்கே எட்டுக் கிரா மங்கள் அமைந்துள்ளனவாயினும் அவை மட்டக்களப்பு தெற்கு கிராமங்கள் போல சனச்செறிவு கொண்டவை யில்லை. இந்த பிரதேசத்தில் வேடர்களும் வாழ்கின்றனர், அவர்களின் வாழ்வாதாரம் கிழங்குகள், மான் இறைச்சி, தேன், மீன் என்பவற்றில் தங்கி உள்ளது. இவர்கள் தமிழ், சிங்களம் பேசினாலும் அவற்றின் தொனி காட்டுத் தனமாக அமைந்துள்ளது என்று சொல்லப்படுகிறது.

## பம்பிமேடு(வம்மிமேடு):
மட்டக்களப்புக்கு தென்கிழக்கே தங்காலைக்கு போகும் வீதியில் 25-வது மைலில் உள்ள ஒரு கிராமம். தனக்காரர் என்றொரு வகுப்பினர் இங்கு வாழ்கின்றனர். அவர்களின்

பிரதான தொழில் புகையிலைச் செய்கையாகும்.

### பணிச்சங்கேணி:

மட்டக்களப்பில் இருந்து திருகோணமலை செல்லும் பாதையில் முன்னதிலிருந்து 39 மைலில் உள்ள ஒரே பெயர் கொண்ட ஆறும் கிராமமும் ஆகும். வேடர்கள் வாழும் இக்கிராமம் காட்டால் சூழப்பட்டுள்ளது. இதன் பக்கத்தில் நடக்கும் உப்பு உற்பத்தியால் கவனத்திற்கு உரியதாகிறது.

### பளுகாமம்:

போரதீவுபற்றில் உள்ள ஒரு கிராமம். மட்டக்களப்பில் இருந்து வடமேற்கு திசையில் உள்ளது. இக் கிராமத்தில் உள்ள குறிப்பிடத்தக்க அம்சம் பாண்டவர்களுக்கு ஒரு கோயில் இருப்பதாகும். ஆண்டுதோறும் நடக்கும் பிரதான திருவிழாவுக்கு பெருந்தொகை மக்கள் இங்கே கூடுவார்கள். வெறும் காலுடன் எரியும் தணல் மேல் நடந்து சிலர் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றுவர்.

### நாதன்னை:

போரதீவு மாகாணத்தில் உள்ள ஒரு சிறிய கிராமம். முன்னாட்களில் வன்னியர்களின் வாழ்விடமாக இருந்தது. தற்போது அவர்களின் சந்ததியார் வாழ்கின்றனர். பக்கத்தில் உள்ள காடுகளில் அதிகமாக காணப்படும் எருமைகளை இங்குள்ளவர்கள் பிடித்து பயன்படுத்துவர். இங்கே நாயமாருக்கு (இங்குள்ளவர்களின் பிரத்தியேக தெய்வம்) என்று தனிக் கோயில் உண்டு. இங்கே நடக்கும் வருடாந்த திருவிழாவில் எருமைகளை பிடித்து காணிக்கை செலுத்துவர்.

### நடுக்காடு:

மட்டக்களப்பில் உள்ள ஒரு மாகாணம். அக்கறைப்பற்றுக்கு தெற்கே உள்ள இம்மாகாணத்தில் 24 கிராமங்கள் இருப்பதாக சொல்லப்பட்டாலும் அவற்றில் அரைவாசியில் தான் மக்கள் வாழ்கின்றனர். நிலம் சம தரையானது. மழை காலத்தில் காட்டாறுகள் பிரவாகமெடுத்து பாயும். அப்போது அவற்றை கடப்பது கடினமானது.

### நாய்ப்பட்டிமுனை:

கணிசமான சனத்தொகை கொண்ட பெரிய கிராமம். மட்டக்களப்பிலிருந்து தென் கிழக்காக தொடரும் வாவியின் ஓரமாக 17-வது மைலில் உள்ளது. இங்கே ஒரு பெரிய நெற் களஞ்சியசாலை உண்டு.

### போரதீவு:

மட்டக்களப்பின் தென் மேற்கு பக்கத்தில் உள்ள ஒரு மாகாணம். நெல் வயல்களாலும் காடாலும் சூழப்பட்ட நான்கு கிராமங்களை உள்ளடக்கியது. காட்டில் தரமான மரவகைகள் காணப்படுகின்றன.

போரதீவு, மேற்குறிப்பிட்ட மாகாணத்தில் உள்ள முக்கிய கிராமம். மட்டக்களப்புக்கு தெற்கே 10 மைல் தூரத்தில் உள்ளது. இங்கே கந்தனுக்கு கல்லால் கட்டப்பட்ட ஒரு பெரிய கோயில் உள்ளது. கோயிலை சுற்றி மதில் கட்டப்பட்டுள்ளது. இக்கிராமத்தில் பெரும்பான்மையினர் முக்குவர். பக்கத்து இடங்களில் பொன், வெள்ளி கைவினைக் கலைஞர்கள் கணிசமாக வாழ்கின்றனர்.

### வெருகல்:

மஹாவெலி கங்கை குறிஞ்சாமுனை என்ற இடத்தில் கிளை பிரிந்து ஓடி திருகோணமலையில் இருந்து தெற்கு பக்கமாக 25 மைலில் கடலில் விழுகிறது. இது மட்டக்களப்பில் இருந்து திருகோணமலையை பிரிக்கிறது. இதை வெருகல் கங்கை என்று மலபார் அழைப்பர். அதன் கழிமுகத்தில் அதே கங்கையின் பெயரில் ஒரு கிராமம் உண்டு. அங்கே வயல்வெளிக்கு பக்கத்தில் ஒரு பெரிய கோயில் உள்ளது.

### பாணமை:

மட்டக்களப்பின் தென்கிழக்கு அந்தத்தில் உள்ள ஒரு மாகாணம். அது மட்டக்களப்பின் மற்ற மாகாணங்களைவிட சனத்தொகை அளவிலும் பரப்பிலும் குறைந்தது. இம்மாகாணத்தில் 14 கிராமங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக சிதறி காணப்படுகின்றன. (அவற்றில் அதிகமானவற்றை கிராமங்கள் என்று அழைக்க முடியாது). அக்கிராமங்களின் மொத்த சனத்தொகை 700-ஐ தாண்டாது. மற்ற மாகாணங்களை விட சற்று வித்தியாசமான அம்சங்களை இம்மாகாணம் கொண்டுள்ளது. இங்கு மேலேழுந்து தெரியும் பாறைகளும் குன்றுகளும் சமதரையின் தொடர்ச்சியை தடை செய்கின்றன.

### திருக்கோவில்:

அறுகம்மிலிருந்து 23 மைல் தொலைவில் மணல் பரந்த கடற்கரையில் அமைந்துள்ள ஒரு கிராமம். இதன் நிலப்பக்கத்தில் அடர்ந்த காடு உள்ளது. இங்கே போர்க் கடவுளான கந்தனுக்கு ஒரு புராதன இந்து கோயில் உள்ளது.

### சம்மாந்துறை:

மட்டக்களப்பின் தெற்கு பக்கத்தில் உள்ள ஒரு மாகாணம். அங்குள்ள எல்லா மாகாணங்களிலும் சிறியது இதுவாகும். ஒன்பது கிராமங்கள் இங்கு உள்ளன. அவற்றில் மாகாணத்தின் பெயர் கொண்ட கிராமத்தில் 1814 கணக்கெடுப்பு படி 896 பேர் வாழ்ந்தனர். மீதிக் கிராமங்களில் வாழ்பவர்களின் தொகை 618 ஆகும்.

### உகந்த மலை:

ஹம்பாந்தோட்டையில் இருந்து மட்டக்களப்பு செல்லும் பாதையில் குமுக்கனிலிருந்து 12½ மைல் தொலைவில் இருக்கும் ஒரு பெரிய பாறை. இதில் பல நல்ல தண்ணீர்க் குளங்கள் உள்ளன. இந்தப் பிரதேசத்தில் வாழும் மலபார்கள் இந்த இடத்திற்கு சிவன் தனது துணைவியார் பார்வதி சகிதம் வந்ததால் இவை புனிதமானவை என்று கருதுகிறார்கள்.



thiruvenysangamam@thaiveedu.com



## வட இலங்கையில்
# ஆரியச் சக்கரவர்த்திகள் அமைத்த அரசு
# நான்கு நூற்றாண்டு அரசியல் வரலாறு

### பேராசிரியர் அரசரத்தினம் எழுதிய நூலை ஆதாரமாகக் கொண்ட அறிமுகக் குறிப்புகள்

— கந்தையா சண்முகலிங்கம்

பேராசிரியர் சின்னப்பா அரசரத்தினம் 1964-ம் ஆண்டில் 'Ceylon' என்னும் தலைப்பில் ஆங்கில நூல் ஒன்றை எழுதி வெளியிட்டார். 'வரலாற்று நோக்கில் புதிய தேசங்கள்' (Modern Nations in Historical Perspective) என்ற தொடரில் பிரின்டிஸ் ஹோல் (Prentice Hall) என்ற புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் வெளியீடாக அமைந்த நூல் வரிசையில் பிரசுரமான இந்நூலில் 5 அத்தியாயங்கள் உள்ளன. இவற்றுள் அத்தியாயம் 3 'The Tamils of Ceylon' என்னும் தலைப்பில் அமைந்துள்ளது (பக். 98-116). இம் மூன்றாம் அத்தியாயத்தில் பக்கம் 102 முதல் 108 வரையான 6 பக்கங்களில் வட இலங்கையின் ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசின் தோற்றம் முதல் 1620-ல் போத்துக்கேயரால் அவ்வரசின் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்படுதல் வரையான அரசியல் வரலாற்றை அரசரத்தினம் அவர்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் வரலாற்று உண்மைகளைத் திரிபுபடுத்தாமல் எடுத்துக் கூறுகிறார். இக்கட்டுரை ஆரியச் சக்கரவர்த்திகளின் தமிழ் அரசின் நான்கு நூற்றாண்டு வரலாற்றை தமிழ் வாசகர்களுக்கு அரசரத்தினத்தின் 'Ceylon' நூல் வழி அறிமுகம் செய்வதை நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்டது. நூலின் 3-ம் அத்தியாயத்தின் 109 முதல் 116 வரையான பக்கங்கள் வட இலங்கை அரசின் ஆள்புலத்தினுள் வாழ்ந்த தமிழர்களது சமூக, பண்பாட்டு வரலாற்றைக் கூறுவதாக அமைந்துள்ளது. இவ்வரலாற்றையும் பிறிதொரு கட்டுரையில் அறிமுகம் செய்வதற்கு எண்ணியுள்ளோம்.

## வடக்கிலே ஒரு தமிழ் இராச்சியம்:

16-ம் நூற்றாண்டின் பின்னர் வடக்கின் தமிழ் இராச்சியத்தின் ஆள்புலப் பகுதிகள் ஐரோப்பிய காலனியவாதிகளின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. 1253-ல் தோன்றிய யாழ்ப்பாண இராச்சியம் ஏறக்குறைய 366 ஆண்டுகள் வட பகுதியில் நிலைபெற்று இருந்தது. 1253 முதல் 1619 வரையான இந்த நீண்ட காலத்தில் 17 ஆண்டுகள் மட்டும் இவ்விராச்சியத்திற்கு பின்னடைவு ஏற்பட்டது. (சப்புமால் குமாரயா என்னும் செண்பகப் பெருமாள் 1450-ல் இவ்வரசைக் கைப்பற்றி 1467 வரை ஆட்சி செய்தான்). இவ்வரசு ஒரு கட்டத்தில் இலங்கையின் தென்பகுதிகளின் சிங்கள அரசுகள் மீது படை எடுத்து அவற்றை வெற்றி கொண்டு, அவற்றிடம் திறை அறவிடும் அளவிற்குப் பலம் பொருந்தியதாக வளர்ச்சியுற்றிருந்தது. இலங்கையின் வெவ்வேறு ஆள்புலங்களில் தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டு ஒன்றோடொன்று போட்டியிட்டுக் கொண்டும், போரிட்டுக் கொண்டும் இருந்த அரசுகளில் யாழ்ப்பாண அரசும் ஒன்றாகத் திகழ்ந்தது. அதன் எல்லைகள் விரிந்தும் சுருங்கிக் கொண்டும், மாறிய வண்ணம் இருந்த போதும் பொதுவாக தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகள் இவ்வரசின் ஆள்புலத்தில் அடங்கியிருந்தன. அரசின் ஆட்சிப் பரப்பும், மொழி, சமயம், பண்பாடு என்பனவும் ஒருங்கிணையும் வரலாற்றுப் போக்கை, 1253-இற்குப் பிற்பட்ட காலத்தின் வடபகுதியின் அரசியல் வரலாறு வெளிப்படுத்துகிறது.


## ஆரியச் சக்கரவர்த்திகள்:

வடக்கே தமிழ் இராச்சியத்தை அமைந்தவர்கள் ஆரியச் சக்கரவர்த்தி என்ற பட்டப் பெயரால் அழைக்கப்பட்டனர். இவர்கள் தென்னிந்தியாவின் தென்முனையில் உள்ள இராமேஸ்வரம் என்ற இடத்தில் இருந்து வந்தவர்கள் என அறிய முடிகிறது. கலிங்க நாட்டின் ஒரு பகுதியில் இருந்து வந்த இவர்கள் கங்க வம்சத்தினர் எனவும், இராமேஸ்வரத்தின் பிராமணர்களுடன் திருமண உறவு ஏற்படுத்திக் கொண்டு இராமேஸ்வரம் பகுதியில் வாழ்ந்து வந்தார்களென்றும் கூறப்படுகிறது. உயர் சாதி அந்தஸ்துடையவர்கள் என்று கருதப்பட்ட பிராமணர்களுடன் கலப்புற்றதன் அடையாளமாக 'ஆரிய' என்ற அடைமொழியை தம் பட்டப் பெயருடன் இவர்கள் சேர்த்துக் கொண்டனர். யாழ்ப்பாணத்தின் முதலாவது ஆரியச் சக்கரவர்த்தி யார் என்பதை உறுதியாகக் கூறமுடியவில்லை. மாகன் பொலன்நறுவவில் ஆட்சி செய்து கொண்டிருந்த வேளை ஐயபாகு என்பவன் யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்தான் என்று கூறப்படுகிறது. இவனே இந்த வம்ச ஆட்சியைத் தொடக்கி வைத்தவன் என்று கருதலாம். ஐயபாகு, மாகனின் உறவினனாக இருக்கலாம். மாகனும் கங்க வம்சத்தில் தோன்றிய ஒருவனே. வட பகுதியில் தோன்றிய அரசு 'யாழ்ப்பாண அரசு' எனப் பெயர் பெற்றது. இதற்கு அவ்வரசு யாழ்ப்பாணக் குடாநாட்டை மையப்பகுதியாகக் கொண்டிருந்ததே காரணமாகும்.

வடக்கே தமிழ் அரசு தோன்றிய பின்னரான அரை நூற்றாண்டு காலம் தம்பதெனியாவின் சிங்கள அரசு பலமற்றதாக இருந்தது. இது யாழ்ப்பாண அரசு தன்னைப் பலப்படுத்திக் கொள்ள உதவியது. சிங்கள அரசுகளிடையே உட்பகையும், சச்சரவுகளும் நீடித்தபடியால் போர்கள் இடம் பெற்றன. இதனால் ரஜரட்டவில் அழிவு ஏற்பட்டது, வடக்கே உள்ள தமிழர் இராச்சியப் பகுதிக்கும் தென்னிலங்கை அரசு

களின் பகுதிகளுக்கும் இடையே காடுகள் சூழ்ந்த வனப் பிரதேசம் உருவானது. இவ் வனப்பகுதி தமிழ் இராச்சியத்தை தனிமைப்படுத்தி, அது சுதந்திரமாக இயங்க உதவும் தடைச் சுவராக அமைந்தது.

சிங்கள அரசுகள் மீது பாண்டிய மன்னர்களின் படையெடுப்புகள் நிகழ்ந்தன. இவற்றால் ஏற்பட்ட அழிவுகள் சிங்கள அரசுகளை மேலும் பலவீனப்படுத்தின. அவ்வரசுகளின் பலவீனத்தை வாய்ப்பாகப் பயன்படுத்திய வடபகுதியின் தமிழ்




அரசு தென்பகுதிக்குப் படைகளை அனுப்பிப் போரிடுவதிலும் தனது எல்லைகளை விஸ்தரிப்பதிலும் ஈடுபட்டது. 13-ம் நூற்றாண்டின் இறுதியில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த ஆரிய சக்கரவர்த்தி சிங்கள மன்னனைப் போரில் தோற்கடித்து, கடற்கரைப் பகுதிகள் சிலவற்றையும் முத்துக்குளிப்புத் துறைகளையும் கைப்பற்றினான். சிங்கள அரசன் வடபகுதி அரசுக்கு திறை செலுத்துபவனாக ஆகும் அளவுக்கு வடபகுதி தமிழ் இராச்சியத்தின் பலம் மேலோங்கிக் காணப்பட்டது. இக்காலத்தில் இருந்து தமிழ் அரசுக்கும் சிங்கள அரசுக்கும் இடையே தொடர்ச்சியாகப் போர்கள் பல இடம் பெற்றன. வெற்றியும், தோல்வியும் மாறி மாறி இருபக்கங்களிற்கும் ஏற்பட்ட வண்ணம் இருந்தன. தமிழ் இராச்சியத்தின் அதிகாரம் உச்சத்தில் இருந்த வேளையில், இபின் பட்டுடா என்னும் புகழ்பெற்ற அராபியப் பயணி தமிழ் மன்னனின் தலை நகருக்கு வருகை தந்து மன்னனைச் சந்தித்தார். அவரது குறிப்பில் இருந்து தமிழ் அரசன் புத்தளம் வரையான கடற்கரைப் பகுதியைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தான் என்பதையும் முத்துக்குளித்துறைகள் அவ்வரசனது கட்டுப்பாட்டில் இருந்தன என்பதையும் அறிகிறோம். 14-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வடபகுதியின் ஆரியச் சக்கரவர்த்தி கம்பளையினைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த சிங்கள அரசன் மீது போர் தொடுத்து அவனை வெற்றி கொண்டான், சிங்கள இராச்சியத்தின் கீழ் இருந்த சில பகுதிகளில் இருந்து அவன் திறை அறவிட்டான். இக்காலத்தில் தமிழ் இராசச்சியத்தின் அதிகார பலம் உச்சம் பெற்றிருந்தது. இந்த விடயத்தை தமிழ், சிங்களம் ஆகிய இரு மரபு வரலாற்றுப் பனுவல்களும் உறுதி செய்கின்றன.

## ஆறாம் பராக்கிரமபாகு:

ஆறாம் பராக்கிரமபாகு என்ற மன்னன் ஆட்சியில் 15-ம் நூற்றாண்டில் கோட்டை இராச்சியம் பலம்பெற்ற அரசாக விளங்கியது. வடக்கே இருந்த ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசின் படைகள் கம்பளை, பாணந்துறை போன்ற இடங்கள் வரை ஊடுருவி சிங்கள அரசுகளுக்கு அச்சுறுத்தல் விடுத்தன. இப்பின்னணியில் அழகக்கோனார் என்ற சிங்களப் படைத் தலைவன், சிதறிக் கிடந்த சிங்களப் படைகளை ஒன்று திரட்டித் தமிழ் மன்னனின் படைகளை விரட்டியடித்துக் கோட்டை இராச்சியம் பலத்தோடு எழுச்சி பெற அடிகோலினான். ஆறாம் பராக்கிரமபாகுவின் வளர்ப்பு மகனும், சிறந்த படைத் தளபதியுமான சப்புமால் குமாரயா என்பவன் 1450-ல் வடக்கின் மீது படை எடுத்தான். சப்புமால் குமாரயா ஒரு சோழ அரச வம்சத்தவனின் புதல்வன் என்பதும் குறிப்பிடத்தக்கது. வன்னி மாவட்டங்களை முதலில் வெற்றி கொண்டு, தலைநகர் நல்லூரை சப்புமால் குமாரயா தாக்கி வெற்றி கொண்டான். அப்போது ஆரியச் சக்கரவர்த்தி இந்தியாவிற்குச் சென்று அங்குள்ள படைத் தலைவர்களின் உதவியைப் பெற்றுப் படை திரட்டி வந்து மீண்டும் ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசுரிமையை நிலைநாட்டினான். 17 ஆண்டுகள் காலம் யாழ்ப்பாணம் சிங்கள அரசின் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட சப்புமால் குமாரயாவால் (சண்பகப் பெருமாள்) ஆட்சி செய்யப்பட்டது. இடைப்பட்ட இந்தக் குறுகிய காலத்தின் பின் மீண்டும் எழுச்சியுற்ற தமிழ் இராச்சியம் அதன் பின்னரும் ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டு காலம் அமைதியாக நிலைபெற்று இருந்தது. ஆறாம் பராக்கிரமபாகு காலத்தில் எழுச்சி பெற்ற கோட்டை அரசு தளர்ச்சியுறத் தொடங்கியது. வடக்கே ஆட்சி செய்த தமிழ் மன்னர்களிற்கு சிங்கள அரசர்களால் அச்சுறுத்தல் ஆறாம் பராக்கிரமபாகு காலத்தின் பின்னர் தோன்றவில்லை. அமைதி நிலவிய இக்கால கட்டத்தில் வடக்கே ஆட்சி செய்த அரசுக்கும், தெற்கேயுள்ள சிங்கள அரசுகளுக்கும் இடையிலான எல்லைகள் அடிக்கடி மாற்றமடையாது உறுதி நிலையைப் பெற்றன. குறிப்பாக இந்த எல்லைகளின் இடையே வளர்ச்சியுற்ற அடர்ந்த காடு தடைச் சுவராக அமையலாயிற்று. போர் தொடுத்து எல்லையை விரிவாக்குவது பயனற்ற ஒரு முயற்சி என்ற நிலை தோன்றியது.

## விசய நகரப் பேரரசு:

வட இலங்கையில் ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சி செய்த காலத்தில் தென் இந்தியாவில் விசய நகர அரசு தோற்றம் பெற்றது குறிப்பிடத்தக்க ஒரு அரசியல் மாற்றமாகும். 1385-இல் இரண்டாம் ஹரிகரன் ஆட்சி செய்தபோது அவரது மகன் தெற்கு இந்தியாவிற்கு படையெடுத்து வந்து அப்பகுதிகளில் தன் அதிகாரத்தை விஸ்தரித்ததோடு இலங்கைக்கும் சென்று தமிழ் இராச்சியத்தை அடக்கினான். அதனைத்

திறை கொடுக்கும் கடப்பாடுடையதாகவும் ஆக்கினான். ஆயினும் அவனது ஆதிக்கம் எவ்வளவு காலம் தென்னிந்தியாவில் நீடித்தது என்பதை உறுதியாகக் கூற முடியாது. தென்னிந்தியக் கல்வெட்டுகளில் இலங்கை விசய நகர அரசின் செல்வாக்குக்கு உட்பட்ட பகுதியாக இருந்தமையை உறுதிப்படுத்தும் சான்றுகள் உள்ளன. இரண்டாம் தேவராஜ என்ற விசய நகர மன்னன் காலத்தில் 1438-ல் இலங்கை மீது படையெடுப்பு நிகழ்ந்தது. அக்காலத்தில் வடக்கேயிருந்த தமிழ் அரசு மீது விசய நகர அரசு மேலாதிக்கம் கொண்டிருந்தது எனலாம். இதனால் தான் சப்புமால் குமாரயவின் படையெடுப்பின் போது இந்தியாவில் அடைக்கலம் புகுந்த தமிழ் அரசன் படை திரட்டி மீண்டுவந்து ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது என ஊகிக்கலாம். 16-ம் நூற்றாண்டில் விசய நகரப் பேரரசு பலமிழந்து சென்ற பின்னணியில் யாழ்ப்பாண அரசுடன் அதற்கு இருந்த தொடர்புகளும் அற்றுப்போயின.

## ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிமுறை:

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிமுறை தென்இந்தியாவின் திராவிட அரசுகளின் மாதிரியில் அமைந்திருந்தது. அரசர்கள் தமது பெயர்களை பரராஜசேகரன் அல்லது செகராஜசேகரன் என்று முடிசூட்டும் போது மாற்றிக்கொண்டனர். அரச ஆவணங்களில் 'சேது' என்ற பெயர் பொறிக்கப்பட்டது. இது இராமேஸ்வரத்துடன் இருந்த தொடர்பை ஞாபகப்படுத்துவதாக இருந்தது. சிங்கை நகர் என்னும் அவர்களது தலைநகரம் யாழ்ப்பாணத்தின் நல்லூரையே குறித்தது என ஊகிக்க முடிகிறது. யாழ்ப்பாணத்தின் துறைமுகத்தை அடுத்த பகுதி நகரமாக வளர்ச்சியுற்ற பின் தலைநகராக யாழ்ப்பாணத் துறைமுகப்பகுதி அமைந்திருக்க வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாடு வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மன்னாருக்கும் திருகோணமலைக்கும் இடைப்பட்ட பரந்ததும், வளமுடையதுமான நிலப் பகுதியும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. கிராமத்தின் நிர்வாக அலுவல்களுக்குப் பொறுப்பாக கிராமத் தலைமைக்காரன் இருந்தார். பல கிராமத் தலைமைக்காரர்களைக் கொண்ட கிராமங்களின் பகுதியொன்றுக்கு அதிகார் (Adigar) என்னும் அதிகாரி பொறுப்பாக இருந்தார். ஒவ்வொரு சாதிக் குழுவினதும் அலுவல்களை அவ்வச் சாதித் தலைவர்கள் மேற்பார்வை செய்தனர். அரச வருவாயை அறவிடும் வேலைக்குப் பொறுப்பாகப் பண்டாரப்பிள்ளைகள் என்னும் உத்தியோகத்தர்கள் இருந்து வந்தனர். அவர்கள் ஊர்களுக்குச் சென்று வருவாயை மதிப்பிடுதல், அறவிடுதல் ஆகிய பணிகளைச் செய்தனர்.


## வர்த்தகம்:

வட இலங்கையின் அரசு 1253-ல் தோற்றம் பெற்ற காலம் முதல் நான்கு நூற்றாண்டு காலம் வர்த்தகத்தில் முன்னணியில் திகழ்ந்த அரசாக விளங்கியது. இலங்கையில் தமிழ் வணிகர்கள் 13-ம் நூற்றாண்டுக்கு முன்னரே செல்வாக்குடன் இருந்தனர். அவர்கள் வணிகக் கழகங்களை அமைத்து உள்ளூர் வர்த்தகத்தையும், இறக்குமதி ஏற்றுமதி வர்த்தகத்தையும் நடத்தி வந்தனர். யாழ்ப்பாண அரசு தமிழர்களின் இந்த வர்த்தகப் பாரம்பரியத்தை வாரிசாகப் பெற்றிருந்தது. ஊர்காவற்துறை (ஊறாத்துறை) கப்பல் கட்டுதல், கப்பல் பழுது பார்த்தல் ஆகிய வேலைகள் சிறப்புற நடைபெற்ற துறைமுகமாக விளங்கியது. பழைமை மிகுந்த துறைமுகமான மாதோட்டம் தமிழரசர் காலத்திலும் முக்கிய துறைமுகமாகச் செயற்பட்டது. இதன் அருகே இருந்த மன்னார் தீவும் இக்காலத்தில் முக்கியம் பெறலாயிற்று. கிழக்குக் கடற்கரையின் திருக்கோணமலை தமிழரசர் காலத்திலும் முக்கியம் பெற்றிருந்தது.

கிழக்குக் கடற்கரையின் முல்லைத்தீவு, திருகோணமலைக்கு வடக்கே முக்கியமான துறைமுகமாக இருந்தது. மன்னார்க் கடலின் முத்துக்குளிப்பு யாழ்ப்பாண அரசுக்குக் கிடைத்த முக்கியமான வளமாகும். இராமேஸ்வரத்தைச் சேர்ந்த சுழியோடிகள் முத்துக்குளிப்பில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர். காலப்போக்கில் இவர்கள் மன்னாரில் குடியேறி யாழ்ப்பாண அரசின் எல்லைப் பகுதிக்குள் நிரந்தரமாக வாழத் தொடங்கினர். வன்னிப் பகுதியின் யானைகளைப் பிடித்து இந்தியாவின் பல பகுதிகளிற்கு ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டு வர்த்தகர்கள் உயர் லாபத்தை ஈட்டினர். அரசுக்கும் யானை வர்த்தகத்தால் பெரும் வருவாய் கிட்டியது. யாழ்ப்பாண அரசு பலம் பொருந்திய கடற்படையைக் கொண்டிருந்தது. வட இலங்கையின் கடற்பரப்பு அவ்வரசின் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. யாழ்ப்பாண அரசர்கள் தென்னிந்தியாவுடனான உறவுகளைக் கடல் வர்த்தகம் மூலம் பேணி வந்தனர்.

தமிழரசின் கடலாதிக்கம், தென்பகுதி அரசுகள் மீது கடல்வழித் தாக்குதல்களை மேற்கொள்வதற்கு உதவியது. இலங்கையின் தென்பகுதியின் துறைமுகங்களில் தமிழ் வர்த்தகர்கள் தங்கியிருந்து வணிகம் செய்தனர். மத்திய கால இலங்கையில் தென்பகுதியின் துறைமுக நகரான காலி சிறப்புப் பெற்று விளங்கியது. அந்நகரில் தமிழ் வர்த்தகர்கள் பெரும் எண்ணிக்கையில் குடியேறி வாழ்ந்தனர். செங்கோ என்ற சீன படைத் தளபதி காலித்துறைமுகத்திற்கு வந்தபோது அங்கு சீனம், பாரசீகம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளில் ஒரு சாசனத்தை பொறித்துச் சென்றான். இது கடல் வர்த்தகத்தில் தமிழர் பெற்றிருந்த செல்வாக்குக்குச் சான்றாக அமைவதோடு, தென்னிலங்கையின் துறைமுக நகர்களில் தமிழ் வர்த்தகர்கள் செயற்பட்டனர் என்பதற்கும் சான்றாக அமைந்துள்ளது. மத்திய கால இலங்கையில் கொழும்புக்கும் நீர்கொழும்புக்கும் இடைப்பட்ட பகுதியில் செட்டிகள் சமூகம் குடியேறி வாழ்ந்து வந்தது. வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழர் செறிந்து வாழத்தொடங்கிய போதும், தென்னிலங்கையிலும் தமிழர்கள் அங்குமிங்குமாகச் சிதறியும் பரவியும் வாழ்ந்து வந்தனர்.

யாழ்ப்பாண அரசின் தோற்றம் வடஇலங்கையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். அரசு என்ற நிறுவனம் யாழ்ப்பாணத்தில் உருவாக்கம் பெற்ற பின்னர் அரசின் மீது விசுவாசம் கொண்ட குடிமக்கள் சமூகம் அங்கு உருவானது. சமூக, பண்பாட்டு நிறுவனங்கள் வளர்ச்சி பெற்றன. சனத்தொகை வளர்ச்சியும் விவசாய பொருளாதார வளர்ச்சியும் ஏற்பட்டன. யாழ்ப்பாணத்திற்கெனத் தனித்துவமான சட்டமுறை உருவானது. சொத்துடமை, கொடுக்கல் வாங்கல்கள், திருமணம் முதலிய கூறுகளை உள்ளடக்கிய குடிச்சட்டம் (Civil Law) உருவானது. இவ்வாறான சமூக, பண்பாட்டு வளர்ச்சிகளை பேராசிரியர் அடுத்து விளக்குகிறார். அவைபற்றிப் பிறிதொரு கட்டுரையில் எடுத்துக் கூறுவோம்.



shanmugalingam@thaiveedu.com

# கம்பனின் கருவூலம் திறந்து... 17

## மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

சென்ற இதழில் பாலகாண்டத்தின் 19-வது படலமாகிய உலாவியற் படலத்தில் மிதிலை நகரத்து வீதியிலே இராமன் உலாச் சென்றபோது நிகழ்ந்தவற்றை மிக அழகாகக் கம்பர் வடித்து வைத்திருந்த செய்யுள்கள் சிலவற்றிலிருந்து எடுத்து அவற்றிலுள்ள நயத்தை நுகர்ந்து மகிழ்ந்தோம். அடுத்து வருவது 20-வது படலமாகிய கோலங்காண் படலம். கோலங் காண் என்பது அலங்காரம் செய்தல். இராமன் சீதை இருவரி னதும் திருமணத்துக்கு முன்பாக நிகழும் திருமண நிச்சய தார்த்தம் எனப்படும் நிகழ்ச்சிக்காகச் சீதையை அலங்காரம் செய்து அரசவை மண்டபத்துக்கு அழைத்து வரப்படுகின்ற செய்திகளைக் கூறுவதால் இப்படலம் கோலங்காண் படலம் எனப்பெற்றது. அழகியற் படலமாகிய இதில் வரும் அழகான காட்சிகளையும் இனிமையான செய்திகளையும் 43 செய்யுள்க ளில் கம்பர் வடித்து வைத்துள்ளார். அவற்றுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து எல்லோரும் சுவைத்து மகிழ்வதற்காக இங்கே தருகின்றேன்.

சனக மகாராசனின் கட்டளையை ஏற்றுச் சீதையின் தோழி மார் சீதையை அலங்கரிக்கத் தொடங்குகின்றார்கள். இயல் பாகவே சீதை பேரழகு படைத்தவள். ஒப்பற்ற அழகுடைய பொருளை மேலும் அழகு செய்ய வேண்டுமா எனக் கேட்பது போல் ஒரு செய்யுள் வருகிறது.

*'அமிழிமைத் துணைகள் கண்ணுக் கணியென அமைக்கு மாப்போல்*
*உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்ப தோரார்*
*அமிழ்தினைச் சுவைசெய் தென்ன அழகினுக் கழகு செய்தார்*
*இமிழ்திரைப் பரவை ஞாலம் ஏழைமை உடைத்து மாதோ.'*

- கம்ப. பால. 1203

அழகான கண்களை மறைப்பதற்குக் காரணமாக உள்ள இமைகள் இரண்டும் அக்கண்களுக்கு மேலும் அழகை ஊட் டுவதாகவும் இயற்கையாக அமைக்கப்பட்டிருக்கின்றன. வீசு கின்ற ஒளியையுடைய அணிகலன்கள் சீதையின் அழகிய வடிவத்தை மறைக்குமே என்னும் எண்ணத்தைக் கொள்ளாத வர்களாக இயல்பாகவே மிகுந்த இன்சுவையையுடைய அமு தத்துடன் தேன், சர்க்கரை ஆகியவற்றைக் கலந்து மேலும் சுவையை ஊட்டுவதைப்போல, இயல்பாகவே பேரழகு கொண்ட சீதைக்கு அணிகலன்களால் அவளது தோழிகள் மேலும் அழகு செய்யத் தொடங்குகிறார்கள். ஒலிக்கின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த இவ்வுலகத்து மக்கள் இவ் வாறு அறியாமையில் இருக்கின்றார்களே என்று வியப்பது போல நயம்பட இச்செய்யுளைக் கம்பர் படைத்துள்ளார்.

இச்செய்யுளில் சிறந்த அணிநயம் காணப்படுகிறது. அழகிய கண்களை மறைப்பனவாக இருந்தாலும், இமைகள் அக்கண் களுக்கு அழகு செய்கின்றன எனக் கருதுவது போல, இயல் பாகவே பேரழகு கொண்ட சீதையின் அழகை அணிகலன் கள் மறைத்தாலும் அவளது உருவத்துக்கு மேலும் அழகு செய்யுமென்றே தோழிகள் எண்ணுவது அவர்களது அறியா மையே. இவ்வாறு அறியாமையிலுள்ள மக்களை இந்த உல கம் உடையதாக இருக்கிறதே என வருந்துவது போலக் கம்-பர் கருதுவது நயம் மிக்கதாகும். இயற்கை அழகோடு செயற்கை அழகையும் சேர்த்து அவளது தோழிகள் இவ் வாறு அழகுக்கு அழகு செய்தார்கள் என்பதைக் கூற 'அமிழ்தினைச் சுவைசெய் தென்ன அழகினுக்கு அழகு செய் தார்' என இனிய சுவையணி கொண்ட உவமையுடன் கூடிய சொற்றொடரைக் கம்பர் அமைத்திருப்பது மிகச் சிறப்பானது.

இவ்வாறு சீதையின் கூந்தலுக்கு மென்மையான பூக்களால் தொடுக்கப்பட்ட சிகழிகை என அழைக்கப்படும் மாலை, நெற்றிச் சுட்டி போன்ற அணிகலன்கள், காதிலே குழைகள் எனப் பல்வேறு ஆபரணங்களைச் சூட்டுகிறார்கள். சீதையின் கழுத்தில் அணிகலன் சூட்டப்படுவதைக் கம்பர் புதிய கருத் துப்படக் கூறுவதைப் பார்க்கலாம்.

*'கோளணி சங்கம் வந்து குடியிருந் தனைய கண்டத்து*
*ஈனமில் கலன்கள் தம்மில் இயைவன அணிதல் செய்தார்*
*மானணி நோக்கி னார்தம் மங்கலக் கழுத்துக் கெல்லாம்*
*தானணி யான போது தனக்கணி யாது மாதோ'*

- கம்ப. பால. 1207

திருமால் கையில் ஏந்தியுள்ள பாஞ்சன்யம் என்னும் சங்கா னது இங்கே வந்து குடியிருந்தாற் போன்றிருந்த சீதையின் கழுத்திலே குற்றமற்ற ஆபரணங்களிற் பொருந்துவனவற் றைத் தோழிகள் அணிவித்தார்கள். மான் போன்ற பார்வை யையுடைய உலகத்து மகளிர் எல்லோரது கழுத்துக்கும் மங் கல நாணாகத் திருமகளின் அவதாரமாகிய சீதை இருக்கும் போது அவளுடைய கழுத்துக்கு அணிகலன் வேறு எதுவும்

வேண்டியதோ என்கிறார் இச்செய்யுளில் கம்பர்.

சாதாரண சங்கை உவமையாகக் கூறாமல் திருமாலின் கையிலுள்ள சங்கை உவமையாக்கினார். இயற்கையாகவே அழகுமிக்க சீதையின் கழுத்துக்கு அழகைத் தரும் சிறப்பு டைய அணிகலன் உலகத்தில் எது இருக்கப்போகிறது? இல் லையாயினும் உலக வழக்கப்படி தோழிமார் பொருத்தமான அணிகலன்களைத் தேடி எடுத்து அணிவித்தார்கள் என்கி றார். இலக்குமியைக் குறிக்கும் திரு என்னும் அடைப்பெயரு டன் கூடிய தனது மங்கல நாணே உலக மகளிரின் கழுத் துக்கு அணியாகின்றபோது தனது கழுத்துக்கு வேறு அணி வேண்டுமோ எனக் கேட்பதைப்போல 'மானணி நோக்கினார் தம் மங்கலக் கழுத்துக்கெல்லாம் தான் அணியானபோது தனக்கு அணி யாது?' என நயம் மிக்க சொற்றொடர் அமைத்திருப்பது கம்பரின் கவித்திறனுக்கு எடுத்துக்காட்டாகும்.

தலை, கழுத்து, மார்பு, தோள், கைகள், இடை, கால்கள் எனச் சீதையின் ஒவ்வொரு உறுப்பிலும் அணிகலன்கள் அணிவித்ததையும், மேகலையையும், தாரகைச் செம்மையை யும் அணிவித்ததையும் ஒவ்வொரு செய்யுளாக அழகாக வரு ணிக்கின்றார் கம்பர். சங்க இலக்கியங்களில் கூறப்படுவது போன்று அக்காலப் பெண்களின் மார்பில் சந்தனம் முதலிய வாசனைக் குழம்புகளால் தொய்யில் எழுதுதல் என்னும் ஒப் பனை பற்றிய செய்யுள் ஒன்றும் இங்கே வருகிறது.

*'சில்லியல் ஓதி கொங்கைத் திரள்மணிக் கனகச் செப்பில்*
*வல்லியும் அனங்கன் வில்லும் மான்மதச் சாந்திற் தீட்டிப்*
*பல்லியல் நெறியிற் பார்க்கும் பரம்பொருள் என்ன யார்க்கும்*
*இல்லையுண் டென்ன நின்ற இடையினுக் கிடுக்கண் செய்தார்.'*

- கம்ப. பால. 1212

சில வகைகளாக வகுத்து அலங்கரிக்கப்பட்ட கூந்தலையு டைய சீதையின் தனங்களாகிய நீலமணி பதித்த பொன்மய மான இரண்டு செப்புக் கலசங்களிலே பூங்கொடியையும், மன்மதனது வில்லாகிய கரும்பையும் கஸ்தூரி சேர்ந்த சந்த னக் குழம்பினால் எழுதித் தொய்யில் என்னும் ஒப்பனை செய்தார்கள். உண்டென்றும் இல்லையென்றும் ஐயம் கொள் ளத்தக்கதாகப் பல்வகையான சமயங்களால் பார்க்கப்படு கின்ற கடவுளின் வடிவம் போல இருக்கும் அவளது இடைக்கு அத்தொய்யில் எழுதியதால் சுமையை ஏற்படுத் தித் துன்பத்தை விளைவித்தார்கள் என்பது இச்செய்யுள். பலர் தமது அநுமானத்தால் கடவுள் உண்டென்று கூறுவதும், சிலர் கடவுளின் வடிவம் எளிதில் கண்ணுக்குப் புலப்படாமை யால் இல்லையென்று கூறுவதைப் போன்றும், சீதையின் நுண்ணிய இடை கட்புலனுக்குப் படாமையால் இல்லை யென்றும், மார்பு அல்குல் ஆகியவைக்கிடையே இடை இருந்தாகவேண்டும் என்னும் அநுமானத்தில் உண்டு என்றும் சொல்லக்கூடியதாக அவளது நுண்ணிடை இருப்பதாகப் புதிய உவமை கூறப்பட்டுள்ளது சிறப்பாகும். சீதையின் நெற்றியில் திலகமிடுதலைக் கூறுவதாக அடுத்து வருகின்ற செய்யுளும் பொருள்நயமும் அணிநயமும் மிக்கது.

*'மொய்வளர் குவளை பூத்த முளரியின் முளைத்த முந்நாள்*
*மெய்வளர் மதியின் நாப்பண் மீனுண்டேல் அனைய தேய்ப்ப*
*வையக மடந்தை மார்க்கும் நாகர்கோ தையர்க்கும் வானத்*
*தெய்வமங் கையர்க்கும் எல்லாம் திலதத்தைத் திலதம் செய்தார்.'*

- கம்ப. பால. 1216

இரண்டு கண்களாகிய குவளை மலர்கள் நெருங்கிச் செழிப் பாய்க் காணப்படுகின்றன, பூத்திருக்கின்ற முகமாகிய செந் தாமரை மலரினிடத்தே நெற்றியாகிய மூன்றாம் பிறைமதி முளைத்திருக்கிறது, அதன் நடுவிலே நட்சத்திரமொன்று தோன்றியிருக்குமானால் அதனை ஒப்பதுபோல் நிலவுலகத் திலேயுள்ள மனிதப் பெண்களுக்கும், பாதாள உலகத்திலே யுள்ள நாக கன்னிகைகளுக்கும், விண்ணுலகத்திலேயுள்ள தேவமங்கைகளுக்கும் என்று மூவுலகிலுள்ள பெண்களுக் கெல்லாம் திலகம் போலிருக்கின்ற சீதைக்குத் திலகமிட்டு அலங்கரித்தார்கள் என்கிறார் கம்பர்.

கருங்குவளைக் கண்களுக்கும், செந்தாமரை முகத்துக்கும், மூன்றாம் பிறை நெற்றிக்கும் அதன் நடுவே ஒளி வீசிக் கொண்டிருக்கும் திலகம், நட்சத்திரத்துக்கும் ஒப்பாக உருவ கம் செய்து இச்செய்யுளைச் சிறந்த கற்பனையோடு கம்பர் அமைத்துள்ளார். மூவுலக மங்கையர்க்கெல்லாம் திலகமாக இருப்பவளுக்குத் திலகமிட்டார்கள் என்பதை 'மங்கையர்க் கெல்லாம் திலதத்தைத் திலதம் செய்தார்' என்னும் அழகான சொற்றொடர் வாயிலாக எடுத்துச் சொல்லியிருப்பது சிறப்பு.

இயற்கை அழகுடனே அணிகலன்களால் செயற்கையாகவும் அழகு செய்யப்பட்ட சீதையின் அழகைக் கண்டு அவளது தோழிமார்களே காமுற்று மயங்குவதாகக் கூறும் கம்பரின் செய்யுள் ஒன்று இவ்வாறு வருகிறது.

*'கஞ்சத்துக் களிக்கும் இன்தேன் கவர்ந்துணும் வண்டு போல*
*அஞ்சொற்கள் கிள்ளைக் கெல்லாம் அருளினாள் அழகை மாந்தித்*
*தஞ்சொற்கள் குழறித் தத்தம் தகைதடு மாறி நின்றார்*
*மஞ்சர்க்கும் மாதரார்க்கும் மனமென்ப தொன்றே யன்றோ.'*

- கம்ப. பால. 1219

அணிகலன்களாலும் அழகுசெய்யப்பட்ட சீதையைக் கண்ட மகளிரெல்லாம் தாமரை மலர்களிலிருந்து இனிமையான தேனைப் பருகிக் களிக்கும் வண்டுகளைப் போல, அழகிய சொற்களைக் கிளிகளுக்குப் பயிற்றுவிக்கும் சீதையினுடைய அழகைப் பருகி அதனால் ஏற்பட்ட மயக்கத்தினால், தத்தம் பேச்சுக்கள் குலைந்து, வாய் குழறிச் சொற்கள் தடுமாறித் தமது இயல்பான நாணம் முதலிய இயற்கைக் குணங்களும் தடுமாற்றமடைகின்ற நிலையை எய்தினார்கள். உலகத்தில் ஆடவர்க்கும், மகளிருக்கும் மனம் என்பது ஒரு தன்மையதே அல்லவா? என்பது செய்யுளின் பொருள்.

இயற்கை அழகுடன் செயற்கை அழகும் சேர்ந்து விஞ்சிய பேரழகு கொண்டிருந்த சீதையைக் கண்களாற் பருகிக் களித்த மகளிர் கூட அவள்மேல் காதல் மயக்கம் அடைந் தார்கள் என்பது நிகழக்கூடியதா என ஐயம் தோன்றலாம். அதனாலேயே ஆடவர்க்கும் மகளிர்க்கும் மனம் என்பது ஒரு தன்மையுடையதேயாகும் என்று கூறிக் கம்பர் ஐயம் நீக்கி யுள்ளார்.

இவ்வாறு அலங்கரிக்கப்பட்ட அழகுடனே தோழிமார் சூழ்ந்து வரச் சீதை மணிமண்டபத்தை நோக்கி நடந்து செல்கின்ற காட்சியைக் கம்பர் வருணனை செய்யும் செய்யுள்களில் ஒன்று:

*'பொன்னின்ஒளி பூவின்வெறி சாந்துபொதி சீதம்*
*மின்னின்நிழல் அன்னவள்தன் மேனியொளி மான*
*அன்னமும் அரம்பையரும் ஆரமிர்தும் நாண*
*மன்னவையி ருந்தமணி மண்டபம டைந்தாள்.'*

- கம்ப. பால. 1228

பொன்னில் இயற்கையாக உள்ள ஒளியும், பூவிலே இயற்கையாக உள்ள நறுமணமும், சந்தனத்திலே இயற்கையாகப் பொருந்தியுள்ள குளிர்ச்சியும் மின்னலில் இயற்கையாகவே தோன்றும் ஒளியும் என இவை எல்லாவற்றையுமே சீதையின் மேனியில் இயற்கையாக அமைந்த ஒளி தோற்றுப்போகச் செய்துவிட்டன. தமது நடையிலே தோற்றுப்போன அன்னப் பறவைகளும், தமது அழகிலே தோற்றுப்போன தேவ மாதர்களும், தனது இனிய சுவையிலே தோற்றுப்போன ஆரமுதமும் நாணமடையும் வண்ணம் அரசர்கள் வீற்றிருந்த மணிமண்டபத்தைச் சீதை வந்தடைந்தாள் என்பது கம்பர் கூற்று.

அவள் சூடியிருக்கின்ற பொன் அணிகளின் ஒளியையும், சூடியிருக்கின்ற பூக்களின் நறுமணத்தையும், பூசியுள்ள சந்தனத்தின் குளிர்ச்சியையும், மின்னல் ஒளியைப் போன்ற அவளின் மேனியெழில் தோற்றுப்போகச் செய்து விட்டன என்கிறார் கம்பர். இந்தச் செய்யுளிலே கம்பர் சிறந்த பொருள் நயத்தையும் ஒலிநயத்தையும் வைத்துள்ளார். ஆரணிய காண்டத்தில் சூர்ப்பனகை நடந்து வருகின்ற காட்சியை இதே போல வருணனை செய்கின்ற கம்பர் ஒரு நுணுக்கமான வேறுபாட்டை வெளிப்படுத்தியிருப்பார். இங்கே சீதையின் மேனியழகுக்கும் நடைக்கும் அவளோடு இணைந்திருந்த இயற்கையான பொருள்களை ஒப்பிட்டுச் சீதை நடந்து வந்தது இயற்கையாகவே அழகாக அமைந்து இருந்தது என்பதைக் காட்டியவர், அங்கே 'பஞ்சியொளிர், விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்க' எனத்தொடரும் செய்யுளில் சூர்ப்பனகை இயற்கையாக நடப்பதுபோல் செயற்கையாக நடந்தாள் எனப் புலப்படுத்தியிருப்பார். இனிமையான ஒரு காட்சியை மேலும் இனிமையாக்குவதற்காக தொல்காப்பியம் கூறும் மெல்லின எழுத்துகள் கொண்ட மெல்லின வண்ணம் என்னும் ஒலியோசையில் இருவரது நடையையும் வருணிக்கும் இரண்டு செய்யுள்களையும் அமைத்திருப்பது கம்பரின் கவித்திறனின் உச்சமெனலாம்.

இவ்வாறு மணிமண்டபத்தையடைந்த சீதையையும் அவள் அழகையும் அங்கிருந்த ஆடவரும் மகளிரும் கண்கொட்டாது கண்டு மகிழ்ந்திருக்க அவளைக் கண்ட இராமன்:

*'அன்னவளை அல்லளென வாமென வயிர்ப்பான்*
*கன்னியமிழ் தத்தையெதிர் கண்ட கடல் வண்ணன்*
*உன்னுயிர் நிலைப்பதோர் அருத்தியொ டுழைத்தாண்டு*
*இன்னமிழ் தெழக்களிகொள் இந்திரனை யொத்தான்.'*

- கம்ப. பால. 1230

தான் வில்லை முறித்ததனால் தனக்கு மனைவியாக வரப்போகின்றவள் தான் முன்னர் கன்னிமாடத்தில் கண்டு காதல் கொண்ட அந்தப் பெண்ணோ அல்லது வேறொருத்தியோ என்று ஐயம் கொண்டிருந்த கடல் வண்ணனாகிய இராமன், அமுதம் போன்ற அந்தப் பெண்ணையே இப்போது நேரில் கண்டபோது தனது உயிர் நிலைக்க வேண்டும் என்பதற்காக மிக வருந்தி உழைத்துப் பாற்கடலில் எழுந்த அமுதத்தைப் பெற்ற தேவேந்திரனைப் போலப் பெருமகிழ்ச்சி உற்றான் என்கிறார் கம்பர். கன்னியமுதம் எனச் சீதையை வருணித்தது கன்னியர் ஆகிய கடலிலே எழுந்த அமுதம் போன்றவள் என்னும் குறிப்பினாலாகும்.

மண்டபத்துள்ளே வந்த சீதை அங்கிருந்த பெரியோரை வணங்கித் தனது தந்தையாகிய சனகனின் அருகே அமர்ந்து கொள்கிறாள். சீதையைக் கண்டவுடன் இராமனுக்கிருந்த ஐயம் நீங்கியது. ஆனால் சீதைக்கோ, வில்லை ஒடித்த அவ்வீரன் தான் கன்னி மாடத்தில் நின்றபோது தன்கண் வழியே சென்று கலந்தவன் என்ற ஐயம் தீராத நிலையில்:

*'எய்யவில் வளைத்ததும் இறுத்ததும் உரைத்தும்*
*மெய்விளை விடத்துமுதல் ஐயம்விட லுற்றாள்*
*ஐயனை அகத்து வடிவேயல புறத்தும்*
*கைவளை திருத்துபு கடைக்கணில் உணர்ந்தாள்.'*

- கம்ப. பால. 1237

முன்னர் இராமன் இலக்குவனுடன் கௌசிக முனிவன் பின்னால் மிதிலை நகரத்து வீதியால் சென்றபோது அவன் வடிவழகைப் பார்த்து யாரென்று அறியாமலேயே அவனிடத்துக் காதல் கொண்ட சீதை, பின்னர் ஒரு இளவரசன் வில்லை வளைத்து முறித்தானென்ற செய்தியைக் கேட்டது முதல் அவ்வீரன்தான் கன்னி மாடத்தில் நின்றபோது கண்டவனாக இருக்கலாம் என்னும் ஊகத்தையும், அவனன்றி வேறுயாராகவும் இருக்கலாமோ என்னும் ஐயத்தையும் கொண்டிருந்தாள். அங்கு நாணத்தினால் தலை கவிழ்ந்து நிலத்தை நோக்கியிருந்தவள் தனது கைவளையல்களை ஒழுங்குபடுத்துவது போலச் சாடைசெய்து கடைக்கண் பார்வையை அவன்மீது செலுத்தினாள். கன்னிமாடத்தில் கண்டவனும் வில் முறித்தவனும் ஒருவனே என்பதைக் கண்டு தெளிந்து மகிழ்ச்சியில் உடல் பூரித்தாள். தொல்காப்பியத்தில் அகத்திணைக் குரிய மெய்ப்பாடுகளில் வேட்கை என்னும் இரண்டாம் அவத்தையில் காதலனை எதிர்ப்படும் காதலியின் செயல் 'கூழை விரித்தல், காதொன்று களைதல், ஊழணி தைவரல், உடை பெயர்த்து உடுத்தலென (தொல். மெய். 258) நிகழ்வதாகக் கூறப்படுவதை அடியொற்றிச் சீதை கைவளை திருத்துவது போலக் கடைக்கண்ணால் நோக்கமிட்டாள் எனக் கம்பர் இச் செய்யுளை இயற்றியிருக்கின்ற ஒப்புமை குறிப்பிடத்தக்கது.

அம்மண்டபத்தே பெற்றோர் பெரியோர் முன்னிலையில் இரமனுக்கும் சீதைக்கும் திருமணம் நிச்சயிக்கப் பெறுகிறது. கௌசிக முனிவன் நாளைய நாள் திருமணத்துக்குப் பொருந்திய நாளாக இருப்பதால் நாளைக்கே திருமண வைபவத்தை நிகழ்த்தலாம் என நாள் குறித்துக் கூறுகிறார் அனைவரும் மகிழ்ச்சி மேலிட்டவர்களாகத் தத்தம் இடங்களைச் சென்று சேர்கிறார்கள். அடுத்துவரும் கடிமணப் படலத்தில் நாமும் அவர்களுடன் மீண்டும் இணைந்து கொள்வோம்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com



# நெல் எது, களை எது?

**- நாஞ்சில் நாடன்**

இளைஞர் முதல் முதியோர் வரை, பால் பேதம் இன்றிப் பேசும் சமகாலத் தமிழின் பல சொற்கள் நமக்கு இன்று மயக்கம் தருவன. சங்க இலக்கிய, சமய இலக்கிய, கம்பன் முதலாய காப்பிய இலக்கிய, சிற்றிலக்கிய, சித்தர் இலக்கியச் சொல் ஏதும் எம்மை வெருட்டுவதில்லை. ஆனால் சினிமா, சீரியல், ஊடகங்கள், வேலண்டைன் டே முதல் பொருள் விளங்காத வேறு பல தினங்கள் வரை கொண்டாடும் முகநூலில் எழுதும், வாட்ஸ் ஆப்பில் பதிவிடும் தமிழ் பேசும் பலரின் சொல்லாட்சிகள் நம் அறியாமையையும், அந்நியமாதலையும் நிறுவிக்கொண்டே இருக்கின்றன.

'பரவாயில்லை' எனும் சொல்லாடலைப் 'பருவரல் இல்லை' என்றும், 'தேமே என்றிருந்தேன்' என்பதைத் 'தெய்வமே என்றிருந்தேன்' என்றும், 'முண்டக்கண்ணி' என்பதை 'முண்டகக் கண்ணி' என்றும் அறிந்துகொள்ள முடிகிறபோது, அன்றாடம் செவிப்படும் அபரிமிதமாகப் பங்கு வகிக்கும் சில சொற்கள் குழப்பம் தருவன.

தியாகராஜ சுவாமிகளின் தேநுக ராகக் கீர்த்தனை ஒன்றுண்டு. 'தெலியலேரு ராம பக்தி மார்கமுனு' என்று தொடங்குவது. மதுரை சோமசுந்தரம் பாடிக் கேட்டிருக்கிறேன். பக்தி மார்க்கம் என்ன என்று தெரிந்துகொள்ள இயலவில்லையே ராமா எனப் பொருள் கொள்கிறேன். அதுபோல, தொல்காப்பியனோ, பவணந்தியோ, ஐயனார் இதனாரோ, கல்லாடரோ, அமுதசாகரரோ இலக்கணப்படுத்தாத இந்த சொற்களை விளங்கிக் கொள்ள முடியவில்லையே என ஆற்றாமைப்பட வேண்டியுள்ளது.

நிழற்குடையின் தணுப்பில் தள்ளுவண்டி வியாபாரிகள் நிற்க, மொட்டை வெயிலில் பேருந்துக்காகக் காத்திருந்தேன். கல்லூரி சென்று திரும்பும் அழகிய மாணவி ஒருத்தி வந்து என் பக்கம் நின்றாள். என் பின்னால் நின்ற இரு மாணவரில் ஒருவன், மற்றவனுக்குச் சொன்னான், 'செமயா இருக்கால்ல!' என்று.

இன்னொரு நாள், கோவை ராஜவீதியில் இருக்கும் விஜயா பதிப்பகம் போய், வேலாயுதம் அண்ணாச்சியுடன் நீண்ட உரையாடல் முடிந்து, மத்தியானச் சாப்பாட்டுக்கு வீடு போய்ச் சேர்ந்து விடும் உத்தேசத்துடன் பேருந்து நிறுத்தம் நோக்கி நடந்தேன். நல்ல பசி நேரம். வீடு சேர பிற்பகல் இரண்டுமணி ஆகிவிடும் என்பதால், ஒரு காப்பி குடிக்கலாம் என்று போனேன். 'சர்க்கரை குறைவா ஸ்ட்ராங்கா காப்பி' சொல்லிக் காத்திருந்தேன். என் எதிரே பெண்கள் இருவர் சாம்பார் வடை தின்று கொண்டு இருந்தனர். வாசனை தூண்டுவதாக இருந்தது. என்றாலும் நம் வயதுக்கு சபலம் ஆகாதெனக் காப்பி வரவு பார்த்திருந்தேன். எதிரில் இருந்த அரிவை அருகிலிருந்த பேரிளம் பெண்ணிடம் சொன்னாள் - 'சாம்பார் வடை செமயா இருக்குல்லே' என்று.

பொருள் புரிந்தது தோராயமாக. என்றாலும் நம் மனம் சிரங்கு வந்தவன் கை போல. சொறியாமல் இருப்பது சாத்தியமில்லை. அதென்ன 'செம' என யோசிக்கலாயிற்று. சுமை, சுமடு, சும்மாடு, சுமட்டுக்காரன், சுமட்டுக் கூலி எனும் சொற்கள் அறிவோம். சும்மை என்றாலும் சுமை என்றே பொருள் சொல்கிறது பிங்கலம். Burden, Charge என்று பொருள். வழக்கு மொழியில் மேற்கண்ட சொற்களை செமை, செமடு, செமட்டுக்காரன், செமட்டுக் கூலி என்போம். ஆனால் இன்று மக்கள் யோசித்துப் புழங்கும் 'செம' என்பதென்ன?

'செம்மை' எனும் சொல்லின் இடைக்குறை 'செமை' என்றாகி, நாகரீக மாந்தர் வழக்கில் 'செம' என்றாகி இருக்கலாம் என்பது என் அனுமானம்.

செம்மை எனும் சொல்லுக்கு அகராதிகள் பத்துப் பொருள் தரும்.

- சிவப்பு (திவாகரம்) Redness, Rudiness
- செவ்வை (திவாகரம்) Goodness, Soundness, Good condition
- நேர்மை Spotlessness, Uprightness, Directness, Rectitude

  கலித்தொகை, செம்மை எனும் சொல்லை, நேர்மை எனும் பொருளில் ஆண்டுள்ளது.
- மனக்கோட்டம் இன்மை Fairness, Impartiality

  'செம்மையும் செப்பும்' என்கிறது தொல்காப்பிய பொருளதிகார நூற்பா.

- ஒற்றுமை Unity, Concord, Agreement
- பெருமை (திவாகரம்) Excelence, Eminence, Greatness

  ‘செம்மை சான்ற காவிதி மாக்களும்’ என்பது மதுரைக் காஞ்சி.
- சுத்தம் Fineness, Neatness, Cleanliness
- அழகு Beauty, Grace, Elegance
- கேது (சூடாமணி)
- கந்தகம் Sulphur

‘செம்மை முன்நிற்பச் சுவேதம் திரிவ போல்’ என்கிறது திரு மந்திரம்.

செம்மையைத் தொடர்ந்து போனால் செம்மல் என்னும் ஒரு சொல் கிட்டும். ‘செந்தமிழ்ச் செம்மல்’ என்பது போல் பட்டங்கள், விருதுகள் உண்டு. செம்மல் எனும் சொல்லுக்குப் பதின்மூன்று பொருள் தரும் பேரகராதி.

- தலைமை Greatness, Excellence, Superiority

  ‘அருந்தொழில் முடித்த செம்மற் காலை’ என்பது தொல் காப்பிய பொருளதிகார நூற்பா.
- வலிமை (பிங்கலம்) Power
- தருக்கு Haughtiness

  ‘பகைத்திறம் தெரிதல்’ அதிகாரத்துத் திருக்குறள் பேசும்:

  ‘உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர் செம்மல் சிதைக் கலா தார்’ என்று. பொருள் கூறத்தான் வேண்டும். பகைவனின் செருக்கைச் சிதைக்கத் தவறுகிறவர்கள், அவர்களின் மூச்சுக் காற்றிலேயே முடிந்து போவார்கள்.
- பெருமையில் சிறந்தோன் (திவாகரம்)

  Great person, asking
- இறைவன் (திவாகரம்) God

  ‘சித்தன் பெரியவன் செம்மல்’ - சிலப்பதிகாரம்
- சிவன் (சூடாமணி)
- அருகன் (சூடாமணி)
- வீரன் (திவாகரம்) Warrior, Hero
- புதல்வன் Son

  ‘பருதிச் செல்வன் செம்மலுக்கு’ - கம்பன்
- சாதிப்பூ. Flowered Jasmine. ஜாதிமல்லி என்று அழைக்கப் படுகிற பூ. மராத்தி மொழியில் இதனை செமேலி என்பர். பிச்சி, பிச்சி வெள்ளை, பித்திகை, பித்திகம் எனப்படும் மலர். குறிஞ்சிப்பாட்டு மலர்களின் வரிசையில் செம்மல் உண்டு.
- பழம்பூ (திவாகரம்) Faded flower
- வாடாப்பூ (அகராதி நிகண்டு) Ever fresh flower
- நீர் (அகராதி நிகண்டு) Water

எனவே, ‘செம’ என்று இன்று சிலாகித்துப் பயன்படுத்தும் சொல் செம்மை எனும் சொல்லின் திரிபு ஆகலாம். அல்லது தமிழ் சினிமாவின் சொற்கொடைகளில் ஒன்றும் ஆகலாம்.

அதுபோல் முற்போக்கு சமூகநீதி சமூகத்தில் பெருவாசிப் பயன்பாட்டில் உள்ள சொல் ‘தல’. தொண்டர்களும், சமூகப் போராளிகளும், ரசிகப் பட்டாளமும், அரசியல் கட்சி அடி மைகளும், மெய்மறந்து ஆனந்த அனுபூதி நிலையில் பயன் படுத்தும் சொல் ‘தல’. ‘தல’ என்று செல்லமாகப் பெயர் சூட் டித் துதிக்கப்படுகிற நடிகர் ஒருவரும் உண்டென அறிகி றேன். உலக நாயகன், சூப்பர் ஸ்டார், பல பட்டறைத் தில கங்கள், தளபதி போன்று ரசிகப் பெருங் கும்பல் வழங்கும் பட்டம் போலும் ‘தல’ என்பதும்.

ஒன்பதாவது படிக்கும்போது, ஏதாவது கேள்விக்குப் பிழையா கப் பதில் சொன்னால், எங்கள் வகுப்பு ஆசிரியை ஜோதி கிரேஸ், செல்லமாக என்னைத் திட்டுவது ‘ஒந் தல’ என்பது.

தலை எனும் சொல்லின் மக்கள் தொனிப்பே ‘தல’ போலும். ‘தல தலயா அடிச்சுக்கிட்டேன்’, ‘தல காலு புரியல’, ‘தலக் குத் தண்ணி ஊத்தணும்’, ‘கால்மாடு தலமாடு’, ‘தலக்கி வந் தது தலப்பாவோட போச்சு’, ‘தலயில அடிபட்டிருக்கு’, ‘தல யும் புரியல்லே வாலும் புரியல்லே’, ‘வரப்போ தலகாணி வாய்க்காலோ பஞ்சு மெத்தை’ போன்ற சொற்றொடர்களில் வரும் மூலச்சொல் தலை. மலையாளம் மூளையைக் குறிக் கத் ‘தலச்சோறு’ - தலைச்சோறு - எனும் சொல் பயன்படுத் தும்.

எனவே மக்கள் தலைவன் என்பது மிக நீளமான சொல் என் பதனாலும், உச்சரிக்க அநியாயத்துக்கு நேரம் எடுக்கிறது என்பதாலும் தலைவனைத் தலை எனச் சுருக்கி, ஐகாரம் தவிர்த்து, ‘தல’ எனப் புழங்குகிறார்கள் போலும்!

இடம் எனும் சொல்லுக்கு மாற்றுச் சொல் தலம். தலபுரா ணம், தல விருட்சம், தல புட்பம், தலமாற்றம், தலவாசம் சொற்களில் வரும் ‘தல’, தலை என்பதன் திரிபு அன்று.

தலைக்கட்டு, தலைக்கல், தலைக்கனம், தலைக்காவேரி, தலை சுற்று, தலைக்கு மேல், தலைக்கோல், தலைக்கோழி, தலை கட்டுதல், தலைகீழ், தலை குனிவு, தலைக் கொழுப்பு, தலைச்சங்கம், தலைச்சன், தலைச் சீலை, தலைச் சுமடு, தலைச்சோறு, தலை சாய்த்தல், தலை சீவு தல், தலைத் திண்ணை, தலைத் திவசம், தலைத் தீபாவளி, தலை தட்டுதல், தலை தடவுதல், தலை தாழ்தல், தலை துவட்டுதல், தலை தெறிக்க, தலைநகர், தலை நாள், தலை நிமிர்தல், தலை நிலம், தலை வாசல், தலை நோவு, தலைப் பாகை, தலைப்பாரம், தலைப்பாளை, தலைப்பித்தம், தலைப்பிரட்டை, தலைப்பிள்ளை, தலைப்பு, தலைச்சூல், தலைப்பேறு, தலை பணிதல், தலைமகன், தலைமகள், தலைமாலை, தலைமுண்டு, தலைமுழுக்கு, தலைமுறை, தலைமை, தலையாரி, தலையிடி, தலை இடுதல், தலையெ ழுத்து, தலையீடு, தலையீற்று, தலையெடுப்பு, தலைவன் - தலைவர் - தலைவி, தலைவாரி, தலை வாழையிலை, தலை விதி, தலைவிரி கோலம், தலை விளைச்சல், தலை வெட்டு தல் என ‘தலை’யை முன்னொட்டாகக் கொண்ட நூற்றுக்க ணக்கான சொற்கள் உண்டு மொழிக்குள்.




சரி! தலை எனும் சொல்லுக்கு சிரம், Head எனும் பொருள் மட்டும்தானா? பேரகராதி பதினைந்து பொருள் சொல்கிறது.

- சிரம் (சூடாமணி) Head
- சிறந்தது ‘தலையே தவம் முயன்று வாழ்தல்’ - நாலடியார்
- உயர்ந்தோர், ‘தலையெலாம் சொற்பழி அஞ்சி விடும்’ - நாலடியார்
- தலைவன் Leader, Husband ‘தலை இழந்த பெண்டாட்டி’ - ஏலாதி
- முதல் (பிங்கலம்) Origin, Beginning, Source, Commencement. ‘உயர்ந்தோர் தலையா இழிந்தோர் ஈறா’ - பெருங் கதை
- உச்சி Top, Apex. ‘தலையுமாக முழந்தாளும் தழீஇ’ - கம்பன்
- நுனி End, Tip. ‘தலை விரல் தாக்க’ - கல்லாடம்
- முடிவு Finish, Close
- ஒப்பு Resemblance
- வானம், ஆகாயம், விசும்பு (பிங்கலம்) Sky
- ஆள், தலைவரி Unit, Person, Hand
- தபால் முத்திரைத் தலை Postage Stamp, as bearing the figure of a king’s head
- சிரக் கபாலம் Skull. ‘தலைக் கலத்து இரந்தது’ - கம்பன்

- தலைமயிர் Hair. 'தலை அவுந்து கெடக்கு', 'தலையைச் சீவி முடி'
- ஏழாம் வேற்றுமைச் சொல் உருபு. 'முன் இடை கடை தலை' - சொல்லதிகாரம், தொல்காப்பியம்.

  வினைகளுக்கு முன் வரும் ஓர் இடைச்சொல்.

நாம் எழுதிய சொற்பட்டியலினுள், தலை எனும் சொல் மேற்கண்ட பொருள்களில் வந்திருப்பதைக் கண்ணுறலாம். 'தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே!' என்பது சுந்தரரின் தேவாரம். பாடப்பட்ட தலம் திருவஞ்சிக்களம். கொடுங்கல்லூர் பகவதி சேத்திரத்தில் இருந்து நடந்து போகும் தொலைவில் இருப்பது. எனவே 'தல' என்று இன்று புழங்கப்பெறும் சொல்லின் பொருள் சிறந்தது, உயர்ந்தோர், தலைவன் என்பதாக இருக்கலாம்.

தலைவர், தலைவன், தலைவி ஆகிய சொற்கள் இன்று மிகுந்த அச்சத்துடன் அடிமைத்தனத்துடன் கையாளப்படும் அரசியல் சொல். தலைவர் என்று அழைக்கப்படுவதற்கு எத்தனை ஆயிரம் கோடி அடித்து மாற்றி இருக்கவேண்டும் என்ற தகவல் எம்மிடம் இல்லை. ஆனால் 'தல' என்று குறிப்பிடும்போது ஒரு இளக்காரம், பாசாங்கு தொனிக்கிறது எமக்கு. என்றாலும் 'தலையே நீ வணங்காய்' என்பதில் கட்டுப்பட்டு நிற்றல் நல்லது, சமத்துவ சகோதரத்துவ சனநாயக முற்போக்கு சமூகநீதி குடிமக்களுக்கு. அல்லால் 'தல' அடிமைகளின் தலையை இல்லாமற் போக்கிவிடும்.

தற்போது அடிக்கடி கேட்டு அரண்டு போகும் சொல்லாடல் 'வேற லெவல்'. 'வேற லெவல்' என்று குறிப்பிடுகிறபோது மிக உயர்வானது, ஒப்பாரும் மிக்காரும் இல்லாதது எனும் பொருளில் கையாளுகிறார்கள்.

உணவு விடுதிகளின் சானல் விளம்பரக் குறும்படங்களில் முன்பெல்லாம் ஒரு துண்டு ரொட்டியைக் குருமாவில் முக்கி எடுத்து வாயில் போட்ட அரைக்கணத்தில் 'வாவ்' என்றனர். இப்போது சாலையோரம் தட்டு வண்டியில் சுட்டு விற்கும் ராகி வடையை வாயில் பிட்டுப் போட்ட உடனேயே 'வேற லெவல்' என்கிறார்கள்.

சினிமாக் கதாநாயகன் கோவை உக்கடம் பேருந்து நிலையத்தில் வில்லனின் அடியாட்களுடன் ஸ்டண்ட் புரியும்போது, ஒருவனின் தலைமயிரை இடக்கையால் பற்றிச் சுழற்றி வீசுவான். அவன் சுங்கம் மேம்பாலச் சுவரில் மோதிச் சிதறி விழுவான். படம் முடிந்து வெளியே வரும் நுட்ப ரசனைக்காரர்கள் கருத்துப் பதிவிடும்போது 'அது வேற லெவல்' என்பார்கள். பேரன்களுடன் சேர்ந்து இவ்விதச் சண்டைக் காட்சிகளைக் காணும்போது எனக்குத் தோன்றும், யதார்த்த வாழ்வில் வில்லன்களும் அவரின் அடியாட்களும் ஒருவர் கூட கதாநாயகனிடம் அடிவாங்குவதில்லையே என. திரைப்படங்கள் காட்டும் வில்லன்களும் அவரது கூலிப்படையும் நிஜ வாழ்க்கையில் எவ்விதம் கதநாயகர்களாக சொகுசு ஊர்தியில் சுற்றுகிறார்கள் என்பது நமக்கு விளங்குவதில்லை. ஒருவேளை அதுவும் 'வேற லெவல்' போலும். 'வேற லெவல்' என்றால் என்ன லெவல் என்று யாரும் கேட்பதில்லை. சொல்பவனும் கேட்பவனும் ஒரே லெவல்தானே!

சில ஆண்டுகளுக்கு முன்பு செல்வாக்குப் பெற்ற ஒருவரின் சொற்பெருக்குக் கேட்டு படிகளில் கீழிறங்கிக் கொண்டிருந்தேன், பேருந்து பிடிக்கும் அவசரத்துடன். தொழிலதிபர் ஒருவர் ஏற்பாடு செய்திருந்த சொற்பொழிவு என்பதால், கோவையின் தொழிலதிபர் பலரும் வந்து ஆஜர் வைத்திருந்தனர் அல்லது அட்டெண்டன்ஸ் கொடுத்திருந்தனர். அவர்களில் பெரும்பான்மையோருக்குக் குறுந்தொகைக்கும் குறுந்தட்டி எனும் சிறு செடிக்கும் வேறுபாடு தெரியாது! என் செய? சிவபெருமான் சடைமுடியில் சூடிய மலர் என்பதால் வெள்ளைருக்கு சூடுவார்களா எவரும்? அல்லது மணிமிடற்றான் சூட விரும்பாத தாழம்பூவைச் சூடாமல் விடுவார்களா? அது 'வேற லெவல்'!

என் பின்னால் இரண்டு படிகள் மேலாக இரண்டு தொழிலதிபர்கள் உரையாடியபடியே இறங்கிக் கொண்டிருந்தனர். இருவருமே இலக்கிய ரசனை உடையவர்கள், என்னை அறிந்தவர்கள். ஒருவர் கேட்டார், 'ஏனுங்க! இது போல நம்ம நாஞ்சிலையும் பேசச் சொல்லலாம்ல?'

மற்றார் பதில் சொன்னார், 'இல்லீங்க, இது வேற லெவல்!' என்று. நான் உணர்ந்து கொண்டேன், அன்று உரையாற்றியவர் பிரபஞ்சப் பிதாமகன் லெவல் என்றும் நான் கரகாட்டக் கோமாளி லெவல் என்றும். ஒருவேளை அதுவே உண்மையாகவும் இருக்கலாம். கற்றுக் கொள்வதற்கு வயது வரம்பு உண்டா என்ன?

சமகாலத்தில் கல்விக் கொள்ளை, மருத்துவக் கொள்ளை, நீதிக் கொள்ளை, திட்டக் கொள்ளை, ஆட்சிக் கொள்ளை யாவுமே 'வேற லெவல்'தான்.

காமிரா முன் நின்று கொண்டு, நாம் எந்தக் காலத்திலும் தின்ன வாய்ப்பில்லாத பண்ணியம் ஒன்றின் விள்ளலை வாயில் போட்ட கணத்தேயே கண்மூடி, மெய்மறந்து, புளகம் உற்று, கலவியில் உச்சம் தொட்டது போல், 'வாவ்' என்கிறார்கள். ஆடம்பரமாக உடையணிந்து, ஆபரணங்கள் சூட்டி, ஐந்நூறு ரூபாய்க்குப் பூ வாங்கி தலையில் சூடி, இட்ட அடி நோக, எடுத்த அடி கொப்பளிக்க, ஸ்மார்ட்ஃபோன் சுமந்து மருங்கு அசைய நடைபழகி வரும் தோழியைப் பார்த்து 'வாவ்' என்கிறார்கள்.

'வாவ்' எம்மொழிச் சொல், ஸ்பெல்லிங் என்ன, அந்தோ- அம்மா -ஐயோ - அடா - அரோ - அன்றே - எல்லே - மன்னோ- மாதோ போன்று கம்பன் பயன்படுத்தும் அசைச் சொற்கள் போன்றதா என ஆலோசிக்கத் தோன்றும்.

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே!' என்று பேசும் தொல்காப்பிய, சொல்லதிகார நூற்பா 640. அது உணர்ச்சியை வெளிப்படுத்தும் ஒலிக்குறிப்பே ஆனாலும். ஆ, ஓ,

ஏ, சீ, சே எனும் ஒலிக்குறிப்புகளையும் உணர்ச்சியைக் காட்டும் அசைச் சொற்களாக ஒலிக்கிறோம். அவற்றை அசைச் சொற்கள் எனக் குறிக்கும் தமிழ் இலக்கணம். அசைச்சொல் இடம் சார்ந்து வெவ்வேறு பொருள்களையும் தரும்.

கம்ப இராமாயணம் அயோத்தியா காண்டத்தில், கங்கைப் படலத்துப் பாடல் ஒன்று இராமனும் சீதையும் வனவாசம் செல்வதைக் குறித்தது.

*‘வெய்யோன் ஒளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்*
*பொய்யோ எனும் இடையாளொடும் இளையானொடும் போனான்*
*மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ*
*ஐயோ இவன் வடிவுஎன்பதோர் அழியா அழகுடையான்’*

இது முழுப்பாடல். இதில் ‘ஐயோ’ எனும் அசைச் சொல்லைக் கம்பன் எதுகைக்காகப் பயன்படுத்துவான். வழக்கமாக ‘ஐயோ’ எனில் அவலச்சுவை. இங்கு ‘ஐயோ’ ஆனந்தச் சுவை. ஒரே அசைச் சொல் இடம் சார்ந்து பொருள் தரும் என்பதை நிறுவ இதை எடுத்துக்காட்டுச் சொல்வார்கள்.

பண்டு இந்துஸ்தானி இசை - நுஸ்ரத் ஃபத்தே அலிகான், ஹரி பிரஸாத் சௌராஸ்யா - ரோணு மஜும்தார் - உஸ்தாத் பிஸ்மில்லா கான் உஸ்தாத் படே குலாம் அலிகான் - பண்டிட் ஜஸ்ராஜ் - பண்டிட் பீம்சென் ஜோஷி - வீணா சகஸ்ர புத்யே - கங்குபாய் ஹங்கல் - ஃபயஸ் அகமது ஃபயஸ் - போன்றோர் பாடும் வாசிக்கும்போது அபூர்வமான இடத்தைத் தொட்டுக் காட்டும்போது, இசையின் நுணுக்கம் அறிந்தோர், ‘வாரே! வாவ்!’ என்பார்கள்.

நேற்று மாலை அரைத்து மீந்த தேங்காய் சட்னியை குளிர் பெட்டியில் வைத்து அடுத்த நாள் காலையில் மெதுவடைக்குப் பரிமாறுவான் அதிநவீன உணவு விடுதிக்காரன். வடையைப் பிய்த்து சட்னியில் தொட்டு வாயிலிட்டவுடன் ‘வாவ்’ என்கிறார்கள்.

பலே, பேஷ், சபாஷ், சூப்பர், சூப்பரோ சூப்பர், டக்கர், அப்பா டக்கர், டக்கரோ டக்கர் போல் ஒரு அசைச்சொல் ‘வாவ்’. பன்ன சினிமாவில், பன்ன பாடலுக்கு, பன்ன நடிகை, பன்ன வக்கிர உடலசைவைக் காட்சிப்படுத்தும்போதும் அஃதே - வாவ்!

எனது பிரச்சினை ‘வாவ்’ எம்மொழிச் சொல் என்பதே! அயற்சொல் அகராதியில் வாவ் எனும் சொல் இல்லை. பேரகராதியில் தேடினால்: வாவயம் - துளசி, வாவரசி - வாழ்வரசி, வாவல் - 1. தாண்டுதல் 2. கூத்து 3. வௌவால் 4. கடல்மீன் வகை 5. கர்ப்பிணிப் பெண்களுக்கு மசக்கை காலத்து அவாவு அல்லது வயா எனும் சொற்கள் கிடைத்தன.

வாவி என்றொரு சொல்லுண்டு நம்மிடம். நீர்நிலை எனப் பொருள் தரும் பிங்கல நிகண்டு. ‘மன்னு தண்பொழில் வாவியும்’ எனும் சொற்றொடர் நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழிப் பாடலில் வருவது. நாச்சியார் திருமொழி திருப்பாவையில் ஆண்டாள், ‘உங்கள் பழக்கடைத் தோட்டத்து வாவியுள் செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பின காண்’ என்பாள்.

வாவி என்றால் படிக்கட்டுகள் உள்ள கிணறு, நடைக்கிணறு என்று பொருள். சீவக சிந்தாமணி ஆற்றில் ஓடை எனும் பொருளிலும் பயன்படுத்துகிறது. Stream of water running in a river bed என்பது பொருள். வாவிப்புள் என்றால் அன்னம் என்கிறது இலக்கிய அகராதி. வாவுதல் எனில் தாண்டுதல். யுத்தகாண்டத்தில், பஞ்ச சேனாதிபதிகள் வதைப்படலத்தில், கம்பன், ‘குன்றிடை வாவுறு கோளரிபோல’ என்பான். வாவு எனும் சொல்லுக்கு

- அமாவாசை The New Moon Day
- பௌர்ணமி The Full Moon Day
- விடுமுறை நாள்

என்பன பொருள். வாவு தினத்தன்று விடுமுறை விடப்பட்டதால் வந்த பொருள் அது. எனது பதினாறாவது கட்டுரைத் தொகுப்பின் தலைப்பு ‘கருத்த வாவு’.

பண்டைய கிராமத்துப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியருக்கு ஊதியம், பஞ்சப்படி, பயணப்படி, வாடகைப்படி, நகரப்படி என அரசு சம்பளம் இல்லை. பௌர்ணமி அல்லது அமாவாசை நாட்களில் மாணவர் தட்சணையாக ஆசிரியருக்குக் கொடுத்த காசு வாவுக்காசு எனப்பட்டது. வாவு முறை என்றால் விடுமுறை. பிறகுதான் வேறொரு மதத்தவர் கோயிலுக்குச் சென்று வழிபடும் நாளை நாம் விடுமுறை என்றோம். அரபு நாடுகளின் விடுமுறை நாள் வேறு.

ஆனால் நாம் தேடும் சொல்லான ‘வாவ்’ குறித்து ஐயங்கள் சில. அனுமானங்களை எல்லாம் கைவிட்டு ஐந்தாவது பயிலும் என் முதல் பேரன் சித்தார்த்தனிடம் கேட்டேன். ஒரு விள்ளல் மேத்தி பரோட்டாவைப் பிய்த்து வாயில் போட்டவுடன் ‘வாவ்’ என்பவன் அவன். ‘வாவ்’ என்ற சொல் ஆங்கிலம் என்றும் Wow என்றும் சொன்னான். ஐயத்துடனேயே சென்னைப் பல்கலைக்கழகத்து ஆங்கிலம் - தமிழ் சொற்களஞ்சியம் எடுத்துப் புரட்டினேன். அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்களைத் தலைமைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1965-ல் முதற்பதிப்பு கண்டது. அதில் Wow எனும் சொல் இருந்தது. பரிவு வியப்பு என்று பொருள் தரப்பட்டிருந்தது. Wow எனும் ஆங்கிலச் சொல்லே வாவ் எனும் சொல்லுக்கு வேர்ச் சொல்லாக இருக்கலாம். வாவ்! என்ன சிறப்பு எம் மொழிக்கு!

சினிமாக்களின் ஒரு உரையாடலை திரும்பத் திரும்ப சாமான்ய மானுடன் அன்றாட வாழ்வில் சிலம்பித் திரிவது நமது சமூக சோகம். பண்டு ஒரு திரைப்படத்தில், சிரிப்பு நடிகர் கே.ஏ. தங்கவேலு அடிக்கடி உதிர்த்த வாசகம், ‘அட! உன்னைத்தூக்கி வெயில்லே போட’ என்பது. என் வாலிப வயதில் பலரும் அதை வெட்கமில்லாமல் போலி செய்து திரிந்தனர். இன்றோ, ‘செத்தான்டா சேகரு’ என்றும், ‘நண்

பேன்டா' என்றும், 'வேற லெவலில்' 'செமயாகக்' 'கலாய்க்கிறார்கள்' உயர் தமிழ்த் தொல் குடியினர்.

Super எனும் ஆங்கிலச் சொல் எமக்கு அர்த்தமாகும். இருபது நாட்கள் முன்பு சமைத்த கோழிக்கறியை குளிர்சாதனப் பெட்டியில் புதைத்து வைத்திருந்து ஆர்டரின் பேரில் சூடாக்கிப் பரிமாறும்போது அதை ருசித்துத் தின்று சூப்பர் என்கிறார்கள். தமிழ்த் திரைப்படம் 'சூப்பப்ப்ப்பர்' என்று மொழியும்.

எந்த மொழி என்று எனக்குத் தெரியாது இன்று நாம் பயன்படுத்தும் டக்கர். டக்கர் எனும் சொல்லிலேயே அரண்டு நிற்கும் நம்மை நோக்கி உடனே 'டாப் டக்கர்' என்கிறார்கள். அதுவும் போகட்டும் என்றால், 'டக்கரோ டக்கர்' என்பார்கள். அதைக்கூட விட்டுத் தொலைக்கலாம். நகரப் பேருந்தில் இருக்கை பிடித்த போட்டியில் ஏற்பட்ட வாக்குவாதத்தில்- நல்ல வேளை கை கலப்பு இல்லை. எழுபத்து ஐந்து வயதான எனக்குத் தாங்காது - 'என்னையா? நீ பெரிய அப்பா டக்கரா?' என்றார் முண்டியடித்து முன்னால் வந்தவர். ஒரு வேளை நாம் சாகித்ய அகாதமி, கலைமாமணி, கண்ணதாசன், இயல், அமுதன் அடிகள் போன்ற விருதுகள் வாங்கிய மூத்த எழுத்தாளன் என்பதை அறிந்து, 'அப்பா டக்கர்' என அறைந்திருப்பாரோ?

என் கவலை 'டக்கர்' எம்மொழிச் சொல் என்பது. எனக்கு அராமிக், ஹீப்ரு, லத்தீன், கிரேக்கம், சீனம், யப்பான், ஜெர்மன், மெக்சிகன், பிரஞ்ச், அரபி, உருது போன்ற மொழிகள் தெரியாது. அயற்சொல் அகராதியில் அலசினேன். டக்கர் என்றால் இந்தி மொழிச் சொல். பொருள் மோதுதல் என்று ஒரு பதிவு. உச்சரிப்பு Takkar. இரண்டாவது பதிவு டக்கர் என்றால் உருது மொழிச் சொல், பொருள் குழப்பம், உச்சரிப்பு Tagar. டகல்பாஜி என்றால் பாரசீகம், பொருள் வஞ்சகன், ஏமாற்றுக்காரன். டங்குவார் எனில் தெலுங்கூதமிழ். பொருள் குதிரையின் பட்டை.

சம்பவம் நடந்த கணத்தில், பேருந்து நெரிசல் அவதி. பாரத ரத்னா விருது வாங்கியவர் எழுதிய, பாரத ரத்னா இசையமைப்பாளர் மெட்டமைத்த, பாரத ரத்னா பாடகர் பாடிய பொறுக்கித்தனமான காம வக்கிரப் பாடல் தந்த எரிச்சல்.

உண்மையிலேயே கதிகலக்கம் ஏற்பட்டது. சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றதைப்போல. வெண்பா இருகாலில் கல்லாதவன் போல. உத்தேசமாக வசவின் பொருள் புரிந்தது. எம்மொழியில் சொன்னால், 'நீ என்ன பெரிய கிடுவிடியா?' என்பதைப் போல. அல்லது, 'நீ பெரிய புடுங்கியா?' என்று கேட்பதைப் போல. ஒருகாலத்தில், 'நீ என்ன பெரிய லார்ட் லபக் தாசா?' என்று கற்றுத்தந்தது தமிழ் சினிமா. இன்று, 'நீ என்ன பெரிய அப்பா டக்கரா?' என்று கேட்கிறார்கள்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் எவரும் நமது ஐயம் தெளிவிப்பாரா? அவர்கள் ஐம்பது அறுபது கோடி கொடுத்துப் பதவி பிடிக்கிறார்கள். ஒரு ஐயம் தெளிவிக்க நம்மிடம் ஐந்தாயிரம் கேட்டால் நாமெங்கே போவது. நமக்கு அது நாலு மாத ஓய்வூதியம்.

Spelling என்னவாக இருக்கும் ஆங்கில அகராதிகளில் தேட, Ducker என இருக்கலாமோ? தேடினேன்.

Ducker என்றால் மூழ்குபவர், நீர்மூழ்கிப் பறவை வகை, வாத்துக்களைப் பேணி வளர்ப்பவர் எனப் பொருள் தரப்பட்டுள்ளன. Duker அல்லது Duckker எனும் பதிவே இல்லை. சரி Tucker என்று தேடலாம் எனத் தீர்மானித்தேன். Tucker என்றால் உள்மடிப்பு, கழுத்து விசிறி மடி எனப் பொருள் தரப்பட்டிருந்தது. Tukker எனும் சொல் கண்டிலேன். Tugger என்று ஒரு பதிவு. பொருள் வலிந்து இழுப்பவர்.

திருவாசகப் பாடல் வரிகள் நினைவுக்கு வந்தன.

'திருப்புலம்பல்' பகுதியின் பாடல். சுருங்கச் சொன்னால் 556-வது திருவாசகத்தின் முதல் இரண்டு அடிகள்.

***'உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்***
***கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்'***

என்று புலம்பும். ஆம்! கற்பனவும் இனி அமையும்!

இரசிகன் என்றொரு சொல் நம் மொழியில். நயவன், சுவைஞன் என்பது பொருள். ரஸிகா (Rasika) எனும் சமற்கிருதச் சொற்பிறப்பு. ஒரு நிகழ்ச்சிக்கு இலட்சங்களில் ஊதியம் வாங்கும் கர்னாடக சங்கீத வித்வான்கள் தமிழரே ஆனாலும், கேட்கக் குழுமியிருப்போரும் தமிழரே ஆனாலும், கச்சேரியின் நடுவில் ஆங்கிலத்தில் அறிவிப்பார்கள் - Dear Rasikas என்று தொடங்கி. அதென்ன ரஸிகாஸ்? எம்மொழிச் சொல் அது? Students, Friends, Comrades என்று பன்மையில் சொல்வதைப் போல, ரசிகா எனும் சொல்லின் பன்மையா ரஸிகாஸ்? இந்தச் சொல்லை சமற்கிருதம் அனுமதிக்கிறதா? தாய்மொழி மீது இத்தனை கரிசனமும் அக்கறையும் உள்ளவன் எந்தக் கடவுளைப் பாடினால் எமக்கென்ன?

அதுபோலவே, Dear Bhakthas என்பார்கள். பக்தன் எனும் சொல் சமற்கிருதம் + தமிழ். பக்தி - சமற்கிருதம். பக்தை - சமற்கிருதம் + தமிழ். பக்தியைப் பத்தி என்பான் கம்பன். அது என்ன மேன்மக்களே பக்தாஸ்? அது எம்மொழிச் சொல்?

அஃதேபோல் தமிழில் பெரியன், பெரியர், பெரியவன், பெரியவர், பெரியான், பெரியார் உண்டு. பெரியவா எனும் சொல் எந்தத் தமிழ் நிகண்டிலும் அகராதியிலும் இல்லை. பெரியவர் என்று சொன்னால் அது மதிப்பில்லையா? ஊசிப் புளித்துச் சளித்துக் காம்பி, ஆம்பி, சவுக்களித்துப் போன சொல்லா அது? இதைச் சொல்வதனால் நான் எவரின் துவேஷியும் நாத்திகனும் ஆகிவிட மாட்டேன். இந்தப் பிதற்றலை, திரிபை, தேவ பாஷையில் செய்வீரா? ஏன் பெரியவர் எனப்

பகர்ந்தால் ஆன்மீகம் அசுத்தமாகி விடுமா?

Brother எனும் சொல்லுக்கும் Bro எனும் சொல்லுக்கும் அரை கிலோமீட்டர் இடைவெளியா? Bro என்றொரு சொல் உண்டா ஆங்கில அகராதிகளில்? சொல்லுங்கள் ப்ரோ! அம்மா, அம்மை, அம்மே, அம்ம, மா, மாம், மாயி, மையா யாவுமே தாய் குறித்து நானறிந்த வேற்று மொழிச் சொற்கள். ஆத்தா, ஆயா, ஆயி, எழுத்தாளர் பூமணி பேசும் அஞ்ஞை யாவுமே அன்னையைக் குறித்த சொற்கள். Brother என்பதன் சுருக்கம் ப்ரோ, Sister என்பதன் சுருக்கம் சிஸ், மாமா என்பதன் சுருக்கம் மாம்ஸ் எல்லாம் சரி! தந்தை, அப்பா, அப்பன், அச்சன், பிதாஜி, பிதா, ஃபாதர் இவற்றின் சுருக்கமாக ஃபா எனலாமா? எளியவன் பெண்டாட்டி எல்லார்க்கும் மதனியா?

நான் தேடியதில் International Advanced Deluxe Dictionary, English - English - தமிழ், 2015-ம் ஆண்டு Exclusive Edition, 1600 பக்கங்கள் விலை ஐம்பது அமெரிக்க டாலர், நூலில் Bro இல்லை.

பெண்டாட்டி, மனையாட்டி, இல்லாள், இல்லக்கிழத்தி, மனையாள், பாரியாள், அகத்துக்காரி எனும் சொற்கள் உச்சரிக்க நீளம், கடினம், 140 MB இடம் வேண்டும் என்பதால் வைஃப் என்பதன் சுருக்கமான வை என்றழைப்போமா?

அதுவே போல் ஒரு சொல் மச்சி. மைத்துனன், மச்சினன், மச்சான் இவற்றின் சுருங்கிய வடிவம். ஆனால் மச்லி, மச்சி என்றால் வடமொழியில் மீன் என்று பொருள். மகர் மச்சி எனில் மகரமீன். மைத்துனி, மச்சினி எனும் பெண்பாற் சொற்களின் சுருக்கமாக, பொதுப்பால் சொல்லாக மச்சி என வழங்கலாமா இனிமேல்!

நெடுங்காலமாக வழக்கில் இருக்கும் ‘மஸ்த்’ எனும் சொல் அறிவோம் நாம். இந்தி சினிமாப் பாடல்களிலும் உரையாடல்களிலும் பயன்படுத்தப்படும் சொல். தமிழ்மொழிக்குள் புழக்கத்தில் இருக்கும் வேற்று மொழிச் சொற்கள் இருபதினாயிரத்தில் ஒன்று மஸ்த்.

மஸ்தி (Masty) என்பது பாரசீகச் சொல். உருது மொழிப் பிறப்பு. பொருள் மதுக்கிறக்கம். அதாவது போதையில் இருத்தல். இந்தியில் குறும்பு, சேட்டை எனும் பொருளிலும் ஆள்வார்கள். ‘மஸ்தி மத் கரோ!’ என்றால் ‘சும்மா வெளையாடாதே!’ என்பது பொருள்.

மஸ்த் (Mast) என்பது உருதுச்சொல். பொருள் - 1. கொழுப்பு 2. மயக்கம் தரும் பொருள் 3. உளக்கிளர்ச்சி. மஸ்து (Mastu) என்றொரு சமற்கிருதச் சொல்லும் உண்டு. பொருள் தயிர், Curd, தஹி.

ஆகவே மஸ்த் எனும் சொல் மொழிக்குள் அதற்கான இடம் பெற்று, தோதான சந்தர்ப்பங்களில் புழங்கப் பெற்று வருகிறது. பேஷ், பலே, ஜோர் என்பவை போல் மஸ்த் நின்று நிலைத்துவிட்டது.

செம்பு, பித்தளைப் பாத்திரங்கள் அடுதலுக்குப் பயன்படுத்தப்பட்ட காலத்து, அவற்றுக்கு ஈயம் பூசாமல் புளி ஊற்றிய அல்லது புளிக்கும் எப் பதார்த்தத்தையும் அவற்றில் சமைக்கவோ, மாற்றி வைக்கவோ இயலாது. வேதியியல் வினை மூலம் உணவு விடமாகும். மண், மரம், பீங்கான், வெள்ளோடு, வெண்கலம் பாத்திரங்கள் கெடுதல் செய்வதில்லை. எனவே செம்பு பித்தளை கலன்களுக்கு ஈயம் பூசுவோம். இக்கட்டுரை எழுதுகிற இந்தக் கணத்தில் யோசித்துப் பார்க்கிறேன், எம் வீட்டில் ஈயம் பூசிய பானை, சருவம், கிண்ணம், தாலம், ஏனம் ஏதும் உண்டா என!

அலுமினியம் வந்து நூறாண்டுகள் இருக்கும் பாத்திரங்களாக. கறுக்காத இரும்பு (Stainless Steel) என்ற எவர்சில்வர் வந்து இன்று எங்கும் நிரந்துவிட்டன.

அன்று செம்பு பித்தளைப் பாத்திரங்களுக்கு ஈயம் பூச, குடும்பமாக வருவார்கள். பெண் உறுப்பினர் வீடு வீடாய்ப் போய் பாத்திரம் சேகரித்து வருவார். ஆண் உறுப்பினர் தெருவில், மரநிழலில் பட்டறை போட்டு உலை அமைத்து ஈயம் பூசுவார். சிறுவர் சிறுமியர் விளையாடுவார்கள், தம்மால் இயன்ற வேலையும் செய்வார்கள். ஈயத்தை உருக்கும்போது தூவும் நவச்சாரம் எனும் ரசாயனம் நினைவுக்கு வருகிறது. ஈயம் பூசிப் பிழைத்த இனம் இன்று இல்லை.

ஈயப்பூச்சு என்பதை வட மாவட்டத்தார் ‘கலாய்’ என்றனர். கலாய் என்பது உருது மொழியை மூலமாகக் கொண்ட பாரசீக மொழிச் சொல். கலாய் என்றால் ஈயப்பூச்சு, ஈயமிடுதல் என்று பொருள்.

இன்று அதிநவீனத் தமிழில், ‘கலாய்’ என்றொரு சொல் ஆளப்படுகிறது. ‘என்னமாய் கலாய்க்கிறான்?’, ‘மரண கலாய்’ என்ற சொற்பிரயோகங்கள் குறுக்கிடுகின்றன. இடம் பொருள் ஏவல் கண்டு, இந்தக் கலாய் எனும் சொல்லுக்கு இளக்காரம், ஏளனம், அங்கதம், பகடி எனப் பொருள் கொள்கிறேன். அதாவது ஒருவரைக் குறை உணர்த்திக் கலாட்டா செய்தல். சரி, இது எம்மொழிச் சொல் எனக் கேட்டால் நம்மைக் கலாய்ப்பார்கள்.

சில சொற்களை, எம்மொழிச் சொல் என உணராமலேயே, ஆனால் சரியான அர்த்தத்தில் பயன்டுத்துகிறோம். ‘அவன் என்னை சட்டை செய்ய மாட்டான்’ என்கிறோம். இந்த சட்டை என்ற சொல் உடுப்பு அல்லது Shirt அல்ல. அயற் சொல் அகராதி, சட்டை எனும் சொல் சமற்கிருத மூலம் என்றும் Shradda எனும் சொல்லின் பிறப்பு என்றும் பதிவிடுகிறது. பொருள் மதிப்பு என்கிறது. அதாவது, ‘அவள் என்னை மதிப்பதில்லை அல்லது பொருட்படுத்துவதில்லை அல்லது கூட்டாக்குவதில்லை’ என்று பொருள், ‘அவள் என்னை சட்டை செய்வதில்லை’ என்றால்.

ஆங்கிலத்தில் Mass என்றொரு சொல் உண்டு. அயற்சொல்

அகராதியில் மாஸ் எனும் சொல் இல்லை. கேம்பிரிட்ஜ் ஆங்கில அகராதி, Mass என்றால் கீழ்வரும் பொருள் தரும்.

- A lot of some thing to gether, with no clear shape.
- Affecting a lot of people

Example: Mass destruction, A mass murderer.

Masses என்றால் - A large amount or number of something.
Massacre என்றால் - The killing of a lot of people.

இன்று சர்வ சாதாரணமாக உரையாடல் மொழி, 'சும்மா மாஸ் காட்டறான்' என்கிறது. குறிப்பிட்ட சினிமாவின் சண்டைக் காட்சியை 'மாஸ்' என்கிறது. இதுபோன்ற பயன்பாடுகள் இன்னும் இருக்கலாம் எத்தனையோ! மாஸ் காட்டுதல் என்றால் Affecting lot of people எனப் பொருள் கொள்ளலாமா? இச்சொல்லை வைத்துக்கொண்டு ஊடகங்கள் ஆடம்பரமாக மாஸ் காட்டுகின்றன. நேற்று ஒரு பத்திரிகைச் செய்தி சொன்னது, குறிப்பிட்ட சினிமாவில் குறிப்பிட்ட நடிகர் மாஸ் காட்டி இருக்கிறார் என்று.

பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, என் முதல் வெளிநாட்டுப் பயணத்தின்போது, உடன் பயணித்தவர் பயன்படுத்திய சொல் 'மெர்சல்'. முதன் முதலில் கேட்டதனால் நானும் மெர்சல் ஆகிவிட்டேன். அச்சொல் பேரகராதியிலும் அயற்சொல் அகராதியிலும் இல்லை. ஆங்கில அகராதிகளில் தேடலாம் என்றால் மெர்சல் என்று உச்சரிக்கப்படும் சொல்லின் Spelling எதுவாக இருக்கும் என்றும் தெரியாது. Mercel அல்லது Mersal அல்லது Mersel என இருக்கலாமோ என்று துழாவினால் மூன்றுமே மேற்சொன்ன அகராதியில் இல்லை.

கூகுளில் தேடியபோது கிடைத்த அரிய செய்தி - 'மெர்சல் 2017-ம் ஆண்டில் வெளிவந்த ஓர் இந்தியத் தமிழ்த் திரைப்படம் ஆகும். இதில் விஜய், காஜல் அகர்வால் ஆகியோர் நடித்துள்ளனர். பாக்ஸ் ஆபீஸில் 200 கோடி வசூல் செய்த படம் என விளம்பரம் செய்யப்பட்டது' - என்று. மேலும்,

| | | |
|---|---|---|
| வெளியீட்டுத் தேதி | : | 18 அக்டோபர் 2017 (இந்தியா) |
| இயக்குநர் | : | அட்லீ |
| தயாரிப்பாளர்கள் | : | R. மகேந்திரன், ஹேமா ருக்மானி |
| தயாரிப்பு | : | ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் |
| மொத்த வருவாய் | : | Rs. 265 கோடி |

என்கிறார்கள்.

பராபரமே! 'நான் மெர்சல் ஆயிட்டேன்' என்றால் அதன் பொருள் என்ன என்று கனவிலாவது வந்து அருள்வாயா?

அதுபோன்றே இன்னொரு சொல் 'காண்ட்'. 'அவள் காண்டாயிட்டாள்' என்கிறார்கள்.

நமக்கு காண்டம் (Condom) என்ற ஆணுறை தெரியும். காண்டாமிருகம் தெரியும். அருச்சுனனின் வில்லான காண்டீபம் தெரியும். ஆனால் காண்ட் தெரியாது.

மராத்திய மாநிலத்தில் வாழ்ந்தபோது, புட்டத்தைக் குறிக்க காண்ட் என்றனர். புட்டத்தைப் பயன்படுத்த அனுமதிக்கும் ஆண் பாலியல் தொழிலாளியை காண்டு என்றனர். நானறிந்தது, குஜராத்தி மொழியில் காண்டா என்றால் பைத்தியம் என்று பொருள். ஆனால் மேலதிகாரியைக் குறிக்கும்போது, 'சார் காண்டாயிட்டார்' என்கிறார்களே! நிச்சயமாகப் புட்டப் பாலியல் தொழிலாளி அல்லது பைத்தியம் எனும் பொருளில் இருக்க வாய்ப்பே இல்லை.

பேரகராதியைத் தஞ்சமடைந்தேன். பேரகராதி தந்த சொற்கள்:

காண்டகம் - 1. காடு 2. நோய் 3. கமண்டலம் காண்டம் - 1. மலை 2. காடு 3. நீர் 4. கோல் 5. அடித்தண்டு 6. அம்பு 7. ஆயுதம் 8. நூலினுள் பெரும் பிரிவு 9. முடிவு 10. சமயம் 11. திரள் 12. ஆபரணச் செப்பு 13. நில வேம்பு 14. திரைச் சீலை 15. ஆடை 16. விடம் Mineral Poison 17. சீந்தில், Moon Creeper

இவற்றுள் 'தலைவரு காண்டாயிட்டார்' என்றால் எப்பொருள் கொள்வது?

எமக்கு அடுத்துத் திறக்கும் கதவு அயற்சொல் அகராதி. ஆம்! அருளி ஐயா ஆற்றுப்படுத்தினார். காண்டு எனும் சொல்லைப் பதிவிட்டு, அது தெலுங்கு மொழிச் சொல் என்றும், பொருள் சினம் என்றும் குறித்துள்ளார். 'செம' எனப் பீற்றிக் கொள்ளவா?

பேராசிரியர் அருளி, வையாபுரிப்பிள்ளை, தேவநேயப் பாவாணர், அ. சிதம்பரநாதன் செட்டியார் போலவோ, ஈழத்துக் கதிரைவேற்பிள்ளை, சந்திரசேகரப் பண்டிதர், சரவணமுத்துப்பிள்ளை, ந.சி கந்தையா பிள்ளை போலவோ, பி.ஆர். அப்பாய் செட்டியார், மு. சண்முகம்பிள்ளை போலவோ, சமகாலத் தமிழறிஞர் எவரும் உழைத்து மேற்சொன்ன சொற்களைத் தொகுத்து ஒரு அகராதி சீர்படுத்தித் தந்தால் அது பெரிய மொழிச் சேவையாக இருக்கும். நாட்டில் செம்மல்களுக்கும் அறிஞர்களுக்கும் பஞ்சமா என்ன?

பொறுப்புத் துறப்பு

இந்தக் கட்டுரையை எழுதுவதற்காக மட்டுமே மேற்சொன்ன பட்டியலின் சொற்களைப் பயன்படுத்தியுள்ளேன். மற்று வேறு என் படைப்புக்களிலோ உரைகளிலோ அவற்றைக் கையாண்டதில்லை. அது உண்மையல்ல என்றெவரும் நிறுவினால், 'ஹாராக்கிரி' செய்துகொள்ளத் தயாராக உள்ளேன்.



nanjilnadan@thaiveedu.com

# பிறவிப் பெருங்கடல் நீந்திய பாரதி

**– கிருங்கை சேதுபதி**

**ஓவியம்: ஜீவா**

இந்திய விடுதலைப் போராட்டம் பிரசவித்த கவிதைச் சூரியன் மகாகவி பாரதி. போர்முனையிலே தளபதியாக இருந்து போரிட்டு உயிர் துறக்கத் துணிந்த வீரர் அவர்.

‘போர்முனையிலே முன்னணியில் நிற்பேன். துண்டிக்கப்பட்டு விழுந்த என் சிரசைப் பல்லக்கில் வைத்துக் கொணர்வார்கள். செல்லம்மா, அப்போது ஜனங்கள் உனக்குச் சேனைத் தலைவனுடைய மனைவிக்குரிய மரியாதை செய்வார்கள்...’ என்று வீரமுழக்கம் செய்த பெருவீரர். (சகுந்தலா பாரதி, என் தந்தை, ப.5)

சொல்லியபடியே நடந்தாலும் காலம் அவர்கையில் வாளையோ, வேலையோ தரவில்லை. மாறாக, எழுதுகோலையே தந்தது. வாளினும் கூரியதாய் அவர் நாக்கை ஆக்கிய, பாரத மாதா, இதழியலை அவர்க்கான களம் ஆக்கினாள். திலகர் தலைமையில் களம் இறங்கிய அவருக்குப் பாரத மாதாவாய்த் தரிசனம் தந்தவர் சகோதரி நிவேதிதா தேவி. அரசியல் விடுதலை என்கிற எல்லை கடந்து மண் விடுதலை, பெண் விடுதலை, மானுட விடுதலை என்கிற நிலைக்கு, பாரதியை உயர்த்தியவர் அவர். எழுத்தும், பேச்சும், இயக்கமும் பாரதிக்குள் தீவிரமாக இருந்து வினையாற்றத் தொடங்கியதன் விளைவு, பத்தாண்டுக்காலச் சிறைத்தண்டனை. அது ஆங்கிலேய அரசு அவருக்கு விதித்தது அன்று. அவர் தனக்குத் தானே விதித்துக் கொண்டது. தன்னொத்த வீரர்களைத் தான் தஞ்சமெனப் புகுந்த புதுவைக்கு முன் அழைத்து வந்து மீளவும் ஒரு போர்ப்படை கட்டப் புகுந்த பாரதியை முற்றிலும் செயற்பட விடாமல், ஒற்றர்களை வைத்துத் தற்காத்துக் கொண்டது ஆங்கிலேய அரசு. அதற்கிடையிலும், அவர் பாட்டுப் படை நடத்தி, பத்திரிகைக் கடை விரித்து, இந்திய மக்களைக் கூட்டுவிக்கத் துணிந்தார். உதிரிகளாய் அவரிடமிருந்து பிறந்து வெளிவந்த பாட்டுக்களைத் தொகுத்து, ‘ஜன்ம பூமி’ (ஸ்வதேச கீதங்கள்) இரண்டாம் பாகத்தை வெளியிட்டார். அதனை, நிவேதிதா தேவிக்குச் சமர்ப்பணமும் செய்தார்.

‘எனக்கு ஒரு கடிகையிலே மாதாவினது மெய்த்தொண்டின் தன்மையையும், துறவுப் பெருமையையும் சொல்லாமல் உணர்த்திய குருமணியும், பகவான் விவேகாந்தருடைய தர்ம புத்திரியும் ஆகிய ஸ்ரீமதி நிவேதிதா தேவிக்கு இந்நூலை, சமர்ப்பிக்கின்றேன்’ என்று எழுதுகின்றார்.

அதுவரைக்கும் மந்திரமாய்ச் சொல்லப்பட்ட வந்தே மாதரம் வந்ததற்கான காரணத்தையும் அப்போதே குறித்து ஓர் வெண்பாவும் பாடுகிறார்.

***விந்தைத் திலகர்அர விந்தரொடு பாலர்பதி***
***சிந்தைச் சிதம்பரமாம் செம்மலுமே - வந்திலரேல்***
***ஆதரமாம் அன்னை வளநா(டு) எங்கே வந்தே***
***மாதரமாம் மந்திரம் எங்கே?***

திலகருக்கு முன்னொட்டாய் ‘விந்தை’ (புதுமை)யைத் தந்த பாரதி, அரவிந்தரும், விபின சந்திர பாலரும் நடுவிருக்க, (வ.உ. சிதம்பரனாராகிய) சிதம்பரத்திற்குச் ‘செம்மல்’ எனும் பட்டம் தந்து பா(ராட்)டுகிறார். குருவாகவும், சக போராளிகளாகவும் இவர்கள் இருந்து சிறை புகுந்தும் நாடு கடத்தப்பட்டும் பட்ட அனுபவங்களின் பதிவு இப்பாட்டு.

இவர்களைப் போலவே, தன்னையும் நாடுகடத்திக் கொண்டு, சிறைப்படுத்திக் கொண்டு புதுவைக்குள் புகுந்த அவர் பட்ட பாடுகளை, அவர்தம் பாட்டுகள் பதிவிட்டிருப்பதைக் கால வரிசையில் வைத்துக் கணக்கிட்டுக் கொள்ளலாம். குறிப்பாக, அவர் மனைவியோடும், மக்களோடும் இணைந்து வாழ்ந்து பெற்ற துயரங்களை விடவும், தன் மனத்தோடு ஒத்து இருக்க முடியாமல் தவித்த தவிப்புகள் அனேகம். கர்மயோகி இதழில் வெளிவந்த அவர்தம் பாடல்களே அதற்கான அகச் சான்றுகள்.

மகாகவி பாரதி, தான் கடந்த வாழ்வின் கசடுகளை, கவர்ச்சி மிகுந்த காதல் உணர்வுகளை, இழந்த இன்பங்களை மீள நினைந்து பாடிய சுயசரிதைக்கு, ‘கனவு’ என்று பெயரிடுகிறார்.

வறுமையும் வெறுமையும் வந்து வாட்டப் பொறுமையிழந்து அவருக்குள் பொங்கிய கழிவிரக்கம் அவர்தம் பாடல்களில் பீறிட்டு ஒழுகுகின்றது. அத்தனை விரக்தியோடு வேறு எந்தப் பாடல்களிலும் எந்த இடங்களிலும் பாரதி பாடினார், பேசினார் அல்லர் என்பதையும் இந்த இடத்தில் மனக்கொள வேண்டும்.

‘நாசக் காசில் ஆசை நாட்டி, நல்லவன் ஆகிய தந்தை துயர்க்கடலில் வீழ்ந்த துயரத்தைச் சொல்லி, ‘பொருளி லார்க்கு இவ்வுலகம் இல்லை’ என்று பொய்யாமொழிப் புல வர் வள்ளுவர் சொன்னதை நினைவு கூர்ந்து, ‘பொருளிலார் பொருள் செய்தல் முதற்கடன்’ என்பதை வலியுறுத்தி, அதற் காக, அதனையே போற்றிக் காசுக்காக ஏங்கி உயிர்விடும் மருளர்களைப் பழித்த பாரதி, பின்வருமாறு அறம் பாடுகிறார்.

*அறம் ஒன் றேதரும் மெய்யின்பம் என்றநல்*
*அறிஞர் தம்மை அனுதினம் போற்றுவேன்*
*பிறவி ரும்பி உலகினில் யான்பட்ட*
*பீழை எத்தனை கோடி! நினைக்கவும்*
*திறன் அழிந்துஎன் மனம் உடைவு எய்துமால்.*
*தேசத்து உள்ள இளைஞர் அறிமினோ!*
*அறம்ஒன் றேதரும் மெய்யின்பம் ஆதலால்*
*அறனை யேதுணை என்றுகொண்டு உய்திரால்.*
*வெய்ய கர்மப் பயன்களின் நொந்துதான்*
*மெய் உணர்ந்திட லாகும்என்று ஆக்கிய*
*தெய்வ மேஇது நீதி எனினும்நின்*
*திருவ ருட்குப் பொருந்தியது ஆகுமோ?*
*ஐய கோ சிறி துஉண்மை விளங்குமுன்,*
*ஆவி நையத் துயர் உறல் வேண்டுமே!*
*பையப் பைய, ஓர் ஆமைகுன்று ஏறல்போல்*
*பாருளோர் உண்மை கண்டு இவண் உய்வரால்.*

அறிஞர் - திருவள்ளுவர். அவர் உரைத்த அறமே, வாழ்வின் திறம். அது தரும் இன்பம் ஒன்றே மெய்யின்பம். மற்றவை யாவும் பொய்யின்பங்கள். அதாவது, இன்பம் போலக் காட் டித் துன்பம் கொடுக்கும் மாயத் தோற்றங்கள். அவற்றை வெல்ல, அறத்தையே துணையாகக் கொண்டு உய்க என்ற இப்பாடலை உய்த்துணர்க. அவற்றை உணரவிடாமல் துயர் தருவது கர்மவினைப் பயன். அதனால் நொந்துபோகிறது மனம். நோவு வேறு. நொந்துபோதல் வேறு. நோவு - நோய். நொந்து போதல் என்பது, முனை முறியா அரிசி களைந்து, உலையிட்டு வேகும்போது வெந்த அரிசி சோறாகும். அளவு கடந்து குழைவுக்கும் மேலாக வெந்துவிட்டால், அது நொந்த சோறாகும். அரிசிக்கே இந்த அவஸ்தை எனில், ஆன்மா படும் துயரமோ அதனினும் பெரிதாகிறது. அதனைப் போக் கிக் காக்க வேண்டியது தெய்வத்தின் கடமை. இவற்றின் உண்மையை உணரும் பக்குவம் அந்த வயதில் எப்படி வாய்க்கும்? பாரதிக்கு வாய்த்தது. தனக்கு வாய்த்ததைத் தமி ழில் பாடுகிற பாரதி, ஓர் ஆமை, பையப்பைய, மிகமிக மெதுவாக, உயர்ந்த குன்று ஏறுதல் போல, இதனை உணர்ந்து உய்ய வேண்டும் என்கிறார் பாரதி.

பையப் பைய என்பது பாண்டிய நாட்டுப் பேச்சு வழக்கு.

வினைப்பயன் விடாது துரத்திச் சென்று அந்தந்த உயிர்க ளுக்குக் கொடுத்தே தீரும். ஆலவாய் நகராம் மதுரைக்கு வந்து ஆலவாய் அண்ணலைத் துதிக்க வந்தார் திருஞான சம்பந்தர். அவர் இருந்த மனைக்குத் தீ வைத்தனர் சமணர் கள். மன்னன் அனுமதியின்றி, இது நடந்திருக்காது. செங் கோலாட்சி செலுத்த வேண்டிய மன்னன் தன் கோல் வளை யத் தவறிழைத்தான் எனில், அது அவனுக்குத் தீவினை. அதனை அவன் அனுபவித்தே தீர வேண்டும். ஆயினும் அருள்மனத்தராகிய சம்பந்தர், வெங்கொடுமையாகி இவ் வெக்கை, பாண்டிய மன்னனைக் கொளுத்திவிடாமல் இருக்க, இரக்கம் கொள்கிறார்.

*செய்யனே! திரு ஆலவாய் மேவிய*
*ஐயனே! அஞ்சல்! என்று அருள்செய், எனை*
*பொய்யர் ஆம் அமணர் கொளுவும் சுடர்*
*பையவே சென்று, பாண்டியற்கு ஆகவே!*

என்று தொடங்கும் பதிகம் பாடுகிறார். அது வெப்பு நோயா கிப் பாண்டியனைத் தாக்கிட, பின்னர் திருநீற்றுப் பதிகம் பாடித் தீர்த்தும் வைக்கிறார்.

இந்தப் பாடலில் ஒருமுறை வரும் பைய, பாரதி பாடலில் இருமுறை வருகிறது.

வெய்ய கர்மப் பயன்களை அனுபவித்து நொந்துதான் மெய் உணர்ந்திடலாகும் என்று ஆக்கியது தெய்வம். தெய்வமே ஆயினும் அதற்கும் அதுதான் விதி. அதுவே நீதி. ஆனா லும், தெய்வத்தின் திருவருளுக்கு இது தகுமா? என்று கசி கிறது பாரதியின் ஆன்மா. ஐயகோ என்று கதறுகிறது. இது அவலத்தின் உச்சம். சிறிது உண்மை உணரும் முன் ஆவி (உயிர்/ஆன்மா) நைந்துபோகும்படியாகத் துயர் உறல் வேண்டும். அதுவரை பொறுமையோடு இருந்தால் போதாது. அதனை வெல்ல முயலவும் வேண்டும். முயல் போல முடி யாவிடினும் ஆமை போலவேனும் இடைவிடாது இயங்க வேண்டும். (ஒருமையுள் ஆமைபோல் என்ற திருக்குறளை இதனோடு இணைத்துச் சிந்திக்கலாம்.) சமதளத்தில் ஆமை செல்லவே அயர்வுறும்போது, குன்றின்மீது ஏறுதல் எத்தனை கொடுமை? (அது மலையன்று. மலைப்புத் தரும் அளவுக்கு உயர்ந்தால் அது மலை. அதன் மேற்பகுதியான குன்றோ, அடி பருத்து மேற்பகுதி குன்றி அமைவது. சற்றே தவறினா லும் சறுக்கிக் கீழே தள்ளிக் கொன்றுவிடும் அளவிற்குக் குன் றியது. அதைப் பற்றி ஏறுதல் குரங்குக்கு வேண்டுமானால் எளிதாக இருக்கலாம். ஆமைக்கு? நல்ல வேளை, ஆமைக்கு உரம் வாய்ந்த ஓட்டை முதுகாகத் தந்தது போல், மனித ஆன்மாவுக்கு அறிவு எனும் காப்புக் கவசத்தைக் கட வுள் தந்திருக்கிறான். அறிவு அற்றம் காக்கும் கருவி அல் லவா? அதனை இந்த உலகத்தில் வாழ்பவர்கள் உய்த்து உணர்ந்து கடைப்பிடித்து ஒழுகி, இங்கே உய்தி (விமோச னம்) பெறுவீர்களாகுக என்கிறார் பாரதி.

*பையப் பைய, ஓர் ஆமைகுன்று ஏறல்போல்*
*பாருளோர் உண்மை கண்டு இவண் உய்வரால்.*

இது ஊருக்கான உபதேசம் என்று தான் உய்த்துணர்ந்து பெற்ற அனுபவத்தின் புலப்பாடு. திருக்குறள் வழிநின்று வாழத் துணிந்தவர், முயற்சி செய்தவர் பாரதி. அவர் வள்ளு வம் உரைத்த அறம், பொருள் இரண்டின் திறம் உணர்ந்து இன்பம் துய்க்கும் நிலையில் இல்லறம் புகுந்தபோது(1897) பாரதிக்கு வயது பதினைந்து. அவர்தம் வாழ்க்கைத் துணை நலமாய் வாய்த்த செல்லம்மாளுக்கோ, அதனினும் குறைந்த வயது. (குழந்தை மணத்தின் கொடுமையை, அந்தக் குழந்தை மனம் அனுபவித்த கொடுமையின் வெடிகளாய் அவரிடமிருந்து புறப்பட்ட பாடல்கள் பதிவிடப் பார்க்கலாம்.) அதைவிடவும் கொடுமை, பிறந்த ஐந்து ஆண்டுகட்குள் பார தியை விட்டுத் தாய் பிரிந்ததைப் போல, மறுமணம் புரிந்து இரு மதலைகளைப் பெற்ற தந்தையும் இறக்கிறார்.



*தந்தை போயினன், பாழ்மிடி சூழ்ந்தது*
*தரணி மீதினில் 'அஞ்சல்'என் பார் இலர்*
*சிந்தை யில்தெளிவு இல்லை உடலினில்*
*திறனும் இல்லை உரன் உளத்து இல்லையால்*

*மிடி- வறுமை. அதுவும் பாழ்மிடி.*
*அனைத்தையும் பாழாக்கும் வறுமை.*

*கொடிது கொடிது வறுமை கொடிது*
*அதனினும் கொடிது இளமையில் வறுமை*

என்ற ஔவையின் வாக்கை இணைத்துச் சிந்தித்தால் இதன் கொடுமை இன்னும் புரிபடும். தரணி - உலகம். இந்த உலகத்தில் இருக்கும் எவரும் தன்னிடம் 'அஞ்சாதே' என்று ஆறுதல் கூறுவார் இலர். எனக்கோ சிந்தனையில் தெளிவு இல்லை. உடலிலும் திறன் இல்லை. உள்ளத்தில் உறுதி இல்லை. இப்படி, உடலும் உள்ளமும் சிந்தையும் தடுமாறிக் கலங்கிய பாரதிக்கு, அறிவு துணையாக வேண்டும் அல்லவா? அதற்குத்தானே, அவர் தந்தை அரும்பாடுபட்டு, நெல்லையில் கொண்டு போய்ப் பள்ளியில் சேர்த்தார். மேல் செலவுக்கு அவரால் நிதி தர முடியாத நிலையில், எட்டயபுர மன்னருக்கு அந்தச் சிறுவயதிலேயே, பாரதி சீட்டுக் கவி எழுதி, நிதி வேண்டிய வரலாற்றை மறக்க முடியுமா? அப்படிச் சிரமப்பட்டுப் பயின்ற கல்வியால் பெற்ற பயன் என்ன? ஒரு மண்ணும் பயன் இல்லையாம்.

*மந்தர் பால்பொருள் போக்கிப் பயின்றதாம்*
*மடமைக் கல்வியால் மண்ணும் பயனிலை.*

இது பாரதியின் வாக்குமூலம். இந்த நேரத்தில் இவருக்கு உதவ எந்த மார்க்கமும் (வழியும், சமய நெறியும்) தோன்றவில்லை. என் செய்வேன்? ஏன் பிறந்தேன் இந்தத் துயர்மிக நாட்டில் என்று பாடி நொந்துபோகிறார்.

*எந்த மார்க்கமும் தோற்றிலது என்செய்கேன்?*
*ஏன்பி றந்தனன் இத்துயர் நாட்டிலே?*

இது தற்கொலைக்குத் தயார்படுத்தும் தருணம். தாயினும் சாலப் பரிந்து தைரியம் கொடுத்துக் காக்கும் உறவுகள் இல்லாத உயர் கொடுமை. தன்னம்பிக்கையில் நிறைந்து நிற்கும் பாரதி, தாய்நாட்டுப் பற்றில் தனித்துயர்ந்து நிற்கும் பாரதி, தன்னையும் நொந்துகொண்டு, தாய்நாட்டையும் பழிகூறிப் பிதற்றிப் பாடும் அளவிற்கு, வெய்யகர்ம வினை அவரைப் பாடாய்ப்படுத்தி இருக்கிறது அல்லவா?

எட்டயபுரத்துச் சுப்பையா (சுப்பிரமணியன்) கிட்டத் தட்ட இறந்துபோன பொழுது, இந்த நிலை, எல்லா இளைஞர்களுக்கும் வந்தே தீரும். வேதனை மிகுந்த இந்தக் காலகட்

டத்தைக் கடக்கத் தமிழே உற்ற துணை.

சமயநெறி சார்ந்து ஒழுக வேண்டிய சமயம் இதுதான். இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட்ட சோகத்தில்தான், 'குறிக்கோள் இலாது கெட்டேன்' என்று பாடுகிறார் அப்பர் பெருமான். பட்டினத்தார் தொடங்கி, உலகத்தார் யாவரும் அவதிப்பட்டாக வேண்டிய காலம் இதுதான். சராசரி மனிதர்கள், தன்னே நொந்து சாகும் தருணம் இதுதான்.

*தேடிச் சோறுநிதம் தின்று – பல*
*சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்*
*வாடித் துன்பமிக உழன்று – பிறர்*
*வாடப் பலசெயல்கள் செய்து – நரை*
*கூடிக் கிழப்பருவம் எய்தி – கொடுங்*
*கூற்றுக்கு இரையெனப் பின்மாயும் – பல*
*வேடிக்கை மனிதரைப் போலே – நான்*
*வீழ்வேன் என்றுநினைத் தாயோ?*

என்று தெய்வத்தை நோக்கிக் கேட்டவர் அல்லவா, பாரதி.

*நின்னைச் சிலவரங்கள் கேட்பேன் அவை*
*நேரே இன்றெனக்குத் தருவாய் – என்றன்*
*முன்னைத் தீயவினைப் பயன்கள் – இன்னும்*
*மூளாது அழிந்திடுதல் வேண்டும்*

என்று முறையிட்டவர் அல்லவா? சராசரி நிலையினின்று உயர்ந்து சாதனை படைத்த மனிதர்கள் யாரும் கடக்க வேண்டிய இடம் இது. அதற்குத் தெய்வம் அல்லது தெய்வாம்சம் பொருந்திய குறிக்கோள் இன்றியமையாதது.

வினைப் பயனால் உடலும் உயிரும் கிடந்து அல்லலுற்று அவதிப்பட்டபோது, பாரதியின் ஆன்மா இறையருளை நினைந்தது நல்லூழ். அதனை அப்படியே நமக்கும் உணர்த்திக் காட்டியது அவர்தம் நற்கருணை. அதனால் தான்,

*இனி*
*என்னைப் புதிய வுயிராக்கி-எனக்கு*
*ஏதும் கவலைஅறச் செய்து – மதி*
*தன்னை மிகத்தெளிவு செய்து – என்றும்*
*சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்.*

என்று நம்மையும் சேர்த்துக் கொண்டு விண்ணப்பிக்கிறார் பாரதி.

எப்படி இருந்தாலும், நடக்கிற வரைக்கும் நிழலாக இருந்து, கடக்கிறபோது அனுபவமாய் மாறிப், பின்னர் நினைக்கிற போது கனவுபோல் நிற்கிறது இந்த வாழ்க்கை.

*உலகெ லாம்ஓர் பெருங்கனவு அஃதுளே*
*உண்டு உறங்கி இடர்செய்து செத்திடும்*
*கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கைஓர்*
*கனவி னும்கனவாகும் இதற்குநான்*
*பலநி னைந்து வருந்திஇங்கு என்பயன்?*
*பண்டு போனதை எண்ணிஎன் னாவது?*
*சிலதி னங்கள் இருந்து மறைவதிற்*
*சிந்தை செய்து எவன் செத்திடு வானடா!*

இது விரக்தியில் பிறந்த வீறாப்பு. அதனால் விளைந்த வீர வசனம். ஓட ஓட விரட்டிய விதியை, 'கூட வா' என்று அழைத்துப் பற்ற விரைந்த மரணத்தை, எந்த விதத்திலும் நிம்மதியில்லாமல் அலைக்கழித்து வாட்டிய நினைவுகளை, எரிச்சலின் உச்சத்தில் இருந்து எதிர்த்து எழுப்பிய கலகக் குரல்தான் இது.

பண்டு போனதை எண்ணி என்னாவது?

இருக்கப் போவது சில நாட்கள். இறக்கப் போவது ஓர் முறை. அதற்கு இடையில் நாளும் நாளும் நொடிக்கு நொடி இதையே எண்ணி எண்ணிச் சாவது எதற்கு? தப்பிப்பது எவ்விதம்?

பிறந்த இடம், வளர்ந்த சூழல், வாழ்க்கைப் போக்கு, எல்லாமும் இருக்கிற இடத்தில் இருந்தே அனுபவிப்பவர்களுக்கு வேண்டுமானால், இன்பமாக இருக்கலாம். துன்பமாக இல்லாவினும் கடினமான அளவில் நிலைக்கலாம். இனி, தான் பிறந்த மண்ணில் இருந்து வாழவே முடியாது என்று துரத்தப்படுகிற நிலையில், இருப்புக்கு வாய்ப்பின்றி, இறப்புக்கு மட்டுமே வாசல் திறக்கப்பட்டிருக்கிறபோது என்ன செய்ய முடியும்?

எட்டயபுரத்து அரண்மனைப் புலவர்களுடன் இருந்து கற்ற தமிழ், பாரதிக்குக் கை கொடுக்கிறது. சில தெளிவுகள் பிறக்கின்றன.

- ஞானமும் துறவும் பெற்றிராதவர்கள், இந்த உலகத் துயர் தவிர வேறு எதனையும் காண முடியாதவர்கள் ஆவார்கள். தன் நிலையும் அந்நிலை தான். அதற்காகப் போனதை எண்ணி வருந்தி யாது பயன்?
- உலகத் துயரில் இருந்து விடுபட வேண்டுமெனில், ஞானமும் துறவும் வேண்டும். அந்நிலை பெறச் செய்யும் முயற்சியானது, வானத்தில் ஒளிரும் விண்மீனைப் பிடிக்கக் குளத்து மீனைப் பிடிக்கப் பயன்படும் தூண்டிலை வீசுவது போல் ஆகும்
- இதுவரை ஆனது போகட்டும். இனி ஆவதேனும் நல்லதாக இருக்கட்டும். இவ்விரண்டையும் செய்பவள் அன்னை பராசக்தி.

ஆகவே, ஆனது, ஆவது அனைத்தும் செய்கிற அன்னையே, இதுவரை எனை மறந்து இருந்தது போதும். இனியேனும் எனக்கு அருளுக என்று வேண்டி, தன் சுயசரிதைக்கான முடிவுரையைப் பின்வருமாறு எழுதுகிறார்.

*ஞான மும்துற வும்பெற்றி லாதவர்*
*நானி லத்துத் துயர்அன்றிக் காண்கிலர்.*
*போன தற்கு வருந்திலன். மெய்த்தவப்*
*புலமை யோனது வானத்து ஒளிரும்ஓர்*
*மீனை நாடி வளைத்திடத் தூண்டிலை*
*வீசல் ஒக்கும் என்நிலை மறக்கிலேன்.*
*ஆனது ஆவது தனைத்தையும் செய்ததோர்*
*அன்னை யே! இனி யேனும் அருள்வையால்*

ஈன்ற தாய் இறந்துவிட்டாள். எடுத்து வளர்த்த தந்தையும் மாண்டார். இந்த நிலையில், தன் உடலில் இருந்து உயிரை விடுத்தல், தற்கொலை. தன்னலத்திற்காகக் கூட இருப்போரை வாட்டி வதைத்து உயிரை எடுப்பது கொலை. தனக்கும் எவர்க்கும் தொல்லையில்லாமல், உடலோடும் உயிரோடும் எங்கேனும் போய்விடுவது நல்லதல்லவா? உலகம் என்பது உள்ளூர் மட்டும்தானா, என்ன?

புலம்பிச் சாவதை விடப் புலம்பெயர்தல் ஒன்றே கதி என்ற நிலைப்பாடு வந்துவிடுகிறது. மரணத் தறுவாயில் காசிக்குச் சென்று மோட்சம் பெறுதல் இந்துக்களின் கடப்பாடு என்று

கருதும் நாட்டில் பிறந்த வைதீக சமயத்துப் பார்ப்பானனாகிய சுப்பையாவை விதி பிடர் பிடித்து உந்தித் தள்ளி, வாராணசியில் சேர்க்கிறது. (1898) அன்னையாக வந்து அத்தை குப்பம்மாள் சுப்பையாவை அழைத்துக் கொண்டு காசிக்கு ஏகுகிறார். எட்டயபுரத்தில் முடிந்துபோன சுப்பையாவின் வாழ்வில் மூன்றாவது அத்தியாயம் முளைக்கிறது. பின்னர் மீளவும் எட்டயபுரத்திற்கு வந்து மதுரை, சென்னை எனப் பணிகளின் காரணமாய், இருந்து பணி செய்து, தன்னையே சுயசிறைக்குள் இட்டுக் கொண்டாற்போல், புதுவைக்கு வருகிறார் பாரதி. இடையில் எத்தனையோ அத்தியாயங்கள் பாரதி வாழ்வில் எழுந்து விடுகின்றன. புதுவைக்கு வந்து மீளவும் தான் பிறந்த இடம் நோக்கித் திரும்புவதற்குள் ஏழு புலப்பெயர்வுகள் பாரதிக்கு நேர்ந்துவிடுகின்றன.




- இளம்பருவ இன்பங்களைக் கொன்று, எட்டயபுரத்தை விட்டுக் கிளப்பி, கல்வி கற்க, நெல்லையில் கொண்டுபோய்ச் சேர்த்தவர் தந்தை. இது பாரதியின் முதல் புலம்பெயர்வு. (1985)
- மணமுடித்த மறு ஆண்டே, தந்தை இறந்தபின் தாயும் ஆகித் தாங்கிய அத்தையால், காசிக்குச் சென்ற பாரதியின் இரண்டாம் புலம்பெயர்வு. (1898)
- இதற்குப் பின்னர், காசிக்கு வந்த எட்டயபுர மன்னர், மீளவும் பாரதியை எட்டயபுரத்தில் கொண்டு வந்து சேர்க்கிறார். இது பாரதிக்கு நேர்ந்த மூன்றாம் புலம்பெயர்வு. (1903)
- அரண்மனை வாழ்வில் நேர்ந்த கசப்பான அனுபவங்களால் பள்ளியாசிரியப் பணியேற்று மதுரைக்கு வருகிறார் பாரதி. இது நான்காம் புலம்பெயர்வு. (1904, ஆகஸ்ட் 1)
- அங்கும் நிலைகொள்ளாது, வெளியேறிச் சென்னை வந்து சேர்ந்தது, ஐந்தாம் புலம்பெயர்வு. (1904, நவம்பர்)
- அரசியல் களத்தில் ஆவேசம் கொண்டு பாரதி செய்த பணிகளுக்குப் பரிசாகச் சிறைத்தண்டனை ஆயத்தமாக இருக்கிறபோது, நண்பர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கிப் புதுச்சேரிக்கு வந்தது ஆறாம் புலம்பெயர்வு. (1908)
- அதன் பின்னர், ஆனது ஆகட்டும் என்று புதுவையை விட்டுப் புறப்பட்டபோது கைதாகிக் கடலூர்ச் சிறைவாசம் பெற்றுக் கடையம் சேர்ந்தது, ஏழாம் புலம்பெயர்வு. (1918)

ஏழு பிறவிகள் எடுத்துக் கடக்க வேண்டிய தூரத்தை, தீர்க்க வேண்டிய கர்ம வினைகளை, இந்த ஏழு புலப் பெயர்வுகளில், ஆறு புலப்பெயர்வுகளுக்குத் துணை செய்து, அருள் வழி காட்டியவர்கள், திலகரும், நிவேதிதா தேவியாரும்,

தனது 36 வயதுக்குள் இவையனைத்தையும் முற்றாகத் துடைத்து எறிந்துவிட்டு, வெகு சீக்கிரமாய்க் கடந்து வெளியேறக் கருணை கூர்ந்து வழிகாட்டியவர்கள் புதுவைவாழ் சித்தர்கள்.

அதுவரைக்கும் அவர் வாழ்வு இருவகைப்பட்ட இயக்கங்களாக இருந்தது.

- குன்று ஏறும் ஆமைபோல் இயக்கம்
- விண்மீன் பிடிக்க வலைவீசும் முயற்சி

இவ்விரண்டும் பாரதிக்கு வெகு எளிதில் சாத்தியமானது, குருநாதர் குள்ளச்சாமியின் திருவருளால்தான். அவர்வழி, பாரதி ஒருமைக்கண் தான் கற்ற கல்வியால், இந்த எழுபிறப்பும் கடந்து மறுபிறவி எடுத்திருக்கிறார். மரணமிலாப் பெரும்பிறவி பெற்றிருக்கிறார் என்பது வரலாறு. அது எவ்வாறு என் பதை இனிமேல் பார்க்கலாம்.



sethupathi@thaiveedu.com

# தமிழ்ப் பண்பாட்டுக் கருவூலமான பதிற்றுப்பத்து ஒரு செவ்விலக்கியம்

– செல்வநாயகி ஸ்ரீதாஸ்

## பதிற்றுப்பத்து - தமிழ் பண்பாட்டுக் கருவூலம்

## முகவுரை:

ஒரு குடிப் பிறந்த பத்து அரசர்களைத் தொடர்ச்சியாகக் கால முறை தவறாது பத்துப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுதி என்ற வகையில் பதிற்றுப்பத்து ஏனைய சங்க இலக்கியங்களிலிருந்து வேறுபடுகிறது.

கருதுகோள் - ‘பதிற்றுப்பத்து, ஒரு வரலாற்று ஆவணமாக இருந்தாலும் அது ஒரு செவ்விலக்கியம்’ என்பது கருதுகோ ளாகும். பதிற்றுப்பத்துப் பாடல்களைத் தொகுத்தும் பகுத் தும் வகுத்தும் இவ்விலக்கியத்தில் காணப்படும் செவ்விலக்கி யப் பண்புகளை இனம் காண்பது இந்த ஆய்வாகும்.

## பதிற்றுப்பத்து - தமிழ் பண்பாட்டுக் கருவூலம்:

### சேரர் வரலாறு:

ஒரு குடிப் பிறந்த பத்து அரசர்களைத் தொடர்ச்சியாகக் கால முறை தவறாது பத்துப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுதி என்ற வகையில் பதிற்றுப்பத்து ஏனைய சங்க இலக்கியங்களிலிருந்து வேறுபடுகிறது. பதிற்றுப்பத்து தமிழர் பண்பாட்டினைக் காட்டும் கண்ணாடியாகும்.

பதிற்றுப்பத்து, பத்து மன்னர் மேல் பாடப்பட்ட 100 பாடல்க ளைக் கொண்ட தொகுதியாக இருந்து, முதல் பத்தும் இறு திப் பத்தும் காலத்தால் அழிந்தன போக தற்பொழுது 80 பாடல்களே எஞ்சியிருக்கின்றன.

### சேர மன்னர் பரம்பரை:

சேரர், சங்க இலக்கியங்களில் சேரலாதர், ஆதன், கோதை, குட்டுவன், குடவர், இரும்பொறை முதலிய பெயர்களால் அறியப்படுகிறார்கள். சேர மன்னர், வஞ்சியைத் தலைநகரா கக் கொண்டு ஆண்ட உதியன் சேரலாதன் மரபினர், தொண் டியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட இரும்பொறை மர பினர் என இரு கிளையினராக அறியப்படுகின்றனர்.

### சேரர் ஆட்சிச் சிறப்பு:

அவர்களிடையே நிலவிய ஒற்றுமை, அரசு பற்றிய புரிந்து ணர்வு, நாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்து ஆண்டமை முதலிய அரசியல் காரணங்களாலும் கடல் வளமும் மலை வளமும் கொண்ட பொருளாதாரச் சிறப்பு காரணத்தாலும் சேர நாடு, சோழ பாண்டியரது நாடுகளைவிடச் சிறப்பாக




இருந்ததாக அறியப்படுகிறது. சேரரது ஆட்சிக்குட்பட்ட பகுதி, பரப்பளவில் பெரியது என்றும் அறியப்படுகிறது.

சங்க காலத்தில் 25 சேர அரசர்கள் ஆட்சி செய்ததாகச் சங்க இலக்கியங்கள் பதிவு செய்கின்றன. சேர மன்னர்கள், சேர நாட்டை, குட்டநாடு, குடநாடு என்று இரு பிரிவாகப் பிரித்தனர். தொண்டியைத் தலைநகராகக் கொண்ட குட நாட்டை ஆண்டவர்கள் குடக்கோக்கள். வஞ்சியைத் தலைந- கராகக் கொண்ட குட்ட நாட்டைக் ஆண்டவர்கள் குட்டர்கள். ‘ஒரு குடிப் பிறந்த இருவருள் முன்னவன் குட்ட நாட்டிலும் பின்னவன் குடநாட்டிலும் அரசாள்வர்.’ என்கிறார் ஔவை சு.- துரைசாமிப்பிள்ளை.

சேரர் இருப்பு தொல்காப்பியர் காலத்திலும், தொல்காப்பியர்

‘என்மனார் புலவர்’ என்று கூறியதால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பேயும் இருந்ததாகவும் அறியப்படுகிறது.

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் காணப்பட்ட ஒப்பற்ற மறப்பண்பும், கொடைப் பண்பும், அறநெறிப் பண்பும், புலமைச் செறிவும், அரசியல், சமூகப் பொருளாதார மேன்மையுமே இக் காலத்தில் ஒப்பற்ற செவ்வியல் இலக்கியங்கள் தோன்றியதற்கான நிலைக்களன்களாகும்.

பதிற்றுப்பத்துப் பாடல்களைத் தொகுத்தோர் ஒவ்வொரு பத்துக்கும் பதிகம் ஒன்றினையும் இணைத்துள்ளனர். பாடிய புலவர், பாடப்பட்ட மன்னன், புலவர் பெற்ற பரிசில் முதலான செய்திகளைப் பதிகம் கூறுகிறது. பாடப்பட்ட சேர மன்னனின் மெய்க்கீர்த்தி போலப் பதிகம் அமைந்திருக்கிறது.

**பத்துப்பாட்டில் பாடப்பட்ட சேர மன்னர்களும் பாடிய புலவர்களும்:**

| பத்துப் பாட்டு பாடல் | பாட்டுடைத் தலைவன் | பாடிய புலவர் | உறுதி செய்யப்படாத ஆட்சி ஆண்டு | சமகால அரசர், புலவர் |
|---|---|---|---|---|
| 1ஆம் பத்து | உதியஞ் சேரலாதன் | | | கரிகால் பெருவளத்தான் |
| 2ஆம் பத்து | இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் | குமட்டூர் கண்ணனார் | 58 ஆண்டு | |
| 3ஆம் பத்து | பல்யானை செல்கெழு குட்டுவன் | பாலைக் கௌதமனார் | 25 ஆண்டு | |
| 4ஆம் பத்து | களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் | காப்பியாற்றுக் காப்பியனார் | 25 ஆண்டு | தலையானங்-கானத்து செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் |
| 5ஆம் பத்து | கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன் | பரணர் | 55 ஆண்டு | கபிலர் |
| 6ஆம் பத்து | ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் | காக்கை பாடினியார் நச்செள்-ளையார் | 38 ஆண்டு | |
| 7ஆம் பத்து | செல்வக் கடுங்கோ வாழியாதன் | கபிலர் | 25 ஆண்டு | மோசியார், கோப்பெரு-நற்கிள்ளி |
| 8ஆம் பத்து | தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை | அரிசில் கிழார் | 17 ஆண்டு | அதியமான் |
| 9ஆம் பத்து | இளஞ்சேரல் இரும்பொறை | பெருங்குன்றூர் கிழார் | 16 ஆண்டு | |
| 10ஆம் பத்து | கிடைக்கவில்லை | | | |

## செவ்வியல் - விளக்கம்:

தமிழில் செவ்வியல் என்பதன் அடிச் சொல் ‘செம்மை’, செம்மை + இயல் = செவ்வியல் ஆகும். தமிழ் மொழியின் செவ்வியல் தகைமையை நிலைநாட்டும் பணியில் 1856-ல் டாக்டர் கால்டுவெல், 1903-ல் பரிதிமாற்கலைஞர், (1902-1961) தேவநேயப்பாவாணர், வா.செ. குழந்தைசாமி, மணவை முஸ்தபா, கா. சிவத்தம்பி, பேரா. ஜார்ஜ் எல். ஹார்ட் உள்ளிட்ட பல அறிஞர்கள் ஈடுபட்டனர்.

**பேரா. ஜார்ஜ் எல். ஹார்ட் அவர்களின் செவ்வியல் மொழிக்கான இலக்கணம் வருமாறு:**

- பழமையானதாக இருக்க வேண்டும்
- தனித்துவமான மரபைக் கொண்டதாக, வேறு மரபிலிருந்து கிளைத்திராததாக இருக்க வேண்டும்
- வளமான பண்டைய இலக்கியத் திரட்சி கொண்டதாக இருக்க வேண்டும்.

இந்திய மத்திய அரசின் உள்நாட்டு அமைச்சகம், செவ்வியல் பற்றி ஆய்ந்து அறிக்கை வெளியிடும் பொருட்டு அமைக் கப்பட்ட வல்லுநர் குழுவினர், செவ்வியல் மொழியின் தகுதிகள் எவை என்பது இதுவரை அதிகாரபூர்வமாக எந்த ஒரு நிறுவனத்தாலும் நிர்ணயிக்கப்படாததால், கிரேக்கம், லத்தீன், சீனம், வடமொழி போன்ற மொழிகளைச் செவ்வியல் மொழிகள் என அங்கீகரிப்பதில், உலக அளவில் அறிஞர் மத்தியில் ஒப்புக் கொள்ளப்பட்ட அம்சங்களை மனதில் கொண்டு, ‘பல துறைகளிலும் உயர் வளர்ச்சியடைந்த, ஒரு வரலாற்றுக் கால உயர்நிலைச் சமூகமே, ஒரு செவ்வியல் இலக்கியக் காலகட்டத்தைப் படைக்க முடியும்’ எனக் கொண்டு, பின்வரும் தகுதிகளைப் பதிவு செய்தது.

- தொன்மையான அதாவது 1500 முதல் 2000 ஆண்டுகள் பழமையான இலக்கியங்கள் பெற்ற வரலாறு.
- அம்மொழிக்கே உரியதாகவும், மற்ற மொழிக் குடும்பத்தினரிடமிருந்து கடன் பெறாததுமான, இலக்கியப் பாரம்பரியம்.
- மனித இனத்திற்குச் செறிவூட்டும், அரிய பண்புகள் அடங்கிய, தனித்துவமான இலக்கிய மரபைக் கொண்டிருக்க வேண்டும்.
- செவ்வியல் மொழியும் அதன் இலக்கியமும் அம்மொழியின் நவீன இலக்கியத்திலிருந்து வேறுபட்டு இருக்கும் பண்பு.

அரசியல் தேவைகளுக்காகப் பின்னர் இத்தகைமைகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

செவ்வியல் தகைமைகளின் அடிப்படையில் ‘பதிற்றுப்பத்து செவ்விலக்கியம்’ என்று அடையாளம் காண்பதே இந்த ஆய்வாகும்.

## தொன்மை - பதிற்றுப்பத்து:

'அரசியல், சமூகப் பொருளாதாரம் முதலாய பல துறைகளிலும் உயர் வளர்ச்சியடைந்த, ஒரு உயர்நிலைச் சமூகமே, ஒரு செவ்வியல் இலக்கியக் காலகட்டத்தைப் படைக்க முடியும்' என்பது அறிஞர் கருத்து. பதிற்றுப்பத்து, தமிழ் நாடு, அரசியல், சமூகம், பொருளாதாரம் முதலிய துறைகளில் உயர்நிலை பெற்றிருந்த காலகட்டத்திலேயே பாடப்பட்டிருக்கிறது.

பன்மொழி வல்லுனரான பேரா. ஜார்ஜ் எல். ஹார்ட், 'தமிழ் மொழி உலகின் மிக உயர்ந்த செவ்வியல் இலக்கியங்களையும் மரபுச் செல்வங்களையும் பெற்றுத் திகழும் உயர் தனிச் செம்மொழிகளுள் ஒன்று என்பதை எவ்வித தயக்கமும் இன்றி அறுதியிட்டுக் கூறுவேன்' என்று கூறியதையும் குறித்துக் கொள்வோம்.

தமிழ் செவ்விலக்கியங்கள், பொ.ஆ.மு. 6-ம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.மு. 1-ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் பாடப்பட்டிருக்க வேண்டும் என்பது ஆய்வாளர் கருத்து. அண்மைக்கால அகழாய்வுகளும் இதனை உறுதிப்படுத்துவனவாகவே உள்ளன.

## தொல்காப்பியத்தில் சேர மன்னர் பற்றிய குறிப்பு முதன் முதலில் பேசப்படுகிறது:

*'போந்தை, வேம்பே, ஆர்என வரூஉம்*
*மாபெரும் தானையர் மலைந்த பூவும்'*
என்று, புறத்திணையியல் 5-ம் நூற்பாவாலும்

*'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்*
*நாற்பேரெல்லை அகத்தவர் வழங்கும்*
*யாப்பின் வழியது என்மனார் புலவர்'*
என்று, செய்யுளியல் 75-ம் நூற்பாவாலும்

சேரர் இருப்பு, தொல்காப்பியர் காலத்திலும் 'தொல்காப்பியர் காலத்திற்கு முன்பேயும் இருந்ததாக அறியப்படுகிறது. தொல்காப்பியர் காலம் பொ.ஆ.மு. 711-ம் ஆண்டு என்பது அறிஞர் கருத்து. எனவே, சேர அரசின் தொடக்க காலம் பொ.ஆ.மு 8-ம் நூற்றாண்டுக்கு முன்னாக இருக்கலாம்.

## சங்கப் புலவர்கள்:

- பதிற்றுப்பத்தின் 1-ம் பத்தின் பாட்டுடைத் தலைவனான உதியஞ்சேரலாதனுக்கும் சோழன் கரிகாலனுக்கும் நடந்த வெண்ணிப் பறந்தலைப் போரை, கழாத் தலையாரும் வெண்ணிக் குயத்தியாரும் நேரிற் கண்டு பாடியிருக்கிறார்கள் (புறநானூறு 65, 66). எனவே, உதியஞ்சேரலாதன் கரிகாலன், கழாத் தலையார், வெண்ணிக் குயத்தியார் ஆகியோர் ஒத்தகாலத்தவர்.
- கடல் பிறக்கோட்டிய சேரன் செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்தின் 5-ம் பத்தில் பரணரும், செல்வக் கடுங்கோ வாழியாதனை 7-ம் பத்தில் கபிலரும் பாடியிருக்கிறார்கள். அதாவது இரு தலைமுறை முன் பின்னாகக் கபிலரும் பரணரும் பாடியிருக்கிறார்கள். பதிற்றுப்பத்தில் 5-ம் பத்துப் பாடிய பரணரும், 7-ம் பத்துப் பாடிய கபிலரும், 8-ம் பத்துப் பாடிய அரிசில் கிழாரும், 9-ம் பத்துப் பாடிய பெருங்குன்றூர் கிழாரும் பேகனையும் பாடியிருக்கிறார்கள்.

புலவர்கள் பாடிய பாடல்களைக் கொண்டு அப்புலவர்கள் வாழ்ந்த காலப்பகுதியைக் கணிப்பதும் அக்கணிப்பைத் துணைச் சான்றுகளாகக் கொண்டு மன்னர்கள் காலக் கணிப்பை மேற்கொள்வதும் ஒரு வகை உத்தியாகக் கொள்ளலாம்.

- கபிலர், பாரியின் வீழ்ச்சியின் பின்பே 7-ம் பத்தைப் பாடியிருக்கிறார். பரணரின் வயோதிப காலத்தில் கபிலர் நடுத்தர வயதினராக 7-ம் பத்தைப் பாடியிருக்கலாம்.
- கபிலர், கழாத்தலையாரைத் தமக்கு முற்பட்டவராகக் குறிப்பிடுகிறார்.
- உதியஞ்சேரலாதன், கரிகாலன், இருங்கோவேள், கபிலர், பரணர், கழாத்தலையார், வெண்ணிக்குயத்தியார், முடத்தாமக் கண்ணியார், கருங்குழல் ஆதனார், கடியலூர் உருத்திரங்கண்ணனார் ஆகியோர் ஒரே (நீண்ட) காலப் பகுதியினர்.
- ஒரு தலைமுறைக்கு சராசரி 25 ஆண்டுகள் ஆட்சிக்காலம் என்று எடுத்துக் கொண்டால் கபிலருக்கும் கழாத்தலையாருக்கும் ஏறக்குறைய 150 ஆண்டுகள் இடைவெளி இருக்க வேண்டும். உதயஞ்சேரலாதனுக்கும் செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கும் இடைப்பட்ட காலம் குத்து மதிப்பாக 150 ஆண்டுகளாக இருக்கலாம்.

## அசோகனின் கிர்னார் கல்வெட்டு, சங்க கால வேளிர் மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சியின் காலம் பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டு என்பதை உறுதி செய்கிறது:

பதிற்றுப்பத்து, அரச உருவாக்கத்தில் 'முதுகுடி மன்னர்' உருவாகிவிட்ட நிலையைத் தெளிவாகக் காட்டுகிறது. மழவர், ஆவியர், அதியர் குடி, ஆய் குடி, வேளிர் குடி முதலிய மன்னர் மலைப் பகுதியில் உருவாகி விட்டனர். இவர்களுள், குதிரை மலையின் மன்னனான அதியமான் நெடுமான் அஞ்சி, தமிழ் நாட்டு மன்னர்களால் மட்டுமல்லாது வடஇந்திய அசோக மன்னனாலும் அறியப்பட்டவன்.

சங்க காலத்தின் 'காலம்' பற்றிய ஆய்வுக்கு தகடுரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட அதியமான் வரலாறு ஒரு மைல் கல்லாக அமைகிறது.

## தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் காலம்:

தகடூர் போர் பொ.ஆ.மு. 3-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

நடந்திருக்கலாம். மலையமான் திருமுடிக்காரி, ஓரி, அதியமான், பெருஞ்சேரல் இரும்பொறை, சோழ மன்னன், பாண்டிய மன்னன் என்று பலர் நடத்திய இப்போரை நேரில் கண்டோர் பாடியதாகக் கூறப்படும் நூல் தகடூர் யாத்திரை. இவை மூலம் அறியும் தகவல்கள் -

- தகடூர் போரில் அதியமான் நெடுமான் அஞ்சியை 8-ம் பத்தின் பாட்டுடைத் தலைவன் பெருஞ்சேரல் இரும்பொறை வென்றான். எனவே அதியமான் நெடுமான் அஞ்சியும் பெருஞ்சேரல் இரும்பொறையும் சமகாலத்தவர், பொ.ஆ.-மு. 3-ம் நூற்றாண்டு.
- உதயஞ்சேரலாதனுக்கும் (1-ஆம் பத்து), தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைக்கும் (8-ஆம் பத்து) இடைப்பட்ட காலம் குத்து மதிப்பாக 150 ஆண்டுகளாக இருக்கலாம் என்று கொண்டால்,

சேர மன்னரது தொன்மை பொ.ஆ.மு. 5-ம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

## தமிழ்மொழிக்கே உரியதாகவும், மற்ற மொழிக் குடும்பத்தினரிடமிருந்து கடன் பெறாததுமான, இலக்கியப் பாரம்பரியம்:

இந்தியாவையே பூர்வீகமாக கொண்டதும், ஆனால் சமஸ்கிருதத்தில் இருந்து உருவாகாததுமான ஒரே இலக்கிய மரபு ‘தமிழ் இலக்கிய மரபாகும்’. சம்ஸ்கிருதத்தின் செல்வாக்கு தெற்கில் வலிமையாக பரவும் முன்பே பதிற்றுப்பத்து உள்ளிட்ட தமிழ் சங்க இலக்கியங்கள் தோன்றிவிட்டன. எனவே சம்ஸ்கிருதம் உள்ளிட்ட பிற இந்திய மொழிகளின் தன்மையிலிருந்து பண்பில் வேறுபட்ட இலக்கியங்கள் தமிழ் இலக்கியங்கள்.

பண்டைய இந்தியாவில் வடமொழி (சமஸ்கிருதம்) வரலாற்றளவில் மக்கள் மொழியாகவோ அரச மொழியாகவோ பொ.ஆ.பி. 2-ம் நூற்றாண்டு வரை இருக்கவில்லை. வடமொழியின் தாக்கம் தமிழ் நாட்டைப் பாதிக்கும் முன்பாகவே தமிழ் இலக்கியங்கள் தோன்றிவிட்டன.

## தமிழ் மொழி பிறமொழித் தாக்கமில்லாது தனித்தியங்கும் தன்மை:

ஒரு மொழியில், பல்வேறு காரணங்களால், பிற மொழிச் சொற்கள் கலந்திருக்கும். அவ்வாறு மொழியில் கலந்திருக்கும் பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் தன்மொழிக்கே உரிய சொற்களை மட்டும் கொண்டு தனித்து இயங்கவல்ல ஆற்றலை ஒரு மொழி பெற்றிருத்தல் ‘தனித்தியங்கும் தன்மையாகும்.’ பதிற்றுப்பத்து, பிற மொழிக் கலப்பின்றி தனித்து இயங்கும் தன்மையுடையது.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கியப் பழைமையுடைய தமிழ் மொழி, தனது இயக்கத்திற்கு இன்னுமொரு மொழியில் தங்கியிருக்கும் நிலையை இன்றுவரை அடைந்ததில்லை. எதிர்காலத்திலும் அடைய முடியாதபடி தமிழின் இலக்கண அமைப்பு அமைந்திருக்கிறது.

தமிழ் மொழியின் முதல் இலக்கணமான தொல்காப்பியம், பிறமொழிக் கலப்பைத் தவிர்க்கவும் தமிழின் தனித்தன்மையைப் பாதுகாக்கவும் வகுத்த ‘பிறமொழியாக்கம்’ என்னும் இலக்கண மரபு, இன்று வரை தமிழ் மொழியின் தனித்தன்மையைப் பாதுகாத்து வருகிறது.

## பதிற்றுப்பத்து, தமிழ்மொழிக்கே உரியதும், பிற மொழிக் குடும்பத்தினரிடமிருந்து கடன் பெறாததுமான, இலக்கியப் பாரம்பரியம் கொண்டது:

- பதிற்றுப்பத்து பொருளமைதியிலும், யாப்பமைதியிலும், அமைப்பு வகையிலும் தனித்துவமான இலக்கியமாகும்.
- தமிழின் தன் நிறைவில் வேர்ச் சொல்லின் பங்கு அளப்பரியது - அரசியல், சமூக, பண்பாட்டு மாற்றங்களுக்கு ஏற்ப உருவாகும் எந்த ஒரு புதிய துறையையும் தன்னுள் இணைத்துக் கொண்டு, அத் துறைக்குத் தேவையான கலைச் சொற்களைத் தன்னகத்தேயுள்ள சொல்லாக்க விதிகளின் துணையுடன் உருவாக்கக் கூடிய தன்னிறைவு பெற்ற மொழி தமிழாகும்.

## இலக்கியப் பாரம்பரியம்:

- சங்கத் தமிழ், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் ஒருங்கே கொண்டது.
- சங்க இலக்கியப் பொருள் மரபு, அகமும் புறமும் தனித்துவமானவை. வேறு எம் மொழியிலும் இல்லாதவை.
- தனித்துவமான இலக்கிய வடிவமும் தொகை அமைப்பும் -பத்துச் சேர மன்னர்களைத் தொடர்ச்சியாகக் கால முறை தவறாது பத்துப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுதி பதிற்றுப்பத்து.

## மனித இனத்திற்குச் செறிவூட்டும், அரிய பண்புகள் அடங்கிய, தனித்துவமான இலக்கிய மரபைக் கொண்டிருத்தல்:

- இலக்கியப் பொருள் மரபு
- இலக்கியத்திற்குரிய அமைப்பும் இலக்கிய வகைகளும்
- இலக்கிய வெளியீட்டு முறை

இவ்விலக்கிய மரபுகளின் அடிப்படையில் பதிற்றுப்பத்து என்னும் இலக்கியத்தை ஆராயலாம்.

## இலக்கியப் பொருள் மரபு:

தொல்காப்பியர் இவற்றை, அகத்திணைக் கோட்பாடு, புறத் திணைக் கோட்பாடு என்னும் இரு இலக்கியக் கோட்பாடுக ளாக வகுத்தார். பாடலுக்குப் பொருளாக அகமும் புறமும் அமைந்தன.

தொல்காப்பியர், புறத்திணை இலக்கணத்தை மிகப் பரந்து பட்ட முறையில் வகுத்தார். பதிற்றுப்பத்து புறத்திணை மர பில் பாடாண் திணையில் பாடப்பட்ட இலக்கியம்.

பதிற்றுப்பத்து, 'மக்கள் பாடாண் திணையில்' பாடப்பட்ட புறத்திணை இலக்கியம். பாடாண்திணை என்பது பாடப்படும் ஆண் மகனின் வீரம், வெற்றி, கொடை, ஈகை முதலாய உயர் பண்புகளை இலக்கியச் சுவைபடப் பாடுவது. பதிற் றுப்பத்து இலக்கியம், சேரர் என்னும் ஒரு குடிப் பிறந்த பத்து மன்னர்களைப் பத்துப் புலவர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு என்பது இதன் தனித்தன்மையாகும்.

- மன்னனது குண இயல்புகளையும் ஆற்றலையும் கூறி வாழ்த்துதல்
- மன்னன் பெருமையும் கொடைச் சிறப்பும் கூறி வாழ்த்து தல்
- பதிற்றுப்பத்தில் அகத்திணை சார்ந்த பாடல்கள்
- பண்டைக்கால மனித நேயம், முதலாய பிற பண்புகள்

## மன்னனது குண இயல்புகளையும் ஆற்றலை யும்:

பதிற்றுப்பத்து முழுமையுமே 'மன்னர் பெருமையைப் பாடுவ தாகவே' அமைந்துள்ளது. காட்டாக, பதிற்றுப்பத்து இரண் டாம் பத்தின் பாட்டுடைத் தலைவனான இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனின் குண இயல்புகளையும் ஆற்றலையும் குமட்டூர் கண்ணனார் பாடும் சிறப்பு வருமாறு -

*'நிலம், நீர், வளி, விசும்பு, என்ற நான்கின்*
*அளப்பு அரியையே...*
*நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனை அழல்,*
*ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை*
*போர் தலைமிகுத்த ஈர் ஐம்பதின்மரொடு*
*துப்புத் துறைபோகிய, துணிவுடை ஆண்மை,*
*அக்குரன் அனைய கைவண்மையையே...*
*அமர் கடந்து மலைந்த தும்பைப் பகைவர்*
*போர், பீடு, அழித்த செருப் புகல் முன்ப!*
*கூற்று வெகுண்டு வரினும், மாற்றும் ஆற்றலையே...*

- பதிற்றுப்பத்து, 2-ஆம் பத்து, பா. 14

- நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், ஞாயிறு, திங்கள், கோள் போன்ற அழியாத இயற்கையோடு மன்னன் ஆற் றல் ஒப்பிடப்பட்டுள்ளது.
- இமயவரம்பனது போர் வெற்றி, துணிவுடை ஆண்மை, கைவண்மை, தும்பைப் பகைவர் பீடு அழித்தமை முதலி யன பேசப்படுகின்றன.
- கடல் சூழ்ந்த இவ்வுலகு முழுமையையும் முன்னோர் ஆண்டது போல ஆண்டு, நிலையான புகழுடையவனாக வாழ்வாயாக என்று அவனது பரம்பரைப் புகழ் கூறப்படுகி றது.

## மன்னன் பெருமையும் கொடைச் சிறப்பும்:

சேர மன்னர் வீரத்தில் மட்டுமல்ல நெஞ்சு ஈரத்திலும் சிறந்து விளங்கியவர்கள். சங்கப் புலவர்களில் முன்னிலையில் வைத்து எண்ணப்படும் கபிலர், செல்வக் கடுங்கோ வாழி ஆதனின் கொடைச் சிறப்பை ஏழாம் பத்தில் பாடுகிறார்.

செல்வக்கடுங்கோவிடம் பரிசில் பெற வந்த கபிலர், முதல் 8 அடிகளாலும், தன் நண்பனும் பறம்பு மலையின் மன்னனும் வீரனுமான பாரியின் கொடை பற்றி அழகுறப் பாடுகிறார்.

*'புன்கால் உன்னத்துப் பகைவன், எம் கோ,*
*புலர்ந்த சாந்தின், புலரா ஈகை,*
*மலர்ந்த மார்பின், மா வண் பாரி*
*முழவு மண் புலர, இரவலர் இனைய,*
*வாராச் சேண் புலம் படர்ந்தோன்'*

பாரியின் சிறப்புக்களைப் பாடி, அவன், மீண்டு வரமுடியாத உலகம் சென்றுவிட்டான். ஆகையால், உன்னிடம் நான் 'இரந்து வரவில்லை, மிகைபடவும் கூறேன்,' என்று இறுமாப்பு டன் கூறியது சங்கப் புலவர்களின் தன்மான உணர்வைக் காட்டுகிறது. தானம் பெற வந்த இடத்தில் வேறொரு மன்ன னின் கொடை பற்றிச் சிறக்கக் கூறியிருப்பது, புலவரது அஞ்சா நெஞ்சைக் காட்டுகிறது.

அதே கபிலர், செல்வக்கடுங்கோ வாழியாதனின் கொடைச் சிறப்பையும் அழகாகப் பாடினார்.

*'... ... அளிக்க' என,*
*இரக்கு வாரேன் எஞ்சிக் கூறேன்*
*'ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான்*
*ஈத்தொறும் மா வள்ளியன்' என நுவலும் நின்*
*நல் இசை தர வந்திசினே'*

- பதிற்றுப்பத்து, 7-ஆம் பத்து, பாடல் 61.

என்று பாடிய இப்பாடற்பகுதி, பதிற்றுப்பத்துப் பாடல்கள் அனைத்துக்குமே சிகரம் வைத்தது போல் அமைந்திருக்கி றது. 'ஈத்தது இரங்கான் ஈத்தொறும் மகிழான் ஈத்தொறும் மாவள்ளியன்' என்னும் பாடல் பகுதியால் செல்வக் கடுங்கோ வாழி ஆதனின் ஈதல் குணச்சிறப்பு உணர்த்தப்படு கிறது.

## பதிற்றுப்பத்தில் அகப் பாடல் சிறப்பு:

பதிற்றுப்பத்து, மன்னர் புகழ் பாட எழுந்த இலக்கியமாயினும், காதல் இல்லா இலக்கியத்தில் சுவை ஏது? மன்னர்கள் காதல் வாழ்வும் ஆங்காங்கே இன்பச் சுவை ததும்ப இணைக்கப்பட்டுள்ளது.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை, காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய 6-ம் பத்து, இரண்டாம் பாடலில் (52), மனம் கவரும் இனிய ஊடல் காட்சி ஒன்றைத் தந்திருக்கிறார்,

மன்னன், தலைக்கை கொடுத்து, துணங்கையயரைத் தழுவி, இயைந்து தன்னை மறந்து ஆடினான். இது கண்டு மன்னன் மனைவி ஊடினாள். தலைவி வருந்தியதை ஆடிக் கொண்டிருக்கும் மன்னன் உய்த்துணர்ந்தான். ஊடிய தலைவியின் ஊடலைப் போக்க மன்னன் தலைவியை அணுகி அவளிடம் செங்குவளை மலர் ஒன்றைக் காணிக்கையாக்கினான். தலைவி, 'நீ எமக்கு யாரையோ? ஆட்டக்காரியோடு சென்று ஆடுவாயாக.' என்று ஊடினாள். அகத்திணைப் பொருளில் அமைந்த இப் பாடல் பகுதி வீரப் பாடலுக்குச் சுவை கூட்டுவதாக அமைகிறது.

பாடல் பகுதி -

*'சுடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து*
*முழா இமிழ் துணங்கைக்குத் தழூஉப்புணை ஆகச்*
*சிலைப்புவல் ஏற்றின் தலைக்கை தந்து நீ*
*நளிந்தனை வருதல் உடன்றனள் ஆகி,*
*உயவும் கோதை ஊரல் அம் தித்தி*
*ஈர் இதழ் மழைக்கண் பேர் இயல் அரிவை,*
*ஒள் இதழ் அவிழ் அகம் கடுக்கும் சீறடிப்*
*பல் சில கிண்கிணி சிறு பரடு அலைப்பக்*
*கொல் புனல் தளிரின் நடுங்குவனள் நின்று, நின்*
*எறியர் ஒக்கிய சிறு செங்குவளை*
*ஈஎன இரப்பவும் ஒல்லாள், 'நீ எமக்கு*
*யாரையோ' எனப் பெயர்வோள் கைஅதை*
*கதுமென உருத்த நோக்கமோடு அது நீ*
*பாஅல் வல்லாய் ஆயினை பாஅல்*
*யாங்கு வல்லுநையோ? வாழ்க நின் கண்ணி,'*

- பதிற்றுப்பத்து, 6-ஆம் பத்து, பாடல் 52

## பண்டைக்காலப் புலவர், அவர்கள் வளர்த்த கலை, மனித நேயம்:

பதிற்றுப்பத்து, சங்க காலத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட கலையைக் காட்சிப் பொருளாக்கி எடுத்து வந்திருக்கிறது. சங்க காலச் சேர மன்னர்கள், அவர்களை அண்டி வாழ்ந்த பாணர்கள், அப் பாணர் கலைத்திறன், பாணர் தமிழுக்கு ஆற்றிய கலைப்பணி, அவர்களின் கலைப்பணியில் மன்னர் பங்கு, வழக்கிலிருந்த வாத்தியக் கருவிகள் முதலாய அரிய செய்திகளை எடுத்துக் கூறுகிறது, பதிற்றுப்பத்து.

பதிற்றுப்பத்து உயர்ந்த கவிச்சிறப்பும், வியந்து நயக்கும் சொல்லாட்சியும், அழகிய அணி நயமும் கொண்ட ஒரு வரலாற்று இலக்கியம். பதிற்றுப்பத்தை கலையியல் நோக்கில் மட்டுமல்லாது சமூகவியல் நோக்கிலும் பார்க்க வேண்டும். பதிற்றுப்பத்து வளர்த்த கலை, பின்வரும் தலைப்புக்களில் ஆராயப்படுகிறது.

- புலவர்கள் பற்றி
- புலவர்கள் வளர்த்த கலை, இயல், இசை, நாடகம்
- புலவர்கள் அரசர்க்குப் புகட்டிய அறநெறி

கலையும் கலைஞர்களும் - பதிற்றுப்பத்தைப் பாடிய கலைஞர்களின் பல்வேறு நிலைகள் பதிற்றுப்பத்தில் பதிவாகியிருக்கின்றன. கலையைப் படைத்தவர்கள், ஆவணப்படுத்தியவர்கள், நிகழ்த்தியவர்கள், ஊரூராகச் சென்று மக்களிடையே பரப்பியவர்கள் என்று எல்லாமே, சங்கச் சான்றோர்கள் என்று அழைக்கப்படும் சங்கப் புலவர்களே.

பதிற்றுப்பத்தில், மிதவைச் சமூகமாக வாழ்ந்த பாணர், முதலாய கலைஞர்களின் வாழ்க்கை முறை, அவர்களது கலைப் பங்களிப்பு பற்றிய செய்திகள் விரிவாகக் காட்டப்பட்டுள்ளன. மன்னரையும் ஐநில மக்களையும் இணைக்கும் பாலமாக இருந்த இவர்களது வாழ்வியல், ஓர் ஊர், ஒரு நாடு என்னும் எல்லைக்குள் அடங்கிவிடவில்லை. எல்லா நாடும் எல்லா ஊரும் தமது நாடாகவும் ஊராகவும் கொண்டு வாழ்ந்தார்கள். பதிற்றுப்பத்தில் கலைஞர்கள் பற்றிய பதிவுகள் பல்வேறு களங்களில் காணப்படுகின்றன.

- அவைக்களங்களில் - மன்னன் புகழ் பாடுபவர்களாக, ஆலோசகராக, தூதுவராக
- போர்க்களங்களில் - போரைப் பாடுபவர்களாக, போர் முடிந்த பின் களச் சடங்குகள் செய்பவர்களாக, மன்னரையும் வீரரையும் மகிழ்விப்பவர்களாக,
- ஐவகை நிலங்களில் - ஊடகமாக, கலைஞர்களாக, இருந்திருக்கிறார்கள்.

தமிழ் இலக்கியங்களுக்குச் சொந்தமான இலக்கிய மரபை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

- கவிதைக் (செய்யுள்) கோட்பாடுகள்,
- சொந்தமாக இலக்கண மரபு,
- சொந்தமாக அழகியல் மரபு,

## பொருள் மரபு - வீரம், வெற்றி, செல்வம், கல்விச் சிறப்பு:

பதிற்றுப்பத்தின் பாடு பொருள் மன்னர்களின் வீரம், வெற்றி, கொடை முதலாய சிறப்பு இயல்புகள். அவ்வியல்புகளை இலக்கியமாக வடித்து அவற்றை மக்களிடம் கொண்டு சேர்ப்பது அடுத்த கட்ட நிகழ்வு. மன்னர்களைப் பாட்டுடைத்

தலைவர்களாகக் கொண்டு பாடப்பட்ட ஒவ்வொரு பத்தும் காப்பியமாக, பிற்காலக் காப்பியங்களுக்கு முன்மாதிரியாக சுவைபடப் பாடப்பட்டிருக்கிறது.

## தன்னிகரில்லாத் தலைமை:

பதிற்றுப்பத்தின் பாட்டுடைத் தலைவர்கள் ஒவ்வொருவரும் பாடப்பட்டிருக்கும் சிறப்பு, பிற்காலக் காப்பிய நாயகர்களைத் 'தன்னிகரில்லாத் தலைவர்களாக' படைப்பதற்கு முன் மாதிரியாக இருந்திருக்கலாமோ என்று எண்ணும்படியாக உள்ளது.

பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு பத்தின் இறுதியிலும் பதிகம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அரசனது பெற்றோர், அவனது சாதனைகள், பாடிய புலவர், புலவருக்கு வழங்கப்பட்ட பரிசு முதலாய விபரங்கள் இப் பதிகத்தில் பாடப்பட்டுள்ளன. இப் பதிகங்கள், பிற்காலத்தில், மன்னர் மேல் பாடப்பட்ட மெய்க் கீர்த்திகளைப் பாடுவதற்கு முன்மாதிரியாக அமைந்தனவோ என்று நினைக்கும்படியாக மிகச் சிறப்பாக கொடுக்கப்பட்டுள்ளன. இவை பிற்காலத்தில் பாடி இணைக்கப்பட்டிருக்கலாம்.

## இசைத் தமிழ்:

பாட்டும் கூத்தும் பாணர் வளர்த்த கலைகள், அது அவர்கள் வாழ்வாதாரமும் கூட.

ஒவ்வொரு செய்யுளின் பின்னும் துறை, வண்ணம், தூக்கு, பெயர் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. அவை, இவை பாடல் பாடிய காலத்திலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு.

பதிற்றுப்பத்தில் அமைந்துள்ள பெரும்பாலான பாடல்கள் ஒழுகு வண்ணத்திலும், சிறுபான்மை ஒழுகு வண்ணத்திலும் சொற்சீர் வண்ணத்திலும் ஆன இசைப்பாங்கு கொண்டவை.

'கொட்டும் அசையும் தூக்கும் அளபும் ஒட்டப் புணர்வது பாணி.'

பதிற்றுப்பத்திலுள்ள சந்தம், தாளம் என்னும் வண்ணம், தூக்கு என்பவை, அக்காலத்தில் இப் பாடல்கள் பாடப்பட்டமையைக் காட்டுகின்றன. இவை, தனியாக ஆராயப்பட வேண்டியவை.

மிடற்றுக் கருவி, குயிலுவக் கருவி என இரு வகை இசைக் கருவிகளும் பதிற்றுப்பத்து முழுமையும் பரந்து பேசப்படுகின்றன. மிடற்றுக் கருவி இசை ஒலிகளையும் பாடல்களையும் ஒருங்கே நிகழ்த்த வல்ல மனிதனது மிடறாகும். இசைப் பாக்களின் இசையையும் பாணியையும் நிகழ்த்த வல்லதும் மனிதர்களால் செய்யப்பட்டதுமான கருவிகள் குயிலுவக் கருவிகளாகும். இவை மனிதனின் வாய், கை, விரல், கால் முதலிய உறுப்புக்களால் ஒலிக்கப்படுபவை.

பதிற்றுப்பத்தில், யாழ், பறை, பதலை, தொண்டகம், ஆகுவீ, தட்டை, எல்லரீ, தடாரி, குழல், வயீர் (ஊதுகொம்பு), பாண்டில், சங்கு முதலிய குயிலுவக் கருவிகள் கலை நிகழ்ச்சிகளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

தமிழ் நாட்டு இசை வரலாற்றில் பதிற்றுப்பத்து முக்கிய பங்கு வகிக்கிறது.

## மானிடவியல் முறையில் பாணர் பற்றிய கருத்தாடல்:

பாணர் முதலிய கலைஞர்கள் பொருளுக்காகப் புரவலர்களைச் சார்ந்து வாழ்ந்தார்கள், பாடினார்கள் என்பது பண்டைய உரையாசிரியர்கள் கருத்து. மானிடவியல் கண்ணோட்டத்தில் பாணர் நிலையை அணுகும் போது புலவர்கள் மன்னர்களைச் சார்ந்து வாழ்ந்த போதிலும் தமது பீடும் பெருமையும் உடையவர்களாகவும் மான உணர்ச்சி மிக்கவர்களாகவும் வாழ்ந்திருக்கிறார்கள் என்று அறியக்கிடக்கிறது.

அரசு ஓம்புதல், அரசர் கடன், அவ்வாறே கலைகளை இயற்றிக் காத்தல் பாணர்களாகிய இசையாளர் கடன் என்பதே பண்டைக்காலத்து அறமாக இருந்தது. பாணர் வாழ்வாதாரம் கருதிப் பிற தொழில் செய்யவில்லை. கலையையே வாழ்வியலாகவும் கொண்டு கலைக்காகவே வாழ்ந்தார்கள். அரச உருவாக்கத்தில் அரசன் புலவர்களை அண்டியும் புலவர்கள் அரசரை அண்டியும் வாழ்ந்தார்கள் என்பது தான் உண்மை. இவ்வாறான ஒரு நிலை நிலவியிராவிட்டால் அரசர்கள் புலவருக்கு பொன்னையும் பொருளையும் எதற்காக வாரி வழங்கியிருக்கவேண்டும்?

இதனாலேயே, 'பொதுநோக்கு ஒழிமதி புலவர் மாட்டே' என்று கபிலரும், 'எத்திசை செல்லினும் அத்திசைச் சோறே' என்று ஔவையாரும் குரல் எழுப்பியிருக்கிறார்கள்.

## பதிற்றுப்பத்தில் - நாடகவியல்:

'நாடகம் என்பது செயல் வடிவில் ஒன்றினை அல்லது ஒரு விடயத்தை 'நிகழ்த்திக் காட்டுதல்' ஆகும். எது நிகழ்த்திக் காட்டப்படுகிறது? எப்படி நிகழ்த்திக் காட்டுகின்றது என்னும் வினாக்களுக்கான விடைகளில் நாடகக் கலையின் இயல்புகளும் அது பண்பாட்டுடன் இணைந்து நிற்கும் முறைமையும் புலனாகும்.' என்கிறார் பேரா.கா. சிவத்தம்பி.

அரங்கியல் துறையின் தொடக்கம் பதிற்றுப்பத்தே. நாடகத் தமிழ், அறிவுக்கும் செவிக்கும் விழிக்கும் விருந்தான கலையாகும்.

நிகழ்த்து கலை - பதிற்றுப்பத்துப் பாடல்களில் இயல்பு நிலை அரங்கு (Realistic Theatre), நகர்வு அரங்கு (Moving Theatre), திறந்தவெளி அரங்கு மன்னனின் திருவோலக்கத்

தில் நிகழ்ந்த பெட்டி வடிவ அரங்கு (Proscenium Theatre) பாண்டில் என்னும் விளக்கு ஒளிக்கலை (Lighting Design) போன்ற நிகழ்த்துக் கலை குறித்த பதிவுகள் ஏராளமாக உள் ளன.

பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு பத்துமே நாடகபாணியில் அமைந்தவையே, எடுத்துக் காட்டாக..,

ஆறாம் பத்து, ஆடுகோட்பாட்டு சேரலாதனை, காக்கைபாடி-னியார் நச்செள்ளையார் பாடிய 51-ம் பாடலை நாடக நோக் கில் காணலாம். பாடலின் முற்பகுதி - நாடகத்தின் பின்னணி -

கடற்கரை, கடல் அலை ஓசை, அலைக் காற்றினால் மணல் பறந்து சென்று அலவன் (நண்டு) ஆடிய வடுக்களை மறைக்கின்றன. காட்சியின் பின்புலம் அரங்கியல் நோக்கில் அமைந்திருக்கிறது. 'அலவன் ஆடிய வடு' வழி ஆடல் மக ளிரின் ஆட்டம் அறிமுகமாகிறது.

கடற்கரை ஓரமாக அமைந்திருந்தது, பனங்காடு. பனை மரங் களின் உச்சிக் கொண்டைகள் ஒன்றோடு ஒன்று உராய்ந்து, மேலே கூரை வேய்ந்தது போலக் காட்சியளித்தன. பனை மரங்கள் வட்ட வடிவாக நிற்கும் நிலை வட்டக் களறி (ஆடு களம்) போலக் காட்சியளித்தது.

பனை மரங்களின் அருகே, மன்னன் தன் பரிவாரங்களுடன் பார்வையாளனாக அமர்ந்திருக்கிறான்.

விறலி, பீடு நடை போட்டு வலம் வருகிறாள், பாடுகிறாள், இசைக் கருவிகளில் இசை வாசிப்பு நடக்கிறது. விறலி, முத லில் மன்னன் உள்ளிட்ட பார்வையாளர்களுக்கு வணக்கம் தெரிவிக்கிறாள்.

விறலியின் ஆட்டம் - பாடிக் கொண்டே ஆடுகிறாள். சின்ன நடை என நடனமிடுகிறாள், குறுக்கும் நெடுக்குமாக நடந்து, அசைந்து ஆடுகிறாள், பாம்பு அசைந்தாடுவது போல உடை ஒப்பனை செய்து கொண்ட ஆடுமகள் வயின் வயின் என வரும் இடந்தோறும் குதித்துக் குதித்து ஆடுகிறாள். கிழக்கும் மேற்கும் இடையிலும் என ஆடுகளத்தைப் பயன்ப டுத்திக் கைகளைக் குவித்தும் சேவித்தவாறு கண்களை இடப்புறமும் வலப்புறமும் அசைத்தவாறு கால்மணி குலுங்க ஆடுகிறாள்.

மலர்ந்த நெய்தல் மலர் போன்ற கண்களால் மன்னனையும் பிறரையும் கண்டு புன்முறுவலுடன் அமர்ந்தும், குதித்தும் ஆடுகிறாள். நின்றாடல், அமர்ந்தாடல், குதித்தாடல், சுழன் றாடல், வீழ்ந்தாடல், உருண்டாடல் போன்ற ஆடல் முறை-களை எல்லாம் அவள் ஆடுவதைப் பாம்பின் நடனத்துடன் சுட்டி விளக்கப்பட்டிருப்பது இரசிக்கத் தகுந்தது.

ஆடிக் கொண்டிருந்த ஆடுமகள் உச்ச நிலை கொள்கிறாள். இறை உணர்வு உட்கொண்டவளாய்த் தன்னை மறந்து பாடி ஆடியவாறு பார்வையாளர்களைத் தன் வயப்படுத்திய நிலை யில் உறைகிறாள். குறிப்பிட்ட நேரம் வரை பார்வையாளர், அரங்கில் ஆடும் ஆடுமகள் என்ற இருநிலைப்பட்டோரும் ஒரு நிலைப்பட்டு ஆடற்கலை இன்பத்தில் மூழ்கிப் போயி னர், என்பது காட்சி.

பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு பத்துமே நாடகபாணியில் அமைந்திருக்கின்றன, சுவைத்து இன்புறும் திறம் மிக்கவை.

## செவ்வியல் மொழியும் அதன் இலக்கியமும் அம்மொழியின் நவீன இலக்கியத்திலிருந்து வேறுபட்டு இருக்கும் பண்பும்:

தமிழரைத் தனி இனமாக அடையாளப்படுத்துபவை தனித்து வமான தமிழ் மொழியும், தமிழில் எழுந்துள்ள இலக்கியங்க ளும் காலங் காலமாகப் பேணி வளர்த்துவரும் அரிய பண் பாடும் ஆகும்.

- பதிற்றுப்பத்து, அரசு திணைக்குழு நிலையிலிருந்து வளர்ந்து, சிற்றரசாக மாறிக் கொண்டிருந்த அரச விரி வாக்க நிலையினைக் காட்டி நிற்கிறது.
- பதிற்றுப்பத்து, மன்னன் வீரம், வெற்றி, கொடை முதலாய சிறப்புக்களை புறத்திணை மரபில் பாடாண்திணையில் எண்வகைத் துறைகளில் பாடும் இலக்கியம்.
- மன்னனின் சிறப்புக்களைப் பாணர் ஊரூராகச் சென்று பாடுகின்ற மரபு அரச விரிவாக்க காலத்தில் அரச வளர்ச் சிக்குத் தேவையான ஒன்றாக இருந்திருக்கிறது. பாணர் மன்னரையும் மக்களையும் இணைக்கும் பாலமாக இருந்தி ருக்கிறார்கள். மன்னனின் செய்திகளை மக்களிடையே கொண்டு செல்லும் ஊடகமாக இருந்திருக்கிறார்கள்.

தமிழ் இலக்கிய வரலாற்றில், பாடு பொருளும், பாடல் மரபு களும், பாடல் வடிவங்களும் சங்க காலம் முதலாக ஒவ் வொரு காலப்பகுதியிலும் அவ்வக் கால அரசியல், சமூக, பொருளாதார நிலைகளுக்கு ஏற்ப மாறிக் கொண்டே வந்தி ருக்கின்றன.

## சங்க காலத்திலிருந்து தொடங்கும் இலக்கிய வரலாறு கால மாற்றத்திற்கேற்ப மாறிக் கொண்டே வந்திருக்கிறது. சங்க கால இலக் கிய மரபைக் கீழ்கண்டவாறு குறிப்பிடலாம்:

- பாடுபொருள் - சங்க காலப் பாடுபொருள், காதலும் வீர மும் ஆகும். தொல்காப்பியர், அகத்திணையியல், புறத் திணையியல், கற்பியல், களவியல், பொருளியல் ஆகிய ஐந்து இயல்களிலும் அமைத்திருக்கும் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே சங்கப் புலவர்கள் காதலையும் வீரத் தையும் பாடினார்கள். பதிற்றுப்பத்தின் பொருள் மரபும் இதுவேயாகும்.
- கவிதை மரபு - தொல்காப்பியப் பொருளதிகாரம், செய்யு ளியல் வகுத்திருக்கும் யாப்பியல் கோட்பாடுகளின் அடிப் படையிலேயே, ஆசிரியப் பாவாலும், அகவல் ஓசையா லும் பதிற்றுப்பத்து உள்ளிட்ட சங்க காலக் கவிதை இலக்கியங்கள் யாவும் பாடப்பட்டன.

- அழகியல் மரபு - தொல்காப்பியப் பொருளதிகாரம், மெய்ப்பாட்டியல், உவமவியல் கூறும் அழகியல் மரபு பின்பற்றியே பதிற்றுப்பத்து பாடப்பட்டது.
- பதிற்றுப்பத்து - மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து மரபுக ளின் அடிப்படையிலும் பாடப்பட்ட தனித்துவமான இலக்கி யத் தொகுப்பாகும்.

## பதிற்றுப்பத்து காலத்திற்கும் தற்காலத்திற்கும் இடையிலான மரபு மாற்றங்கள்:

- சங்கமருவிய காலத்தில், பாடுபொருள் அறம். கவிதை மரபு வெண்பாவும் செப்பலோசையும்,
- பல்லவர் காலத்தில் மதம் பாடுபொருளாக மாறியது. கவிதை மரபு விருத்தப்பாவாக மாறியது.
- சோழர் காலத்தில் காப்பியங்களும் இலக்கியங்களுக்கு உரைகளும் எழுந்தன.
- நாயக்கர் காலத்தில் இலக்கிய வரலாற்றில் வரட்சி மிக்க இலக்கியங்கள் தோன்றின.
- ஆங்கிலேயர் ஆட்சியில் மீண்டும் மொழியும் மக்களும் புறக்கணிக்கப்பட்டார்கள்.

தற்காலம் மறுமலர்ச்சிக் காலம், தமிழ் இலக்கியத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டது.

- பாடு பொருள் - காதலும் வீரமும் பாடிய நிலை மாறியது. மக்கள், மக்களின் நாளாந்தப் பிரச்சினைகள் முதலிய வாழ்வியற் கூறுகள் இலக்கியத்திற்குப் பொருளாயின.
- கதை மாந்தர்கள் - மன்னர் பாட்டுடைத் தலைவர்களாக இருந்த நிலை மாறி மக்கள் கதை மாந்தர்கள் ஆனார் கள்.
- இலக்கியகாரர்கள், மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட காலம் மாறி இலக்கியகாரர்கள் சுயமாக உருவாகத் தொடங்கி னார்கள். பொருளுக்குப் பாடிய நிலை மாறி, கொள் கைக்கு, நாட்டுப் பிரச்சினைகளைப் பேசும் மரபாக மாறி யது.
- பாடல் மரபு மாறியது - சொற் சுருக்கமும் பொருட் செறி வும் உள்ளதான செய்யுள் மரபு அச்சியந்திரத்தின் வருகை யால் தொடர்ந்து இருக்க வேண்டிய தேவை அற்றுப் போனது. உரைநடை அறிமுகமாகியது, இலக்கியகாரர்கள் தாராளமாக எழுதிக் குவித்தார்கள்.
- வடிவம் - சிறுகதை, நாவல், நாடகம், கதை, கட்டுரை, ஆய்வுரை முதலிய புதிய வடிவங்கள் தொடங்கி வெற்றி நடை போட்டன. நாளாந்த அரசியல், சமய, சமூகப் பொருளாதாரச் செய்தித் தாள்கள் பெருகின.
- வெளிப்பாடு - உரை.

அரசியல், சமூகப் பொருளாதாரத்தில் பொற்காலமாகத் திகழ்ந்த சங்க காலத்தில் பாடப்பட்ட பதிற்றுப்பத்திலும் முற் றிலும் மாறுபட்ட அரசியல், சமூகப் பொருளாதாரப் பின் னணி கொண்ட புதியதொரு காலம் தற்காலம். உலகம் உள் ளங்கையில் அடக்கமாகியது, புதிய பின்னணியில், புதிய தலைமுறை உருவாகி இலக்கியத்தில் புதுமை செய்தார்கள். கணினியின் பயன்பாட்டால் உரைநடை மிக வேகமாக இலக் கியத்தை வளர்த்தது.

பதிற்றுப்பத்தின் பொருள்மரபு, வடிவம், வெளிப்பாடு ஆகிய அனைத்துத் துறைகளிலும் வேறான ஒரு மரபையே தற்கால இலக்கியம் காட்டி நிற்கிறது.

## முடிவுரை:

தமிழினம், ‘தமிழ் மரபு’ என்ற தனித்துவமான ஒரு இலக்கிய மரபினைக் கொண்ட இனமாக, இலக்கியங்களின் அடிப்ப டையிலும், இன்றுள்ள அகழ்வாய்வுத் தரவுகளின் அடிப்படை யிலும் மூவாயிரம் ஆண்டு பழமை கொண்ட இலக்கியங்க ளைக் கொண்ட இனமாக உலக அரங்கில் அறியப்படும் மிகப் பழமையான வாழும் இனமாகும்.

‘பதிற்றுப் பத்து, ஒரு வரலாற்று ஆவணமாக இருந்தாலும் அது ஒரு செவ்விலக்கியம்’ என்னும் கருதுகோள், பகுப் பாய்வு, ஒப்பீட்டு ஆய்வு, வரலாற்று ஆய்வு முதலிய ஆய்வி யல் முறைகளைப் பயன்படுத்தி கீழ்க்காணும் விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டன.

- பதிற்றுப்பத்து என்னும் சங்க இலக்கியத்தில், சேரர் குடிப் பிறந்த பத்து வேந்தர்களைத் தொடர்ச்சியாக, கால முறை தவறாது, பத்துப் புலவர்கள் பாடியுள்ளார்கள்.
- பாட்டுடைத் தலைவர்கள், அவர்களைப் பாடிய புலவர் கள், சேரர் குடி, அவர்கள் ஆண்ட நாடு, அவர்களுடன் சமகாலத்தில் வாழ்ந்த சோழ, பாண்டிய, வேளிர் மன்னர் கள் முதலிய தொடர்புடைய அனைத்துத் தகவல்களும் விரிவாக ஆராயப்பட்டது.
- செம்மொழி அந்தஸ்து பெறுவதில் முன்னின்று உழைத்த டாக்டர் கால்ட்வெல் முதலாக டாக்டர் ஜோஜ் கார்ட் ஈறாக உள்ள அனைத்து ஆர்வலரது முயற்சியும் பயனும், ‘செவ் வியல்மொழி’ தகைமைக்குரிய வரைவிலக்கணமும் விளக்க மாக ஆராயப்பட்டன.
- செம்மொழித் தகமைகளாக இனம் காணப்பட்ட, தொன்மை, அம் மொழிக்கே உரியதும், மற்ற மொழிக் குடும்பத்தினரிடமிருந்து கடன் பெறாததுமான இலக்கியப் பாரம்பரியம், தனித்துவமான இலக்கிய மரபு, நவீன இலக் கியத்திலிருந்து வேறுபட்டு இருக்கும் பண்பு ஆகிய அனைத்துப் பண்புகளும் பதிற்றுப்பத்தில் காணப்படுகின் றனவா என்று ஒவ்வொரு பண்பும் தனித்தனியாக ஆராயப் பட்டன.

முடிவாக, பதிற்றுப்பத்து ஒரு செவ்விலக்கியம் என்ற முடி வுக்கே இவ்வாய்வு இடந்தந்துள்ளது.



selvanayaki.s@thaiveedu.com



# அரசியல் ஆளுமை ராஜாஜியின் இலக்கியப் பக்கம்

**– சு. வேணுகோபால்**

**ஓவியம்: ஜீவா**

இந்தியத் தமிழக அரசியலில் தனித்த அடையாளமாக விளங்கியவர் ராஜாஜி. அரசியலில் தீவிரமாகச் செயற்பட்டவராக இருந்தாலும் இலக்கியத்தின் பக்கமும் காலடி வைத்தவர். அவரது அரசியல் நிலைப்பாடுகள் ஏற்பிற்கும் மறுப்பிற்கும் புகழ் பெற்றதாக இருந்தன. ராஜாஜி ஆரம்பத்தில் தமிழ்ப்பற்று மிக்கவராக இருந்தார். கலைச் சொல்லாக்கத்தில் ஈடுபாடு கொண்டார். ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்களை உருவாக்குவதில் ஈடுபாடு கொண்டிருந்தார். 1916-ல் 'விஞ்ஞானத் தமிழ்ப் பதங்கள் சங்கம்' என்று சேலத்தில் இருந்தபடி மாத இதழை நடத்தினார். திராவிடம், ஆரியம், தமிழ்த் தேசியம் என்ற கருத்தியல் தீவிரம் கொண்டபோது ராஜாஜி இந்திய தேசம் என்ற நிலைப்பாட்டில் தீவிரமாக நின்றார். இந்தியா முழுக்க ஒரு பொதுமொழி தேவை என்று இந்தியை வட இந்திய காங்கிரஸ்காரர்கள் முன்வைத்தபோது இந்தி மொழியைப் படிக்கவேண்டும் என்றார். ஆங்கிலம், இந்தி, தமிழ் என்ற மும்மொழிக் கொள்கையை ஆதரித்தார். 'ஊரெல்லாம் சுற்றிவரச் செருப்பைப் போட்டுக்கொண்டு செல்கிறோம். வீட்டிற்கு வந்ததும் வாசலுக்கு வெளியே விட்டு விட்டு வீட்டுக்குள்ளே நுழைகிறோம். இந்தியும் அப்படித்தான் நம் வாசலுக்கு வெளியே கழற்றி விட்டு வீட்டில் தமிழோடு இருக்கலாம்' என்றுகூட விளக்கம் அளித்தார். சுதந்திரா கட்சியை 1957 வாக்கில் ஆரம்பித்த பின் தமிழ்நாட்டில் தமிழ்தான் இருக்கவேண்டும் என்று இந்தியை எதிர்த்தார்.

பள்ளி மாணவர்களுக்குப் பகுதிநேர வகுப்பு, பகுதிநேர சுயதொழிற்பயிற்சி என்பதை ராஜாஜி கொண்டுவந்தபோது கடுமையான எதிர்ப்புக் கிளம்பியது. சுயதொழில் என்பதை குலக்கல்வி என்றதன் அடிப்படையில் முன்வைத்தார். அதை தொழிற்கல்வி என்ற அடிப்படையில் விரும்பிய பாடங்களைப் படிக்கும்படி கொண்டுவந்திருந்தால் பெரிய எதிர்ப்புக் கிளம்பியிருக்காது. ராஜாஜியின் பிடிவாதம் 1954-ல் தமிழக முதல்வர் பதவியைவிட்டு இறங்க வைத்தது.

இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையில் காந்தி பிரிக்கப்படாத ஒன்றுபட்ட இந்தியாவை உருவாக்கிவிட முடியும் என்று நம்பினார். பிரிப்பதே நல்லது. பிரிக்கப்படாத போது மதவாதம் தலைதூக்கி இந்தியாவை பெரும் சிக்கலில் மாட்டி விடும் என்பதில் ராஜாஜி உறுதியாக இருந்தார். இதனால் காந்தியிடம் முரண்பட்டு காங்கிரஸிலிருந்துகூட மூன்று ஆண்டுகள் விலகி இருந்தார். பாகிஸ்தான் பிரிந்து செல்வதில் உறுதியாக இருந்ததால் பிரிவினையைக் காந்தியால் தடுக்க முடியவில்லை.

மொழிவழி மாநிலப் பிரிவினை தலைதூக்கியபோது 1952-ல் சென்னை ராஜதாணியின் முதலமைச்சராக ராஜாஜியைக் கொண்டுவந்தனர். தெலுங்குதேசம் பிரிக்கப்பட வேண்டும் என்று தியாகி பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்தார். மாநிலப் பிரிவினையில் கொந்தளிப்பான சூழ்நிலை உருவானது.

தென்னிந்தியா முழுக்க ஒரு பிரதேச நிர்வாகத்தின்கீழ் கொண் டுவர நேரு போன்ற பெரும் தலைவர்கள் விரும்பினர். ராஜாஜியின் விருப்பமும் அதுவாக இருந்தது. ஆனால், மொழி வழியான மாநிலத்தையே அந்தந்தப் பிரதேச மக்கள் விரும்பினர். இறுதியில் தமிழகமும் கேரளமும் சேர்ந்து தட்சிணப் பிரதேசம் இருக்கட்டும் என்று ராஜாஜி வலியுறுத்தினார். அதுவும் நடைமுறைக்குச் சாத்தியமற்றதாக இருந்தது. இந்த நிலையில் மாநில பிரிவினைக்குத் தலைவராக ராஜாஜியை தமிழகம் சார்பில் அனுப்பினர். சென்னையை ஆந்திரப் பிரதேசத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்க பிரகாசம், பந்துலு போன்றவர்கள் முயன்றனர். ராஜாஜி 'அதிகம் தமிழ்பேசும் சென்னை, தமிழகத்தின் பகுதியாக இருப்பதே சரி. சென்னை உட்பட உள்ள தமிழகம், சிந்தாமல் சிதறாமல் எவ்வித நஷ்டயீடும் இல்லாத தமிழகம் காண இங்கு வந்திருக்கிறேன். சமாதானம் செய்யவோ, விவாதிக்கவோ நான் வரவில்லை. இந்தத் திட்டத்தை ஏற்று நிறைவேற்ற மத்திய தலைமை மறுக்குமானால் நான் சென்னை திரும்பியதும் முதல்வர் பதவியை ராஜினாமா செய்வேன்' என்று நேருவிடம் பிடிவாதமாக இருந்து தமிழகம் உருவாகக் காரணமாக இருந்தார்.

நிர்வாகத்தில் செலவினங்களைக் குறைக்க மந்திரிகளின் மாதச் சம்பளம் 5000-ஆக இருந்ததை 500 ரூபாயாக குறைத்தார். பெரிய சம்பளம் வாங்கிய அரசு ஊழியர்களின் சம்பளத்தைக் குறைத்தார். உதகமண்டலத்திற்கு ஆண்டுதோறும் வேனில்கால உலா செல்லத் தடைவிதித்தார். பதிலாக மேய்ச்சல் காடுகளின் கட்டணங்களைக் குறைத்தார். மவுண்ட் ரோட்டில் இருந்த ஆங்கில அதிகாரி நீலன் சிலையை 1937-

இல் ராஜாஜி நீக்கினார். ஆங்கில ஆலை அதிபர்கள், தொழிலாளர்கள் கோரிக்கையை நிராகரித்து வேலையை விட்டு நீக்கினார். 16 ஆயிரம் தொழிலாளர்கள் வறுமையில் வாடிய நிலைகண்டு அனைவரையும் வேலையில் சேர்க்க வில்லை என்றால் பிரதமர் (மாகாண முதல்வர்) பதவியை ராஜினாமா செய்வதாக கவர்னருக்கு நெருக்கடி தந்து சாதித் தார். 1947-1948ல் மேற்கு வங்க ஆளுநராகப் பதவிக்காலம் முடிந்து வெளியேறியபோது, அக்காலத்தில் கிடைத்த பரிசுப் பொருட்களை 12 பெட்டிகளில் வைத்து மூடி, 'இவை என் உடமைகள் அல்ல, பதவிக்கு கிடைத்த பரிசுகள், இவைகள் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட வேண்டும்' என்று உத்தர விட்டார். சாகித்திய அகதமியை உருவாக்கக் காரணமாக இருந்தார்.

பாரிஸ்டர் பட்டம் பெற்ற ராஜாஜி வழக்கறிஞராகத் தொடர்ந்து பணியாற்ற அவரது மனம் இடம்கொடுக்க வில்லை. 'வறுமையின் காரணமாக ஒரு பெண் தன் உடலை விற்று வாழ்வதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவளை ஏற்றுக்கொள்ளவும் முடிகிறது. ஆனால் நீதியில் நிற்கவேண்டிய வழக்கறிஞர் தொழிலை பணத்திற்காக, பாவத்திற்கும் பயன்படுத்துவதை ஏற்கமுடியவில்லை', என்று அக்காலத்தில் வழக்கறிஞர் தொழிலைத் தூக்கி எறிந்துவிட்டு தேச விடுதலையில் ஈடுபட்டார்.

சேலம் முனிசிபல் தலைவராக, வேதாரண்ய உப்புச் சத்தியா கிரகம் போராட்டத் தலைவராக, சென்னை மாகாணப் பிரதம ராக (1937 - 1939), இந்தியாவின் இடைக்கால ராஜாங்க மந் திரியாக (1947 - 1948), இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனர லாக (1948 - 1950), இந்தியாவின் உள்துறை அமைச்சராக, தமிழ்நாட்டு முதலமைச்சராக (1952 - 1954), 1959-இல் காங்கி ரசை எதிர்த்துச் சுதந்திரா கட்சியைத் தொடங்கி நடத்தியவ ராக, ராஜாஜியின் அரசியல்பணி மிக விரிவானது. அரசிய லில் எப்படி இருந்தார் என்பதற்காகச் சில இடங்கள் தொட் டுக் காட்டப்பட்டன. இடையறாத அரசியல் பணியுடன் எழுத் தாளராகப் பெரியளவில் இயங்கியிருக்கிறார். இதற்கான ஊக்கத்தையும், பேரார்வத்தையும் டி.கே.சி-யின் நட்புவட்டம் அளித்திருக்கிறது. அரசியலில் தனித்த ஆளுமையாளராக இருந்த ராஜாஜிக்கு எழுத்துக்கான மேடையும் அமைந்தது. கல்கி இதழ் ராஜாஜி எதை எழுதினாலும் வெளியிட்டது. கலைமகள், தினமணி, விகடன் என எல்லா இதழ்களும் ராஜாஜியின் எழுத்துக்களை வெளியிட்டன. ராஜாஜியும் அதனை நன்றாகப் பயன்படுத்திக்கொண்டார். 30 நூல்கள் வரை தமிழில் எழுதியிருக்கிறார். கிட்டத்தட்ட எல்லா நூல்க ளும் இதழ்களில் தொடராக வெளிவந்தவைதான். ஆங்கிலத் திலும் நூல்கள் எழுதியிருக்கிறார்.

இந்திய தத்துவம் சார்ந்த சமஸ்கிருத நூல்களின் சாரத்தைத் தமிழில் நூல்களாக எழுதினார். பக்தி நூல்களுக்கு விளக்க உரைகள் எழுதினார். அவரது அரசியல், சமூகவியல் கட்டு ரைகள் நூல்களாக வெளிவந்துள்ளன. வியாசர் விருந்து, சக் கரவர்த்தி திருமகள் என்ற இரண்டு நூல்களில் தனது மனதை முழுமையாக ஒப்புக்கொடுத்துப் பணியாற்றியிருக்கி றார். அவர் எழுதிய பல நூல்கள் காலத்தால் பின்தங்கிப் போனாலும் இந்த இரு நூல்களும் எதிர்நீச்சல் போட்டு காலத்தில் நிற்கத்தக்கவையாக இருக்கின்றன. நாட்டிற்குப் பல பணிகள் செய்தாலும் அவை எல்லாவற்றையும்விட இந்த இரண்டு நூல்களை எழுதியதிலேயே என் உள்ளத் திற்கு மகிழ்ச்சியையும் அமைதியையும் தந்தன என்று குறிப் பிட்டிருக்கிறார். இராமாயணத்தை எழுதி முடித்தபோது 'நீண் டநாள் என்னுடனே வாழ்ந்து உறவாடிய கடவுள் என்னை விட்டுப் போய்விட்டது போன்ற வெறுமை உருவானது' என்று எழுதியகால உணர்வைச் சொல்கிறார்.

மணிக்கொடிக் குழுவினர் தீவிரமாக எழுத்து இயக்கத்தில் ஈடுபட்டு இருந்தபோது ராஜாஜி, டி.கே.சி, கல்கி, மீ.ப.-சோமு போன்றவர்கள் பழமைக்கும் மரபிற்கும் முக்கியத்து வம் தந்து எழுதினர். புதுமைப்பித்தன் சமூகத்தில் நடக்கும் எல்லாச் சீர்கேடுகளையும் தன் கதைகளின் வழி முன்வைத்து விவாதங்களை உருவாக்கியபோது, ராஜாஜி பண்பாட்டில் பெரிய பிடிப்பை வைத்து அதன் மேன்மைகளைத் தன் எழுத்தின் வழி வற்புறுத்தினார். ராஜாஜியின் அரசியல் பிர பல்யம், எழுதுவதற்கும் ஒரு இலக்கியக் குழுவாக இயங்குவ தற்கும் உதவி புரிந்திருக்கின்றன. அதை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டார்.

ராஜாஜி படைப்பாக்கத்திலும் ஈடுபாடு கொண்டிருந்தார். சிறு வர்களுக்காக அவர் எழுதிய கதைகள் 'கற்பனைக்காடு' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. 62 கதைகள் வரை எழுதியிருக்கிறார். அவர் எழுதி வெளியிட்ட சிறுகதைகளின் எண்ணிக்கை 56. நான்கு தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. தொகுக்கப்படாத சில கதைகளும் இருக்கலாம். கட்சி அரசி யலில் ஈடுபட்ட தலைவர்கள் பலர் அக்காலத்தில் புனைக் கதை எழுதுவதில் ஆர்வம் கொண்டிருந்தனர். அது ஒருவித மதிப்பார்ந்த பண்பாடாகக் கருதினர். அரசியல் பதவிகள் இன்று வரும் நாளை போய்விடும் எழுத்துக்கு ஒரு நிலைத் தன்மை இருப்பதாக அவர் நம்பியதன் விளைவு இக்கதை கள்.

ராஜாஜி ஒரு பிரச்சினைக்கு ஒரு பக்கமாக நிற்பதில்லை, மாறாக விலகி நின்று அணுகுகிறார். இதனால் கொந்தளிப் பான மனநிலைக்கு இடங்தராமல் சற்றே சிந்தனைபூர்வமாக வும் அடக்கமான தொனியிலும் சொல்கிற பாணியைக் கைக் கொண்டிருக்கிறார். பெரும்பாலும் அவரது பிராமண சமூகத் தில் இருக்கும் இறுக்கமான மரபுத்தளைகளையோ, பழமை யின் நெருக்கடிகளையோ, மீறல்களையோ, காலம் உருவாக் கிய மாற்றங்களையோ கதைக்கான பிரச்சினைகளாக எடுத் துக்கொள்வதில்லை. பெரிய மனிதர்களிடம் இருக்கும் நெறி யற்ற வாழ்க்கையையும் பாமர மக்களிடம் உள்ள கருணை உள்ளத்தையும் மோதவிட்டு மேன்மைக்கு வழிகாட்டினார். அதேசமயம் மாற்று சமூகத்தில் ஊடாடும் ஏற்றத்தாழ்வுகள், மனிதர்களிடம் உருவாகியிருக்கும் கீழ்மைகள், சாதிய முரண் கள் எவ்விதம் மற்றவர்களை நசுக்குகின்றன, அதில் அழுந் திக் கிடப்பவர்கள் மேலெழுந்து வருவதற்கான வழி என்ன என்பதில் கதைகளைக் கட்டமைக்கிறார். இதில் வரும் பிராம ணர்கள் மீறல் சார்ந்த பிரச்சினைகளில் மையமாக இருப்ப




தில்லை. பின்னணியில் மையமாக இருக்கின்றனர். கதைகளின் வழி சமூகத்திற்கான ஒரு தீர்வை முன்வைக்கிறார். ஒரு வகையில் கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற காந்தியப் பார்வைதான். சுயசாதியின் பழமை உடைப்பைத் தொடாததினால் மனப்பதட்டமோ, உணர்வெழுச்சியோ, பற்றுதலோ மொழியில் கலந்து எழாமல் நிதானமான நடையில் சொல்ல ஏதுவாகியிருக்கிறது. கதை ஏதோ ஒரு வகையில் சமூகத்திற்கு நன்மை பயப்பதாக இருக்கவேண்டும் என்பது ராஜாஜியின் இலக்கியப்பார்வை. இந்தப் பார்வையை ஒரு இலக்கியச் சந்திப்பின் வழி முன்வைக்கலாம்.

மணிக்கொடி காலத்தில் கலாரசிகன் என்று அறியப்பட்ட கீ.ரா (கி. ராஜகோபால்) புதுமைப்பித்தனுடன் மிக நெருங்கிய நட்புடன் இருந்திருக்கிறார். அவர் வீட்டிற்கும் புதுமைப்பித்தன் தங்கியிருக்கும் அறைக்கும் வந்து இலக்கியச் சர்ச்சைகள் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்திருக்கிறார். கம்பராமாயணம், கலிங்கத்துப்பரணி, பக்தி இலக்கியங்களில் புதுமைப்பித்தன் மிக தோய்ந்தவராக வெளிப்பட்டிருக்கிறார். மணிக்கொடியில் எழுத வந்த மூன்று ஆண்டுகளிலேயே பரபரப்பாகப் பேசப்பட்டிருக்கிறார். ஓராண்டிலேயே 45 சிறுகதைகள் எழுதிய அசுரன் அல்லவா அவர். அந்தச் சமயத்தில் பக்தகுசேலா - நவீன மாடல் என்ற நாடகத்தை எழுதியிருக்கிறார். இந்தக் காலத்தில் கிருஷ்ண பக்தி உள்ள ஒரு பிராமணனுக்கு 27 குழந்தைகள் இருந்தால் அதன் விளைவு

என்னவாகும் என்பதைச் சொல்வதுதான் நாடகத்தின் மையம். புராணப் பாத்திரங்களைத் தற்கால இக்கட்டில் வைத்து எள்ளி நகையாடுவது புதுமைப்பித்தனின் தனிப்பிரியம்.

கி.ரா, புதுமைப்பித்தனின் அனுக்கத் தொண்டராக இருந்தது போலவே ராஜாஜியுடன் நெருங்கிய நட்பில் இருந்திருக்கி றார். ஏற்கனவே புதுமைப்பித்தனின் கதைகளைப் படித்தி ருந்த ராஜாஜி பக்த குசேலாவையும் படித்திருக்கிறார்.

காந்திஜியின் 'ஹரிஜன்' பத்திரிக்கையின் ஆசிரியர், ஆர்.வி.-சாஸ்திரி அவர்களின் இல்லத்தில் வட்டத்தொட்டி நண்பர்க ளான டி.கே.சி, ராஜாஜி, கல்கி முதலிய நண்பர்கள் ஞாயிற் றுக்கிழமைகளில் கூடி இலக்கியம் பேசுவது வழக்கம். இந்த நிகழ்விற்குக் கி.ரா-வும் தொடர்ந்து செல்வதுண்டு. கி.ரா அவ் வப்போது வட்டத்தொட்டி இலக்கிய அன்பர்களிடம் புதுமைப்-பித்தன் பற்றியும் குறிப்பிட்டு வந்திருக்கிறார்.

பக்த குசேலாவை மனதில் வைத்து ராஜாஜி 'ஏன் சார், இந்த புதுமைப்பித்தன் என்கிறவர் சூனா - மானாக் காரரோ?' என்று கேட்க, இல்லை அவர் மிகவும் நல்லவர். கம்பராமாயணத் தில் ஆழ்ந்த புலமை உள்ளவர்' என்றிருக்கிறார். 'நான் இங்கு அழைத்துக்கொண்டு வருகிறேன்' என்று சொல்லியபடி மறுவாரம் அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். அறிமுகப்ப டலம் முடிந்து ராஜாஜி புதுமைப்பித்தனுடன் உரையாடியி ருக்கிறார். அந்த உரையாடலின் சின்ன பகுதி இது.

'ஏன் சார், உங்க கதை படிச்சேன். ஆனால் உங்களுக்கு ஏன் இவ்வளவு கோவம்?' புதுமைப்பித்தன் வழக்கம் போல் தன்னுடைய பெரிய பல்லைத் திறந்து காட்டி சிரித்துக் கொண்டே பதில் சொன்னார்.

'எனக்கு யார் மேலும் கோபம் இல்லை. உண்மையைச் சொன்னேன். சில சமயம் உண்மை கசப்பாய் இருக்கிறது'.

'நான் உங்களுடைய கற்பனையை ரசிக்கிறேன். உங்களுக்கு நிறைய கற்பனை வளம் இருக்கிறது. ஆனால் அந்தக் கற்ப னையை எல்லாம் பயன் ஏற்படும் வழியிலேயே சொல்ல ணும். அதுதான் நல்லது'.

'எது பயன் உள்ள வழி!'

'இப்போ நாட்டில் பெரிய நதி, வெள்ளம் போல வருது. அத னால யாருக்கும் பயனில்லை. அதை ஒரு என்ஜினியர் வந்து அணைகட்டித் தேக்கினால் பலன் உண்டு. அதன் மூலம் பல ஆயிரம் ஏக்கர் நிலங்கள் செழிப்பும் வளமும் அடைகின் றன. அதைப்போல கற்பனா சக்தியையும் அணைபோட்டுத் தேக்கிப் பாய்ச்சினால்தான் பலன் உண்டு'.

'உண்மை, ஆனால் மலை உச்சியிலிருந்து விழுந்து மண் ணையும் மரத்தையும் அடித்துக்கொண்டு கரைபுரண்டு வரும் காட்டாறு எவ்வளவு அழகாய் இருக்கிறது. அந்த அழகை நான் ரசிக்க விரும்புகிறேன். காட்டில் வாழும் கொடிய விலங் குகளான சிங்கம் புலிகள் இடத்திலும் ஒரு தனி அழகு இருக்கிறது! அந்த அழகை எடுத்துக்காட்டுவது சரியில் லையா?'

இப்படியே விவாதம் வெகுநேரம் நடந்தது. இருவரும் ஒத் துப்போகும் இடமே இல்லை. முடிவு ஏற்படாமலே விவாதம் 'பேசித் தீர்க்கப்பட்டது'. ராஜாஜியின் இலக்கியம் குறித்த கண்ணோட்டம் இதில் இருக்கிறது. இலக்கியத்தின் பயன் நன்மையை வற்புறுத்துவதாக இருக்கவேண்டும் என்பது ராஜாஜியின் கொள்கை. புதுமைப்பித்தனைப் பொறுத்தவரை இது அரசின் வேலை. மக்களின் சிக்கலான வாழ்வை அப் பட்டமாகச் சொல்லி ஒதுங்கிக்கொள்வது படைப்பாளியின் வேலை என்பதுதான்.

ராஜாஜி கதைகளின் அடிப்படை நல்லதற்கும் கெட்டதற்கும் உள்ள மோதலில் நல்லவர் பக்கம் நிற்பதை உறுதியாக வலியுறுத்துகின்றன. பெரும்பாலும் வசதி படைத்தவர்களுக் கும் ஏழைகளுக்குமான மோதலாக இருக்கின்றன. வசதி படைத்தவர்கள், படித்தவர்கள் அழுக்காறு நிரம்பியவர்களாக இருக்கின்றனர். எளியவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், பொறாமை, சுயநலமற்றவர்களாகத் தங்களை வெளிப்படுத்திக்கொள்கின் றனர். ஏழை எளியவர்களை வைத்து ஆணவக்காரர்களின் தீய செயல்களை வீழ்த்துகின்றனர்.

ராஜாஜி இந்திய மரபின் நம்பிக்கை சார்ந்த உலகை அழுத் தமாக வைத்துத்தான் பாத்திரங்களின் இயக்கத்தை வளர்த்தி ருக்கிறார். அனுமார், ராமன், பிள்ளையார் என்று கடவுளர் கள் கதைகளில் நேரடியாகவும் மறைமுகமாகவும் வருகிறார் கள். புராணப் பாத்திரங்களின் செயல்கள் கதைகளிடையே உரையாடல்களாக ஊடாடுகின்றன. அதன்வழி ஒரு விளக்கத் தைத் தரப்பார்க்கிறார். அத்வைதம், துவைதம் என்று தத்து வங்களை விளக்குவதற்குத் தோதான கதைகளை எழுதியி ருக்கிறார். மடங்களில் குரு, சிஷ்யர்களுக்குள் இருக்கும் மனித உறவு, தத்துவ உறவு பற்றியும் இந்துமத சொற்பொ ழிவாளர்களின் பேச்சிற்கும் நடத்தைக்கும் உள்ள முரணான உறவு பற்றியும் கதைகளில் கொண்டுவந்து காட்டுகிறார்.

சொன்ன வாக்கைக் காப்பாற்றாத தேவய்யரை வீழ்ச்சியுறச் செய்து தீர்த்தயாத்திரையில் உடனிருந்து சேவை செய்த ஏழை விஷ்ணு சர்மா கடவுளின் துணையோடு வெல்வதைச் சொல்லும் கதை. 'சாட்சி கோபாலன்'. வசதிவாய்ப்புள்ள குடும்பத்தில் பிறந்து வக்கீல் தொழிலில் ஈடுபட்டு வரும் ரகு-ராமன் திருட்டுப் பழக்கவழக்கத்தை விடாமலே இருக்கிறான். அவனுக்குத் துணிவெளுத்துத் தரும் வண்ணான் சின்னச்சாமி, அவர் மறந்துவிட்ட பணத்தை சட்டைப்பையிலிருந்து எடுத்து வந்து தரும் நேர்மையைச் சொல்லும் கதை 'வண்ணான் சின்-னச்சாமி'.

ராஜுலு செட்டியார் வட்டித்தொழில் நடத்துபவர் பணத்தை எண்ணி எண்ணி சரிபார்ப்பவர். ஒருநாள் பணத்தை எண்ணி முடித்ததும் 'கோவிந்தா' என்கிறார். கண்ணன் அவர்முன் வந்து நிற்கிறார். பூட்டிய வீட்டுக்குள் திருடன் வந்து விட்ட தாக அலறுகிறார். கதவைத் திறக்க கண்ணன் மாயமாகிவிடு கிறார். பாகவதர், கண்ணனின் லீலைகளைச் சொல்லும்போது

மனம் மாறுகிறார். சொத்துக்களை ஏழை எளியவர்களுக்கு எழுதி வைப்பதாக முடிகிற கதை 'ராஜு செட்டியார்'.

'நடேசய்யரின் குற்றம்' என்றொரு கதை. கந்துவட்டி நடத்தும் பஞ்சரட்சவய்யரிடம் வேலைசெய்பவர். முதலாளியைக் கேட் காமல் கடன்காரனுக்கு 15 ரூபாய் தள்ளிவிட வேலையை இழக்கிறார். பணத்தைக் கட்டு என்று நெருக்கடி தருகிறார். கிடைத்த வேலையையும் கெடுத்து அல்லாடவிடுகிறார். இதை அறிந்த பால்காரன் தள்ளிவிட்ட பணத்தை நடேசய்ய ரிடமே தர அதைத் தன் முதலாளியிடம் தருகிறார். வறுமை யிலும் தன் உயர்வை நிலைநிறுத்துகிறார்.

'அத்வைத ஆராய்ச்சி' கதையில் குருவான ராமச்சந்திர சர் மாவிற்கு ஐந்து சீடர்கள் இருக்கின்றனர். தத்துவங்கள் குறித்து ஆழமாகக் கற்றவர். அம்மடத்தில் படிக்காத வேங் கட சாஸ்திரி வேலைபார்க்கிறார். பக்கத்துவீட்டில் அடிபட்ட நாய் இரவெல்லாம் வேதனையில் அழுகிறது. அந்த வேதனை அவனை துன்புறுத்துகிறது. நாயைச் சிகிச்சைக்குக் கொண்டு சென்றிருப்பதைக் கேட்டு ஆறுதல் அடைகிறார். பிற உயிரின் துன்பத்தைக் கண்டு இறங்குவதுதான் அத்வை தம் என்பதை உணர்ந்த குரு, மடத்தை சிஸ்யர்களிடம் ஒப்ப டைக்காமல் எளிய வேங்கட சாஸ்திரியிடம் ஒப்படைத்துவிட்டு காசிக்குச் செல்கிறார்.

'முத்தாண்டி' கதையில் சங்கரன் செட்டியாரிடம் சமையல் வேலைபார்த்துவந்த முத்தாண்டி 20 ஆண்டுகால சேமிப்பை வங்கியில் போடுகிறார். சம்பள உயர்வைச் சங்கரன் செட்டி-யார் மனைவி எதிர்க்கிறாள். முத்தாண்டி வேறு வேலைக்குப் போகிறார். செட்டியாரின் மனைவிக்குக் குழந்தை பிறந்திருப் பதை அறிந்து தங்கக் காப்பை செய்துவந்து முத்தாண்டி போடுகிறார். செட்டியாரின் மனைவிக்கு முத்தாண்டியின் மீது நல்ல மதிப்பு உண்டாகிறது.

'மம்முட்டிதாசன்' கதையில் உழுதவனுக்கு நிலம் என்று மது-சூதன செட்டியாரின் நிலங்கள் கைவிட்டுப்போகின்றன. அந்த ஊர்ச் சன்னியாசிக்குக் கோயில் கட்டித்தருகிறார். குழி தோண்டும்போது தங்கம், வெள்ளி நகைகள் கிடைக்கின்றன. அதனை அரசிடம் ஒப்படைக்கிறார். சன்னியாசி பிச்சைக்காக நடந்து செல்லும்போது இருபுறம் உள்ள அசுத்தங்களை மண்வெட்டியால் அள்ளி எறிந்து சுத்தம் செய்கிறார். தொழில திபர் குப்புசாமி நாயுடு சன்னியாசி செல்லும் வழியில் தங்க மோதிரத்தையும், ஒரு மலரையும் வைக்கிறார். அதனையும் வாரிக் குப்பையில் வீசுகிறான் மம்முட்டிதாசன். செட்டியார், தொழிலதிபர் நாயுடுவை விடப் பொருளாசையைத் தூக்கி யெறிந்த ஏழைப் பணியாளன் உயரமானவன் என்று காட்டுகி றார்.

'மோர்த்துளி' கதையில் திராவிடதாசர் என்றழைக்கப்படும் நாராயண வாஜபேயர் பெரிய சொற்பொழிவாளர். அவரை அவரது சீடர் லட்சுமண சாஸ்திரி மிஞ்சுகிறார். பகைமை உருவாகிறது. அவரது கனவில் ஆஞ்சநேயர், கிருஷ்ணன் தோன்றி பயமுறுத்தவும் சிஸ்யன் காலில் விழுந்து வணங்கி குடும்பத்தை விட்டு வெளியேறி அனுமன் கோயில் சமையல் வேலை செய்து ஊழியம் செய்கிறார்.

பட்டாபிராமன் முதல்மனைவி இறக்க அவளது தங்கையைத் திருமணம் செய்கிறார். பதவி உயர்வு பெற்று நல்ல நிலைக்கு உயர்கிறார். தன்னையும் தன் குழந்தைகளையும் இரண்டாவது மனைவி கண்ணும் கருத்துமாகக் கவனிக்கிறார். கணவர் பெரிய சம்பாத்தியக்காரர் என்று நினைப்பே இல்லா மல் குடும்பத்திற்காகப் பாடுபடுகிறாள். 'பூஜை அறையில் ஒரு படம்' கதையில் வரும் இரண்டாவது மனைவி பூஜையில் வைத்து வணங்க வேண்டியவள் இவள்தான் என்கிறது.

'நடேசய்யரின் குற்றம்', 'அத்வைத ஆராய்ச்சி', 'முத்தாண்டி', 'மம்முட்டி தாசன்', 'பூஜை அறையில் ஒரு படம்', 'முகுந்தன் பறையனான கதை' கதைகளில் எளியவர்கள் உண்மையொ-ளியை ஏற்றவர்களாக வருகின்றனர். வசதி படைத்தவர்களை விட மனித படைப்பில் உயர்வானவர்களாக இவர்களைக் காட்டுகிறார்.

'உடலும் நிழலும்', 'சாட்சிகோபாலன்', 'மோர்த்துளி', 'ராஜுலு செட்டியார்' கதைகளில் கடவுளின் அவதாரங்கள் பாத்திரங்க ளாக வந்து துரோகம் செய்பவர்களுக்கு எதிராகவும் அவர்க ளுக்குப் பாடுபட்ட உண்மை விசுவாசிகளுக்குச் சார்பாகவும் நிற்பதாகக் காட்டுகிறார்.

'கூனி சுந்தரி' கதையில் இந்துமத சொற்பொழிவாளர் தன் மனதில் இருந்த அழுக்காறை நீக்கி, உடல் கூனல்கண்டு முதிர்கன்னியாக இருக்கும் சுந்தரியை வாழ்க்கைத் துணை யாக ஏற்பதையும், 'முகுந்தன்' கதையில் தீட்டு என்று ஒதுக்க வும் வெறுக்கவும் பட்ட பறையர் இனத்து பிள்ளைகளின் தயாள குணத்தையும், பஞ்சத்தில் தண்ணீருக்காக அவர்கள் பட்ட வன்கொடுமைகளையும் காட்டி இம்மக்களுக்கு சேவை செய்வதே தலையாயக் கடமை என்று உணர்ந்து அரவ ணைக்கிற செயலையும் முன்வைக்கிறது. முகுந்தன் கதை சாதிய பிரச்சினையையும், வறுமையையும், தலித்துகளின் உயர்ந்த உள்ளத்தினையும் அழுத்தமாகக் காட்டிய கதை. ஆனால் சிறுகதையின் ஒருமைக்குள் அடங்காமல் நாவல் போலக் கதையாக விரிந்து செல்கிறது.

ராஜாஜி எழுதிய கதைகளில் 'எங்கள் சிவப்பு அனுமார்' கதை நடைச்சித்திரத்திலும், அனுமார் வேஷம் போடும் உஷ் தாது கவுஸ் சாயபுவின் வீர தீரத்தையும், உஷ்தாது உரு வாக்கி புகழ்பெற்றிருந்த சிவப்பு அனுமார் குஷ்தித் திடல் வேறொருவருக்குக் கைமாறிப்போன வீழ்ச்சியையும் சொன்ன நல்ல கதை. மாரியம்மன் கோவில் விழாவில் புலிவேஷம் போடும் இஸ்லாமியர் என்ற பண்பாடு எல்லாம் போய்விட்ட தையும் சமயத்தைக்கடந்த இணக்கமான உறவுகள் ஒரு காலத்தில் இருந்ததையும் உணர்த்தும் கதை.

பல மாற்றங்களை நிகழ்த்திக்கொண்டிருந்த சென்ற நூற் றாண்டு எழுத்தாளர்களையும் மாற்றி யோசிக்க வைத்தது. இந்தப் பக்கம் காந்திய இயக்கம் அந்தப் பக்கம் பெரியார் இயக்கம் எதிர்பாக்கம் மார்க்சிய இயக்கம் பின்பக்கம் பிரம்ம சமாஜ என்ற புதிய சமய முற்போக்கு இயக்கம் என்று தமிழ கத்தை உருமாற்றிக் கொண்டிருந்தபோது ராஜாஜி, காந்தி வழியைப் பின்பற்றியவர். கதைகளின் வழி சமூக மாற்றத்தை உண்டாக்க அவருக்கும் ஆசை. இருப்பது இருந்தபடியே

யாருக்கும் சிறு உரசல் நேராதபடி புரட்சிகரமான கதைகள் எழுதினார்.

‘அன்னையும் பிதாவும்’ என்றொரு கதை. பறையர் இனத்தைச் சேர்ந்த அர்த்தநாரி தன் சாதியை மறைத்து பங்கஜம் என்ற பிராமணப் பெண்ணைக் காதலிக்கிறான். அவளும் காதலிக்கிறாள். சாதி தெரிந்துவிடுமோ என்று பயப்படுகிறான். தாய் தந்தை காலராவில் இறந்துவிட்டால் தன் சாதிய அடையாளத்தை மறைத்துவிடலாம் என்று நம்புகிறான். இவன் பணம் அனுப்பாததால் தந்தை கிணற்றில் விழுந்து உயிரை மாய்க்கிறார். அம்மா, அண்ணன், தந்தை போன பின் மனம் குடைகிறது. பிராயச்சித்தம் வேண்டி காவி உடுத்தித் தன் சொந்த ஊரில் பள்ளிக்கூடத்தைத் தொடங்குகிறான். கதையில் ஏழை அர்த்தநாரி பள்ளிக்கூடத்தைக் கட்டி நடத்திவிட முடியும். நிஜத்தில் முடியுமா என்று சந்தேகிப்பதில்லை. இதுதான் ராஜாஜியின் ‘அன்னையும் பிதாவும்’ கதை. காதல் என்ற பெயரில் யாரையும் இணைய விடாமல் சாதிக்கும் பங்கம் வராமல் லாவகமாக விளக்கிச் சமூகப்புரட்சி செய்வதாகக் காட்டுகிறார். இந்தக் கதையில் தாழ்த்தப்பட்ட சமூக இளைஞனாக வரும் அர்த்தநாரி பங்கஜத்தை அடைய அவன் கொள்ளும் மனப்பதற்றங்கள் நன்றாக வந்திருக்கின்றன.

‘சர்ஜான் வாசுக்குட்டி’ கதை வசதியான மங்களம் விரும்பிய மணாளனைத் திருமணம் முடித்துச் சில நாட்களிலேயே விதவையாகிறாள். டாக்டருக்குப் படித்து உயர்கிறாள். உடன்படித்தவர் திருமணம் செய்ய முன்வந்தும் அதனை மறுத்து மருத்துவ சேவை செய்கிறாள். புகழ் பெறுகிறாள். மறுமணம் செய்யாமலே புரட்சியைச் செய்விக்கிறார். பிராமணச் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களை அல்லது ஏற்பட வேண்டிய மாற்றங்களை ராஜாஜி தொடுவதிலிருந்து விலகினார். புதுமைப்பித்தன் போன்றவர்கள் துணிச்சலாகவே தொட்டனர்.

‘தேவானை’ நல்ல கதையாக அமைந்துவிட்டது. அவள் பிராமணப் பெண் அல்ல. நெசவாளர் குடும்பத்துப் பெண். எனவே அவளது சீரழிவுகளை ராஜாஜியால் நன்றாகவே சொல்ல முடிந்திருக்கிறது. வேலைக்காரியாக வந்த பிராமணர் வீட்டு வேலைக்காரனால் நாசமாக்கப்பட்டு வெளியேறுகிறாள். மில்லில் வேலைக்குச் செல்கிறாள். அங்கு மேஸ்திரியால் வேட்டையாடப்படுகிறாள். பின் பல ஆடவர்களிடம் மோசம் போகிறாள். கையில் குழந்தையுடன் பிச்சை எடுக்கிறாள். ஒரு சந்தர்ப்பத்தில் வீட்டு வேலைக்காரியாக இருந்த அந்த எஜமானர் குடும்பம் இவளைப் பார்க்கிறது. திரும்ப அவளை அவர்கள் தேடிப்போகும்போது காணமுடியாது போகிறது. எவ்விதப் பூச்சும் இல்லாமல் ஒரு ஏழைப் பெண்ணின் சீரழிவை விலகி நின்று ‘தேவானை’ கதையில் நேர்முகமாகச் சொல்லியிருக்கிறார். ஒரு பிராமணப் பெண்ணின் வாழ்க்கைச் சிக்கலை அவரால் இவ்விதமாகச் சகஜமாக அணுகமுடியவில்லை. மறைமுகமாகப் பழங்கருத்தியலுக்கு உடன்பாடான ஒரு தீர்வை நோக்கி நகர்த்தி முடிப்பார். மனத்தடைதான் காரணம்.


பிற சமூகத்தவர் குறித்து எழுதும்போது மனிதனை மனிதன் மதிக்க வேண்டும், ஏழைகளிடம் குடிகொண்டிருக்கும் நல்லியல்புகளைப் போற்றவேண்டும், நேர்மையோடும், அறத்தோடும் வாழ்வதுதான் உண்மையான வாழ்க்கை என்பதை ராஜாஜியின் கதைகள் வற்புறுத்துகின்றன. இக்கதைகளில் மாந்தர்களின் உளவியல் கூடிவருவதில்லை. எழுத்தாளரின் நோக்கத்திற்கேற்ப கட்டமைக்கப்படுகின்றன. என்றாலும் கதைக்குள் காட்டப்படும் சமூக உறவுகள் சமநிலையோடு ராஜாஜியால் சொல்ல முடிந்திருக்கிறது. அந்தந்த மாந்தர்களின் சமூகப்படிநிலையிலிருந்து முரண்களைக் கோர்த்திருக்கிறார். இந்த அம்சம் வாசகனை வெளியே தள்ளாமல் வாசிக்க வைக்கிறது. 10, 15 கதைகள் தான் இன்று பொருட்படுத்தி வாசிக்கத்தக்கவையாக இருக்கின்றன. ராஜாஜி மகத்தான கதைகள் எதையும் எழுதிவிடவில்லை என்றாலும் கதைகள் மனிதர்களை மேம்படுத்த வேண்டும் மேன்மைப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் எழுதியிருக்கிறார்.

ஒரு முழுநேர அரசியல்வாதியான ராஜாஜி இலக்கியத்தின் பக்கமும் தொடர்ந்து இயங்கி இருக்கிறார். ‘குறையொன்றுமில்லை மறைமூர்த்தி கண்ணா’ என்ற புகழ்பெற்ற பாடலை எழுதியிருந்தாலும் அவரது கதைகளின் நிறைகுறைகளை விமர்சகர்கள் சுட்டிக்காட்டியதைக் கவனித்தும் வந்திருக்கிறார்.

‘ராஜாஜி எழுதும் சிறுகதைகள் உண்மையில் கதை இலக்கியமல்ல, அவையெல்லாம் கருத்துக் கதைகள். உபதேசம் அழுந்தி நிறைந்த இந்தச் சிருஷ்டிகள் கதை இலக்கியமாகா’ - இது விமர்சகர்களின் தீர்ப்பு என்பது எனக்குத்தெரியும். நானும் அதை மதித்துக் கருத்து இல்லாத கதைகள் எழுதிப்பார்த்தேன். முடியவில்லை. என் தர்மம் இது. தர்மம் என்ற வடமொழிச் சொல்லுக்கு இயல்பு, பண்பு என்பது பொருள். பசுவுக்கு பால் தருவது தர்மம், குதிரைக்கு ஓடுவது தர்மம், தேளுக்குக் கொட்டுவது தர்மம், மயிலுக்கு ஆடுவது தர்மம் இவைபோல்.

மற்றவர்கள் சொல்வதை நான் பெரிதும் மதிக்கிறேன். ஆயினும் என்னை மாற்றிக்கொள்ள என்னால் முடியவில்லை. மிக நல்ல கதைகளை மற்றவர்கள் எல்லோரும் ஓர் உபதேசமும் அவற்றில் புகுத்தாமல் எழுதவில்லையா? எழுதுகிறார்கள். ஆனால் என்னால் ஏனோ முடியவில்லை. ஆகவே, கதை படிப்பவர்களே! உங்களைத் திருப்தி செய்ய என்னால் இயலவில்லை. மன்னிக்கக் கேட்பதன்றி வேறு வழியில்லை.

‘ஆன்மாவை ஓரளவேனும் தூய்மைப்படுத்துவதுதானே பரஸ்பரம் செய்ய வேண்டிய பணி? இதுதானே பெரிய ஒப்புரவு? மற்ற நலன்களை ஒருவன் தனக்குத்தானே செய்துகொள்ள முடியும். இந்த ஆன்ம வளர்ச்சியும் தூய்மையுமேதான் பரஸ்பர பணியினால் அடையக்கூடியவை. இலக்கியப் பணி இது. அதாவது உண்மை இலக்கியப் பணி’ தனது இலக்கியம் குறித்து ஒரு நீண்ட வாக்குமூலத்தை ராஜாஜி இவ்விதம் தந்திருக்கிறார்.



venugopal@thaiveedu.com

# VANAKKAM KALAIGNARKAL TV
## வணக்கம் கலைஞர்கள் தொலைக்காட்சி

**கனடாவில் Eagle box - 212 ஊடாகவும்**

**ஐரோப்பிய நாடுகளில் TT Box - 212 ஊடாகவும் பார்க்கலாம்.**

ஈழத்துக் கலைஞர்களின்
படைப்புக்களை
மட்டுமே எடுத்துவரும்
ஒரே தொலைக்காட்சி.
உங்கள் படைப்புக்களை
எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பங்களிப்பை
வரவேற்கின்றோம்.

விளம்பரங்கள் - அறிவித்தல்கள்
ஏற்றுக் கொள்ளப்படும்
கனடா தொடர்புகளுக்கு:
437-580-8616
vanakkam01@outlook.com



# Ceycan Transhipping Inc.

INTERNATIONAL FORWARDING LOGISTICS

**EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA**

**REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA**



For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact
Kumar (905) 673-9873

SRI LANKA'S BEST CLEARING FACILITIES

**COLOMBO**
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308

**KANDY**
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59

**BATTICALOA**
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302

OUR AGENTS ACROSS CANADA

**Head Office**
(905) 673-9873
**Toronto/ New Market/Durham region**
Sam (647) 986-2393
**Brampton/Mississauga/Halton /Peel region**
Neel (647) 891-9445
**Ottawa**
Iggy - 613 799 3519 /613 237 3569
**Hamilton/Waterloo /St Catherines**
Dharmaweera (519) 760-1280
**Montreal**
Gana (514) 573-0093
**Edmonton/Calgary**
Randy (604) 399-8785
Email : randy.kulasekare@kmrgloballogistics.com
**Vancouver/British Columbia**
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5
Email : admin@kmrgloballogistics.com

**United Kingdom :**
**Atlas Shipping 430 High Rd**
**Willesden London NW10 2HA**
**Tel: 02024596633 - Mobile 07949143535**

**1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9**
**sales@ceycantranship.com web: ceycantranship.com**

# தமிழ்வலை - 94


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-94 வினா

### இடமிருந்து வலம்

1 பேர்போன ரஷ்ய கூலிப்படை

2 விடயம்

5 இலங்கையில் பேர்போன ஒரு திருத்தலம்

6 தேவாமிர்தம்

7 நெய்தல்நில நகரம்

8 கட்செவி

10 நெடி

11 துரியோதனனின் படைக்கலம்

16 ஒருவகைச் சங்கு

17 ஹர்த்தால்

### மேலிருந்து கீழ்

1 மலையாள எழுத்தாளர் முகமது பஷீரின் ஊர்

3 அரசமடல்

4 பேரரசர்

7 சேனை

9 மயிர்க்கூச்செறிவு

10 இளம்பெண்

12 ஒருவகை நோ எண்ணெய்

13 தவிப்பு


14 சிவந்த மயிர்

15 காரணம்

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 93க்கான விடைகள்



## தமிழ்வலை-93 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

ஏ.எஸ். மகாலிங்கம் ரொறன்ரோ.
சிவமணி பூரணம், ஸ்கார்பரோ
பற்றிக் ஜோன், மொன்றியால்
சிவகுமார், ரொறன்ரோ
த.செ. நடராசா, ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

**சதானந்தன் புவிராசா,**
**கிளிநொச்சி.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.





# வண்டு தின்ற பிள்ளைகள்

- அகரன்

ஓவியம் - செல்வன்

ஒரு சிறிய கருமேகம் அலைந்து கொண்டிருந்தது. ராணித் தேனீயை தேனீக்கள் கட்டியணைத்து தேன்கூடு உருவான தைப் போல திடீரென கருமேகம் உருவாகி வானத்தை மறைத்தது. பிந்தி எழுந்து வேலைக்குச் செல்பவன் போல காற்று வீச ஆரம்பித்தது. சிறுபிள்ளைக்கும் தெரிந்துவிடும் மழை கொட்டப்போகிறதென்று.

ஐம்பதில் இருந்து அறுபதை நோக்கி வயதை தள்ளிச் சென் றுகொண்டிருந்த அம்பிகாவுக்கும் மழை வரப்போகுதென்று தெரிந்துவிட்டது. பறந்து வந்து முற்றத்தில் காய்ந்து கொண் டிருந்த உடைகளை எடுத்துக்கொண்டு வீட்டுக்குள் சென் றாள்.

வாசற்படியில் ஒய்யாரமாக அமர்ந்திருந்த கற்பகக்கிழவி வெற்றிலையில் சுண்ணாம்பை மோதிர விரலால் தடவி பல்லி ருக்கும் கொடுப்புக்குள் பவுத்திரமாகக் கொண்டுபோய் வைத்தது. 'ஆச்சி மழை அடிச்சு ஊத்தப்போகுது கச்சானை உள்ள எடுத்துவாங்கோ...' என்றாள் அம்பிகா. கிழவி, 'என் னடி புள்ள பொட்டென வருது மழை? காத்து விடாதுபோல!' என்று புறுபுறுத்தவாறு ஊன்றுகோலை எடுத்துக்கொண்டு குடு குடு வென நடந்துபோனாள்.

இவ்வளவு நேரமும் இந்தக் காற்று எங்கே ஒழிந்திருந்தது? கொரில்லா போராளிகள் போல கரிய மேகத்தை கலைத்து விட வெறிகொண்டு வீசியது.

அம்பிகா, உடைகளை காய்ந்தது, காயாதது எனப் பிரித்துக் கொண்டிருந்தாள். அப்போது பெரிய மூன்று சத்தம் கேட்டது. வானில் இருந்து கும்பகர்ணன் விழுந்தது போல அது இருந் தது.

'கிழவிக்கு ஏதும் ஆச்சோ?' என்று பதறியபடி முற்றத்தை நோக்கி அம்பிகா ஓடிவந்தாள்.

'ஆச்சி.. ஆச்சீ... எணை...!'

'ஓம் பிள்ள என்ன சத்தம்? வீட்டுக் கோடிக்க எல்லோ கேட் டது?'

அம்பிகா, தாவாரப் பகுதியூடாக அரணெடுத்து வீட்டின் பின் பக்கம் நகர்ந்தாள். பின்னால் ஒரு தளபதி ஊன்றுகோலுடன் செல்வதுபோல சேலைத் தலைப்பால் தலையை மூடிக் கொண்டு கற்பகக்கிழவி சென்றாள்.

மூன்று பிள்ளைகளும் வீழ்ந்து கிடந்தன. அம்பிகா, 'ஐயோ ஆ...ஆ...ச்...சி...' என்று நெடில் ஸ்வரங்களால் சத்தமிட்டாள்.

கற்பகக்கிழவி 'பாழ்பட்ட காத்து... பாழ்பட்ட காத்து...' என்று பிளிறிக்கொண்டு அந்த மூன்று பிள்ளைகளை நோக்கி ஓடி னாள். அம்பிகா நின்ற இடத்தில் ஏங்கிப்போய் அசைவற்று நின்றாள்.

'அடி வயித்துப்போக்கு பிள்ளையளை வண்டடிச்சுப் போச்சு தடி... அங்கபார் அடிப்பகுதி போறையாக் கிடக்கு. என்ர சீவியத்தில் இப்படிப் பார்க்கேல்ல' என்று தன் ஆதங்கத் தைச் சில கெட்ட வார்த்தைகளைக் குழைத்து வண்டுகளைச் சபித்துக்கொண்டிருந்தாள்.

'வண்டு' என்ற சொல்லுக்கு யுத்தத்தில் தோய்ந்த வன்னி நிலத்தில் இலங்கை அரசாங்கம் புதுப் பெயரை ஏற்படுத்தி இருந்தது. தமிழுக்கு அரசாங்கம் செய்த பணிகளில் அதுவும் ஒன்று. விமானத்தில் குண்டுகளை நிரப்பி அனுப்ப முதல் ஒரு உளவு விமானத்தை அனுப்புவார்கள். அது வானத்தில் வண்டு போன்ற அளவில் தெரியும். அந்த பெயருக்கு மதிப் புக் கொடுக்கும் முகமாக வண்டின் சத்தத்தை வெளியிடும்.

அதனால் குண்டுகளை பரிசாகப் பெற இருந்த தமிழர்கள் அந்த உளவு விமானத்திற்கு வைத்த பெயர் 'வண்டு'. சில சமயங்களில் பூச்சி வண்டு சத்தமிட்டபோது தலைதெறிக்க ஓடி பங்கருக்குள் ஒழிந்த வீரத் தமிழர்களும் இருந்தார்கள்.

ஆதலால் வானத்தில் திரியும் வண்டை அறிந்த அம்பிகா வால் தென்னைகளை அடியோடு அறுக்கும் மண்ணுக்குள் திரியும் வண்டை யுத்தம் செத்த பிறகுதான் அறியமுடிகிறது.

அம்பிகாவால் பேச முடியவில்லை. மூன்று மரங்களையும், அதன் அடிப்பாகங்களையும் மெதுவாக நகர்ந்து பார்த்தாள்.

# வண்டு தின்ற பிள்ளைகள்



**-அகரன்**

மூன்று தென்னம்பிள்ளைகளும் தமது ஆயுளின் முதல் பாளைகளையும், குரும்பைகளையும் ஏந்திக்கொண்டு சரிந்து கிடந்தன. வயிற்றில் குழந்தையோடு ஒரு தாய் குண்டடிபட்டு வீழ்ந்து கிடக்கும் காட்சிதான் அம்பிகாவின் மூளையை மூடி நின்றது.

அந்த வளவில் யுத்தம் முடிந்து மீள்குடியேறியதும், வீடு கட்டமுதல் நடப்பட்ட உயிர்கள் அந்த மூன்று தென்னம்பிள்ளை

களும்தான். இடம்பெயர முதல் தென்னை, பனை, வேம்பு, மா, பலா, கொய்யா, பாலை, வீரை, முருங்கை என்று சோலையாக இருந்தது அந்த வளவு. யுத்தத்தை முடித்து விட்டு மீண்டு, மீண்டும் அங்கு சென்றபோது முழு மரங்களும் மண்தின்னிகளால் அறுத்து எடுக்கப்பட்ட அடையாளத்தை வைத்துக்கொண்டு அந்த வளவு இருந்தது. அம்பிகா வந்து கால் வைத்ததும் வளவு துள்ளிக் குதிக்க ஆரம்பித்தது.

இன்று மீண்டும் அவள் தனிமைக்கு தள்ளப்பட்டாள். அவள் அடைகாத்த உயிர்களில் அம்பிகாவின் இறுதி நம்பிக்கையான அந்த தென்னம்பிள்ளைகளும் வண்டடித்து வாழ்விழந்துவிட்டன. அவளுக்கு தோய வேண்டும்போல் இருந்தது. அவள் மௌனியாகி கிணற்றடி நோக்கி நடந்தாள். பூப்போட்ட மக்ஸ்சியோடு கப்பியால் கிணற்றில் அள்ளி முழுகினாள்.

அம்பிகா கறுப்பி குளத்தில் நீர் சூழ்ந்த செழித்த கிராமத்தில் பிறந்தவள். எல்லாளன் என்ற ஈழத்தை முழுவதுமாக 44 ஆண்டுகள் ஆண்ட மன்னன் காலத்து குளம் வவுனிக்குளம். அப்பெருங்குளம் சிந்தும் பெரு வாய்க்கால் உருவாக்கிய சிறுகுளம் கறுப்பிகுளம். அது ஒரு வானளாவிய மருத மரத்தை மையமாகக் கொண்டு தன்னை வளப்படுத்திய குளம். அந்தக் குளம் மாரி காலத்தில் வெளியேற்றும் நீரும், வயல்கள் வெளியேற்றும் மீதி நீரும் சேர்ந்து பாலியாற்றில் சென்று கலக்கிறது. அப்படி ஒரு ஆறு ஒன்றை ஈன்று தாயான குளம் கறுப்பி குளம்.

‘கறுப்பி குளம்’ என்ற பெயரை வைத்த கவிஞன் யாரென்று தெரியவில்லை. அந்தக் குளத்தில் எப்போதும் தமிழரின் ஆதித்தோழர்களான எருமை மாடுகள் குளித்துக் கொண்டிருப்பார்கள். அவர்கள் முதுகுகளில் கொக்குகள் குடித்தனம் நடத்தும். மீதி இடங்களில் தாமரை மலர்ந்திருக்கும். இப்படிப்பட்ட கலை நிறைந்த அழகு, அசல் கறுப்பியிடம்தான் இருக்குமென்று அந்த கவிஞன் நினைத்திருக்கலாம். அந்த கறுப்பி குளக் கிராமத்தில் பிறந்த மாமை நிறத்தவள் அம்பிகா.

அம்பிகாவோடு வஞ்சகமில்லாமல் ஐந்து சகோதரிகள் பிறந்தார்கள். அம்பிகாவுக்கு தந்தை சின்னத்தம்பியார் வைத்த பெயர் யோகாம்பிகை. அந்தப் பெயர் பள்ளிக்கூட டாப்பில் பதிந்ததோடு நின்று போனது. பொதுவாக அம்பிகா என்றும் ஆசையக்கா, சின்னக்கா, பிள்ளை என்று பல பெயர்களால் அவரவர் விருப்பம் போல அழைக்கப்பட்டாள். பெயர் மருகி ஒரு கட்டத்தில் ‘அம்பியா’ என்றாகிப் போனது.

1950-1970 இடையில் ஈழ நிலத்தில் பிறந்தவர்கள் குறைந்தது ஐந்து பேரும் கூடியது பதினைந்து பேருமாக பிறந்தார்கள். ஒவ்வொரு வீடும் சிறு கிராமமாக இருந்தது. அம்பிகாவின் தந்தை ஐந்தும் பெண் பிள்ளைகள் என்ற பின்னர் ஊருக்கும் வீட்டுக்கும் நல்ல காரியம் செய்தார். வீட்டை விட்டு ஓடிப் போய்விட்டார்.

அவருக்கு சிங்களமும், ஆங்கிலமும் அத்துப்படி. அவர் சிங்கள நாடு சென்று இருக்கலாம். அல்லது ஆங்கில நாடு சென்றிருக்கலாம். அவரை தேடும் நிலையில் அம்பிகா வீட்டுத் திறைசேரி இருக்கவில்லை.

தாய் மகேஸ்வரி யாரிடமும் மண்டியிடாமல் மண்கிண்டி, மண்கிண்டி ஒரு ராணி நாட்டைச் சீரோடு பார்ப்பது போல அந்த வீட்டைப் பார்த்தார்.

அங்கு இரண்டாம் தாய்போல் அம்பிகா வளர்ந்தபோது அவள் அந்த கிராமத்து தேவதை போல இருந்தாள்.

சிறுபிள்ளைகள் வட்டம் போட்டு விட்டு கண், மூக்கு, வாய் கீறுவார்கள். அப்படி கீறி விட்டது போல வட்ட முகம். சீயாக்காயும், வறுமையின் சைம்போவான பனம்பழ பாணியும் உருவாக்கிய நீண்ட கருங்கூந்தல். இப்படி இன்னோரன்ன அழகால் கிராமம் உற்சாகமானது. அவள் பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் எடுத்த மறு நாள் தங்கன் என்ற காளை அவளை கூட்டிக் கொண்டு ஓடிவிட்டான்.

அக்கால இலங்கையில் காதல் தடைசெய்யப்பட்ட விடயம். அதனால் தடை உடைத்தலும், ஓடுதலும் பரவலாய் நடந்த வைத்தியங்கள். தங்கன் கடும் உழைப்பாளி. இப்போது நான்கு பெண் சகோதரிகளை வைத்திருந்த அம்பிகாவை வைத்திருக்க ஆசைப்பட்டதால் கடுமையாக உழைக்க வேண்டிய விதி அவன் தலைமேல் குடைபோல் நின்றது.

அம்பிகாவுக்கு மூன்று குழந்தைகள் பெற வேண்டும் என்பது விருப்பம். ஆனால் 1986-ம் ஆண்டும், ஈழ நிலமும் அதற்கு இடம் கொடுக்கவில்லை. வயலுக்கு சென்ற தங்கன் வீடு திரும்பவில்லை. கலப்பை எரிக்கப்பட்டிருந்தது. மாடுகள் சுடப்பட்டிருந்தது. ஆனால் தங்கனின் தடயங்களை காணவில்லை. ‘ஆமி வந்தது. தங்கன் ஆமியைக் கண்டதும் காடு நோக்கி ஓடினான்’ என்ற செய்தியை மட்டும் அயல் வயற்காரர்கள் திருப்பித் திருப்பிச் சொன்னார்கள். ஆறு மாதக் குழந்தையுடன் அம்பிகா அலைந்து அலைந்து தேடினாள். யாருமே மாற்றிச் சொல்லவில்லை. சொன்னதையே திருப்பிச் சொன்னார்கள்.

காட்டுக்குள் ஓடிய தங்கன் திரும்பி வருவார் என்ற நினைப்பில் முப்பத்தி ஆறு வருடங்களை அம்பிகாவால் கடக்க முடிந்தது. அந்த சாதனைகளுக்கு இலங்கை பலருக்கும் வாய்ப்பளித்துள்ளது. அம்பிகா மட்டும் பெருமைப்பட முடியாது. அவளுக்கு பின்னர் பல பெண்கள் போட்டி போட்டார்கள். காலக் கடவுளால் கைகொட்டி சிரிக்க மட்டும் முடிந்தது.

அவள் தன் சகோதரிகளுக்காகவும், தன் குழந்தையை வளர்த்தெடுக்கவும் கடுமையாக உழைத்தாள். பின் வந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் இவர்கள் பகுதிக்கு பொருளாதாரத் தடைபோட்டது. அது அம்பிகாவுக்கு மட்டும் வசதியாக போய்விட்டது. கத்தரி, வெங்காயம், மிளகாய், பைத்தங்காய் என அவள் தோட்டம் அவளைக் காத்தது. ஆண்களால் மட்டும் செய்யப்பட்ட கலப்பை பிடித்து உழும் தொழிலை விதி மாற்றி அம்பிகா செய்தாள். மாடுகள் களைப்பில்லாமல் வேலை செய்தது. அழகி செய்யும் தோட்டம் என்று மண் வாரி வழங்கியது. மண் பெண் மீது கொண்ட காதலை காற்று காவிச்சென்றது.

ஊழிக்கூத்தில் மகனை காக்கவென்று அவள் முடிவெடுத்தாள். தன் சந்ததியில் எஞ்சி நின்ற அந்த ஆண்மகனை வெளிநாடு அனுப்பி உயிர் பிழைக்க வைக்கலாம் என்று அவள் நினைத்தாள். சேர்த்த பணமெல்லாம் ஒன்றுகூட்டி மகனை இலங்கையை விட்டு அனுப்பினாள். அதில் கூட அவளுக்கு அதிர்ச்சியே மிஞ்சியது.

மொஸ்கோவில் இருந்து கடைசியாக மகன் பேசினான். கால் நடையாக ஜேர்மனி செல்ல இருப்பதாகச் சொன்னான். இருபது ஆண்டுகளாக தகவல் இல்லை. பூமி 40030 km சுற்றளவு உள்ளது என்கிறார்கள். பையப் பைய நடந்தால் 400 நாட்களில் நடந்து முடிக்கலாம். அம்பிகாவின் மகன் 1000 km இன்னும் நடந்து முடிக்கவில்லை. என்றாவது ஒருநாள் அவன் ஜேர்மனி சென்றுவிடுவான் என்றுதான் அம்பிகா நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

இப்படித்தான் அவள் காத்திருக்கும் கல்லாக இருக்கிறாள். தங்கனின் உயிர் தூசோ, மகனின் உயிர் காற்றோ அவளை உயிர்ப்பிக்கும் என்ற நம்பிக்கையில்.

இடையில் கற்பகக்கிழவி எப்படி வந்தாள்? என்று கொஞ்சம் சுறணை உள்ளவர்கள் கேட்கலாம். உண்மையில் கற்பகக் கிழவி இடையில் வந்தவள்தான்!

கிழவியின் பெயர் கற்பகவள்ளி. எந்த ஆண்டு பிறந்தது என்பதற்கு எந்த அத்தாட்சியும் இல்லை. கடைசி யுத்தத்தில் தோற்ற நாட்டு மக்கள் சரணடைய வந்து கொண்டிருந்த போது, அம்பிகாவும் வந்து கொண்டிருந்தாள். அப்போது பசியில் இறக்கும் தறுவாயில் தனித்து ஒரு மரநிழலில் படுத்திருந்தது கிழவி. அம்பிகா சற்று தண்ணீர் தெளித்து கைதாங்கி கூட்டிவந்த உயிர்தான் கற்பகக்கிழவி.

கிழவியின் பூர்வீகம் வன்னி நிலம். அவர்கள் ஆதி வன்னியர்கள். 1954-ல் வவுனிக்குளம் புனர்நிர்மாணிக்கப்பட்டபோது பல பூர்வீக வன்னிக் கிராமங்கள் குளத்துக்குள் சென்று நீர் தின்றுவிட்டது. அந்த மக்களை கரும்புலியான், பாலிநகர் என்று குடியேறினார்கள். அதில் கரும்புலியானில் குடியேறியதுதான் கற்பகக்கிழவியின் குடும்பம். கிழவிக்கு 11 குழந்தைகள் பிறந்ததாக ஞாபகம் உண்டு. ஆனால் உயிரோடு வளர்ந்தது 6 பிள்ளைகள். 4 பிள்ளைகள் போராளியாகி உயிர் துறந்தார்கள். மீதி இரண்டு பிள்ளைகளும் இடம்பெயரும் போது தமக்கு பாரம் என்று விட்டுவிட்டுச் சென்ற பொருட்களில் ஒன்று கற்பகக்கிழவி.

யுத்தத்தில் மாண்டு, உயிர் மீண்டு ஊர் வந்தபோது எல்லா பயன்தரு மரங்களும் வெட்டப்பட்டு இருந்தன. அம்பிகா திட்டமிட்டுத் திட்டமிட்டு ஒரு மண் வீடு கட்டினாள். பலமான மண் வீடு கட்டுவதெப்படி என்று பாடம் நடத்தியது கற்பகக் கிழவி. அதற்கு முன் நட்ட உயிர்கள்தான் மூன்று தென்னம் பிள்ளைகள். தென்னை மரம் மனிதர் போல நூறு ஆண்டுகளை வாழ்வின் எல்லையாக வைத்திருக்கிறது. அது நடப்பட்ட பூமியை விட்டு எங்கும் போகாது. அது தன்னை நட்டவருடன் வாழ்வெல்லாம் பயணிக்கும். தன் வாழ்வின் எல்லாப் பாகங்களையும் மனிதருக்கு வழங்கும் காமதேனு தென்னை. அந்த மரத்தின் மேல் அம்பிகாவுக்கு ஆசை அதிகம்.

அவள் தன் கையாலேயே குழி தோண்டினாள். எங்கெங்கோ அலைந்து ஆற்று மணல் இட்டாள். அதன் பின்னர் வேப்பம் புண்ணாக்கை பரவினாள். கற்பகக்கிழவியின் கையால் மூன்று தென்னைகளையும் நட்டாள். கற்பகக்கிழவி குலதெய்வத்தை கூவி அழைத்து தியானித்தது.

அம்பிகா தென்னங்கன்றுகள் வளர்ந்த ஒவ்வொரு நாளையும் அவற்றுடன் வாழ்ந்தாள். தினமும் அவற்றுடன் பேசினாள். தன் அந்திம காலத்தின் துணை நீங்கள்தான் என்று அவற்றின் தலைகள் மேல் சத்தியம் செய்தாள். எண்ணி மூன்று வருடங்களில் மூன்று தென்னைகளும் பாளை கட்டியது. தன்னிடம் இருந்த சங்கிலியை ஒவ்வொரு தென்னம் பாளைக்கும் அணிவித்து மகிழ்ந்தாள். கறுப்பி குளத்து நிலவும், சூரியனும் அதைப் பார்த்து அதிசயப்பட்டது.

தென்னைகளை இனம், மொழி, சாதி என்று பிரித்து யாரும் எரித்து வீழ்த்தமாட்டார்கள். தான் வாழ்ந்து விட்ட பின்னும் அந்த மூன்று தென்னைகளும் தன் வாசத்தை வீசும் என்று நம்பினாள். ஆனால் தென்னைகளை அடியோடு அறுத்துத் தின்று ஏப்பமிடும் காண்டாமிருக கரு வண்டுகளை அவள் அறிந்திருக்கவில்லை. மேகங்களை கலைக்க வந்த காற்றில் மூன்று தென்னைகளும் வீழ்ந்து கிடக்கின்றன.

இருண்ட மேகங்களை காற்று கலைத்து விட்டது. வானம் வெளித்தது. வந்த மழை காணாமல் போய்விட்டது. கிணற்றடியில் முழுகியதும் பாவாடையோ, மக்ஸ்சியோ, துவாயோ தான் எடுத்து வரவில்லை என்பதை உணர்ந்தாள். அவள் திரும்பியபோது கற்பகக்கிழவி அவற்றை கையில் வைத்துக் கொண்டு...

'இந்தா பிள்ளை... வடிவா தலையை உணர்த்து... ஒண்டுக்கும் யோசியாத, நாங்கள் வேறு பிள்ளைகள் நடுவம். நான் தேத்தண்ணி போடுறன், கெதியா வா!' என்று கூறிக்கொண்டு குசினிப்பக்கமாய் போனாள்.

கற்பகக்கிழவி ஆக்கிய தேநீர் ஆறிப்போய் விட்டது. அம்பிகாவைக் காணவில்லை. கிழவி கிணத்தடிப்பக்கம் போனாள், காணவில்லை. வீட்டுக்கோடிப்பக்கம் ஓடினாள். கிழவிக்கு தூக்கி வாரிப்போட்டது. ஈர ஆடைக்கு மேல் உலர்ந்த ஆடையை அணிந்துகொண்டு வீழ்ந்து கிடந்த தென்னைகளோடு அம்பிகா பேசிக் கொண்டிருந்தாள்.

'அவர் வந்து மகன் எங்கே? என்றால் நான் என்ன சொல்வேன்? சொல்லுங்கள்... நீங்களும் என்னைவிட்டுப் போய்விட்டீர்கள். எப்போது வருவீர்கள்?'

அம்பிகாவின் அருகே அமர்ந்து தென்னை பதில் சொல்வது போல கற்பகக்கிழவி பதில் சொன்னாள். எதற்கும் கலங்காத ஆதி வன்னிமகளின் கண்களில் வழிந்த முது நீர் முதன் முதல் மண்ணில் வீழ்ந்து நதியானது.



akaran@thaiveedu.com

# சாம்பரில் திரண்ட சொற்கள் 16

– தேவகாந்தன்

ஓவியம்: ஜீவா

இலையுதிர் காலத்தின் ஒரு விசேஷம், சட்சட்டென சுழற் காற்றுகள் கிளம்பி பிரபஞ்சத்தை தூசு மண்டலமாக்குவது. எங்கிருந்தோ விசையுடன் கிளம்பிவரும் காற்று, ஏதோவொரு புள்ளியில் திடம்போல் உருப்பெற்று நின்று சுழற்பெடுக்கும். அந்நேரம் புளுதியும் தும்பும் காய்ந்த இலை சருகுகளும் அதன் வலிய கரங்களால் அள்ளுப்பட்டு மரங்களின் உயரங்கள் கடந்தும் நெடுக்கும்.

வெளியே நடக்கும் சூறையின் அட்டகாசத்தை பின்முற்றத்தில் இருந்த சுந்தரம் கண்டுகொண்டிருந்தார்.

இடவசதியாலும், அயல் மனிதர்களாலும் அப்போது குடியிருக்கும் அந்த வாடகை மனை, சொந்த மனைபோல் ஆகியிருந்தது சுந்தரம் சிவயோகமலர் இருவருக்கும்.

ஆரம்பத்தில் நிலக்கீழ் வீட்டின் குடியிருப்பில் சிவயோகமலருக்கு விருப்பம் இருந்திருக்கவில்லை. அவ்வப்போது தன்திருப்தியின் புறுபுறுத்தல்களை அவர் செய்துகொண்டேயிருந்தார்.

அப்போதெல்லாம் தன் மெலிந்த குரலில், 'பேஸ்மென்ரில் குடியிருக்கிறது பெரிய பாக்கியம்' என தனக்கேபோல் வகுப்பெடுக்க ஆரம்பிப்பார் சுந்தரம். 'அது மரங்களின்ர வேருக்குச் சமாந்திரமாய் இருக்கிது.' அவையின்ர கதையள் பேச்சுகள் சுவரில மோதேக்க, எங்கட உட்புலனில அதெல்லாம் எதிரொலிக்கிது. இந்தப் பக்கத்தில செந்நதியும், அதுக்கு அங்காலயிருக்கிற டொன் ஆறும்கூட கதை சொல்லுற ஆறுகள்தான். ஆயிரமாயிரம் வருஷக் கதையள அவை தங்களுக்க பொதிஞ்சு வைச்சிருக்கின. கதைகேட்டு வளந்த ஆக்கள் நாங்கள். அந்த வாய்ப்புக்களையெல்லாம் தவற விட்டிடக்குடா.'

கேட்டு அட்டகாசமாய் சிரிப்பார் சிவயோகமலர். 'ஐரோப்பாவிலயிருந்து வந்த வெள்ளைக்காறர் இஞ்சயிருந்த செவ்விந்தியரை லட்சக் கணக்கில சாக்கொல்லி இந்த மண்ணுக்குள்ளதான் தாட்டிருக்கிறதாயும் சொல்லுகின. செவ்விந்தியற்ர ஆவியள் சொல்லுற அந்தக் கதையளயும் பேஸ்மென்ரில இருந்தாக் கேக்கலாம்போல.'

சுந்தரம் வாயடங்கிப் போவார்.


அத்தனைக்கு கூரிய விவேகமிருந்தது சிவயோகமலரிடத்தில். இன்று பெரும்பாலும் எல்லாம் பின்தள்ளப்பட்டுவிட்டன. நோயின் உத்தரிப்பில் அவை தறிகெட்டுப்போயின.

அவருக்கு முதலில் டயாலிஸிசும், பின்னர் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சையும் தவிர்க்க முடியாதவையென மருத்துவர்கள் கூறியிருந்தனர். அவற்றினைத் தாங்கும் மனவலியோடு அவர்தான் இருந்திருக்கவில்லை. அவசர சிகிச்சைக்கு ஆஸ்பத்திரி சென்றுவந்த பின்னர், அந்த மனத்திடம் அவருக்கு வந்திருந்ததாய்ப்பட்டது. அவரது பேச்சில் அது தொனித்தது. அக் காலத்தில் அவரது உடலுபாதைகளும் கணிசமானவளவு குறைந்திருந்தனவாய்த் தோன்றின. உடலுபாதையின் குறைச்சல், அவரது மனவுலைச்சல்களைத் தளர்த்தின. அதனால் அவர்கள் இருவரிடையிலுமான இழுபறிகள் மங்குதசை கொண்டன.

ஆஸ்பத்திரியிலிருந்து வீடு திரும்பிய கையோடு போனெடுத்து நலம் விசாரித்த புவனேஸ்வரி, சமீபத்தில் மறுபடியும் போனெடுத்திருந்தார். ஆர் போன் நம்பர் தந்ததுபோன்ற மலரின் வழக்கமான கெடுபிடிகளின்றி உரையாடல் நடந்து முடிந்திருந்தது. என்றாலும் நீண்டதென்று சொல்லிவிட முடியாத உரையாடல்தான் அதுவும்.

எல்லாம் கவனித்தபடி சுந்தரம் தானும் தன்பாடுமான பாவனையில் இருந்துகொண்டிருந்தார்.

இளவேனில் தொடக்கம் கோடை வரை செழிப்புடனிருந்த அவரது பின்முற்றத்து சிறுபூந்தோட்டம், தன் இறுதி மூச்சை விட்டுக்கொண்டிருந்தது. அவரது தொட்டி ரோஜாக்கள் கடைசி மொட்டுக்களை மலர்த்தி நின்று விடைசொல்லிக் கொண்டு இருந்தன. அவரது பெருவிருப்பத்துக்குரிய வைல்ட் ஜஸ்மின் செடி காலநிலை ஏதொன்றையும் பொருள்



செய்யாது கிளைவிட்ட புதுக்கரத்தால் ஆதாரத்தைப் பற்ற காற்றில் துளாவிக்கொண்டிருந்தது.

இனி நீர் ஊற்றுதலில்லை, பராமரிப்பில்லை. அந்த இடத் துக்கு அழகுமில்லை.

சுந்தரம் கூடத்துக்கு வந்தார்.

வாசலைக் கடந்தபோது வீசிய பார்வையில் அறைக்குள் மலர் தெரிந்தார். அவர் முகம் ஏன் இருண்டு கிடக்கிறது? சுந்தரம் திடுக்கிட்டார். பின்முற்றம் அவர் செல்லுமுன் கண்ட முகத்தின் சாந்தத்தை எந்த அருப முகம் அல்லது மாய வொலி வந்து தின்றுவிட்டுப் போனதென ஏங்கினார்.

சிவயோகமலர் தன்பாட்டில் எதையெதையோ புலம்பி கைக ளைக் காற்றில் எறிந்துகொண்டு இருந்தார். கடந்த மூன்று நான்கு மாதங்களில் தோற்றப்படாத காட்சியது. அன்றிரவு மலர் தன் அக உலகத்தின் ரகசியக் கதவுகளில் காட்சி தெரியும்படியான நீக்கல் தெரியுமென அவருக்கு நிச்சயமா னது.

தமிழ்க் கடையிலிருந்து அன்று பகல் எடுத்துவந்திருந்த பத் திரிகைகளில் மேலான கண்ணோட்டத்தில் சோபாவில் அமர்ந்திருந்த சுந்தரத்திற்கு நேரம் சிறிது கழிந்தது. எதையெ தையோ யோசித்தார். நேரத்தை அவர் விருப்பத்துக்கு மாறாய் காலம் மிக மெதுவாக உருட்டிக்கொண்டிருந்தது அப்போது.

சிவயோகமலரின் அறையுள் CP24 செய்திச் சனல் தொலைக் காட்சியில் போய்க்கொண்டிருந்ததுபோலும். பளீர்... பளீ ரென்று பாய்ந்த வெளிச்சங்கள் அதைத் தெளிவுறுத்தின. நள் ளிரவை நேரம் அண்மித்திருந்தது. அவரெழுந்திருக்க நேரம் இன்னும் அதிகமில்லை.

பொழுது சிறிது கழிய அறையுள் சோபா நெரிந்து விரிந்த கிரீச் சத்தமெழுந்தது. வேறு சத்தமில்லை. நேரம் ஊர்ந்து கொண்டிருந்தது. மனத்திலெழுந்த எண்ணவோட்டங்களை உருப்படுத்தியெடுக்க அல்லது உருவோட்டங்களை எண் ணங்களாய் மாற்றியெடுக்க சிவயோகமலருக்கு அந்த நேரம் தேவைப்பட்டிருக்கலாம்.

மெய்யாகவே அகவுலகும் புறவுலகும் மயங்கிய ஒரு தடு மாற்றமான தருணத்திலேயே அவரும் இருந்திருந்தார். அவர் அந்நிலைகளிலொன்று உறுதியாய்ப் பற்றியவேளை, அவர் வெள்ளவத்தையிலுள்ள மாடிவீடொன்றில் தான் இருக்க நேர்ந்த மர்மத்தை விளக்கம்கொள்ள முடியாமையின் புதிரில் அகப்பட்டுப்போயிருந்தார். முந்திய யோசிப்புக்களிலும் அது பற்றிய நினைப்பை தான் தவறவிட்டிருப்பது அவருக்குத் தெரிந்தது. ஆனால் இப்போது அந்தச் சிக்கல் காரணம் தெளிவற்று நின்றுகொண்டிருந்தது.

அவர் மீண்டும் சிந்தையை ஒழுங்குபடுத்த முயன்றார்.

பாணந்துறை பஸ் நிலையத்துக்குச் சமீபமிருந்த அந்த வீட்டை அடைந்தபோது, அந்த புதுவீட்டின் பிரமாண்டமும், சூழலும் அவரைத் திகிலடையவே செய்கின்றன. அவர், 'இப் பிடியான நேரத்தில, ரண்டொரு நாளெண்டாலும், இஞ்ச நிக் கிறது பயமில்லையோ, மாமா?' எனக் கேட்கிறார்.

மாமா அதிரச் சிரிக்கிறார். 'ஒரு இன்போமரின்ர வீட்டை சோதினைபோட ஒரு ஆமியோ பொலிஸோ இப்ப சிறிலங்கா வில இல்லை, மலர். நீ அதொண்டயும் யோசிக்காத.'

அன்று மதியம் மழை பெய்யத் துவங்குகிறது. வெளியே போயிருந்த மாமா பார்சல் சாப்பாடு கொண்டுவந்து தருகி றார். நிலைமையை அவதானிக்க, தான் தெரியாத இடமொன் றில் அகப்பட்டுக்கொண்டதான உணர்வொன்று மனத்தே கிளர்கிறது சிவயோகமலருக்கு. புவனேஸ்வரியிடமாவது நிலை மையைத் தெரிவிக்க எண்ணமிடுகிறார். பின் இகழ்ச்சியோடு அந்த நினைப்பை ஒதுக்குகிறார். சாப்பிடப் பிடிக்கவில்லை. தண்ணீர் மட்டும் குடித்துவிட்டு கதிரையில் சாய்கிறார். தூக் கக் கிறக்கமா, பிரக்ஞையிழப்பாவென்று தெரியாத ஒரு மயக்கம் ஆட்கொள்கிறது.

எவ்வளவு நேரம் அவ்வாறிருந்தாரோ, எழுந்தபோது பகல் இன்னும் முடிந்திராத ஒரு பொழுதாகயிருக்கிறது. அது அன் றைய நாளின் பகலா, அடுத்த நாளின் பகலாவென்பதுதான் அவரறியாதிருந்தது. அவருக்கு பயமெழுகிறது. சற்று நேரத்

தில் திடுக்காட்டத்துடன் உணர்கிறார், அவர் தூங்கியிருந்த பாணந்துறை வீடாக அது இருக்கவில்லையென. அதில் சந்தேகமிருக்கவில்லை. ஏனெனில் அவர் அப்பொழுது கண்விழித்த வீடு ஒரு மாடிவீடாகயிருந்தது. தஞ்சக்கேட்டுடன் ஓடிவந்து பல்கணியிலிருந்து வீதியை எட்டிப் பார்த்தார். வலது புறத்தில் கடல் தெரிந்தது. இடது புறத்தில் இரைந்தபடி காலி வீதி கிடந்தது. இடையே பழக்கமானதுபோல் தோன்றிய ஒரு குறுந்தெரு.

'எப்படி வந்தன் இஞ்ச? ஆர் கொண்டுவந்தது? எப்ப வந்தன்? வயிறு காந்திறமாதிரியில பாத்தா, அஞ்சாறு நாள் ஆனமாதிரித் தெரியுதே! என்ர கடவுளே!' என புலம்பியபடியிருக்க, கீழே தெருவில் ஒரு தனித்த உருவம் போய்க் கொண்டிருப்பதைக் காண்கிறார்.

மயில்வாகனம்? அவனா? உயரம், பெருப்பமெல்லாம் அதேயளவுகளில். அவனது முள்ளம்பன்றித் தலைமுடி சரியான அடையாளமாகலாம். ஆனால் அவ்வுருவம் மொட்டை போட்டிருந்ததில் ஊர்ஜிதம் நிலைகொள்ளவில்லை. இருந்தும் மயில்வாகனமென்றே நிச்சயப்படுகிறார். அவனே தனது நிலைமையின் காரணவாளியென ஏனோ உறுதி மூள்கிறது அவரில்.

பார்த்துக்கொண்டிருக்கையில் வலதுபுறத்தின் செம்மை செறிந்த கடல் திசையில் நடந்து அவன் காணாமலாகிறான். 'அவன்தான்... அவனேதான்... தமக்கை வீட்டிலிருந்து போறான்போல... எளிய நாய்...'

சிவயோகமலரின் நெறுமிய பற்களுக்கிடையில் 'எளிய நா'யென்ற சொற்கள் காதில் விழுந்த சுந்தரம் எழுந்தார். தலையை இங்குமங்குமாய் அசைத்தார். அவரால் அந்த சத்தங்களை, அந்த அர்த்தங்களை மேற்கொண்டும் காதில் தாங்கமுடியாது. அவை சாம்பலில் திரண்டவை.

அவர் பின்புறப் புல்வெளியை நோக்கி நடந்தார்.

காற்றடங்கியிருந்ததில் குளிர் உறைப்பாயில்லை. வாங்கிலே அமர்ந்தார். வெகு நிதானமாக சிகரெட் எடுத்துப் புகைத்தார். மனம், அம் மென்குளிர் காற்றிலேறி பறப்பதான உணர்வெழுந்தது. முகத்தில் நட்சத்திர ஜொலிப்பு. விடுதலை வெளியின் வெளிச்சப் புள்ளிகளாய் கண்கள் மின்னின.

அவருக்கு நன்கு தெரியும், அப்போது... அக் கணத்தில்... அவரது மனைவி சிவயோகமலர் தன் சுயமழிந்த வரலாற்றினைச் சுயமிழந்து சொல்லிக்கொண்டிருக்கிறாரென. சற்றொப்ப பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முந்தி நடந்ததும், தான் மூன்றாண்டுகளாய் அறியக் காத்திருப்பதுமான சம்பவம் சொற்களில் ஏறியிருக்கிறது. அத் தருணத்தை உதறி அவர் அவள் குரலெட்டாத் தூரத்தில் வந்தமர்ந்திருக்கிறார்.

விடுதலையின் பரிபூரண அனுபவம்!

அவர், அத்தகையபொழுதில் சிவயோகமலர் வெளியிடும் உணர்வுத் தீவிரத்தை சொற்களிலும் கண் புரட்டல்களிலும் கண்டிருப்பவர். அண்மையில் மூச்செடுக்கப் பட்ட சிரமத்தில் அவர்பட்ட உடல்வாதனை தன்னையுமே அதை அனுபவிப்பவர்போல் துடிக்கவைத்ததாயினும், அதைவிட அவரது அவ்வெளிப்படுத்துகை பன்மடங்கு அதிகமென்பதை அவர் உணர்ந்திருந்தார். அச் சம்பவம் அபாண்டம், பொய், கனவு, கற்பிதமென எதுவாயிருப்பினும், அந்த 2007 மார்ச் 07-இலிலிருந்து அவர் தினம் தினம் தன்னை எரித்துக்கொண்டிருக்கிறார். அவ்வாறு தினம் தினம் தன்னை எரிக்கும்படியான எந்தப் பாவமும் இம்மானுடப் பரப்பிலில்லை.

அதுவொரு பாவாத்மர் பாதிக்கப்பட்ட ஆத்மா, பொய்யால் அல்லது நிஜத்தால். அதன் வலியடங்கலே அந்த இரவுகளின் அவரது உணர்ச்சி வெடிப்புகளெனில், அதன்மேலான ஒரு வேவு பார்த்தலும், தீர்ப்பளித்தலும் ஜென்ம ஜென்மமாய்த் தொடரக்கூடிய பாவத்தின் தடமாகிவிடும்.

அதனால் சுந்தரம் சிவயோகநாயகியின் குரலெட்டாத் தொலைவுக்கு ஓடினார்.

அச் செயல்மூலம் ஒரு கணவராய் வென்றாரோ தோற்றாரோ, ஒரு மனிதனாய் அவர் வென்றிருக்கும் கணம் அது..

அவர் வென்றிருக்கிறார். பழைய தோல்வியின் பள்ளங்களை நிரவிவிடும்படியான மகத்தான வெற்றிதானது.

அடிக்கடி நினைத்ததில்லை. ஆனாலும் அந்தப் பள்ளம், அநாதி காலமான பள்ளம் இருந்தேயிருந்தது அவர் மனத்தில். எப்போதாவது நினைப்பதுண்டு. நினைத்து தனக்குள்ளாகவே குறண்டிப்போவதுண்டு. ஒரு சீணிப்பு, மூன்று பிள்ளைகளின் பின்னரேகூட அவர் அடைந்ததாயிருந்திருக்கிறது. குறண்டிக் குறண்டி ஒரு பூச்சியாய் மாறும் கேவலமாய் அது வடிவங்கொள்ளவில்லையே தவிர, அதனிருப்பு நிஜமானதே.

அதை அவர் ஒருமுறை நினைக்கலாம். இப்போதில்லாவிட்டால் இனி எப்போது? இதுவோர் அருமையான தருணம்.

பெரிய தாய்க்கு வசதியாயிருக்குமென்பதால் தங்கள் வீட்டில்தான் பந்தல் போட்டு, மணவறையமைத்து தாலிகட்டுவென நடனசுந்தரத்தின் தாயார் செல்லம்மா கண்டிப்பாய் சொல்லிவிட்டார்.

சொற்களின் வலிதுணர்ந்து ஓர் எதிர்ப்பேச்சு சொல்லவில்லை வித்துவான் வீரகத்தியும்.

அதன்படி முகூர்த்த நாளன்று தாலிகட்டு ஒரு காலையில் முடிவுற, அன்று மாலையே கோயிலுக்குப் போய்விட்டு அப்படியே மணமக்கள் கால்மாற்றி மணப்பெண் வீடு வருவதென்றும், மேலே விருந்துபசாரமென்றும் ஏற்பாடு செய்திருந்தனர் பெண்வீட்டுக்காரர்.

காலையில் தாலிகட்டின் பின் மதியப் பந்தி முடிந்ததுமே, கோயில் சென்றானதும் மாலையில் கால்மாற்றி முடிந்தானதும் மணப்பெண் வீட்டில் விருந்துபசாரம் முடிந்தானது. இசைக் கலைஞர் சிலரும், பள்ளியாசிரியர் சிலரும் மணமக்களின் விசேஷ அழைப்பில் வந்திருந்தவர்கள் சொல்லிக் கொண்டு கிளம்ப, 'கந்தப்பு மனை'யின் கிழக்குப் பார்த்த தனியறையில் மணமக்களை பிரவேசிக்க வைக்கின்றனர் உற்றார்.

வெளியே நாகசின்ன வாசிப்பு முடிந்து ஒலிபெருக்கியில் இசைத்தட்டுப் பாடல்கள் போட்டிருந்தார்கள்.

வெளியே நூறு உறவினர்களும் போட்ட இரைச்சல், ஒலிபெருக்கியின் அலறல் யாவும் உள்ளின் ரகசிய சத்தங்களை மூடியிருந்தன.

ஆயினும் விழுந்திருந்த மௌனத்தின் இதழுடைத்து இருவரிடமிருந்தும் ஒரு வார்த்தை பிறந்திருக்கவில்லை.

பாயில் குத்துக்காலிட்டு அமர்ந்தபடி அதை அணைத்திருக்கிறாள் சிவயோகமலர். அருகே சுவரோடு சாய்ந்தபடி கால் நீட்டி நடனசுந்தரம்.

வெளியில் இருந்திருந்த சுமுகம்கூட உள்ளே வந்ததும் அவர்களிடத்தில் அற்றுப்போயிருந்தது.

அந்த விசேஷம் அன்று நடந்தாக வேண்டும்.

அந்த விசேஷம்பற்றி உரைக்க, ஊரிலிருந்துகூட வரவேண்டியதில்லை, அந்த வீட்டிலேயே கிழவிகள் இருந்திருந்தார்கள். ஒருவேளை இதுவரை சொல்லிக்கொடுத்திருக்கவில்லையோ? ஆயின், சொல்லித் தெரிவதில்லை மன்மதன் கலை என்பதுதானென்ன?

நேரம் நகர்ந்துகொண்டிருக்கிறது.

நடனசுந்தரம் அவ்வப்போது அவளைப் பார்க்கிறான்தான் திரும்பித் திரும்பி.

ஆனால் பார்வையில்கூட ஓர் இணக்கம் அவள் முகத்தில் காணக்கிடக்கவில்லை.

அவனது மன உடல் உந்துதல்களை அதுவே விலகி நிற்க வைக்கிறது. அதை உடைக்க வலிந்த ஒரு சிரிப்போடு, ‘விளக்கை இனி நூப்ப’மென்று எழுந்துபோய் சாமிப் படத்து ஐந்து நாக்கு குத்துவிளக்கின் நான்கு திரிகளை நசுக்கி அணைத்துவிட்டு அவன் வர, அவள் பாயிலே படுத்திருந்துகொண்டிருக்கிறாள்.

அவன் அருகே தன்னைச் சரிக்கிறான். சரிந்து கிடந்து மஞ்சள் ஒளியில் மினுமினுக்கும் அவள் முகத்தைப் பார்க்கிறான்.

அந்த முகத்தில் அழைப்பு இல்லை. ஆயினும் எதுவுமில்லாமல் போய்விடவில்லை என்பதுபோல் இமைகள் மட்டும் அவ்வப்போது வெட்டியடிக்கின்றது மின்னலாய்.

நேரம் மேலே தன் கழிதலைத் துவங்குகிறது.

இப்போது அவனுக்குள் பயம் வந்து விழுந்தது.

அது நடக்காவிட்டால் கல்யாணம் முடிந்ததாக ஆகாதே.

அவன் பார்வை தாவணி நசிந்து ஒதுங்கிய நெஞ்சில் படிகிறது. மென்வெளிச்சத்தில் பட்டுத் துணியின் அந்த பச்சைச் சட்டைக்குள் விம்மிக் கிடந்தது ஒருபக்க முலை, அவன் பார்வையை நகர்த்த முடியாதவனானான்.

அவன் நிதானம் சரிந்தது. ‘மல’ரென கரகரத்தபடி அவள் தோளில் கைவைத்தான்.

ஓர் அசைவுமின்மை, அங்கே தடையில்லையென்பதாய்க் கருதவைக்கிறது. விரும்பினாலெடுவென்ற தாட்சண்யமா?

அவனது மோகவாசலின் கதவினை யாரோ உடைத்தனர். மேலே மணித்துளி ஆகவில்லை.

அவனுள் பிரபஞ்சங்கள் கிடுகிடுத்தன.

மறுகணம், அவன் வெட்கப்பட்டு ஒதுங்கினான்.

அவளேங்கி அவனை தீட்சண்யமாய்ப் பார்த்து தாபம் துடிக்க அந்த இருட்டுள் கிடந்தாள்.

தூரத்தே சிவன்கோவில் உதயப் பூஜை மணி அலுப்போடு அசைந்து டாண்... டாண்... என்றது.

அன்று... அந்த இரவில்... எல்லாவற்றிற்கும் ஒரு முடிவு வந்தது.

அவர் எழுந்து கூடத்துக்கு நடந்தார். திறந்த வாசல் கதவை அகாலமான நேரத்தையும் அசட்டைசெய்து, சற்று பலமாகவே மூடினார். பிணைச்சல்கள் எண்ணெய்ப் பசையற்று கீச்சென்ற ஒலியெழுப்பின. காலையில் அதற்கு எண்ணெய் விட வேண்டுமென எண்ணியபடி கூடத்துக்கு வந்தார்.

சுவர்க் கடிகாரம் 1.15-ஐக் காட்டியபடியிருந்தது. அவர் தடுமாற்றம் கொள்ளவில்லை. பற்றறி முடிந்திருக்குமென எண்ணினார். மதியத்தில்தான் நின்றிருக்கிறது. அடுத்த முறை கடைக்குச் செல்லும்போது பற்றறி வாங்கவேண்டுமென ஞாபகத்தில் பதித்தார்.

சிவயோகமலரின் குரல் ஓய்ந்திருந்தது. இரவு விளக்கு தொலைக்காட்சி நிறுத்தப்பட்டிருந்ததில் பிரகாசமாய் எரிந்தது. மனைவி தூங்கியிருக்கக்கூடுமென நினைத்தார்.

வெளிச்ச விளக்கை அணைத்துவிட்டு இரவு விளக்கைப் போட்டார்.

ஜன்னலினூடு தெரிந்தது விகாசித்துக் கிடந்த வானம்.

அப்பாடா!

எல்லாம் வென்றாயிற்று.

(முற்றும்)



devakanthan@thaiveedu.com

# வாழ்வுரிமை!

- மா. சித்திவினாயகம்

ஓவியம்- செல்வன்

George Orwell எழுதிய Animal Farm கதையைத் தழுவியது




திரவியம், கனடாவிலிருந்து கிளிநொச்சி - கரடிப்போக்குச் சந்திக்குப் போய் காணி வாங்கி மிருகப்பண்ணை வைத்திருந்தான். அவன் மனைவியான வெள்ளைக்காரப் பெண்மணி ஸ்ரெவ்னியின் ஆலோசனை அது.

ஒசாவாவில் பன்றிப் பண்ணை வைத்திருந்த அவளது தந்தையான சல்வடோரின் பண்ணையில் வேலைசெய்தவன் திரவியம். கடும் உழைப்பால் சல்வடோர் குடும்பத்தைக் கவர்ந்த திரவியம் பின் அவரின் மகளான ஸ்ரெவ்னியையும் கவர்ந்தான்.

சல்வடோர் முடாக் குடிகார இத்தாலிக்காரன். ரஸ்ர டி மாயல (Testa di maiale - பன்றித் தலையன்) என்று மிக அன்பாக வெறியில் திரவியத்தை முதலாளி கூப்பிடுவது அவனுக்குத் தேனாய் இனிக்கும். வெள்ளையன் வாயால் எது சொன்னாலும் அது ஓர் பேரின்பம்தான். அது எதைக் குறிப்பது என்பது யாருக்குத் தேவை.

சல்வடோர் தன் கடவுளையும், தாயையும் மட்டுமல்ல பண்ணை விலங்குகளையும் பன்றி மாதாவே (porco Madonna) என்றே திட்டுவான். குடிதான் திரவியத்தையும் சல்வடோரையும் ஒன்றாக்கிப் பேசிச் சமனாக்கும் மாமருந்து. வெறியென்றால் எதையாவது புலம்பித் தள்ளுவான் சல்வடோர். அவன் புலம்பல் திரவியத்திற்கும் தொற்றியிருந்தது.

தான் சிசிலி என்று தன் ஊரைப் பெரிதும் பெருமையாகச் சொல்லிக் கொண்டேயிருப்பான் சல்வடோர். சிசிலிதான் மாவியாக்களின் பிறப்பிடம் என்பான். மாவியா என்றால் என்ன அர்த்தமென்று தெரியுமா என்பான். திரவியத்திற்கு என்ன தெரியும்? ஆனால் இவனோடு கொஞ்சம் உஷாராய்த்தான் இருக்க வேணும் என்றுமட்டும் தெரிந்திருந்தது. மாவியாக்காரரை நம்ப முடியாது. மனதிற்குள் நினைத்துக் கொள்வான்.

திரவியம் மதுவில் கண் கிறங்குவது போலப் பாவனை செய்தாலும் சல்வடோர் விடமாட்டான். மாவியாக்களின் கதையைச் சொல்வான். 'மோர்டே அல்லா ஃபிரான்சியா, இத்தாலியா அனெலா!' (Morte alla Francia, Italia anela!) பிரான்ஸுக்கு மரணம், இத்தாலியின் அறைகூவல் இது. MAFIA என்ற சுருக்கத்தின் தாற்பரியம் இதுதான் என்றான். பிரெஞ்சுக்காரன் ஒருவன் எங்கள் சிசிலிப் பெண்ணைக் கற்பழித்த கொடுமைக்காக அவர்களைக் கொன்று பழிதீர்க்கப் பிறந்த முனைப்பு இது என்றான். வியப்பாயிருந்தது.

திரவியத்திற்கு உடனேயே தங்களின் உள்ளூர் இயக்கங்களின் நினைப்பு வந்தது. சிங்கள இராணுவத்தானின் இப்படியான கொடுமைகளுக்காகத் தானே அவர்களும் இயக்கமாகி எதிர்த்தார்கள். பிறகு ஆளுக்கொரு இயக்கமாயினார்கள். பிறகு பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டார்கள்.

'மாபியா' என்றால் என் மகளே என்கிற எங்களின் அலறல் உனக்குப் புரிகிறதா என்றான் சல்வடோர் வெறியில் தள்ளாடியபடியே...

ஊரின் மகளிற்காக மாவியா அமைத்தவன் சொந்தமகளை எனக்குத் தருவானா? திரவியத்திற்குத் திக்கென்றிருந்தது.

ஒரு பக்காத் திருட்டுக் கூட்டமெனத் தான் நம்பிய மாவியாக்களை மகத்தான புரட்சியின் கதாநாயகர்கள் என்கிற ரேஞ்சில் வர்ணித்துக் கதை சொல்வது திரவியத்திற்குப் பெரிதும் பிடிக்கவில்லை.

இருந்தாலும் வேறு வழி. முதலாளி சொல்வதைக் கேட்பது தானே தொழிலாளி கதி. அதிலும் ஸ்ரெவ்னி அவன் கனவுலக நாயகி அல்லவா!

இந்த நாட்களில் தான் அவனை இறுக்கமாக ஸ்ரெவ்னியும் விரும்பினாள். பயம் ஒருபுறம் இருந்தாலும் பாழும் மனம் அவளை விடுவதாயில்லை. மாவியாக்கார ஆட்களோடு இலகுவில் பொருந்த முடியாது.

தன் தந்தையுடன் தன் காதல் விடயத்தில் முரண்பட்ட ஸ்ரெவ்னி திரவியத்தோடு இலங்கை போவதுதான் சிறப்பென முடிவு செய்தாள். அது ஒரு நீண்ட பெரிய கதை. அதை இங்கு சொல்லி மாளாது.

கரடிப்போக்கில் கட்டிய இந்த மிருகப் பண்ணைக்கு 'ஸ்ரெவ்னி மிருகப்பண்ணை' என்று அவன் தன் மனைவி பெயரையே சூட்டி மகிழ்ந்தான்.

திரவியம் பண்ணையைச் சுற்றிப் பார்த்துவிட்டு இரவு பண்ணை வாயிலை மூடினான். மிருகங்கள் அனைத்தும் தூங்குவது போல் அவனுக்குப்பட்டது. உள்ளேயிருந்த மிருகங்களின் தனித்தனி வாயில்களை அவன் மூடமறந்து போனான். மறப்பது என்பதை விட அவன் நிறை வெறியில்



# வாழ்வுரிமை

இருந்தான். வெறியில் அவன் மிருகங்களோடு பேசுவான். கதவுகளை பல தடவைகள் மூட மறப்பான். இரவு முழுக்கப் புலம்பியபடியே இருப்பான். இப்படித்தான் போன கிழமையும் நடந்தது.

அவனது தடித்துப் பருத்த உருவம் மின்குமிழ் வெளிச்சத்தில் பெரும் பூதம் போல் அசைந்தது. ஆடி அசைந்து கொண்டிருந்த அவனது நிழலை அவன் வளர்க்கும் அத்தனை மிருகங்களும் குரூரத்தோடு பார்த்தன. எப்போ இத்தொலைவான் போய்த் தொலைவான் என்ற அங்கலாய்ப்போடு இருந்தன அவற்றின் கண்கள்.

வளைவின் திருப்பத்தால் திரும்பித் தடுமாறிய படியே வெறியில் தெருவைக் கடந்து அவன் தன் வீட்டிற்குச்சென்று கொண்டிருந்தான்... அவன் கையில் குடித்து முடிக்காத சாராயம் அவனைப் போலவே தள்ளாடியபடியிருந்தது.

முதலாளி வெளியேறி விட்டான் என்றறிந்த விலங்குகளின் கொண்டாட்டத்திற்கு அளவில்லை. பண்ணையின் கட்டடங்கள் முழுவதும் ஒரே பரபரப்பாகவும், கலகலப்பாகவும் இருந்தது. பன்றிக் கூட்டத்தின் பழைய தலைவரான ரங்கன், நடுநாயகமாக உட்கார்ந்திருந்தது. அந்த உயர்ந்து மதர்த்த வெள்ளைப் பன்றி, முந்தைய இரவில் ஒரு விசித்திரமான கனவு கண்டதாகவும், அதை மற்ற விலங்குகளுக்குத் தெரிவிக்க விரும்புவதாகவும் அவசரச் செய்தி பரவியது.

திரு. ரங்கன் தன் தள்ளாமையிலும் பாதுகாப்பாக வந்து அமர்ந்தவுடன் அவர்கள் அனைவரும் அந்தப் பெரிய

பண்ணை முற்றத்தில் சந்தித்தார்கள். 'ஞானி' என்று விலங்குகளால் செல்லமாக அழைக்கப்பட்ட அப்பன்றி எல்லா விலங்குகள், பறவைகளாலும் மிகவும் மதிக்கப்பட்டார். அவர் சொல்வதைக் கேட்பதற்காக எல்லோரும் தங்களின் பல மணிநேரத் தூக்கத்தையும் ஓய்வையும் இழக்கத் தயாராக இருந்தனர்.

பெரிய களஞ்சிய அறையொன்றின் ஒரு மூலையில் தவிடு மூடைகள் அடுக்கப்பட்டிருந்தது. அந்தச் சாக்கு மூட்டைகளால் உயர்ந்த மேடையில், தலைமைப் பன்றி உட்கார்ந்திருந்தது. வைக்கோற் கற்றைகளுள் தொங்கவிடப்பட்ட ஒரு விளக்கின் அடியில் வைக்கோல் படுக்கையில் அடைக்கப்பட்டிருந்த பன்றிகள் யாவும் கூடியிருந்தன.

இந்தப் பண்ணைக்கு முன்னதாக வேறு பண்ணையில் வளர்ந்த ரங்கனின் வயது பதினைந்து.

மேலும் அவர் திரவியத்தின் பண்ணைக்கு வந்த பிறகு சமீபகாலமாக மிகவும் தடிமனாக வளர்ந்திருந்தார், ஆனால் அவர் இன்னும் கம்பீரமான தோற்றமுடைய பன்றியாகவே இருந்தார். அவருடைய மயிர்கள் ஒருபோதும் வெட்டப்படாமல் நீண்டு கிடந்தன, தாடியும் பெருத்த வயிறும் ஓர் ஞானக் கனவான் போன்ற ஆன்மீகப் பிரமுகரை நினைவூட்டியது. பார்த்தோர் பச்சாதாபமும், கருணையுள்ள ஆட்போல தோற்றமளிக்கின்ற முகத்தைக்கொண்டதாக அது தன்னை வைத்திருக்கப் பழகியிருந்தது.

மற்ற விலங்குகள் ஒவ்வொன்றாக வந்து தங்கள் இருக்கைகளில் வசதியாக இருக்க ஆரம்பித்தன. முதலில் ரைகர், அமாயா, நெத்தலி ஆகிய மூன்று நாய்களும், பின்னர் பல பன்றிகளும் மேடைக்கு எதிரே உள்ள வைக்கோலில் அமர்ந்தன. கோழிகள் ஜன்னல் ஓரங்களில் அமர்ந்துகொண்டன, புறாக்கள் கூரை உயரம் வரை பறந்தன, ஆடுகளும், மாடுகளும் பன்றிகளுக்குப் பின்னால் படுத்துக் கொண்டு வாயை அசைத்தவண்ணமிருந்தன.

மூன்று குதிரைகள் குரு, சீடன், மாலா ஆகியோர் ஒன்றாக வந்து, மிக மெதுவாக நடந்து, தங்கள் பரந்தகூந்தலைச் சிலுப்பிக் குளம்புகளைத் தங்களது உணவான வைக்கோலின் மேல் வைக்காமல் மேடையைப் பார்த்தபடி நின்றன. குரு நடுத்தர வயதான வாழ்க்கையை வாழ்ந்து வரும் ஒரு தடிமனான ஆண் குதிரை. சீடன் அவரது மகன். மாலா குருவின் மனைவி. அவர்களை அவ்வாறு தான் பண்ணையில் சொல்லிக் கொண்டார்கள். நெடுந்தீவிலிருந்து அவற்றைச் ஸ்ரெவ்னி பெரும்பாடுபட்டுக் கொண்டு வந்திருந்தாள். குதிரையென்றால் அவளுக்கு உயிர்.

குருவின் மூக்கின் மேல் நீளும் நெற்றியில் நீண்ட வெள்ளைக் கோடு இருந்தது. அது அவருக்குச் சுட்டி என்ற பட்டத்தைப் பெற்றுக் கொடுத்தது. மனிதருக்கு வெள்ளை படர்ந்தால் அது நோய். மிருகங்களுக்கு அப்படியல்ல. உண்மையில் அவர் முதல் தரமான உயர்ந்த குதிரையல்ல. ஒல்லாந்தரின் குதிரைகளிலிருந்து உள்ளூரில் கலந்து, கலந்து பல பரிணாமம் பெற்ற போனிக் குதிரையது. குரு மிகுந்த புத்தி சாலித்தனம் கொண்டதல்ல. ஆனால் மிகப்பெரிய வண்டியைச் சாதாரணமாக இழுத்து வரும் வல்லமை கொண்டது.

நெடுந்தீவின் பனம்பழமும், குறிஞ்சா, முசிட்டை முதலான மூலிகைகளும் சாப்பிட்டதால் அவற்றின் தோள்கள் வலுவாக முறுக்கேறி இருந்தது. அந்த வலுப் பொருந்திய சக்திக்காக அவர் உலகளவில் மதிக்கப்பட்டார். வலு என்கிற இழுவையின் விசையளவிற்குச் சொந்தக்காரர்கள் குதிரைகள்தானே.

குதிரைகளையடுத்து மணி என்ற வெள்ளை ஆடும், நோஞ்சான் என்கிற செம்மறியும், பறங்கி என்கிற கழுதையும் வரிசையாக நின்றன. பறங்கி பண்ணையில் மிகவும் பழமையான விலங்கு. மற்றும் மோசமான தாழ்வு மனப்பான்மை மிக்க ஓர் அவதாரம். அதற்கு முன்னால் அடுக்கப்பட்ட புத்தகங்களை அது தின்றுகொண்டிருந்தது. ஈழ விடுதலைக்காகப் போராடியவர்களின் அனுபவங்கள், காலம் முழுவதும் தம் தற்பெருமைகளைப் பேசிய தற்குறிகளின் அனுபவங்கள், போரின் தேவையை, இனக்கலவர இடப்பெயர்வை என்று கவிதை, கட்டுரை, கதைகள் வழிகளாக உணர்த்திய புத்தகங்கள். ஈழப் போராட்டம் இனிச் செல்லுபடியாகாதோ என்னவோ? இப்போதெல்லாம் ஈழப் போராட்டப் புத்தகங்களைக் காலாவதியாகிய புத்தகங்களாகத் தூர வீசி எறிகின்றார்கள். உண்மையில் இந்த மனிதர்கள் எந்த நேரத்தில் எதை நினைப்பார்கள் என்று அறிய முடியாமலிருக்கிறது.

கழுதை பறங்கி எப்போதாவது தான் பேசும். மேலும் அது பேசும்போது, எப்போதும் இழிந்த தூசண வார்த்தைகளை மட்டுமே பேசும். கருத்துக்களைச் சொல்வதானாலும் தூசணத்திலேயே சொல்லும். இது மனிதர்களின் புத்தகங்களைத் தின்பதால் தொற்றிய அவர்களின் குணமென மற்றைய மிருகங்கள் முணுமுணுத்தன. ஈக்கள் அதனில் மொய்க்காமல் காப்பாற்றவென்று கடவுள் அதற்கு ஒரு வாலைக்கொடுத்தார், ஆனால் அதற்கோ அந்த வால் வேண்டாத பொருளாகி மிகுந்த வெறுப்பைத் தந்தது. சிறுவரில் இருந்து முதிய மனிதர் வரை அந்த வாலையே வந்து பிடித்து இழுக்கின்றார்கள்.

பண்ணையில் விலங்குகள் மத்தியில் என்றும் அது சிரித்ததை நாம் பார்க்கவில்லை. ஏன் என்று கேட்டால், சிரிப்பதெற்கென்று இந்த உலகில் எதுவும் எனக்கில்லை என்று சொல்லி கழுதை கவலையுறும். குதிரையான குருவோடு தன் பிறப்பை ஒப்பிட்டு நிதமும் நொந்து கொள்வார். அவர்கள் இருவரும் வழக்கமாக தங்கள் ஞாயிற்றுக்கிழமைகளைப் பண்ணையின் புற வயலில் ஒன்றாகக் கழித்தனர். அருகருகே மேய்ந்துகொண்டாலும் அதிகம் பேசுவதில்லை.

தாயை இழந்த வாத்துக் குஞ்சுகள் கொட்டகைக்குள் நுழைந்தபோது, இரண்டு குதிரைகளும் படுத்திருந்தன, அவைகள் அவற்றில் மிதிக்காத இடத்தைத் தேடிச் சுற்றிக்கொண்டு பக்கவாட்டாக அலைந்து திரிந்தன. குரு தனது பெரிய முன்னங்காலால் அவற்றைச் சுற்றி ஒரு வகையான சுவரை உருவாக்கினான், வாத்துகள் அதன் உள்ளே இலாவகமாக வந்து நின்றன. புறாக்கள் சில கூடு கட்டித் தூங்கின.

கடைசி நேரத்தில், அழகான வெள்ளைக் கீரி சர்க்கரைக் கட்டியை மென்று தின்று கொண்டே உள்ளே வந்தது. அது முன்புறத்திற்கு ஓடிப் பன்றிக்கு அருகில் ஒரு இடத்தைப் பிடித்து, உட்கார்ந்து கொண்டது. சிவப்பு ரிபன்கள் அணிந்த வண்ணம் எல்லோர் கவனத்தையும் ஈர்ப்பவை பூனைகள். பூனை வழமை போல், தவிட்டுச்சாக்கின் சூடாக இருக்கும் இடத்தில் தங்கிக் கொண்டது.

பின் கதவிற்குப் பின்னால் தூங்கிக்கொண்டிருந்த சுடலை என்ற அண்டங் காக்கையைத் தவிர அனைத்து விலங்குக ளும் இப்போது வந்திருந்தன. மனோகரித் தேவதையின் இறந்த கணவரின் கண்ணைக் கொத்தியதால் அவள் கொடுத்த சாபம்தான் காக்கைகளின் கண்கள் நேராகப் பார்க்காமல் தலையைத் திருப்பித் திருப்பிப் பார்ப்பது என் கின்ற முதிர்ந்த பன்றியின் சொல்லைச் சுடலையும் நம்பியது. தலைமைப் பன்றி அவர்கள் அனைவரும் வசதியாக இருந் ததைக் கண்டதும், தனது தொண்டையைச் செருமிக் கொண்டு பேசத் தொடங்கினார்:

‘தோழர்களே, நேற்று இரவு நான் கண்ட விசித்திரக் கன வொன்றும் புதியதல்ல. அது நம்மெல்லோருக்குள்ளும் இருக் கின்ற உள்ளுணர்வு. நான் பின்னர் அந்தக் கனவுக்கு வருகி றேன், முதலில் நான் ஒரு விடயத்தை உங்களுக்குச் சொல்ல வேண்டும். தோழர்களே, நான் உங்களுடன் இன்னமும் நெடு நாட்கள் இருப்பேன் என்று நினைக்கவில்லை. நான் இறப்ப தற்கு முன், நான் பெற்ற அனுபவ ஞானத்தை உங்களுக்கு வழங்குவதை எனது கடமையாக உணர்கிறேன்.

எனது காலத்தில் நான் நீண்ட ஆயுளைப் பெற்றிருக்கிறேன், இனிவரும் காலத்தில் என் ஆயுள் அளவிற்கு வருகின்ற சந் ததி இருக்கும் என்பதற்கு இந்த அநீதி உலகில் உத்தரவாத மெதுவுமில்லை. நான் என் கொட்டகையில் தனிமையில் படுத்திருந்தபோது, எனக்கு அதிக நேரம் சிந்திக்கச் சிந் தனை இருந்தது, அப்படியெல்லாம் சுயத்தைச் சிந்திக்க இன்றைய உலகம் எமக்கு இடந்தரவில்லை. இந்த பூமியில் உள்ள உயிரினங்கள் மற்றும் இப்போது வாழும் விலங்குக ளின் இயல்பும், வாழ்வும் பற்றித்தான் நான் உங்களிடம் பேச விரும்புகிறேன்.

தோழர்களே, நம்முடைய இந்த வாழ்க்கையின் அர்த்தம் என்ன? அந்தக் கேள்வியைத்தான் நாம் தினமும் எதிர்கொள் கின்றோம். நம் வாழ்க்கை துன்பமானது, உழைப்பால் ஓடா கிக் குறுகியது. நாம் பிறந்ததிலிருந்து நம் உடலில் சுவா சத்தை வைத்திருக்கும் அளவுக்கு மட்டுமே உணவு கொடுக் கப்படுகிறது. மற்றும் நம்மில் திறன்கொண்டவர்கள் தான் இங்கே அநேகம் பேர்.

உலகில் உற்பத்தி செய்யாமல் உண்ணும் ஒரே உயிரினம் மனிதர் மட்டும் என்றே நான் நினைக்கிறேன். அவன் பால் தருவதில்லை, அவன் முட்டை இடுவதில்லை, அவனால் கலப்பையை இழுக்க முடியாது. அந்த அளவிற்கு அவன் பலவீனமானவன், முயல்களைப் பிடிக்கும் அளவுக்கு வேக மாக அவனால் ஓட முடியாது. எல்லாவற்றையும் அவனுக் காக நாமே அந்த வேலைகளைச் செய்கின்றோம். ஆனாலும் ஒரு துண்டு ரொட்டி எடுத்ததற்கு விஷம் வைத்து எம் எலிக ளைக் கொல்கின்ற நாசகாரர்கள் அவர்கள். அவர்களுக்கா கத்தான் நாம் நித்தமும் உழைக்கின்றோம். எல்லா விலங்குக ளுக்கும் அவனே அதிபதி. அவன் எங்களை வேலை செய்ய வைக்கின்றான், நாங்கள் அவனுக்காக உழைப்பதற்காக உயிர்வாழ வேண்டுமென்பதற்காகக் குறைந்தபட்ச உண வைத் தந்து எம்மை உயிர் காக்கின்றான். மீதிப் பெரும் பங்கை அவன் தனக்காகவும், தன் சுற்றத்திற்காகவும் வைத் துக்கொள்கிறான்.

நமது உழைப்பு மண்ணை உழுகிறது, எங்கள் சாணம் அதை உரமாக்குகிறது, அதில் பயிர் விளைகிறது. ஆனால் நமக்குச் சொந்தம் என்று எதுவும் இல்லை. யாரும் இல்லை. அவனுடைய வெறும் நடிப்பைத் தவிர.

இங்கு கூடியிருக்கக் கூடிய பசுத் தோழமைகளே கடந்த ஆண்டு எத்தனை ஆயிரம் லீற்றர் பால் கொடுத்தீர்கள்?, உறுதியான உங்களின் கன்றுகளை வளர்க்க வேண்டிய அந்த பாலுக்கு என்ன நடந்தது? அதன் ஒவ்வொரு துளியும் எங்களின் இரத்தமல்லவா? அது எங்கள் எதிரிகளின் தொண் டைகளில் அல்லவா போய் இறங்குகின்றது. அவன் அவற்றை எம்மிடம் இருந்து திருடிக் குடிக்கின்றான்.

மேலும் கோழிகளே, கடந்த வருடம் நீங்கள் எத்தனை முட் டைகளை இட்டீர்கள், அதில் எத்தனை முட்டைகள் கோழி களாக நீங்கள் உருவாக்கினீர்கள். மேலும், குதிரைகளான குரு மற்றும் மாலா, நீங்கள் பெற்ற அந்த நான்கு குட்டிகள் எங்கே? உங்கள் முதுமையில் ஆதரவாகவும் உங்களை மகிழ்ச்சியாகவும் வைத்திருக்கவேண்டிய உங்கள் வாரிசுகள் எங்கே? முதிர்ந்த வாழ்வில் உங்களோடு கூட இருந்திருக்க வேண்டிய உங்கள் உறவுகள் எல்லாம் இன்று எங்கே?

ஒவ்வொன்றும் விற்கப்பட்டது. அவற்றில் ஒன்றைக் கூட நீங் கள் இனி மீண்டும் பார்க்க மாட்டீர்கள். உங்களின் இப் பூவு லக வாழ்வில் இதுவரை உழைத்த உழைப்பிற்கும், வாழ்ந்த வாழ்விற்கும் எது இங்கே உங்களுக்கான அடையாளமாக இருக்கிறது. உங்களின் உடம்பிற்குப் பத்தாத ஒரு வாய் உணவையும், தங்கும் இந்த இடத்தையும் தவிர நீங்கள் எதைப் பெற்றிருக்கிறீர்கள் இந்தப் பூவுலகில் தோழர்களே!

‘நாம் வாழும் இந்த அவல வாழ்க்கையைக் கூட முழுமை யாக வாழ்ந்து அனுபவிக்க, அதன் இயற்கையான முழுவ யதை நாம் அடைய நம்மில் எவரையும் அனுமதிப்பதில்லை.

நான் இதற்கு விதி விலக்குத்தான்... ஏனென்றால் நான் அதிர்ஷ்டசாலிகளில் ஒருவன். எனக்குப் பதினைந்து வயது, இற்றைவரை இனப்பெருக்கம் செய்வதில் நான் வல்லவன். நானூறுக்கும் மேற்பட்ட குழந்தைகளைப் பெற்றேன். அதற் காக என்னை அவர்கள் உயிரோடு விட்டு வைத்திருக்கின் றார்கள். ஒரு பன்றியின் வாழ்க்கையில் பலகாலம் வாழ்ந்த திருப்தி எனக்கு. ஆனால் என்னோடு எந்த உறவுகளும் இல்லை. அனைத்தும் பிரித்து அழிக்கப்பட்டுவிட்டன.

உண்மைதான், இறுதியில் எந்த மிருகமும் கொடூரமான அவர் களின் கத்தியிலிருந்து தப்புவதில்லை. என் முன்னால் அமர்ந்திருக்கும் அன்பிற்கினிய இளம் பன்றிக்குட்டிகளே, நான் உங்களுக்குச் சொல்கின்றேன்... நீங்கள் ஒவ்வொரு-வரும் இன்னமும் ஒரு வருடத்திற்குள் உங்கள் உயிரைக் கொடுக்கவேண்டி வரும். அந்தப் பயங்கரத்தை நாம் அனை-வரும் உணர வேண்டும்.

பசுக்கள், பன்றிகள், கோழிகள், செம்மறி ஆடுகள், குதிரை கள், நாய்கள், பறவைகள் என்று அனைவருக்கும் இது பொருந்தும். இதைவிட எந்த விதியையும் எமக்கான படைப் புக் கடவுள் எமக்காய் எழுதவில்லை. கொம்பு படைத்த குத் துச்சண்டை வீரர்களாக எம்முள் பலரிருந்தாலும் எல்லோருக் கும் அதே விதிதான். உங்கள் தசைகள் மதர்த்து பொலிவா கும் தருணம் இந்த முதலாளி எம்மை விற்று விடுவான், அல்

லது கொன்று இறைச்சியாக்குவான். சிலர் எம் காதில் முணுமுணுத்து தம்பாவம் போக்குவதாகப் பாவனை பண்ணியபடியே எம்மை வெட்டுவார்கள்.

கொன்றால் பாவம் தின்றால் போச்சென நியாயம் பேசியபடியே எங்களின் ஒவ்வொரு அங்கமும் அவர்களின் தொண்டைக்குள் இறங்குகிறது. ‘படைக்கப்பட்டதெல்லாம் மனிதருக்கே’ என்று பக்காவாக அவர்கள் தங்கள் மதப் புத்தகங்களை எழுதி வைத்துள்ளார்கள். இதில் அன்பு, கருணை, காதல், நேசம் என்று சொல்கிற பெரும் நடிகர்கள் இந்தப் பக்காத் திருடர்கள். இவர்களைக் காவல் காத்த வயதான நாய்கள், முதுமையாகிப் பற்கள் இழந்து, கண்பார்வை மங்கிய வேளை இவற்றால் தமக்குப் பிரயோசனம் எதுவுமில்லை என்கின்ற நிலையில் அதன் கழுத்தில் கல்லைக் கட்டிக் குளத்தில் மூழ்கடிக்கின்ற கொடும்பாவிகள் இவர்கள்.

இவ்வாறுதான் தோழர்களே, நம் வாழ்வின் எல்லாத் தீமைகளும் மனிதர்களின் கொடுங்கோன்மையிலிருந்தும், அவர்களது குரூரத்திலிருந்தும், சுயநலத்திலிருந்தும் உருவாகின்றன. இந்த மனிதரை மட்டும் இப்பூவுலகில் இருந்து ஒழித்துவிடுங்கள், எம் அத்தனை பிரச்சினையும் ஒழிந்து விடும். நம் உழைப்பின் விளைச்சல் நமக்கே சொந்தமாகும். பணக்காரர்களாகவும் சுதந்திரமானவர்களாகவும் நாமும் ஒரே நாளில் ஆகமுடியும்.

இதற்காக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதே எம்முன் உள்ள கேள்வி. ஆம்... இரவும் பகலும், எமது உடலும் ஆன்மாவும், மனித இனத்தை வீழ்த்துவதற்காகவென்றே இன்றிலிருந்து உழைக்க வேண்டும் தோழர்களே!. இது ஒன்றே எமக்கான தீர்வு. உங்களுக்கும் எனக்குமான முக்கிய செய்தி இது. இத்தகு கிளர்ச்சி இன்றேல் எமக்கு வாழ்வில்லை. எப்போது இத்தகு கிளர்ச்சி வரும் என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. இது ஒரு வாரத்தில் அல்லது சில ஆண்டுகளில், அல்லது பல ஆயிரம் ஆண்டுகளில் நடக்கலாம். ஆனால், நடக்கும் என்கிற நம்பிக்கையே நமக்கான மூச்சு. எம்மை அடைத்து வைத்திருக்கின்ற இத்தகு பண்ணைகள் ஒவ்வொன்றும் எம்மை உரிமையிழக்கச் செய்து அடைபட்டிருக்கும் எமக்கான லயன்கள். இதனைக் கண்டாலே இனிமேல் அந்தப் போர்க்குணம் எம்முள் வரவேண்டும்.

தோழர்களே! உங்கள் மீதமுள்ள காலம் முழுவதும் உங்கள் பார்வையை இதிலேயே நிலைநிறுத்துங்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்தச் செய்தியை உங்களுக்குப் பின் வருபவர்களுக்குச் சொல்லுங்கள், அவ்வாறு செய்தால் தான் வருங்கால சந்ததியினர் வெற்றி பெறும்வரை போராட்டத்தைத் தொடர்வார்கள்.

‘மேலும் நினைவில் கொள்ளுங்கள், தோழர்களே! உங்கள் தீர்மானம் ஒருபோதும் தளர்ந்துவிடக்கூடாது. மனிதரின் அனைத்து வாதமும், சந்தர்ப்பவாதத் தத்துவங்களும் எம்மை வழிதவறிச் செல்லவே வழிவகுக்கும். மனிதருக்கும், விலங்குகளுக்கும் ஓர் பொது வாழ்வுண்டு என்றும், ஒன்றின் வாழ்வு மற்றவற்றில் தங்குவதே வாழ்க்கை என்கின்ற மனிதரின் ஏமாற்றுச் சங்கீதங்களை ஒருபோதும் நம்ப வேண்டாம். எல்லாமே பொய்கள். மனிதர் தன்னைத் தவிர வேறு எந்த உயிரினத்தின் நலன்களுக்கும் சேவை செய்வதில்லை. மேலும், விலங்குகள் நம்மிடையே பரிபூரண ஒற்றுமை, போராட்டத்தில் பரிபூரண தோழமை இருக்கட்டும். மனிதர்கள் அனைவரும் எம் எதிரிகள். அனைத்து விலங்குகளும் எம் தோழர்களே.

இந்த நேரத்தில் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தலைமை ரங்கர் பேசிக்கொண்டிருக்கும் போது, நான்கு பெரிய எலிகள் அவற்றின் துளைகளிலிருந்து வெளியேறி, பின்பகுதியில் அமர்ந்து, அவர் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருந்தன. நாய்கள் திடீரென்று அவற்றைப் பார்த்தன. அவதானித்த பூனைகள் எலிகளை நோக்கிப் பாய்ந்தன. அதற்குள் அவை தங்கள் துளைகளுக்குள் விரைந்தன. விரைந்தோடிய சுறுசுறுப்பால் மட்டுமே எலிகள் தங்கள் உயிரைக் காப்பாற்றின. பன்றித் தலைவர் அமைதிகாக்கச் சொல்லி தம் கரங்களை உயர்த்தினார். எம்மிடையே ஒற்றுமையின்மையே எம் இனத்தின் கேடு.

‘தோழர்களே! எலிகள் எம் தோழர்களா?

தலைமைப் பன்றியின் வேண்டுகோளில் வாக்கெடுப்பு நடந்தது.

வாக்கெடுப்பில், எலிகள் தோழர்கள் தான் என்று பெரும்பான்மையினரால் ஒப்புக் கொள்ளப்பட்டது. சில அதிருப்தியாளர்கள் மட்டுமே இருந்தனர். இருந்தும் கூட்டம் முடிந்தவுடன் அவர்கள் ஒவ்வொருவரும் எலிகளைத் தீண்டத் தகாதவர்கள் போலவே நடத்தினார்கள். நாய்களும், பூனைகளும் எலிகள் நல்லதென்றும் கெட்டதென்றும் இரட்டை வேடம் போட்டன.

மனிதனிடம் இருக்கின்ற சாதி பிரிக்கிற தந்திரத்தை நீங்களும் பழக வேண்டாம். நான் மீண்டும் சொல்கிறேன், மனிதனிடமும் அவர்கள் வாழ்கின்ற எல்லா வழிகளிலும் இருந்து விலகியிருங்கள். உங்கள் பகைமையை எப்போதும் நினைவில் வையுங்கள். இரண்டு கால்களில் நடப்பது யாவும் நம் எதிரி, நான்குகால்களில் நடப்பது அல்லது இறக்கைகள் இருப்பது நம் நண்பர்கள். இதை என்றும் நினைவில் கொள்ளுங்கள். மேலும், மனிதரை எதிர்த்துப் போரிடும்போது, நாம் அவர்களைப் போல் மாறிவிடக் கூடாது. நாம் அவர்களை வென்றாலும், அவர்களுடைய தீமைகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது. நம்மில் எந்த மிருகமும் வீட்டில் வசிக்கவோ, படுக்கையில் உறங்கவோ, ஆடை அணியவோ, மது அருந்தவோ கூடாது. சிகரெட் பீடி, கஞ்சா புகைத்தல், பணம் வைத்து வியாபாரம் செய்தல், சூதாடுதல் என்பவை கூடாது. மனிதரின் அனைத்துப் பழக்கவழக்கங்களும் தீயவை. எல்லாவற்றிற்கும் மேலாக, எந்த ஒரு மிருகமும் தனது சொந்த இனத்தின் மீது கொடுங்கோன்மை செய்யக்கூடாது. மதம், மொழி, சாதி பிரித்து முட்டாள் மனிதரைப்போல இனப்படுகொலை நிகழ்த்தக் கூடாது. பலவீனமானவர்கள், வலிமையானவர்கள், புத்திசாலிகள், என்று எந்தப் பாகுபாடும் நாம் காட்டக்கூடாது. நாம் அனைவரும் சகோதரர்கள். எந்த ஒரு பிராணியும் மற்ற மிருகங்களைக் கொல்லக்கூடாது. எல்லா விலங்குகளும் சமம்.

இந்தக் கனவுதான் இனி வரப்போகும்
மனிதரற்ற பூமியின் நிஜம்!

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com

# சூசனுக்காக விழித்திருத்தல்

## - கோர்மக் மக்காதி

### தமிழில் : என்.கே. மகாலிங்கம்

ஓவியம்: ஜீவா

*‘பறவையே, உண்மையைச் சொல்*
*உன் படுக்கையை விரிப்பது யார்?*
*கல்லறையை முறையாகப் பராமரிக்கும்*
*நரைமுடியுள்ள தேவாலயத் தொழிலாளி.’*

- சேர் வோல்ரர் ஸ்கொற்

அது ஓர் ஒக்ரோபர் மாதம் சனிக்கிழமை. சுடர்விடும் காலை ஒன்பது மணி. மதியத் தூக்கத்திற்காக அணில்கள் ஓய்வெடுக்கச் சென்றுவிட்டன என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. உயர்ந்து வளர்ந்திருந்த ஹிக்கரி மரத்தின் அடியிலிருந்து வெஸ் விறைத்துப் போய் எழுந்தான். செம்மஞ்சள் நிறச் சூரியன் கிழக்குப் பக்க வானத்திலிருந்து வேகமாக எழும்பி, பருவமற்ற காலத்து வெப்பத்தைக் காட்டு மரங்களுக்கு அளித்துக் கொண்டிருந்தான். வெஸ் தன் துப்பாக்கியை மரம் ஒன்றில் சாய்த்து வைத்த பின் ஜக்கெற்றின் பொத்தான்களை கழற்றினான். அணிலைக் கொல்லத் தவற விட்டதற்காகச் சற்று எரிச்சல் அடைந்திருந்தான். நாலோ ஐந்து அணிலைக் கண்டிருந்தான். ஆனால் ஒன்றுக்கு மட்டும்தான் அவன் வைத்த குறிபட்டது. அது மட்டும்தான் அவன் முன்னால் மரத்திலிருந்து சறுக்கிக் கொண்டு வந்தது. அதற்குக் குறி வைத்தபோது அது மரத்தின் ஒரு பக்கம் இருந்து மறு பக்கம் பாய்ந்து விட்டது. தன் குறி பட்டு விட்டது என்று அவன் நினைத்தான். பார்த்தால் அணில் காய்ந்த இலைகளின் உள்ளே பாய்ந்து விழுந்து வேகமாக ஓடிக் கொண்டிருந்தது.

வெஸ் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு மெதுவாக வீட்டுக்குப் போகத் துவங்கினான். வீட்டின் முற்றத்திலுள்ள புல்லை வெட்டும் வேலை இருந்தது. ஓக் மரங்களும் ஹிக்கரி மரங்களும் வளர்ந்து குளிர்ச்சியான நிழல் கொடுக்கும் பாதையில் சென்று கொண்டிருந்தான். ஈர இலைகள் காட்டின் நிலத்தைப் போர்த்தி இருந்தன. பாசி படர்ந்த சாம்பல் நிறச் சுண்ணாம்புக் கற்கள் அங்குமிங்கும் நிலத்தில் குத்திக் கொண்டு நின்றன. கற்களைத் தோண்டி எடுத்த பள்ளங்கள் இருந்தன. வெஸ் ஒரு கல்லை எடுத்துப் பள்ளங்களை மூடியிருந்த பச்சைப் பாசியின்மேல் எறிவதற்காக நின்றான். பின் புகையிரதப் பாதை வழியாகத் திரும்பி நடந்தான். வீட்டுக்குப் போவதற்கு இது சற்றுத் தூரம் அதிகம்தான். அத்துடன் உக்கிக் கொண்டிருக்கும் தண்டவாளக் கட்டைகள், பூமரங்கள் ஊடாக நடப்பதும் சிரமமான காரியம் தான். பாவனையில் இல்லாமல் இருந்த தண்டவாளங்கள் தொய்ந்து போய்த் துருப்பிடித்தும் பழுப்பு நிறமாகிப் போயும் இருந்தன. வெஸ் அதன் நீளம் நடந்தான். ஒரு காலை முன்னே வைத்து பின் மற்றக் காலைத் தூக்கி வைத்துக் கவனமாக நடந்தான். ஒவ்வொரு சில அடிகளுக்கும் விழுந்து எழும்பினான். அறுவடை செய்த பழுப்பு நிற வயல்கள்வரை பழைய புகையிரதப் பாதையில் தொடர்ந்து நடந்தான். அதன் பின் சிறிய மரங்கள் நின்ற காட்டுக்குள் நடந்தான்.

மழையில் தோய்ந்த சிவப்பு நிறக் களிமண் உள்ள நீர்ப்பள்ளத்தில் குனிந்து, பன்றி சுடும் துப்பாக்கிக்குப் போடும் தட்டையாகிப் போயிருந்த ஒரு குண்டை எடுத்தான். ஈயத்தில் ஒட்டியிருந்த களிமண்ணைச் சுரண்டி எடுத்து அதைப் பரிசோதித்தான். அது எப்போது சுடப்பட்டது, யாரால் சுடப்பட்டது, எதைச் சுட்டார்கள் அல்லது யாரை நோக்கிச் சுட்டார்கள் என்று வியந்தான். சிலவேளை ஆரம்பகாலக் குடியேறி அல்லது சாகசப் பயணி ஒருத்தன் அச்சமூட்டும் செவ்விந்தியனை நோக்கிச் சுட்டதா? எல்லா செவ்விந்தியர்களும் போன தன் பின்பு, பிற்காலத்தில் மேசையில் விளையாடும் ஒரு குண்டாயிருக்கலாம். அல்லது இது நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு சுட்ட ஒரு குண்டாகக் கூட இருக்கலாம். துப்பாக்கிக் குழாய்க்குள் குண்டுகள் போடுபவர்கள் இந்தப் பகுதியில் அண்மைக் காலம் வரை இருந்தார்கள் என்பது அவனுக்குத் தெரியும்.

வெஸ் துப்பாக்கிக் குண்டைப் பரிசோதித்துக் கொண்டிருக்கும்போது, ஆவிகள் அந்தக் காட்டில் குடியேறின. அவை மெலிந்து நீண்ட கை கால்களுடைய எல்லைக் காவலாளிகளின் ஆவிகள். அவற்றில் துப்பாக்கித் தூள் போட்ட கொம்புகளும் குண்டுகள் உள்ள பைகளும் தோள்களில் தொங்கின. நீண்ட குழாய்களுடைய பித்தளைத் தூண்கள் போட்ட பழுப்பு நிறமும் பொன் நிறமும் கொண்ட மேப்பிள் மர உறைகள் போட்ட துப்பாக்கிகளைக் கையில் ஏந்தி இருந்தன.

வெஸ் அந்த நினைவுச் சின்னத்தைப் பைக்குள் வைத்துக் கொண்டு காட்டின் ஊடாகப் பேய் இருட்டில் அமைதியாக நடந்து கொண்டிருந்தான்.

துப்பாக்கிக் குண்டைக் கண்டு பிடித்தது தான் புதைகுழிகளைக் கண்டுபிடிக்க அவனை ஊக்கப்படுத்தியது போலும். அவன் முன்னொரு நாள் அங்கே ஃபோட் என்ற நண்பனுடன் வந்திருக்கிறான். இப்போதும் திரும்பவும் அந்தப் புதைகுழிகளைக் கண்டுபிடிக்கலாம்.

தெரு வரும்வரை தன் நடையை வேகப்படுத்தினான். தெருவின் அடுத்த பக்கத்திற்குப் போய் நன்கு பராமரிக்கப்படாத ஒரு கம்பி வேலியால் பாய்ந்து புதைகுழிகள் உள்ள இடத்தை நோக்கிச் சென்றான். பளபளக்கும் பனி படர்ந்தி



ருந்த சிலந்தி வலைகளால் மரங்கள் தொடுக்கப்பட்டிருந்தன. வெஸ் அவற்றை இடைக்கிடை கண்டான். அவன் அணிந்திருந்த தடித்த உடுப்புகள் சூரிய வெப்பத்தினால் சூடாகி விட்டன. அதனால் அவற்றைத் தாங்கிக் கொண்டிருப்பது சற்றுக் கடினமாக இருந்தது.

கல்லறைகள் அவன் நினைவில் இருந்தது போன்று அந்த இடத்தில் இருக்கவில்லை. அவன் அதில் தடுமாறி விழுந்து எழும்பிய பின்னர் தான் அது எங்கிருக்கிறது என்று அவனுக்குத் தெரிந்தது. மறந்து போய்விட்ட துயிலும் இடத்துக்குள் அவன் பிரவேசித்தபோது ஒருவிதத் தனிமையும் பயங்கர உணர்வும் காற்றில் அடர்த்தியாக அவனிடம் மிதந்து வந்தது.

இந்த இடுகாட்டில் ஓக் மரங்களையும் ஹிக்கரி மரங்களையும் சுற்றிவர வளர்ச்சி குன்றிய பைன் மரங்கள் பயமற்று வளர்ந்திருந்தன. கல்லறைகள் இரகசியமாக ஹனிசக்கிள் செடிகளின் கீழே சிக்கிக் கொண்டிருந்தன. அவை பாசி படர்ந்தும் காற்றினால் கறைபடிந்தும் எளிமையாகத் தெரிந்தன. பழையவற்றை விரும்பும் மக்களை அவை வசீகரிக்கும்.

வெஸ் செடி, கொடிகளைத் தள்ளிக் கொண்டு கல்லறைகளில் எழுதப்பட்ட வாசகங்களை வாசித்துக் கொண்டு அலைந்து திரிந்தான். கல்லறைகள் மிகவும் பழையனவாக இருந்தன. அவை மறக்கப்பட்டுவிட்டவை போலத் தெரிந்தன. அந்தளவுக்குப் பழையவை. சில அடிகள் தூரத்தில் மண்ணின் அடியில் சுண்ணாம்பாகப் போய்விட்ட எலும்புகள் கிடந்தன. அவை ஒரு காலத்தில் அவனைப் போல இங்கே நடந்து திரிந்தவர்களின் எலும்புகளாக இருக்க வேண்டும். அவை மக்கிப் போய்க் கொண்டிருந்தன. ஆனால் அவை எக்காலத்தன என்பது எம் ஊகத்தைப் பொறுத்தது.

1834-ஆக இருக்கலாம். அனைத்துக்கும் ஆதாரமான ஆண்டவன் திரும்பவும் தன்னிடமே எடுத்துக் கொண்டான் என்று ஒரு கல்லறை ஒன்றில் ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது. பெயர் சூசன் லெட்பெற்றர். இவ்வுலகில் சூசன் முழுவதாகப் பதினேழு ஆண்டுகள் தான் வாழ்ந்திருக்கிறாள்.

அது ஓர் எளிய செதுக்கப்பட்ட கல்லறை. அந்தப் பளிங்குக் கல் ஒரு நினைவுச்சின்னமாக மாறி விட்டது. ஒரு கல்லறைச் சின்னத்திலிருந்து அது ஒரு காலத்தில் இரத்தமும் சதையுமாக இருந்த உயிருள்ள ஒரு பெண்ணாக மாறியது. வெஸ் சூசனை மனதில் கற்பனை செய்தான்.

அவள் நீலக் கண்களும், மஞ்சள் நிற முடியும் கொண்டவள். உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஆடையில் மென்மையாகவும், பிரகாசமாகவும் தெரிந்தாள். (அது 1834. 1215 அல்லது 1066 அல்ல.) அது உண்மையான ஆண்டு. சூசன் தன் பெற்றோருடனும் சகோதரர்களுடனும் மேசையில் இருந்து கொண்டு, அவளும் தாயும் தயாரித்த உணவுகளைப் பார்த்து பெரு

மைப்பட்டுக் கொண்டிருந்தாள். அந்தப் பெருமை நியாயமானதே.

சுடச்சுட வேக வைத்த அடுக்கு அடுக்காக வைக்கப்பட்டிருந்த தங்கநிறச் சோள றொட்டி. அதைத் தோய்த்து உண்ணப் புதிதாக அரைத்தெடுத்த வெண்ணெய். ஒரு கிண்ணத்தில் கொலட் கீரை, இன்னொன்றில் பின்ரோ பயறு. ஒவ்வொன்றும் பன்றி இறைச்சித் துருவல்களில் நுட்பமாகக் கலந்து சுவையூட்டப்பட்டிருந்தது. ஒரு தட்டில் நறுமணமுள்ள மென்மையான பொரித்த பன்றியின் இடுப்பிறைச்சித் துண்டுகள். வேக வைத்த அப்பிள் பழங்கள், விளிம்பு உடைந்த நீலநிறச் சீனக் கிண்ணத்தில் கூட்டமாக அடுக்கப்பட்டிருந்தன. ஒரு களிமண் பாத்திரத்தில் குளிர்ந்த மோர் இருந்தது. அது பகல் நேரக் கடும் சூட்டைத் தணிக்கும். சூசன் தன் சகோதரர்கள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு பெண்ணுக்கே உரிய பெருமையால் அவள் மனம் பூரித்திருந்தது.

சூசனுக்கு ஒரு காதலனும் இருந்தான். அந்தக் காதலனும் எதிர்பாராதவிதமாக வெஸ்ஸைப் போலவே இருந்தான். அவளிடமுள்ள காதலால் அங்கே வந்திருந்தான். அவனுக்கு 18 வயது. உயரமான மெலிந்த இளைஞன். தீவிரமான கருமையான கண்கள். உடனடியாகப் புன்னகைக்கும் இயல்பு.

கோடைகால மாலை நேரங்களில் அவர்கள் இருவரும் வீட்டின் தாழ்வாரத்தில் இருந்து தங்களுக்குத் தெரிந்த விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்: அயலவர்களைப் பற்றியும், மக்களைப் பற்றியும், பயிர்களைப் பற்றியும், தங்கள் குழந்தைக் காலத்தைப் பற்றியும், தங்கள் பெற்றோர்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள். ஜொஸ் மோர் கடையில் ஆட்கள் பேசிக்கொண்ட வேடிக்கையான செய்திகளைச் சொல்ல வெஸ் முயன்றான். ஆனால் அக்கதையில் அவன் சொல்ல நினைத்த இனிமையோ, உயிரோ இருக்கவில்லை. இருந்தாலும் அவள் சிரித்தாள். புன்னகை செய்தாள். ஆனால் அவனுக்கோ அவற்றைத் திருப்பிச் சொன்னபோது வெறுமையான தட்டையான திருப்பிச் சொல்லுதலாகவே அது இருந்தது. அவன் கண்ட கனவுகள் பற்றிச் சொன்னான். முதலில் வெட்கத்துடன் சொன்னான். பிறகு கண்களில் தீவிரம் தெரியச் சொன்னான். ஆனால் மென்மையாகவும் மெதுவாகவும் சொன்னான். இடைக்கிடை அவளைப் பார்ப்பதற்காகக் கண்களை உயர்த்தினான். அவனுடைய விரைவான பார்வை அவளுடைய இதயத்தை தற்செயலாக நிறுத்தவும் செய்தது. மரணத்தைப் பற்றியும், பாஸ் மீன் பிடித்தலைப் பற்றியும், சதுரமாக ஆடும் நடனங்களைப் பற்றியும் பேசினார்கள். அங்கே அவர்களைச் சுற்றி வாழ்க்கைக் காவியம் அவிழ்ந்து கொண்டிருந்தது போல இருந்தது. அவர்கள் இருவரும், இருவருக்கும் பொதுவான ஆழமான புரிதலைப் பகிர்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்படி அவர்கள் காதலில் விழுந்தார்கள். முதலில் அவளின் கண்களிலும், கைகளிலும், பின் தோள்களிலும், மென்மையான வட்டமான இடுப்பிலும் அவன் மனம் லயித்தது. அவனுடைய தோள்களிலும், கழுத்திலும், படியாத பழுப்பு நிறத் தலைமுடியிலும் அவள் மனம் லயித்தது.

அவை அனைத்தையும் அவர்கள் பேசினார்கள் என்றில்லை. காதலைப் பற்றிய சொற்கள் அவர்களிடையே பேசப்படவில்லை. ஓர் இரவில் தாழ்வாரத்தில் எழுந்து நின்று அவளுக்கு முத்தம் கொடுத்தான். பின் வாசலுக்குப் போனபோது அதை அவன் எப்படி உணர்ந்தான் என்பதை அவளுக்குச் சொல்ல வேண்டும் போல அவனுக்குத் தோன்றியது. வெளிவாயிற் கதவடியில் நின்று திரும்பிப் பார்த்தான். அவள் இலையுதிர்க் கால நிலவொளியில் ஒளிவீசிக் கொண்டிருந்தாள். அவன் திரும்பவும் ஓடி வந்து அவளைத் தன் கைகளுக்குள் வைத்து இறுக்கிப் பிடித்து அவள் காதுக்குள் கட்டுப்பாடற்ற எத்தனையோ விஷயங்களைக் குசுகுசுக்க நினைத்தான். ஆனால் செய்ய இயலவில்லை. சும்மா கையை மட்டும் உயர்த்திக் காட்டினான். அவளும் காட்டினாள். பிறகு மெதுவாக வெறுமையான உணர்வுடன் காற்றடித்துத் துன்புறுத்தும் மரங்கள் ஊடாக நடந்து சென்றான். அந்த மரங்கள் மௌனமான நட்சத்திரங்களுக்காக அவனுடன் பேசி கொண்டிருந்தன.

நீ நடந்து கொண்டிருக்கிறாய். எத்தனையோ பேர் முன்னர் நடந்ததைப் போல. புராதனமான ஓக் மரங்கள் அவர்களைக் கண்டிருக்கின்றன. உயிர்ச்சத்து முறுக்கேறிய இந்த மரங்களின் உறுப்புகள் உனது நரம்புகள் ஊடாகப் பாய்வது போல ஓடிக் கொண்டிருக்கின்றன. சிற்றோடையில் வேரூன்றிய கிளை பிரிந்து செல்லும் பருத்தி மரங்கள், தாம் பிறப்பதற்கு முன்னரே ஈர நிலத்திலிருந்து தன் சாற்றை உறிஞ்சிக் கொண்டிருக்கும் மரங்களைப் பற்றிக் கவலைப்படாமல், உலகைப் பற்றி, சூரிய வெப்பத்தைப் பற்றி, விதைகளைப்



கோர்மக் மக்காதி 1933-2023. அமெரிக்க எழுத்தாளர். 12 நாவல்கள், 2 நாடகங்கள், 5 திரை நாடகங்கள், 3 சிறுகதைகள் எழுதியுள்ளார். அதில் ஒரு சிறுகதை தான் இங்கே மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அவர் முதன்மையாக நாவலாசிரியர். Suttree, Blood Meridian, The Border Trilogy, No Country for Old Men, The Road ஆகிய நாவல்கள் அதிகம் பேசப்பட்டவை. அவரின் நாவல்கள் திரைப்படங்களாகவும் எடுக்கப்பட்டுள்ளன. அவர் எழுத்தாளராக மட்டுமே தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர். ஆரம்ப காலங்களில் மிகவும் பொருளாதார கஷ்ட நிலைமைகளிலும் எழுத்தைக் கைவிடவில்லை. அவர் எழுத்துகள் தன்னியல்பானவை. திட்டமிட்டு எழுதப்பட்டவை அல்ல. ஆனால் ஒரு நாவலை எழுதப் பல ஆண்டுகள் உழைத்தவர்.

அவர் பல பரிசுகளையும் விருதுகளையும் பெற்றுள்ளார். த றோட் நாவலுக்குப் புலிஸ்ரர் பரிசும், ஓல் த பிறிட்டி ஹோசஸ் ற்குத் தேசிய நூல் விருதும் தேசிய நூல் விமர்சகர்கள் வட்ட விருதும் கிடைத்துள்ளது.

அவரின் எழுத்துகள் மேற்கத்தேயக் கோதிக் வகைமையானவை என்று சொல்லப்படுகிறது. 2013 விமர்சகர் ஹரோல்ட் ப்ளூம் அவரை வாழும் நான்கு முதன்மையான அமெரிக்க எழுத்தாளர்களில் ஒருவராகக் கணிக்கிறார். அவருடைய ப்ளட் மெரிடியன் நாவலை சிலர் - magnum opus - தலைசிறந்த நாவலாகவும் கருதுகிறார்கள். அவரின் நாவல்களில் தீமைகளின் மூலத்தையும் வரலாற்றையும் அவர் ஆராய்கின்றார் என்றும் சொல்கிறார்கள்.

பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நிலவு சூடாக்கிய காற்றில் முத்தமிட்ட நீ நடந்து கொண்டிருக்கிறாய்.. சிறிது காலம்.

அந்த இளைஞன் வீடு நோக்கிச் சென்றான். மெதுவாக நடந்து சென்று கட்டிலில் சோர்வுடன் தளர்ந்து போய்ப் படுத்தான். உழன்றும் உருண்டும் கொண்டிருந்தான். அதனால் கட்டில் கயிற்றை இரண்டு கிழமைக்குள் இரண்டு தரம் இறுக்கிக் கட்ட வேண்டி இருந்தது.

ஒக்ரோபரில் முதலாவது உறைபனி அந்தத் தொலைதூரப் பள்ளத்தாக்கை மூடியது. அறுவடை முடிந்து குளிர்காலத்துக்குரிய தயாரிப்புகள் நடந்தன. பெரிய உணவுக் கடைகளில் உள்ள உணவு வகைகள், மண்ணால் செய்த நிலத்தடி சேமிப்பு அறைகளிலும், ஊசல் மணமுள்ள புகைபிடித்த அறைகளிலும் சேமிக்கப்பட்டன. மரக்குற்றிகள் எரித்த புகை பள்ளத்தாக்கில் புகைந்து மணத்தது. சூட்டுக்காகக் குளிர் காய்ந்து கொண்டிருப்பவர்களுக்கு நல்ல சூடான குளிர்கால இரவுகளாக இருக்கப் போகிறது என்பதை அது காட்டியது. வீட்டுக்கு வெளியே சமைக்கும் பெரிய கறுத்த பாத்திரத்தில் இருந்து பன்றி இறைச்சியின் சுவையான வாசனை வந்து கொண்டிருந்தது. அது குளிர்கால இரவில் சூடாக வீட்டு மேசையில் பண்டிகைக் காலத்தில் தாராளமாகக் கிடைக்கும் உணவாக இருக்கப் போகிறது. ஆண்டில் அது நல்ல காலம். கோடை காலத்தில் நன்றாக வேலை செய்தார்கள் என்பதைக் காட்டும் நிறைவான ஆண்டு அது.

சூசனுக்கும் அது மிகவும் நல்ல ஆண்டு. எண்ணிலடங்காத வீட்டு வேலைகளைச் செய்து கொண்டிருந்தாள். அதைப் பற்றி கொஞ்சமேனும் அவள் கவலைப்படவில்லை. உண்மையில் அவளுக்கு அதைப்பற்றிய சுய உணர்வே இருக்கவில்லை. தான் அதைச் செய்து முடித்து விட்டதை மறந்து போய், ஏற்கெனவே செய்து முடித்து விட்டேனா என்று கூட வியந்தாள். அவளுக்கு மூடநம்பிக்கையில் நம்பிக்கை இருந்திருந்தால் தான் மேசையில் வெட்ட வைத்திருந்த தக்காளியை ஏதோவொரு தேவதை அதை வெட்டி அங்கே வைத்தது என்று சொல்லி இருப்பாள்.

அவளுடைய எண்ணங்கள் சற்று அதிகம் தான். உயரமான, கறுப்புக் கண்களை உடையவனைப் பற்றி நினைத்துக் கொண்டாள். அவளைப் பொறுத்தவரை அவன் வளர்ந்த ஆண். இருந்தும் அவர்களிடையே தங்கள் எதிர்காலத்தைப் பற்றி தீவிரமான பேச்சு எதுவும் நடக்கவில்லை. அவனுக்குத் தேவையான நேரத்தை அவன் எடுக்கட்டும் என்று அவள் விட்டு விட்டாள். அவளுடைய எதிர்காலத்தைப் பற்றிப் பிரச்சினைகள் அனைத்தும் இணக்கமாகவே தீர்ந்து விடும் என்றே நம்பினாள். அவளுடைய இளமை அனைத்தும் நல்லதாகவே நடக்கும் என்று சொல்லியது. அவனுக்குத் தேவையான நேரத்தை அளி. அனைத்தும் நல்லபடியாகவே நடக்கும் என்று நினைத்தாள்.

அவனும் அதேபோலச் சின்னச் சின்ன வேலைகளில் சுறுசுறுப்பாக இருந்தான். அது ஆண்டில் சுறுசுறுப்பான காலம். அத்துடன் நல்ல காலநிலையும். இதமான காலை நேரத்தில் ஒருத்தன் எழும்புவதே சிரமப்பட்டுத்தான். பொரித்த முட்டையும் சோசேஜ்ஜும் உறைபனியில் காற்றில் கலந்து வரும் போது சிறந்த மணமாக இருக்கும். அவன் கதவைத் திறந்து வாளியை ஆட்டிக் கொண்டு வெளியே வந்தான். கூசச் செய்யும் குளிர்ந்த காற்று மூக்குத் துவாரங்களை நிரப்பியது.

அவன் கோழிகளின் அருகே வந்தவுடன் கோழிகள் பதற்றத்துடன் கொக்கரித்துக் கொண்டு கலைந்து சென்றன. கையில் வைத்திருந்த வாளியை அவற்றின்மீது வீசினான். அவை பீதியுடன் கலைந்து சென்றபோது சிரித்தான். பின் மரக்கட்டுக் குவியல்களைக் கடந்து சென்றான். மரக்குற்றிகள் வெட்டப்பட்டு இரண்டு கம்பங்களின் நடுவே இராணுவ ஒழுங்குடன் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றை அவன் பார்த்துக் கொண்டு திருப்தியுடன் நடந்தான். பிரகாசமான முக்கோணப் பைன் மரத்தடிகள் எரிப்பதற்காகக் கயிற்றால் கட்டி வைக்கப்பட்டிருந்தன. காற்று பசை போலத் தடித்ததாக இருந்தது. தானியக் களஞ்சிய அறைக்குச் சென்றான். அது சிறியதொரு கொட்டில். காலநிலையால் பாதிக்கப்பட்ட பலகைகளால் கட்டப்பெற்றிருந்தது. கறவைப் பசுவின் கழுத்தில் கொழுவி இருந்த தோல்வாரை தளர்த்தி விட்டான். பசுவுக்குச் சத்தமாக நல்லிதயத்துடன் வணக்கம் சொன்னான்.

தடித்த பழுப்பான மொறுமொறுப்பான இலைகள் காட்டின் தரையைப் போர்த்தியிருந்தன. அவை அரை நிர்வாணமாக நிற்கும் மரங்களில் இருந்து பிரிந்து வந்தவை. பல காலமாக இந்த இலைகள் காட்டு முகடுகளுக்கும் சரிவுகளுக்கும் நிழல் கொடுத்து வந்துள்ளன. இப்போது அவை நிலத்திற்குத் திரும்பிவிட்டன. உளுத்துப் போய் அவற்றின் பரம்பரையினருக்கு வாழ்வும் வளமும் கொடுக்கத் திரும்பிவிட்டன. அது 1834. நல்லதொரு ஆண்டு. இலையுதிர்க் காலம். ஆண்டில் நல்ல காலம்.

பாறைகள் உள்ள வனப்பகுதி அது. அதன் இடுங்கிய பள்ளத்தாக்கில் ஒரு சிறிய சோக நிகழ்ச்சி நிகழ்ந்தது. மெலிந்த ஒரு நரி (நரிகள் நொருங்கும் இலைகளின்மீது நடக்கும் போது கூட சத்தம் எழும்) பயந்த கோடுகள் உள்ள சிப்மங் அணிலை பயப்படுத்திவிட்டது. அணில் கற்களின் இடையே தன் வீட்டிலிருந்தது. நரி சிப்மங் அணில் மீது பாய்ந்தது. ஆனால் கூரான பற்களை சிப்மங்கின் மயிருள்ள உடம்பின் மீது பதிப்பதற்கு முன்னரே நரியின் கால்கள் ஊடாக அது நழுவிச் சென்று விட்டது. நரி வெறித்தனமாகச் சுழன்று அதன் மேல் திரும்பவும் பாய்ந்தது. இந்த முறை நரி தன் முன் பாதங்கள் இடையே அதைப் பிடித்துவிட்டது. தலையைக் குனிந்து கவனமாக அதைப் பார்த்தது. வாயைத் திறந்து தன் கால்களின் அழுத்தத்தைக் குறைத்தது. அப்போது சிப்மங் வேகமாகப் பாய்ந்து தப்பிவிட்டது. நரியின் பற்கள் ஒன்றுடன் ஒன்று முட்டி நறும்பியது. அது உறைபனி நிறைந்த காற்றில் துல்லியமாகக் கேட்டது.

சிப்மங் பாறைக்குழிக்குள் ஓடிப் போய் இருந்து கொண்டது. அதன் தங்கப் பழுப்பு நிறக் கீற்றின் ஒளி பாறைப் பிளவுக்குள்ளிருந்து ஒளிர்ந்தது. அது தன் புகலிடத்தைத் தேடிக் கண்டு கொண்டபோது நரியோ தன் சுறுசுறுப்பினாலும் அதிர்ஷ்டத்தாலும் சிப்மங்கைத் தன் பாதத்தின் அடியில் அதை அழுத்திப் பிடித்துக் கொண்டது. ஆனால் பாறைப் பிளவுக்குள் இருந்த சிப்மங்கை நரியால் இழுக்க முடியவில்லை. சிப்மங் நரியின் பாதத்தின் அழுத்தத்திலிருந்து நழுவி முன்னால் சென்றது. பாறைகளின் இடையே போய் மேலும் புகுந்து கொண்டது. நரியினால் அதை கிளறி எடுக்க முடியவில்லை. நரி தன் முகத்தை உள்ளே நுழைக்கக்

கூடிய அளவுக்கு நுழைத்துப் பார்த்தது. சிப்மங்கின் சூடான வாசனை நரியின் மூக்குக்கு மிக அருகில் மணத்தது. சிப்மங் ஒரு நாய்க்குட்டியைப் போல சிணுங்கியது. இரத்தம் தோய்ந்து உயிர்போகும்வரை நரி அதைத் தன் நகங்களால் விறாண்டியது, கீறியது. உரத்துச் சீறியது. கடைசியில் நம்பிக் கையை இழந்து இலைகளின் மீது சத்தமாகத் துள்ளிக் கொண்டு வேறு சிறிய புலால் உண்ணிகளுக்கு அதை விட்டுவிட்டு அங்கிருந்து அகன்று சென்றது.

வீட்டுக்கு வெளியே இருந்து பேசுவதற்குக் காலநிலை மிகவும் குளிராக இருந்தது. (அது ஒக்ரோபர் மாதம். பள்ளத் தாக்கில் எழுந்து கொண்டிருந்த சூரியனின் சரிவான ஒளிக் கதிர்களால் உறைபனி வெண்ணிறத்தில் சுடர்விட்டுக் கொண்டிருந்தது.) அது வேட்டையாடுவதற்கு நல்ல காலநிலை. காட்டில் இடைக்கிடை துப்பாக்கியின் கூர்மையான வெடிச்சத்தம் எதிரொலித்துக் கொண்டிருந்தது. அல்லது சிறிய மிருகங்களைச் சுடும் ஆழ்ந்த ஆனால் மேலோட்டமான சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. ஆனால் காலநிலை வீட்டுக்கு வெளியே இருந்து கதைப்பதற்கு மிகவும் குளிராக இருந்தது. சூசனும் அவனும் சிலவேளைகளில் குளிரான காலங்களில் வீட்டின் முன்னறையில் இருந்து அவளுடைய பெற்றோர்களுடனும் சகோதரர்களுடனும் உரையாடுவார்கள். சகோதரர்கள் சகிப்புத்தன்மை உடையவர்கள். ஆனால் அவனைச் சற்று வேடிக்கையாக அசௌகரியப்படுத்துவார்கள்.

சிலவேளைகளில் கொஞ்ச நேரம் சூசனையும் அவனையும் தனியே விட்டுவிட்டு மற்றவர் அனைவரும் படுக்கைக்குச் சென்று விடுவார்கள். அந்த நேரங்களில் அவன் மிகவும் பதற்றமடைந்து விடுவான்.

‘நான் போகப் போகிறேன்’ என்று சொல்லுவான். ‘இன்னும் நேரம் போகவில்லை, போக வேணாம்,’ என்று அவள் சொல்லுவாள். ‘நான் கெதியில் போக வேணும்,’ என்று சொல்லுவான். அவள் சங்கடத்துடன் சிரித்துக் கொண்டு குனியும் வரை அவளைச் சற்றுக் கோபத்துடன் பார்ப்பான். சற்றுத் தடுமாற்றத்துடன் அவளுடைய தோள்களைப் பற்றிக் கன்னத்தில் முத்தமிடுவான். அவள் சற்றுத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்ப்பாள். பின் அவளுடைய தோள்களைப் பற்றி இதழ்களில் முத்தமிடுவான். அதைப்போல மென்மையான, இதமான, இனிமையான வாசனை உள்ளது வேறொன்றும் இல்லை என்று எண்ணுவான். அவளைச் சற்று நேரம் பேசாமல் பிடித்திருப்பான். அவனுடைய மூச்சு தொண்டையை அடைத்திருக்கும், குரல் முற்றாக மாறி இருக்கும். சற்று நேரத்தின் பின் அவள் அவனை நிமிர்ந்து துணிவுடன் பார்ப்பாள். அடுத்த நாளும் அவனைப் பார்க்க முடியுமா என்று கேட்பாள். அல்லது அவன் ஆர்வுட்டுக்குப் போய் விடுவானா என்று கேட்பாள். அதற்கு அவன் முடிந்த அளவு பதில் சொல்லுவான். திரும்பவும் அவள் கன்னத்தில் முத்தமிடுவான். பின் தான் போக வேணும் என்று சொல்லி விட்டு உறுதியாக எழும்பி நிற்பான். அல்லது கால் கைகளை நீட்டி நெளிவெடுப்பான். பின் அறைக்குள் போய் சற்றுத் தடுமாற்றத்துடன் தன் மேலங்கியை எடுப்பான்.

கதவடியில் அவன் கொடுக்கும் முத்தம் அர்த்தம் நிறைந்ததாக இருக்கும். அதன் பின் அவன் வெளியேறிக் கூரான குளிர்ந்த காற்றில் வீட்டுக்கு ஓடிச் சென்று விடுவான். நட்சத்திரங்கள் அவர்கள் நாளை இரவும் திரும்ப வருவார்கள் என்று உறுதியளிக்கும்.

சூசன் அவன் மறையும்வரை கதவடியில் நின்று கொண்டிருப்பாள். மிகவும் அமைதியாக மூச்சு விட்டுக் கொண்டும் கைகளைக் கட்டிக் கொண்டும் நிற்பாள்.

பின் விளக்கை எடுத்துக் கொண்டு தன் அறைக்குப் போய் தன் உடலைப் பார்ப்பாள். அந்த உடம்பு ஒரு மென்மையான உடையும் சீனச்சட்டி என்று அவனை எது நினைக்கச் செய்தது என்று எண்ணிப் பார்ப்பாள்.

குளிரான அந்த அறையில் ஆடைகளை விரைவாகக் களைந்துவிட்டுக் கட்டிலில் விழுவாள். நாளை இரவும் அவனைச் சந்திப்பாள்.

நட்சத்திரங்கள் திரும்பவும் வந்தன. ஆனால் அவற்றின் ஒளி குறைந்திருந்தது. ஏனென்றால் அதன் அழகை ரசிப்பதற்கு ஒருவரும் இருக்கவில்லை. அவனுடைய கண்களில் அவை மங்கலாகவும் சிதைந்தும் உப்புக் கடலில் மிதந்தும் கொண்டிருந்தன. அந்த ஆண்டு 1834. ஒக்ரோபர் மாதம்.

அவள் எப்படி இறந்தாள்? பேசாத அந்தக் கல்லறை அதற்கான சாட்சியம் ஒன்றையும் விட்டுச் செல்லவில்லை. அதற்குப் பல வழிகள் இருந்திருக்கலாம்.

வெஸ்ஸின் மனதில் கடல் போன்ற காதலும் அனுதாபமும் பொங்கி வழிந்தது. பெரிய கண்ணீர்த் துளிகள் ஒன்றை ஒன்று தள்ளிக் கொண்டு கன்னத்தில் வழிந்தன. வளைந்து கொடுக்காத கல்லறையைக் கைகளால் சுற்றிப் பிடித்து மறைந்து போன சூசானுக்காகக் கண்ணீர் விட்டான். எல்லாச் சூசன்களுக்காகவும் அழுதான். எல்லா மனிதர்களுக்காகவும் அழுதான். அப்படி அழகான, அப்படி இரக்கத்திற்குரிய, அப்படி வீணாகப் போன, துக்கம் கொண்டாடாதவர்கள் எல்லாருக்குமாக அழுதான்.

வெஸ் அந்த இடத்திலிருந்து எழுந்தான். மனம் வெறுமையாகவும் வற்றிப் போயும் இருந்தது. துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான். காற்று வீசியது. அவன் காலடிக்கீழ் காய்ந்த இலைகள் துள்ளிப் பறந்து அவனுக்கு முன்னால் விழுந்தன. சில ஒழுங்கில்லாமல் வலப்பக்கமாகச் சாய்ந்தன. பைத்தியக்காரத்தனமாக அலைக்கழிந்து வெளிச்சம் உள்ள வனப்பகுதி நடைபாதையில் உயரப் பாய்ந்து நடனமாடி விழுந்தன. சில காற்றின் முன்னால் வாழ்க்கையைப் பரிகாசம் செய்தபடி விழுந்தன.

வெஸ் புன்னகைத்தான். இலைகள் களைத்துப் போய் விழுந்தன. கிளைகளிலிருந்து பெருமூச்சு விட்டபடியும் விழுந்தன. நீண்ட இலைகள்.

அவன் சிரித்து விட்டு வீட்டுக்கு நடந்து சென்றான். நீண்டு வளர்ந்த மரங்களுக்கு மேலாக அவன்
உயர்ந்து தோன்றினான்.



mahalingam.k@thaiveedu.com

# தைமூர் காட்டிய கோரம்

— நிமால் நாகராஜா






டெல்லி...

இந்தியாவின் புகழ்பூத்த இந்த நகரத்தின் வரலாறு அதிசய மானது, ஆச்சரியம் தருவது.

மாபெரும் இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதத்தில் பாண்ட வர்களின் நகரமாக விளங்கியதும், தேவலோக அதிபதியான இந்திரனால் அமைக்கப்பட்டதால் இந்திரப்பிரஸ்தம் எனப் பெயர் பெற்றதுமான நாடு தான் இன்றைய டெல்லி என ஏரா ளமானவர்களால் நம்பப்படும் இந்த நகரம் தனது சரித்திரத் தில் மாபெரும் உச்சியையும் அடைந்திருக்கிறது, மறக்க முடியாத இழப்புகளையும் சந்தித்திருக்கிறது.

செழிப்பு மிக்க இந்திய தேசத்தின் உச்சியில் அமைந்திருக் கும் டெல்லி அந்நிய ஆக்கிரமிப்பாளர்களை அதிகமாக கவர்ந்தது. அதன் அமைவிடம் காரணமாக அது அடிக்கடி போர்களையும் சந்தித்தது. யமுனை நதிக்கரையோரமாக இருக்கும் டெல்லியில் இரத்த ஆறு அதிகமாகவே ஓடியது. ஆயினும் விழ, விழ தொடர்ந்தும் எழுந்த உலக நகரங்கள் வரிசையில் டெல்லிக்கு தனியிடம் உண்டு.

பிற்காலத்தில் டெல்லியை வெற்றி கொண்டு இந்தியாவில் மிகப்பெரிய, புகழ்மிக்க சாம்ராஜ்ஜியத்தை நிறுவிய மொக லாயர்களின் வர்ணமயமான வரலாற்றை பார்க்க முதல், டெல்லியின் இடைக்கால சரித்திரத்தை சுருக்கமாக பார்த்து வருவோம்.

அது பொ.ஆ.பின் 1191-ம் ஆண்டு.

ஆப்கானிஸ்தானிலிருந்து முகமது கோரி என்பவன் பெரும் படையுடன் டெல்லியை நோக்கி பாய்ந்து வருகிறான். அவனை எதிர்த்து நிற்கும் ராஜபுத்திர மன்னன் வேறு யாரும் கிடையாது, கன்னோசி மன்னன் ஜெயச்சந்திரனின் மகள் சம் யுக்தையின் காதல் நாயகன் பிரித்திவி ராஜன் தான்.

வீரத்துக்கு பெயர் பெற்ற ராஜபுத்திரர்கள் பிரித்திவி ராஜன் தலைமையில் கோரியின் படையை சின்னாபின்னமாக்கி சிதறி அடிக்கிறார்கள். போரில் கோரிக்கும் பலத்த காயம். தன் தேசத்திற்கு தோற்றோடிய கோரி அடிபட்ட புலியாக உறுமிக் கொண்டிருக்கிறான்.

அடுத்த வருடம் கோரி மீண்டும் டெல்லி வருகிறான், மிக வலிமை வாய்ந்த படையோடு.

வெற்றித் தேவதை இம்முறை கோரியின் பக்கம். காதலுக்கு புகழ்பெற்ற பிரித்திவி ராஜன் கொல்லப்படுகிறான். டெல்லி கோரியின் வசமாகிறது.

இந்தியாவில் இஸ்லாமிய ஆட்சியை அறிமுகப்படுத்தியவன் கோரிதான். அவனுக்கு பின்பு பல இஸ்லாமிய பேரரசுகள் இந்தியாவில் பலமாக வேரூன்றி நீண்டகாலத்திற்கு ஆதிக் கம் செலுத்தின.

தனது சாம்ராஜ்ஜியத்தை தொடர்ந்து விரித்துக் கொள்ள விருப்பம் கொண்ட கோரி, வெற்றி கொள்ளப்பட்ட இந்தியப் பிரதேசங்களை நிர்வகிக்க தனது தளபதிகளை நியமித்து விட்டு, மத்திய கிழக்காசிய பிரதேசங்களை நோக்கி படை-யெடுத்தான்.

பொ.ஆ.பின் 1206-ல் முகமது கோரி கொலை செய்யப்ப டவே, டெல்லியை சுற்றிய பெரும் பிரதேசங்களை நிர்வகித்து கொண்டிருந்த குத்புத்தீன் ஐபக் என்னும் தளபதி டெல் லியை தலை நகராக கொண்டு 'டெல்லி சுல்தான்கள்' என பின்னாட்களில் புகழ் பெற்ற ஆட்சிக் காலத்தை ஆரம்பித்து வைத்தான்.

துருக்கிய நாட்டை சேர்ந்த குத்புத்தீன் ஆரம்பத்தில் அடிமை யாகவே தனது வாழ்க்கையை தொடங்கியவன். கோரியிடம் பணிபுரிந்த குத்புத்தீன், தனது திறமையால் தளபதியாகி, தொலை தூரத்தில் இருந்த இந்து பிரதேசமான இந்தியாவை ஆளுமளவுக்கு உயர்ந்தது ஒரு ஆச்சரியம் தான்.

டெல்லியில் இன்றும் கம்பீரமாக உயர்ந்து நிற்கும் குதுப்மி னார் என்னும் கோபுரத்தை கட்டத் தொடங்கியவன் இவன் தான்.

ஆட்சிக்கு வந்து வெறும் நான்கு ஆண்டுகளிலேயே குதிரை விளையாட்டு ஒன்றில் தவறுதலாக கீழே விழுந்து குத்புத்தீன் இறந்து போனான்.

அடிமை வம்சம் என வரலாற்றில் அழைக்கப்படும் இவனது அரச பரம்பரை அடுத்த நூற்றாண்டுகளுக்கு தொடர்ந்தது.

அதற்கு பிறகு டெல்லி அரியணை ஏறியது கில்ஜி வம்சம். இதில் மிகவும் புகழ்பெற்றவன் அலாவுதீன் கில்ஜி.

அலாவுதீன் குஜராத்தை கைப்பற்றிய போது ஒரு இந்து அடிமையாக வந்து சேர்ந்தான். பிற்காலத்தில் மாலிக் கபூர் என்ற பெயரோடு தளபதியாக உயர்ந்த அவன், அலாவுதீனின் அதிகாரத்தை தென்னிந்தியா வரை விஸ்தரித்தான்.

இவனது வீரம் நிறைந்த, வெறி பிடித்த படையெடுப்புக்கு பாண்டிய தேசமும் அகப்பட்டுக் கொண்டது. ராஜராஜ சோழன் கட்டிய பொக்கிஷங்கள் நிறைந்த பெரிய கோயிலும் சூறையாடப்பட்டது.

ராஜராஜன் கோயிலுக்கு தானம் செய்த பல விலை மதிப்பில்லாத பொருட்களை மாலிக் கபூர் கொள்ளையடித்துக் கொண்டு டெல்லி திரும்பினான்.

அலாவுதீனின் மரணத்திற்கு பின், மாலிக் கபூர் ஆட்சியைக் கைப்பற்ற முயற்சிக்கவே, அவனை விரும்பாத அலாவுதீனின் மெய்க்காப்பாளர்கள் மாலிக் கபூரை கொன்று போட்டார்கள்.

கில்ஜிகளுக்கு பின்பு டெல்லி அரசணை ஏறியது துக்ளக் வம்சம். இந்த வம்சத்தில் முகமது பின் துக்ளக் என்ற மன்னன் மிகவும் பிரபலம். இந்த பிரபலத்திற்கு காரணம் தான் சற்று சங்கடமானது.

அசைக்க முடியாத வீரமும், ஏகப்பட்ட மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற அறிவாளியாக இருந்தாலும், துக்ளக்கிற்கு கிறுக்குத்தனமும் அதிகமாகவே இருந்தது. அதன் உச்சமாக தனது தலைநகரத்தை திடீரென டெல்லியிலிருந்து எழுநூறு மைல்கள் தொலைவில் இருந்த தௌலாபாத்திற்கு மாற்றவே, டெல்லி மக்கள் இரவோடிரவாக மூட்டை முடிச்சுகளோடு நடக்க வேண்டியதாயிற்று. இடைநடுவில் ஏகப்பட்ட பேர்கள் இறந்தும் போனார்கள்.

வெறும் எட்டு வருடங்களில் மனதை மாற்றிக்கொண்ட துக்ளக், மீண்டும் டெல்லிக்கு தலைநகரை மாற்றவே, மக்களும் தலையிலடித்துக் கொண்டே வந்து சேர்ந்தார்கள்.

அடுத்ததாக துக்ளக் செய்தது தான் ஹை லைட். சீனாவை பிடிக்கிறேன் பேர்வழி என்று இமயமலை தாண்டி தனது படையணியை அனுப்பி வைக்க, குளிரில் சிக்கி சீரழிந்த அந்த படையணி ஏறக்குறைய மொத்த வீரர்களையும் இழக்க, மிகுதிப் பேர் குற்றுயிராக டெல்லி வந்து சேர்ந்தது தான் மிச்சம்.



துக்ளக் வம்ச ஆட்சியின் கடைசிக் காலத்தில், பங்காளிச் சண்டை அதிகமாகி சாம்ராஜ்ஜியம் வலிமையிழந்து போன போது, வடக்கிலிருந்து பெரும் ஆபத்து ஒன்று வந்து சேர்ந்தது.

அது பொ.ஆ.பின் 1398-ம் ஆண்டு.

டெல்லி வரலாற்றை மட்டுமல்ல, உலக வரலாற்றையே இன்றளவும் நடுங்க வைக்கும் அந்தப் பயங்கரம் தைமூர்.

துருக்கிய, மொங்கோலிய வழிவந்தவனும், களம் கண்ட போர்களிலெல்லாம் வெற்றிவாகை சூடியவனும், வரலாறு கண்ட பெருவீரர்களில் ஒருவனும், வீரத்துக்கு மட்டுமல்ல, குரூரத்துக்கும் பெயர் போனவனுமான தைமூர், டெல்லியில் நடத்திய கொலைத் தர்பார் குலை நடுங்க வைப்பது.

டெல்லியை நோக்கி அசுர வேகத்தில் பாய்ந்து வந்து தைமூரின் படை, வழியில் அகப்பட்டதை எல்லாம் சூறையாடியது. மக்கள் பெருமளவில் கொல்லப்பட்டார்கள். கூடவே வழிநெ

டுக மக்களை அடிமையாக்கியபடியே டெல்லியை அவன் வந்தடைந்த போது, சுமார் ஒரு இலட்சம் மக்கள் அடிமைக ளாக அவன் பின்னால் வந்தார்கள்.

டெல்லி சுல்தான்களோடு போர் தொடங்க முதல் தைமூ ருக்கு ஒரு பயம் வந்தது. போரிடும் நேரத்தில், இந்த அடி மைகள் குழப்பம் செய்தால் என்ன செய்வது?

அடுத்த சில மணி நேரங்களில் ஒரு இலட்சம் அடிமைகளை யும் கொன்று குவித்தது தைமூரின் படை.

உள்குத்துகளால் பிரிந்து கிடந்த டெல்லி சுல்தானின் படை, அரைகுறையாக போர்க்களத்திற்கு வந்து சேர்ந்தது.

இந்தியா வரும் அந்நியப் படைகளுக்கு சிம்ம சொப்பனமாக இருப்பது இந்திய போர் யானைகள். பிளிறிக் கொண்டு, நிலம் அதிர ஆயிரக்கணக்கில் அணிவகுத்து வரும் யானை-களை எதிர்கொண்டு போர் புரிந்த அனுபவம் அந்நிய வீரர் களுக்கு கிடையாது.

யானைகளை சமாளிக்க தைமூர் இரு வழிகளை கையாண் டான். சிறிய சிறிய கிடங்குகள் வெட்டி, அதனுள்ளே சூலாயு தம் போன்ற ஆயுதங்களை புதைத்து வைத்தான். இரண்டா வதாக, தான் கொண்டு வந்த ஒட்டகங்களின் முதுகில் வைக் கோல் கட்டி அதற்கு தீ மூட்டி, யானைகளை நோக்கி ஓட வைத்தான்.

இந்த இரண்டும் நிறையவே பலன் தந்தன. யானைகள் மிரண்டு ஓடி சொந்த வீரர்களையே துவம்சம் செய்தன.

வெற்றி வீரனாக டெல்லி நுழைந்த தைமூருக்கு டெல்லியின் அளவற்ற செல்வம் காத்திருந்தது. டெல்லியின் அரசணை யில் அமர்ந்திருந்து அரசாளும் ஆசையெல்லாம் தைமூ ருக்கு அறவே கிடையாது. வந்தோமா, அகப்பட்டதையெல் லாம் அள்ளினோமா, அடிமைகளை இழுத்துச் சென்றோமா, அவ்வளவும் தான் அவனுக்கு தேவை.

மொத்தமாக டெல்லியை சூறையாடிய தைமூரின் படை அத் தோடு விட்டிருந்தால் பெரும் புண்ணியமாக போயிருக்கும். டெல்லி சூறையாடப்படுவது இது முதல் தடவையுமல்ல, கடைசித் தடவையுமல்ல.

ஆனால், தைமூரின் படைகளுக்கு எதிராக அங்காங்கே சில கலகங்கள் எழவே, கோபம் தலைக்கேறிய தைமூர் மொத்த டெல்லி மக்களையும் கொன்று குவிக்க ஆணையிட்டான்.

பத்து நாட்களில் மொத்த டெல்லியும் பிணக்காடாகி போனது. சுமார் இரண்டு இலட்சம் மக்கள் ஈவிரக்கமில்லாமல் வெட்டிச் சாய்க்கப்பட்டனர். மிக நீண்ட காலத்திற்கு டெல்லியால் தன் முன்னைய செழிப்புக்கு எழ முடியாமல் போயிற்று.

வட இந்தியாவில் வாரிச் சுருட்டிய செல்வத்துடனும், அடிமை களோடும் தைமூர் தன் தேசமான சமர்கண்டுக்கு திரும்பிச் சென்றான்.

இது நடந்து நூறு வருடங்களுக்கு பின்னர், தைமூரின் வழி வந்த சிறுவன் ஒருவன், தனது பதினொரு வயதில் பெர்-கானா எனும் சிறிய பிரதேசத்தின் அரசனாக அரியணை ஏறு கிறான். அடுத்த பல வருடங்களில் அவன் கண்ட தோல்வி கள் எண்ணற்றவை. ஒரு அடி ஏறினால் பல அடிகள் சறுக் கும் கதைகள் அவனுக்கு அடிக்கடி நிகழ்ந்தன. ஆனாலும் அவன் ஒரு போதும் மனம் தளரவில்லை.

பிற்காலத்தில் டெல்லியில் மொகலாய பேரரசை நிறுவிய அவன், தைமூரை போலல்லாது இந்தியாவை தனது சொந்த நாடாக கருதினான். மக்களை கனிவாக நடத்தினான். சாம் ராஜ்ஜிய மாற்றத்தை மட்டுமல்ல, இந்தியாவில் பெரும் கலா சார மாற்றத்தை நிகழ்த்திக் காட்டிய அவன் பெயர் பாபர்.



nimal.nagaraj@thaiveedu.com




BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474



FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
RE/MAX
Outstanding Agent for Outstanding Results.
RE/MAX Excel Realty Ltd., Brokerage
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ SIVARAJAH 416.843.3333
KUMAR SIVARAJAH 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.


வீடு வாங்க விற்க...
18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்
ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...
வாங்கப் போகிறீர்களா?
☒ தரமான வீடு தவறிப்போகாது
☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
☒ பெருவருவாய் தரும் முதலீடு
விற்கப் போகிறீர்களா?
☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
SOLD
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
SOLD OVER ASKING
HOMELIFE
GRAND MASTER CLUB
Chairman's Club Award Winner 2015
Platinum Club Winner 2022
Chairman's Club Award Winner 2016
Chairman's Club Award Winner 2017
Vela Subramaniam
Experienced Home Inspector
Sales Representative
Dir: 416-786-0760
info@vela4homes.com
www.vela4homes.com
Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace
CO
AATEK
HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
Licensed Technician
ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES
We Are Specialists in
customs homes Ductwork System
416.414.2280




Buy, Sell
Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasingham
Realtor
416.937.8090




SABONA




Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9863
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com




Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141





Daniels
FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON
NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE




LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough




Finding Homes to
Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX
COMMUNITY
REALTY INC., Brokerage



NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
CENTURY 21
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law
RAMAN HOME COMFORT INC
HEATING
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
416.261.1544
AEREN Thiyagarajah
647-888 3500
DILEEP Thangavel
416-666 2300
HomeLife/ Future Realty Inc., Brokerage
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
Thana Yoganathan
416.418.5749
வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.
Kuna Nagalingam
Sujatha Kunasegar
416.402.4545
RAMACHANDRAN LAW
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
Barrister & Solicitor
416-902-8225
Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd.
UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ignite
PYRAMID GROUP
Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
RE/MAX ACE
Mega Financial Group
Call Now
Raj Nadarajah
416-666-1120
Sri Vallipuranathar
Credit Solution Centre
416.439.0224
416.450.5011
Suba Aynkharan
Broker
416-722-4444
RE/MAX COMMUNITY REALTY INC.
Uthayan Alex Sivasambu
Broker
COLDWELL BANKER
Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario, M1P2L5
RE/MAX ACE
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com
BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage
NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
CHANDRAN RASALINGAM
President & CEO
iNFORCE LIFe Financial Services Inc.
416-909-0400
416-321-6000 x400
QUALITY ADVICE YOU CAN TRUST
Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage
416 505 8532
DR. YALINI ARAVINTHAN DDS. DDS.
DENTIST
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
RE/MAX
LATHAN VARATHARAJAH
Broker Owner